டெரிக்பிரின்ஸ்

வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்

Originally published in English under the title
"LIFE-CHANGING SPIRITUAL POWER"

Printed by Derek Prince Ministries

B81TA/10000/0513/LOP
ISBN 978-81-922407-0-1

"LIFE-CHANGING SPIRITUAL POWER" (Tamil)
"VALVAI MATRUM AVIKURIYA AATRAL"

Published by permission in the Tamil language.

Cover Design: DPM-Asia/Pacific

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

DPM

www.derekprince.in

பொருளடக்கம்

பகுதி 3: தாக்கும் ஆயுதங்கள்

VI. சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்

தெய்வீக பரிமாற்றம்

ஓர் அழைப்பு

இயேசு கிறிஸ்து முழு மனுகுலத்துக்கும் எட்டும் ஓர் அழைப்பை விடுத்துள்ளார், **“வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."** (மத்தேயு **11:28**). உங்களது விசேஷித்த பாரம், தேவை அல்லது பிரச்சனை என்னவாயிருந்தாலும், தேவனிடம் அதற்கான பதிலுண்டு.

ஆனால் பதிலை பெற்றுக்கொள்ள ஒரே இடம் தான் உண்டு: இயேசு மரித்த சிலுவை. சிலுவையின் மூலம் - சிலுவையின் மூலம் மட்டுமே - உங்கள் தேவை சந்திக்கப்படும், உங்கள் பிரச்சனைக்கு பதில் கிடைக்கும், உங்கள் பாரத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

தொடரும் பக்கங்களை எதிர்பார்ப்புடன் படியுங்கள்!

தெய்வீக பரிமாற்றம்

சுவிசேஷத்தின் முழு செய்தியும் ஒரு ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டுள்ளது: சிலுவையில் இயேசுவின் தியாக மரணம். இதைக் குறித்து எபிரெயரின் எழுத்தாளர், "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார்" (எபிரெயர் 10:14) என கூறுகிறார். இரண்டு வல்லமையான வார்த்தைகள் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன — "பூரணப்படுத்தி" மற்றும் "என்றென்றைக்கும்". இவ்விரண்டும் இணைந்து, மனுக்குலத்தின் எல்லா தேவையையும் உள்ளடக்குகின்ற ஒரு பலியை சித்தரிக்கின்றன. மட்டுமல்ல, இதன் விளைவுகள் காலத்தையும் கடந்து, நித்தியத்திலும் நிலைத்திருக்கின்றன.

இந்த தியாகத்தின் அடிப்படையில்தான் பவுல் பிலிப்பியர் 4:19இல் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் *குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்* மகிமையிலே நிறைவாக்குவார்" என எழுதுகிறார்.

"உங்கள் குறைவையெல்லாம்" என்பது, உங்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும் குறிக்கின்றது — உங்கள் சரீரம், ஆத்துமா, மனது, உங்கள் பொருள் மற்றும் பணத்தேவைகளும் கூட இவற்றில் அடங்கும். தேவன் உங்கள் தேவைகளை சந்திக்கும் போது, தவிர்க்கப்படும் அளவிற்கு எந்தத் தேவையும் மிகப் பெரியதுமல்ல, மிகச் சிறியதுமல்ல. ஒரே தெய்வீக செயலினால், உச்சக்கட்டமான ஒரே நொடியில், மனுக்குலத்தின் எல்லாத் தேவையையும், வேதனையையும் தேவன் ஒன்றாக இணைத்தார்.

மனுக்குலத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தேவன் வெவ்வேறான தீர்வுகளை அளிக்கவில்லை. மாறாக, எல்லாப் பிரச்சனைக்கும், ஒரே முழுமையான தீர்வை தேவன் நமக்களிக்கின்றார். நாம் வெவ்வேறான

பின்னணிகளிலிருந்து விசேஷித்த தேவைகளின் பாரத்தோடு வரலாம். ஆனால், தேவனுடைய தீர்வைப் பெற, நாமெல்லாரும் ஒரே இடத்திற்குதான் செல்ல வேண்டும்: இயேசுவின் சிலுவை.

சிலுவையில் நிறைவேற்றப்பட்டவைகளைக் குறித்து, அவைகள் நடப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பதாகவே, தீர்க்கதரிசியாகிய ஏசாயா அவைகளை தீர்க்கமாக முன்னறிவித்தார். ஏசாயா 53:10இல், தேவனுக்கு முன்பாக பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்பட போகிற ''கர்த்தருடைய ஊழியக்காரனின்'' ஆத்துமாவைக்குறித்து தீர்க்கதரிசி எழுதினார். பெயர் குறிப்பிடப்படாத இந்த ஊழியக்காரன் இயேசுதான் என்று புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் எல்லாம் ஒருமிக்கக் கூறுகின்றனர். ஏசாயா 53:6இல், அவருடைய தியாகத்தினால் நிறைவேற்றப்பட்ட தெய்வீக சித்தம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

> *நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம் கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.*

மனுக்குலத்தின் உலகளாவிய, அடிப்படையான பிரச்சனை இதுவே: நாமெல்லாரும் வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியில் போனோம். கொலை, விபச்சாரம், களவு போன்ற பல்வேறு குறிப்பிட்ட பாவங்களை நம்மில் பலர் செய்யாதிருப்போம். ஆனால் நம்மெல்லாருக்கும் பொதுவாக உள்ள ஒரே பாவம்: நாமெல்லாரும் நம்முடைய சொந்த வழிகளுக்கு திரும்பிவிட்டோம். அப்படி செய்ததினால், தேவனுக்கு நம்முடைய முதுகை காட்டினோம். இதை எடுத்து கூறும் எபிரெய வார்த்தை **"ஏவோன்"** என்பதாகும் - இங்கே "அக்கிரமம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் அதற்கு நிகரான வார்த்தை "கலகம்" என்பதாகும் - மனிதனுக்கு விரோதமான கலகமல்ல, தேவனுக்கு விரோதமான கலகம்.

"அக்கிரமம்" அல்லது "கலகம்" என்ற வார்த்தைகள் **ஏவோனின்** முழு அர்த்தத்தையும் வெளிப்படுத்துவதில்லை. **"ஏவோன்"** என்ற வார்த்தை அக்கிரமத்தை மட்டுமல்ல அதின் தண்டனையையும் - அல்லது அக்கிரமத்தினால் உண்டாகும் பொல்லாத விளைவுகளையும் குறிக்கின்றது.

உதாரணத்துக்கு, ஆதியாகமம் 4:13ல் தன்னுடைய சகோதரனுடைய கொலைக்காக தேவன் காயீன் மீது நியாயத்தீர்ப்பை கூறின பின்பு, காயீன் "எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது" என்று கூறினான். ''தண்டனை'' என்று இங்கு மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை **ஏவோனாகும்**. அது காயீனுடைய அக்கிரமத்தை மட்டுமல்ல, அவனுடைய தண்டனையையும் குறித்தது.

லேவியராகமம் 16:22இல் பாவநிவிர்த்தி செய்யும் நாளன்று விடுவிக்கப்பட்ட போக்காட்டைக் குறித்து, "அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துக்கொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக...." என்று தேவன் சொன்னார். மாதிரியான இந்தச் செயலில், இஸ்ரவேலரின் அக்கிரமங்களை மட்டுமல்ல, அந்த அக்கிரங்களினால் உண்டான பலன்களையும் வெள்ளாட்டுக்கடா சுமந்துக்கொண்டு போனது.

புலம்பல் 4இல் இரண்டு முறை ஒரே அர்த்தத்தோடு **ஏவோன்** பயன்படுத்தப்படுகிறது. 6ம் வசனத்தில், "என் ஜனமாகிய குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வந்த தண்டனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மறுபடியும், 22ம் வசனத்தில், "சீயோன் குமாரத்தியே, உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை..." ஒவ்வொரு முறையும், ஒரே வார்த்தையாகிய **ஏவோன்** என்பதற்கு ஒரு முழு சொல் தொடரை பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார்கள்: அக்கிரமத்துக்கு வந்த (வரும்) தண்டனை. ஆகையால் முழு அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளும் போது, **ஏவோன்** என்பது வெறும் அக்கிரமம் மட்டுமல்ல, அக்கிரமத்தின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு கொண்டு வரும் எல்லா பொல்லாத விளைவுகளும் அதில் அடங்கும்.

சிலுவையில் இயேசுவின் தியாகத்துக்கும் இது பொருத்தமாகும். இயேசு தாமே எந்த அக்கிரமத்தையும் செய்த குற்றவாளியல்ல. ஏசாயா 53:9இல் தீர்க்கன் இவ்வாறு கூறுகிறார், "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை." ஆனால் 6வது வசனத்தில், "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் **(ஏவோன்)** அவர்மேல் விழப்பண்ணினார்". இயேசு நம்முடைய அக்கிரமங்களை மட்டுமல்ல, அந்த அக்கிரமத்தினாலுண்டான எல்லா பொல்லாத விளைவுகளையும் சகித்தார். தனக்கு முன்னுதாரணமாக இருந்த அந்த போக்காட்டைப்போல, அவைகள் மறுபடியும் நம்மீது திரும்பி வராதபடி அவைகளை சுமந்து, கொண்டு போய்விட்டார்.

சிலுவையின் உண்மையான அர்த்தத்தையும் நோக்கத்தையும் இப்படி கூறலாம்: அதின் மீது தேவன் ஏற்படுத்திய ஒரு பரிமாற்றம் நிறைவேறியது. முதலாவது தேவ நீதியின்படி, நம்முடைய அக்கிரமத்தினால் உண்டான எல்லா பொல்லாத விளைவுகளையும் இயேசு நமக்கு பதிலாக சகித்தார். இப்போது, இயேசுவின் பாவமற்ற கீழ்ப்படிதலுக்குண்டான எல்லா நன்மையையும் தேவன் நமக்களிக்கின்றார்.

இன்னும் சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், இயேசுவுக்கு உண்டாக வேண்டிய நன்மை நமக்களிக்கப்படும்படி, நம்மீது வரவேண்டிய பொல்லாப்பு இயேசுவின் மீது வந்தது. தம்முடைய நித்திய நீதியை விட்டுக்கொடுக்காமல்,

தேவன் இவையனைத்தையும் நமக்களிக்க முடிகிறது ஏனென்றால் நம்முடைய சார்பில் இயேசு ஏற்கெனவே நம்முடைய அக்கிரமங்களின் தண்டனையை சகித்து விட்டார்.

இவையனைத்தும் தேவனுடைய அளவிட முடியாத கிருபையிலிருந்து தோன்றி, விசுவாசத்தினால் மட்டும் பெற்றுக் கொள்ளப்படுகிறது. காரணம் மற்றும் விளைவு என்பவைகளின் அடிப்படையில் இதற்கு தர்க்கரீதியிலான எந்த விளக்கவுரையுமில்லை. நம்மில் ஒருவரும் இப்படிப்பட்ட ஓர் ஈவினை பெற ஒன்றையும் செய்ததுமில்லை, அதை சம்பாதிக்க ஒருபோதும் ஒன்றும் செய்யவும் முடியாது. இப்பரிமாற்றத்தின் பல அம்சங்களையும், அவைகள் நம் வாழ்வில் எப்பகுதிகளில் பயன்படக்கூடும் என்பதையும் வேதம் நமக்கு காண்பிக்கின்றது. ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒரே கோட்பாடு தான் செல்லுபடியாகும்: நம்மீது நன்மை வரும்படி அதற்கேற்ற பொல்லாப்பு இயேசுவின் மீது வந்தது.

ஏசாயா 53:4, 5ல் இப்பரிமாற்றத்தின் முதல் தோற்றம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை (சரியான அர்த்தம், வியாதிகளை) *ஏற்றுக்கொண்டு,*

நம்முடைய துக்கங்களை (வேதனைகள்) *சுமந்தார்;*

நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு,

சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,

நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;

நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை (தண்டனை) *அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால்* (காயங்களால்) *குணமாகிறோம்.*

இங்கே இரண்டு சத்தியங்கள் பிணைக்கப்பட்டுள்ளன. ஒன்றின் பயன்பாடு ஆவிக்குரியதாகும், மற்றொன்று சரீரத்துக்குரியதாகும். ஆவிக்குரிய தளத்தில், நாம் மன்னிக்கப்பட்டு, தேவனோடு சமாதானத்தை பெறும்படியாக, நம்முடைய மீறுதல்கள் மற்றும் அக்கிரமங்களினால் உண்டான தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார். (ரோமர் 5:1ஐ பார்க்கவும்) சரீர பிரகாரமான தளத்தில், நாம் அவருடைய காயங்களினால் குணமாகும்படி, இயேசு நம்முடைய வியாதிகளையும் வேதனைகளையும் சுமந்துக்கொண்டார்.

புதிய ஏற்பாட்டின் இரண்டு பகுதிகளில் இப்பறிமாற்றத்தின் சரீர பிரகாரமான பயன்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. மத்தேயு **8:16-17**இல், ஏசாயா **53:4**ஐ குறிப்பிட்டு, மத்தேயு கூறும்போது:

(இயேசு)... பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.

அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

மறுபடியும், **1** பேதுரு **2:24**இல், அப்போஸ்தலன், ஏசாயா **53:5-6**ஐ குறிப்பிட்டு, இயேசுவை குறித்து கூறுகிவது:

...அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.

மேற்கண்ட வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள இரட்டிப்பான பரிமாற்றத்தை சுருக்கமாக இவ்வாறு கூறலாம்:

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.
நாம் சுகத்தைப் பெறும்படி அவர் காயப்பட்டார்.

பரிமாற்றத்தின் மூன்றாவது அம்சம் ஏசாயா **53:10**இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில், தேவன் இயேசுவின் ஆத்துமாவை குற்றநிவாரண பலியாக்கினார் என்று கூறப்பட்டுள்ளது. பாவ நிவாரண பலியின் பல்வேறு தோற்றங்களுக்கு, மோசேயினால் உண்டான சட்டங்களின் வெளிச்சத்தில் இதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். பாவம் செய்த நபர், தன்னுடைய பலியாக ஒரு ஆடு, வெள்ளாட்டுக்கடா, காளை அல்லது ஏதோ ஓர் மிருகத்தை ஆசாரியனிடம் கொண்டுவர வேண்டியது அவசியமாக இருந்தது. செய்த பாவத்தை அவன் தன் பலியின் மீது அறிக்கையிடுவான், ஆசாரியன் திருஷ்டாந்தமாக, அறிக்கையிட்ட பாவத்தை அந்த நபரிடமிருந்து, மிருகத்துக்கு கடத்தி விடுவார். அதன் பின், அந்த மிருக ஜீவன் கொல்லப்படும், இதனால் தன் மீது கடத்தப்பட்ட பாவத்துக்கான தண்டனையை செலுத்தி தீரும்.

தேவனுடைய முன்னறிவில், இவையனைத்தும், இயேசுவின் முழுமையான இறுதி தியாகத்தினால் நிறைவேற்றப்படப்போகும் யாவற்றுக்கும் நிழலாக இருந்தது. சிலுவையில், உலகமனைத்தின் பாவமும் கிறிஸ்து மீது சுமத்தப்பட்டது. இதன் விளைவு ஏசாயா **53:12**இல் குறிப்பிடப்பட்டுள்ளது: “அவர் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றினார்.” தம்முடைய தியாகமான, நிகராக்கும் (நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்ட) மரணத்தினால்,

இயேசு முழு மனுகுலத்தின் பாவத்துக்காகவும் பரிகாரம் செய்தார். 2 கொரிந்தியர் 5:21இல் பவுல் ஏசாயா 53:10ஐ குறிப்பிடும்போது, இப்பரிமாற்றத்தின் ஆக்கப்பூர்வமான அம்சத்தையும் முன்வைக்கிறார்:

> *நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (கிறிஸ்துவை) நமக்காகப் பாவமாக்கினார்.*

நம்முடைய சுய முயற்சியினால் அடையக்கூடிய ஓர் நீதியைக் குறித்துப் பவுல் இங்கே பேசாமல், தேவனுடைய சொந்த நீதியைக் குறித்தே பேசுகிறார் - அது பாவம் அறியாத ஓர் நீதியாகும். நாம் ஒருவருமே இதைச் சம்பாதிக்க முடியாது. பூமிக்கு மேல் வானம் எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அவருடைய நீதியும் நம்முடைய சொந்த நீதியைவிட அவ்வளவு உயர்ந்திருக்கிறது. விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பரிமாற்றத்தின் மூன்றாவது அம்சத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

நாம் அவருடைய நீதியைக்கொண்டு நீதிமான்களாக்கப் படும்படியாக, இயேசு நம்முடைய பாவத்தினால் பாவமானார்.

பரிமாற்றத்தின் அடுத்த அம்சம் முந்தினதிலிருந்து தோன்றும் ஓர் செயல்பாடாகும். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், பாவத்தின் இறுதியான பலன் மரணமென்று, முழு வேதமும் வலியுறுத்துகிறது. எசேக்கியேல் 18:4இல் “பாவம் செய்கிற ஆத்துமா சாகும்” என்று தேவன் கூறுகிறார்.

யாக்கோபு 1:15இல், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் என்று அப்போஸ்தலன் கூறுகிறார். இயேசு நம்முடைய பாவத்தை ஏற்றுக்கொண்டவுடன், அதன் விளைவான மரணத்தையும் அவர் அனுபவிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

இதை உறுதி செய்யும் வண்ணமாக எபிரெயர் 2:9இல், அதின் எழுத்தாளர் “இயேசு...தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப் பட்டிருந்தார்” எனக் கூறுகிறார். அவர் மரித்த மரணம், அவர் தம்மீது ஏற்றுக்கொண்ட மனித பாவத்தின், தவிர்க்க முடியாத விளைவானது. எல்லா மனிதரின் பாவத்தையும் சுமந்தபடியால், எல்லா மனிதருக்கும் உரிய மரணத்தை இயேசு மரித்தார்.

இதற்கு பதிலாக, தன்னுடைய நிகராக்கும் பலியை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும், அவர் நித்திய ஜீவன் என்னும் பரிசை அளிக்கிறார். ரோமர் 6:23இல் இவ்விரண்டு அடுத்தனைகளைப் (மாற்றுக் கருத்துக்கள்) பவுல் ஒன்றாக முன் வைக்கிறார்: பாவத்தின் சம்பளம் (நியாயமான பலன்) மரணம்; தேவனுடைய (சம்பாதிக்கப்படாத) கிருபைவரமோ நம்முடைய

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.

ஆகையால் பரிமாற்றத்தின் நான்காவது அம்சத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

அவருடைய ஜீவனில் நாம் பங்கடையும்படி, இயேசு நம்முடைய மரணத்தை மரித்தார்.

2 கொரிந்தியர் 8:9இல் பவுல், பரிமாற்றத்தின் இன்னொரு அம்சத்தை முன்வைக்கிறார்: ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியம் உள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.” ஏற்பட்ட பரிமாற்றம் தெளிவாக உள்ளது: தரித்திரத்திலிருந்து ஐசுவரியத்தினிடத்திற்கு. நாம் ஐசுவரியவான்களாகும்படி இயேசு தரித்திரரானார்.

இயேசு எப்போது தரித்திரரானார்? சில மக்கள், அவர் உலகத்தில் ஊழியம் செய்த நாட்களெல்லாம் தரித்திரராக இருந்ததாக கற்பனை செய்கிறார்கள் ஆனால், இது உண்மையல்ல. அவர் அதிக பணத்தைச் சுமந்து செல்லவில்லை, ஆனால் எந்த நேரத்திலும் தேவையான யாதொன்றிலும் அவருக்குக் குறைவு ஏற்பட்டதில்லை. அதே போல் தம்முடைய சீஷர்களை வெளியே அனுப்பும்போது அவர்களும் எதிலும் குறைவுபடவில்லை. (லூக்கா 22:35ஐ பார்க்கவும்) ஆகையால் தரித்திரராய் இருப்பதற்கு பதில் அவரும், அவருடைய சீஷர்களும் தவறாமல் ஏழைகளுக்குக் கொடுக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். (யோவான் 12:4-8; 13:29ஐப் பார்க்கவும்).

(இயேசு) பணத்தைப் பெறுவதற்கான வழிகள் மரபுக்கு மாறாக இருந்தது உண்மையென்றாலும், பணம் எங்கிருந்து வந்தாலும் அதற்கு ஒரே மதிப்புதான் உண்டு - அது வங்கியிலிருந்து வந்தாலும் சரி, மீனின் வாயிலிருந்து வந்தாலும் சரி! (மத்தேயு 17:27ஐப் பார்க்வும்). உணவை வழங்கும் அவருடைய முறைகளும் மரபுக்கு மாறானதாக இருந்தபோதிலும், 5000 ஆண்களுக்கு (பெண்கள், பிள்ளைகளைச் சேர்க்காமல்) ஆகாரம் கொடுக்கக் கூடிய ஒருவரைப் பொதுவாக நாம் தரித்திரன் என்று சொல்லமாட்டோம்! (மத்தேயு 14:15-21ஐப் பார்க்கவும்)

உண்மை என்னவென்றால், செழிப்புக்கு வேதாகமம் அளிக்கும் பொருள் விளக்கத்துக்கு, இயேசு தம்முடைய பூலோக ஊழியத்தின் நாட்களிலெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். தம்முடைய சொந்த வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தைச் செய்ய தேவையான அனைத்தையும் பெற்றிருந்தார். இதற்கு மேல், அவர் மற்றவர்களுக்கும்

கொடுத்தார். அவருடைய கையிருப்பு தீர்ந்து போகவே இல்லை.

ஆகையால், இயேசு நமக்காக எப்போது தரித்திரரானார்? பதில் இதுதான்: சிலுவையில். உபாகமம் 28:48இல் மோசே பூரண தரித்திரத்தை நான்கு வார்த்தைகளில் அடக்கினார்: பசி, தாகம், நிர்வாணம், சகலமும் குறைவுபடுதல். இயேசு சிலுவையில் இவையனைத்தையும் பூரணமாக அனுபவித்தார்.

அவர் பசியுள்ளவராக இருந்தார். சுமார் 24 மணி நேரம் உணவு உட்கொள்ளவில்லை.

அவர் தாகமாயிருந்தார். அவருடைய கடைசி வார்த்தைகளில் ஒன்று: தாகமாயிருக்கிறேன்! (யோவான்19:28)

அவர் நிர்வாணியாயிருந்தார். போர்ச்சேவகர்கள் அவருடைய ஆடைகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டார்கள் (யோவான் 19:23)

சகலமும் அவருக்குக் குறைவுபட்டிருந்தது. எதுவும் அவருக்குச் சொந்தமாக இருக்கவில்லை. மரணத்துக்குப் பின் இரவலாக பெறப்பட்ட அங்கியில், இரவலாக பெறப்பட்ட கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டார் (லூக்கா 23:50-53). ஆகையால் முழுமையான தரித்திரத்தை இயேசு சிலுவையில் நமக்காக பூரணமாய் சகித்தார்.

2 கொரிந்தியர் 9:8இல் பவுல் இப்பரிமாற்றத்தின் ஆக்கப்பூர்வமான அம்சத்தை முழுமையாக முன் வைக்கிறார்: "மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.'' இப்பரிமாற்றத்துக்கான ஒரே அடிப்படை தேவனுடைய கிருபை மட்டுமே என்று வலியுறுத்த பவுல் ஜாக்கிரதையுள்ளவராக இருக்கிறார். இது சம்பாதிக்கப்பட முடியாது. விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.

பல வேளைகளில் நம்முடைய நிறைவு பூலோகத்தில் இருந்த கிறிஸ்துவின் நிறைவைப் போலத்தான் இருக்கும். நாம் பெரிய அளவில் கையில் பணம் வைத்துக்கொள்ளாமலும், வங்கியில் பெரும் வைப்புத்தொகைகள் இல்லாமலும் இருப்போம். ஆனால் நாளுக்கு நாள் நம்முடைய தேவைகளுக்கும், மற்றவர்களுடைய தேவைகளைச் சந்திக்கத்தக்க கொஞ்சம் மீதியாகவும் பெற்றிருப்போம்.

அப்போஸ்தலர் 20:35இல், இயேசுவின் சொந்த வார்த்தைகளில், இப்படி ஏற்படுத்தப்பட்டதின் ஓர் முக்கியமான காரணத்தை காணலாம்: "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்." அவருடைய பிள்ளைகளெல்லாம் இன்னும் மேலான ஆசீர்வாதங்களை அனுபவிக்க

வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சை. ஆகையால், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மற்றவர்களுக்குக் கொடுக்கவும், போதுமானதை அவர் நமக்களிக்கின்றார்.

இப்பரிமாற்றத்தின் ஐந்தாவது அம்சத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

நாம் அவருடைய செழிப்பில் பங்கேற்க இயேசு நம்முடைய தரித்திரத்தை சகித்தார்.

சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம், மனிதனுடைய மீறுதலினாலுண்டான எல்லா விதமான உணர்ச்சிகளின் வேதனைகளையும் உட்படுத்துகிறது. இங்கேயும், நாம் நன்மையை அனுபவிக்கும்படி, இயேசு தீமையைச் சகித்தார். நம்முடைய அக்கிரமத்தினால் உண்டான இரண்டு கொடுமையான காயங்கள், அவமானமும் தள்ளப்படுதலுமே. சிலுவையில் இவ்விரண்டும் இயேசுவின் மீது வந்தன.

அவமானம் என்பதின் தீவிரம், கடுமையான தலைகுனிவிலிருந்து, ஒடுக்கத்தைக்கொண்டுவரும் தகுதியில்லா உணர்வு வரை மாறுபடலாம். இது தேவனோடு அல்லது மனிதர்களோடிருக்கும் அர்த்தமுள்ள ஐக்கியத்திலிருந்து ஒரு நபரைத் துண்டித்துவிடும். தற்போதைய சமுதாயத்தில் அதிகமாகிக்கொண்டிருக்கும் பாலியல் துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தலின் ஏதோ ஓர் தோற்றம், சிறு பிராயத்தில் ஒருவரை பாதிப்பது, அவர்கள் தலைகுனிவிற்கும், தாழ்வுமனப்பான்மைக்கும் காரணமாகிவிடுகிறது. அநேக நேரங்களில் இவ்வாறு ஏற்படும் தழும்புகள் தேவனுடைய கிருபையினால் மட்டும் தான் குணப்படும்.

சிலுவையிலிருந்த இயேசுவைக் குறித்துப் பேசும்போது எபிரெயரின் எழுத்தாளர், "அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து..." என்று கூறுகிறார் (எபிரெயர் 12:2) இழிவுபடுத்தும் மரண தண்டனைகளில், சிலுவையில் மரிக்கச் செய்வது எல்லாவற்றையும்விட அதிக அவமானத்துக்குரியதாயிருந்தது. மரண தண்டனைக்கு உட்படப் போகும் நபர் எல்லா உடைகளற நிர்வாணமாக்கப்பட்டு, கடந்துபோகிறவர்களின் பார்வைக்கு வெளியரங்கமாக்கப்படுவார். அவர்கள் கேலி செய்து பரிகாசம் பண்ணுவார்கள். இவ்விதமாக தான் இயேசுவும் அவமானம் அடைந்து சிலுவையில் தொங்கினார் (மத்தேயு 27:34).

இயேசு அவமானம் அடைந்ததால், அவரை விசுவாசிக்கிறவர்கள், தம்முடைய நித்திய மகிமையில் பங்குபெறும்படி அவர்களை அழைத்து வருவதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. எபிரெயர் 2:10இல், எழுத்தாளர், "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (அதாவது,

இயேசுவை) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது (தேவனுக்கு)" எனக் கூறுகிறார். இயேசு சிலுவையில் அடைந்த அவமானத்தினால், அவரை விசுவாசிக்கும் அனைவரும் தங்கள் அவமானத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு வழி பிறந்தது. அது மட்டுமல்ல, நித்திய காலமாக அவருடைய உரிமையாயிருக்கும் மகிமையை இயேசு நம்மோடு பகிர்ந்துகொள்கிறார்!

அவமானத்தைப் பார்க்கிலும் அதிக வேதனையான காரியம் தள்ளப்படுதல். பொதுவாக, உறவுகளின் முறிவினால் இது ஏற்படும். தங்கள் சொந்த பிள்ளைகளைத் தள்ளிவிடுகிற பெற்றோர் மூலமாக இது ஆரம்பமாகிறது. தள்ளிவிடுதல், கொடூரமான, எதிர்மறையான விதங்களில் செயலாற்றும் ஒன்றாக இருக்கலாம் அல்லது வெறும் அன்பும், ஏற்றுக்கொள்ளப்படுதலையும் காண்பிக்கத் தவறுதலாகவும் இருக்கலாம். தன் கர்ப்பத்திலிருக்கும் குழந்தைக்கு விரோதமாக ஒரு பெண் எதிர் மறையான உணர்வுகள் உடையவளாய் இருந்தால், அப்பிள்ளைத் தள்ளப்படுதலின் உணர்வோடு பிறக்கும் - இவ்வுணர்வு முதிர் வயதிலும் அவர்களைப் பின் தொடர்ந்து, கல்லறை வரை செல்லும்.

தள்ளப்படுதலின் இன்னொரு பிரதான காரணம், திருமண உறவுகளின் முறிவாகும். ஏசாயா **54:6**இல் தேவனுடைய வார்த்தைகளில் இது தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது:

> *''கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப் போலவும், இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார்'' என்று உன் தேவன் சொல்லுகிறார்.*

மத்தேயு **27:46** மற்றம் **50**இல் தள்ளப்படுதலின் காயத்துக்கு தேவனுடைய தீர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் வேதனையின் உச்சக்கட்டத்தை விவரிக்கின்றது:

> *ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.*
> *இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.*

பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் முதல் முறையாக, தேவனுடைய குமாரன் தன் பிதாவை நோக்கிக் கூப்பிட்டு, பதில் பெறாமல் போனார். இயேசு மனித பாவத்தை முழுமையாகத் தன் மீது ஏற்றுக்கொண்டபடியால், சமரசம் இல்லாத தேவனுடைய பரிசுத்தம், தன் சொந்தக் குமாரனையே தள்ளிவிட செய்தது. இவ்விதமாய் இயேசு தள்ளப்படுதலை, அதிக வேதனையளிக்கும்

தோற்றத்தில் அனுபவித்தார்: சொந்த தகப்பனால் தள்ளிவிடப்படுதல். இந்த சம்பவத்துக்குப் பின், சிலுவையில் அறையப்பட்ட காயங்களால் அல்ல, தள்ளப்படுதலினால் உடைக்கப்பட்ட இருதயத்தின் காரணமாக இயேசு மரித்தார்.

மத்தேயு தொடர்ந்து எழுதுகிறார்: “அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது...” பாவியான மனிதன் பரிசுத்தமுள்ள தேவனோடு, நேரடியாக ஐக்கியம் கொள்ள ஓர் வழி திறக்கப்பட்டதென்பதற்கு இது அடையாளமாயிற்று. தம்முடைய பிள்ளைகளாக, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இயேசுவின் தள்ளப்படுதல் நமக்கு வழியைத் திறந்துகொடுத்தது. எபேசியர் **1:5-6**இல் இதைப் பவுல் சுருக்கமாகக் கூறுகிறார்: “பிரியமானவருக்குள்... தம்முடைய (தேவனுடைய) தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.” இயேசு கிறிஸ்துவின் தள்ளப்படுதலின் விளைவாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டோம்.

கடந்த காலங்களை விட, அவமானம் மற்றும் தள்ளப்படுதலுக்கு தேவன் அளிக்கும் தீர்வு இன்றைய சூழ்நிலையில் அதிகமாய் தேவைப்படுகிறது. என்னுடைய மதிப்பீட்டின்படி, உலகத்தில் வயது வந்தவர்களில் நான்கில் ஒரு பங்கு, அவமானம் அல்லது தள்ளப்படுதலின் காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்படிப் பட்டவர்களை இயேசுவின் சிலுவையிலிருந்து புரண்டோடும் குணமாக்குதலுக்கு வழிநடத்துவது எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சியை தருகின்றது.

உணர்ச்சிகளின் ரீதியில், சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தின் இரண்டு அம்சங்களை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

நாம் அவருடைய மகிமையில் பங்கடையும்படி
இயேசு நம்முடைய அவமானத்தைச் சுமந்தார்

பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படும்படி,
அவர் நம்முடைய தள்ளப்படுதலை சகித்தார்.

மேலே ஆராயப்பட்ட பரிமாற்றத்தின் அம்சங்கள், மனுக்குலத்தின் சில அடிப்படையான, உடனடி தேவைகளை உட்படுத்தினது ஆனால் இவைகள் ஒருபோதும் முழுமையானதல்ல. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், மனிதனுடைய எந்தத் தேவையாயிருந்தாலும், இப்பரிமாற்றத்தின் அடிப்படைக் கோட்பாட்டினால் சந்திக்கப்படுகிறது: நமக்கு நன்மையை அளிக்கும்படியாக, இயேசு மீது தீமை வந்தது. இக்கோட்பாட்டை நம்முடைய வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தக் கற்றுக்கொண்டால் நம்முடைய எல்லாத் தேவைகளும் தேவனால் சந்திக்கப்படும்.

இப்பரிமாற்றத்தின் ஓர் இறுதியான, உச்சக்கட்டம் கலாத்தியர் **3:13-14**இல் பவுலினால் விவரிக்கப்பட்டுள்ளது:

> ***மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.***

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.

உபாகமம் **21:23**இல் மோசேயினால் குறிப்பிடப்பட்ட நியாயப்பிரமாணத்தின் செயலாற்றுதலாக இயேசு சிலுவையில் தொங்கினதைப் பவுல் ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். அச்சட்டத்தில், மரத்தில் தூக்கப்படுவதினால் மரணம் அடைந்தவன் தேவனுடைய சாபத்தின் கீழ் வந்தான். அதன் பின்பு அதினால் ஏற்படும் எதிர் விளைவை பவுல் குறிப்பிடுகிறார்: ஆசீர்வாதம்.

பரிமாற்றத்தின் இந்த அம்சத்தை ஆராய ஒரு வேத ஆராய்ச்சியாளர் தேவையில்லை:

நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக இயேசு சாபமானார்.

இயேசுவின் மீது வந்த சாபம் நியாயப்பிரமாணத்தின் சாபம் என்று அழைக்கப்பட்டுள்ளது. உபாகமம் **28**ஆம் அதிகாரத்தில், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிகிறதினால் வரும் ஆசீர்வாதங்கள் மற்றும் அதை முறிப்பதினால் ஏற்படும் சாபங்களின் முழு விபரத்தையும் மோசே பட்டியலிடுகிறார். உபாகமம் **28:15-68**இல் பட்டியலிடப்பட்ட சாபங்களை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்.

அவமானம்
மலட்டுத்தன்மை, பலனற்ற நிலை
மன நோய், சரீர வியாதிகள்
குடும்ப உறவுகளின் முறிவு
வறுமை
தோல்வி
ஒடுக்கப்படுதல்
வீழ்ச்சி
தேவ தயவற்ற நிலை

இவ்வார்த்தைகளில் சில உங்களுடைய வாழ்க்கையின் பகுதிகளுக்குப் பொருந்துமா? தேவனுடைய ஆசீர்வாதத்தின் சூரிய வெளிச்சத்தைத் தடுத்துப் போடுகிற இருளான நிழல் போன்ற காரியங்கள் உங்கள் மீது தங்குகிறதா? அப்படியானால் உங்கள் பிரச்சனைகளின் மூல காரணம் ஒரு சாபமாகும். இதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும்.

இயேசுவின் மீது வந்த சாபத்தின் முழு அகோரத்தையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர் சிலுவையில் தொங்கினதை உங்கள் கண் முன் கொண்டு வர முயற்சியுங்கள்.

இயேசு தன்னுடைய சொந்த ஜனங்களால் தள்ளப்பட்டு, தன் சீஷர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, மற்றவர்களால் கைவிடப்பட்டார் (ஒரு சிலர் மட்டும் பின்பு திரும்பி, அவருடைய இறுதி பாடுகளை காண பின் தொடர்ந்தார்கள்). அவர் வானத்துக்கும் பூமிக்கும் இடையே நிர்வாணமாய்த் தொங்கவிடப்பட்டார். எண்ணற்ற காயங்களால் அவருடைய சரீரம் வேதனையுற்றது. முழு மனுக்குலத்தின் குற்றத்தினால் அவருடைய ஆத்துமா தோய்ந்து போயிற்று. பூமி அவரைத் தள்ளிவிட்டது, பரலோகம் அவருடைய கூக்குரலுக்குப் பதில் கொடுக்காமல் போனது. சூரியன் தன்னுடைய வெளிச்சத்தை எடுத்துக்கொண்டு, இருள் அவரை மூடினபோது, அவருடைய ஜீவ இரத்தம் புழுதியும் கற்களுமாயிருந்த மண்ணிலே சிந்தி அடங்கியது. ஆனாலும் இருளிலிருந்து, அவர் மரிக்கும் முன் “முடிந்தது!” என்ற இறுதியான, மகத்தான வெற்றியைப் பெற்ற சத்தம் ஒலித்தது.

கிரேக்கத்தில், “முடிந்தது” என்பதற்கு, ஒன்றைப் பூரணப்படுத்துவது அல்லது முழுமைப்படுத்துவது என்ற அர்த்தமுடைய ஓர் வினைச்சொல்லின், பூரண இலக்கணம் தான் இவ்வார்த்தை. தமிழில் அதை எழுத வேண்டுமானால் பூரணமாய் நிறைவுபெற்றது அல்லது பூரணமாய் பூரணப்பட்டது என்று மொழி பெயர்க்க வேண்டும்.

கலகத்தினால், மனுக்குலத்தின் மீது வந்த எல்லாப் பொல்லாத விளைவுகளையும், இயேசு தன் மீது ஏற்றுக்கொண்டார். முறிக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் எல்லாச் சாபத்தையும் இயேசு தீர்த்துவிட்டார். அவருடைய கீழ்ப்படிதலினால் உண்டான எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் பெற வேண்டும் என்பதற்காக அப்படி செய்தார். இத்தியாகத்தின் விளைவுகள் கிரகிக்க முடியாததாயிருந்தாலும், அதின் எளிமையும் அதிசயமானதாய் இருக்கிறது.

இயேசு உங்களுக்காகச் செய்த இத்தியாகம் மற்றும் அவர் உங்களுக்காகப் பெற்றுக்கொடுத்த யாவற்றின் செய்தியையும் விசுவாசத்தோடு உங்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறதா? தேவன் ஏற்பாடு செய்த யாவற்றுக்குள்ளும் பிரவேசிக்க நீங்கள் ஆயத்தமா?

நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரே தடையுண்டு - மன்னிக்கப்படாத பாவத்தின் தடை. இயேசுவின் தியாகத்தினால் உங்கள் பாவமெல்லாம் மன்னிக்கப்பட்டதென்ற நிச்சயம் உங்களுக்கு உண்டா? இல்லையெனில், அங்கே தான் நீங்கள் ஆரம்பம் செய்ய வேண்டும்:

ஓர் எளிய ஜெபத்தை நீங்கள் செய்யலாம்:

தேவனே, நான் ஓர் பாவி என்றும், என் வாழ்விலே மன்னிக்கப்படாத பாவம் உண்டென்றும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் மன்னிக்கப்படும்படியாக இயேசு தண்டிக்கப்பட்டாரென்று விசுவாசிக்கிறேன். ஆகையால், இப்போதே இயேசுவின் நாமத்தினால் என் பாவங்கள் அனைத்தையும் மன்னியும் என்று உம்மிடம் கேட்கிறேன்.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9) என தேவனுடைய வார்த்தை வாக்களிக்கிறது. வார்த்தையைக் கொண்டு தேவனை சந்தியுங்கள்! இந்த நொடிப்பொழுதே அவர் உங்களுடைய எல்லா பாவத்தையும் மன்னித்தார் என நம்புங்கள்.

விசுவாசத்தின் மிக எளிமையான மற்றும் தூய்மையான வெளிக்காட்டுதலான ஓர் எளிய எதிர் செயலை நீங்கள் செய்ய வேண்டும் - நன்றி சொல்லுங்கள்.

இப்போதே அதைச் செய்யுங்கள்! "*நன்றி, நன்றி ஆண்டவராகிய இயேசுவே, நான் மன்னிக்கப்படும்படி நீர் தண்டிக்கப்பட்டீரே. நான் முழுமையாக புரிந்துகொள்ளா விட்டாலும், நான் நம்புகிறேன். நன்றியுள்ளவனாக இருக்கிறேன்!" என கூறுங்கள்.*

பாவத்தின் தடை அகற்றப்பட்டால், சிலுவையின் மூலம் தேவன் உங்களுக்கென்று ஆயத்தப்படுத்தின மற்ற எல்லாவற்றுக்குள்ளும் நீங்கள் பிரவேசிக்க வழி திறந்திருக்கிறது. பாவமன்னிப்பைப் போலவே ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தையில் வைக்கும் எளிய விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

நம் ஒவ்வொருவருக்கும் விசேஷித்த தேவைகள் உண்டு, தேவனுடைய தீர்வைப் பெற நாம் தனி நபராக அவரிடம் வர வேண்டும். இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள மற்ற எந்தப் பரிமாற்றத்தையும் பெற நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஜெபம் இதோ:

ஆண்டவராகிய இயேசுவே, நான் சுகத்தைப் பெற நீர் காயப்பட்டதற்காக நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய நீதியைக் கொண்டு நான் நீதிமானாக்கப்பட, நீர் என்னுடைய பாவத்தைக் கொண்டு பாவமானதற்காக உமக்கு நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய ஜீவனை நான் பெறும்படியாக நீர் என்னுடைய மரணத்தை மரித்ததற்காக நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய செழிப்பில் நான் பங்குபெறும்படியாக நீர் என்னுடைய தரித்திரத்தைச் சகித்ததற்காக நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய மகிமையில் நான் பங்குபெற, நீர் என்னுடைய அவமானத்தைச் சுமந்ததற்காக நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, பிதாவினிடத்தில் உம்முடைய ஏற்றுக்கொள்ளப்படுதலை நான் பெறும்படி, நீர் என்னுடைய தள்ளப்படுதலை சகித்ததற்காக நன்றி.

ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய ஆசீர்வாதத்துக்குள் நான் பிரவேசிக்க, நீர் சாபமானதற்காக நன்றி.

நீங்கள் ஜெபித்த ஒவ்வொரு காரியமும் முன்னேற்றத்துக்கு ஏதுவானது. நீங்கள் செய்த இந்த முதன்மையான ஜெபம் தேவனுடைய வல்லமையை உங்கள் வாழ்வில் கட்டவிழ்த்துள்ளது. ஆனால் இது வெறும் ஆரம்பம் தான். தேவனுடைய இந்த ஏற்பாடுகளின் முழுமையையும் பெற நீங்கள் மூன்று காரியங்களைச் செய்ய வேண்டும்:

1. இச்சத்தியங்களை வேதத்தில் நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.
2. உங்கள் தேவைக்கேற்ற பரிமாற்றத்தைத் தொடர்ந்து அறிக்கையிடுங்கள்.
3. உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தும்படி, தொடர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

எவ்வளவு அதிகமாக நீங்கள் தேவனுக்கு நன்றி சொல்லுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவர் உங்களுக்காக செய்ததை நீங்கள் விசுவாசிப்பீர்கள். நீங்கள் எவ்வளவு விசுவாசிக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகத் தேவனைத் துதிக்க விரும்புவீர்கள்.

இவ்விரண்டும் - விசுவாசிப்பதும் நன்றி செலுத்துவதும், நன்றி செலுத்துவதும், விசுவாசிப்பதும் - சுழன்று மேலே செல்லுகிற படிகளைப் போன்றவை, தேவன் உங்களுக்கென்று ஏற்படுத்தின முழுமைக்குள் உயர அழைத்துச் செல்லும்.

சிலுவையில் நிறைவேறின பரிமாற்றம்

தேவனுடைய தயவு வழங்கப்படுவதற்கு ஒரே ஒரு, போதுமான அடிப்படைதான் உண்டு - சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம்.

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.

நாம் சுகத்தைப் பெறும்படி அவர் காயப்பட்டார்.

நாம் அவருடைய நீதியைக்கொண்டு நீதிமான்களாக்கப் படும்படியாக, இயேசு நம்முடைய பாவத்தினால் பாவமானார்.

நாம் அவருடைய ஜீவனைப் பெறும்படி, இயேசு நம்முடைய மரணத்தை மரித்தார்.

நாம் அவருடைய செழிப்பில் பங்கேற்க, இயேசு நம்முடைய தரித்திரத்தை சகித்தார்.

நாம் அவருடைய மகிமையில் பங்கடையும்படி, இயேசு நம்முடைய அவமானத்தைச் சுமந்தார்.

நாம் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படும்படி, அவர் நம்முடைய தள்ளப்படுதலை சகித்தார்.

நாம் ஆசீர்வாதத்துக்குள் பிரவேசிக்கும்படி, இயேசு சாபமானார்.

இப்பட்டியல் முழுமையானதல்ல. இப்பரிமாற்றத்தில் சேர்க்கப்படக்கூடிய இன்னும் பல அம்சங்களுண்டு. ஆனால் அவை அனைத்தும் இயேசுவின் தியாகத்தினால், தேவன் உருவாக்கின ஆசீர்வாதங்களின் பல்வேறு கோணங்களாவன. வேதம் இவையனைத்தையும் ஒரே பிரம்மாண்டமான வார்த்தையில் அடக்குகின்றது: இரட்சிப்பு. கிறிஸ்தவர்கள் அநேக நேரத்தில் இரட்சிப்பை, வெறும் பாவ மன்னிப்பைப் பெற்று, மறுபடியும் பிறக்கும் அனுபவத்திற்கு குறுக்கி விடுகிறார்கள். இது அருமையாக இருந்தாலும், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பின் முதல் பகுதிமட்டும் தான் இது.

தனிப்பட்ட ஆய்வு

இப்போது, தெய்வீக பரிமாற்றத்தின் பாட கேள்விகளுக்காக, இணைப்பு “அ”வுக்கு திருப்பிக்கொள்ளுங்கள். இக்கேள்விகளுக்கான பதில்கள், இணைப்பு “ஆ”வில் கொடுக்கப்பட்டுள்ளன.

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?

முன்னுரை

உலகத்தின் பல பகுதிகளுக்கு நான் சென்று ஊழியஞ்செய்யும்பொழுது, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளைக் குறித்து இரண்டு வித முக்கியமான கருத்துக்கள் இருப்பதை நான் காண்கிறேன். மேலை நாடுகளில் வசிப்பவர்கள், பல ஆண்டுகளாக பகுத்தறிவுள்ள, விஞ்ஞான ரீதியிலான சிந்தையில் வளர்க்கப்பட்டுள்ளார்கள். இதனால் ஐம்புலன்களால் பெற்றுக்கொள்ளக்கூடாத எந்தக் காரியத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நன்மைக்கோ தீமைக்கோ தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட தளம் உண்டு என்பது அவர்களில் அநேகர் அறியாதிருக்கிறார்கள்.

மறுபக்கம், மேலை நாடுகள் அல்லாத உலகத்தின் மற்றெல்லாப் பகுதிகளிலுமே, பெரிய பட்டணங்கள் ஆனாலும் சரி, சிறிய கிராமங்கள் ஆனாலும் சரி, இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகம் வெறும் ஒரு தத்துவம் அல்ல என்று அறியும் பெரும் கூட்டம் மக்கள் வாழ்கிறார்கள். அறியாமையைப் பார்க்கிலும் இத்தகைய அறிவு நல்லது என்றாலும், அன்றாட வாழ்க்கையில் இவைகளைச் சந்திக்க வேண்டுமே என்ற பயத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். இதின் விளைவாக, இப்படிப்பட்ட மக்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற, தேவனுடைய வல்லமைக்கு, தங்களை ஒப்புக்கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருவதைக் குறித்த இச்செய்தி அநேகருக்குப் பெரும் உதவியாக இருக்கும் என விசுவாசிக்கிறேன். அவர்கள் எங்கே வாழ்ந்தாலும், அவர்கள் பின்னணி எப்படிப்பட்டதாய் இருந்தாலும் இது உண்மையாகும். பல ஆண்டுகளாக நான் இதை நிரூபித்துள்ளேன். இச்செய்தி, பலருடைய வாழ்கையை, சமுதாயங்களை, சபைகளை, முழு தேசங்களையும் மாற்றக் கூடிய வல்லமை நிறைந்தது.

தாங்கள் முற்றிலும் புரிந்துகொள்ளாத ஒன்றோடு அநேகர் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் வெற்றி பெறும் தருவாயில், ஏதோ ஒன்று நிகழ்ந்து அவர்கள் வெற்றியைத் தடுத்து விடுகிறது. முழு வெற்றியுடைய நபராய் இராதபடிக்கும், தாங்கள் விரும்பும் விதத்தில் தேவனுக்கு வெற்றிகரமாக ஊழியஞ்செய்யாதபடிக்கும் காணப்படாத ஏதோ ஒன்று அவர்களைத் தடை செய்கிறது. அது என்னவென்று அவர்கள் கண்டறியாமலும், புரிந்துகொள்ளாமலும் இருக்கலாம். அவர்கள் வாழ்க்கையில் இருக்கும் சாபத்தோடு போராடிக்கொண்டிருப்பதே அவர்கள் பிரச்சனை என நான் நம்புகிறேன்.

இச்செய்தி, சாபங்கள் எப்படி செயல்படுகின்றன, அவைகள் எங்கிருந்து வருகின்றன, மக்கள் அவைகளிலிருந்து விடுபடுவது எப்படி, தேவன் அவர்களுக்காகத் தீர்மானித்த ஆசீர்வாதத்தின் பரிபூரணத்தை அனுபவிப்பது எப்படி என்பதை வேதத்தின் அடிப்படையில் உங்களுக்குக் காண்பிக்கும்.

பகுதி 1

ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் உண்மை

நீங்கள் தொடர்ந்து வரும் வியாதியினாலோ, பணப் பிரச்சனையினாலோ, பிரிந்து போகும் நிலையிலுள்ள குடும்ப உறவுகளினாலோ திகைத்துப் போனீர்களா? உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்கின்றனவா? சிலருக்கு மட்டும் வெற்றியும் மன நிறைவும் பிறரைவிட ஏன் அதிகம் கிடைக்கிறதென்று நீங்கள் நினைத்ததுண்டா?

ஒவ்வொருவருடைய வாழ்விலும் இரு சக்திகள் கிரியை செய்கின்றன என நான் அறிவேன்: ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள். ஒன்று நன்மையானது, மற்றொன்று தீமையானது. தேவனுடைய ஆசீர்வாதத்தின் பலன்களை அனுபவிக்கவும், சாபங்களிலிருந்து பாதுகாக்கப்படவும் இந்த வல்லமைகள் எப்படிக் கிரியை செய்கின்றன என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சாபம் என்பது, இருளான யுகங்களில் தோன்றின ஒரு மூட நம்பிக்கை அல்ல. சில உண்மையான சம்பவங்களைக் கூறி, தற்செயலாகவோ பரம்பரையினாலேயோ பொல்லாப்பில் சிக்கிக்கொள்ளவில்லை என்று கண்டறிந்து ஆச்சரியப்பட்ட சில மக்களை உங்களுக்கு எடுத்துக்காட்டாக முன் வைக்க விரும்புகிறேன். சாபம் என்பது உங்கள் மேல் தங்கி, உங்கள் முழு ஆள்தத்துவத்தின் செயல்பாட்டை தடை செய்யும் ஒரு நீண்ட, பொல்லாத கரத்திற்கு ஒப்பிடலாம். அதின் ஊற்று உங்கள் வாழ்நாட்களில் அல்லது உங்கள் முன்னோரின் நாட்களில் தோன்றி இருக்கலாம்.

01

என் சிந்தையைத் தேவன் எவ்வாறு மாற்றினார்

ஆசீர்வாதங்களும் சாபங்களும் உண்மை என்று இப்போது நான் எவ்வளவு உறுதியாய் இருக்கின்றேனோ, எப்போதும் அப்படி இருந்ததில்லை. அவைகள் வேதாகமத்தில் உள்ள கருத்துக்கள் என்று அறிந்தும், அவைகளின் முக்கியத்துவத்தைக் குறித்து நான் முழுவதும் அறியாதிருந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைப் பயன்படுத்தி, தேவன் என் சிந்தையை மாற்றினார்.

அமெரிக்காவிலே, ஒரு பிரஸ்பிட்டேரியன் திருச்சபையில் பிரசங்கம் செய்து முடித்த நான், ஒரு குடும்பத்தைக் கவனித்தேன் - தகப்பன், தாய் மற்றும் வாலிப மகள். “அந்தக் குடும்பத்தின் மீது ஒரு சாபம் இருக்கிறது” என்று பரிசுத்த ஆவியானவர் எனக்குச் சொன்னது போல் இருந்தது. இப்படி நினைக்க இயற்கையான காரணங்கள் இல்லை, ஆகையால் நான் அந்தத் தகப்பனிடம் சென்று, “ஐயா, உங்கள் குடும்பத்தின் மீது ஒரு சாபம் இருப்பதைத் தேவன் எனக்குக் காண்பிக்கிறார். இயேசுவின் நாமத்தில் அச்சாபத்தை உடைத்து, உங்களை விடுவிக்கட்டுமா?” என்று கேட்டேன். உடனே அவர் “சரி” என்று கூறினார்.

ஒரு சுருக்கமான, எளிமையான ஜெபத்தைச் செய்தேன். அவர்களில் ஒருவரையும் நான் தொட்டு ஜெபிக்கவில்லை ஆனாலும், சாபத்தை முறித்து ஜெபிக்கும்போது, ஒவ்வொருவருக்குள்ளும் காணக்கூடிய, சரீரப்பிரகாரமான ஓர் அசைவு உண்டானது. அப்போதுதான் அந்த மகளின் கால், தொடை தொடங்கி, கீழ் பாதம் வரையிலும் மாவுக் கட்டு போடப்பட்டிருப்பதைக்

கவனித்தேன். அந்தத் தகப்பனைப் பார்த்து, "உங்கள் மகளின் சுகத்துக்காக ஜெபிக்கட்டுமா?" என்று கேட்டேன். அவர், "சரி! ஆனால் கடந்த பதினெட்டு மாதங்களில், அந்தக் காலை மூன்று முறை முறித்துக்கொண்டாள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். அது சுகம் பெறாது என்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

இன்று, இதைப் போன்ற வார்த்தைகளைக் கேட்டால், அக்குடும்பத்தின் மீது சாபம் இருக்கிறது என்பதை உடனே அறிந்துகொள்வேன். ஒரு எளிமையான ஜெபத்தைச் செய்தேன். சில நாட்களில் அந்தத் தாயார் நன்றி கூறி எனக்குக் கடிதம் எழுதினார்கள். அவர்கள் மருத்துவமனைக்குத் திரும்பச் சென்றபொழுது, எக்ஸ்ரேயின் மூலம், கால் சுகம் அடைந்ததை அறிந்து மாவுக்கட்டை அகற்றினார்கள்.

இச்சம்பவத்தை நான் சிந்தித்த போது, சுகத்திற்காக ஜெபிக்க அனுமதிக்கும் முன், அக்குடும்பத்தின் மீது இருந்த சாபத்தை தேவன் எனக்குக் காண்பித்து, அதை முறிக்க என்னை வழிநடத்தினார் என உணர்ந்தேன். ஏன்?

சாபம் முறிக்கப்படாவிட்டால், அவள் சுகம் பெற்றிருக்கமாட்டாள் என்பதுதான் என்னுடைய முடிவு. அவள் பெற வேண்டிய ஆசீர்வாதங்களைத் தடுத்து நிறுத்தும் காணப்படாத தடையாக அச்சாபம் இருந்தது.

அதற்குப்பின், தேவன் ஆசீர்வாதங்கள் சாபங்கள் என்ற விவகாரத்தைக் குறித்து என்னோடு பேச ஆரம்பித்தார். வேதம் இவைகளை குறித்து எவ்வளவு அதிகமாக பேசுகிறது என்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் பொதுவாக பிரசங்கங்களில் இதைக் குறித்து நமக்கு அதிகம் கேட்க கிடைப்பதில்லை.

என் சொந்த வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் இந்தக் காணப்படாத தளத்தின் உண்மையை நிரூபித்துக் காட்டியது. 1904ஆம் ஆண்டு சீனாவில் நடந்த "பாக்ஸர்" கலகத்தை அடக்க ஆங்கிலேயருடைய இராணுவம் அனுப்பப்பட்டது. அதில் என்னுடைய தாத்தா ஒரு பிரிவின் தளபதியாக இருந்தார். அவர் திரும்ப வரும்போது சீனக் கலைப் பொருட்களில் சிலவற்றை கொண்டு வந்தார். இவைகள் எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாக மாறின. என் தாய் மரித்த பின் அவற்றில் சில என்னிடம் வந்தன.

வியப்பூட்டும் விதத்தில் சித்திரத் தையல் வேலை (Embroidery) செய்யப்பட்ட நான்கு பறக்கும் சர்ப்பங்களின் (Dragon) படத்தை எங்கள் வரவேற்பறையில் மாட்டி வைத்தோம். அதே நேரத்தில், ஊழியத்தில் சில எதிர்ப்புகளை நான் உணர ஆரம்பித்தேன். ஆனால், எங்கிருந்து அது வருகிறது என்பதை என்னால் அடையாளம் காண முடியவில்லை.

மனச்சோர்வு, பணப் பற்றாக்குறை, ஏமாற்றம் மற்றும் தொடர்புகொள்வதில் பிரச்சனை என்ற விதங்களில் இந்த எதிர்ப்பு வெளிப்பட்டது.

கடைசியாக, தீவிர உபவாச ஜெபத்துக்குப் பின், இந்தப் பறக்கும் சர்ப்பங்களைக் குறித்து என் மனநிலையில் ஒரு மாற்றம் ஏற்படுவதை நான் கண்டேன். வேதத்தில் இம்மிருகம் யாரைக் குறிக்கின்றது என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். தெளிவாக இது சாத்தான்தான். இத்தகையப் பொருட்கள் என் வீட்டில் இருக்க ஏற்றதல்ல என்று உணர்ந்த நான், கீழ்ப்படிதலின் அடையாளமாக அவைகளை அகற்றினேன்.

இதைத் தொடர்ந்த மாதங்களில் என் பொருளாதாரத்தில் தெளிவான முன்னேற்றம் காணப்பட்டது. இந்த அனுபவத்தைத் தியானிக்கையில், உபாகமம் **7:25-26**ஐ குறித்து எனக்குப் புதிய வெளிப்பாடு கிடைத்தது. இதில் கானானியருடைய விக்கிரக ஆராதனையுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று மோசே இஸ்ரவேல் மக்களை எச்சரித்தார்.

> *அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக்கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப் போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது.*

பொய்யான தெய்வத்தின் உருவத்தை என் வீட்டுக்குள்ளே கொண்டு வந்ததினால் அறியாமலேயே என்னையும், என் குடும்பத்தையும் நான் சாபத்துக்குத் திறந்து வைத்தேன். நான் ஈடுபட்டிருந்த காரியத்தை குறித்து, பரிசுத்த ஆவியானவர் என் கண்களைத் திறந்ததற்காக மிகவும் நன்றியுள்ளவனானேன்.

என் சொந்தப் பொருளாதார முன்னேற்றத்தையும், உடைந்த காலுடைய பெண் ஆரோக்கியம் அடைந்ததையும் இணைக்கும் ஒரு கோட்பாட்டை நான் காண ஆரம்பித்தேன். இரண்டு சம்பவங்களிலும் காணப்படாத தடையாக ஓர் சாபம் இருந்தது. விடுதலையின் ஜெபத்தோடு, சுகமும் வந்தது, என்னுடைய விஷயத்தில் பொருளாதார விடுதலை ஏற்பட்டது.

ஆசீர்வாதங்கள் சாபங்களின் உண்மையை வெளிப்படுத்தும் இன்னொரு சம்பவத்தை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்த போது, ஒரு யூதப் பெண்ணைச் சந்தித்தேன், அவளை "மிரியாம்" என்று நாம் அழைக்கலாம். அவள் இயேசுவை விசுவாசிக்கிறவள், இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று,

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றவள். மிகவும் திறமையுள்ளவள், நல்ல சம்பளம் பெறும் ஒரு வேலை. ஜெபத்தின் விளைவாக வேலை கிடைத்து, தன் சொந்தத் தொழிலுக்கு அதிபராக இருந்த ஒரு மனிதனுக்குப் பணியாற்றினாள். அவரும், அந்தத் தொழிலில் பணியாற்றின எல்லாக் கம்பெனி காரியதரிசிகளும், ஒரு பெண் தீர்க்கதரிசியால் நடத்தப்பட்ட ஏதோ ஒரு வித்தியாசமான மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சில நாட்களுக்குள் அறிந்துகொண்டாள்.

சில காலம் சென்ற பின்பு, அவளுடைய மேல் அதிகாரி, "எங்கள் பெண் குரு எங்கள் மேல் ஆசீர்வாதங்களைக் கூறி இருக்கிறார், அவைகளை நீ எங்களுக்கு "டைப்" செய்து கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். ஆனால் அவைகள் ஆசீர்வாதங்களே அல்ல என்று சிறிது நேரத்தில் மிரியாம் கண்டுபிடித்தாள். அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவள் என்பதினாலே அவைகளை "டைப்" செய்ய விருப்பமில்லை என்று தன் மேல் அதிகாரிக்கு விளக்கம் சொன்னாள். அவர் நல்லெண்ணம் கொண்டவராக, அவள் மனசாட்சியைப் அது பாதித்தது என்பதை உணராததற்கு மன்னிப்புக் கோரினார்.

ஆனால் உடனடியாக மிரியாமின் எல்லா விரல்களும் சுருண்டுகொண்டு நிமிர்த்தக்கூடாமல் இறுக்கமாயின. நிமிர்த்த முடியாதபடியால், வேலையும் செய்ய இயலவில்லை. வேதனை அதிகமானபடியால் தூங்கவும் முடியவில்லை. மருத்துவர் அதைக் கீல் வாத மூட்டுவியாதி (rheumatoid arthritis) என்று கூறினார்.

"சாபங்கள்: காரணங்களும், விடுதலை பெறும் வழிகளும் . . . . " என்ற தலைப்புடைய என் செய்திகளைக் கேட்டிருந்த, அவளுடைய சிநேகிதி, அந்த ஒலி நாடாக்களை அவளுக்கு கொடுத்தாள். விடுதலையின் ஜெபத்தில் நான் மக்களை வழிநடத்துகிற குறிப்பிட்ட இடம் வரை, ஒலி நாடா நன்றாக வேலை செய்தது. திடீரென்று ஒலி நாடா சிக்கிக்கொண்டது. அதை வெளியே எடுக்கவும் இயலவில்லை.

அதுவரை சந்தேகத்தோடு, தன் சிநேகிதியை பிரியப்படுத்தவே மிரியாம் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியாக, தன் சிநேகிதி அச்சிட்டு வைத்திருந்த விடுதலையின் ஜெபத்தைச் செய்ய அவள் சம்மதித்தாள். ஜெபத்தைச் செய்து முடிக்கும் முன், விரல்கள் விடுதலை பெற்று, எல்லா வேதனையும் நீங்கிப்போனது.

அதே மருத்துவர் மறுபடியும் அவளைப் பரிசோதித்து, முற்றிலும் சுகம் பெற்றாள் என்று உறுதிப்படுத்தினார். சாபத்திலிருந்து விடுதலைக்கான ஜெபம் மட்டுமே செய்யப்பட்டது. சுகத்திற்காக ஜெபிக்கப்படவில்லை என்பதை நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும்.

நம்முடைய பின்னணி எப்படிப்பட்டதாய் இருந்தாலும், ஆசீர்வாதங்கள் சாபங்களின் முழு தளமும், கடந்து போன இருளான காலங்களில் உண்டான ஏதோ ஒரு ஆதி காலத்து மூட நம்பிக்கை அல்ல என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு மிக முக்கியமானது. இது உண்மையானது, தம்முடைய மக்களுக்கு இதைக் குறித்த தெளிவான அறிவு உண்டாயிருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். இதனால் வெற்றியுடன், தேவனுடைய முழு ஆசீர்வாதத்தையும் அனுபவித்து நாம் வாழ முடியும்.

02

ஆசீர்வாதங்களும் சாபங்களும் எப்படிச் செயலாற்றுகின்றன

நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒழுங்கற்ற விதத்தில், முன்னறிவிப்பில்லாமல் செயலாற்றுவதில்லை. மாறாக, இரண்டுமே மாற்றமில்லாத நித்திய சட்டங்களின்படியே செயற்படுகின்றன. சரித்திரத்தை உருவாக்கும் இரண்டு பரிமாணங்கள் உள்ளன: காணப்படுகிறவைகள் மற்றும் காணப்படாதவைகள். இவ்விரண்டு பரிமாணங்களின் பரிமாற்றங்கள் தான் நிகழ்வுகளின் முடிவைத் தீர்மானிக்கின்றன. காணப்படுகிற, இயற்கையானவைகளின் மேல் மட்டும் நம்முடைய கவனத்தைச் செலுத்துவோமானால், சில காரியங்கள் எப்படி நிகழுகின்றன என்பதை நாம் விளக்க முடியாது.

இயற்கையான, சரீரப் பிரகாரமான உலகத்தில் நாம் எல்லாரும் சுகமாக இருக்கிறோம் ஏனென்றால் அது நமக்கு அன்றாடம் பழக்கமானதொன்று. பெரும்பாலான மக்களுக்கு இதற்கு மேல் ஒன்றும் தெரியாது. ஆனால் வேதம் காணப்படாத, வேறொரு பரிமாணத்தை எடுத்துக் காட்டுகிறது. இது சரீரப்பிரகாரமானதல்ல, ஆவிக்குரியதாகும்.

2 கொரிந்தியர் 4:18இல் பவுல் இவ்விரு தளங்களையும் குறித்துக் கூறுகிறார்:

> ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

இயற்கையானவைகள் நிலைப்பதில்லை, காணப்படாத தளத்தில்தான் நிலைக்கும் உண்மையை நாம் கண்டடைய முடியும். இங்கேதான் நம்முடைய எதிர்காலம் உருவாகிறது.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் காணப்படாத ஆவிக்குரிய தளத்துக்குரியவைகள். அவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வல்லமையைச் சுமக்கின்றன. ஆசீர்வாதங்கள் நல்ல, முன்னேற்றத்திற்குரிய விளைவுகளையும், சாபங்கள் தீமையான, பின்னடைவை ஏற்படுத்தும் விளைவுகளையும் கொண்டு வருகின்றன. இவ்விரண்டு கருப்பொருட்களும் வேதத்தில் உள்ளன.

இவ்விரண்டிற்கும், இரண்டு முக்கியமான சிறப்பு அம்சங்கள் பொதுவாக உள்ளன. முதலாவது, ஆசீர்வாதங்கள் சாபங்களின் செயற்பாடு, ஒரு தனி நபரைத் தாண்டி, அவர்களுடைய குடும்பத்தினர், சமுதாயம், இனத்தார் அல்லது முழு தேசத்தையும் கூட பாதிக்கலாம்.

இரண்டாவதாக, ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒரு சந்ததியிலிருந்து அடுத்து வரும் சந்ததிகளுக்குத் தொடர்ந்து செல்கின்றன. அவைகளின் செயற்பாட்டைத் தடுக்க ஏதாகிலும் செய்யப்படும்வரை அவைகள் தொடரும் இதற்கு முக்கியமான செயல் முறை விளைவுகள் உண்டு. ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்களின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் நபர், அவைகள் எங்கிருந்து வருகின்றன என்பதை நிதானிக்க முடியாது ஏனென்றால் அதின் ஆரம்பம் கடந்த காலத்தில், அல்லது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து கூட வரலாம்.

ஒரு முறை ஆஸ்திரேலியா நாட்டின் அடிலேட் பட்டணத்தில், இதைக் குறித்து நான் பிரசங்கம் செய்த பின்பு ஒரு பெண் எனக்குக் கடிதம் எழுதினாள். அவளுடைய முன்னோர்கள், ஸ்காட்லாந்து தேசத்தில் உள்ள நிக்ஸன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஸ்காட் மக்களுக்கும், இங்கிலாந்து தேசத்துக்கும் இடையிலான இனப் போராட்டங்களினால், 16ஆம் நூற்றாண்டில், சர்ச் ஆஃப் ஸ்காட்லாந்தின் போராயர் நிக்ஸன் இனத்தின் மீது ஒரு சாபமிட்டார். நான்கு நூற்றாண்டுகளுக்குப்பின் தன் குடும்பத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைக் கவனிக்கும்போது, அவைகள் அந்தச் சாபத்தினால்தான் நேர்ந்தன என அவர்களால் உணர முடிந்தது.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிறைந்த வார்த்தைகள் - தேவனுடைய வல்லமையாக இருக்கலாம், அல்லது பிசாசின் வல்லமையாகவும் இருக்கலாம் - இவைகள் மக்களுடைய வாழ்க்கையில் செயலாற்றி அவர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடியவைகள். அது மட்டுமல்ல, இவைகளின் விளைவுகள் தலைமுறை தலைமுறையாகத் தொடரக்கூடும்.

ஆனால், ஒரு காரியத்தை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் சாபத்தின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருந்தால், தேவன் ஏற்கெனவே அதின் தீர்வை உங்களுக்காக ஏற்பாடு செய்திருக்கிறார். நீங்கள் அதின் விளைவினால் தொடர்ந்து அவதிப்படத் தேவையில்லை.

அதற்கு முன், இதை குறித்து, ஒரு முழுமையான விளக்கத்தை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

ஆசீர்வாதங்களின் ஊற்றாக தேவன்

ஆசீர்வாதங்கள் நமக்குப் பல்வேறு வாய்க்கால்களின் வழியாக வந்தாலும், தேவன் ஒருவரே அதின் மேலான ஊற்றாக இருக்கிறார். வேதத்தில் ஆசீர்வாதங்கள் முதல் முறையாக செயலாற்றுவதை நாம் ஆதியாகமம் 22இல் காண்கிறோம். தேவனுடைய விருப்பத்திற்கு பதிலளிக்கும் வண்ணமாக, ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைப் பலியிட ஆயத்தமாய் இருந்தான். கடைசி தருணத்தில் தேவன் ஒரு ஆட்டை ஈசாக்குக்குப் பதிலாக பலியிடப்படும்படி செய்தார்.

> கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். **ஆதியாகமம் 22:15-18**

ஆபிரகாம் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்ததே ஆசீர்வாதத்திற்கான காரணம் என்பதை மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதத்துக்கு அடிப்படைக் காரணம் இதுவே. இந்த ஆசீர்வாதம் ஆபிரகாமின் எல்லாச் சந்ததியினரிடமும் வரும் என்பதைக் கவனியுங்கள்.

ஈசாக்கு வயது சென்றவனாய் இருந்தபோது, தன் குமாரனாகிய யாக்கோபை ஆசீர்வதித்த சம்பவம் ஆதியாகமம் 27ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஈசாக்கு தன் முதற்பேறான குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்தான். ஏசா மான் இறைச்சியை வேட்டையாடி கொண்டு வரச் சென்றிருந்தான், அதைச் சாப்பிட்டுவிட்டு ஆசீர்வாதம் கூற ஈசாக்கு விரும்பினான். ஈசாக்கின் மனைவி ரெபேக்காள், இத்தருணத்தைத் தனக்குப் பிரியமான இளைய குமாரன் யாக்கோபுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

ஈசாக்கை ஏமாற்ற (அவன் குருடாய் இருந்தான்) யாக்கோபுக்கு ஏசாவின் உடைகளை அணிவித்து, ஆட்டு மயிரை அவன் கைகளிலும் கழுத்திலும் சுற்றினாள், ஏனென்றால் யாக்கோபைவிட ஏசா அதிக ரோமம் உள்ளவன். ஈசாக்குக்குப் பிடித்த முறையில் இளம் ஆட்டுக்குட்டியைச் சமைத்தாள். யாக்கோபு ஏசாவைப் போல் நடித்து, தன் தகப்பனிடத்தில் அதை எடுத்துக் கொண்டு போனான். ஈசாக்கு உறுதிப்படுத்திக்கொள்ள, "நீ உண்மையிலேயே என் குமாரனாகிய ஏசாதானா ?" என்று கேட்டான்.

யாக்கோபு அவன்தான் என்று கூறும்போது, பொய் சொன்னான். ஈசாக்கு அதை நம்பினபடியால் சாப்பிட்டு, ஆசீர்வாதத்தைக் கூறினான்.

> *இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல் இருக்கிறது. தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவுங்கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.*
>
> **ஆதியாகமம் 27:27-29**

அந்த ஆசீர்வாதத்தின் ஆற்றல் மிகவும் வல்லமையுள்ளதாக இருந்து, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து சென்றது.

பின்பு, ஏசா மான் இறைச்சியுடன் வந்து, அதைத் தன் தகப்பனுக்குக் கொடுக்க முயற்சிக்கின்றான். ஈசாக்கு தான் ஏமாற்றப்பட்டு, ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபை ஆசீர்வதித்து விட்டோம் என்பதை உணருகிறான். ஆனால் ஈசாக்கின் செயலைக் கவனித்துப் பாருங்கள்.

> *அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான்.*
>
> **ஆதியாகமம் 27:33**

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்தான், ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் தன்னுடையவை அல்ல, அவை தீர்க்கதரிசனமான வார்த்தைகள், அவைகளைத் திரும்பப் பெற முடியாது என்பதை அறிந்திருந்தான். ஆகையால் யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டான், ஏசா

ஆசீர்வதிக்கப்படவில்லை.

ஆசீர்வாதத்தின் தன்மை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்பதை நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். வெறும் கற்பனை அல்லது அன்பான உணர்ச்சியோ அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலுடையதாய், மக்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒன்று. ஆசீர்வாதங்கள், சாபங்கள் என்ற இரண்டிற்குமே இது உண்மையாகும்.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் என்னென்ன தோற்றங்களை எடுக்கக்கூடும் என்பதை உபாகமம் 28ஆம் அதிகாரம் முழுவதிலும் நாம் காண முடியும். முதல் பதினான்கு வசனங்கள் ஆசீர்வாதங்களையும், மீதமுள்ள ஐம்பத்து நான்கு வசனங்கள் சாபங்களை குறித்தும் விவரிக்கின்றன. முதல் இரண்டு வசனங்களில் ஆசீர்வாதத்திற்கான பிரதான காரணத்தை மோசே கூறுகிறார்: *“இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால் . . . நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.”*

அதே போல், யோவான் 10:27இல், புதிய உடன்படிக்கையின் கீழ், இயேசு “தன்னுடைய ஆடுகள்” என்று ஏற்றுக்கொண்டவர்களை அல்லது அவருடைய உண்மையான சீஷர்களை விவரிக்கும்போது: *“என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன . . . அவைகள் எனக்குப் பின்செல்லுகின்றன”* என்று கூறுகிறார். அடிப்படைத் தகுதி தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்து அவருக்குப் பின் செல்லுவதுதான்.

சாபங்களின் காரணம் ஆசீர்வாதங்களுக்கு நேர் எதிரிடையானது. தேவனுடைய சத்தத்துக்குச் செவி கொடுக்காமலும், அதின்படி செய்யாமலும் இருப்பதே சாபத்துக்குக் காரணமாகும். தேவனுடைய சத்தத்தைக் கேட்காமல், கீழ்ப்படியாமல் இருப்பதை ஒரே வார்த்தையில் அடக்கலாம்: கலகம் - மனிதனுக்கு விரோதமாக அல்ல, தேவனுக்கு விரோதமான கலகம்.

என்னுடைய சொந்த வேத ஆராய்ச்சியிலிருந்து, உபாகமம் 28இன் வரிசைப்படி, ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் சுருக்கமாகக் கூறும் இரண்டு பட்டியல்களைக் கொடுக்க முயற்சித்துள்ளேன். என் பட்டியல் இதுவே:

- உயர்வு
- ஆரோக்கியம்
- பெருக்கம்
- செழிப்பு
- வெற்றி
- தேவ தயவு

சாபங்களின் பட்டியலை, மோசே ஆசீர்வாதங்களைவிட அதிகமாக விவரிக்கின்றார். அடிப்படையாக சாபங்கள் ஆசீர்வாதங்களுக்கு எதிரிடையானவை. இதுதான் என்னுடைய கருத்து:

- அவமானம்
- மலட்டுத்தன்மை, பெருக்கமின்மை
- மன ரீதியிலான மற்றும் சரீரப் பிரகாரமான வியாதி
- குடும்ப உறவுகளின் முறிவு
- தரித்திரம்
- தோல்வி
- ஒடுக்கப்படுதல்
- தேவ தயவின்மை

13ம் வசனத்தில், ஆசீர்வாதங்களின் பட்டியலை ஒரு தெளிவான சொல்லோவியத்தோடு மோசே முடிவுக்குக் கொண்டு வருகிறார். இச்சித்திரத்தை நம்முடைய வாழ்க்கையில் எப்படி அனுபவமாக்குவது என்பதைச் சிந்திப்பது நமக்கு நல்லதாகும்.

அவர், “கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் . . . ” என்று சொல்லுகிறார். இது என்னுடைய வாழ்க்கையில் எப்படிச் செயற்படும் என்பதை எனக்குக் காட்டும்படி, நான் ஒருமுறை தேவனிடம் கேட்டேன். தேவன் எனக்கு தந்த பதில் இதுதான்: *தலையானது எல்லா தீர்மானங்களையும் செய்கிறது, வால் அதற்குப்பின் இழுக்கப்பட்டுச் செல்கின்றது.*

நீங்கள் தலையைப் போல, ஒவ்வொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்தி, சரியான முடிவுகளை எடுத்து, அவைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுத்துகிறீர்களா? அல்லது வாலைப் போல, உங்களால் கட்டுப்படுத்த முடியாத, புரிந்துகொள்ள முடியாத சக்திகளினாலும் சூழ்நிலைகளினாலும் இழுக்கப்பட்டுச் செல்கின்றீர்களா?

பகுதி 2

சாபங்களுக்கான மூல காரணம்

ஒவ்வொரு சாபத்துக்கும் எப்போதும் ஒரு காரணம் உண்டு என்பதை, சாலொமோன் நீதிமொழிகள் 26:2ல் தெளிவுபடுத்துகிறார்.

அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலும், தகைவிலான் குருவி பறந்துபோவதுபோலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது.

இக்கோட்பாட்டிற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கம் காரணமேயில்லாமல், எந்தச் சாபமும் பலிக்காது. மறுபக்கம், இதன் எதிர்மறையும் உண்மைதான். எங்கே சாபம் கிரியை செய்தாலும், அதற்கு ஓர் காரணமுண்டு. சாபங்களுக்கான காரணங்களையும், தோன்றும் இடத்தையும் சுட்டிக்காட்ட, நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளும் பகுத்தறிவு அவசியமாய் இருக்கிறது. உங்கள் பிரச்சனைக்கான மூல காரணத்தை நீங்கள் கண்டுபிடித்தால், அதை ஏற்ற விதத்தில் எதிர்கொள்ள நீங்கள் ஆயத்தமாயிருப்பீர்கள்.

பொதுவாக, நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய முக்கியமான சாபங்களுக்கான காரணங்களை இப்பகுதி விவரிக்கின்றது. இதைப் படித்த பின், தொடர்ந்து வரும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள தேவனுடைய தீர்வை (பரிகாரம்) நீங்கள் நன்கு புரிந்து, உங்கள் வாழ்க்கையில் அதை பயன்படுத்த முடியும்.

03

சாபங்களின் காரணராக தேவன்

பழைய ஏற்பாட்டில் தேவன் கோபாக்கினை மற்றும் நியாயத்தீர்ப்பின் தேவனாகவும், புதிய ஏற்பாட்டில் அன்பு மற்றும் இரக்கத்தின் தேவனாகவும் தோற்றமளிப்பதாக அநேகர் நினைக்கின்றார்கள். இவ்வாறு தேவனுடைய குணாதிசயங்களைத் தவறாக புரிந்துகொள்ளுதல், அவர்களுக்கு ஓர் தடையாக அமைகின்றது.

ஆனால் வேதத்தின் இரு பகுதிகளும் ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றன. தேவனைக் குறித்து, பிழையற்ற அறிவு நமக்கு வேண்டும். ரோமர் 11:22ல் தேவனுடைய இவ்விரண்டு குணாதிசயங்களையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார். "ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்." அவருடைய ஆசீர்வாதங்கள் தயையிலிருந்தும், நியாயத்தீர்ப்புகள் கண்டிப்பிலிருந்தும் புறப்படுகின்றன. இரண்டும் ஒரே அளவுக்கு உண்மையானவைகள்.

பல நேரங்களில் தேவன் தனிப்பட்ட நபர்களின் மீதோ, முழு தேசங்களின் மீதிலோ சாபங்களை கூறியுள்ளார். அவருடைய நோக்கம், மக்களின் கவனத்தை ஈர்த்து, கீழ்ப்படியாமைக்கு வரும் பயங்கரமான விளைவுகளைக் குறித்து எச்சரிப்பதாகும். சாபம் என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் மிகக் கடினமான ரூபமானாலும், அதினிமித்தம் மக்கள் மனந்திரும்பி அவரிடத்தில் வருவதையே தேவன் விரும்புகிறார்.

ஆதியாகமம் 12இல், தேவன் ஆபிரகாமை அழைக்கும்போது, முதல் முறையாக, சாபத்துக்குக் காரணராக தோற்றமளிக்கிறார். அவனுடைய

அழைப்புக்கு ஏழு படிகள் இருந்தன. அவற்றில் ஆறு, தேவனுடைய ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்கள் ஆனால் அதில் ஒரு கடுமையான எச்சரிப்புமுண்டு.

1. *நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்*
2. *உன்னை ஆசீர்வதிப்பேன்.*
3. *உன் பெயரை பெருமைப்படுத்துவேன்.*
4. *ஆசீர்வாதமாய் இருப்பாய்*
5. *உன்னை ஆசீர்வதிக்கின்றவர்களை நான் ஆசீர்வதிப்பேன்.*
6. *உன்னைச் சபிக்கிறவனை நான் சபிப்பேன்.*
7. *பூமியிலுள்ள சகல வம்சங்களும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.*

ஆதியாகமம் 12:1-3

யூதரை விரோதித்தல்

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அழைப்பின் ஆறாவது பகுதியை சிந்தித்து பாருங்கள்: *அவனைச் சபிக்கும் யாவர் மீதும் ஒரு சாபம்.* இது ஆபிரகாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் செல்லுபடியாகும். தேவன் ஒரு மனிதனை ஒரு விசேஷித்த வேலைக்கென்று அழைக்கும் போது, அந்த மனிதன் சாத்தானின் எதிர்ப்புக்குக் குறிப்பான இலக்காக மாறிவிடுகிறான் ஆகையால் தேவன் அவனைப் பாதுகாக்கும்படி ஏற்பாடு செய்கிறார்.

பின்பு ஆதியாகமம் **27:29**இல் ஈசாக்கு தன் மகனாகிய யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, அதே பாதுகாப்பை அவனுக்கும் நீட்டிக்கிறார், "உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டிருப்பார்களாக". ஆகையால் தேவன் ஆபிரகாம் மீது கூறின அதே ஆசீர்வாதமும் சாபமும் அவன் சந்ததிக்கும் உரியதானது. யூத மக்களையும், இஸ்ரவேல் நாடு முழுவதையும் இது நேரடியாக உட்படுத்துகிறது என காண்பது மிக அவசியமானது.

சத்துருக்கள் ஆபிரகாமையும் அவன் சந்ததியையும் சபிப்பதையோ துன்புறுத்துவதையோ தேவன் அசாத்தியமாக்கவில்லை. ஆனால், அப்படிச் சபித்தால் அதற்குப் பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்பதை மட்டும் தீர்மானித்தார். யூதரை விரோதித்தவர்களின் துன்பகரமான சரித்திரம் இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாக உள்ளது. யூதரை விரோதித்தல் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும்.

துரதிர்ஷ்டவசமாக, பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ சபையே கேவலமான யூத விரோதத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்துள்ளது. ஆனால், தாங்கள் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமும், அவர்கள் பகைக்கும் அந்த யூதரின் நிமித்தமாகத்தான் வந்தது என்பதை

சபை உணராதிருக்கிறது. யூதர் இல்லாமல், சபைக்கு அப்போஸ்தலர்கள் இருந்திருக்க மாட்டார்கள், வேதமும் இருந்திருக்காது, இரட்சகருமிருந்திருக்கமாட்டார்.

ஒரு வேளை நீங்களோ உங்கள் முன்னோர்களோ யூதருக்குச் சத்துருக்களாக இருந்திருக்கலாம். நீங்கள் அவர்களை ஏளனமாக பேசி சபித்திருக்கலாம். அக்கிரியைகளுக்கு விளைவுகள் உண்டு; உங்கள் வாழ்க்கையில் சாபத்தைக் கொண்டு வரும். ஆனால் நீங்கள் விடுதலை பெறலாம்.

கீழ்ப்படியாமை

உபாகமம் **27:11-26**ல், இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் வந்தவுடன், சில காரியங்களில் தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர்கள் மீது வரக்கூடிய பன்னிரெண்டு சாபங்களைக் கூற வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார். கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதத்துக்கும், கீழ்ப்படியாமைக்கான சாபத்துக்கும் தங்களை ஒப்புக்கொடுக்காமல் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. இவ்விரண்டிற்கும் நடுநிலையான வேறெந்த நிலையும் இல்லை. வேறெதையும் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு இடம் அளிக்கப்படவுமில்லை.

பன்னிரெண்டு குறிப்பிட்ட, விரிவான சாபங்கள் பட்டியலிடப்பட்டன, அவைகளை இந்தத் தலைப்புகளின் கீழ் நாம் கொண்டு வரலாம்.

- விக்கிரகாராதனையும், பொய்யான தெய்வங்களை வணங்குதலும்
- பெற்றோரை கனவீனப்படுத்துதல்
- கள்ளத்தனமான அல்லது இயற்கைக்கு முரணான பாலியல் உறவுகள்
- பெலவீனமான மற்றும் உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்

விக்கிரகாராதனையும், பொய்யான தெய்வங்களை வணங்குதலும்

யாத்திராகமம் **20:3**ல், பத்துக் கட்டளைகளில் “உன் தேவனாகிய கர்த்தர் நானே...என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்......ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்” என்று தேவன் முதன்மையாக கட்டளையிட்டார். ஆகையால் பொய்யான தெய்வங்களை வணங்குவதும், எவ்வித விக்கிரகாராதனையும் தேவனுக்கு விரோதமான

கீழ்ப்படியாமையாகும். முதல் சிருஷ்டிப்பிலும், பின்பு வேதத்திலும் பூரணமாக வெளிப்படுத்தப்பட்ட மெய்யான தேவன், பரிசுத்தமுள்ளவரும், வியக்கத்தக்கவரும், மகிமையுள்ளவரும், எங்குமுள்ளவருமாய் இருக்கிறார். படைக்கப்பட்ட எந்த மனித அல்லது மிருகத்தின் உருவத்தாலும் அவரைப் பிரதிபலிப்பது, வேண்டுமென்றே அவரை அவமானப்படுத்துவதாகும். ஆகையால் இது தேவனுடைய கோபாக்கினையைத் தூண்டிவிடுகிறது.

> *கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்* **உபாகமம் 27:15**

ஆனால், இரண்டாம் நிலையில், வெளியரங்கமாக விக்கிரக ஆராதனையின் தோற்றமில்லாமல், விரிவான எல்லைகளுள்ள சில செயல்கள் உள்ளன. அவைகள் மதத்தைச் சார்ந்தவைகளும் அல்ல. ஏனென்றால் அவைகளின் உண்மையான தன்மை, திசை திருப்புகிற சொற்களினாலே மறைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு “மாந்திரீகம்” என்ற பெயர் ஏற்றதாயிருக்கும் (லத்தீன் மொழியில் இவ்வார்த்தையின் அர்த்தம் “மறைவான அல்லது மூடி மறைக்கப்பட்ட” என்பதாகும்). இத்தகைய மாந்திரீக செயல்கள், அறிவுக்கான ஆசை மற்றும் வல்லமைக்கான ஆசை என்னும் மனித சுபாவத்தின் இரண்டு வலிமையான, அடக்க முடியாத மோகங்களை மையமாக வைத்துச் செயல்படுகின்றன. இயற்கையான வழிகளாலும், ஊற்றுகளாலும் இவ்விரண்டு ஆசைகளையும் ஓர் அளவிற்கு, மனிதன் திருப்தி செய்ய முடியும். ஆனால் இப்படி பெற்றுக்கொண்டதில் அவனுக்கு திருப்தி ஏற்படாவிட்டால், நிச்சயமாக அவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊற்றுகளுக்குத் திரும்புவான்.

காரணம் என்ன? இப்பிரபஞ்சத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானத்துக்கும், வல்லமைக்கும், இரண்டே ஊற்றுகள் உள்ளன: தேவன் அல்லது சாத்தான். இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானமும் வல்லமையும் தேவனிடத்திலிருந்து வந்தால், அது முறையானது; சாத்தானிடமிருந்து பெற்றதானால், அது முறைகேடானது. விலக்கப்பட்ட நன்மை தீமையை அறியத்தக்க விருட்சத்திலிருந்து இந்த முறைகேடான ஞானத்தை வாஞ்சித்ததுதான், ஏதேன் தோட்டத்தில் மனிதனுடைய முதல் மீறுதலுக்குக் காரணமானது. அப்படிச் செய்ததினால் மனிதன் காணப்படாத ஓர் எல்லையைத் தாண்டி, சாத்தானின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் நுழைந்துவிட்டான். அந்நேரத்திலிருந்து மனிதன் வஞ்சகத்துக்கு விழுந்து போகிறவனாக மாறினான்.

இத்தகைய முறைகேடான மாந்திரீக செயல்கள் எடுக்கக்கூடிய

தோற்றங்களுக்கு எண்ணிக்கையே இல்லை. ஆனால் மூன்று பிரதான கிளைகளை நாம் அடையாளம் காண முடியும்: பில்லிசூனியம், மந்திரவாதம் மற்றும் குறிசொல்லுதல்.

பில்லிசூனியம் மாந்திரீகத்தின் "வல்லமை" கிளையாக விளங்குகிறது. 1 சாமுவேல் 15:23இல் இதன் வேர் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "இரண்டகம்பண்ணுதல் (அல்லது கலகம்) பில்லிசூனியப்பாவத்துக்குச்....... சரியாய் இருக்கிறது, தேவனுடைய சட்டத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்காமல், தான் விரும்புவதைச் சாதிக்க, இது மனிதனுடைய முயற்சியாகும். மனிதர்களையும் சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்த விரும்பும் ஆசையே இதை இயக்கும் சக்தியாகும். இதைச் சாதிக்க, மனரீதியிலான அழுத்தங்கள் அல்லது மனோதத்துவ முறைகள் பயன்படுத்தி, அல்லது இரண்டையும் கலந்து பயன்படுத்தி, மனிதர்களைக் கட்டுப்படுத்தி, பயமுறுத்தி, செயலாற்ற வைக்கலாம்.

குறிசொல்லுதல் மாந்திரீகத்தின் *"அறிவு"* கிளையாக விளங்குகிறது. இயற்கையான முறைகளில் பெற முடியாத அறிவின் தோற்றங்களை அளிக்கிறது. பொதுவாகக் நாம் காணும் ஒரு தோற்றம் - ஜோஷியம் சொல்லுவது - வருங்காலத்தைக் குறித்து இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஞானத்தை அளிக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதாரத்திலிருந்து தோன்றின எல்லா பொய்யான மத வெளிப்பாடுகளும் இதில் அடங்கும்.

மந்திரவாதம் அல்லது சூனியம், பொருட்களின் மூலம் அல்லது ஐம்புலன்களைப் பாதிக்கும் போதை பொருட்கள், இசை போன்றவற்றின் மூலம் செயல்படுகிறது. வெளி 9:21ல் "சூனியங்கள்" (மந்திரவாதம்) என்ற வார்த்தை, "போதை" பொருட்களுக்கான கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பல விதமான பொருட்கள் பயன்படுத்தப்படலாம்; புனித சின்னங்கள், தாயத்துக்கள், மந்திரிக்கப்பட்ட கயிறு அல்லது பொருட்கள், "ஒய்ஜா" பலகைகள் – ஒரு சில உதாரணங்களாவன. புத்தகங்களும் மந்திரவாதத்தின் வாய்க்கால்களாக இருக்கலாம் என்பதை புரிந்துக்கொள்வது மிகவும் முக்கியமானது. எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் (அப்போஸ்தலர் 19:18,19) தங்கள் அடிமைத்தனத்துக்கு மந்திரவாத புத்தகங்களே காரணமென உணர்ந்து, அவைகளின் மதிப்பு அதிகமாக இருந்தாலும், எல்லாவற்றையும் எரித்துப்போட்டார்கள். இவ்விதமாக மந்திரவாதத்தின் பொருட்களை எரித்துப் போடுவதே அவைகளை கையாளும் சிறந்த முறையாகும்.

மந்திரவாதத்தில் பாவம் செய்வோர், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானத்தையும், வல்லமைமையும் பிசாசினிடத்தில் நாடுகிறார்கள். இதைத் தேவன், தம்மைத் தவிர, வேறொருவரிடமும் நாட அனுமதிப்பதில்லை. இப்படிச் செய்கிறதினாலே, அவர்கள் ஒரே மெய்யான தேவனோடு,

சாத்தானையும் ஒரு தெய்வமென்று ஏற்றுக்கொண்டு, பத்துக் கற்பனைகளில் முதலாம் கற்பனையை முறித்துப்போடுகிறார்கள்.

இச்செயலினால், தேவன், தன்னுடைய கற்பனைகளை முறித்துப்போடுகிற யாவர்மேலும் கூறும் சாபத்துக்குத் தங்களை ஒப்புவிக்கிறார்கள் - இச்சாபம் நான்காம் தலைமுறை வரைக்கும் செயல்படும். விக்கிரகாராதனை, பொய்யான தெய்வங்களை வணங்குதல் அல்லது எந்த மந்திரவாதச் செயலிலும் ஈடுபடுவதினால், வரக்கூடிய சாபத்தை இஸ்ரவேல் அனைத்தும் தங்கள் மீது கூறிக்கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. இதுதான் இன்றும் மக்களுடைய வாழ்வில் சாபத்துக்கான பிரதான காரணமாக இருக்கிறது. இத்தகைய செயல்களில் ஈடுபட்டால், *"மூன்று தலைமுறைகளுக்கு அதை விசாரிப்பேன். உன்னிடத்தில் மட்டுமல்ல, உன் சந்ததியின் மூன்று தலைமுறைகளிடத்திலும் விசாரிக்கப்படும்"* என்று தேவன் கூறுகிறார்.

ஆகையால் உங்கள் பெற்றோர், உங்கள் தாத்தா பாட்டி அல்லது அவர்களுக்கும் முன் இருந்த யாரோ ஒரு முன்னோர் செய்த கிரியையின் பலனால் நீங்கள் இப்போது அவதிப்பட்டுக்கொண்டிருக்கலாம். உங்கள் பிரச்சனைக்குத் தீர்வைக் காண அதை முதலில் கண்டறிவது எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது உணருகின்றீர்களா ?

இப்படிப்பட்ட ஊற்றிலிருந்து வரும் எந்தச் சாபமானாலும், விடுதலை பெற தேவன் ஒரு வழியை ஏற்படுத்தியதற்காக அவருக்கு நன்றி! அவர் நம்முடைய விடுதலைக்காக ஏற்பாடு செய்துள்ளார். கணக்குப் பார்க்கும் கடைசி நாளில், நம்முடைய முன்னோர் நம்மீது கொண்டு வந்த சாபத்துக்குத் தேவன் நம்மிடத்தில் கணக்கு கேட்க மாட்டார் ஆனால் அச்சாபத்திலிருந்து விடுபட தேவன் ஏற்படுத்தியதைப் பெற்றுக்கொள்ள மறுத்தால், நிச்சயமாக நம்மைக் குற்றவாளியென்று தீர்ப்பார்.

பெற்றோரைக் கனவீனப்படுத்துதல்

இச்சூழ்நிலையில் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மற்றவர்களுடைய கிரியைகளினாலே நமக்குப் பிரச்சனைகள் நேரிட்டது உண்மையாக இருந்தாலும், நாமே காரணமாய் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு மற்றவர்கள் மேல் பழியைச் சுமத்தக் கூடாது.

நம்முடைய பெற்றோரோடு இருக்கும் உறவைப் பார்க்கும்போது, அதிகக் கவனம் தேவையாயிருக்கிறது. பெற்றோரைக் கனவீனப்படுத்துதல் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும் என்பதை கிறிஸ்தவர்கள் உட்பட இன்றைக்கு எண்ணற்ற மக்கள் அறியாதிருக்கிறார்கள். பெற்றோரைக்

குறித்த, தவறான மனநிலையோடிருப்பதால், அவர்களுடைய வாழ்க்கையில் பல பிரச்சனைகள் நேரிடுகின்றன. எந்தப் பெற்றோரும் பிழையற்றவர்களல்ல, ஆனாலும் அவர்கள் கனத்தைப் பெற தகுதியுள்ளவர்களல்லவென்று அர்த்தமாகாது. வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை இப்படி வெளிப்படுகிறது, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே, உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக".

என் முழு ஊழியத்திலும், பெற்றோரைக் கனவீனப்படுத்தி, வாழ்க்கையில் நன்மையைப் பெற்ற ஒருவரையும் நான் சந்தித்ததில்லை. அவ்விதமான நடத்தை தானாகவே உங்களை ஒரு சாபத்துக்கு ஒப்புக்கொடுக்கிறது. உங்கள் பெற்றோரோடு அல்லது நீங்கள் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லும் ஒவ்வொரு காரியங்களோடும் நீங்கள் ஒத்துப்போக வேண்டுமென்று அர்த்தமல்ல ஆனால் அவர்களை உங்கள் பெற்றோராக கனப்படுத்த வேண்டும். பெற்றோரைக்குறித்து, தங்கள் மனநிலையை சரிப்படுத்திக்கொண்டவுடன், வாழ்வில் மாற்றத்தை கண்ட அநேகரை நான் சந்தித்திருக்கிறேன்.

அதே நேரத்தில், இதைச் செய்யாமல், ஆசீர்வாதத்தை இழந்த பலரைக் குறித்தும் நான் நினைத்துப் பார்க்கிறேன். என் குடும்பத்தில் 40 வயதில் புற்றுநோயால் இறந்து போன ஒரு நபரை நினைவு கூறுகிறேன். அவர் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்று, ஆண்டவரை சேவித்தார். ஆனால் தன் தாயோடு இருந்த உறவை சரிப்படுத்தாமல் போனதின் காரணமாக, அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கவில்லை. தன் தாயோடு இருந்த உறவைச் சரிப்படுத்தியிருந்தால், பிரச்சனைகளிலிருந்து அவன் தப்பித்திருக்கலாம். நான் வெறும் தத்துவங்களை போதிக்கவில்லை, அனுபவத்தில் உண்மையென்று கண்டவைகளையே போதிக்கிறேன்.

தவறான அல்லது இயற்கைக்கு முரணான பாலுறவு

இயற்கையல்லாத எந்தப் பாலுறவின் தோற்றமாக இருந்தாலும், அது ஒரு சாபத்தைக் கொண்டு வரும். ஓரினச்சேர்க்கை மற்றும் மிருகங்களோடு பாலுறவின் எந்தத் தோற்றத்தையும் இது உட்படுத்தும். அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்குப் புறம்பே, குடும்பத்தின் நபர்களோடு பாலுறவும் சாபத்தைக் கொண்டு வரும். தற்காலத்தில், எண்ணற்ற பிள்ளைகள் சொந்த தகப்பனுடைய பாலியல் பலாத்காரத்துக்கு பலியாகிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பெலவீனர், உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்

அமெரிக்க அரசாங்கம், பழங்குடி இனத்தவர்களாடு செய்த பல ஒப்பந்தங்களை நிறைவேற்றாமல், தொடர்ந்து முறித்து வந்தபடியால், அவர்கள் வெள்ளை மாளிகையின் மீது சாபமிட்டனர். ஆகையால் 1860 முதல் 1980 வரை, ஒவ்வொரு 20ம் ஆண்டும், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பதவியிலேயே மரணமடைந்தார்கள். அதின் பின்னணியில் இரண்டு காரணங்கள் உள்ளன. அமெரிக்க இந்தியர்களுக்கு அரசாங்கம் காண்பித்த உண்மையற்ற நிலை, இன்னொன்று 1860ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன், ஆவிகளோடு தொடர்பு கொள்ளும் கூட்டத்தை வெள்ளை மாளிகையில் நடத்த, தன் மனைவிக்கு அனுமதி கொடுத்த சம்பவம். இதனால் அவர் பிற்காலத்தில் மனநோயாளியாக மருத்துவமனையில் மரித்தார். இத்தகைய செயல்களில் ஈடுபடுதல் ஒரு தனி நபரை மட்டுமல்ல, முழு தேசத்தையும் எப்படி பாதிக்கிறதென்பதைக் கவனித்துப் பாருங்கள்.

ஜனாதிபதி ரீகனும் பதவியிலேயே மரித்திருப்பார் – ஜனாதிபதியான சில நாட்களிலேயே அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. ஆனால் அவர் ஜனாதிபதியாக பதவியேற்கும் முன், ஒரு கூட்டத்தில் நாங்கள் பெரிய குழுவாக இணைந்து அவரையும் ஜனாதிபதியின் பதவியையும் அந்தச் சாபத்திலிருந்து விடுவித்து ஜெபித்தோம். அச்சாபம் நிறைவேறும்படி எவ்வளவு கிட்டினது பாருங்கள்; குண்டு அவருடைய இருதயத்திலிருந்து ஒரு அங்குலம் தூரத்தில்தான் பாய்ந்தது. ஆனால் தேவன் சாபத்தை முறித்தார் என்பதற்கு அதுவே அடையாளமென்று கருதுகிறேன். இது ஒரு காணக்கூடாத தத்துவமல்ல, இக்காரியங்கள் மக்களுடைய வாழ்க்கையையும், தேசங்களையும் எவ்விடத்திலும் பாதிக்கின்றன.

சுயத்தைச் சார்ந்துகொள்ளுதல்

எரேமியா 17:5,6ல் முற்றிலும் வேறுபட்ட ஒரு சாபம் காணப்படுகின்றது:

மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து
மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு,
கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்
என்று கர்த்தர் சொல்லுகிறார்.

[அதற்கு வரும் சாபம் இதோ]

அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து,
நன்மை வருகிறதைக் காணாமல்,

வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும்,
குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.

சாபத்தின்கீழ் வாழுகிற மனுஷனுக்கு இது மிகவும் இயல்பான ஒன்று. எல்லார் மேலும் மழை (ஆசீர்வாதம், செழிப்பு) பெய்யும்போதும், அதின் நடுவில் அவன் மட்டும் வறட்சியான நிலத்தில் வாழ்ந்து, ஆசீர்வாதத்தை அனுபவிக்கிறதே இல்லை. ஏன்? சாபத்தினாலே. மனிதத் திறமை, பொருள், சொத்து, இவைகளின் மீது நம்பிக்கை வைத்து, தேவனை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனிதன், சபிக்கப்பட்டவன். பொல்லாப்புச் செய்ய வேண்டுமென்ற வாஞ்சை இங்கே காணப்படவில்லை. ஆனால் தேவனைவிட்டுத் தனித்து நிற்க வேண்டுமென்ற வாஞ்சையை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்டவர்கள் நீதியான செயல்களைச் செய்ய நாடுவார்கள் ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய கிருபையைச் சார்ந்துகொள்ள மாட்டார்கள்.

இந்தச் சாபம், தேவனுடைய கிருபையை ருசித்துவிட்டு, பின்பு தங்கள் சுய முயற்சிகள், அறிவாற்றல் மற்றும் மதத்தைச் சாரும்படி திரும்பின பல சபைகள் மீது இன்றுமுள்ளதென்று நம்புகிறேன். கலாத்தியரைப் போல இவர்கள் “ஆவியில் ஆரம்பம்” செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் மாம்சத்தில் முடிவு பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் அகன்று, அவர்கள் மீது சாபம் இறங்கியிருக்கிறது. சாபத்தின் கீழ் இருக்கும் பல சபைகளில் நான் பேசியிருக்கிறேன். எவ்வளவு பிரசங்கம் செய்து, போராடி, யுத்தம் செய்தாலும், சாபம் முறிக்கப்படாமல், பலனைக் காணவே முடியாது.

களவும், பொய்யாணையிடுதலும்

பழைய ஏற்பாட்டின் கடைசி மூன்று தீர்க்கதரிசிகளாகிய ஆகாய், சகரியா மற்றும் மல்கியா, எந்தெந்தப் பகுதிகளில் இஸ்ரவேல் தேவனுடைய சாபத்தின் விளைவுகளைச் சந்தித்ததென்று எழுதுகிறார்கள். சகரியா 5:1-4ல் இருபக்கமும் சாபங்களுள்ள ஒரு சுருளைக் குறித்துத் தீர்க்கதரிசிக்குத் தரிசனம் உண்டானது. ஒரு பக்கத்தில் திருடினவனும், மறுபக்கத்தில் தேவனுடைய நாமத்தில் பொய்யாணையிட்டவனும் இருந்தார்கள்.

இந்தச் சாபத்தின் விளைவாக ஏற்படும் அழிவைக் குறித்த ஒரு தெளிவான சித்திரம் இதைப் பின் தொடருகிறது. “வீடு” என்ற எபிரெய வார்த்தை வெறும் கட்டிடத்தை மட்டுமல்ல, அதில் வாழும் மக்களையும் குறிக்கின்றது.

மனந்திரும்புதலும், சீர் பொருந்துதலுமில்லாமல், முழு தேசங்கள், முழு சமுதாயங்களை இது அரித்துப் போடக்கூடும். திருடி,

பொய்யாணையிட்டவர்களை உட்படுத்தினால், எத்தனை பேர் சாபத்தின் கீழிருப்பார்களென்று சிந்தித்துப் பார்க்கிறேன். எத்தனை பேர் தங்கள் வருமான வரி செலுத்துவதில் உண்மையற்று காணப்படுகிறார்கள்? ஒவ்வொரு தேசத்திலும் அநேகர் இந்தப் பிரிவின் கீழ் வருவார்கள், அவர்களில் எத்தனை நபர்கள் திருச்சபைக்குச் செல்லுகிறவர்களாவார்கள்?

ஆகாய் **1:4-6** இதே போல், மக்கள் அதிகம் விதைத்து, கொஞ்சம் அறுத்து, பொத்தலான பையில் போடுவதைக் குறித்துப் பேசுகிறது. இஸ்ரவேலுக்கு தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அவர்களுடைய ஆசீர்வாதங்களைத் தடை செய்துகொண்டிருந்தது ஒரு சாபம் என உணர்த்த வேண்டியதாயிற்று. தங்கள் சுயநலமான விருப்பங்களைத், தேவனுடைய வீட்டின் தேவைகளுக்கும் மேல் வைத்திருந்ததே அச்சாபத்திற்கு காரணம்.

04

அதிகாரமுள்ள நபர்கள் இடும் சாபங்கள்

நாம் பார்த்தது போல, ஆசீர்வாதங்களும் சாபங்களும், நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கின்ற பரந்த, காணக்கூடாத ஆவிக்குரிய தளத்தின் பகுதியாக உள்ளன. இந்தத் தளத்தில் நிர்ணயிக்கக்கப்பட்டவைகளை நிறைவேற்றும் மிக முக்கியமான காரியமாக "அதிகாரம்" விளங்குகிறது. அதிகாரத்தின் கோட்பாடுகளைச் சரியாக புரிந்துகொள்ளாமல், ஆவிக்குரிய தளத்தில் பலனுள்ளவர்களாய் நாம் செயலாற்ற முடியாது.

தேவனுடைய பிரதிநிதிகளான மனிதர்கள்

முழுப் பிரபஞ்சத்திலும், அதிகாரத்துக்கு ஒரே ஒரு மேலான ஊற்றுதான் உண்டு: சிருஷ்டிகரான தேவன். தேவன் தம்முடைய அதிகாரத்தை நேரடியாகப் பயன்படுத்தாமல், அதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கிறார். தேவனுடைய சார்பாக அத்தகைய மனிதர்கள் பயன்படுத்தும் அதிகாரத்தில், ஆசீர்வதிக்க மற்றும் சபிப்பதற்கான அதிகாரமும் இணைந்திருக்கிறது.

இந்த நூற்றாண்டில் அதிகாரத்துக்கு விரோதமாக உலகளாவிய ஒரு கலகத்தை நாம் கண்டிருந்தாலும், புவியீர்ப்பின் கோட்பாடு தவறாது செயலாற்றுவதுபோல, அதிகாரத்தின் கோட்பாடுகளும் தவறாது செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

தேவனுடைய பிரதிநிதிகளான மனிதர்களின் உதாரணமே, இந்தக் கோட்பாட்டை எடுத்துக்காட்ட போதுமானதாகும். யோசுவா **6:26**இல், இஸ்ரவேல் மக்கள் எரிகோ பட்டணத்தை அற்புதவிதமாக பிடித்தபோது,

யோசுவா அதைத் திரும்ப எடுத்துக் கட்டுகிறவன் மீது ஒரு சாபமிட்டான். இது சுமார் கி.மு.1300ஆம் ஆண்டு சம்பவித்தது. 1 இராஜாக்கள் 16:34ல் நாம் வாசிக்கும்போது, 500 ஆண்டுகளுக்குப் பின், பெத்தேல் ஊரானாகிய ஈயேல் அதே இடத்தைத் திரும்பக் கட்ட முயற்சித்தான். தன் இரு பிள்ளைகளின் ஜீவனையும் அதினிமித்தம் இழக்கக் நேரிட்டது. எந்த மருத்துவக் காரணங்களும் இல்லாமல் அவர்கள் மரித்துப் போனார்கள். எந்த மருத்துவரும் அதைக் கண்டறிய முடியவில்லை. ஆனால் இது யோசுவா கூறின சாபத்தின் நேரடி விளைவாக இருந்தது. உங்கள் வாழ்க்கையிலும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சம்பவித்த ஒன்றின் விளைவுகளை நீங்கள் எதிர்கொண்டிருக்கலாம்.

இன்னொரு உதாரணம், சவுல் மற்றும் யோனத்தான் மரித்த பின்பு தாவீது பாடின பாடலின் வார்த்தைகளிலுள்ளது [2 சாமுவேல் 1:21]. தாவீது அதிகமாகச் சபிக்கிறவன் — நான் இக்காலத்து அர்த்தத்தில் இதைச் சொல்லவில்லை. சில மக்கள் மேல் சில பயங்கரமான சாபங்களை அவன் கூறினான்; ஆனாலும் இது தேவனுடைய மனிதனின் ஊழியத்தின் ஒரு பங்காகும்.

சவுல் மற்றும் யோனத்தானைக் குறித்து அவன் பாடின அழகான பாடலில் இப்படிச் சொன்னான்:

> *கில்போவா மலைகளே! உங்கள் மேல் பனியும் மழையும் பெய்யாமலும் காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.*

இந்த வார்த்தைகள் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டவைகள் ஆனால் இன்றைக்கும் நீங்கள் கில்போவா மலைகளுக்குச் செல்வீர்களானால், அங்கே பச்சையான மரம், செடி, கொடி ஒன்றையும் காணமாட்டீர்கள். இஸ்ரவேல் நாட்டு அரசாங்கம் அங்கே காடுகளை மறுபடியும் வளர்க்கக் கருத்தாய் முயற்சி செய்தும் ஒன்றும் வளரவில்லை. 3000 ஆண்டுகளுக்கு முன் தாவீது பேசின வார்த்தையினால்தான் இப்படி நடந்தது.

எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? கேயாசி, எலிசாவுக்குக் கீழ்ப்படியாமல், சிறிது நேரத்திற்கு முன்பு, அற்புதமாய் சுகத்தைப் பெற்றிருந்த நாகமானிடத்திற்கு ஓடிப்போனான். பணத்தையும், உடைகளையும் அவனிடம் கேட்டு, இவைகளை எலிசாவுக்கு மறைத்து வைத்தான். அவன் திரும்ப வந்தபோது, எலிசா, “என் ஆவி உன்னோடுகூட போகவில்லையா?” என்று கேட்டான்.

“ஆகையால், நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்” என்றான். அவன் உறைந்த மழையின் நிறமான குஷ்டத்தால் மூடப்பட்டு, அவன் சமூகத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனான் (2 இராஜாக்கள் 5:27). எதன் விளைவாக இது நடந்தது ? தேவனுடைய மனிதன் கூறின சாபமே.

உறவினால் அதிகாரமுடைய மக்கள்

சாபங்களின் இன்னொரு முக்கியமான ஊற்று இருக்கிறது. தேவன், மனித சமுதாயத்தில் ஏற்படுத்தின முறைமையின்படி, சில சூழ்நிலைகளில் ஒரு நபருக்கு மற்றொரு நபர் மீதோ, சில மக்கள் மீதோ அதிகாரம் இருக்கிறது.

மிக வெளிப்படையாய் இருக்கிற உதாரணம் – தகப்பன். தேவனுடைய வார்த்தையின்படி அவருக்குத் தன் குடும்பத்தின் மீது அதிகாரமிருக்கிறது. மக்கள் அதில் பிரியமாயிருப்பதோ, பிரியமில்லாமலிருப்பதோ அதற்கு எதிர்த்துப் போராடுவதோ போராடமலிருப்பதோ முக்கியமில்லை – உண்மையென்னவென்றால், அவருக்குத் தன் குடும்பத்தின் மீது அதிகாரமிருக்கிறது. அதை அவர் பயன்படுத்த தவறினால், அது அவருடைய பிரச்சனை.

அதிகாரமுடைய இன்னொரு நபர், கணவன். இவருடைய அதிகாரம் மனைவி மீது. அவர்கள் மிக நெருங்கின உறவிலுள்ளவர்கள். வேதம் சொல்லுகிறது: தேவன் கிறிஸ்துவுக்குத் தலையாயிருக்கிறார், கிறிஸ்து கணவனுக்குத் தலையாயிருக்கிறார், கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறார். பெண்களின் விடுதலைக்காகப் போராடுகிறவர்கள் இதைக் குறித்து என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் இது சத்தியம் என்பதுதான் உண்மை. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதினால் உண்மையை மாற்ற முடியாது.

யாக்கோபு மற்றும் அவன் குடும்பத்தின் சம்பவத்தைப் பாருங்கள். யாக்கோபு, தன் மாமனாகிய லாபானைப் பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் சேவித்தான். இரண்டு மனைவிகள், மறுமனையாட்டிகள் மற்றும் பதினோரு பிள்ளைகளைப் பெற்றிருந்தான். தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணின தேசத்துக்குத் தப்பியோட முடிவுசெய்தான். லாபான், தன்னுடைய குமாரத்திகளாகிய அவனுடைய மனைவிகளைத் திரும்ப உரிமைகோருவானோ என்ற பயத்தால் யாக்கோபு இரகசியமாகத் தப்பியோட முடிவு செய்தான்.

அவர்கள் தப்பியோடியபோது, யாக்கோபின் இரண்டாவது மனைவியாகிய ராகேல், தன் தகப்பனுடைய “வீட்டு தெய்வங்களைத்” திருடிக்கொண்டாள்.

அவரும் அக்கடவுள்களை வைத்திருக்கக் கூடாது, இவளும் அவைகளைத் திருடியிருக்கக் கூடாது, ஆனால் திருடினாள். லாபானுக்கு இது கோபமூட்டினபடியால், அவன் அவர்களைப் பின்தொடர்ந்து பிடித்து, தன் கடவுள்களைத் திருடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டினான்.

ராகேல் செய்ததை அறியாதிருந்த யாக்கோபு குற்றம் சாட்டப்பட்டதினிமித்தம் கோபமடைந்தான். ஆதியாகமம் **31:38**ல் அவன், "யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ அவனை உயிரோடே விட வேண்டாம்" என்று கூறினான். அறியாமல் யாக்கோபே தன் மனைவிமீது கூறின சாபமாக இது மாறியது.

துன்பகரமான காரியம் என்னவென்றால், இவைகள் வெறும் வார்த்தைகளல்ல, உறவினால் உண்டான அதிகாரம் நிறைந்த வார்த்தைகள். பேசின வார்த்தைகளினால் அவன் தன் மனைவியின் விதியை தீர்மானித்தான். அடுத்த முறை அவளுக்கு குழந்தை பிறந்தபோது, பிள்ளைப்பேற்றிலே அவள் மரித்துப்போனாள். எவ்வளவு தெளிவை உண்டாக்கும் ஓர் சம்பவம்!

இதே போன்ற செல்வாக்கையுடைய ஒரு பங்கைத் தகப்பன்மார்கள் செயல்படுத்துகிறார்கள். வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்து, மிகவும் விரும்பத்தக்க ஒன்று, ஒரு தகப்பனுடைய ஆசீர்வாதம் தான். மிகவும் அஞ்சத்தக்க ஒரு காரியம் தகப்பனுடைய சாபம். அநேக தகப்பன்மார் அறியாமலேயே தங்கள் பிள்ளைகளைச் சபிக்கிறார்கள். அச்சாபத்தை எதிர்கொண்டு அதிலிருந்து வெளியே வருவதற்கு நான் அநேகருக்கு உதவி செய்தபடியால் இதை நான் அறிவேன்.

மூன்று பிள்ளைகளை உடைய ஒரு தகப்பனைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலாவதும் மூன்றாவதும் மிகவும் திறமைசாலிகள் ஆனால் நடு பிள்ளை அவ்வளவு அறிவாளியல்ல. தகப்பனுக்கும் அவன் மேல் அதிக பிரியமில்லை. (நான் பெற்றோரைக் குறித்துக் கவனித்த ஓர் காரியமுண்டு - பொதுவாக தங்களைப் போல இருக்கும் பிள்ளையையே அவர்கள் அதிகமாக விரும்பமாட்டார்கள். தங்கள் சுபாவத்தில் எதைக் குறித்துப் பயப்படுகிறார்களோ, அதை பிள்ளைகளிடத்தில் காண அவர்கள் பிரியப்படுவதில்லை என்று நான் நினைக்கிறேன்.) தகப்பன் அந்தப் பிள்ளையைப் பார்த்து, "நீ வெற்றியடையமாட்டாய். உன் சகோதரர்கள் திறமைசாலிகள் ஆனால் நீயோ வாழ்க்கை முழுவதும் தோல்வியுற்றவனாய்தான் வாழ்வாய்" எனக் கூறுவார்.

இது என்ன தெரியுமா? ஒரு சாபம். அதே போல் ஒரு தாயும் தன் பிள்ளைகளிடத்தில் அல்லது பிள்ளைகளைக் குறித்து, அவர்களை பாதிக்கும் வார்த்தைகளை பேசலாம். தங்கள் மீது, பெற்றோரால் கூறப்பட்ட இத்தகைய

சாபத்தினால் அவதிப்படுகிறவர்களின் தொகையை அறிந்தால் நீங்கள் வியப்படைவீர்கள்.

குடும்பத்துக்கப்பால்

பிள்ளைகள் மீதிருக்கும் அதிகாரத்தினாலே சாபங்களைக் கூறக்கூடிய இன்னொரு நபர், ஆசிரியர். ஒரு வேளை தனக்கு ஒத்துப்போகாத ஒரு பிள்ளை ஆசிரியரின் வகுப்பிலிருக்கலாம். "நீ கற்றுக்கொள்ளவே மாட்டாய். உன்னிடத்தில் திறமையில்லை, நீ தேர்ச்சியடைய மாட்டாய்" போன்ற வார்த்தைகளை அவர் பயன்படுத்தலாம். பல முறை, ஆசிரியரினால் பேசப்பட்ட வார்த்தையின் சாபத்தால் பாதிக்கப்பட்ட மக்களோடு நான் ஜெபத்தில் ஒன்றுபட்டுப் போராடி அவர்களை விடுதலை பெறச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சபையின் மீது தனக்கிருக்கும் ஆவிக்குரிய அதிகாரத்தினால், ஒரு போதகருக்குத் தன் மக்களுடைய வாழ்க்கையின் மீது நல்ல முன்னேற்றத்துக்கான வார்த்தைகளையோ அல்லது தவறான, பின்னடைவை ஏற்படுத்தும் வார்த்தைகளையோ பேச வல்லமை உண்டு. ஒரு வேளை சபையில் விசுவாசியோடு போதகருக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட, அந்த நபர் சபையை விட்டு வெளியேறினால், "நீ எங்கே போனாலும், இந்தச் சபையோடு நீ ஒப்புரவாகும்வரை உனக்கு ஒன்றும் வாய்க்காது" என்று தவறான ஆவியில் போதகர் சொல்லலாம்.

மறுபடியும், இது ஒரு சாபமாகும். மதக்குழுக்கள் இந்த விஷயத்தில் பயங்கரமானவைகள், ஒரு சிலரை விட்டு விலகினால் அவர்கள் உடனடியாக உங்கள் மீது சாபமிடுவார்கள். இது, விளைவுகளில்லாத ஒன்றல்ல, உண்மை, என்னை நம்புங்கள்.

சாத்தானின் வேலைக்காரர்கள்

கிறிஸ்தவர்கள் மத்தியில், சாத்தானைக் குறித்த மனோநிலைகள் இரண்டு எதிர் முனைகளிலுள்ளன. சிலர் சாத்தானை முற்றிலும் அசட்டைபண்ணி, அவன் இல்லாதது போலவே நடிக்க முயற்சிக்கிறார்கள். மற்றவர்கள் அவனைக் குறித்துப் பீதி அடைந்து அவனுக்குக் கொடுக்க வேண்டிய கவனத்தைக் காட்டிலும் அதிக கவனத்தைக் கொடுக்கின்றார்கள். ஆனால் இவ்விரண்டு எதிர் நிலைகளுக்கும் இடையே ஒரு சரியான, வேதாகம சமநிலை உள்ளது.

சாத்தான் என்கிற பெயருக்குப் "பகைவன்" அல்லது "எதிராளி" என்பது அர்த்தமாகும். அவன் தேவனுக்கும், தேவனுடைய மக்களுக்கும்,

திட்டங்களுக்கும், மாறாத, உறுதியான சத்துருவாயிருக்கிறான். முழு மனுக்குலத்தையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதே அவனுடைய நோக்கமாகும். அவனுடைய முக்கிய உத்தி (தந்திரம்) வஞ்சகம். அதில் அவன் தேர்ச்சிப்பெற்றவனாவான்.

ஏற்கெனவே மனுக்குலத்தின் பெரும்பகுதியின் மீது அவன் ஆதிக்கம் செலுத்துகிறான் - தேவனுக்கு விரோதமாக கலக உணர்வுடைய யாவரும் இதில் அடங்குவர். எபேசியர் 2:2ல் அவன் ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்போது கிரியைசெய்கிற ஆவி'' என்று விவரிக்கப்பட்டுள்ளான். இவர்களில் பெரும்பாலானோருக்குத் தங்கள் உண்மை நிலையைக் குறித்துத் தெளிவான ஓர் அறிவு இல்லை. அவர்கள் புரிந்துகொள்ளமுடியாத அல்லது கட்டுப்படுத்த முடியாத சக்திகளால் இங்கும் அங்கும் அலசடிப்படுகிறார்கள்.

சாத்தானின் உண்மையான அடையாளம் என்னவென்று அறியாமலேயே, சுய விருப்பத்தினால் சாத்தானுக்கு தங்களையே ஒப்புக் கொடுத்தவர்களுமுண்டு. வல்லமையையும் பொருளாதார லாபத்தையும் தேடி, சாத்தான் அவர்களுக்குக் கட்டவிழ்க்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பயன்படுத்துவதைத் தங்களில் பயிற்சி செய்கிறார்கள். எல்லா கலாச்சாரங்களிலும், இத்தகைய சாத்தானின் வேலைக்காரர்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. மந்திரவாதி, வைத்தியர், சூனியக்காரன் என்பவைகள் இவர்கள் பொதுவாக பயன்படுத்தப்படும் பெயர்கள். ஆனால் ஒவ்வொரு கலாச்சாரத்துக்கும் அதினதின் பெயர்களுள்ளன.

சாத்தான் உண்டென்றும் அவனுக்கு வல்லமை உண்டென்பதையும் இயேசு மறுக்கவில்லை. ஆனால் சீஷர்களுக்கு அவர் கொடுத்த அதிகாரம், சாத்தானின் வல்லமைகள் மீது அவர்களை வெற்றி பெறச் செய்து, தங்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கும் அவனுடைய எல்லா முயற்சிகளிலிருந்தும் காப்பாற்றும் என இயேசு வாக்களித்தார்.

சாத்தானின் வேலைக்காரர், தேவனுடைய ஜனங்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தும் பிரதான ஆயுதங்களில் ஒன்று, சாபங்கள். எண்ணாகமம் 22-24ல் பாலாக்–பிலேயாமின் சம்பவத்தின் மூலம் இது தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலை யுத்தத்தில் தோற்கடிக்க முடியாதென்று அறிந்த மோவாபின் ராஜா, பிலேயாமைக் கூலிக்குப் பொருத்தி, இஸ்ரவேலைச் சபிக்கும்படி அழைத்தான். இன்றைக்கும் பழங்குடி இனத்தவர்கள் ஒருவரோடொருவர் யுத்தத்துக்கு செல்வதற்கு முன், மந்திரவாதியைக் கொண்டு சத்துருக்கள் மீது சாபமிடுகிறார்கள்.

ஆனால் பிலேயாம் ஒவ்வொரு முறையும் இஸ்ரவேலை சபிக்க முயன்றபோதும், தேவன் தலையிட்டு, சொல்லப்படவிருந்த சாபங்களை

ஆசீர்வாதமாக மாற்றினார். இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பிலேயாம் பேசவிருந்த சாபங்களை வெறும் வார்த்தைகளாக தேவன் கருதவில்லை என உணர்வது மிக முக்கியமானது. இஸ்ரவேலுக்கு அவைகளை ஒரு கடுமையான அச்சுறுத்தலாகக் கண்டு, தேவனே ஒவ்வொரு முறையும் தலையிட்டு, பிலேயாமின் திட்டங்களை குலைத்துப்போட்டார். சாத்தானின் வேலைக்காரரிடமிருந்து தம்முடைய மக்களுக்கு விரோதமாக வரும் சாபங்களை அவர் அசட்டை செய்வதில்லை மாறாக மேலான வல்லமையினால் தன்னுடைய மக்களை அவர் இடைக்கட்டுகிறார்.

அந்த வல்லமையைத் தேவனுடைய மக்கள் பயன்படுத்தும்போது சாபத்தின் பிடி அவர்கள் வாழ்க்கையிலிருந்து தகர்க்கப்படுகிறது, அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் வியக்கத்தக்கவைகளாக இருக்கின்றன. உலகத்தின் பல பகுதிகள், மந்திரவாதிகளின் பொல்லாத ஆவிக்குரிய வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டுள்ளன. அறிக்கையினாலும், ஜெபத்தினாலும், ஆப்பிரிக்காவிலுள்ள மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் அதிசயமான மாற்றங்களை நாங்கள் கண்டிருக்கிறோம். சிரிக்கவே மாட்டாத மக்கள் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாக மாறினார்கள். இரவிலிருந்து பகலுக்கு ஏற்படும் மாற்றம் போலிருந்தது.

ஒரு முறை ஒரு நபர் ஒரு கூட்டத்துக்கு வந்தார். அவர் நன்றாக உடை உடுத்தியிருந்தும், தன்னுடைய நன்றி கூறும் வழக்கத்தின்படி, மண்ணினாலே படுத்து உருண்டு நன்றி கூறினார். அவர் சொன்னார், என் வாழ்க்கை முழுவதும் நான் ஒரு பயங்கர பாவியாக வாழ்ந்தேன். பல ஆண்டுகளாக வேதனையிலிருந்தேன். ஆனால் இப்போது நான் விடுதலையாயிருக்கிறேன். எனக்கு வேதனையுமில்லை, நான் சந்தோஷமாக இருக்கிறேன்.

நடந்த ஒரே காரியம் என்னவென்றால், அவர் சாபத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார். நாம் சில விஷயங்களில் அதிக நாகரீகம் அடைந்து விட்டோமென்றெண்ணி, உண்மையான பல காரியங்களோடிருக்கும் தொடர்பை இழந்துவிட்டோம். அவைகளில் நமக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், அவைகளால் நாம் இன்னும் பாதிக்கப்படலாம்.

05

சுயமாய் இடப்பட்ட சாபங்கள் மற்றும் ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு

பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள், நன்மை அல்லது தீமைக்கேற்ற விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதை நாம் பார்த்தோம். நம்மை உற்சாகப்படுத்தி, செயல்படச் செய்யும் வார்த்தைகள் நமக்கு நம்பிக்கை அளித்த பல தருணங்களை அனுபவித்துள்ளோம். இவைகள் மற்றவர்கள் பேசின வார்த்தைகளாகவோ அல்லது நாமே சொல்லிக்கொண்ட வார்த்தைகளாகவோ இருக்கலாம்.துரதிர்ஷ்டவசமாக, தங்களுடைய வார்த்தைகளினாலேயே தங்கள் மீதும் மற்றவர்கள் மீதும் கேடான விளைவுகளையும் ஏற்படுத்தலாம் என்பதை பலர் உணருவதில்லை. இப்படிச் செய்வதினால், தங்கள் மீதே அவர்கள் சாபங்களைக் கூறிக்கொள்ளுகிறார்கள் என்பதுதான் உண்மை.

சுயமாய் இடப்பட்ட சாபங்கள்

ரெபேக்காள், யாக்கோபின் சம்பவத்தை மீண்டும் நினைவு கூறுங்கள். தன் மூத்த சகோதரன் ஏசாவுக்கு முன்னதாக, தன் தகப்பனிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ரெபேக்காள் யாக்கோபைத் தூண்டினாள். அந்த ஆசீர்வாதம் ஏசாவுக்கு உரியது. யாக்கோபு புத்திசாலி, ஆகையால் என்ன நடக்கக் கூடும் என்பதை முன்பே யோசித்தான்.

> ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப் பார்ப்பார், அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்ளுவேனே என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, உன் மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும் என்றாள்.
> **ஆதியாகமம் 27:12, 13**

இப்படிச் சொன்னதினால் அவள் தன்மேலேயே சாபத்தைக் கூறிக்கொண்டாள். பின்பு அதே அதிகாரத்தில் தனக்கு ஏற்றவர்களல்லாத மனைவிகளை ஏசா திருமணம் செய்ததைக் குறித்து, தன் கணவன் ஈசாக்கினிடத்தில் குறை கூறுகிறாள். தான் விரும்பினபடி காரியங்கள் நடைபெறாததால், ரெபேக்காள் ஈசாக்கிடம்:

> ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள். **ஆதியாகமம் 27:46**

தன் மீது இரட்டிப்பான சாபத்தை அவள் கூறிக்கொண்டாள். வாழ்க்கை அவளுக்கு வெறுப்பாயிருந்தது, உயிர் இருந்து ஆவதென்ன என்று கேட்டாள் - மரித்துப் போனால் நல்லது என நினைத்தாள்.

நான் மரித்துப்போனால் நல்லது. வாழ்ந்து பயனென்ன? *நான் பிழைக்க மாட்டேன்* என்று கூறி தங்கள் மீதே சாபத்தைக் கூறிக்கொண்ட எத்தனை பேரை நாங்கள் சந்தித்திருக்கிறோம் என்பதை நான் கணக்கிட முடியாது. இதைப் போன்ற வாக்கியத்தை நீங்கள் அடிக்கடி சொல்லத் தேவையில்லை. மரணத்தின் ஆவிக்கு ஒருமுறை திறந்த அழைப்பு விடுத்தால் போதும், அநேக அழைப்புகளை கொடுக்கத் தேவையில்லை; அவனே வந்துவிடுவான்.

மரணத்தின் ஆவியிலிருந்து விடுதலைக்காக, வடக்கு அயர்லாந்தில் ஒரு கூட்டத்தில் நான் ஒரு கூட்டு ஜெபம் செய்தேன். 2000 பேர் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் சுமார் 50 பேர், பெரும்பாலாக இளைஞர்கள், ஒரே நேரத்தில் விடுதலை பெற்றார்கள்.

இந்த நம்பிக்கையற்ற மனநிலை எப்படி உள்ளே நுழைகிறது? "வாழ்ந்து பயனில்லை. வாழ்க்கை எனக்கு என்ன நலனைத் தரும்? நான் மரித்தால் நலமாயிருக்கும்" போன்ற வார்த்தைகளைச் சொல்வதினாலேயே வருகிறது. இவ்வார்த்தைகள் மிக ஆபத்தானவை, ஏனென்றால் நீங்கள் உங்கள் மேலேயே சாபத்தைக் கூறிக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் ஒருவேளை, "நான் அதை உணர்ந்து சொல்லவில்லை" என்று சொல்லலாம், ஆனால் இத்தகைய கவனமற்ற, வீணான வார்த்தைகளைக் குறித்து இயேசு கடும் எச்சரிப்பை

கொடுத்தார். மத்தேயு 12:36, 37ல் அவர்,

> மனுஷன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்"

பேசுகிறவர் "அவைகளை உண்மையில் உணரவில்லை" என்றாலும், அந்த வார்த்தைகளின் தாக்கத்தைக் குறைக்கவோ, இரத்து செய்யவோ மாட்டாது, அவைகளுக்கு கணக்கு ஒப்புவிப்பதிலிருந்தும் அவனை விடுவிக்க மாட்டாது. இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லக் கட்டாயப்படுத்தம் பல சூழ்ச்சிகளைப் பிசாசு செய்ய விரும்புவான். பல நேரங்களில் இத்தகைய வார்த்தைகள் தேவையற்ற காரணங்களுக்காகச் சொல்லப்படும். நீங்கள் எரிச்சலடைந்து அல்லது தைரியமிழந்து, கருத்தை உணராமல், வார்த்தைகளை பேசும்போது, உங்கள் விதியை நீங்களே தீர்மானிக்கலாம்.

சுயமாயிடப்பட்ட சாபத்தின் ஒரு துயரமான, நீண்ட காலம் நீடித்த உதாரண சம்பவம் மத்தேயு 27:24, 25ல் காணப்படுகிறது. பொந்தியு பிலாத்தினால் இயேசு விசாரிக்கப்பட்டார்.

> கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.

சுயமாயிடப்பட்ட இச்சாபம், சந்ததி சந்ததியாக தொடரும் யூத சரித்திரத்தின் நிகழ்வுகளுக்கு முக்கியமான காரணம் என்பதை அறியாமல், நீங்கள் கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக நிகழ்ந்த யூத சரித்திரத்தை புரிந்துகொள்ளவே முடியாது. யூத மக்களுக்கு நிகழ்ந்த அத்தனை கொடுமைகளும், வேதனைகளும் இதிலிருந்துதான் தோன்றின என்பதைத் தேவனே அறிவார். யாக்கோபுக்கும் அவன் சந்ததியாரான யூத மக்களுக்கும், தங்களைச் சபிக்க நினைக்கிறவர்களிடமிருந்து தேவன் எப்படி பாதுகாப்பை அளித்தார் என்பதை முன்பதாகக் கண்டோம். ஆனால் இச்சாபத்திலிருந்து தேவனே தம்முடைய மக்களைப் பாதுகாக்க முடியாமல் போனது: அவர்கள் தங்கள் மீது சுயமாய் கூறிக்கொண்ட சாபம்.

வேதத்துக்குப் புறம்பான உடன்படிக்கைகள்

யாத்திராகமம் 23:32ல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் இஸ்ரவேல் மக்கள் பிரவேசிக்க ஆயத்தமானபோது, அங்கே இருந்த பொல்லாத, விக்கிரகங்களை வணங்குகிற ஜாதிகளைக் குறித்து தேவன் அவர்களை எச்சரித்து, "அவர்களோடும், அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக" என்றார்.

உடன்படிக்கை என்பது, எல்லா உறவுகளிலும் மிக வலிமையான மற்றும் ஆழமான ஓர் உறவாகும். பிசாசும் இதை நன்கு அறிவான். ஆகையால் தன்னால் உருவாக்கப்பட்ட உடன்படிக்கைகளை, அவன் தன்னலனுக்கேற்பப் பயன்படுத்தி, மக்கள் மீது வலிமையான கட்டுப்பாடை பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறான். தீய சக்திகளின் வல்லமைக்குக் கீழிருக்கும் மக்களோடு நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டால், நீங்களும் அதே வல்லமையின் கீழ் வருவீர்கள்.

முக்கியமாக, இரகசிய சங்கங்களின் விஷயத்தில் இது உண்மையாகும். ஃபிரீமேசன்ஸ் என்று அழைக்கப்படும் குழு, உலகளாவிய நிலையில் இதற்கு சிறப்பான உதாரணமாவார்கள். இந்தக் குழுவில் அங்கத்துவம் பெற, "மேசன் குழுவின் எந்த இரகசியங்களையும் வெளிப்படுத்தமாட்டேன்" என்று தன்னைக் கட்டுப்படுத்தி, ஒரு நபர் மிகவும் கொடூரமான மற்ற நாகரீகமற்ற உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சுயமாயிடப்பட்ட சாபங்களுக்கு, இத்தகைய உறுதிமொழிகளைவிட பயங்கரமான உதாரணங்களை, நாம் வேறெங்கும் காண முடியாது.

மேசன் குழு ஒரு பொய்யான மதம், ஏனென்றால் பொய்யான தெய்வத்தை அங்கிகரிக்கிறது. வேதாகமம் உட்பட, கிறிஸ்தவத்தோடு இணைக்கப்பட்ட பல பொருட்கள் மேசன் மதத்தில் பயன்படுத்தப்பட்டாலும் இது வஞ்சகமாகும். மேசன் மத்தத்தின் தெய்வம் வேதாகமத்தின் தேவனல்ல.

இத்தகைய குழுக்களில் எந்த விதமான ஈடுபாடும், நிச்சயமாக உங்களையும் உங்கள் சந்ததியையும் அழிவின் பாதையில் கொண்டு செல்லும். ஃபிரீமேசன் மதத்தில் பெற்றோர் ஈடுபட்டதால், முடமாக, வளர்ச்சிக் குன்றியதாக, சோகம் நிறைந்த பிள்ளைகளாக இருப்போரின் எண்ணிக்கையை தேவனே அறிவார். அதைக் குறித்து எது வேண்டுமானாலும் செய்து பார்க்கலாம், ஆனால் அந்த விளைவுகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகளை நீங்கள் மாற்ற முடியாது.

எவ்வித உடன்படிக்கையாயிருந்தாலும், அது வலிமையானதாகவும் கட்டுப்படுத்துகிற ஒன்றாகவும் இருக்கின்றது. கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் செய்யப்பட்ட உடன்படிக்கையைக் தவிர வேறெந்த ஓர்

அடிப்படையிலும் மற்ற மக்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள உங்களுக்குச் சுதந்தரமில்லை.

ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு அல்லது ஜெபம்.

நம்முடைய வார்த்தைகள் நன்மை அல்லது தீமைக்கேதுவான விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவைகள் என்பது இதற்குள் உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு அல்லது ஜெபம் கூட, சுயமாயிடப்பட்ட சாபங்களுக்கொத்த கேடான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. பல கிறிஸ்தவர்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கும் ஆனால் யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு எழுதி எச்சரிக்கும் போது அவர் கிறிஸ்தவர்களுக்கு எழுதுவது மட்டுமல்ல அவர் கிறிஸ்தவர்களைக் குறித்துதான் எழுதுகிறார்:

> *உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால் நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுகபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது.* **யாக்கோபு 3:14-15**

கீழ்நோக்கிச் செல்லும் இந்தச் இச்செயல் தொடரைப் புரிந்துகொள்வதற்கு அடிப்படை, "ஜென்ம சுபாவத்துக்குரியது" என்ற வார்த்தைகளில் அடங்கியுள்ளது. அதற்கான கிரேக்க வார்த்தை "சுகிக்காஸ்" (psuchikos), இது ''சுக்கி'' (psuche) என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. அதற்கு "ஆத்துமா" என்ற அர்த்தமாகும். அதற்கு ஒத்த ஆங்கில வார்த்தையை "ஆத்துமாவுக்குரியது" என்று மொழி பெயர்க்கலாம்.

1 தெசலோனிக்கேயர் 5:23ல், "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று பவுல் ஜெபிக்கின்றார். இங்கே ஒரு முழு ஆள்தத்துவத்தை உருவாக்குகின்ற மூன்று மூல பொருட்களை பவுல் ஒன்றாக சேர்த்து, அவைகளை மேலிருந்து கீழ்வரை வரிசைப்படுத்துகிறார்: ஆவி, அடுத்து ஆத்துமா, பின்பு சரீரம்.

விழுந்துபோன போது, தன்னுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தமாக, மனிதனுடைய ஆவி தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்பட்டது. அதே நேரத்தில் ஆவியைச் சாராமல் அவனுடைய ஆத்துமா தன்னை தனியாக வெளிப்படுத்த ஆரம்பித்தது. இந்தப் புதிய "இணைப்பில்லாத" உறவு,

தேவனுக்கு விரோதமாக மனிதன் செய்த கலகத்தின் விளைவாகவும், வெளிப்பாடாகவுமிருந்தது.

இயற்கையான அல்லது ஆத்துமாவுக்குரிய மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை புரிந்துகொள்ள 1 கொரிந்தியர் 2:14-15 மற்றும் யூதா 16-17 உதவுகின்றன. ஆவிக்குரிய நபர் தேவனுடைய சித்தத்தின்படி செயல்படுகிறவன் ஆத்துமாவுக்குரிய நபர் (ஜென்ம சுபாவமுள்ளவன்) தேவனோடு நல்லிணக்கத்திலில்லை. அவன் சபையோடிணைந்திருக்கலாம் அல்லது ஒரு கிறிஸ்தவனாக தோன்றலாம். ஆனால், உண்மையில் அவனுடைய கலகம் நிறைந்த மனநிலையும், செயல்பாடும் தேவனுடைய ஆவியைத் துக்கமடையச் செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஓர் நபர் பேசும் வார்த்தைகளில் இது பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்படலாம். ரோமர் 1:29-30ல் தேவனைவிட்டு மனிதன் பிரிந்து போனதின் சில விளைவுகளை பவுல் பட்டியலிடுகிறார். அந்தப் பட்டியலின் ஒரு பகுதி, ‘‘அவர்கள் பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மையினாலும், நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய் இருக்கிறார்கள்’’. புறங்கூறுதல் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பது, தேவன் இதை எவ்வளவு பயங்கரமான பாவமாக எண்ணுகிறார் என்பதைக் காணபிக்கின்றது.

அதே போல், ‘‘சகோதரரே, ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் பேசாதிருங்கள்’’ என யாக்கோபு எச்சரிக்கின்றார் (யாக்கோபு 4:11). ஆகையால் நாம் பேசுவது உண்மையாயிருந்தாலும், நம்முடைய சக விசுவாசிகளைக் குறித்து நாம் பேசவே கூடாது. சத்தியத்தை ஒருவரோடொருவர் பேசுவதை இது அகற்றிவிடாது. ஆனால் சம்பந்தப்பட்ட நபரிடம் நாம் முதலாவது செல்ல வேண்டும் (மத்தேயு 18:15-17ன் படி), மட்டுமல்ல அன்பு மற்றும் தாழ்மையுள்ள மனநிலையில் செல்ல வேண்டும் (எபேசியர் 4:15ன் படி).

அதே தாழ்மையும், தூய நோக்கமும், ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்துகொள்ள செய்து, எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை மட்டுமல்ல எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதையும் அறிந்துக் கொள்ளச் செய்யும். பலனுள்ள ஜெபம் செய்வதற்கு நாம் முற்றிலும் பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருக்கிறோம். ரோமர் 8:26-27ல் பவுல் இதைத் தெளிவாகக் கூறுகிறார்:

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

இத்தகைய ஜெபத்தைக் குறித்துச் சொல்வதற்கு அதிகமிருந்தாலும், ஒரு காரியத்தை மட்டும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜெபம் எப்போதும் தேவனுக்கு ஏற்றதாயிருக்கிறதென்றும் அதின் விளைவுகள் எப்போதும் நன்மையாகவே இருக்கிறதென்றும் அநேகர் முடிவு செய்கிறார்கள். இது உண்மையல்ல.

பரிசுத்த ஆவியானவருக்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும், நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், நம்முடைய ஜெபங்கள் மாம்சீக நோக்கங்களாகிய பொறாமை, சுய விருப்பத்தை நிறைவேற்றுதல், வெறுப்பு, கோபம் அல்லது குற்றச்சாட்டுகளால் நிறைந்திருக்கக் கூடும். இத்தகைய மனநிலைகளிலிருந்து புறப்படும் ஜெபங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் உடன்படவும் மாட்டார், பிதாவாகிய தேவனுக்கு முன்பு கொண்டு செல்லவுமாட்டார்.

ஆகையால் தவிர்க்க முடியாமல் நம்முடைய ஜெபம் யாக்கோபு 3:15ல் கண்டதுபோல, லௌகிக சம்பந்தமானதும் – (ஆத்துமாவிலிருந்து தோன்றும்) ஜென்ம சுபாவத்துக்குரியதும் – பேய்த்தனத்துக்கடுத்ததுமாய் சீர்கேடடைகிறது. ஆத்துமாவிலிருந்து தோன்றும் ஜெபங்களும், ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சைப்போலவே கேடான விளைவுகளை ஏற்படுத்துகிறது. நாம் யாருக்காக அப்படி ஜெபிக்கின்றோமோ, அவர்களுக்கு விரோதமாகக் காணப்படாத, வகையறுக்க முடியாத அழுத்தங்களை நாம் கட்டவிழ்த்து, அவர்கள் பாரங்களை குறையப்பண்ணாமல், சுமைகளை அதிகப்படுத்துவோம். உங்களுக்காக சிலர் ஜெபிப்பார்கள் ஆனால் அவர்கள் ஜெபிக்காமலிருந்தாலே நலமாயிருக்கும்! இவ்வார்த்தை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். மற்றவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தைக் குறித்தும், அவர்கள் எங்கே செல்ல வேண்டுமென்பதைக் குறித்தும் சிலருக்கு சுயமான பல யோசனைகளிருக்கும். அவர்கள் அதை ஜெபத்தின் மூலம் செயல்படுத்த நினைப்பார்கள். ஆனால், அது தேவனுடைய சித்தமாக இருக்காது. அவர்கள் எந்தெந்த காரியங்களில் உங்களுக்கு விரோதமாக ஜெபிக்கின்றார்களோ, அவைகளைச் செய்யும் போதெல்லாம் சில எதிர்ப்புகளை உணருவீர்கள்.

பயனில்லாத ஜெபம் என்பது இல்லை. நம்முடைய ஜெபங்கள் பலனுள்ளவைகளா இல்லையா என்பதும் கேள்வியல்ல. அவைகளின் விளைவுகள் நன்மையா தீமையா என்பதுதான் கேள்வி. அவைகளின் மூலம் கிரியை செய்கின்ற வல்லமையே அதைத் தீர்மானிக்கின்றது. அவைகள் உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தோன்றினவைகளா? அல்லது ஆத்துமாவிலிருந்து தோன்றும் போலியா? ஆத்துமாவிலிருந்து தோன்றும் ஜெபத்தின் வல்லமை உண்மையானதும் ஆபத்தானதுமாயிருக்கிறது. அது ஏற்படுத்துகின்ற விளைவு ஆசீர்வாதமல்ல, சாபம்தான்.

06

சாபத்தின் ஏழு அறிகுறிகள்

என்னுடைய தனிப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அனுபவங்களிலிருந்து, சாபம் கிரியை செய்கிறதென்பதை அறிய, பிரச்சனைக்குரிய ஏழு பகுதிகளைப் பட்டியலிட்டிருக்கிறேன். இவற்றில் ஒன்று அல்லது இரண்டு பிரச்சனைகள் மட்டும் இருந்தால், சாபம் கிரியை செய்வதை அவைகள் தனியாக நிரூபிக்க முடியாது. ஆனால் இவைகளில் பல்வேறு பிரச்சனைகள் ஒருவருடைய வாழ்விலிருக்கும்போதோ அல்லது தொடர்ந்து நிகழக்கூடியதாக இருக்கும் போதோ, சாபம் கிரியை செய்வதற்கான வாய்ப்புகள் பெருமளவில் அதிகரிக்கின்றன. இறுதியாக பரிசுத்த ஆவியானவரின் பகுத்தறிவு நமக்கு அவசியமாக இருக்கின்றது. அவர் ஒருவர் தான் சாபத்தை தெளிவாக கண்டறிய செய்யக் கூடியவர்.

1. மனமுறிவு அல்லது உணர்ச்சிகளின் முறிவு

வாழ்க்கையில் ஒரு முறை முறிவு ஏற்பட்டால் அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் தொடர்ச்சியாக, அடிக்கடி ஒரு குடும்பத்தில் முறிவுகள் ஏற்பட்டால் அக்குடும்பம் சாபத்தின் கீழுள்ளது என்று நிச்சயமாக சொல்லலாம். குழப்பம் மற்றும் மனச்சோர்வு இதனோடு இணைந்திருப்பதை காணலாம். இவைகளின் வேர்கள் ஏதாவது ஒரு மாந்திரீக ஈடுபாடு மற்றும்/ அல்லது பிசாசின் கிரியையிலிருந்து எழும்பும்.

2. தொடர்ச்சியான அல்லது தீராத வியாதி

எல்லா நோய்களுமே சாபத்தினால்தான் வரும் என்று அர்த்தமல்ல. தெளிவான மருத்துவ "நோய் கண்டறிதல்" இல்லாத இடங்களில்தான்

முக்கியத்துவம் பெறும். சில வியாதிகள் பரம்பரை வியாதிகளாகவோ அல்லது தலைமுறை தலைமுறையாக தொடரும் வியாதிகளாகவோ இருந்தால், சாபத்துக்கான பொதுவான அறிகுறியாகும்.

3. மலட்டுத்தன்மை, கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு அல்லது சம்பந்தப்பட்ட பெண் உறுப்புகளில் பிரச்சனைகள்

பல நேரங்களில், பிள்ளைகளை பெற்றெடுத்தலோடு தொடர்புடைய பிரச்சனைகள் குடும்பத்திலுள்ள எல்லா பெண்களையும் பாதிக்கக்கூடும். பெண்கள் இத்தகைய் பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வந்தால் நானும் ரூத்தும், சாபத்தின் தன்மைகளையும், காரணங்களையும் கற்றுக்கொடுத்து அதன் பின்பு அவர்கள் விடுதலைக்காக ஜெபிப்போம். பலர் அற்புதவிதமாக விடுதலை பெற்றதைக் கண்டிருக்கிறோம்.

4. திருமண உறவுகளின் முறிவு மற்றும் குடும்பத்தால் புறக்கணிக்கப்படுதல்

இந்த யுகம் முடிவடையும் முன் உலகத்தில் இருக்கக்கூடிய கொடிய காலங்களை மல்கியா **4:5-6** நமக்குக் காண்பிக்கிறது. ஒரு பொல்லாத சக்தி கிரியை செய்து பெற்றோரை பிள்ளைகளைவிட்டுப் பிரித்துக் குடும்ப உறவுகளில் முறிவுகளை ஏற்படுத்துகிறதைத் தீர்க்கதரிசி காண்பிக்கிறார். தேவன் தலையிட்டாலொழிய, குடும்ப வாழ்க்கையை அழித்துக்கொண்டிருக்கும் இச்சாபம் பூமி முழுவதற்கும் பரவுவதைத் தடுக்க முடியாது என எச்சரிக்கின்றார்.

5. தொடரும் பணப்பற்றாக்குறை

உபாகமம் **28:47-48**இல் இச்சாபத்தின் கிரியை தெளிவாகச் சித்தரிக்கப்படுகின்றது:

> *சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மன மகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும், தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களை சேவிப்பாய்.*

இவ்விரண்டு வசனங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, ஒரு எளிய முடிவுக்கு நம்மைக் கொண்டு வரும்: செழிப்பு ஓர் ஆசீர்வாதம், தரித்திரம் ஒரு சாபம். பவுல் 2 கொரிந்தியர் 9:8ல் கூறுவது போல, தேவன் தம்முடைய

மக்களுக்கு வைத்திருக்கும் சித்தம், ஏராளம் அல்லது அபரிமிதம்.

> *மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.*

உங்கள் வாழ்க்கைக்காக தேவன் வைத்திருக்கும் சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையானவைகளை விடக் குறைவாக பெற்றிருப்பது, தரித்திரம். மறுபக்கத்தில் தேவனுடைய சித்தத்தை செய்வதற்குத் தேவையான யாவையும் பெற்று - மற்றவர்களுக்கும் கொடுக்கத்தக்க மீதி வைத்திருப்பதே செழிப்பு.

6. “விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புடையவராக" இருத்தல்

சில மக்களுக்கு வழக்கத்துக்கு மேலாக, விநோதமான விபத்துக்கள் நேரிடும். இப்படிப்பட்ட மக்களுக்கு விரோதமாக காணப்படாத, விஷமத்தனமான சக்தி கிரியை செய்வதுபோல் இருக்கிறது. புள்ளிவிபர ஆராய்ச்சியினாலே கண்டறியப்படாத ஓர் நிலையாகும். சில காப்பீட்டு நிறுவனங்கள், அதிக “அபாயகரமான”வர்களென்று கருதுகிறவர்களின் காப்பீட்டுக் கட்டணத் தொகையை உயர்த்தி விடுகின்றன.

7. தற்கொலை அல்லது இயற்கையல்லாத, அகால மரணங்களின் சரித்திரம்

இவ்வித தோற்றத்தை எடுத்துக்கொள்ளும் சாபம் ஒரு தனி நபரை மட்டுமல்ல, ஒரு குடும்பம் அல்லது ஜாதி போன்ற பெரிய சமூகப் பிரிவையே பாதிக்கும். பொதுவாக இதுவும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குத் தொடரும்.

மேலே கூறப்பட்டுள்ள ஏழு அறிகுறிகள் முழுமையானதென்று சொல்ல முடியாது. பலவற்றை இதில் இணைக்கலாம். ஆனால் இது வரை வாசித்ததில், உங்கள் சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்க்க இது போதுமானதாக இருக்கும்.

பகுதி 3

விடுவிக்கப்படுவது எப்படி ?

உங்கள் வாழ்க்கை எப்படியோ ஒரு சாபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை காண ஆரம்பித்துவிட்டீர்களா? தேவனுடைய ஆசீர்வாதத்தின் சூரியப் பிரகாசத்தை அடைத்துக்கொண்டிருக்கிற இருளான நிழலிலிருந்து வெளியே வர வழி உண்டோவென்று சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் சாபத்தின் விளைவுகளினால் ஆட்கொள்ளப்பட தேவையில்லை; அவைகள் உங்கள் வாழ்நாட்களில் தோன்றியிருந்தாலும் சரி, அல்லது முன்பிருந்த சந்ததிகளின் செயல்களினால் உண்டானாலும் சரி. எந்த அழுத்தங்களோடு வாழ்ந்துத்தானாக வேண்டுமென்று நினைத்தீர்களோ, அவைகளிலிருந்து நீங்கள் விடுதலையடையலாம்.

பல நேரங்களில் சாபத்தின் காரணத்தையோ, தோன்றும் இடத்தையோ கண்டறிவது அவசியமாயிருக்கலாம் ஆனால் எப்போதுமல்ல. அதனால்தான் இரண்டாவது பகுதியில் நான் பல்வேறு சாத்தியக்கூறுகளை விவரித்துச் சொன்னேன். நீங்கள் வாசிக்கும் போதே பரிசுத்த ஆவியானவர் உங்களோட பேசுவார் என விசுவாசிக்கிறேன். நீங்கள் அறிந்துதான் விடுதலைபெற வேண்டும் என்பது அவசியமல்ல. ஆனால், பல நேரங்களில் நாம் எதிலிருந்து விடுதலை பெறுகிறோம் என்பதையும், அது எப்படி நம்மேல் வந்ததென்றும் நாம் அறியவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் உங்களுக்கு அதை காண்பிப்பாரென்றால், அதற்கேற்ப நீங்கள் செய்ய வேண்டியதை செய்யுங்கள்.

ஆம், வழி உண்டு! ஆனால் ஒரே ஒரு வழிதான் உண்டு: சிலுவையில் இயேசுவின் தியாக மரணம். இப்பகுதியில், நீங்கள் தேவனுடைய வழியை கண்டடைய, எளிய, செயல்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன - இவைகள், நிழலிலிருந்து சூரிய வெளிச்சத்திற்கு, சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு உங்களைக் கொண்டு வரும்.

07

தெய்வீக பரிமாற்றம்

சுவிசேஷத்தின் முழுச் செய்தியும் ஒரு ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டுள்ளது: சிலுவையில் இயேசுவின் தியாக மரணம். இதைக் குறித்து எபிரெயரின் எழுத்தாளர், "பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபிரெயர் 10:14) எனக் கூறுகிறார். இரண்டு வல்லமையான வார்த்தைகள் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. "பூரணப்படுத்தி" மற்றும் "என்றென்றைக்கும்". இவ்விரண்டும் இணைந்து, மனுக்குலத்தின் எல்லா தேவையையும் உள்ளடக்குகிற ஒரு பலியை சித்தரிக்கின்றன. மட்டுமல்ல, இதன் விளைவுகள் காலத்தையும் கடந்து, நித்தியத்துக்குள்ளும் எட்டுகின்றன.

இதுதான் நம்முடைய விடுதலைக்கான முக்கிய அஸ்திபாரம். சிலுவையில் ஒரு தெய்வீக பரிமாற்றம் ஏற்பட்டது. முதலாவது, நம்முடைய பாவங்களுக்குத் தக்க பலனாயிருந்த எல்லா பொல்லாப்பையும், நம்முடைய ஸ்தானத்தில் இயேசு ஏற்றுக்கொண்டார். இதற்குப் பதிலாக இயேசுவின் பாவமற்ற கீழ்ப்படிதலுக்கு வரும் எல்லா நன்மையையும் தேவன் நமக்கு அளிக்கின்றார்.

மீட்பின் முழு நோக்கத்தையும் நீங்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக, சிலுவையில் என்னென்ன சாதிக்கப்பட்டதென்று நாம் சுருக்கமாகப் பார்ப்போம்.

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.

நாம் சுகத்தைப் பெறும்படி அவர் காயப்பட்டார்.

இவ்விரண்டு சத்தியங்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன. ஆவிக்குரிய தளத்தில், நம்முடைய பாவத்தினால் உண்டான தண்டனையை இயேசு பெற்றுக்கொண்டதால், நாம் மன்னிக்கப்பட்டு தேவனிடத்தில் சமாதானம் பெற்றுள்ளோம்.

சரீரப்பிரகாரமான தளத்தில், அவருடைய காயங்களால் நாம் சுகத்தைப் பெறும்படியாக, இயேசு நம்முடைய வியாதிகளையும், வேதனைகளையும் எடுத்துக்கொண்டார்.

நாம் அவருடைய நீதியைக் கொண்டு நீதிமான்களாக்கப் படும்படியாக, இயேசு நம்முடைய பாவத்தினால் பாவமானார்.

இந்தப் பரிமாற்றத்தின் மூன்றாவது அம்சம் ஏசாயா 53:10ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் தேவன் இயேசுவின் ஆத்துமாவை “குற்றநிவாரண பலியாக்கினார்” என்று கூறப்பட்டுள்ளது. மோசேக்கு கொடுக்கப்பட்ட குற்ற நிவாரண பலியின் பல்வேறு தோற்றங்களின் விதிகளில் இவை அனைத்தும் முன்கூட்டியே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏசாயா 53:10ஐக் குறிப்பிட்டு, பவுல் 2 கொரிந்தியர் 5:21 இல் பேசும்போது அந்தப் பரிமாற்றத்தின் ஆக்கப்பூர்வமான தோற்றத்தை முன் வைக்கிறார். ‘‘நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் (தேவன்) பாவமாக்கினார்.” இந்த நீதியை நாம் ஒருபோதும் சம்பாதிக்க முடியாது, விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

அவருடைய ஜீவனில் நாம் பங்கடையும்படி, இயேசு நம்முடைய மரணத்தை மரித்தார்.

பாவத்தின் நிறைவான பலன் மரணமென்று, முழு வேதமும் வலியுறுத்துகிறது. இயேசு நம்முடைய பாவத்தோடு தம்மை இணைத்துக்கொண்ட போது, மனித பாவத்தினால் உண்டான மரணத்தை அவர் அனுபவிப்பது, தவிர்க்க முடியாத ஓர் நிகழ்வாக மாறியது.

இதற்குப் பதில் தன்னுடைய நிகராக்கும் பலியை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும், அவர் நித்திய ஜீவனை பரிசாக அளிக்கிறார். ரோமர் 6:23ல் இவ்விரண்டு அடுத்தனைகளைப் பவுல் ஒன்றாக முன் வைக்கிறார்: ‘‘பாவத்தின் சம்பளம் (நியாயமான பலன்) மரணம்; தேவனுடைய (சம்பாதிக்கப்படாத) கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்”.

நாம் அவருடைய ஐசுவரியத்தைக் கொண்டு ஐசுவரியவான்களாகும் படி, இயேசு நம்முடைய தரித்திரத்தினால் தரித்திரரானார்.

உபாகமம் 28:48ல் மோசே பூரண தரித்திரத்தை நான்கு வார்த்தைகளில் அடக்கினார்: பசி, தாகம், நிர்வாணம், சகலமும் குறைவுபடுதல். நாம் அவருடைய நிறைவை அனுபவிக்கும்படியாக, இயேசு சிலுவையில் இவை அனைத்தையும் அனுபவித்தார்.

பல வேளைகளில் நம்முடைய "நிறைவு" பூலோகத்தில் இருந்த கிறிஸ்துவின் நிறைவைப் போலதான் இருக்கும். நாம் பெரிய அளவில் கையில் பணம் வைத்துக்கொள்ளாமலும், வங்கியில் பெரும் வைப்புத் தொகைகள் இல்லாமலும் இருப்போம். ஆனால் நாளுக்கு நாள் நம்முடைய தேவைகளுக்கும் மற்றவர்களுடைய தேவைகளைச் சந்திக்கத்தக்க கொஞ்சம் மீதியும் பெற்றிருப்போம்.

நாம் அவருடைய மகிமையில் பங்கடையும்படி இயேசு நம்முடைய அவமானத்தைச் சுமந்தார்.

தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்படி, அவர் நம்முடைய தள்ளப்படுதலைச் சகித்தார்.

மனிதனுடைய பாவத்தினால் ஏற்பட்ட இரண்டு உணர்ச்சிகளின் ரீதியிலான வேதனைகளையும், சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம் உள்ளடக்குகிறது. நம்முடைய பாவத்தினால் நமக்கு ஏற்படும் இரண்டு காயங்கள், அவமானம் மற்றும் தள்ளப்படுதலாவன. இழிவுபடுத்தும் மரண முறைகளில், சிலுவையில் மரிக்கச் செய்வது எல்லாவற்றையும்விட அதிக அவமானத்துக்குரியதாயிருந்தது. பிதாவோடு முறிக்கப்பட்ட உறவின் வேதனையான தள்ளப்படுதலையும், இயேசு சிலுவையில் சகித்தார். பிதாவை நோக்கி அவர் அழைத்தபோது, எந்தப் பதிலுமில்லை. நாம் நன்மையை அனுபவிக்கும்படியாக இயேசு தீமையைச் சகித்தார்.

நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக இயேசு சாபமானார்.

கலாத்தியர் 3:13-14ல் பரிமாற்றத்தின் இத்தோற்றத்தைப் பவுல் சுருக்கமாகக் கூறுகிறார்:

> *மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

இதுவே நம்முடைய விடுதலையின் ஆதாரம். சிலுவையில் கிறிஸ்து நமக்காகச் செய்ததை விசுவாசிப்பதில் இது ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவர் பாவமானபடியால் நாம் எப்படி நீதிமான்களாகிறோமோ, அப்படியே அவர் சாபமாக்கப்பட்டதினால் நாம் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும். உபாகமம் 21:23இல் மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று மோசேயின் நியாயப்பிரமாணம்கூறுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தை அறிந்திருந்த ஒவ்வொரு யூதனும், சிலுவையில் இயேசு தொங்குகிறதைக் கண்ட போது, அவர் சாபமாக்கப்பட்டார் என்பதை அறிந்திருந்தார்கள். அவர் சாபமாக்கப்பட்டதின் காரணம், நம்மை சாபத்திலிருந்து விடுதலையாக்குவதே என்பதற்காக தேவனுக்கு நன்றி!

நீங்கள் விடுதலை பெற்ற பின்னும் இரண்டு நிபந்தனைகளுக்கு தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும் - தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவர் சொல்லின்படி நடக்க வேண்டும். யோவான் 10:27இல் இயேசு, “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகின்றன’ என்று சொன்னார்.

இதுதான் ஆசீர்வாதத்திற்கான நிபந்தனை, ஆனால் ஆசீர்வாதத்தில் வாழ வேண்டுமானால், முதலாவது சாபத்திலிருந்து நீங்கள் மீட்கப்படவேண்டும் - விடுதலையாக வேண்டும். இயேசுவின் மரணத்தின் மூலம் இது சட்டப்பூர்வமாக நம்முடையதாகிவிட்டது. நமக்காக அதைப் பெற்றுத் தந்தார். நம்முடைய வாழ்க்கையில் இது கிரியை செய்வதற்கு, நாம் இதைச் சட்டத்திலிருந்து அனுபவத்துக்குக் கொண்டுவர வேண்டும். இதை எப்படிச் செய்வதென்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சட்டப்பூர்வமான அடித்தளம் ஏற்கெனவே இருக்கிறது. இனி தேவன் நமக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை, தேவன் நமக்காகச் செய்ததை நாம் சுதந்தரிக்க வேண்டும். அவ்வளவுதான்!

08

விடுதலைக்கான ஏழு படிகள்

தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்ய விரும்பும் அனைத்தையும் உள்ளடக்குகிற ஒரு வார்த்தை, இரட்சிப்பு (sozo). *புதிய ஏற்பாட்டில், "சோஜோ"* (sozo) *என்ற மூல கிரேக்க வார்த்தையின் வெவ்வேறான மொழி பெயர்ப்புகளினால், இரட்சிப்பின் கிரியையின் அளவு, சில நேரங்களில், மறைக்கப்பட்டு விடுகிறது. பொதுவாக "இரட்சிக்க" என்று மொழி பெயர்க்கப்படுகிறது ஆனால் பாவ மன்னிப்புக்கு அப்பால் பல விதங்களிலும் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.*

உதாரணத்துக்கு, சரீர சுகத்தைப் பெறும் மக்களின் அனுபவத்தைக் குறித்து அநேகம் முறை இது பயன்படுத்தப்பட்டுள்ளது. பிசாசுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள் மற்றும் மரணத்திலிருந்து மீண்டும் உயிர்பெற்றவர்களைக் குறித்தும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. லாசருவின் சம்பவத்தில், மரணத்துக்கேதுவான வியாதியிலிருந்து தேறி வருதலைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 2 தீமோத்தேயு 4:18ல், தன் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் தேவனுடைய பாதுகாப்பு மற்றும் சேதமடையாமல் காக்கும் கிரியையை குறித்துப் பவுல் இதே வினைச் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

இரட்சிப்பின் முழு கிரியை ஒரு நபருடைய வாழ்வின் எல்லா பகுதிகளையும் உட்படுத்தும். 1 தெசலோனிக்கேயர் 5:23ல், பவுலுடைய ஜெபத்தில் இது அழகாக விவரிக்கப்பட்டுள்ளது: "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது

குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக". இரட்சிப்பு முழு மனித தன்மையையும் உட்படுத்துகிறது—ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம்—கிறிஸ்துவின் வருகையின் போது, சரீரத்தின் உயிர்த்தெழுதலினால் பூரணப்படுகிறது.

இரட்சிப்பின் எல்லா ஏற்பாடுகளுக்குள்ளும், ஒருவரும் ஒரே நேரத்தில் பிரவேசிக்க முடியாது. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதுதான் இயல்பானது. சில கிறிஸ்தவர்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டதைத் தாண்டி எங்கும் செல்வதில்லை. அவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படும் பல ஏற்பாடுகளைக் குறித்து அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

எந்த வரிசையில் இந்த ஏற்பாடுகளை ஒரு நபர் பெற்றுக்கொளளுகிறார் என்பது, நம்மைத் தனி நபர்களாக பாவித்து நடத்தும் தேவனுடைய இறைமையைப் பொறுத்ததாகும். நம்முடைய மிகப் பெரிய தேவை என்னவென்பதை நாம் அறியாதிருந்தும், எந்த நேரத்திலும், தேவன் அதை அறிவார்.

நம் ஒவ்வொருவருக்கு முன்னும் தேவன் ஒரு தேர்வை வைக்கிறார். ஒரு பக்கம் ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்கள், மறு பக்கம் மரணம் மற்றும் சாபங்கள். இஸ்ரவேலைப் போல நாம் தேர்ந்தெடுப்பது எதுவோ, அதுவே நம்முடைய எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. நம்முடைய தேர்வு, நமக்குப் பின் வரும் நம்முடைய சந்ததிகளையும் பாதிக்கக்கூடும்.

இந்தத் தேர்வைச் செய்தவுடன், நம்முடைய வாழ்க்கையைப் பாதித்துக் கொண்டிருக்கும் எந்த சாபத்திலிருந்தும் விடுதலை பெற நாம் கடந்து செல்லக் கூடும். இதற்கு நாம் எடுக்க வேண்டிய படிகள் என்ன? எல்லோரும் பின்பற்றும்படியாக, தீர்மானிக்கப்பட்ட ஒரே முன் மாதிரி என்பது எதுவுமில்லை. ஆனால் மக்களை விடுதலைக்கு நேராக நடத்துவதில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஏழு படிகள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருக்க நான் கண்டிருக்கிறேன்.

1. **கிறிஸ்துவிலும், உங்கள் சார்பாக அவர் செய்த தியாகத்திலும் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.**

ரோமர் 10:9-10இல், கிறிஸ்துவின் தியாகத்தின் பயன்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, இரண்டு முக்கியமான நிபந்தனைகள் உண்டென்று பவுல் விளக்குகிறார்: தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும், அவரே ஆண்டவரென்று வாயினால் அறிக்கையிட வேண்டும். இருதயத்திலுள்ள விசுவாசம் வாயின் அறிக்கையினால் பூரணப்படும்வரை, பயனுள்ளதல்ல.

அறிக்கையிடுவது, என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் "சொல்லுவதை போலவே சொல்லுவது" என்பதாகும். வேதாகமத்தின் விசுவாசத்தைப் பொறுத்த வரை, தேவன் தம்முடைய வார்த்தையில் சொல்லியிருப்பதையே நம்முடைய வாயினால் சொல்லுவது, அறிக்கையிடுதலாகும். எபிரெயர் 3:1ல் இயேசு, "நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர்" என அழைக்கப்படுகிறார். அவரைக் குறித்த சரியான வேத அறிக்கையை நாம் செய்யும் போது, நம்முடைய சார்பில் அவருடைய ஆசாரிய ஊழியத்தை அது கட்டவிழ்க்கும்.

2. உங்கள் எல்லா கலகத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் மனந்திரும்புங்கள்

தேவனுக்கு விரோதமாயிருந்த உங்கள் கலக குணம் மற்றும் அதிலிருந்து தோன்றின பாவங்களுக்காகவும் நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். தேவன் விரும்பும் மனந்திரும்புதலை வெளிப்படுத்தும் ஒரு உதாரணமான அறிக்கை இதோ:

என் எல்லா கலகத்தையும், பாவத்தையும் நான் விட்டுவிட்டு, நீரே ஆண்டவரென்று, என்னை உமக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

3. எல்லா பாவத்துக்காகவும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்

தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்விலே தடைச் செய்யும் மிகப் பெரிய காரியம், மன்னிக்கப்படாத பாவமே. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குத் தேவன் ஏற்பாடு செய்துள்ளார் ஆனால் நாம் அவைகளை அறிக்கை செய்யும் வரை, மன்னிக்க மாட்டார். ஒரு வேளை சாபத்துக்கு உங்களை உட்படுத்தின சில பாவங்களைத் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். அப்படியானால், குறிப்பாக அந்தப் பாவங்களை அறிக்கையிடுங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).

4. உங்களுக்குத் தீங்கு செய்த அல்லது உங்களுக்கு விரோதமாகத் தவறு செய்தவர்களை மன்னியுங்கள்.

தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்விலே நிறுத்தி வைக்கும் இன்னொரு பெரிய தடை, மற்றவர்களை மன்னிக்காத தன்மை. இன்னொரு நபரை மன்னிப்பது ஒரு உணர்ச்சியல்ல; அது ஒரு தீர்மானம். நீங்கள் யார் யாரை மன்னிக்க வேண்டும் என்பதை நினைப்பூட்டும்படி தேவனிடம் கேளுங்கள். சரியான தீர்மானத்தைச் செய்ய பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஆலோசனை கூறுவார். ஆனால், உங்களுக்காக அந்தத்

தீர்மானத்தை அவர் செய்ய மாட்டார். சத்தமாக சொல்லுங்கள்: "தேவனே, நான் -------------ஐ மன்னிக்கிறேன்.

5. மாந்திரீகம் மற்றும் சாத்தானின் பொருட்களோடிருக்கும் எல்லாத் தொடர்பையும் துறந்து விடுங்கள்.

இது பல்வேறு செயல்களையும், பழக்கவழக்கங்களையும் உட்படுத்தும். அத்தகைய செயல்களில் நீங்கள் எப்போதாவது ஈடுபட்டதுண்டானால், காணப்படாத ஒரு எல்லையைத் தாண்டி நீங்கள் பிசாசின் இராஜ்யத்துக்குள் பிரவேசித்திருக்கிறீர்கள். நீங்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும், அந்த நேரத்திலிருந்து சாத்தான் உங்களைத் தன் பிரஜைகளில் ஒருவராக எண்ணுகிறான். உங்கள் மீது சட்டப்பூர்வமான உரிமை கோரலாம் எனக் கருதுகிறான்.

நீங்கள் இறுதியாகவும், என்றென்றைக்கும் சாத்தானோடிருக்கும் எல்லாத் தொடர்பையும் துண்டித்துப் போட வேண்டும். எந்தக் குறிப்பான செயலைக் குறித்தும் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள் தேவனிடம் அதை தெளிவுப்படுத்தக் கேட்டுக்கொள்ள வேண்டும். அத்தகைய செயல்களோடு உங்களை இன்னும் இணைக்கக்கூடிய பொருட்களை நீங்கள் அகற்ற வேண்டும். இதில் எல்லா விதமான சொரூபங்களும், தாயத்துக்களும், புத்தகங்களும் உட்படும். இவைகள் எரிக்கப்பட வேண்டும் அல்லது நொறுக்கப்படவோ அழிக்கப்படவோ வேண்டும்.

6. சாபத்திலிருந்து விடுதலைக்கான ஜெபத்தை செய்ய நீங்கள் இப்போது ஆயத்தமாயிருக்கிறீர்கள்.

சிலுவையில் தன்னுடைய தியாக மரணத்தினாலே இயேசு உங்களுக்குப் பெற்றுக் கொடுத்த யாவற்றின் மீதும் உங்கள் விசுவாசத்தை நிலைநிறுத்துவது மிக முக்கியமானது. உங்கள் விடுதலையை நீங்கள் "சம்பாதிக்க" தேவையில்லை. நீங்கள் "தகுதியுள்ளவராக" இருக்கத் தேவையில்லை.

இதற்குத் தகுந்த ஜெபம்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரனென்றும், தேவனிடத்தில் செல்லும் ஒரே வழியாயிருக்கிறீரென்றும், சிலுவையில் என் பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்தீரென்றும் விசுவாசிக்கிறேன்.

என் எல்லா கலகத்தையும், பாவத்தையும் நான் விட்டு விட்டு, நீரே ஆண்டவரென்று, என்னை உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.

என் எல்லா பாவங்களையும் உமக்கு முன் அறிக்கையிட்டு, உமது

மன்னிப்பைக் கேட்கிறேன் - குறிப்பாக சாபத்துக்கு என்னை உட்படுத்தின எந்த பாவத்துக்காகவும் மன்னிப்பு கேட்கிறேன். என்னுடைய முன்னோர்களின் பாவங்களினால் ஏற்படும் விளைவுகளிலிருந்தும் என்னை விடுவியும்.

தேவன் எனக்கு மன்னிக்க வேண்டுமென்று நான் விரும்புவது போல, என்னுடைய சுய சித்தத்தின் தீர்மானத்தினாலே எனக்குத் துரோகம் செய்த அல்லது தீங்கு செய்தவர்களை நான் மன்னிக்கின்றேன். குறிப்பாக நான் . . . . ஐ மன்னிக்கின்றேன்.

மாந்திரீகம் மற்றும் சாத்தானின் எந்தக் காரியத்தோடும் இருக்கும் தொடர்பைத் துண்டிக்கிறேன் - என்னிடத்தில் "தொடர்பு பொருட்கள்" ஏதாகிலும் இருந்தால் அவைகளை அழித்துப் போட ஒப்புக்கொடுக்கிறேன். சாத்தானுக்கு என் மேலிருக்கும் எல்லா உரிமையையும் முறிக்கின்றேன்.

ஆண்டவராகிய இயேசுவே, கல்வாரி சிலுவையில் என் மீது வரக்கூடிய எல்லா சாபத்தையும் நீர் உம்மீது ஏற்றுக்கொண்டீரென்று நான் விசுவாசிக்கிறேன். ஆகையால் என் வாழ்க்கையில் இருக்கும் எல்லா சாபத்திலிருந்தும் என்னை இப்போது விடுவிக்கும்படி வேண்டுகிறேன் - உம்முடைய நாமத்தில் கேட்கிறேன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ! ஆமென்

7. இப்போது, நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என விசுவாசித்து, தேவனுடைய ஆசீர்வாதத்தில் தொடர்ந்து நடைபோடுங்கள் !

இக்கட்டத்தில், ஆசீர்வாதம் எத்தோற்றத்தில் வரும் அல்லது தேவன் அதை எப்படி அளிப்பார் என்பதைக் குறித்து நீங்கள் ஆராய வேண்டாம். அதைத் தேவனுடைய கரத்தில் விட்டுவிடுங்கள். அவர் எப்படி, எப்போது செய்வாரோ, செய்ய விட்டுவிடுங்கள். அதைக் குறித்து நீங்கள் கவலைப்பட தேவையில்லை. உங்கள் பங்கிற்கு, உங்களைத் தடையில்லாமல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களுக்குள்ளும், உங்கள் மூலமாயும், தேவன் செய்ய விரும்பும் எல்லாவற்றுக்கும் உங்களை விட்டுக்கொடுங்கள். தேவன் எப்படி பதிலளிப்பார் என்பதைக் காண்பது ஆச்சரியத்தைக் கொண்டுவரும்!

09

நிழலிலிருந்து சூரிய ஒளியினிடத்திற்கு

கடந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை நீங்கள் பின்பற்றியிருந்தால், காணப்படாத ஓர் எல்லையை நீங்கள் கடந்துவிட்டீர்கள். பல ஊற்றுகளிலிருந்து தோன்றின பல்வேறு விதமான சாபங்கள் உங்களுக்குப் பின்பாக இருக்கும் பிரதேசத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. உங்களுக்கு முன், தேவனுடைய ஆசீர்வாதமென்னும் சூரிய ஒளியினால் பிரகாசமாக்கப்பட்ட பிரதேசம் உள்ளது.

ஆராயப்படும்படியாகவும், சுதந்தரிக்கப்படும்படியாகவும் காத்திருக்கின்ற ஓர் சுதந்திரம், கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு உண்டாயிருக்கிறது. உபாகமம் **28:2-13**ல் மோசே கொடுத்த ஆசீர்வாதங்களின் பட்டியலைக் கவனியுங்கள்.

உயர்வு	செழிப்பு
ஆரோக்கியம்	வெற்றி
பெருக்கம்	தேவ தயவு

இந்த வார்த்தைகளை நீங்கள் மீண்டும் சொல்லும்போது, இச்சுதந்தரத்தை உங்களுக்கு இன்னும் உண்மையாகவும், தெளிவாகவும் விளங்கப்பண்ணும்படி தேவனிடம் கேளுங்கள். ஒவ்வொரு பகுதிக்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவது, உங்கள் விசுவாசத்தின் மிகத் தூய்மையான மற்றும் எளிமையான வெளிக்காட்டுதலாகும். உங்கள் வாழ்க்கையில், சாபத்தோடு ஓர் நெடுநாள் போராட்டம் இருந்திருக்குமாயின், உடனடியாக இருள் அகலாத மனதின் சில பகுதிகள் இருக்கலாம். ஆசீர்வாதங்களை

விவரிக்கும் நன்மையான வார்த்தைகளை மீண்டும், மீண்டும் அறிக்கையிடும்போது, சூரிய ஒளியின் முதல் கிரணங்கள் இருளான பள்ளத்தாக்கினுள் பிரவேசித்து, பின்பு முழு பள்ளத்தாக்கையும் வெளிச்சமாக்கும்படி பரவுவது போலாகும்.

இருளான பிரதேசத்திலிருந்து, ஒளி நிறைந்த பிரதேசத்தினுள் கடந்து வருவது, பல தோற்றங்களை எடுத்துக்கொள்ளலாம். எல்லாருக்கும் ஒரே நியதி என்று சொல்லத்தக்க எந்தக் குறிப்பிட்ட மாதிரியுமில்லை. சில மக்கள் உடனடியாக விடுதலையைப் பெற்று, வேதம் வாக்களிக்கும் ஆசீர்வாதங்களுக்குள் நுழைந்து விடுகிறார்கள். அதே அளவிற்கு உண்மையாக இருந்தும், வேறு சிலருக்கு, ஓர் நீண்ட, கடுமையான போராட்டம் இருக்கலாம். குறிப்பாக அவர்கள் மாந்திரீகத்தில் ஈடுபட்டிருந்தால் அப்படியாகும்.

தேவனுடைய கண்ணோட்டத்திற்கும் மனித கண்ணோட்டத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு சூழ்நிலையில் நாம் அறியாத பல காரியங்களைத் தேவன் தம்முடைய இறையாண்மையில் காண்கிறார். அவர் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காக்கிறார். ஆனால் பெரும்பாலான சூழ்நிலைகளில் இரண்டு காரியங்களைத் தேவன் முன்னறிவிக்க மாட்டார்: ஒருவருடைய வாழ்க்கையில் எப்படிச் செயல்பட போகிறார், எவ்வளவு காலத்தை அதற்கு எடுத்துக்கொள்ளுவார்—என்பவைகளே.

கலாத்தியர் **3:13-14**இல் பவுல் விவரிக்கும் இப்பரிமாற்றத்தின் நன்மையான பகுதியை நாம் காணலாம்.

> ***மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.***
>
> ***ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.***

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தைக் குறித்து, பவுல் மூன்று முக்கிய குறிப்புகளைச் சுட்டிக் காண்பிக்கிறார். முதலாவது அது தெளிவற்ற அல்லது வரையறையற்ற ஒன்றல்ல. மிகக் குறிப்பாக உள்ளது: ஆதியாகமம் **24:1**இல் உள்ள ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள். அதின் எல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளது: "தேவன் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்".

இரண்டாவதாக, இந்த ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவில் மட்டுமே

நமக்கு உண்டாகும். நம்முடைய சொந்தத் திறமையினால் சம்பாதிக்கப்பட முடியாது. கிறிஸ்து இயேசுவின் மூலம், தேவனோடிருக்கும் உறவின் அடிப்படையில் மட்டுமே அளிக்கப்படுகிறது.

மூன்றாவதாக, இது ‘‘ஆவியைக் குறித்த வாக்குத்தத்தம்” என்று விவரிக்கப்பட்டுள்ளது. தெய்வத்துவத்தின் மூன்று நபர்களும் – பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் – இயேசுவின் தியாகத்தினால் நமக்கென்று கிரயத்தினால் கொள்ளப்பட்ட எல்லாவற்றையும் நமக்கு பகிர்ந்துகொடுக்கும் நோக்கத்தில் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். இயற்கையின் சிந்தை அறியக்கூடியதற்கு அப்பாற்பட்ட காரியமாக இது இருப்பதனால், நம்முடைய முழு சுதந்தரத்திற்குள் பிரவேசிக்கவும், தேவன் நமக்கு அளித்ததை எப்படி பெற்றுக்கொள்ளுவது என்பதையும் அறிய, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையே நாம் சார்ந்துகொள்ள வேண்டும்.

ரோமர் **8:14**இல் பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த பங்கைப் பவுல் வலியுறுத்துகிறார்: ‘‘மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்”. “தேவனுடைய ஆவியினாலே வழிநடத்தப்படுகிறது” என்பது, ஒரே நொடியில் சம்பவிக்கும் ஒட்டுமொத்தமான அனுபவமல்ல. நாம் முதிர்ச்சியடைய கடந்து போகும் ஒவ்வொரு நொடியும் சார்ந்துகொள்ளுகிற ஒன்றாகும்.

ஆவிக்குரிய தடைகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் எப்போதும் பகுத்தறிவை அருளுகிறார். இதற்குப் பின்வரும் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே, ஆவிக்குரிய தளத்தில் பயனுள்ள முன்னேற்றம் ஏற்படும். கிழக்கு மலேசிய மாநிலமான சாரவாக்கில், இபான் மக்கள் பெரும்பான்மையினர். அவர்களுடைய கலாச்சாரம் இயற்கை மற்றும் ஆவிகளை வழிபடுகிற பழக்க வழக்கங்களினாலே ஆட்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சாபங்கள், பாதுகாப்புக்காக மூதாதையரின் தாயத்துக்கள் மற்றும் மந்திரிப்பதும் அடங்கும். இத்தகைய காரியங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடுபடுவதை குறித்ததான செய்தி, தற்சமயம் அவர்கள் மத்தியில் ஆச்சரியமான விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. பல கிராமங்களில், இந்தச் செய்தி அறிவிக்கப்படும் போதே, அநேகர் அறிக்கையிட்டு, மனந்திரும்பி ஜெபித்து பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒரு பெரிய மூட்டை தாயத்துக்கள் (அவர்கள் பாஷையில், ஜிமாட்) சேகரிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு வருகின்றன.

ஓர் இடத்தில் மட்டும், அதைச் செய்த பின்னும், இன்னும் அகற்றப்படாத ஏதோ ஓர் அரண் இருக்கிறதாக உணரப்பட்டது. அவர்கள் இருந்த அந்தச் சமுதாயக் கூடத்தைச் சுற்றி ஓர் எரிகோ அணிவகுப்பு செய்யும்படி, பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவினார். சரியாக ஏழாவது முறை அவர்கள்

சுற்றி வரும்போது, “நில்லுங்கள்!” என்று அவர்கள் தலைவர் சத்தமிட்டார். உடனே அவர்கள் கவனிக்கத் தவறின ஓர் தாயித்து கீழே விழுந்தது, அதுவே கிராமத்தில் மிக வல்லமையானதாக இருந்தது. அதையும் அவர்கள் எரித்தபோது, அந்த மக்கள் மீது மிகுந்த சமாதானமும் சந்தோஷமும் உண்டானது.

பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதையும், தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களை தைரியத்தோடு பேசுவதையும் நீங்கள் கற்றுக்கொள்ளும்போது, இதே சந்தோஷமும் சமாதானமும் உங்களுடையதாக மாறும். 8ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடுதலையின் ஜெபத்தில் எபிரெயர் 3:1இல் வெளிப்படுத்தப்பட்ட சத்தியமே முக்கியமானது: இயேசு ‘‘நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியராக’’ இருக்கிறார். தேவனோடிருக்கும் உறவில் இந்தக் கோட்பாடு எல்லாவற்றையும் ஆளுகை செய்ய வேண்டும். நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், நம்முடைய ஆசாரியராக இருக்கும் இயேசுவின் தொடரும் ஊழியத்தைச் செயல்படுத்த, நாம் ஏற்ற ஓர் ஆவிக்குரிய அறிக்கையை செய்ய வேண்டும்.

பெரும்பாலான சூழ்நிலைகளில் மூன்று விதங்களில் நாம் செயல்படக் கூடும், ஒன்று, நல்ல வேத அறிக்கையை செய்யலாம்; இரண்டாவது, அறிக்கையே செய்யாமல் இருக்கலாம்; மூன்றாவது, தவறான, வேதத்துக்கு விரோதமான அறிக்கையை செய்யலாம். நல்ல அறிக்கை செய்தால், நம்முடைய தேவையைச் சந்தித்து, உதவி செய்யும்படி இயேசுவின் ஊழியத்தைக் கட்டவிழ்க்கிறோம். அறிக்கையே செய்யாவிட்டால், நம்முடைய சூழ்நிலைகளின் கருணைக்கு விட்டுவிடப்படுகிறோம். தவறான அறிக்கை செய்தால், பொல்லாத பிசாசின் சக்திகளுக்கு நம்மை விட்டுக்கொடுக்கிறோம்.

உண்மையான விசுவாசத்தில் செய்யப்படும் வேத அறிக்கைக்கும், கற்பனையான சிந்தனைகளுக்கும் இங்கு வித்தியாசப்படுத்துவது அவசியமாகும். முதலாவது, வேதாகம அர்த்தத்தில், “அறிக்கை” என்பது வேதத்தின் வாக்கியங்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் என்ற வரம்புக்குள் அடங்கிவிடுகிறது. நாம் இதற்கப்பால் செல்ல முடியாது. இரண்டாவதாக, வாக்குத்தத்தத்தோடு இணைந்திருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் அறிக்கை செல்லுபடியாகும். கீழ்ப்படிதலுக்கு இது ஒரு போதும் மாற்று வழியல்ல.

மூன்றாவதாக, அறிக்கை, மனித சித்தத்தினால் அல்லது மனதளவிலுள்ள விசுவாசத்தினால் இயக்கப்படுகிற ஒரு வசதியான “முறையாகவோ,” “திட்டமாகவோ” அற்பமாக்கப்படக்கூடாது. தேவனை நாம் சுய விருப்பத்தின்படி இயக்க முடியாது. இருதயத்தில் உண்மையான விசுவாசம், பரிசுத்த ஆவியானவரால் மட்டும் உருவாகும்.

அறிக்கையிடப்பட்டதை நிறைவேற்ற, வல்லமை நிறைந்த வார்த்தைகளை அது உருவாக்கும். நம்முடைய அறிக்கையை விட்டுவிடாமல் நிற்க, எபிரெயர் 10:23 நம்மை உற்சாகப்படுத்துகிறது: ‘‘அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே”.

ஆகிலும், விசுவாசத்துக்கு முழுமையான வெற்றியுள்ள தோற்றத்தை அளிக்க, அறிக்கைக்கப்பால் நம்மைக் கொண்டு செல்லுகிற ஓர் வேதக் கோட்பாடு உண்டு. அதுதான் ‘‘**பிரகடனஞ்செய்தல்**''. எவ்வித எதிர்ப்பினாலும், சோர்வினாலும் அடக்கப்படாத ஒரு பலமுள்ள, தைரியமான விசுவாசத்தின் உறுதியை இது குறிக்கும். தற்காப்பின் நிலையிலிருந்து தாக்குதலின் நிலைக்கு கடந்து போவதைக் குறிக்கும்.

ஊழியத்தில் ரூத்தும் நானும், அனுதினமும் எங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ளுகிறோம் என்று அடிக்கடி கேட்கப்படுகிறோம். தனியாகவோ அல்லது இணைந்தோ தேவனுடைய வார்த்தையைச் சத்தமாக அறிக்கையிடுவதை நாங்கள் ஒரு பழக்கமாக்கிக்கொள்ளுகிறோம். இப்புத்தகத்தின் இறுதியில் நாங்கள் ஒவ்வொரு இரவும் தூங்கும் முன் செய்யும் ஓர் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. நீங்களும் இதைச் செய்து, நிழலிலிருந்து சூரிய ஒளியினிடத்திற்கு, சாபத்திலிருந்து தேவனுடைய ஆசீர்வாதத்தின் முழுமைக்குக் கடந்து வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

தனிப்பட்ட ஆய்வு

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருவது எப்படி? என்ற தலைப்பிலுள்ள பாட கேள்விகளுக்கு, இப்போது நீங்கள் இணைப்பு ‘அ’-வை (பக்கம் 440) திருப்பிக்கொள்ளுங்கள். இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இணைப்பு ‘ஆ’-வில் கொடுக்கப்பட்டுள்ளன.

உங்களில் உள்ள தூய ஆவியானவர்

01

பெந்தெகொஸ்தேக்கு முன்பு

வேதத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் அறிவினை வேறு எந்த வழியிலும் பெற்றுக் கொள்ள முடியாது. வேதத்தின் முக்கியமான வெளிப்பாடு தேவனுடைய பண்பைப் பற்றியதாகும். வேதம் நமக்கு வெளிப்படுத்தக் கூடிய இரகசியத்தை அதைத் தவிர வேறு எந்த வழியிலும் பெற்றுக் கொள்ள முடியாது. அந்த இரகசியம் என்னவென்றால் தேவன் ஒருவராக இருக்கிறார், அதே நேரத்தில் எல்லாருக்கும் மேலானவராகவும் இருக்கிறார். மூன்று நபர்கள் எனினும் ஒரே தேவன் தான். வேதம் வெளிப்படுத்தும் மூன்று நபர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆவர். அதில் இந்த நூல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளக்க உள்ளது.

வேதம் வெளிப்படுத்துகின்ற தனித்தன்மை வாய்ந்த ஆழமான சத்தியம் என்னவெனில் அது பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும், அவருடைய கிரியைகள் பற்றியுமாகும். நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதன்மையான காரியம் என்னவெனில், பரிசுத்த ஆவியானவர், பிதாவையும் குமாரனையும் போன்று ஒரு நபரே. மனித அறிவின்படி பார்க்கும் போது பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய தேவனையும் ஒரு நபராக உணர்வது எளிதாய் உள்ளது. ஆனால் பரிசுத்த ஆவியானவரை ஒரு நபராகக் கருதுவது அவ்வளவு எளிதல்ல.

பரிசுத்த ஆவியானவரின் மூலம் தேவன் அனைத்தையும் அறிந்தவராய் இருக்கிறார், அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை; பரிசுத்த ஆவியின் மூலம் ஒரே நேரத்தில் தேவன் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறார். இந்த இரண்டு பண்புகளும் இறையியலிலே சர்வ ஞானம் உள்ளவர் என்றும், சர்வ வியாபகர் என்றும் முறையே

அறியப்படுகின்றது. இது பல வசனங்களிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக எரேமியா **23:23-24**ல்

23நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

24எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறார். தேவன் இல்லாத இடம் என்று ஒன்றுமில்லை. தேவனுக்கு அறியாதபடி ஒரு செயல் நடக்கக் கூடிய இடம் என்பது கிடையாது. இது மிகவும் அழகாக சங்கீதம் **139**ன் ஆரம்ப வசனங்களில் வருகிறது.

1கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.

2என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

3நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.

4என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.

5முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.

6இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.

7உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?

8நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

9நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,

> 10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.
>
> 11 இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.
>
> 12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

என்ன அழகான வாக்கியங்கள்! தேவனுடைய எல்லையற்ற ஞானத்தின் அற்புதம் தெளிவாய் கூறப்பட்டுள்ளது. தேவபிரசன்னம் இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது. தேவபிரசன்னத்துக்கு மறைவாக செல்லக்கூடிய இடம் இப்பிரபஞ்சத்தில் எங்கும் இல்லை. எந்த தூரமும் உன்னையும், அவரையும் பிரிக்க முடியாது. எந்த இருளும் உன்னையும், அவரையும் மறைக்க முடியாது. தேவன் எல்லா இடங்களிலும், இப்பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்திருக்கிறார். எல்லா இடத்தில் நடைபெறும் அனைத்துக் காரியங்களும் அவருக்குத் தெரியும்.

இந்த இரகசியத்தின் திறவுகோல் 7ம் வசனத்தில் "*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?*" என்று கூறுகிறது. இது எபிரெய கவிதை நடை. இதில் ஒரு வசனத்தின் இரு பகுதிகள் ஒரே சத்தியத்தை சொல்வதாக வரும். பரிசுத்த ஆவியாகிய தேவன் எங்கும் வியாபித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் மூலம் எந்த வேளையிலும் இப்பிரபஞ்சத்தில் நடக்கும் எந்த செயலையும் தேவன் அறிவார்.

படைப்பின் நாட்கள் முதல் பரிசுத்த ஆவியானவர் இப்பிரபஞ்சத்தில் செயலாற்றி வருகிறார். படைப்பின் முறையை விளக்கும் போது சங்கீதக்காரன் இவ்விதமாய் கூறுகிறார்:

> 6 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.
>
> (சங்கீதம் 33:6)

ஆங்கிலத்தின் சொல் "சுவாசம்" என்று குறிப்பது எபிரெயத்தில் "ஆவி" என்ற அர்த்தத்தில் வருகிறது. அப்படியானால் இந்த சங்கீதத்தின் வசனம் "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய ஆவியினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது" என்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் இப்பிரபஞ்சத்தின் படைப்பின் காரணர் கர்த்தருடைய ஆவியானவரும் அல்லது பரிசுத்த ஆவியானவரும் கர்த்தருடைய வார்த்தையும் ஆகும். வேதாகமத்தின் ஆரம்ப வசனங்களைப் பார்க்கும் போது இது விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 1:2–3:

> [2]பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.
>
> [3]தேவன் வெளிச்சம் உண்டாக்கக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.

வெறுமையான இருளிலே, ஒன்றுமில்லாத வெற்றிடத்திலே தேவ ஆவியானவரின் பிரசன்னம் இருந்தது. "அசைவாடினார்" என்ற சொல் ஒரு பறவையுடன் இணைத்துக் கூறப்படும் சொல். வேதத்தில் அநேக இடங்களில் பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தின் புறாவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளார். இங்கே பரலோகத்தின் புறாவாகிய பரிசுத்த ஆவியானவர் ஒழுங்கற்ற, வெறுமையான இருளில் அசைவாடிக் கொண்டிருக்கிறார். 3ம் வசனம் "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று" என்று சொல்லுகிறது. இங்கேயும் படைப்பின் இரு காரணர்களாகிய தேவ ஆவியானவரும், தேவ வசனமும் கூறப்பட்டுள்ளது. அவைகள் இரண்டும் இணையும் போது படைப்பு உண்டாகிறது. தேவ ஆவியானவரும், தேவ வார்த்தையும் உள்ள இடத்தில் ஒரு புதிய காரியம் தோன்றுகிறது. இவ்விடத்தில் ஒளி உண்டாகிறது. ஒளியானது ஆவியானவராலும், வார்த்தையினாலும் உருவாக்கப்படுகிறது. இங்கு பரிசுத்த ஆவியானவர் இப்பிரபஞ்சத்தின் படைப்பின் காலத்திலிருந்து செயலாற்றுவதை நீ காணலாம். மேலும், இவர் பிரபஞ்சம் முழுவதிலும் இருக்கின்றார். ஓர் அர்த்தத்தில் பரிசுத்த ஆவியானவர் சுறுசுறுப்பாக தேவத்துவத்தின் திறமையான செயல்பாட்டை நிறைவேற்றுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மனிதர்கள் அனைவரையும் உயிர்ப்பூட்டி வல்லமை அளித்தார். இப்பட்டியலில் அடங்கும் எல்லாருடைய பெயரையும் கொடுப்பது முடியாததாகையால் சில உதாரணங்களைக் காண்போம்.

இவர்களுள் முதன்மையானவர் பெசலெயேல். இவர் உடன்படிக்கைப் பெட்டியையும் மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமூட்டுகளையும், திட்டமிட்டு உருவாக்கியவர். கர்த்தர் யாத்திராகமம் 31:2-3ல்

> [2]நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,
>
> [3]விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும்

வேலைசெய்கிறதற்கும், . . . எனத் தொடர்கிறது.

இந்த கைவேலையை திறம்படச் செய்ய, பெசலெயேலை நிரப்பிய தேவ ஆவியானவர் அவனுக்கு திறமையை அளித்தார். பெசலெயேல் தான் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட முதல் மனிதர் என்று வேதம் கூறுவது, என்னை வியக்கச் செய்யும் காரியமாக உள்ளது. இதன் விளைவாக அவன் திறமைமிக்க, வினோதமான கைவேலை செய்தான். ஆகையால் அவன் செய்த கைவேலை மிகவும் விலையேறப்பெற்றது.

உபாகமம் **34:9**ல் நாம் யோசுவாவைப் பற்றி இப்படி வாசிக்கிறோம்:

> **[9]மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.**

யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை சுதந்தரித்த ஒரு பெரிய இராணுவத்தலைவர். அவர் ஆவியானவராலே நிரப்பப்பட்டிருந்ததாலே இதைச் செய்ய முடிந்தது.

நியாயாதிபதிகள் **6:34**ல் கிதியோனைப் பற்றிப் படிக்கிறோம்:

> ***[34]அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்; அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து,. . .***

கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் வந்ததினாலே அவர் வல்லமையின் தலைவரானார். அதற்கு முன்பு அவர் ஒரு சாதுவான வாலிபர். திராட்சை ஆலையில் திறமையாக எதையும் செய்ய முடியாத சாதாரண பணியில் ஈடுபட்டவர். ஆனால் தேவனுடைய ஆவி அவர்மேல் வந்தபோது அவர் மாற்றப்பட்டார்.

2 சாமுவேல் **23:1-2**ல் பேரரசனும் சங்கீதக்காரனுமாகிய தாவீதைக் குறித்துப் படிக்கிறோம். தாவீது அதில் சொல்லுவதாவது :

> ***[1]தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்;***
>
> ***[2]கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது.***

இந்த அழகான சங்கீதங்களை தாவீது நமக்கு கொடுக்க முடிந்ததின் காரணம் “கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது” என்பதாகும். மீண்டும் தேவ ஆவியானவரும், தேவ வசனமும் வருகிறதைக் கவனியுங்கள் **1** பேதுரு **1:21**ல் பேதுரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஊழியத்தைப் பற்றி இவ்வாறு தொகுத்துச் சொல்லுகிறார்:

> [21]***உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.***

தேவனிடத்திலிருந்து மெய்யான செய்தியைக் கொண்டு வந்த ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தாங்கள் சுயமாய் பேசாமல், தங்கள் சொந்த எண்ணங்களையும், கருத்துகளையும் சொல்ல முற்படாமல், ஆவியினாலே ஏவப்பட்டு, (உந்தப்பட்டு அல்லது வழிநடத்தப்பட்டு) பேசினார்கள். ஆகவே அச்செய்தி மனிதனிடத்திலிருந்து வந்த செய்தியாக இல்லாமல் தேவனிடத்திலிருந்து வந்த செய்தியாக இருந்தது. இந்த உதாரணங்களையும் மற்ற உதாரணங்களையும் பார்க்கும் போது, பழைய ஏற்பாட்டு பக்தர்கள் தேவ ஊழியத்தை பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலேயே அல்லது தூண்டுதலினாலேயே திறம்படச் செய்தார்கள், என்ற முடிவுக்கு வருகிறோம். உண்மையாகவே இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. அவர்களால் ஆவியானவர் இல்லாமல் திறம்பட செயலாற்ற முடியவில்லை என்றால், நாமும் ஆவியானவர் இல்லாமல் திறம்பட செயலாற்ற முடியாது.

02

இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர்

இயேசுவின் ஊழியத்திலும், போதனையிலும் இருந்த பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இப்பொழுது நாம் காண்போம். முதலாவதாக இயேசுவை அறிமுகப்படுத்தி அவருடைய ஊழியத்திற்கு வழியை செவ்வைப் படுத்த வந்த யோவான் ஸ்நானகன் அவரை "பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணுகிறவர்" என்னும்சிறப்பு பட்டத்தைக்கூறி அறிமுகப்படுத்துகிறார்.

> **11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்தேயு 3:11)**

இயேசுவிற்கும், அவர் காலத்திற்கு முன்பு வந்த மனிதர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தைக் கொடுக்கும் இயேசுவின் ஊழியத்திற்கு நான்கு சுவிசேஷங்களும் முக்கியத்துவம் அளிக்கின்றன. வேதம் இதற்கு சிறப்பு கவனம் செலுத்துகிறது.

இயேசுவின் முழு ஊழியத்திற்கும் தேவையான வல்லமையின்

காரணராக பரிசுத்த ஆவியானவர் இருப்பதை நாம் காண்கிறோம். யோர்தான் நதியில் இயேசு, யோவானால் ஞானஸ்நானம் பெறும் வரை அவர் பிரசங்கிக்கவும் இல்லை, ஓர் அற்புதத்தைச் செய்யவும் இல்லை. பரிசுத்த ஆவியானவர் தன் மேல் வருவதற்காக காத்திருந்தார். அப்போஸ்தலர் **10:38**ல் கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்த மக்களுக்கு பேதுரு பேசும் பொழுது இயேசுவின் ஊழியத்தைப் பற்றி இப்படி விளக்குகின்றார்:

[38]நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

பூமியில் இயேசு கிறிஸ்து செய்த ஊழியத்தின் வல்லமையும், ஆதாரமும் பரிசுத்த ஆவியானவரே. தேவன் திரித்துவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளதை ஏற்கெனவே காட்டியுள்ளோம். ஒரே தேவனில் மூன்று நபர்கள் பிதா, குமாரன், ஆவியானவர். இந்த ஒரு வசனத்தில் மூவரும் குறிக்கப்பட்டுள்ளனர். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுவை பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கிறார். தேவன் செயல்படுவதால் மனிதர்களுக்கு சுகம் கிடைக்கின்றது. “அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட அனைவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றி திரிந்தார்.” இதுவே இயேசுவின் ஊழியத்தின் இரகசியமும் மூலாதாரமுமாகும்.

உயிர்த்தெழுதலுக்குப் பின்பும், இயேசு பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார். இது ஒரு ஒப்பற்ற உண்மை. அப்போஸ்தலர் **1:1-2**ல் இந்த வசனங்களுடன் ஆரம்பிக்கிறார்.

[1]தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்ட பின்பு,

[2]அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை (லூக்கா சுவிசேஷத்தை) உண்டுபண்ணினேன்.

லூக்கா இயேசு உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடைப்பட்ட நாற்பது நாட்களின் ஊழியத்தைப்பற்றி இங்கு பேசுகிறார். தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவுரையை பரிசுத்த ஆவியின் மூலம் அருளினார் என்று அது சொல்கிறது. முற்றிலும் நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டியதின் நமது மாதிரி இயேசுவே. தமது வல்லமைக்கும்

தமது போதனைகளுக்கும் அவர் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார்; பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் அவர் ஒன்றும் செய்யவில்லை. இயேசுவைப் போன்று நாமும் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்தவர்களாய் செயலாற்ற வேண்டுமென்பதே, நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் சவால்.

தமது ஊழியம் முழுவதிலும் இயேசு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் செயல்பட்டதுமன்றி, அவரை வல்லமை உடையவராக்கி உற்சாகப்படுத்திய அதே பரிசுத்த ஆவியானவரை அவருடைய சீஷர்களும் பெறுவர் என வாக்களித்தார்.

யோவான் 7:37-39 வரை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> *37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.*
>
> *38 வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.*
>
> *39 தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.*

இங்கு நாம் ஒரு முக்கிய உண்மையைக் காண்கிறோம். "ஒருவன் தாகமாயிருந்தால்" என ஒரு தாகமுள்ள மனிதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அதே தாகமுள்ள, திறமையற்ற மனிதன் பரிசுத்த ஆவியானவர் உள்ளே வந்து வசித்தால் "ஜீவ நதிகள் புறப்படும்" ஊற்றாக மாறுகிறான். தேவையிலிருந்த அம்மனிதன் பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவையைச் சந்திப்பவனாக மாறுகிறான். ஒவ்வொரு விசுவாசிக்கும் தூய ஆவியானவர் எல்லையற்ற ஆதாரமாக இருக்கிறார்.

இந்த வாக்குத்தத்தம் இயேசுவின் பூவுலக ஊழியத்தில் கொடுக்கப்பட்டபோதிலும் இயேசு மகிமையடைவதற்கு முன்பு இது நிறைவேறாது என்று அந்த சுவிஷேசத்தின் எழுத்தாளர் தெளிவுபடுத்துகிறார். அவர் சொல்கிறார்: "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை."

யோவான் 14:15-18ல் இயேசு தமது சீஷர்களுக்குக் கூறுகிறார்:

> *15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*

[16]நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

[17]உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

[18]நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய சில முக்கிய குறிப்புகள் உண்டு. முதலாவதாக இயேசு சொல்கிறார் “பிதா உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனைத் தருவார்.” இங்கு கூறப்பட்டுள்ள “வேறொரு” என்பதின் அர்த்தம் என்ன? அதற்கு அர்த்தம் என்னவென்றால் இயேசு ஒரு நபராக அவர்களுடன் மூன்றரை ஆண்டுகள் இருந்தார். அவர் சொன்னதின் அர்த்தம் இப்பொழுது நான் ஒரு நபராக உங்களை விட்டு கடந்து செல்ல இருக்கிறேன். ஆனால் நான் போன பின்பு பரிசுத்த ஆவி என்னும் அடுத்த நபர் நான் இருந்த இடத்தில் இருக்கும்படி வருவார் என்பதாகும்.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவரை விளக்குவதற்குத் “தேற்றரவாளன்” என்னும் குறிப்பிட்ட வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இதன் கிரேக்கப்பதம் *பாராகிளீட்டாஸ்* என்பதாகும். கத்தோலிக்க மொழிபெயர்ப்பு “*பாராகிளீட்*” என்று கூறுகிறது. “நம்முடன் இருந்து உதவி செய்யும்படி அழைக்கப்பட்டவர்” என்பதே *பாராகிளீட்* என்ற சொல்லின் அர்த்தமாகும். மற்ற மொழிபெயர்ப்புகள் இதை “ஆலோசகர்,” “உதவியாளர்” என மொழிபெயர்த்துள்ளது. இங்கு நாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள தேற்றரவாளன், ஆலோசகர், உதவியாளர் என்னும் மூன்று பதங்களைக் காண்கிறோம்.

மூன்றாவதாக பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுடன் நிரந்தரமாய் இருப்பார் என இயேசு கூறுகிறார். மீண்டும் இவருக்கும் சீஷர்களுக்கும் உள்ள உறவில் ஒரு வித்தியாசம் உண்டு. அவர் அடிப்படையாகச் சொல்வது “நான் உங்களுடன் குறுகிய காலமாகிய மூன்றரை ஆண்டுகள் இருந்தேன். நான் உங்களை விட்டுச் செல்ல இருப்பதால் இருதயத்தில் நீங்கள் கலங்கியிருக்கிறீர்கள். ஆதரவற்றவர்களாக விடப்பட்டு போவதாக உணருகிறீர்கள்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னும் வேறொரு உதவியாளரை அனுப்ப இருக்கிறேன். அவர் வரும்பொழுது உங்களை விட்டு நீங்கிப் போகமாட்டார். நிரந்தரமாய் உங்களுடன் இருப்பார்.” மீண்டும்

அவர் "உங்களை திக்கற்றவர்களாக விடேன். நான் உங்களிடம் வருவேன்" என்கிறார். பரிசுத்த ஆவியானவர் இல்லாவிடில் அவர்கள் கவனிப்பாரற்ற, உதவி செய்வாரற்ற, வழிகாட்ட ஒருவரும் இல்லாத அனாதைகளாக விடப்படுவார்கள் என்று அர்த்தம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர்களின் முழு தேவைகளும் சந்திக்கப்பட இருக்கிறது.

இதே அருளுரையில் இயேசு மீண்டும் சற்று நேரத்திற்குப் பின்பு இதையே கூறுகிறார்.

> *7நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.* (யோவான் 16:7)

இயேசு போகிறார் என்றாலும் வேறொருவர் அவர் இருந்த இடத்தில் வருகிறார். யோவான் **16:12-15** முதல் உள்ள வசனங்களில் இயேசு மீண்டும் இந்த முக்கிய காரியத்தைக் குறித்துப் பேசுகிறார்:

> *12இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.*
>
> *13சத்தியஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;* (பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை உறுதிப்படுத்தும்படியாகவே "அவர்" என்ற சொல்லை இயேசு பயன்படுத்துகிறார்) *அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*
>
> *14அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.*
>
> *15பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.*

அந்த வாக்குத்தத்தம் நிறைவேறியதால், பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது தனிப்பட்ட நிலையில் தெய்வத்துவத்தின் பூலோகப்பிரதிநிதியாக நம்மில் வசிக்கிறவர். அவர் விளக்கமளிப்பவர்; வெளிப்படுத்துபவர், பிதாவிற்கும் குமாரனுக்கும் காரியங்களை நிர்வகிப்பவர். இயேசு, "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்கிறார். "என்னிடத்தில் உள்ளது" என்று இயேசு கூறும் போது, "பிதாவினுடையதெல்லாம் என்னுடையது" என்று அவர்

கூறியதையும் மனதில் கொள்ள வேண்டும். ஆகவே பரிசுத்த ஆவியானவர் விளக்கமளிப்பவர்; வெளிப்படுத்துபவர்; பிதா, குமாரன் இவர்களுக்குள்ளதை நிர்வகிப்பவர். அவர்களுடையதெல்லாம் வெளிப்படுத்தப்பட்டு, விளக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரால் பராமரிக்கப்படுகிறது.

03

பெந்தெகொஸ்தேயில் நடந்தது என்ன

யோவான் ஸ்நானகன், இயேசுவை, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் கொடுப்பவர் என்று அறிமுகம் செய்ததை, நினைவில் கொண்டுவாருங்கள். இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் ஊழியத்திற்கும் போதனைக்கும் வல்லமை வழங்கியவர். இயேசு பரிசுத்த ஆவியானவரை முற்றும் சார்ந்திருந்தார். மூன்றாவதாக, பரலோகத்திற்குச் சென்ற பின்பு தம்முடைய ஸ்தானத்தில், பரிசுத்த ஆவியானவராகிய பாராகிளீட்டை, சொந்தப் பிரதிநிதியாக அனுப்புவதாக இயேசு வாக்களித்துள்ளார். அவர் ஆலோசகராக, தேற்றரவாளனாக, உதவியாளராக நம்முடன் இருந்து உதவி செய்யும்படி அனுப்பப்பட்டவர்.

இப்பொழுது நாம் இயேசு அளித்த வாக்குத்தத்தின் நிறைவேறுதலைக் காண்போம்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கியபொழுது நடந்த புதிய அற்புதமான காரியத்தை நாம் இங்கு ஆராய்வோம். வேதாகமத்தில் பல வாக்குத்தத்தங்களைப் போல பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய இந்த வாக்குத்தத்தமும் ஒரே செயலின் மூலம் முழுவதுமாக உணரப்படுவதில்லை. அது பல கட்டத்தில் நிறைவேறியது. இதன் முதற்பகுதி இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறு அன்று நடைபெற்றது. யோவான் 20:19-22ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

19 **வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால**

வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

[20]அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

[21]இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,

[22] அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் ... என்றார்.

இருபத்திரண்டாம் வசனம் ஒரு முக்கிய வாக்கியத்தை எடுத்துரைக்கிறது. கிரேக்கச் சொல்லான *"நியூமா"* என்பது "சுவாசம்," "காற்று" என்ற அர்த்தங்கள் உடையதாக இருக்கிறது. இயேசு அவர்கள் மேல் ஊதியது, அவர் பேசிய வார்த்தைகளுடன் சம்பந்தப்பட்டது - அவர் அவர்கள் மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார். (பரிசுத்த ஆவி, தேவனுடைய சுவாசக் காற்று.)

மீட்பில் உள்ள தேவனுடைய நோக்கத்தின் முக்கிய தீர்மானமான பகுதியாக இச்சம்பவம் உள்ளது. இந்த முக்கிய கட்டத்தில் நடந்ததென்ன? முதலாவதாக அவ்வேளையில் அந்த முதல் சீடர்கள் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பிற்குள் வந்தனர் என்று நான் கூறுவேன். ரோமர் 10:9ல் பவுல் இரட்சிப்படைவதற்கு தேவையான அடிப்படைக் காரியங்களைக் கூறுகிறார்.

[9]. . .கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

யோவான் 20:19-22ல் தான் சீஷர்கள் இயேசு தேவனால் உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை விசுவாசித்தார்கள். புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி அதுவரை அவர்கள் இரட்சிப்பிற்குள் பிரவேசிக்க முடியவில்லை. அவ்வேளை அவர்கள் இயேசுவைத் தங்கள் கர்த்தர் என்று அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிருடன் எழுப்பினார் என விசுவாசித்த பொழுது அவர்கள் புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பைப் பெற்றனர்.

இரண்டாவதாக சீஷர்களுக்கு நடந்த காரியம் அவர்கள் புது ஜீவனை பெற்றனர் அல்லது மறுபடியும் பிறந்தனர். அவர்கள் புது சிருஷ்டிகளானார்கள்.

தேவனுடைய ஊதப்பட்ட சுவாசத்தால் பழைய சிருஷ்டியாயிருந்த அவர்கள் ஒவ்வொருவரும் புதிய சிருஷ்டியாகும்படி கடந்து போயினர். இதைப் புரிந்து கொள்வதற்கு நாம் ஆதியாகமம் 2:7ல் ஆரம்ப காலத்தின் படைப்பைப் பற்றிய விளக்கத்தைக் காண வேண்டும்.

> [7]*தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*

தேவன் ஜீவ ஆவியை (ஜீவசுவாசத்தை அல்லது பரிசுத்த ஆவியை) களிமண்ணிலிருந்து உண்டாக்கிய உருவத்தில் ஊதியபொழுது மனிதரில் முதல் படைப்பு உண்டாயிற்று. பரிசுத்த ஆவியாகிய இந்த தேவனுடைய சுவாசம் களிமண் உருவத்தை ஜீவ ஆத்துமாவாக மாற்றியது. யோவானில் உள்ள இப்பகுதியைத்தான் 2 கொரிந்தியர் 5:17ல் பவுல் "*ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதிய சிருஷ்டியாக இருக்கிறான்*" என்று கூறுகிறார். முதற்படைப்பிற்கும் இந்தப் புதிய படைப்பிற்கும் ஒரு நேரிடையான இணைப்பு உள்ளது.

புதிய படைப்பிலே உயிர்த்தெழுந்த கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு பாவம், மரணம், நரகம், சாத்தான் ஆகியவைகளை வெற்றி சிறக்கின்றார். இதைச் செய்த பின்பு அவர் சீஷர்களுக்குத் தோற்றமளித்து உயிர்த்தெழுதலின் ஜீவனை அவர்களில் ஊதுகின்றார். இது ஒரு புதிய வாழ்வு. தீமை, மரணம், பாவம் என்னும் சக்திகளின் மேல் இந்த ஜீவன் வெற்றி சிறந்தது. இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்ட உயிர்த்தெழுதலின் ஜீவ ஆவியின் மூலம் சீஷர்கள் பழைய நிலையிலிருந்து மாறுபட்டு புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பிற்குள் வந்தனர்.

இந்த ஈஸ்டர் ஞாயிறு அனுபவத்திற்குப் பின்பும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கூறப்பட்ட முழு வாக்குத்தத்தமும் நிறைவேறவில்லை என்பதை நீங்கள் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசு லூக்கா 24:49ல் சீஷர்களுடன் கூறியதாவது:

> [49] *என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.*

உயிர்த்தெழுந்த ஞாயிறுக்கு நாற்பது நாட்களுக்குப் பின்பு பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு சற்று முன்பாக இயேசு அவர்களிடம் கூறியதாவது:

[4]அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 1:4)

இந்த வாக்குத்தத்ததின் முழுமையான நிறைவேறுதல், **உயிர்த்தெழுந்த ஞாயிறு** இல்லை என்பதை இதிலிருந்து நாம் காண்கிறோம். எல்லா வேத விளக்க உரையாளர்களும் இறையியல் நிபுணர்களும் இந்த வாக்குத்தத்தத்தின் முழு நிறைவேறுதல் அப்போஸ்தலர் **2:1-4**ல் கூறப்பட்டுள்ள **பெந்தெகொஸ்தே நாளில்** நிறைவேறியது என ஒப்புக்கொள்கின்றனர்.

[1]பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.
[2]அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.
[3]அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.
[4]அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

பெந்தெகொஸ்தே அந்த வாக்குத்தத்தத்தின் வெளிப்பாடும் நிறைவேறுதலுமாய் இருக்கிறது. பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தாமே வல்லமையான காற்றாக இறங்கி, ஒவ்வொருவரையும் நிரப்பி அவர்கள் கற்றிராத புதிய இயற்கைக்கு அப்பாற்பட்ட நவமான மொழியைப் பேசும்படி செய்தார்.

அப்போஸ்தலர் நடபடிகளின் இரண்டாம் அதிகாரத்தின் இறுதியில் என்ன நடந்தது என்பதற்கான இறையியல் விளக்கத்தைப் பேதுரு வழங்குகிறார்.

[32]இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.
[33]அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.
(அப்போஸ்தலர் 2:32–33)

மீண்டும் இவ்வசனத்தில் தெய்வீகத்தின் மூன்று நபர்களையும்

காண்கிறோம். குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியைப் பிதாவிடமிருந்து பெறுகிறார். அதை எருசலேமில் காத்துக் கொண்டிருந்த சீஷர்கள் மேல் பொழிகிறார். அந்தவேளையில் பரிசுத்த ஆவியானவரின் வருகையின் வாக்குத்தத்தத்தின் கடைசிக்கட்டம் நிறைவேறியது. பிதாவாலும் குமாரனாலும், பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தாமே வெளிப்படுத்தப்படுகிறார். எருசலேமில் காத்துக் கொண்டிருந்த சீஷர்கள் மேல் அவர் இறங்கினார்.

இந்த கட்டத்தில் இயேசு உயிர்த்தெழுந்தவராக மட்டுமல்ல உயர்த்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டவராகவும் இருக்கிறார். யோவான் 7:39ல் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் இயேசு மகிமைப்படும் வரை நிறைவேற்றப்படவில்லை என்று அந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் எழுதியுள்ளதை மனதில் கொள்ளுங்கள்.

நாம் இரு அற்புதமான ஞாயிறுகளைச் சந்திக்கின்றோம். முதலாவது ஈஸ்டர் ஞாயிறு அங்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவையும் ஊதப்பட்ட ஆவியையும் காண்கிறோம். இரண்டாவது பெந்தெகொஸ்தே ஞாயிறு அன்று மகிமை அடைந்த கிறிஸ்துவையும் ஊற்றப்பட்ட ஆவியையும் காண்கிறோம். இன்றும் இவைகள் எல்லா விசுவாசிகளுக்கும் மாதிரியாக உள்ளன.

உயிர்த்தெழுந்த ஞாயிறு	உயிர்த்தெழுந்த **கிறிஸ்து**	ஊதப்பட்ட ஆவியானவர்
பெந்தெகொஸ்தே ஞாயிறு	மகிமையடைந்த **கிறிஸ்து**	ஊற்றப்பட்ட ஆவியானவர்

நாம் இதுவரை கண்ட அனுபவத்தின் நிரந்தர முக்கியத்துவத்தை நாம் வரிசைப்படுத்திக் காண்போம். பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு ஒரு நபராக வந்தார். அவர் தற்சமயம் பூமியில் தங்கியிருக்கும் தெய்வத்துவத்தின் சொந்தப் பிரதிநிதி. தெய்வத்துவத்தின் ஒரு நபர் தான் பூமியில் தங்கியிருக்க முடியும் என்பது (நாம் விளக்கமளிக்க முடியாத) ஓர் சட்டத்தைப் போல் உள்ளது. சில ஆண்டுகளுக்கு அது குமாரனாகிய இயேசுவாக இருந்தது. ஆனால் இயேசு பரலோகத்திற்கு திரும்பினவுடன், அவர் இருந்த இடத்தில் வேறொரு நபர் வந்து நிரந்தரமாய் (சில ஆண்டுகளுக்கு அல்ல) அவர்களுடன் தங்குவார் என வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. குமாரானாகிய இயேசுயென்னும் நபர் பரலோகத்திலுள்ள பிதாவிடம் சென்றார். பின்பு பிதா மற்றும் குமாரன் இருவரிடமிருந்தும், பரிசுத்த

ஆவியானவர் வந்து இயேசு இருந்த இடத்தை எடுத்துக்கொண்டார்.

இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எங்கே வாழ்கின்றார்? இதற்கு இரண்டு பதில்கள் உண்டு. முதலாவது, அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வசிக்கின்றார். கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடம் பவுல் கூறுவதாவது:

> [16]*நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*
> 1 கொரிந்தியர் 3:16

இங்கு பவுல் விசுவாசிகளின் ஒருங்கிணைப்பான், பரிசுத்த ஆவியானவரின் ஆலயத்தையும் பற்றி பேசுகிறார்.

இரண்டாவதாக, **1** கொரிந்தியர் **6:19**ல் பவுல் இதை விட அதிசயமான காரியம் ஒன்றைச் சொல்கின்றார். விசுவாசிகளின் ஒருங்கிணைந்த ஆலயம் மட்டுமல்ல, தேவனுடைய சித்தத்தின்படி, ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியின் சரீரமும் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கின்றது.

> [19]*உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

இது வேதத்தில் நம்மை வியக்கச் செய்யும் ஆழமான உண்மை! இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாய் நாம் இருந்தால், நமது சரீரம் பரிசுத்த ஆவியாகிய தேவன் தங்கும் ஆலயமாக இருக்கிறது.

04

நம்மோடு வாசம் செய்கிற உதவியாளர்

பரிசுத்த ஆவியானவர் நமது "பாராகிளீட்டாக" வந்துள்ளார் என்பதின் உண்மையான அர்த்தம் என்ன? மீண்டும் யோவான் 14:16-18ல் உள்ள பகுதியில் இயேசு நமக்குத் திட்டமாகக் கொடுத்த வாக்குத்தத்தங்களைக் கவனிப்போம்.

> **[16]நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை (*பாராகிளீட்*) அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**
>
> **[17]உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.** (*இவ்வாக்குத்தத்தம் விசுவாசிகளுக்கு மட்டும் தான் உலகத்தாருக்கல்ல என்பதை நீங்கள் இங்கு காணலாம்*)
>
> **[18]நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**

கிரேக்கத்தை தோன்றும் இடமாகக்கொண்ட *"பாராகிளீட்"* என்ற வார்த்தை, ஆங்கிலத்தில் ஒலிவடிவமாக அப்படியே எழுதப்பட்டுள்ளது. *பாராகிளீட்* என்பவர் *உங்களுக்காக நீங்களே செய்துக்கொள்ள முடியாத ஒன்றை உங்களுக்காக செய்கிறவர்*. இதே கிரேக்க வார்த்தை 1 யோவான் 2:1ல் பயன்படுத்தப்பட்டுள்ளது:

[1]என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

இவ்வசனத்தில் வரும் "பரிந்து பேசுபவர்" *(Advocate)* என்பதே *"பாராகிளீட்"* என்பதின் மூலபதம். லத்தீன் மொழியிலிருந்து எடுக்கப்பட்ட *அட்வொகேட் (Advocate)* என்ற ஆங்கிலச் சொல்லில், *அட்* என்பது "நோக்கி" என்றும், *வொகேட்டா* என்பது "அழைக்கப்பட்டவர்" என்றும் அர்த்தமுடையவைகள். இலத்தீன் மொழியிலிருந்து உருவான எல்லா மொழிகளிலுமே, *அட்வொகேட்* என்ற பதம், ஒரு வழக்கறிஞரைக் குறிக்கும். நமது சார்பில் பரிந்து வாதாடுபவர் என்று இதற்குப் பொருள். நமது கலாச்சாரத்தில் நாமனைவரும் ஒரு வழக்கறிஞர் *(Advocate)*, அட்டார்னி *(Attorney)* அல்லது லாயர் *(Lawyer)* போன்ற பதத்திற்குரியவரின் பணியை நன்கு அறிவோம்.

வேதம் நமக்காகப் பரிந்து பேசும் இருவர் உண்டு என்னும் சத்தியத்தை அழகாக விளக்குகின்றது. இவ்வுலகில் பரிசுத்த ஆவியானவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமக்குச் சரியாகச் சொல்லத் தெரியாதவற்றை அவர் நமக்காகச் சொல்கிறார். நமக்குப் புரியாததை அவர் விளக்கித் தருகிறார். பரலோகத்திலே பிதாவிடம் இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமது வழக்குகளை அவர் பரிந்து பேசுகிறார். சர்வலோகத்தில் தலைசிறந்த இரண்டு பரிந்து பேசுபவர்கள் நமக்கு உண்டு. பிதாவின் வலது பக்கத்தில் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும், பூமியில் பரிசுத்த ஆவியானவரும் நமக்காகப் பரிந்து பேசுகின்றனர். இவ்விரு அட்டார்னிகளை அல்லது வழக்கறிஞர்களைக் கொண்ட நாம் எப்படி நமது வழக்கில் தோற்றுப் போக முடியும் ?

இந்த வழக்கறிஞரைக் குறித்து இயேசு கூறியதை நான் விரிவாக விளக்குகிறேன். இவர் நமது *பாராகிளீட்*, நமது அட்டார்னி, தேற்றரவாளன், ஆலோசகர், உதவியாளர். யோவான் **14:16-18**ல் இயேசு முன் கூறியவைகளை குறித்து நான் சில வார்த்தைகளை கூறுவேன்.

"பிதா உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனை தந்தருளுவார்." "வேறொரு" என்னும் வார்த்தையின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அது ஒரு நபரைக் குறிக்கின்றது. இயேசு சொன்னார், "நான் ஒரு நபர். நான் போகிறேன். நான் போன பின்பு வேறொரு நபர் உங்களுக்கு உதவியாளராக வருவார். நான் இங்கு இருந்த நாட்களில் உங்கள் உதவியாளராக இருந்தேன். ஆனால் இப்பொழுது கடந்து போகிறேன். உதவியற்றவர்களாக நீங்கள் விடப்படுவதில்லை. வேறொரு உதவியாளர் உங்களுக்கு வருவார்."

“அவர் என்றென்றைக்கும் உங்களுடன் கூட இருப்பார்.” இயேசு “நான் உங்களுடன் மூன்றரை ஆண்டுகள் இருந்தேன், நான் போகிறேன். மனந்தளர வேண்டாம், ஏனென்றால் நான் இருந்த இடத்திலே வேறொருவர் வருகிறார். அவர் உங்களைவிட்டுப் போவது இல்லை. அவர் உங்களுடன் நிரந்தரமாய் இருப்பார்” என்று கூறினார்.

“அவர் உங்களுடன் வாசம் பண்ணி உங்களுக்குள்ளேயிருப்பார்.” “உங்களுக்குள்ளே” என்ற பதம் மிகவும் முக்கியமானது. அந்த வழக்கறிஞர் அல்லது தேற்றரவாளன் நம்மிலே வாழப்போகிறார். நாமே அவர் தங்கும் இடத்தின் முகவரி.

“உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்.” அவர் அவர்களுக்கு செய்ய வேண்டியவற்றை செய்யாமற்போயிருந்தால், சீஷர்கள் தங்களைக் கவனிப்பாரற்று, உதவுவாரற்று, விளக்கம் அளிப்பாரற்று அனாதைகளாக விடப்பட்டிருப்பார்கள்.

“நான் உங்களிடத்திற்கு வருவேன்.” இது மிகவும் முக்கியமானதாகும். கிறிஸ்து பரிசுத்த ஆவியானவர் மூலமாக சீஷர்களிடத்திற்கு வருகிறார். சரீரப்பிரகாரமாக பூமியில் இருந்த பொழுது, இயேசு ஒரு நேரத்தில் ஓரிடத்தில்தான் இருக்க முடிந்தது. அவர் பேதுரு அல்லது யோவான் அல்லது மகதலேனா மரியாளிடம், ஒரு நேரத்தில் ஒருவரிடம் மட்டும் தான் பேசமுடிந்தது. ஆனால் அவர்கள் மூவருடன் ஒரே நேரத்தில் அவர் பேச முடியவில்லை. அவர் காலம், இடம் என்பவைகளால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் மூலமாக தம்முடைய மக்களிடம் வரும்பொழுது அவர் காலம், இடம், என்னும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார். அவர் ஆஸ்திரேலியாவிலுள்ள தேவையுள்ள ஒரு தேவபிள்ளையுடன் பேசக்கூடும்; அமெரிக்க ஐக்கிய நாட்டிலே ஒரு பிரசங்கியாரை அபிஷேகம் செய்யக்கூடும், அவர் அதே நேரத்தில் பாலைவனத்திலோ ஆப்பிரிக்கக்காட்டிலோ ஒரு மிஷனெரியை பெலப்படுத்தி சுகப்படுத்திக் கொண்டிருக்க முடியும். அவர் கட்டுப்பாட்டைக் கடந்தவர். அவர் மீண்டும் வந்துள்ளார், ஆனால் காலம் இடம் என்னும் கட்டுப்பாட்டைக் கடந்தவராக வந்துள்ளார்.

நபர்களின் பரிமாற்றம், அதாவது ஒருவர் சென்று மற்றவர் வருவதைக் குறித்து இன்னும் விவரிக்க விரும்புகிறேன். யோவான் 16:5-7 இயேசு கூறுகிறதை கவனியுங்கள்:

> **[5]இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.**
>
> **[6]ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.**

> [7]நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

இது மிகவும் தெளிவாக இருக்கிறது. இயேசு சொன்னார் நான் உங்களுடன் பூமியில் ஒரு நபராக இருக்கும் நாள்வரை, பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தில் தான் இருக்க வேண்டும். ஆனால் ஒரு நபராக இருக்கும் நான் சென்றால் அப்பொழுது என்னுடைய இடத்திலே பரிசுத்த ஆவி என்னும் வேறொருவரை அனுப்புவேன். அது தெய்வீக நபர்களின் பரிமாற்றம். கொஞ்சக்காலத்துக்கு, குமாரனாகிய நபர் பூமியில் இருந்தார். பின்பு தன் ஊழித்தை முடித்து பரலோகத்திற்குச் சென்றார். அவர் இருந்த இடத்தில், பரிசுத்த ஆவியானவர் (அடுத்த தெய்வீக நபர்) வந்து இயேசு ஆரம்பித்த ஊழியத்தைத் தொடர்ந்தார்.

நம்முடைய நன்மைக்காவே இயேசு போவதாகக் கூறினார். கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் "நான் போவது உங்களுக்கு பயனுள்ளதாயிருக்கும்" என்று எழுதியிருக்கிறது. இது ஒரு அற்புதமான வாக்கியம். இயேசு பூமியிலும் பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலும் இருப்பதை விட, இயேசு பரலோகத்திலும் பரிசுத்த ஆவியானவர் பூமியிலும் இருப்பது நமக்கு மிகவும் சிறந்தது. "நான் மட்டும் இயேசு வாழ்ந்த நாட்களில் வாழ பாக்கியம் பெற்றிருந்தால்" என கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் கூறுவது உண்டு. ஆனால் இயேசுவோ "நீங்கள் இப்போது வாழ்வது தான் சிறந்தது. நான் பரலோகத்திலும் பரிசுத்த ஆவியானவர் பூமியிலும் இருக்கும் பொழுது அதிகம் பெறுவீர்கள்" எனக் கூறுகிறார்.

இதை நான் ஆரம்ப கால சீஷர்களின் அனுபவத்திலிருந்து விளக்குகிறேன். பரிசுத்த ஆவி வந்தபொழுது என்ன நடந்தது என்று கவனியுங்கள். மூன்று நற்பலன்களைப் பெற்றார்கள்:

முதலாவதாக, அவர்கள் தேவனுடைய திட்டத்தையும் இயேசுவின் ஊழியத்தையும் நன்கு புரிந்து கொண்டனர். இயேசு தங்களோடிருந்த போது புரிந்துக் கொண்டதை விட அதிகம் புரிந்துக்கொண்டனர். புரிந்துக்கொள்வதில் மந்தமாயும், தாமதிக்கிறவர்களாயும் இருந்த அவர்கள், பரிசுத்த ஆவியானவர் வந்தவுடன் இயேசுவின் ஊழியத்தையும் செய்தியையும், முற்றிலும் வேறுப்பட்ட நிலையில் அறிந்துக்கொண்டது, வியப்பை அளிக்கின்றது.

இரண்டாவதாக, அவர்கள் மிகுந்த தைரியமுடையவர்களாய் மாறினர். உயிர்த்தெழுதலுக்குப் பின்பும் யூதர்களுக்குப் பயந்து, பூட்டப்பட்ட கதவுகளுக்கு பின் ஒளிந்து கொண்டனர். பிரசங்கம் பண்ணவோ

சத்தியத்தை அறிவிக்கவோ விருப்பமுமில்லை ஆயத்தமுமில்லை. பரிசுத்த ஆவியானவர் வந்த நிமிடமே இதெல்லாம் மாறினது. பேதுரு தைரியத்துடன் நேரிடையாக எருசலேமில் உள்ள யூத மக்களைப் பார்த்து இயேசுவின் முழு வாழ்க்கை வரலாற்றையும் கூறி, அவர் சிலுவையில் அறையப்பட்டதின் குற்றத்தை அவர்கள் மேல் சுமத்தினார்.

மூன்றாவதாக, தெய்வீக உறுதிப்பாடு உண்டானது. பரிசுத்த ஆவியானவர் வந்தவுடன், அற்புதங்கள் நடைபெற ஆரம்பித்தன. இயேசுவே மீண்டும் அவர்களுடன் ஒரு நபராக வந்ததுபோல இருந்தது. ஏனென்றால் இயேசு, “பரிசுத்த ஆவி வரும் பொழுது நான் அவரில் உங்களிடம் வருவேன். நான் உங்களுடன் இருப்பேன். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்” என்று கூறியிருந்தார்.

05

தேவனுடைய வசனத்தின் வெளிப்பாடு

பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார், ஆறுதல் அளிக்கிறார், நமது எல்லாத் தேவைகளையும் திட்டமாய்ச் சந்திக்கிறார். இதில் முதலாவது நாம் கவனிக்க வேண்டியது தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடு ஆகும். தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்தி விளக்கம் தருபவர் பரிசுத்த ஆவியானவர். யோவான் 14:25-26ல் இயேசு தமது சீஷர்களிடம் கூறுகிறார்:

> **25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.**
> **26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.**

26ம் வசனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆவியானவரின் இருசெயல்பாடுகள் முக்கியமானவை. அவர் நினைவுபடுத்துபவர்; அவர் போதிக்கிறவர். இயேசு சீஷர்களுக்கு ஏற்கனவே சொல்லிக் கொடுத்ததை அவர் அவர்களுக்கு நினைவுபடுத்துவார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் எழுதினவைகள் மனித ஞாபகசக்தியின் பெலவீனத்துக்கு உட்பட்டவைகள் அல்ல, ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவை என்பதே இதன் அர்த்தமாகும். அப்போஸ்தலர் சில காரியங்களை சரியாக நினைவிற்குக் கொண்டு வர முடியாமலிருந்திருக்கலாம், ஆனால் எவைகளை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டியதிருந்ததோ, ஆவியானவர் தாமே அவற்றை அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார்.

எனினும் கடந்த காலத்தை மட்டுமல்ல, வருங்காலத்தையும் கவனித்துக் கொண்டார். அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது அனைத்தையும் அவர் அவர்களுக்குக் கற்றுத் தந்தார். இன்று, நம்மை குறித்தும் இது உண்மையாக உள்ளது. பூமியில் அவர் நமது தற்கால ஆசிரியர். இயேசு உலகத்தில் இருந்தபொழுது பெரிய போதகராக இருந்தார். தமது சொந்த பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவியானவரிடம் அவர் தற்சமயம் இந்தப் பொறுப்பைக் கொடுத்துள்ளார். தேவனுடைய வசனத்தைப் பற்றி நாம் அறிய வேண்டியவைகள் எவைகளோ, அவைகளை நமக்குப் போதிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறார்.

இது சீஷர்களை பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்குச் சமமாக்கியது. திர்க்கதரிசிகளைக் குறித்து 2 பேதுரு 1:21ல் பேதுரு எழுதுகிறார்:

> **21 *தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.***

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் துல்லியமும் அதிகாரமும், பரிசுத்த ஆவியானவரினுடையதாக இருந்தது. அவர் அவர்கள் மேல் தங்கியிருந்த போது, அவர்கள் கூறிய யாவற்றுக்கும் பொறுப்பாளியாய் இருந்தார். அவர்களை ஏவி அவர்களை நடத்தியும் வந்தார். இது புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களைக் குறித்தும் உண்மையாகவே உள்ளது. தாம் கூறின யாவையும் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் திட்டமாக நினைவுபடுத்துவது மட்டுமல்லாமல், இன்னும் அவர்கள் அறிய வேண்டிய யாவையும் அவர்களுக்குக் கற்றுத் தருவார் என்பதை, இயேசு உறுதிச் செய்தார். பழைய, புதிய ஏற்பாடுகளின் எழுத்தாளராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். இதைப் பவுல் மிகத் தெளிவாக 2 தீமோ. 3:16–17ல் கூறுகிறார்.

> **16 *வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது...* 17 *அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக் கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கிறது.***

வேறொரு மொழி பெயர்ப்பு “ஏவப்பட்டு” என்று கூறுகிறது. எனினும் “ஏவப்பட்டது” என்றாலும் “தேவனால் அருளப்பட்டது” என்றாலும் அது ஆவியானவரின் செயல்பாட்டையே குறிக்கின்றது. எல்லா வேத வசனங்களையும் மனித கருவிகள் மூலம் அருளினவர் ஆவியானவரே.

தேவனுடைய பரிபூரணப் பராமரிப்பு என் உள்ளத்தைப் பரவசப் படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் எழுத்தாளராக இருக்கிறார்; வேதத்தை நமக்குப் தனிப்பட்ட முறையில் போதிப்பவரும் அவரே. ஆகவே

எழுத்தாளரே அதை நமக்கு விளக்கித் தருபவராயிருக்கிறார். ஒரு நூலை எழுதியவரை விட அதைச் சிறந்த முறையில் விளக்கக் கூடியவர் யார்? நான் சுமார் **60** புத்தகங்களை எழுதியிருக்கிறேன். மற்றவர்கள் என் புத்தகத்தில் உள்ளவற்றிற்கு விளக்கமளிப்பதை நான் கேட்டிருக்கிறேன். அநேக நேரங்களில் அவர்கள் அதை திறம்படவே விளக்குகிறார்கள், எனினும் "நீங்கள் அதைக் கவனிக்கத் தவறிவிட்டீர்கள்" அல்லது "அதைச் சரியாகக் கூறவில்லை" என்று நான் எப்போதும் நினைப்பது உண்டு. இந்தச் சூழ்நிலையில் வேதத்தின் எழுத்தாளராகிய பரிசுத்த ஆவியானவரே அதற்கு விளக்கமளிப்பவராகவும் இருக்கிறார். அவர் ஒன்றையும் தவற விடுவதில்லை. அவர் எல்லாவற்றையும் சரியாக அறிந்திருக்கிறார். அவர் சொல்வதைக் கேட்டு அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்வோமானால், வேதம் நமக்கு என்ன சொல்கிறது என்பதை அறிந்து கொள்வோம்.

பெந்தெகொஸ்தே நாளில் ஏற்பட்ட உடனடி விளைவு வேதத்தின் வெளிப்பாடு. பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டபொழுது அவிசுவாசிகள் அவர்களை பார்த்து "குடித்து வெறித்திருக்கிறார்கள்!" என்றனர். ஆனால் பேதுரு எழுந்திருந்து:

> *15 "நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே.*
> *16 தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது....." என்றார்.* (அப்போஸ்தலர் 2:15–16)

அந்த நேரம் வரை யோவேலின் தீர்க்கதரிசனத்தைக் குறித்து பேதுருவுக்கு எந்த உணர்வுமில்லை. சொல்லப்போனால் இயேசுவின் போதனைகளையே அவர் ஓரளவிற்குத் தான் புரிந்து கொண்டிருந்தார். ஆனால் பரிசுத்த ஆவி வந்த பொழுது, வேதாகமம் புதிய அர்த்தத்தில் விளங்க ஆரம்பித்தது. ஏனென்றால் அதன் எழுத்தாளர் அதனை விளக்க அங்கு இருந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் இது உண்மையாக உள்ளது. அவர் சபையைத் துன்பப்படுத்தி, இயேசுவைக் குறித்த சாட்சியை தள்ளினவராக இருந்தார். அப்போஸ்தலர் 9:17ல்:

> *17 "அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, (பவுல் இருந்த வீடு) அவன் மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, (பின்பு பவுலாக மாறியவர்) நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்."*

உடனடியாக, பவுல் இயேசுவை தேவனுடைய குமாரனாக தேவாலயங்களில் பிரசங்கிக்க ஆரம்பித்தார்; எதை மறுத்து வந்தாரோ அதையே பிரசங்கிக்க ஆரம்பித்தார். பரிசுத்த ஆவி அவருக்குள் வந்ததும் அவர் காரியங்களை புதிய முறையில் அறியலானார். இருளிலிருந்து ஒளிக்குள் வருவது போன்றதொரு மாற்றம் அவருக்கு ஏற்பட்டது. வேதத்தின் எழுத்தாளரும், விளக்க உரையாளருமான பரிசுத்த ஆவியானவர் பவுலிடம் இருந்ததால் ஒரு பெரிய மாற்றம் உடனடியாக உண்டாயிற்று, இதற்கு வெகு காலம் தேவைப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தை விளக்குபவராகவும், வெளிப்படுத்துபவராகவும் இருக்கிறார் என்று கூறும் போது, தேவனுடைய வார்த்தையென்பது, வேதாகமம் மட்டுமல்ல, இயேசுவும் தேவனுடைய வார்த்தையென்று அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யோவான் **1:1**ல் நாம் இயேசுவைக்குறித்து:

> [1]*"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது"*

என்று பார்க்கிறோம்.

இந்த வசனத்தில் மூன்று முறை இயேசு ''வார்த்தை'' என்று அழைக்கப்பட்டிருக்கிறார். யோவான் **1:14** கூறுகிறது:

> [14]*அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

வேதாகமமாகிய திருவசனம் எழுதப்பட்ட தேவவார்த்தை; இயேசு தேவனுடைய சொந்த வார்த்தையாக உள்ளார். இவ்விரண்டும் வியக்கத்தக்க விதமாய் ஒன்றோடொன்று இசைவாய் உள்ளன.

பரிசுத்த ஆவியானவர் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்தி விளக்குவது மட்டுமல்லாமல், தேவனுடைய சொந்த வார்த்தையாகிய இயேசுவையும் அவர் வெளிப்படுத்தி, விளங்கப்பண்ணுகிறார். இயேசு பரிசுத்த ஆவியைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

> [12]*இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.*
>
> [13]*சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும்*

உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.
[14]அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.
[15]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். (யோவான் 16:12–15)

இயேசு எல்லாவற்றையும் சொல்லித்தர முயற்சிக்கவில்லை என்று 12ம் வசனம் கூறுகிறது. அதை பரிசுத்த ஆவியானவர் செய்வார் என்ற உறுதி அவருக்கு இருந்தது. பரிசுத்த ஆவியானவர் வருகிறார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். பரிசுத்த ஆவி வரும் பொழுது என்ன செய்வார் என்பதை அவர் விளக்கிக் கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவுக்குச் சொந்தமானதை எடுத்து நமக்குத் தெரிவிக்கிறார். இயேசுவை நம்மில் மகிமைப்படுத்துகிறார். இயேசுவை தமது முழு மகிமையில் நமக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறார். இயேசுவினுடைய சுபாவம், பண்பு, ஊழியம் இவைகளின் முழுமையை பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேலும், சீஷர்கள் மேலும் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் இறங்கிய பொழுது, இயேசு எங்கேயிருக்கிறார் என்பதை குறித்து அவர்களுக்கு எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. அவர் பிதாவின் வலதுபக்கத்தில் மகிமையுடன் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்தார்கள். சீஷர்களின் வாழ்வில் இயேசுவை பரிசுத்த ஆவியானவர் மகிமைப்படச்செய்தார். சீஷர்களுடைய ஞாபகத்திலும் அவர்கள் இயேசுவோடு கொண்டிருந்த தொடர்பிலிருந்தும் பல காரியங்களை அவர் எடுத்து, அதை வேதாகமத்தில் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப்பட்ட காரியங்களோடு இணைத்து சீஷர்களுக்கு அதை வெளிப்படுத்தினார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வெளிப்படுத்தி மகிமைப்படுத்துகிறார். அவர் பிதாவின் செல்வங்களையும் குமாரனின் செல்வங்களையும் நிர்வகிப்பவர்; ஏனென்றால் பிதாவுக்குச் சொந்தமானதெல்லாம் குமாரனுக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குமாரனுக்குச் சொந்தமானதை பரிசுத்த ஆவியானவர் நிர்வகிக்கின்றார். வேறு விதமாய் சொன்னால் தெய்வத்துவத்தின் சம்பத்துக்களெல்லாம் பரிசுத்த ஆவியானவராலே நிர்வகிக்கப்படுகிறது. அவர் நம்முடைய நிர்வாகியாய் இருப்பதால், நாம் அனாதைகளாக இருக்கத் தேவையில்லை. ஏனென்றால் தேவனுடைய சொத்துக்கள் எல்லாம் அவரிடம் உள்ளன.

06

இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திற்கு உயர்த்தப்படுதல்

பரிசுத்த ஆவியானவர் வருவதால் ஏற்படக்கூடிய அடுத்த பிரதான விளைவு என்னவென்றால் நாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திற்கு உயர்த்தப்படுவோம். எபிரெயரின் நிருபத்தில் வரும் இரண்டு முக்கிய வசனங்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் சிறப்பு நிலையை விளக்குகிறது. (எபிரெயர் 6:4-5)

4 ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,
5 தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,

இங்கு புதிய ஏற்பாட்டு விசுவாசிகளைக் குறித்து ஐந்து காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முதலாவது, விசுவாசிகள் “பிரகாசிப்பிக்கப்பட்டவர்கள்.”

இரண்டாவதாக, “பரம ஈவை ருசிபார்த்தவர்கள்.” இது இயேசுவில் கிடைக்கும் நித்திய ஜீவனின் ஈவைக் குறிக்கிறது என விசுவாசிக்கிறேன்.

மூன்றாவதாக, “பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள்.”

நான்காவதாக, “தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தவர்கள்” - அதாவது தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு ஜீவனும், உண்மையுமாய் இருக்கிறது.

ஐந்தாவதாக, "இனி வரும் உலகத்தின் பலன்களை ருசிபார்த்தவர்கள்."

எல்லா கிறிஸ்தவர்களும், இனி வரும் யுகத்தில் முற்றிலும் மாறுபட்ட நிலையில் செயல்படுவார்கள் என விசுவாசிக்கின்றனர். மாம்சீக சரீரத்தின் கட்டுபாடுகளிலிருந்து விடுதலை பெற்றவர்களாய், புதிய சரீரத்துடன் முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை முறை உடையவர்களாய் இருப்போம். ஆனால் அநேக கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவர் மூலமாய், வரப்போகும் இவ்வாழ்கை முறையின் ருசியை இவ்வுலகிலேயே பெற முடியும் என்பதை அறியாதிருக்கிறார்கள். நாம் *"இனிவரும் உலகத்தின் பலன்களை ருசிபார்க்கக்"* கூடும். அவைகள் ருசிபார்க்க முடியுமே தவிர அவைகளை முற்றிலும் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது; இனி வரும் வாழ்வு எப்படி இருக்கும் என்பதை இவ்வுலக வாழ்க்கையிலேயே நாம் சிறிது அறிந்து கொள்ள முடியும்.

பவுல் இதைக் குறித்து ஒரு முக்கிய காரியத்தைச் சொல்லுகிறார். எபேசியர் 1:13-14ல் அவர் விசுவாசிகளுக்கு இவ்வாறு எழுதுகிறார்:

> ***13*நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.**
> ***14*அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.**

இங்கு *"அச்சாரம்"* என்பது பரவசமூட்டும் ஓர் வார்த்தை. பரிசுத்த ஆவியானவர், வருங்காலத்திற்கென்று தேவன் நமக்குள் தற்காலத்தில் கொடுத்த வைப்பு நிதி. இந்த வார்த்தையைக் குறித்து நான் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். கிரேக்கத்தில் இந்த வார்த்தை *"அரபான்"* என்பதாகும். இது ஒரு எபிரெய சொல்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக, சுமார் 1946ம் ஆண்டில், நான் எருசலேமில் வசித்து வந்தேன். அந்நாட்களில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் *அரபான்* அல்லது *"வைப்பு"* என்பதை அழகாக விளக்குகிறது. நானும் என் மனைவியும் எருசலேமின் பழைய பகுதிக்கு திரைகள் (Curtains) வாங்கச் சென்றோம். எங்களுக்குப் பிடித்தமான திரையைத் தெரிந்தெடுத்து அதன் விலை என்னவென்று கேட்டோம். (அது ஒரு முழம் ஒரு டாலர் என்று வைத்துக் கொள்வோம்) "எங்களுக்கு 50 முழம் தேவை" என்று அந்த மனிதரிடம் சொன்னோம். அவன் இதன் விலை 50 டாலர்கள் என்று சொன்னான். "நல்லது, இப்பொழுது என்னிடம் 50 டாலர்கள் இல்லை. இந்த 10 டாலர்களை வைப்பு தொகையாக பெற்றுக் கொள்ளுங்கள். இப்பொழுது இந்த துணி எனக்கு சொந்தமாய் உள்ளது

இதை எடுத்துத் தனியாக வையுங்கள். இதை விற்க உங்களுக்கு உரிமை இல்லை. நான் மீண்டும் வந்து பாக்கி பணத்தை செலுத்தி விட்டு இத்திரையை எடுத்துக் கொண்டு போகிறேன்" என்றேன். இது தான் *அரபான்* என்னும் வார்த்தையின் அர்த்தம்.

பரிசுத்த ஆவியானவர், கர்த்தர் நம்பேரில் செலுத்தின வைப்பு தொகையாவார். பரிசுத்த ஆவியானவரை நமக்கு கொடுப்பதன் மூலம், தேவன் இனி வரும் வாழ்க்கைக்கு, ஓர் பகுதி கிரயத்தை இப்போதே செலுத்தி விடுகிறார். அந்த கிரயத்தை பெற்றவுடன், நாம் அத்திரைச்சீலையைப் போல் மாறுகிறோம். நாம் பிரிதெடுக்கப்பட்டு, வேறு யாருக்கும் விற்கப்பட முடியாத நிலையிலுள்ளோம். அவர் மீண்டும் வந்து மீதிக் கிரயத்தைச் செலுத்தி நம்மை சொந்தம் பாராட்டுவார் என்ற உறுதி உண்டாகிறது. இதைத்தான் பவுல் *"தேவனுக்கு சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள்"* என்று சொல்லுகிறார். நாம் ஏற்கெனவே அவருக்குச் சொந்தமானவர்கள். ஆனால் வைப்பு தொகை மட்டும் தான் இப்போது செலுத்தப்பட்டுள்ளது. பூரண கிரயம் இனி செலுத்தப்படும்.

வருங்கால வாழ்விற்கு தேவன் செலுத்திய முன் கிரயமே பரிசுத்த ஆவியானவர். இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வு நம்முடைய அனுபவத்தின் எல்லா பகுதியையும் உட்படுத்துகிறது.

பெந்தெகொஸ்தேயின் நோக்கங்கள் என்னும் என்னுடைய புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை மேற்கோளாக காட்ட விரும்புகிறேன். அதில் நான் இவ்வாறு எழுதியுள்ளேன்:

திறந்த மனதுடன் புதிய ஏற்பாட்டினை படித்தால் ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் வாழ்வும், அனுபவமும் எல்லா விதத்திலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களால் நிறைந்திருந்ததென்பதை நாம் நிச்சயம் ஒத்துக் கொள்வோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள், தற்செயலாய் நிகழ்ந்தவைகளோ, கூடக் கொடுக்கப்பட்டவைகளோ அல்ல, கிறிஸ்தவர்களுடைய முழு வாழ்க்கையிலிருந்தும் பிரிக்க முடியாத ஒன்றாய் இருந்தன. அவர்கள் ஜெபம் இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது, அவர்கள் பிரசங்கம் இயற்கைக்கு அப்பாற் பட்டதாய் இருந்தது, அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாய் வழிநடத்துதலை பெற்றார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை பெற்றார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாய் ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட பாதுகாப்பைப் பெற்றார்கள்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களை அப்போஸ்தல நடபடிகளிலிருந்து எடுப்போமானால் அது அர்த்தமற்றதாய் அல்லது பொருளில் இணைப்பற்றதாய் காணப்படும். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டதிலிருந்து, அதற்குப் பின் வரும்

ஒவ்வொரு அதிகாரத்திலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் முக்கியத்துவம் பெறாத ஓர் அதிகாரத்தை கூட காண முடியாது.

அப்போஸ்தலர் 19:11ல் கவனத்தை ஈர்த்து, சிந்திக்கச் செய்யும் ஓர் வாக்கியம், எபேசு பட்டணத்தில், பவுல் செய்த ஊழியத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது:

> *11 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.*

“விசேஷித்த அற்புதங்கள்” என்ற பதத்தின் அர்த்தத்தைக் சிந்தித்து பாருங்கள். கிரேக்க பதத்தை மொழிப்பெயர்த்தால், ‘‘நாடோறும் சாதாரணமாய் நடைபெறாத சிறப்பு அற்புதங்கள்” எனக் கூறலாம். ஆரம்பக் கால திருச்சபையில், அனுதினமும் அற்புதங்கள் நிகழ்ந்தன. ஆகவே அவைகளை குறித்து அவர்கள் ஆச்சரியப்படவோ விமரிசிக்கவோ மாட்டார்கள். ஆனால் பவுல் மூலமாய் எபேசு பட்டணத்தில் நடந்த அற்புதங்கள், ஆதி திருச்சபைக்கே விசேஷமாய் இருந்த படியால் தான் அவைகள் இங்கே குறிப்பாக சுட்டி காண்பிக்கப்பட்டுள்ளன.

நமது காலத்தில் “இது என்றுமே நடைபெறாத ஓர் அற்புதம்” என்று சொல்லக்கூடிய சந்தர்ப்பம் வருகிறதா? எத்தனை திருச்சபைகளில் அற்புதங்கள் நடைபெறுகிறது? அனுதினமல்ல, எப்போதாவது நடைபெறுகிறதா?

இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவம், ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் வாழ்க்கையிலே, அவர்கள் பெற்றுக் கொண்ட வழி நடத்துதலிலே, சிறப்பாக வெளிப்பட்டது. அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் பவுலும், அவனுடைய உடன் ஊழியக்காரர்களும், ஏறெடுத்த இரண்டாம் மிஷனெரி பிரயாணத்தை காண்கிறோம். இன்று ஆசியா மைனர் என்றழைக்கப்படும் இடத்தில் அவர்கள் இருந்தார்கள். அவர்களைப் பற்றி வேதம் இவ்வாறு கூறுகிறது:

> *6 அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,*
> *7 மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அப்போஸ்தலர் 16:6-7*

அவர்கள் மேற்கு பகுதிக்கு செல்ல முற்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களை அனுமதிக்கவில்லை. பின்பு வடகிழக்கு திசைக்குச் செல்ல முற்பட்ட பொழுது அதற்கும் பரிசுத்த ஆவியானவர்

“வேண்டாம்” எனக் கூறிவிட்டார். அப்போஸ்தலர் 16:8-10ல் தொடர்கிறது:

> [8]அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.
> [9]அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது.
> [10]அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணி,

இது ஒரு மிக முக்கியமான சம்பவம். பரிசுத்த ஆவியானவர் ஈடுபட்டு எப்படி இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் வழிநடத்துகிறார் என்பதற்கு ஓர் உதாரணம். பூகோளத்தின் அடிப்படையில் அவர்கள் மேற்கு பகுதியான ஆசியாவிற்கோ அல்லது தென்கிழக்கு பகுதியான பித்தினியாவிற்கோ இயற்கையாக சென்றிருக்க வேண்டும். ஆனால் இயற்கைக்கு மாறாக, அவர்கள் இவ்விரு பகுதிகளையும் கடந்து, வடமேற்கு திசையை நோக்கி ஐரோப்பா கண்டத்திற்குள் செல்ல வழி நடத்தப்பட்டார்கள்.

அதற்கு பின் வந்த காலத்தில், திருச்சபையின் சரித்திரத்தை கவனித்தால், ஐரோப்பா கண்டம் ஒரு ஒப்பற்ற பணியைச் செய்ததென்று காண்போம். முதலாவதாக, இருண்ட காலத்தில் சுவிசேஷத்தை பாதுகாத்தது. இரண்டாவதாக, அநேக ஆண்டுகளுக்கு தேவனுடைய வார்த்தையைப் பல நாடுகளுக்கும் அனுப்பும் முக்கிய கண்டமானது. தேவன் அநேக நூற்றாண்டுகளை மனதிற்கொண்டு தமது தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றினார். இயற்கையின் சிந்தனையின் படி பவுலும், அவனுடைய உடன் ஊழியர்களும் இதை அறிந்திருக்க முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட வழிநடத்துதலினால் தேவனுடைய முழு நோக்கத்திற்குள்ளே பூரணமாய் அவர்கள் கடந்து சென்றனர். இப்படிப்பட்ட இயற்கைக்கப்பாற்பட்ட வழிநடத்துதல் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்டதினால் சரித்திரம் முழுவதுமே பாதிக்கப்பட்டது. ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட செயற்பாடு இருந்தது என்பதற்கு இது ஓர் சிறிய உதாரணமே.

07

ஜெபத்தில் உதவி

மூன்றாவதாக பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபத்தில் முக்கியமான விதத்தில் உதவி செய்கிறார். ரோமர் 8:14ல் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு எப்படி வழி நடத்துகிறார் என்பதைப் பவுல் கூறுகிறார்:

> **14மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.**

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதற்கு அவன் தேவனுடைய ஆவியினால் பிறக்க வேண்டும். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, மறுபிறப்பின் அனுபவத்திலிருந்து நீங்கள் முதிர்ச்சி அடைய கடந்து போக வேண்டுமாயின் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவராலே வழிநடத்தப்பட வேண்டும். *"எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்"* என்று தொடரும் நிகழ்கால வினைச்சொல்லைப் பவுல் பயன்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்கள் குழந்தைகள் அல்ல. வளர்ச்சி அடைந்த குமாரரும், குமாரத்திகளுமாய் இருக்கின்றனர்.

மேலும் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பவுல் பரிசுத்த ஆவியானவர் சிறப்பாக நம்மை ஜெப வாழ்க்கையில் நடத்தும் முறையை விளக்குகின்றார். சரியான விதத்தில் ஜெபிக்க, ஆவியானவராலே வழிநடத்தப்படுவதின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கின்றார் (ரோமர் 8:26-27).

> **26அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது**

இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.
27 *ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

இங்கு பவுல் ஒரு பெலவீனத்தைக் குறித்துப் பேசுகின்றார். அது சரீர பெலவீனமல்ல, மனதிலும் அறிவாற்றலிலும் உள்ள பெலவீனம். எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் நமக்கு தெரியாது.

எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் தெரிந்தவர்கள் கரங்களை உயர்த்துங்கள் என்று பல சபையின் மக்களைப் பார்த்து நான் சவால் விட்டிருக்கின்றேன். இந்த சவாலை ஏற்றுக் கொண்டு இதுவரை ஒருவரும் தம் கரத்தை உயர்த்தியதில்லை. நாம் ஜெபிக்க விரும்பும் போது எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியாத அறிவற்றவர்களாய் இருக்கிறோம் என்பதை நாம் உண்மையாய் ஒப்புக் கொள்வோம் என்று நான் நினைக்கிறேன். சில வேளைகளில் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரிந்திருந்தாலும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை தெரியாதிருக்கிறோம். இதையே பவுல் நமது பெலவீனம் என்று அழைக்கிறார். ஆனால் அந்த பெலவீனத்தில் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் தேவன் கற்றுத் தருகிறார் என பவுல் கூறுகிறார். ஒரு விதத்தில், பவுலின் மொழியை பார்க்கும் போது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நுழைந்து, நம்மூலம் ஜெபிக்கிறார் எனலாம்.

பயனுள்ள ஜெபத்தை செய்யக் கற்றுக் கொள்ளுதல் என்பது பரிசுத்த ஆவியானவருடன் நாம் உறவு கொண்டு, அவருக்கு விட்டுக்கொடுக்க கற்றுக்கொள்வதாகும். அப்பொழுது அவர் நம்மை வழிகாட்டி பெலப்படுத்தி ஏவி, அநேக நேரங்களில் நம்மூலமாக ஜெபிக்கவும் நாம் விட்டுக்கொடுக்க முடியும்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவக்கூடிய பல வழிகளை புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. அவற்றில் சிலவற்றை கீழே கூற விரும்புகிறேன்.

முதலாவது வழி ரோமர்**8:26**-**27**ல் கூறப்பட்டுள்ளது. பவுல் “. . . *ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்*” என்று கூறுகிறார். இதை கிறிஸ்தவ வாழ்க்கையின் உயர் கட்டங்களில் ஒன்றான, **பரிந்து மன்றாடுதல்** என்று

அழைப்பேன். அதற்கு பின்பு *"வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு"* என்கிறார். ஜெபிக்க வேண்டியவைகளை சரியாக ஜெபிப்பதற்கு நமது குறுகிய மனதிற்கு ஏற்ற வார்த்தைகள் தெரியாது. ஆகவே நமக்கு உதவி செய்யும் படி, பரிசுத்த ஆவியானவர் வார்த்தைகளுக்கு அடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

இது ஆவிக்குரிய பிறப்பைத் தோற்றுவிக்கும், பரிசுத்தமான ஆவிக்குரிய போராட்டம். ஏசாயா **66:8**ல் இப்படி கூறப்பட்டுள்ளது:

> ***8....சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது.***

போராடி ஜெபிக்காமல், சபையில் உண்மையான ஆவிக்குரிய பெருக்கம் ஏற்பட வழியில்லை. சீயோன் வேதனைப்பட்டால் தான், குமாரரை பெற்றெடுக்கிறாள்.

பவுல் இதை கலாத்தியர் **4:19**ல் உறுதிப்படுத்துகிறார்.

> ***19என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்;***

பவுல் அம்மக்களுக்கு பிரசங்கித்ததினாலே அவர்கள் மனந்திரும்பினார்கள். ஆனால் அவர்கள் அடைய வேண்டிய நிலையை எட்டுவதற்கு, பிரசங்கத்திற்கு மேலாக பரிந்து மன்றாடுதலின் ஜெபம் தேவை என்று பவுல் உணர்ந்தார். அந்த பரிந்து மன்றாடுதலின் ஜெபத்தை விளக்க *"கர்ப்பவேதனை படுதல்"* அல்லது *"வாக்குக்கடங்காத பெருமூச்சு விடுவது"* என்று கூறுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் ஜெபத்தில் நமக்கு உதவி செய்யும் இரண்டாவது விதம், **நமது மனதை பிரகாசிப்பிக்கின்றார்.** இவ்வேளையில் அவர் நம்மூலமாக ஜெபிப்பதில்லை ஆனால் எதற்கு ஜெபிக்க வேண்டும் என்றும் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் நமது மனதிற்கு காட்டுகின்றார். நமது மனங்களில் ஆவியானவர் எப்படி செயல்படுகிறார் என்று நிருபங்களில் இரண்டு பகுதிகள் குறிப்பிடுகின்றன. ரோமர் **12:2**ல் இப்படி வாசிக்கிறோம்:

> ***2நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.***

ஜெபத்தில் கூட புதுப்பிக்கப்பட்ட மனது மட்டுமே தேவனுடைய

சித்தத்தை அறியக்கூடும். எபேசியர் 4:23ல் இப்படி கூறப்பட்டுள்ளது:

[23] "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,"

பரிசுத்த ஆவியானவர் நமது மனதை புதுப்பிக்கின்றார். பரிசுத்த ஆவியானவர் செயலாற்றி நமது மனதை புதுப்பிக்கும் பொழுது நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்கிறோம். தேவனுடைய சித்தத்தின் படி ஜெபிப்பது எவ்வாறு என்பதையும் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறோம். இவ்வாறாக பரிசுத்த ஆவியானவர் நமது மனங்களை புதுப்பித்து, அவை பிரகாசமடையச் செய்து, எப்படி ஜெபிப்பது என்பதை புரிந்து வெளிப்படுத்துகிறார்.

மூன்றாவதாக அடிக்கடி எதிர்பாராத நிலையில் பரிசுத்த ஆவியானவர் **நமது வாயில் சரியான வார்த்தைகளைத் தந்து** நமக்கு உதவி செய்கிறார். இதை எழுதும்பொழுது என் முதல் மனைவியோடு நடந்த ஓர் சம்பவம் நினைவிற்கு வருகிறது. அக்டோபர் மாதக் கடைசியிலே அவளுடைய சொந்த நாடாகிய டென்மார்க்கில் நாங்கள் இருந்தோம். நவம்பர் மாதம் முழுவதையும் பிரிட்டனில் செலவிட, அடுத்த நாள் புறப்பட இருந்தோம். நான் பிரிட்டனை சார்ந்தவன், ஆகவே பிரிட்டனில் நவம்பர் மாதம் மூட்டமும், குளிர்ச்சியும், பனியும் நிறைந்த மாதமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். பிரிட்டனுக்குச் செல்வதற்கு முன்பு லிடியா, "நாங்கள் பிரிட்டனில் இருக்கும் நாட்களில் நல்ல வானிலையைக் கட்டளையிடும்!" என்று ஜெபித்தாள். கட்டிலில் உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்த நான் கொஞ்சம் குறைய கீழே விழுந்து விட்டதைப் போல உணர்ந்தேன். இதற்குப் பின்பு நீ எதற்காக ஜெபித்தாய் என்பது தெரியுமா? என்று கேட்டேன். லிடியா, அதற்கு பதிலாக "இல்லை, எனக்கு ஞாபகம் இல்லை" என்றாள். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் தான் ஜெபிக்க வைத்தார் என்பதை நான் உறுதிப்படுத்திக் கொண்டேன்.

"நல்லது, நாம் பிரிட்டனில் இருக்கும் நாட்களில் நல்ல வானிலை இருக்க வேண்டும் என்று நீ தேவனிடம் கேட்டுக் கொண்டாய். ஆனால் நவம்பர் மாதத்தில் பிரிட்டன் எப்படி இருக்கும் என்று உனக்குத் தெரியுமா?" என்றேன். அவள் தோள்பட்டையை அசைத்து சென்றுவிட்டாள். நவம்பர் மாதம் முழுவதையும் நாங்கள் பிரிட்டனில் செலவிட்டோம். குளிர்ச்சியோ, மழையோ, மோசமான காலநிலையோ இல்லை. அது இளவேனிற்காலம் போல் இருந்தது. நவம்பர் முடிவிலே அந்த இடத்தை விட்டு நாங்கள் புறப்படும் பொழுது எங்களை வழியனுப்ப வந்திருந்த மக்களைப் பார்த்து, "கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் போனபின்பு வானிலையில் மாற்றமிருக்கும்!" என்றேன். அது அப்படியே ஆயிற்று. லிடியாள் செய்த ஜெபம் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த ஜெபம். அவ்வேளையில் கர்த்தர்

விரும்பின காரியத்துக்காக ஜெபித்தாள்.

பரிசுத்த ஆவியானவர் ஜெபத்தில் உதவும் நான்காவது வழி முறை புதிய ஏற்பாட்டில் அநேக முறை குறிப்பிடப்பட்டுள்ளது. **நாம் அறியாத, ஓர் புதிய பாஷையை நமக்கு தருகின்றார்,** இதை இயற்கையின் மனதால் நாம் புரிந்து கொள்ள முடியாது. இதை அநேகர் ஜெபமொழி என்று அழைக்கின்றனர். 1 கொரிந்தியர் 14:2ல் பவுல்:

> [2]*ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், (அறியாத மொழியில்) ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

அதே அதிகாரம் 4ம் வசனத்தில், பவுல் கூறுகிறார்:

> [4]*அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்...* 1 கொரிந்தியர் 14:4

இந்த ஜெபத்தில் மூன்று முக்கிய காரியங்கள் வலியுறுத்தப்படுகின்றன: **முதலாவதாக,** நவமான பாஷையில் நாம் பேசும் போது நாம் மனிதனிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறோம். என்னைப் பொறுத்தமட்டில் அது மிகப்பெரிய சிலாக்கியம்.

இரண்டாவதாக, நமது மனங்களால் புரிந்து கொள்ள முடியாததைப் பேசுகிறோம். தேவ இரகசியங்களையும், மர்மங்களையும் பேசுகிறோம்.

மூன்றாவதாக, பக்தி விருத்தி உண்டாகும்படி நம்மை நாமே கட்டியெழுப்புகிறோம்.

1 கொரி. 14:14ல் பவுல் "*நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும்*" என்றார். இந்த இடத்திலே நமது மனதை பரிசுத்த ஆவியானவர் பிரகாசிப்பதில்லை. ஆனால் நமக்கு ஒரு புதிய மொழியைக் கொடுத்து அந்த மொழியைக் கொண்டு நம் மூலமாய் ஜெபிக்கிறார். இதில் ஒருவகை ஜெபத்தை மட்டும் செய்து விட்டு மற்ற வகை ஜெபத்தை தவிர்த்து விடக்கூடாது. இதை பவுல் தெளிவாக "*நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்*" (வ. 15) என்கிறார். இரண்டு வகையான ஜெபமும் நம்மால் செய்யக்கூடும்.

பரிசுத்த ஆவியானவரை அனுமதித்து, விட்டுக்கொடுத்து, வேதத்தின் படி நம்மில் செயல்பட அனுமதிக்கும் போது, நம்முடைய ஜெப வாழ்க்கையில் ஒரு செழிப்பும், புதுமையும் உண்டாகும். இதைத் தான் நம் ஒவ்வொருவரிலும் தேவன் விரும்புகிறார்.

08

நம்முடைய சரீரங்களுக்கு ஜீவனும் ஆரோக்கியமும்

பாராகிளீட் ஆன பரிசுத்த ஆவியானவரின் நான்காவது செயல்பாடு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவனையும், ஆரோக்கியத்தையும் நமது சரீரங்களுக்குக் கொடுப்பதாகும். யோவான் 10:10ல், இயேசு கூறுவது போல அவர் நமக்கு ஜீவன் கொடுக்க வந்தார்.

> **10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.**

தேர்தெடுக்கும் படி, இங்கு நமக்கு முன் இரு நபர்கள் வைக்கப்படுன்றனர்: ஜீவனை அளிக்கும் இயேசு மற்றும் ஜீவனை அழிக்கும் சாத்தான். ஜீவனை எடுப்பதற்காகவே பிசாசு நம் வாழ்க்கையில் வருகிறான். தேவன் நமக்கு அருளின ஆசீர்வாதங்களைத் திருடி, நம்முடைய சரீரங்களை கொல்லவும், நித்தியமாய் அழிக்கவும் வருகின்றான். நமது வாழ்வில் பிசாசுக்கு இடம் கொடுப்போமானால் அவன் இதைத் தான் செய்வான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்—நாம் எந்த அளவிற்கு அனுமதிக்கிறோமோ, அவன் திருடி, கொன்று, அழிப்பான்.

ஆனால் இயேசுவோ இதற்கு எதிர்மறையான காரியத்தைச் செய்ய வந்தார். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே வந்தார். இயேசு நமக்களிக்கும் இந்த ஜீவனை பரிசுத்த ஆவியானவரே நிர்வகிக்கிறார் என்பதை புரிந்துக்கொள்வது அவசியம். எந்த அளவிற்கு அவரை நம் வாழ்வில் செயல்பட அனுமதிக்கின்றோமோ அந்த அளவிற்குத்

தான் அவர் இந்த பரிபூரண ஜீவனை நமக்கு அளிக்க முடியும். பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டுக்கு நாம் எதிர்த்து நின்றால் அல்லது அதை தள்ளினால், இயேசு நமக்கு அளிக்க வந்த தெய்வீக ஜீவனை நாம் பரிபூரணமாய் அனுபவிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரே கல்லறையிலிருந்து, இயேசுவின் சரீரத்தை உயிருடன் எழுப்பினார் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி பவுல் ரோமர் 1:5ல் இப்படி சொல்கிறார்:

> **5 மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்....**

"பரிசுத்தமுள்ள ஆவி" என்பது, எபிரெயத்தில் சொல்லப்படும் *"பரிசுத்த ஆவி"* என்னும் வார்த்தையின் கிரேக்க மொழிபெயர்ப்பாகும். பவுல் இங்கு எபிரெயத்தில் சிந்தித்து கிரேக்கத்தில் எழுதுகிறார். ஆகையால், *"பரிசுத்தமுள்ள ஆவியின்படி"* என்று பவுல் சொல்லும் போது, "பரிசுத்த ஆவியினால், தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்ததினாலே பலமாய் (அதாவது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே) ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" என்று கூறுவதற்கு சமானமாகும்.

முன் பகுதிகளிலே, தேவன் தாமே பரிசுத்த ஆவியானவரின் ரூபத்தில், நம்மில் வசித்து, நம்முடைய சரீரங்களை அவருடைய ஆலயம் அல்லது தங்கும் இடமாக கொள்வதே, மீட்பின் திட்டத்தின் உயர் கட்டம் என்று கூறினேன். ரோமர் 8:10-11, பவுல் இப்படியாக கூறுகிறார்:

> **10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.**
> **11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.**

10ம் வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்து உள்ளே வந்து, நாம் மனந்திரும்பி, மறுஜென்மம் அடையும் போது ஒரு பழைய வாழ்க்கை முடிவுற்று, மற்றொரு புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. பழைய மாம்ச வாழ்க்கை முடிந்து, நமது ஆவி தேவனுடைய ஜீவனால் உயிர்ப்பிக்கப்படுகிறது. இதனால் நமது சரீரம் அடையக்கூடிய பலனை

பவுல் 11ம் வசனத்தில் கூறுகிறார். மிக தெளிவாக, இயேவின் சரீரத்தை கல்லறையிலிருந்து உயிருடன் எழுப்பிய அதே நபர், அதே வல்லமை, விட்டுக் கொடுக்கும் ஒவ்வொரு விசுவாசியின் சரீரத்திலும் தங்கி, இயேசுவின் சரீரத்தை நித்திய சரீரமாக எழும்பச் செய்ய, அந்த சரீரத்துக்கு அளித்த அதே ஜீவனை, விசுவாசியின் சரீரத்திலும் அளிக்கின்றார்.

நம்முடைய சரீரத்திற்கு தெய்வீக ஜீவனை அளிப்பது மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதலின் போது தான் பூரணப்படும். தற்போது, நாம் உயிர்த்தெழுதலின் சரீரத்தை பெறாமல், சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தில் உயிர்தெழுதலின் வல்லமையை பெற்றிருக்கிறோம். நம்முடைய ஆவியை, தேவன் நம்முடைய சரீரத்திலிருந்து பிரித்து, நம்மை பரம வீட்டிற்கு அழைக்கும் வரை, சாவுக்கேதுவான இந்த சரீரங்களில் நாம் பெற்றிருக்கும் இந்த உயிர்தெழுதலின் ஜீவன், நம்முடைய சரீர பிரகாரமான தேவைகள் யாவையும் சந்திக்கக்கூடியதென்று பவுல் பல இடங்களில் கூறுகிறார்.

முதலாவதாக நமது சரீரங்கள் உருவாக்கப்பட்டது எப்படி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆதியாகமம் 2:7 கூறுகிறது:

> 7 ***தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை*** (அல்லது ஆவியை) ***அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.***

மனிதனுடைய சரீரத்தை உண்டாக்கியது எது? களிமண் உருவத்தில் தேவன் ஊதிய தம்முடைய ஆவி தான், அதனை விந்தையான அற்புதமான செயல்பாடுகளுடைய ஓர் ஜீவனுள்ள சரீரமாக மாற்றிற்று. பரிசுத்த ஆவியானவரே மாம்ச சரீரத்தை ஜீவனுள்ளதாக்கினார். ஆகையால் அவர் தான் அதை காப்பாற்ற வேண்டும் என்பது இயற்கையாகும். இந்த இயற்கையான சத்தியத்தை கிறிஸ்தவர்கள் கண்டுக்கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும். வேதத்தின் வெளிச்சத்தில், தெய்வீக சுகமும், தெய்வீக ஆரோக்கியமும் நமக்கு இயற்கையானவை.

உங்களுடைய கடிகாரம் பழுதுப்பட்டால் அதை நீங்கள் செருப்பு தைப்பவனிடம் எடுத்துச் செல்ல மாட்டீர்கள், கடிகாரத்தை சரி செய்யும் படி அதை உற்பத்திச் செய்தவர்களிடம் கொண்டு செல்வீர்கள். அதே தத்துவத்தின் அடிப்படையில், உங்கள் சரீரம் பழுதுப்பட்டால், அதை எங்கு எடுத்துச் செல்வீர்கள்? இயற்கையாக, அந்த சரீரத்தை உருவாக்கியவராகிய பரிசுத்த ஆவியானவரிடமே அதை கொண்டு செல்ல வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், அநேக கார்களில் அவைகளை வடிவமைத்தவர்களுடைய பெயர் இருக்கும்: "ஃபிஷர் நிறுவனத்தால் தோற்ற அமைப்பு" (Body by Fisher) என்ற சிறிய போர்டு பொருத்தப்பட்டிருக்கும்.

அதைப் போலவே ஒரு உடன் கிறிஸ்தவரைக் காணும் பொழுது, “பரிசுத்த ஆவியானவரால் வடிவமைக்கப்பட்ட சரீரம்” என்று சொல்வேன். அவரே சரீரத்தைக் கொடுத்து, பராமரித்து, வல்லமை அளித்து வருகிறார்.

பவுல் நல்லதொரு சாட்சியை 2 கொரி. 11:23-25ல் கூறுகின்றார்.

> 23 அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.
> 24 யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;
> 25 மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். 2 கொரி. 11:23-25

இவைகள் அனைத்தையும் அனுபவித்தும், உற்சாகத்துடன், ஆரோக்கியமாய், தைரியத்துடன் பவுல் ஊழியம் செய்தார் என்பது வியக்கச் செய்கிறது. இவை அனைத்திலும் பவுலைத் தாங்கிய வல்லமை எது? பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையே. லீஸ்திராவில் பவுல் கல்லெறியப்பட்ட அனுபவத்தின் விவரம் இதோ:

> 19 பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். (ஓர் மனிதனை மரித்தவன் போலாக்க நிச்சயமாய் அநேக கற்கள் தேவை)
> 20 சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான். (அப்போஸ்தலர் 14:19–20)

எப்படிப்பட்ட மனிதன்! பவுல் பெலவீனமாய், பெரும்பாலும் நோயாளியாய் சுற்றித்திரிந்தார் என அநேகர் கூறுவதை கேட்டிருக்கிறேன். “பலவீனமான பவுல் இவ்வளவு வல்லமையாக இருந்தால் இதைப்போன்ற அநேக பெலவீனரை தேவன் நமக்குத் தருவாராக!” என்று நான் கூறுவேன்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இருந்த அசாதாரண சரீர பெலனையும், எதிர்ப்பு சக்தியையும் பார்த்தோம். இதன் இரகசியத்தை காண்போம். இதைக் குறித்து அவர் என்ன சொன்னார்? 2 கொரி. 4:7-12ல் பவுல் கூறுகிறார்:

[7]இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை ("இந்தப் பொக்கிஷம்" என்பது நம்மில் தங்கியிருக்கும் பரிசுத்த ஆவியானவர்) மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.
[8]நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;
[9]துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.
[10]கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.
[11]எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.
[12]இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது.

நாம், நம்மில் வேறுபட்ட மனிதர்கள் அல்ல ஆனால் வேறுபட்ட வல்லமை உடையவர்கள் என்று 7ம், 8ம் வசனங்கள் கூறுகின்றன. மற்றவர்களை சீர்குலையச் செய்யும் காரியங்கள் நம்மை சீர்குலையத் செய்யத் தேவையில்லை ஏனென்றால் நமக்குள் எதிர்த்து நிற்கக்கூடிய ஓர் வல்லமை இருக்கின்றது.

இதற்கு மாறுப்பட்ட ஓர் அழகான கருத்தை நாம் 10ம் வசனத்தில் காண்கின்றோம். இயேசுவுடன் மரித்தவர்களாய் நம்மை நாம் எண்ணிக்கொள்ள வேண்டும். இது இனி வரும் யுகத்துக்குறியது அல்ல. பரிசுத்த ஆவியானவருக்குள் இருக்கும் இயேசுவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட, நிலைத்திருக்கும், உயிர்தெழுதலின் ஜீவன் தற்போதைய யுகத்திலேயே நம்முடைய சரீரங்களில் வெளிப்படும் என்பது மிக தெளிவாக உள்ளது.

11ம் வசனத்தின் கடைசி சில வார்த்தைகள் மிக முக்கியமானவை: *"சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு...."* இது ஒருவரும் காணக்கூடாத ஓர் மறைவான பிரச்சனம் அல்ல. மாறாக, எல்லாரும் காணக்கூடிய விதத்தில் நம்முடைய மாம்ச சரீரங்களில் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

மரணக் கட்டளையை பெற்று, நம்முடைய சொந்த பெலன் மற்றும் திறமைகளின் முடிவிற்கு நாம் வரும் போது, நம்மூலமாய் ஓர் புது வித

ஜீவன் மற்றவர்களுக்குள் செயல்படும் என்று **12**ம் வசனம் கூறுகிறது.

> [16] "**ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**" 2 கொரிந்தியர் 4:16

புறம்பான மனிதன் அழிந்தாலும், உள்ளான மனிதனில் நாள்தோறும் புதுபிக்கப்படும் ஓர் ஜீவன் உண்டு. நமக்குள்ளிருக்கும் தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட, அற்புத ஜீவன் நம் ஒவ்வொருவருடைய புறம்பான மனிதனின் தேவைகளை சந்திக்கிறது.

09

தெய்வீக அன்பின் வெளிப்பாடு

பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழங்கும் ஆசீர்வாதங்களுக்குள் தலை சிறந்ததும், அற்புதமுமானது, தேவனுடைய தெய்வீக அன்பு நமது உள்ளங்களில் ஊற்றப்படுவதாகும். ரோமர் 5:1-5 இப்படி கூறுகிறது:

> **1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.**
> **2 அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.**
> **3 அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,**
> **4 உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.**
> **5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.**

இதன் உச்சகட்டம் 5ம் வசனத்தில் வருகிறது *"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது."*

பவுல் இந்த வசனங்களில் ஆவிக்குரிய வளர்ச்சியின் பல படிகளை விளக்குகிறார். அவைகளை நான் சுருக்கமாய் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது கட்டம், நாம் தேவனிடத்தில் சமாதானம் பெறுகிறோம்.

இரண்டாவதாக, விசுவாசத்தினால் தேவ கிருபையில் பிரவேசிக்கிறோம்.

மூன்றாவதாக, தேவனுடைய மகிமையின் நம்பிக்கையிலே, வரப் போகும் ஒன்றைக் குறித்து மேன்மை பாராட்டுகிறோம்.

நான்காவதாக, உபத்திரவத்தில் மேன்மை பாராட்டுகிறோம் (உபத்திரவத்தை நாம் சரியாக ஏற்றுக்கொள்ளும் போது, அது நமக்குள் ஏற்படுத்தும் விளைவுகளினால்).

உபத்திரவத்தை சரியாக சகிப்பதன் மூன்று விளைவுகளை இதன் பின் பவுல் பட்டியலிடுகிறார். முதலாவது பொறுமை, இரண்டாவது நற்குணம், மூன்றாவது நம்பிக்கை.

கடைசியாக உச்சக்கட்டத்துக்கு வருகிறோம்: பரிசுத்த ஆவியினால் நமது உள்ளங்களில் ஊற்றப்படும் தேவ அன்பு. இங்கு *அன்பு* என்பதற்கு *அகாப்பே* என்ற கிரேக்க பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இது பொதுவாக தேவனுடைய அன்பைக் குறிக்கும், ஆனால் அதை மட்டும் அல்ல. சாதாரணமாக *அகாப்பே* அன்பை, பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் மனிதர்களால் பெற முடியாது. *அகாப்பே* அன்பை இயற்கையான மனிதனில் உருவாக்குவது பெரும்பாலும் அரிது.

ஐந்தாம் அத்தியாயத்தில், *அகாப்பே* அன்பின் தன்மைக்கு பவுல் ஓர் பொருள்விளக்கம் அளிக்கின்றார். அது கிறிஸ்துவிலும், தேவனிலும் எவ்வாறு வெளிப்பட்டதென்பதை விளக்குகிறார்:

> **6 அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.**
> **7 நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.**
> **8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.**
> **ரோமர் 5:6-8**

கிறிஸ்து நமக்காக மரித்த பொழுது, *"பெலனற்றவர்கள்," "தேவனற்றவர்கள்"* மற்றும் *"பாவிகள்"* என்ற மூன்று வார்த்தைகள் நம்முடைய நிலையை விவரிக்கின்ற வார்த்தைகளாய் இருக்கின்றன. *அகாப்பே* அன்பு தன்னைத் தானே, எந்த நிபந்தனையுமின்றி இப்படிப்பட்டவர்களாய் இருந்த நமக்கு கிறிஸ்துவின் மூலம்

காண்பிக்கப்பட்டது. நீங்கள் நல்லவர்களாய் இருக்க வேண்டும், இதை செய்ய வேண்டும் அல்லது அதை செய்ய வேண்டும் என்று கூறுகிற அன்பு அல்ல. மிகவும் தகுதியற்ற, உதவியற்ற, யோக்கிதையற்றவர்களுக்கு இலவசமாய் கொடுக்கப்படுகிறது.

நமக்குள் *அகாப்பே* அன்பு உருவாக, அதின் பல்வேறு கட்டங்களை புதிய ஏற்பாட்டில் கவனிப்போம். முதலாவதாக, அது புதிய பிறப்பின் பலனாகும். 1 பேதுரு 1:22-23ல் இப்படி வாசிக்கிறோம்:

> [22]ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;
> [23]அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

புதிய பிறப்பில், *அகாப்பே* அன்பினால் நேசிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஆரம்பமாகின்றன—அழிவில்லாத, நித்திய வித்தாகிய, தேவனுடைய வார்த்தையினால் உண்டான, புதிய பிறப்பிலிருந்து தோன்றும் புது ஜீவன். *அகாப்பே* அன்பே அந்த புதிய ஜீவனின் தன்மையாகும். 1 யோவான் 4:7-8 சொல்கிறது:

> [7]பிரியமானவர்களே, ஒரிவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.
> [8]அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்.

இவ்விதமான அன்பு புதிய பிறப்பின் அடையாளமாக இருக்கிறது. மறு பிறப்பை அடைந்தவன் இதை உடையவனாய் இருக்கிறான், மறு பிறப்பை அடையாதவனிடத்தில் இவ்வன்பு இல்லை.

இப்புதிய தெய்வீக அன்பு நமக்கு கொடுக்கப்படுவதின் அடுத்த கட்டத்தை பவுல் நமக்கு விளக்குகிறார்:

> [5]மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. ரோமர் 5:5

புதிய பிறப்பினால் உண்டாகும் புது தன்மையில், தேவ அன்பின் முழுமையையும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றுகிறார். நாம் அன்பில் மூழ்குகிறோம். என்றும் தீராத ஓர் அன்பின் ஊற்றோடு நமக்கு இணைப்பு ஏற்பட்டு விடுகிறது - தேவனுடைய அன்பின் முழுமை, பரிசுத்த ஆவியானவரால் நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டு விடுகிறது. இது தெய்வீக தன்மையுடையது, தீராதது மற்றும் இயற்கைக்கப்பாற்பட்டது - பரிசுத்த ஆவியானவர் மட்டும் செய்யக்கூடியது, என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

யோவான் 7:37-39வரை இயேசு கூறியதை ஒப்பிட்டுப் பாருங்கள்.

> [37]*பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.*
> [38]*வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.*
> [39]*தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.*

இதில் நீங்கள் வேறுபாடை காணலாம். முதலாவது, தனக்கே போதுமானது இல்லாத, தாகமுள்ள மனிதனை காண்கிறோம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வரும் போது, அந்த தாகமுள்ள மனிதன் ஜீவ தண்ணீரின் நதிகள் ஓடும் வாய்காலாக மாறுகிறான். அதுவே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கும் தேவ அன்பாகும். இது மனித அன்பல்ல, அது தேவனுடைய அன்பின் ஒரு சிறிய பகுதியும் அல்ல. அது தேவனுடைய அன்பின் முழுமையாகும், அதில் நாம் மூழ்குகிறோம். தேவனுடைய எல்லையற்ற, முழுமையான, முடிவில்லாத அன்பு பரிசுத்த ஆவியானவர் மூலம் நமது வாழ்வின் வழியாக வெளிப்படுகிறது. தாகமுள்ள மனிதன் ஜீவ ஊற்றுகளின் வாய்காலாக மாறுகிறான்.

1 கொரிந்தியரில் பவுல் எழுதின பிரபலமான அன்பைப் பற்றிய அதிகாரத்தைக் பார்க்கலாம். 12ம் அதிகாரத்தின் முடிவில் *"இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்"* என்கிறார். அந்த *"இன்னும் மேன்மையான வழி"* 13ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 13:1-3)

> [1]*நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும்,*

அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.
[2]நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.
[3]எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களும், வெளிப்பாடுகளும் தெய்வீக அன்பின் வாய்க்கால்கள் அல்லது கருவிகளாக உள்ளன என்பதை நாம் காண வேண்டும். இந்த வரங்களை பயன்படுத்தாமலும், அவைகளை தேவனுடைய அன்புக்கு விட்டுக்கொடுக்காமலும் இருந்தால் நாம் தேவனுடைய திட்டங்களை தடைச் செய்கிறோம். நமக்கு எல்லா வரங்களும் இருக்கலாம், ஆனால் வெறும் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்போம். நாம் ஒன்றுமில்லை, இந்த அன்பில்லாமல் ஒன்றுமில்லாதவர்களாயும் இருப்போம்.

முதலாம் வசனத்தில் பவுல் *"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்"* **(1 கொரி 13:1)** என்கிறார். பரிசுத்த ஆவியானவர் வரும்போது விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்பட்டு தேவனிடம் மனம் திரும்பிய இருதயத்திற்குள்ளேயே வருகிறார். இதற்குப் பின்பு வறட்சியடைந்து, தேவனுடைய நோக்கத்தை இழக்கவோ அல்லது தேவன் நமக்கு கொடுத்ததை தவறாக பயன்படுத்தவோ வாய்ப்புகள் உண்டு. அப்படியானால், பவுல் சொன்னது போல, நாம் *"சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும்"* ஆகி விடுகிறோம். "அதை பெற்ற போது நான் அப்படி இல்லை ஆனால் நோக்கங்களை தவற விட்டதினாலே அப்படியாகி தேவனுடைய திட்டங்களை குலைத்துப் போட்டேன்" என பவுல் கூறுகிறார்.

இதனை 1 தீமோத்தேயு 1:5-6ல் பவுல் கூறியதோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

[5]கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.
[6]இவைகளைச் சிலர் நோக்காமல் வீண் பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போனார்கள்.

எல்லா கிறிஸ்தவ ஊழியத்தின் குறிக்கோளும் அன்பு தான். இந்த தெய்வீக அன்பை வெளிப்படுத்துவதே ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் வைத்திருக்கும் நோக்கமாகும். தேவன் இவ்வன்பை நமக்கு பகிர்ந்தளிப்பதில் மூன்று கட்டங்களையும் நான் சுருக்கி கூறுகிறேன்:

இதன் முதற்படி மறுபிறப்பு. நாம் மறுபடியும் பிறக்கும் பொழுது இந்த அன்பை பெற தகுதியுள்ளவர்களாகிறோம்.

இரண்டாவதாக, நமக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலம் இந்த தேவ அன்பின் முழுமையும் நம்முடைய இருதயங்களில் ஊற்றப்படுகிறது. இதன் மூலம், தேவனுடைய தீராத ஊற்றுகள் நமக்கு திறக்கப்படுகின்றன.

மூன்றாவதாக, தின வாழ்வில், ஒழுக்கத்திலும் நற்குணத்தின் பயிற்சியிலும் அந்த அன்பு வெளிப்படுகிறது. இக்கட்டத்தில், தேவனிடத்திலிருந்து வரும் அந்த அன்பு, நம்மூலமாய், சக மனிதர்களுக்கு வழங்கப்படுகிறது.

நயாகரா நீர் வீழ்ச்சியைக் நான் முதன் முதலில் கண்டபொழுது, ஏராளமான அந்த தண்ணீரை தேவனுடைய அன்பு ஊற்றப்படுவதற்கு அதை ஒப்பிட்டேன். ‘‘ஆனால் உண்மையான நோக்கம் ஊற்றப்படுவதினாலே நிறைவேறுகிறதில்லை. அந்த தண்ணீர், வட அமெரிக்காவில் வசிக்கும் அநேக மக்களுக்கு ஒளி, வெப்பம், மற்றும் மின்சாரத்தை கொடுக்கும் ஒன்றாக பயன்படுத்தப்படும்போதே, அதன் நோக்கம் நிறைவேறுகிறது” என சிந்தித்துப் பார்த்தேன்.

நம்மை குறித்தும் இது உண்மையே. நாம் மறுபடியும் பிறக்கும் போது, தேவ அன்பைப் பெற்றுக் கொள்கிறோம்; பரிசுத்த ஆவியானவரால் அது நம்மேல் ஊற்றப்படுகிறது; ஆனால் ஒழுக்கத்திலும் நற்குணத்தின் பயிற்சியிலும் இது வெளிப்படும்போது தான் சக மனிதர்களுக்கு பயனுள்ளதாக மாறுகிறது.

10

பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது எவ்வாறு

நாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை விட்டுக் கொடுத்து, அவருடைய முழுமையைப் பெற்று அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெறுவது எப்படி? பரிசுத்த ஆவியானவரின் முழுமையைப் பெற்றுக் கொள்ள நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை பல வேத வசனங்கள் மூலமாகக் காண்போம். தேவன், சில முக்கியமான நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்

அப்போஸ்தலர் 2:37, 38 பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு கொடுத்த செய்தியின் முடிவாயிருக்கிறது. மக்கள் அவருடைய செய்திக்கு கொடுத்த மறுமொழியைப் பற்றிக் கூறுகிறது.

> 37**இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்.** (இது ஒரு குறிப்பிட்ட கேள்வியாய் இருக்கிறது, தேவனுடைய வார்த்தை இதற்கு குறிப்பிட்ட பதிலை கொடுக்கிறது)
> 38**பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

அங்கு *"பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்"* என்னும் வாக்குத்தத்தம் கிடைக்கிறது ஆனால் *"நீங்கள் மனந்திரும்பி ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்"* என்னும் இரு நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மனந்திரும்புதல் என்றால், உண்மையாகவே நமது பாவமுள்ள முரட்டாட்டமான வழிகளை விட்டுத் திரும்பி, எந்த நிபந்தனையுமின்றி நம்மை தேவனுக்கும் அவருடைய நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொடுத்தலாகும். ஞானஸ்நானம் என்பது ஒரு கட்டளையை நிறைவேற்றுவதாகும். இதன் மூலம் நாம் சொந்த அனுபவத்தில், வெளியரங்கமாக, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் இணைகிறோம். ஆகவே பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றுக் கொள்ள நாம் இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்: மனந்திரும்ப வேண்டும், ஞானஸ்நானம் பெற வேண்டும்.

தேவனிடம் கேளுங்கள்

லூக்கா **11:9-13**ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> **9** ***மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.***
> **10** ***ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.***
> **11** ***உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?***
> **12** ***அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?***
> **13** ***பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.***

இது மிக எளிய ஆனால் முக்கிய நிபந்தனையாகும். பிதாவானவர், தம்மிடத்தில் கேட்கிற தம்முடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவரை கொடுப்பார் என இயேசு கூறுகிறார். "நான் பரிசுத்த ஆவியானவரை பெற, கேட்கத் தேவையில்லை" என அநேக கிறிஸ்தவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். இது வேதத்திற்கு முரணானது என்பதை நான்

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இயேசு தமது சீஷர்களிடம், "*நீங்கள் கேட்டால்*, உங்கள் பிதா உங்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பார்" எனக் கூறுகிறார். வேறொரு இடத்தில், பிதாவிடம் சென்று தமது சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பும்படி வேண்டிக்கொள்வதாக இயேசு கூறினார். இயேசுவே பிதாவை வேண்டிக்கொண்டால், நாமும் வேண்டிக்கொள்வதில் தவறில்லை. ஆகையால் மூன்றாவது நிபந்தனை இதுவே: கேட்கவேண்டும்.

தாகமுள்ளவனாயிரு

யோவான் 7:37-39 வரையில் உள்ள வசனங்களில் இன்னும் மூன்று எளிதான கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

> ***37*பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.**
> ***38*வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**
> ***39*தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.**

இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர், இப்பகுதியில் விசுவாசிக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளப்போகிற பரிசுத்த ஆவியானவரைப் பற்றியே இயேசு குறிப்பிடுகிறார் என்பதை தெளிவுபடுத்துகிறார். அதை மனதிற்கொண்டு இயேசு சொன்னதைக் கவனிப்போம். "*ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.*" எளிதான ஆனால் முக்கியமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று நிபந்தனைகள் உள்ளன.

முதலாவதாக நாம் தாகமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். தங்களுக்குத் தேவையில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும் மக்கள் பேரில் தேவன் தமது ஆசீர்வாதங்களைத் திணிக்கப் போவது இல்லை. அநேகர் ஆவியானவரின் முழுமையைப் பெற்றுக் கொள்ளாததின் காரணம் அவர்கள் தாகமற்றவர்களாய் இருப்பதே. தேவையானது அனைத்தும் இருப்பதாக நீங்கள் நினைக்கும் பொழுது இன்னும் அதிகம் கொடுத்து தேவன் ஏன் உங்களைத் துயரப்படுத்த வேண்டும். ஒருவேளை உங்களுக்கு ஏற்கெனவே உள்ளதை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தாமலிருக்கலாம். இப்படியிருக்கும் போது தேவன் மேலும் கொடுத்தால், இன்னும் அதிக

ஆக்கினையை பெறுவீர்கள்.

தாகமாயிருப்பது மிக முக்கியமான நிபந்தனையாகும். தாகமாயிருந்தால், உங்களிடம் உள்ளதை விட அதிக தேவை என்பதை நீங்கள் உணருகிறீர்கள் என்று அர்த்தமாகும். சொல்லப்போனால் தாகம் என்பது சரீரத்தின் மிகுந்த வலிமைவாய்ந்த வாஞ்சையாகும். ஒருவன் மிகுந்த தாகமாயிருக்கும் பொழுது சாப்பிடுவதைக் குறித்து கவலைப்பட மாட்டான். குடிக்கும்படி ஏதாகிலும் கிடைக்குமா என்றே விரும்புவான். நான் மூன்று ஆண்டுகளை வட ஆப்பிரிக்காவின் பாலைவனங்களில் செலவிட்டிருக்கிறேன். ஆகவே தாகமாயிருப்பது என்றால் என்ன என்று எனக்கு நன்கு தெரியும். ஒருவன் தாகமாயிருக்கும் போது பேசமாட்டான், விவாதிக்க மாட்டான், பேரம்பேசவும் மாட்டான்; தண்ணீர் இருக்கும் இடத்திற்கு விரைந்து செல்வான். இதைத்தான் இயேசு "நீ தாகமுடையவனாய் இருக்கவேண்டும்" என்றார்.

இயேசுவிடம் வாருங்கள்

நீங்கள் தாகமுடையவர்களாய் இருந்தால், *"...என்னிடம் வாருங்கள்..."* என்று இயேசு சொன்னார். ஆகவே இரண்டாவது நிபந்தனை இயேசுவிடம் வர வேண்டும். இயேசுவே பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானப் படுத்துகிறவர். உங்களுக்கு ஞானஸ்நானம் வேண்டுமென்றால் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானப்படுத்துகிறவரிடத்தில் வரவேண்டும். இயேசுவைத் தவிர வேறு எந்த மனிதனும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானந்தை உங்களுக்கு கொடுக்க முடியாது.

பானம் பண்ணு

பின்பு அவர் நீங்கள் 'பானம்பண்ண' வேண்டும் என்றார். இது மிகவும் எளியதாகையால் அநேகர் இதைவிட்டு விடுகின்றனர். பருகுவது என்பது உங்களுக்குள்ளே தீர்மானத்தின் அடிப்படையில் சரீரப்பிரகாரமாக ஏற்றுக் கொள்வதாகும். இதுவும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதின் ஒரு பகுதியாக இருக்கிறது. தாகமாயிருத்தல், இயேசுவிடம் வருதல், பருகுதல் ஆகியவை முக்கியமானவை. "சரி தேவன் செய்ய விரும்பினால் செய்யட்டும்" என்று கூறுவது ஆர்வமற்றிருப்பதை குறிக்கின்றது. அது பருகுவதல்ல. பருகுவது என்றால் உனக்குள்ளே ஏற்றுக் கொள்வது என்று அர்த்தமாகும்.

ஒப்புக்கொடு

முன்பே கூறிய காரியங்களில் சரீர சம்பந்தப்பட்ட இரண்டு முக்கியமான

காரியங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவது நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கும்படி தேவனால் உண்டாக்கப்பட்டவை. 1 கொரி. 6:19 சொல்கிறது:

> *19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

இரண்டாவதாக நாம் நமது சரீரத்தின் அவயவங்களை அவருடைய ஊழியத்திற்கு கருவிகளாக அர்ப்பணிக்க வேண்டும். இது நமது பொறுப்பு. ரோமர் 6:13 சொல்கிறது.

> *13 நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர் களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.*

நமது சரீரத்தின் உறுப்புகளை தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும், தத்தம் செய்ய வேண்டும், விட்டுக் கொடுக்க வேண்டுமென்று வேதம் நம்மீது பொறுப்பை வைக்கின்றது. ஓர் அவயவம் முக்கியமாக தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும்: அது நமது நாவு. யாக்கோபு இதை எளிதாக தமது நிருபத்தில் கூறுகிறார். யாக்கோபு 3:8:

> *8 *"நாவை அடக்க (கட்டுப்படுத்த) ஒரு மனுஷனாலும் கூடாது;. . ." என்கிறார்.*

நமது உடலுறுப்புகளைக் கட்டுப்படுத்த நமக்கு தேவனிடமிருந்து உதவி தேவை ஆனால் நமது நாவைப் பொறுத்தமட்டில் சிறப்பு உதவி தேவை. பரிசுத்த ஆவியானவர் தமது முழுமையுடன் வரும்பொழுது அவரால் பாதிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, தேவமகிமைக்குப் பயன்படுத்தப்படும் முதல் உறுப்பு நாவு. புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு முறையும் மக்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, ஆவியின் முழுமையைப் பெறும்பொழுது முதலாவது ஏற்படும் விளைவு, அவர்கள் நாவினின்று வெளிப்படும் வார்த்தைகளாகும். அவர்கள் பேசுவார்கள், தீர்க்கதரிசனம் உரைப்பார்கள், துதிப்பார்கள், பாடுவார்கள், நவமான மொழியில் பேசுவார்கள் - எங்கும் வாய் செயல்பாட்டில் இருப்பதைக் காண்கிறோம். நீங்கள் இயேசுவிடம் வந்து பருகும்பொழுது, இறுதி விளைவாக வாயிலிருந்து வழிந்தோடும். இக்கோட்பாடு, மத்தேயு 12:34ல் இயேசுவால் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது: *"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்."*

உங்கள் இருதயம் நிரம்பி வழிய ஆரம்பிக்கும்பொழுது, வாயின் வார்த்தைகளில் வழிந்தோடும். போதுமானதை மட்டுமல்ல, நிரம்பி வழிகிற அனுபவத்தை தேவன் தர விரும்புகிறார். *"...அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்..."* என்று இயேசு கூறியதை மறந்து போகாதீர்கள். இதுவே தேவனுடைய இறுதி நோக்கம்.

தேவனின் நிபந்தனைகள்

பரிசுத்த ஆவியின் முழுமையைப் பெற்றுக் கொள்வதற்கு நான் வேதத்தில் கண்ட ஏழு நிபந்தனைகளைக் கீழே தருகிறேன்.

1. *மனந்திரும்பு.*
2. *ஞானஸ்நானம் பெற்றுக் கொள்.*
3. *தேவனிடம் கேள்.*
4. *தாகமுள்ளவனாயிரு.*
5. *ஞானஸ்நானப்படுத்துபவராகிய இயேசுவிடம் வா.*
6. *பானம்பண்ணு - உன்னில் பெற்றுக்கொள்.*
7. *உன் சரீரத்தை ஆவியானவரின் ஆலயமாக ஒப்புக்கொடு. உன் உடலுறுப்புகளை நீதியின் ஆயுதங்களாக ஒப்புக்கொடு.*

ஒரு வேளை இவையனைத்தையும் நான் எப்படிச் செய்வது என்று நீங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கலாம். நான் உங்களுக்கு விளக்கிய யாவற்றையும் உட்படுத்துகிற ஓர் மாதிரி ஜெபத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதை மறுபடியும் மறுபடியும் வாசித்துப் பாருங்கள். அது உங்கள் ஜெபமாயிருக்குமாயின், கர்த்தரிடம் அந்த ஜெபத்தை சத்தமாய் ஏறெடுங்கள்.

கர்த்தராகிய இயேசுவே, நான் உம்முடைய பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு தாகமாயிருக்கிறேன். நான் என் சரீரத்தை உமது ஆலயமாக ஒப்புக்கொடுக்கிறேன். என் உடல் உறுப்புகளை சிறப்பாக, என்னால் கட்டுப்படுத்த முடியாத என் நாவையும் நீதியின் ஆயுதங்களாக ஒப்புக்கொடுக்கிறேன். என்னை நிரப்பும், உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என் உதடுகள் மூலமாய் துதி மற்றும் ஆராதனையின் நதிகளாய் வெளிப்படட்டும். ஆமென்.

இந்த ஜெபத்தை உண்மையாக நீங்கள் செய்திருந்தால் அது கேட்கப்பட்டிருக்கும். அதன் பலன் வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் பெற்றுக் கொள்ளப் போகும் நிறைவு உங்களை வியப்பில் ஆழ்த்தும்.

தனிப்பட்ட ஆய்வு

இப்போது, *உங்களிலுள்ள தூய ஆவியானவர்* பாட கேள்விகளுக்காக, இணைப்பு “அ”வுக்கு திருப்பிக்கொள்ளுங்கள். இக்கேள்விகளுக்கான பதில்கள், இணைப்பு “ஆ”வில் கொடுக்கப்பட்டுள்ளன.

தேவனின் மருந்து புட்டி

“பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.”

3 யோவான் 2

01

ஆலோசனையின்படி உட்கொள்

என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து, தேவனுடைய அதிசயமான "மருந்துப் புட்டியைக்" குறித்து நான் எவ்வாறு அறிந்துகொண்டேன் என்று உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இப்பெரிய ஆசீர்வாதத்தைக் குறித்து இரண்டாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் நான் கற்றுக்கொண்டேன்.

நான் ஒரு ஆங்கிலேயனானபடியால், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, பிரிட்டிஷ் இராணுவத்தில் ஐந்தரை ஆண்டுகள் மருத்துவப் பணியாளராக வேலை செய்தேன் (இதற்கு அமெரிக்க மக்கள் "மருத்துவமனை உதவியாளர்" என்ற பெயரைக் கொடுப்பார்கள்.) முதல் மூன்று ஆண்டுகளில் வட ஆப்பிரிக்காவின் பாலைவனங்களில் நான் பணியாற்றினேன்: முதலாவது எகிப்து, பின்பு லிபியா, இறுதியாக சூடான்.

இரு காரியங்களுக்கு நாங்கள் பாலைவனத்தில் பாதுகாப்பற்றிருந்தோம்: மணல் மற்றும் சூரியன். அமைக்கப்பட்ட ஓர் சாலையை கண்களால் காணாமல் ஓராண்டு வரை பாலைவனத்தில் கழித்தேன். நாங்கள் மணலில் பயணம் செய்தோம், மணலில் உறங்கினோம், பல நேரங்களில் மணலையே உண்பது போல ஓர் உணர்வு ஏற்பட்டது. இரவும் பகலும் அதற்குப் பாதுகாப்பற்றிருந்தோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், சூரியனோடு இணைந்து, பாலைவன வாழ்க்கை அநேகருடைய சருமத்தை மிக பயங்கரமாக பாதித்தது, அவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். பிரதானமாக என் கை மற்றும் கால்களில் இப்பிரச்சனை வெளிப்பட்டு, என் சருமத்தில் பிளவுகள் தோன்ற ஆரம்பித்தன. பல விதங்களில் நான்

செயலாற்ற முடியாமல் போனேன். என்னுடைய ராணுவ பிரிவுக்கு மேல் அதிகாரியாய் இருந்தவர், என்னை மருத்துவமனையில் சேர்க்க விருப்பமில்லாமல், என்னை அனுப்பிவிட்டால், என்னுடைய உதவியை அவர் இழந்துவிடுவார் என அறிந்து, அதிகம் போராடினார். இதன் விளைவாக பல மாதங்களாய் நான் நொண்டி நொண்டி நடந்து, என்னுடைய வேலைகளையெல்லாம் செய்து வந்தேன். இறுதியாக வேறு வழியில்லாமல் அவர் என்னை மருத்துவமனையில் சேர அனுமதித்தார். நான் மூன்று அல்லது நான்கு இராணுவ மருத்துவமனைகளுக்குச் சென்று, ஒரு வருடம் வரை மருத்துவமனையிலேயே இருந்தேன். இரண்டு ஆண்டுகளை மத்திய கிழக்கு நாடுகளில் ராணுவ பணியாற்றி, இதே போன்ற பிரச்சனைகளுடன் பதினெட்டு மாதங்களை மருத்துவமனையில் கழித்தவர்களை அந்நேரத்தில் சந்தித்தேன்.

என்னுடைய பிரச்சனைக்குப் பல விரிவான நோய் கண்டறியும் ஆய்வுகள் செய்யப்பட்டன. ஒவ்வொன்றும், முன்பு கொடுக்கப்பட்ட பெயரைவிட சற்று நீளமான பெயரை என் வியாதிக்கு கொடுத்தது. இறுதியாக நாட்பட்ட படைச் சிரங்கு என்று கண்டறிந்து, மிகச் சிறப்பான மருத்துவ சிகிச்சை பெற்றேன். ஆனால் சிகிச்சையினால் எனக்கு எந்த முன்னேற்றமுமில்லை. இதே போன்ற நோய் அறிகுறியுள்ள மற்ற இராணுவ வீரர்களையும் கண்டேன், அவர்களுக்கும் சிகிச்சையால் எந்த பலனும் உண்டாகவில்லை.

தீக்காயங்கள் போன்ற தீவிர பிரச்சனைகளுள்ளவர்கள் பொது கப்பல் மூலம் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால் என்னுடைய பிரச்சனை அவ்வளவு மோசமானது அல்ல என்பதினாலும், பிரிட்டிஷ் இராணுவத்தில் என்னுடைய பதவி முக்கியத்துவமற்றதாயிருந்தபடியாலும், பணத்தை வீண் செலவு செய்து அவர்கள் என்னை தென் ஆப்பிரிக்கா அனுப்பவில்லை. ஆகையால், அங்கேயே ஒவ்வொரு நாளையும், என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்குமோ என யோசித்துக் கழித்தேன். ஓர் ஆண்டை மருத்துவமனையில் கழிப்பது, ஒரு நீண்ட காலம் போல் தோன்றும் - அனுபவத்திலிருந்து கூறுகிறேன்.

நான் புதிதாக தேவனோடு ஓர் உண்மையான, தனிப்பட்ட உறவில் அப்பொழுது தான் பிரவேசித்திருந்தேன். மறுபிறப்படைந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றிருந்தேன். ஆனால், வேத பின்னணி இல்லாமல், வேதத்தைக் குறித்து, அறிவற்றிருந்தேன். என்னிடம் வேத புத்தகம் இருந்தது ஆனால் தேவனைத் தவிர அல்லது வேதத்தைத் தவிர, உதவிக்கு நான் திரும்பக்கூடியவர் வேறொருவருமில்லை. என்னுடைய சரீரப் பிரகாரமான நிலையைக் குறித்து வேதம் என்ன சொல்லும் என்று அறிய ஆவலாய் அதை ஆராய ஆரம்பித்தேன். சுகத்தைக் குறித்து எந்தத் தத்துவங்களும் எனக்குத் தெரியாது. சுகம் எனக்கு அவசியமான ஒன்று

என்பதை மட்டும் நன்கு அறிந்திருந்தேன். செய்வதற்கு வேறொன்றும் இல்லை, வேதம் என்னிடமிருந்தது, வாசிக்க நேரமுமிருந்தது. ஆகையால் தேவனை நம்பினால் என் சரீரத்துக்கு சுகம் கிடைக்கும் எனக் காண்பிக்கும் பகுதிகள் ஏதாகிலும் வேதத்தில் உண்டா என்று தேடினேன்.

ஒரு நாள் நீதிமொழிகளின் புத்தகத்தில் சில வார்த்தைகளை நான் கண்டு, இவைகளை "தேவனுடைய மருந்து புட்டி" என அழைக்கக் கற்றுக்கொண்டேன். அப்பகுதி நீதிமொழிகள் 4:20-22 ஆகும்.

> *என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய், அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆராக்கியமுமாம்.*

"உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்" என்ற வார்த்தைகள், என் கவனத்தை ஈர்த்தது. "உடலுக்கெல்லாம்" என்பது முழு மாம்ச சரீரத்தையும் குறிக்கும் என புரிந்தது. ஆரோக்கியம்! என் முழு சரீரத்திலும் ஆரோக்கியம் இருந்தால், எனக்குள் வியாதிக்கு இடமே இருக்காது, இதைத் தான் தேவன் எனக்கு வாக்களிக்கிறார் என்று நான் யோசித்தேன்.

பின்பு அந்த வேதாகமத்தின் ஓரத்திலுள்ள குறிப்புகளைப் பார்க்கும்போது "ஆரோக்கியம்" என்ற வார்த்தைக்கு வேறொரு மொழிபெயர்ப்பு "மருந்து" என்று கூறுவதைக் கவனித்தேன். என்னுடைய சூழ்நிலைக்கு இது இன்னும் பிரயோஜனமாயிருந்தது. எனக்கு மருந்தாயிருந்து என் சரீரம் முழுவதற்கும் ஆராக்கியத்தைக் கொண்டு வரும் ஒன்றை தேவன் வாக்களிக்கிறார் என உணர்ந்தேன். எனக்குத் தேவையானது இதுவே என்று யோசித்தேன்! ஆகையால் அந்த வார்த்தைகளைத் திரும்ப திரும்ப வாசிக்க ஆரம்பித்தேன். இச்சலுகை தேவனுடைய வார்த்தையின் மூலம் எனக்குக் கொடுக்கப்படுகிறதைக் கண்டேன்.

20ம் வசனம் இப்படியாகக் கூறுகிறது, "என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்". பின்பு 22ம் வசனம், "அவைகளை (தேவனுடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும்) கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்" என்று கூறுகிறது. ஆகையால் இவையனைத்தும் தேவனுடைய வார்த்தையிலும் வாக்குத்தத்தங்களிலும்தான் உள்ளது.

". . . அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு" என்ற வார்த்தைகள்– வேதத்தை வாசிப்பதைக் காட்டிலும் சற்று அதிகம் என உணர்த்தின. தேவன் எதை அளிக்க விரும்புகிறார் எனக் கண்டறியும் விதத்தில் வேதத்தை வாசிப்பதாகும் என்பதை உணர்ந்தேன்.

அச்சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய எல்லா மருத்துவ சிகிச்சையும் எனக்களிக்கப்பட்டும் பயனற்றதாய் இருக்கக் கண்ட நான், ஒரு தீர்மானத்தைச் செய்தேன் - மிக சிறுபிள்ளைத்தனமான தீர்மானம். தேவனுடைய வார்த்தையை என் மருந்தாக உட்கொள்ள முடிவு செய்தேன். என் வாழ்க்கையில் இது மிக முக்கியமான ஓர் தீர்மானமாயிற்று. அந்தத் தீர்மானத்தைச் செய்த போது தேவன் என்னோடு பேசினார், சத்தமாக அல்ல ஆனால் தெளிவாகப் பேசினார், ‘‘ஒரு மருத்துவர் மருந்து கொடுக்கும்போது அதை உட்கொள்ளுவதற்கான ஆலோசனை, மருந்து புட்டியின் மேலிருக்கும். இதுதான் என்னுடைய மருந்துபுட்டி, இம்மருந்தை உட்கொள்ள தேவையான ஆலோசனைகள் புட்டியின் மேல் இருக்கின்றன, நீ அவைகளை நன்றாய் வாசி” என்று கூறினார்.

ஒரு மருத்துவர், தன்னுடைய ஆலோசனையின்படி மருந்து உட்கொள்ளாத நபருக்குச் “சுகமடைவீர்கள்” என உறுதி கூற முடியாததை தேவன் எனக்கு நினைப்பூட்டினார். நானும் ஒரு மருத்துவ உதவியாளராக இருந்தபடியால் எனக்கு இது தெளிவாகப் புரிந்தது.

உடனே அந்த ஆலோசனைகளைப் படிக்க நான் முற்பட்டேன். தேவனுடைய வார்த்தையை சரீரத்துக்கு மருந்தாக உட்கொள்ளுவதில் நான்கு குறிப்பான ஆலோசனைகள் இருக்கக் கண்டேன். அந்த ஆலோசனைகள் இவைகளே:

1. என் வார்த்தைகளைக் கவனி
2. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்
3. அவைகள் உன் கண்களைவிட்டுப் பிரியாதிருப்பதாக
4. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்

அம்மருந்திலிருந்து எவ்வித நன்மையையும் பெற வேண்டுமானால் இந்த நான்கு ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என உணர்ந்தேன்.

இதைத் தொடர்ந்து நடந்த எல்லாவற்றையும் நான் விவரிக்க முடியாது. ஆனால் பொதுவாக மக்கள் எப்படி மூன்று வேளை உணவுக்குப் பின் மருந்து அருந்துவார்களோ அப்படியே நானும் ஒரு நாளில் மூன்று முறை வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். ‘‘தேவனே இவ்வார்த்தைகள் என் உடலுக்கெல்லாம் மருந்தாகும் என்று சொன்னீரே, இப்பொழுது நான் இயேசுவின் நாமத்தில் என் மருந்தை உட்கொள்ளுகிறேன்’’ என ஜெபிப்பேன். இவ்விதமாய் வேதத்தை வாசிக்க, மூன்றே மாதங்களில், தேவன் வாக்குப்பண்ணின விளைவை ஏற்படுத்தியது. என் சரீரத்தின் முழுவதிலும் நான் ஆரோக்கியம் அடைந்தேன்.

இந்த அனுபவத்தைப் பல ஆண்டுகளுக்கு முன் ஒலி நாடாவில் பதிவு செய்தேன். சமீப காலத்தில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒரு வாலிபனை நான் இங்கிலாந்து தேசத்தில், லண்டனில் சந்தித்தேன். அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன். இருபது ஆண்டுகளாக படைச் சிரங்கினால் அவதிப்பட்டதாகக் கூறினார். ஒரு நாள் என் ஒலிநாடாவைக் கேட்டு, அதின்படி செய்ய தீர்மானித்தார். அவருடைய அனுபவத்தில், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளேயே அவர் பரிபூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டார். ஆகையால் இன்று வரையிலும் தேவனின் மருந்து கிரியை செய்கிறது என்பதற்கு அவ்வாலிபன் கூறியது ஓர் சாட்சியாகும்.

இப்பொழுது தேவனுடைய மருந்து புட்டியில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை எப்படி அப்பியாசப்படுத்துவது என்பதைக் குறித்து நான் கற்றுக்கொண்ட பாடங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

02

கவனம் செலுத்து

"என் வார்த்தைகளைக் கவனி" என்பது, தேவனின் மருந்து புட்டியிலிருக்கும் நான்கு ஆலோசனைகளில் முதல் ஆலோசனையாகும். தேவன் நம்மோடு பேசும்போது, ஒருங்கிணைந்த நம்முடைய கவனம் அவருக்குத் தேவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மோடு பேச ஆயத்தமாயிருந்தால், தேவனுக்கு மரியாதை செலுத்தி நம்முடைய முழு கவனத்தையும் கொண்டு கேட்க வேண்டும் என்று நமக்குள்ளிருக்கும் ஒழுக்கம் நமக்குக் கற்றுக்கொடுக்கும். ஆனால் இன்று பலருடைய மனநிலை அப்படி இருப்பதில்லை. ஊடகத்தின் வளர்ச்சியினாலும் – (ரேடியோ, தொலைக்காட்சி போன்றவை) தற்காலத்துக் கலாச்சாரத்தினாலும், நாம் ஒரே நேரத்தில் இரண்டு காரியங்களுக்குச் செவி கொடுக்கப் பழகிவிட்டோம். "பிரிந்த கவனம்" என்று அழைக்கப்படக்கூடிய ஓர் வியாதியினால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். சில வீடுகளுக்குள் செல்லும்போது, வாலிப பிள்ளைகள், தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே தங்கள் வீட்டுப்பாடங்களை எழுதுவதைக் கண்டு நான் வியப்படைகிறேன்; அவர்கள் இரண்டில் எதற்கும் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தவில்லை.

பின்னணி இசை என்று அழைக்கப்படும் காரியம் இன்று அதிகமுண்டு. நாம் பேசிக்கொண்டே ஒரு காதினால் பின்னணியில் இசைத்துக்கொண்டிருக்கும் பாடலைக் கேட்கிறோம். என்னை பொறுத்த வரை, நான் ஒரே காரியத்தில் மட்டும் கவனம் செலுத்த விரும்புவேன், கவனத்தை சிதற விடுவது எனக்குப் பிரியமில்லை. இது தேவன் எனக்குள் உருவாக்கின தன்மை, இதை நான் விட்டுவிடமாட்டேன். நான்

பேசிக்கொண்டிருந்தால், என்னிடம் பேசுகின்ற நபர் சொல்லுவதைக் கேட்க விரும்புகிறேன். நான் பாடலைக் கேட்டால், அந்த இசையை மட்டும் கேட்க விரும்புகிறேன். இசை எனக்குப் பிரியமான ஒன்று. அதைக் கேட்கும்போது, முழு கவனத்தோடு கேட்க விரும்புகிறேன்.

வேதத்திலெங்கும் தேவனுடைய ஆரோக்கியத்தைப் பெற முக்கியமான நிபந்தனை, செவிகொடுப்பதாகும். செவிகொடுத்தல் ஆரோக்கியத்துக்கான திறவுகோலாயிருக்கிறது. இயேசு தன் சீஷர்களைப் பார்த்து, "நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்" என்று கூறினார். "நீங்கள் எப்படி கேட்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள்" என்றும் கூறினார். அவ்விரண்டையும் நாம் இணைக்க வேண்டும் - எதைக் கேட்கிறோம், எப்படிக் கேட்கிறோம்.

ஆரோக்கியத்தோடு சம்பந்தப்பட்ட இன்னொரு பழைய ஏற்பாட்டின் பகுதி, இதையே வலியுறுத்துகிறது. மோசேயின் மூலமாய் தேவன் இஸ்ரவேலுக்குக் கூறும் வார்த்தைகள், யாத்திராகமம் **15:26**இல் உள்ளன:

> *நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.*

அந்தக் கடைசி வாக்கியத்தைக் கவனியுங்கள். இதன் அர்த்தம், "மருந்து புட்டியைக் கொடுக்கிறவரும் நானே, உன் மருத்துவரும் நானே". தற்காலத்து எபிரெயத்தில் இப்பகுதியை, "நானே உன் மருத்துவராகிய கர்த்தர்" என்று மொழிப் பெயர்க்கலாம். தேவன் தன்னுடைய ஜனங்களைப் பார்த்து, "நான் உன் சரீரத்தின் மருத்துவராயிருக்க ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் சில நிபந்தனைகள் உண்டு" எனக் கூறுகிறார். "இவைகளைச் செய்தால்" என்று நிபந்தனையைத் தேவன் இணைத்துவிடுகிறார்.

முதல் நிபந்தனை, அடிப்படையானது: " உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டால்", மறுபடியும் நாம் எதைக் கேட்கிறோம் என்பதுதான் முக்கியம். எபிரெயத்தில் "கவனமாய்க் கேட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தை "கேட்பது" என்ற வினைச்சொல்லின் மறுபதிவாயிருக்கிறது. "நீ செவிகொடுத்து, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்பாயானால்" என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு. இங்கே எல்லா முக்கியத்துவமும் கேட்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியத்தைத் தேடிக்கொண்டிருக்கும்போது, நீதிமொழிகளில் இவ்வசனத்தைக் கண்டு நான் என்னையே கேட்டுக்கொண்டது இதுதான்: "செவிகொடுத்துக் கேட்கிறதென்றால் என்ன?" தேவனே எனக்குப்

பதிலைக் கொடுத்தது போல் இருந்தது. அவர் சொன்னார், “உனக்கு இரண்டு காதுகள் உள்ளன, ஒரு இடது காது, ஒரு வலது காது, செவி கொடுத்துக் கேட்பதென்றால், இடது மற்றும் வலது காதுகள் இரண்டினாலும் எனக்குச் செவி கொடுப்பதாகும். இடது காதினால் எனக்குச் செவிகொடுத்து, வலது காதினால் வேறெதையும் கேட்காதே, அதின் விளைவு குழப்பமாகத்தான் இருக்க முடியும்”.

கேட்டு, செவி கொடுத்து, தேவனுக்கே முழு கவனத்தையும் செலுத்துவதற்கு இங்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதுதான் தேவனின் மருந்து புட்டியிலுள்ள பிரதான ஆலோசனை. எதைக் கேட்கிறோம், எப்படிக் கேட்கிறோம் என்பது முக்கியம். ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு மட்டும் இது திறவுகோலல்ல, விசுவாசத்தைப் பெறுவதற்கான திறவுகோலும் இதுவே, இவ்விரண்டும் இணைந்து செல்லும் காரியங்கள் என்று அறிவோம். விசுவாசம், தேவன் வாக்களித்த ஆரோக்கியத்தைப் பெறச் செய்கிறது, மருந்தின் முழு பலன்களையும் பெறச் செய்கிறது.

இந்த நீண்ட மருத்துவமனைவாசத்தில், எனக்கு உண்மையாக்கப்பட்ட, மிகவும் பிரியமான ஓர் வசனம், ரோமர் 10:17

> *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

எனக்கு விசுவாசமிருந்தால் தேவன் என்னை சுகமாக்குவார் என அறிவேன், என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பேன். ஆனால் எனக்கு விசுவாசமில்லையே! எனக்கு விசுவாசமில்லை என்று சொன்னவுடன் ஜான் பனியன் எழுதின ‘‘மோட்ச பிரயாணம்’’ புத்தகத்தில் வரும் “நம்பிக்கையின்மையின் உளையான சேற்றில்” அமிழ்ந்து போவது போல் உணருவேன் - இருளான, தனிமையான சோர்வின் பள்ளத்தாக்கு.

ஒரு நாள் வேதத்தை வாசிக்கும் போது, என் கண்கள் ரோமர் 10:17ன் மீது விழுந்தன: “விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” **“விசுவாசம் வரும்"** என்ற இரண்டு வார்த்தைகள் என்னை நோக்கி தாவினதுபோல் இருந்தது. நீங்கள் சோர்ந்து போக தேவையில்லை. ஒரு வேளை உங்களுக்கு விசுவாசமில்லாமல் இருக்கலாம், ஆனால் விசுவாசம் வரும். நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

உடனே விசுவாசம் எப்படி வரும் என அறிய நான் தேடின போது, ‘‘விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினாலே வரும்” என்று கவனித்தேன். மறுபடியும் நீதிமொழிகள் 4:20-22ல் சொல்லப்பட்டது போல நான் தேவனுடைய வார்த்தைக்கு திருப்பி விடப்பட்டேன். அந்த வசனத்தை ஆராய ஆரம்பித்து, தேவனுடைய வார்த்தையில் தான் ஆரம்பிக்க வேண்டுமென கண்டேன். தேவனுடைய

வார்த்தைக்கு கவனமாய் செவி கொடுக்கிறோம், அந்த செவிகொடுத்தலினாலே, தேவனுடைய வார்த்தை ''கேள்வி''யை உருவாக்குகிறது. "கேள்வி" என்பது, தேவன் பேசுவதை கேட்கத்தக்கத் தன்மையாகும். அந்த கேள்வியினாலே விசுவாசம் உருவாகிறது.

முதலாவது செவி கொடுக்கும் போது, தேவனுடைய வார்த்தையே, கேள்வியை உண்டாக்குகிறது. நாம் கேட்பதை தொடரும்போது, அந்த கேள்வியிலிருந்து விசுவாசம் உருவாகும். நாம் தேவனுடைய வார்த்தையை எப்படி அண்டிக்கொள்ளுகிறோம் என்பது முக்கியமாகும். ஒருங்கிணைந்த கவனத்தோடு வருகிறோமா? இரண்டு காதுகளினாலும் (ஒருங்கிணைந்த கவனத்தோடு) செவி கொடுக்கிறோமா? தேவனுடைய வார்த்தையின் மீது கவனம் முழுவதும் இருக்கிறதா? மனநிலையிலும், ஆவிக்குரிய நிலையிலும் "கேள்வி" என்று வேதம் அழைக்கும் அந்நிலைக்குள் சென்று தேவன் சொல்லுகிறதை நாம் கேட்க முடிகிறதா?

அநேகர் வேதத்தை வாசிப்பார்கள் ஆனால் தேவன் பேசுவதை கேட்க மாட்டார்கள். அவர்களுடைய மனது மற்ற காரியங்களால் நிறைந்திருப்பதால், தேவ சத்தத்தை அவர்கள் கேட்பதில்லை. எப்படி வாடகை செலுத்துவோம், இயற்கை சூழல் எப்படி இருக்கும், அல்லது அரசியல் சூழ்நிலையை குறித்து கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்களுடைய மனதில் கிரியை செய்யும் மற்ற சக்திகளின் விளைவாக அவர்கள் கேள்வியை வளர்ப்பதேயில்லை. நாம் கேள்வியை வளர்க்க வேண்டும், அந்த கேள்வியிலிருந்து விசுவாசம் உருவாகும். தேவனுடைய வார்த்தையைக் குறித்ததான மனநிலை, கேள்வியை உருவாக்கும், அந்த கேள்வியினாலே விசுவாசம் உருவாகும். நாம் எப்போதுமே தேவனுடைய வார்த்தைக்கும், அதை எப்படி பெற்றுக்கொள்ளுகிறோம் என்பதற்கும் திருப்பி விடப்படுகிறோம். ஆகையால் தேவனுடைய மருந்து புட்டியில் இருக்கும் முதல் ஆலோசனை "என் வார்த்தைகளை கவனி."

03

செவியைச் சாய்த்துக் கேள்

இரண்டாவது ஆலோசனையை இப்பொழுது பார்ப்போம், "உன் செவியைச் சாய்." "சாய்" என்பதை நாம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். "சாய்" என்பதற்கு அர்த்தம் குனிவதாகும், "சரிவு" என்பது சாய்வான மலையையும் குறிக்கும். ஆகையால் "செவியைச் சாய்ப்பது" என்றால் நம்முடைய செவியை குனியச் செய்வதாகும். மனித சரீரத்தின் ஓர் உண்மை என்னவென்றால் உங்கள் தலையை சாய்க்காமல் நீங்கள் செவியை சாய்க்க முடியாது. உங்கள் செவியை சாய்க்கும் போது, உங்கள் தலையை சாய்க்கிறீர்கள். அப்படியானால் என்ன? தாழ்மை மற்றும் கற்றுக்கொள்ளக்கூடிய தன்மையை குறிக்கும். இதை நான் அனுபவத்திலிருந்து, உதாரணங்களோடு விளக்குகிறேன்.

என் பிரச்சனைக்கு பதிலை தேடி, மருத்துவமனையில் வேதத்தை ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, ஆரோக்கியம், ஆசீர்வாதம் மற்றும் செழிப்பை குறித்து அநேக வாக்குத்தத்தங்களை கண்டேன். ஆனால் என்னுடைய மனநிலை என்னுடைய பின்னணியினால் பாதிக்கப்பட்டதாயிருந்தது. நம்மெல்லாருடைய வாழ்விலும் இது உண்மையாகும்.

நான் சிறு வயதில் சென்று வந்த சபை பிரிவின் மக்கள் மகிழ்ச்சியாய் இருப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களை பார்த்து, ஓர் கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருக்கவே கூடாது என்று நினைத்தேன். ஆகையால் ஒரு கிறிஸ்தவனாக மாறக்கூடாதென்று தீர்மானித்தேன். ஏனென்றால் நான் மகிழ்ச்சியாயிருக்க விரும்பினேன். தெய்வீக தலையீட்டினால் என் வாழ்க்கையில் அந்நிலை மாறியது. ஆனால் இத்தகைய பழமையான எண்ணங்களை தொடர்ந்து என் மனதில் சுமந்து வந்தேன்.

வேதத்தில் திரும்ப திரும்ப ஆரோக்கியம், சுகம், பெலன், நீடித்த ஆயுள், செழிப்பு மற்றும் பரிபூரணத்தை குறித்து வாக்குத்தத்தங்களை பார்க்கும்போது, "இல்லை! இவை உண்மையல்ல! உண்மையென்று நம்புவதற்கு இவை அளவிற்கு அதிகமான நன்மையை அளிக்கின்றன! மதம் இவ்வளவு நன்றாக இருக்க முடியும் என்பதில் நம்பிக்கையில்லை!" என்று என் தலையசைத்துக் கூறுவேன். சங்கீதம் 103ல், "உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதைப்போலாகும்" என்று தேவன் கூறுகிறதை வாசித்த போதும், நான் நினைத்தேன், *இது சாத்தியமல்ல. தேவன் அப்படி இருக்க முடியாது. நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால் சோகமாக இருக்க தான் பழக வேண்டும்.*

நான் இவ்விதமாய் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, தேவன் என்னோடு பேசினார், சத்தமாக அல்ல, ஆனால் ஓர் நபர் என்னிடம் பேசுவது போல் தெளிவாக பேசினார்: "மாணவன் யார், ஆசிரியர் யார்? எனக்கு பதில் சொல்." என்று கேட்டார். ஒரு நிமிடம் சிந்தித்து விட்டு, "ஆண்டவரே நீர் தான் ஆசிரியர், நான் மாணவன்" என்று பதிலளித்தேன்.

"உனக்கு கற்றுக்கொடுக்க எனக்கு அனுமதி கொடுப்பாயா?" என்று அவர் மறுபடியும் கேட்டார்.

அப்போது தான், தேவன் எனக்கு கற்றுக் கொடுப்பதற்கு அவருக்கு இடம் கொடாமலிருந்ததை உணர்ந்தேன். முன் முடிவு செய்த யோசனைகள் என் மனதில் இருந்தபடியால், தேவன் தன்னுடைய வார்த்தையில் சொல்லும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் என் மனம், இறுகிப் போன எண்ணங்களால் தடை செய்யப்பட்டிருந்தது. "உன் செவியைச் சாய், உன் பாரபட்சங்களை விட்டு விடு, உன் கடின கழுத்தை பணியச் செய், நான் எவ்வளவு நல்லவரென்று உனக்கு சொல்லுவேன், உனக்காக ஆயத்தம் பண்ணின வழிகள் எவ்வளவு அதிசயமானவைகள் என்று நான் காண்பிக்கட்டும். என்னை மனித அளவுகோலால் அளக்காதே, ஏனென்றால் நான் தேவன். நான் சர்வவல்லவரும், கிருபை நிறைந்தவருமாயிருக்கிறேன், உண்மையும் இரக்கமுமுள்ள தேவன்" என்று தேவன் என்னோடு பேசுவதை உணர்ந்தேன்.

தேவனுடைய வார்த்தையைக் குறித்து மிக முக்கியமான ஓர் கோட்பாடை இது வெளிப்படுத்துகிறது. நாம் தேவனுடைய வார்த்தையை எவ்வளவு ஏற்றுக்கொள்ளுகிறோமோ, அவ்வளவு தான் அது நமக்குள்ளே கிரியை செய்கிறது. நாம் பெற்றுக்கொள்ளாவிட்டால், நமக்கு ஒரு நன்மையும் செய்யாது. யாக்கோபு 1:18-21 ஒரு வல்லமையான பகுதி. தேவனைக் குறித்து பேசும்போது:

அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

(தேவனுடைய வார்த்தையினால் தான் நாம் கிறிஸ்தவர்களாகிறோம் என்பதை கவனியுங்கள். தேவன் நம்மை சத்திய வசனத்தால் ஜெநிப்பித்தார்.)

ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

தேவனுடைய வார்த்தை உங்களை இரட்சித்து, சுகப்படுத்தி, எண்ணற்ற விதங்களில் உங்களை ஆசீர்வதிக்கக்கூடும் ஆனால் நீங்கள் அதை சாந்தத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் எல்லா துர்குணத்தையும் ஒழித்துவிட வேண்டும். துர்க்குணமுடையவரின் குணாதிசயம் என்ன? கற்றுக்கொடுக்கப்படும்போதோ, கண்டிக்கப்படும்போதோ, எதிர்த்து பேசுவதே துர்க்குணத்தின் அடையாளமாயிருக்கிறது. தேவன் சொல்லுகிறார், "எதிர்த்து பேசாதே. நான் ஒன்றைச் சொல்லும் போது, என்னோடு வாக்குவாதம் செய்யாதே. இது உண்மையல்ல, சாத்தியமல்ல, அப்படி இருக்க முடியாது என்று என்னிடம் சொல்லாதே. உனக்கு கற்றுக்கொடுக்க எனக்கு இடம் கொடு." அது தான் சாய்க்கப்பட்ட செவியின் சாராம்சம். தேவனிடத்தில் வந்து, "தேவனே நீரே ஆசிரியர்; நான் மாணவன். நீர் கற்பிப்பதை கற்க ஆயத்தமாயிருக்கிறேன். என் செவியை சாய்த்து கேட்கிறேன்" என்று சொல்வதாகும்.

ஆரம்பநிலையில் வேதத்தை வாசிக்கும்போது நம்மெல்லாருக்கும் சிந்தையில் தடைகள் உண்டென்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். பல நேரங்களில் இவைகள் நம்முடைய பின்னணியினால் ஏற்படுகின்றன. நம்மில் பலர் கடந்த காலங்களில் குறிப்பிட்ட சபை பிரிவுகளோடு ஐக்கியம் வைத்ததுண்டு. இன்னும் சிலர் அப்படிப்பட்ட ஐக்கியத்தில் தொடர்ந்துகொண்டிருக்கலாம். சபை பிரிவுகளுக்கு நான் எதிராளியல்ல, ஆனால் ஒவ்வொரு சபை பிரிவுக்கும் தனக்குரிய பெலன்களும் உண்டு, பெலவீனங்களும் உண்டென்று நான் சுட்டி காட்ட விரும்புகிறேன். சத்தியத்துக்கு உண்மையாயிருக்கும் பகுதிகளும் அவைகளில் உண்டு, சத்தியத்துக்கு புறம்பான பகுதிகளும் உண்டு. நம்முடைய சபை பிரிவின் பின்னணியிலிருந்து நாம் தேவனை அளவிட்டால் அல்லது நம்முடைய

சபை பிரிவு கற்றுக்கொடுக்கும் போதனைகளின் அடிப்படையில் வேதத்தை நியாயந்தீர்ப்போமானால், நம்மை ஆசீர்வதித்து நமக்கு உதவ கூடியதும், தேவன் பகிர்ந்தளிக்கிறதுமான சத்தியத்தின் பெரும்பகுதியை நம்முடைய மனதிலிருந்து தவிர்த்து விடுவோம்.

உதாரணத்துக்கு, சில சபைகள், அற்புதங்களின் காலம் முடிவடைந்துவிட்டதென்று கற்றுக்கொடுக்கிறார்கள். வேதத்தில் அப்படிப்பட்ட கருத்துக்கு எவ்வித அடிப்படையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு எதிர்மறையான கருத்தை கூறும் எண்ணிறந்த வசனங்களை என்னால் சொல்ல முடியும். ஆகையால், தேவன் உங்களுக்கு ஓர் அற்புதத்தை வாக்களிக்கும்போது, அற்புதங்களின் காலம் முடிவடைந்ததென்ற சிந்தையோடு நீங்கள் வருவீர்களானால், அதை நீங்கள் கேட்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியாது.

சில கிறிஸ்தவ குழுக்கள், பரிசுத்தமாயிருப்பதற்கு ஏழையாக இருக்க வேண்டுமென கற்றுக்கொடுக்கின்றன. ஏழையாயிருப்பதை தவிர வேறெந்த நிலையிலிருந்தாலும் பாவம் என்பார்கள். வேதத்தில் பல முறை தேவன் உங்களை செழிப்பினால் ஆசீர்வதிக்க விரும்புவதாக கூறப்பட்டுள்ளது, இதுவே அவருடைய நோக்கமாயிருக்கிறது. உங்களுக்கோ ஏழையாய் தான் இருக்க வேண்டுமென்ற மனநிலை இருக்குமானால், வேதத்தின் அடிப்படையில் தேவன் உங்களுக்கு வாக்களிக்கும் செழிப்பின் ஆசீர்வாதத்தை நீங்கள் பெற முடியாது. 3 யோவான் 2லு ள்ள வசனத்தை நாம் எல்லாரும் மனப்பாடம் செய்ய வேண்டும் என நம்புகிறேன்.

> *பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.*

இவ்வசனத்தை நான் வாசிக்க ஆரம்பித்த போது, பிரமித்துப்போனேன். என்னுடைய பழைய முன் முடிவுகளும், பாரபட்சங்களும் எழும்ப ஆரம்பித்தன. நான் நினைத்தேன், *இது சாத்தியமல்ல. இங்கே சொல்லப்பட்டது உண்மையாக இருக்க முடியாது.* ஆனால் தேவன், "உன் செவியைச் சாய். உன் வாதங்களோடும், முன் முடிவு செய்யப்பட்ட எண்ணங்களோடும், பாரபட்சங்களோடும் என்னிடம் வராதே. உன் கடின கழுத்தை வணங்கி வா, உனக்குக் கற்றுக்கொடுக்கிறேன்" என்றார்.

தேவனுடைய வார்த்தையினால் சுகம் பெறுவதற்கு இது முக்கியமான நிபந்தனையாகும். நம்முடைய முன் முடிவு செய்யப்பட்ட எண்ணங்கள், பாரபட்சங்களை ஒழித்துவிட்டு, கழுத்தை வணங்கி, காதுகளை திறந்து, தேவன் சொல்வதை கேட்பதாகும். தேவன் எதை சொல்ல வேண்டுமென நினைத்தோமோ, அதை சொல்லாததினால் அதை தள்ளிவிடுவதல்ல, தேவன் எந்தச் சபை பிரிவையும் விட பெரியவராக இருக்கிறார். நம்முடைய

புரிந்துக்கொள்ள முடியாத அளவிற்கு, மிக பெரியவர். நம்முடைய எல்லா பாரபட்சங்களையும் விட பெரியவர். உங்களுக்கு உதவி செய்ய முடியாத அளவிற்கு தேவனை சிறியவராக்கி விடாதீர்கள். உங்கள் செவியை சாய்த்து கேளுங்கள், அவர் உங்களுக்காக என்னவெல்லாம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார் என்று அவர் சொல்லட்டும்.

04

உன் கண்களை விட்டு பிரியாமலிருக்கட்டும்

தேவனுடைய மருந்து புட்டியில் இருக்கும் இரண்டு ஆலோசனைகளை நாம் பார்த்தோம்: "என் வார்த்தைகளை கவனி" மற்றும் "என் வசனங்களுக்கு செவியைச் சாய்." இப்போது நான் மூன்றாவது ஆலோசனைக்கு கடந்து போகிறேன்: "அவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக." "அவைகள்" என்பது தேவனுடைய வார்த்தைகளையும், வாக்கியங்களையும் குறிக்கும்.

இவ்வாலோசனையில் இருக்கும் முக்கியமான கருத்து, "கவனம்." மனித கண்களை குறித்த ஓர் அதிசயம் என்னவென்றால், நமக்கு இரு கண்களிருந்தும், கண்களை ஒருங்கிணைத்து நாம் ஒரே உருவத்தை கண் முன் நிறுத்த முடியும் (நம்முடைய கண் பார்வை ஆரோக்கியமாயிருந்து, தேவன் ஏற்படுத்தின விதமாய் செயல்படும் போது). (பல பிராணிகள் அல்லது மிருகங்களுக்கு இப்படிப்பட்ட பார்வை இல்லை) இயற்கையில், நல்ல பார்வை இருந்தும், சரியாக ஒருங்கிணைத்து பார்க்க தவறினால், மங்கலான பார்வை உண்டாகும். ஆவிக்குரிய தளத்திலும் அநேக மக்களுக்கு இது தான் பிரச்சனை. தங்கள் ஆவிக்குரிய பார்வையை ஒருங்கிணைக்க அவர்கள் கற்றுக்கொண்டதில்லை. ஆகையால் ஆவிக்குரிய காரியங்களை அவர்கள் காணும்போது மங்கலாக தோன்றுகின்றன.

ஆவிக்குரிய உலகம் அநேகருக்கு ஓர் பனி மூட்டமுள்ள, தெளிவில்லாத மற்றும் தீர்க்கமாக உருவாகாத காரியம் போல் தோன்றுகிறது. நான் தேவனை தனிப்பட்ட முறையில் அறியும் வரை என்னுடைய எண்ணமும் இப்படி தான் இருந்தது. மதம் என்பது, பழைய திருச்சபை கட்டிடங்களை

சுற்றி தங்கும் ஓர் பனிமூட்டமென்றும், நான் நல்லவனாக இருந்தால் என் தலை மீது அப்பனி வந்து தங்குமென்றும் நான் நினைத்தேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஆகையால் சிறிது காலத்துக்குள் இதில் எனக்கு ஈடுபாடில்லை என முடிவு செய்து, தத்துவ இயலுக்கு நான் திரும்பினேன். ஆனால் உண்மை என்னவென்றால் நம்முடைய ஆவிக்குரிய பார்வையை நாம் ஒருங்கிணைக்க கற்றுக்கொள்ளும்வரை, ஆவிக்குரிய உண்மையைக் குறித்து எப்போதும் நமக்கு மங்கலான பார்வை தான் உண்டாயிருக்கும். ஆவிக்குரிய பார்வையை குறித்து இயேசுவின் வார்த்தைகளை கவனியுங்கள். லூக்கா **11:34:**

> *கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.*

இங்கே நம்முடைய சரீரம் முழுவதையும் பாதிக்கின்ற ஒன்றைக் குறித்து இயேசு பேசுகிறார். நீதிமொழிகள் **4**ல் தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய முழு சரீரத்துக்கும் ஆரோக்கியமாயிருப்பதை குறித்த வாக்கியத்தை இவ்வசனம் உடனடியாக எனக்கு நினைப்பூட்டியது. ஆனால் இங்கே நம்முடைய கண்களை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை தான் இயேசு சுட்டி காண்பிக்கிறார். “உன் கண் தெளிவாயிருந்தால். . .” - இதற்கு அர்த்தம் - முதலாவது நாம் தெளிவான ஓர் பார்வையை உண்டாக்க வேண்டும். நம்முடைய இரண்டு கண்களால் நாம் வெவ்வேறான திசைகளை நோக்காமல், அவைகளை ஒருங்கிணைத்து, ஒரே பார்வையுடையவர்களாய் இருக்க வேண்டும். சரீரம் முழுவதிலும் விளைவுகள் காணப்படுமென கூறுகிறார்: “. . .உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்.”

வெளிச்சத்தால் நிறைந்த சரீரத்தில் வியாதிக்கு இடமில்லை என நம்புகிறேன். இருளும் வெளிச்சமும் ஒன்றை ஒன்று தவிர்க்கும். வியாதி இருளிலிருந்து தோன்றும். ஆரோக்கியம் வெளிச்சத்திலிருந்து தோன்றும். மல்கியா **4:2** இப்படியாக கூறுகிறது:

> *ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்...*

இயற்கையில், வெளிச்சம் சூரியனிலிருந்து தோன்றுகிறது. சூரியன் உதிக்கும் போது, அவ்வெளிச்சத்தின் இரண்டு விளைவுகள் நீதியும் ஆரோக்கியமுமாகும். இவை இரண்டும் வெளிச்சத்தின் கிரியைகள். இருளின் கிரியைகள் இவைகளுக்கு எதிர்மறையானது. நீதிக்கு எதிர்மறையானது பாவம்; ஆரோக்கியத்துக்கு எதிர்மறையானது வியாதி.

பாவமும் வியாதியும் இருளின் கிரியைகளாவன, ஆனால் நீதியும் ஆரோக்கியமும் வெளிச்சத்தின் கிரியைகளாவன. இயேசு, "உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சத்தினாலும், நீதியினாலும், ஆரோக்கியத்தினாலும் நிறைந்திருக்கும்" என கூறுகிறார். ஒரே பார்வையுடையவராய் இருப்பது தான் இதற்கு அடிப்படையானது.

"தெளிவாக" என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தை, கிரேக்கத்தில் பல அர்த்தங்களுடைய ஓர் வார்த்தை (இரண்டு கிரேக்க அகராதிகளில் இதை நான் மிக ஜாக்கிரதையாக சரி பார்த்துள்ளேன்). இதன் அர்த்தங்களில் பிரதானமானது, "எளிது" அல்லது "நேர்மையானது." அவ்வர்த்தம் கருத்தை வெளிப்படுத்துகிறது. உங்கள் கண் தெளிவாக அல்லது நேர்மையானதாக இருந்தால், எழுதப்பட்டிருக்கிறவைகளை எழுதப்பட்டிருக்கிறபடி கண்டால், நீங்கள் அதிக திறமையுள்ளவரும் அல்ல, தத்துவ ஞானியுமல்ல. எழுதப்பட்ட உரையை பல விதங்களில் நீங்கள் விவரிப்பதில்லை, சொல்லப்பட்டதை அப்படியே எடுத்துக் கொள்ளுகிறீர்கள்.

இரண்டாவது ஆலோசனையான, "உன் செவியைச் சாய்" என்பது உன் கடின கழுத்தை குனிய செய்து, செவி கொடுக்க ஆயத்தமாயிரு என்ற அர்த்தம் உடையதென்று ஏற்கெனவே சுட்டி காட்டினேன். முன் முடிவு செய்தல் மற்றும் பாரபட்சம் என்ற இரண்டு பொதுவான தடைகளை நான் விவரித்தேன். வேறு விதமாக சொன்னால், தேவன் என்ன சொல்ல வேண்டும் என்பதை ஏற்கெனவே அறிவோம் என நினைத்து, நாம் தேவனுக்கு செவி கொடுக்க ஆயத்தமாயிருப்பதில்லை.

இம்மூன்றாவது ஆலோசனை, எளிமை அல்லது நேர்மையை குறித்து பேசுகிறது. எளிமைக்கும் நேர்மைக்கும் தடையாய் நிற்பவைகள் தர்க்கம் செய்தல் அல்லது விதண்டாவாதம் மற்றும் பண்பை சாருதலாகும். வேதத்தை உண்மை என்று நிரூபிக்க, பிரசங்கிப்பவர்கள் பல உலக நிபுணர்களின் கருத்துக்களை முன் வைக்கும் போது, எனக்குள் பயம் தோன்ற ஆரம்பிக்கின்றது. வேதம் உண்மை என்ற சான்றிதழை உலக நிபுணர்களால் பெறுவது அவசியமல்ல. முடிவிலே அது மக்களுடைய விசுவாசத்தை கட்டி எழுப்பாது. விசுவாசம் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுப்பதினால் மட்டும் வரும் என்று சொன்னேன், வேதத்திலிருந்து நம்முடைய கவனத்தை அதிக நேரத்துக்கு திசை திருப்பும் எந்தக் காரியமும், முடிவிலே நம்முடைய விசுவாசத்தை கட்டி எழுப்பாது. வேதத்தை எளிமையான, நேர்மையான, ஒற்றை பார்வையோடு நாம் வாசித்து, "தேவன் கூறுவது இது தான், இந்த அர்த்தத்தில் தான் தேவன் இதை சொல்லியிருக்கிறார், எழுதப்பட்டிருக்கிறபடியே இதை நான் விசுவாசிக்கிறேன்" என்று சொல்ல வேண்டும்.

மருத்துவமனையில் என்னுடைய சொந்த அனுபவத்தை நான் திரும்பி

பார்க்கிறேன். லத்தீன், கிரேக்கத்தின் அறிவோடு, அநேக நீண்ட தத்துவங்கள் நிறைந்த புத்தகங்களை மேற்கோள் காட்ட கூடிய, தத்துவத்தின் பேராசிரியராக இருந்தேன். நான் வியாதிப்பட்டிருந்த போதோ, தேவனுடைய வார்த்தையின் மூலம் ஆரோக்கியம் பெற, ஓர் எளிய, உயர்பண்பற்ற வழி எனக்களிக்கப்பட்டது — தேவனுடைய வார்த்தையையே மருந்தாக உட்கொள்வதுதான் அவ்வழி. என்னுடைய தத்துவ சிந்தைக்கு இது பெரும் மடத்தனம்! அபத்தமானது! இதை தள்ளி விட வேண்டும் என்று தோன்றினது. ஆனால் வியாதிப்பட்டிருந்த எனக்கு, என்னுடைய தத்துவ ஞானம் சுகமளிக்கவில்லை. எனக்கு முன் இரண்டு தெளிவான தேர்வுகள் தான் இருந்தன. நான் தத்துவ ஞானியாயிருந்து, தொடர்ந்து வியாதிப்பட்டிருக்கலாம். அல்லது எளிமையானவராயிருந்து ஆரோக்கியம் பெறலாம். ஆரோக்கியம் பெறும்படி எளிமையானவராகவே இருந்தமைக்காக நான் எப்போதும் மகிழ்ச்சியடைகிறேன்.

என் அனுபவம் இக்கருத்தை வெளிப்படுத்துகிறது: தேவனைச் சென்றடைவதற்கு உங்களுக்கு அதிக வாய்ப்பிருக்க வேண்டுமானால் உங்கள் பார்வை எளிமையாயிருக்கட்டும், நேர்மையாயிருங்கள், திறமைசாலியாக மாறி வேதத்தை தர்க்கம் செய்ய தேடாதீர்கள், எல்லா இறையியல் வல்லுனர்களையும் மேற்கோள் காட்ட முற்படாதீர்கள். இதைச் சொல்ல வருந்தினாலும், பல வருட அனுபவத்திலிருந்து இது உண்மையென கண்டுள்ளேன்: பொதுவாக இறையியல் விசுவாசத்துக்கு உதவுவதில்லை.

பவுலின் கடிதங்களிலிருந்து இரண்டு பகுதிகளை நான் மேற்கோள்காட்டி, இப்பகுதியை முடிவு செய்கிறேன். உலகத்தின் பார்வைக்கு எளிமை, பைத்தியமாக தோன்றுகிறதென்பதை மட்டும் கவனியுங்கள். 1 கொரிந்தியர் 1:25ல் பவுல் கூறுகிறார்:

> *இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.*

அவர் பிரதானமாக சிலுவையைக் குறித்தே பேசுகிறார். அக்காலத்துக் கலாசாரத்தில், சிலுவை மிகவும் பெலவீனமான, மடத்தனமான ஓர் சின்னமாக இருந்தது. ஆனால் சிலுவையின் பெலவீனத்திலிருந்து தேவனுடைய சர்வ வல்லமை வெளிப்படுகிறது. சிலுவையின் மடத்தனத்திலிருந்து, ஆராய்ந்து முடியாத தேவனுடைய ஞானம் வெளிப்படுகிறது. ஆகையால் தேவனுடைய பெலத்தையும், தேவனுடைய ஞானத்தையும் பெற நாம் மிகவும் பெலவீனமான மட்டும் மடத்தனமான ஒன்றினிடத்தில் வருவது அவசியமாகும்.

1 கொரிந்தியர் 3:18ல் பவுல் மிக சுவாரசியமான ஓர் காரியத்தை கூறுகிறார். (என்னை போல, தத்துவ ஞானம் நிறைந்த பின்னணியுள்ள

மனிதர்களிடம் அவர் பேசினார் என்பதை உணர்ந்ததால் இதை நான் நன்கு புரிந்து ஏற்றுக் கொள்ள முடிகிறது.)

> **ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன்.**

நமக்கும் தேவனுடைய ஞானத்துக்கும் இடையில் ஓர் பள்ளத்தாக்கு உள்ளது, அது ஓர் தாழ்மையின் இடமாகும். நாம் உலக ஞானத்தை தள்ளிவிட வேண்டும். தேவனுடைய ஞானத்துக்குள் உண்மையாக பிரவேசிக்க, உலகத்தின் பார்வையில் நாம் முட்டாள்களாக வேண்டும்.

அந்நேரத்தில் நான் இரண்டு தேர்வுகளை சந்தித்தேன். உலகத்தின் பார்வையில் நான் ஞானியாகவே இருந்து, வியாதியிலேயே தொடர்ந்திருக்கலாம், அல்லது உலகத்தின் பார்வையில் முட்டாள்தனமாக தோன்றும் ஒன்றை செய்து ஆரோக்கியமடைந்திருக்கலாம். நான் முட்டாள்தனமானதை செய்து ஆரோக்கியமடைந்ததால் ஞானியாக விளங்கினேன். புத்திசாலியாக நடக்கிறேன் என நினைத்து நான் வியாதியில் தொடர்ந்திருந்தால், முட்டாளாக விளங்கியிருப்பேன். இது குழப்பமான ஓர் வாக்கியமாக தோன்றலாம் ஆனால் பவுல் இதை தான் சொல்லுகிறார்: நீங்கள் இவ்வுலகத்தில் ஞானியாக இருந்தால், உண்மையான ஞானியாக மாறும்படி நீங்கள் முட்டாளாக வேண்டும், ஏனென்றால் தேவனுடைய முட்டாள்தனம், மனிதனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாக இருக்கிறது."

இந்த ஆலோசனையின் பயன்பாடு, "அவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக." எளிய, ஒற்றைப்பார்வையுடையவராக இருங்கள். வேதத்தை எழுதப்பட்டபடியே எடுத்துக் கொண்டு, அதின் அர்த்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்.

05

உன் இருதயத்துக்குள் காத்துக்கொள்

முதல் மூன்று ஆலோசனைகளை நாம் பார்த்தோம். தேவனுடைய வார்த்தைகளையும் வாக்குகளையும் எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நான்காவது, இறுதியான ஆலோசனைக்கு நாம் வருகிறோம்: "அவைகளை உன் இருதயத்துக்குள் காத்துக்கொள்."

இக்கருத்தை நான் நன்றாக புரிந்துக்கொண்டுள்ளேன். ஏன் என்று கேட்கிறீர்களா? முதலாவதாக இப்பகுதியின் அடிப்படையில் நான் சுகம் பெற்றேன்; இரண்டாவது, நான் ஆப்பிரிக்க பள்ளிகளுக்காக ஆப்பிரிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரியின் முதல்வராக கிழக்கு ஆப்பிரிக்காவில் பணியாற்றின போது நடந்த ஓர் சம்பவம். முதல்வராக பணியாற்ற கல்வி கற்றுக் கொடுப்பதின் கோட்பாடுகளை நான் அறிய வேண்டியதாயிற்று. எங்கள் மாணவர்களுக்கு நாங்கள் கற்றுக்கொடுக்க முயன்ற ஓர் எளிய கோட்பாடு—"காதுகளின் வாசல்" மற்றும் "கண்களின் வாசல்." ஒரு பிள்ளைக்கு கற்றுக்கொடுக்க, நாம் எல்லா வாசல்களையும் பயன்படுத்த வேண்டும். அப்பிள்ளை, கேட்டால் மட்டும் போதாது; அதைக் காணவும் வேண்டும். உண்மையைச் சொன்னால் கேட்டு, கண்டால் மட்டும் போதாது, செயல்முறையில் ஈடுபடவும் வேண்டும்: கேட்டுப்—பார்த்து—செய்ய வேண்டும். இக்காலத்தின் கோட்பாடை தேவன் 3000 ஆண்டுகளுக்கு முன்பே கண்டார் என்பது எனக்கு மிகவும் ஊக்கமளித்தது. அவர் சொன்னார், "உன் செவியைச் சாய், உன் கண்களை விட்டு இவைகள் பிரியாதிருப்பதாக, அப்பொழுது இவைகள் உன் இருதயத்துக்குள் செல்லும்." காதுகளின் வாசல் மற்றும் கண்களின் வாசல் வழியாய் செல்வதின் நோக்கம், மனித தனித்தன்மையின் உயிர்துடிப்பும் மையமுமான, "இருதயம்" என்று வேதம் அழைக்கும் பகுதியை

சென்றடைவதற்குதான். இருதயத்திற்குள் சென்றவுடன், வாக்களிக்கப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் ஆனால் இருதயத்துக்குள் செல்லாவிட்டால், விளைவுகளை ஏற்படுத்தாது.

சில வகையான மருந்துகள் இரத்த ஓட்டத்துக்குள் சென்று கலந்தால் மட்டுமே வேலை செய்யும். நீங்கள் மருந்து சாப்பிட்டும், அது இரத்த ஓட்டத்தை சென்றடையவில்லை என்றால், செய்ய வேண்டியதை செய்யாது. தேவனுடைய மருந்தும், இருதயத்துக்குள் சென்றடையும்போது தான் பயனுள்ளதாகும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நிறைவேற்றும் இடத்துக்கு மருந்து செல்வதை குறித்தே முன்பு கூறப்பட்ட மூன்று ஆலோசனைகளிலும் சொல்லப்பட்டன. அவ்விடம் இருதயமே. பின்பு, ''அவைகளை உன் இருதயத்துக்குள் காத்துக்கொள்'' என்று கூறப்பட்டுள்ளது.

நீதிமொழிகளில் அதற்கு அடுத்த வசனத்தை நாம் பார்க்க வேண்டும், வேதத்திலேயே மிக ஆழமான கருத்துடைய வசனங்களில் ஒன்று. நீதிமொழிகள் **4:23:**

> *எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.*

எவ்வளவு ஆழமான சத்தியம்! "...இருதயத்திலிருந்து ஜீவஊற்று புறப்படும்."

என் சிந்தை கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு திரும்பி செல்கின்றது. 'லோராகோலி' என்று அழைக்கப்பட்ட தன் சொந்த பாஷையில் என் மாணவி ஒரு வாசகத்தை தன் அறையின் சுவற்றில் எழுதினாள். வாசிக்கும் அளவுக்கு மட்டும் எனக்கு அப்பாஷை தெரியும். "உன் இருதயத்தை உன் எல்லா பெலத்தோடும் காத்துக்கொள்; ஏனென்றால் ஜீவனுக்கேற்ற யாவும் அதிலிருந்து புறப்பட்டு வரும்" என்று எழுதினாள். மிக, மிக எளிமையாக இவ்வசனம் எழுதப்பட்டிருந்தது.

அவ்வுணர்த்துதல் என்னை விட்டு போகவேயில்லை: "ஜீவனுக்கேற்ற எல்லா காரியங்களும் இருதயத்திலிருந்து புறப்படும்." வேறு விதமாக சொன்னால், உங்கள் இருதயத்திலுள்ளவைகளே, வாழ்க்கையில் நீங்கள் அனுபவிக்கும் யாவற்றையும் தீர்மானிக்கும். உங்கள் இருதயத்தில் சரியான காரியங்கள் இருந்தால், உங்கள் வாழ்க்கை சரியாக இருக்கும். உங்கள் இருதயத்தில் தவறான காரியங்கள் இருந்தால் உங்கள் வாழ்க்கை தவறாக செல்லும். உங்கள் இருதயத்தில் உள்ளதே உங்கள் வாழ்க்கையின் பாதையை தீர்மானிக்கும். ஆகையால் தேவன், "என் மருந்தும், என் வார்த்தைகளும், என் வாக்கியங்களும் நான் வாக்கு பண்ணினதை

நிறைவேற்ற வேண்டுமானால், அவைகள் உன் இருதயத்துக்குள் நுழைய வேண்டும், அவைகளை நீ அங்கே காத்துக்கொள்ள வேண்டும்.”

“உன் இருதயத்தின் நடுவில் வைத்துக்கொள்” - ஓரங்களில் அல்ல, மையத்தில் காத்துக்கொள். உன் முழு வாழ்க்கை மற்றும் தனித்தன்மையின் மையத்தில் வைத்துக்கொள். நீ வாழப் போகும் முழு விதத்தையும் இது பாதிக்கும்” என தேவன் கூறுகிறார்.

நம்முடைய மருந்தாயிருக்கும் தேவனுடைய வார்த்தையை குறித்த இந்த போதனையை நிறைவுக்கு கொண்டுவர புதிய ஏற்பாட்டில் இதற்கு ஒத்த ஓர் வசனத்தை பார்ப்போம். எபிரெயர் **4:12**–தேவனுடைய வார்த்தையின் தன்மையும், அது நமக்குள் எப்படி கிரியை செய்கிறதென்பதையும் காண்பிக்கிறது:

> ***தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.***

இம்முழு வசனத்தையும் சுருக்கமாக கூறும் ஓர் வார்த்தையை தேர்ந்தெடுக்க வேண்டுமானால், ‘‘உருவ குத்துகிறதாய்’’ என்ற வார்த்தையையே தேர்வு செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தை ஊடுருவுகிறது. வேறெதுவும் ஊடுருவக் கூடாத இடத்திற்கு இது ஊடுருவி பாயும். அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவரின் கத்தியை குறித்து நன்கு அறிவோம், கூர்மையான முனையுள்ள அக்கத்தி, மனித திசுக்களினுள் மிக நுண்ணியமாக செலுத்தப்படும். தேவனுடைய வார்த்தை வேறொரு தளத்துக்குள் ஊடுருவும். நம்முடைய தனித்தன்மையின் உள்ளான பகுதிகளான ஆத்துமாவையும் ஆவியையும் பிரிக்கும். நம்மைக்குறித்து நாமே புரிந்துகொள்ள முடியாத, நமக்குள் இருக்கும் காரியங்களை தேவனுடைய வார்த்தை நமக்கு வெளிப்படுத்தும். கணுக்களையும் ஊனையும் பிரிக்கின்றது. நம்முடைய ஆவிக்குரிய பகுதியையும் தொடுகிறது, சரீர பகுதியையும் தொடுகிறது. அதற்கு எட்டாத பகுதி ஒன்றுமே இல்லை.

உங்கள் எலும்புகளுக்குள் வியாதியிருக்கலாம் அல்லது கணுக்களில் வியாதி இருக்கலாம், மனித மருந்தோ, மனித ஆயுதமோ நிவிர்த்தி செய்ய முடியாத அவ்வியாதியை, தேவனுடைய வார்த்தை சுகமாக்கும் என்று இவ்வசனம் கூறுகிறது. உள்ளான தனித்தன்மையின் பிரச்சனைகளுக்கு மனநோய் மருத்துவரிடம் தீர்வு இல்லையென்றாலும், தேவனுடைய வார்த்தை

அங்கும் செல்லும். தேவனுடைய வார்த்தை ஊடுருவும். தேவன் விரும்புகிற பிரகாரமாகவே அதை உட்கொள்வதே முக்கியமானது. ஒருங்கிணைந்த கவனத்தோடும், தாழ்மையான, கற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும். முன் முடிவு செய்தல், பாரபட்சம் என்ற தடைகளை தள்ளிவிட்டு, உண்மையான, முழுமனதோடும், ஒருங்கிணைந்த பார்வையோடும் இதைப் பார்க்க வேண்டும். புரட்டிப் பேசவோ, அதிக தத்துவ ஞானத்தை பயன்படுத்தவோ நாம் விரும்பவில்லை. தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விதண்டாவாதம் மற்றும் கலப்படஞ் செய்தல் என்ற தடைகளை தள்ளிவிட்டால் வார்த்தை உட்பிரவேசித்து, கிரியை செய்யும்.

இறுதி ஜெபம்

இந்த செய்தியை முடிவுக்கு கொண்டு வந்து நான் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன்.

பிதாவே,

தேவனுடைய வார்த்தையினால் மட்டும் தீர்வு காணக்கூடிய ஆவிக்குரிய மற்றும் சரீர பிரகாரமான பிரச்சனைகளோடு இப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக ஜெபிக்கிறேன். இவ்வார்த்தை அவர்களுக்குள் பிரவேசித்து, தேவையானதை செய்யட்டும்: விசுவாசத்தை உருவாக்கி, ஆரோக்கியத்தையும், விடுதலையையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஒற்றுமையையும் கொண்டுவரட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

ஆமென்.

தனிப்பட்ட ஆய்வு

இப்போது, தேவனின் மருந்து புட்டி பாட கேள்விகளுக்காக, இணைப்பு “அ”வுக்கு திருப்பிக்கொள்ளுங்கள். இக்கேள்விகளுக்கான பதில்கள், இணைப்பு “ஆ”வில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆவிக்குரிய யுத்தம்

பகுதி 1

யுத்தத்தின் தன்மை

01

இரண்டு எதிரிடையான ராஜ்யங்கள்

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்களின் பல்வேறு சித்திரங்களைக் காணலாம். உதாரணமாக எபேசியரில் தேவனுடைய ஜனங்கள்: ஒரு சட்டமன்றம், ஒரு குடும்பம், ஓர் ஆலயம், கிறிஸ்துவின் மணவாட்டி, என்று சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எபேசியரின் நிருபத்தில் இறுதியாக தேவனுடைய ஜனங்கள் ஓர் சேனையாக சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

நாம் வசிக்கும் இவ்வுலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கியும் அதில் பாதிப்புகளையும் ஏற்படுத்தும் உலகளாவிய ஒரு யுத்தத்தில் இந்த இராணுவம் ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளது. இந்த யுத்தத்தின் தன்மையை நாம் ஆராயும்போது உலகளாவிய என்று கூறுவது பொருத்தமாக இராது. அது இந்த பூமியை மட்டுமல்லாது வானமண்டலங்கள் பரியந்தமும் கிரியை நடப்பிக்கிறது. எனவே இதனை உலகளாவிய என்று கூறுவதை விட ‘சகல இடத்தையும் தழுவிய’ என்று கூறுவதே சரியாகும். படைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய இப்பிரபஞ்சத்திற்குரியதாகும்.

இந்தப் போராட்டத்தைக் குறித்து எபேசியர் **6:10 - 12**இல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நான் முதலில் புதிய சர்வதேச மொழி பெயர்ப்பினையும் அதனைத் தொடர்ந்து மற்ற மொழிபெயர்ப்புகளையும் இவைகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளையும் கூற விரும்புகிறேன்.

[10]கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.
[11]நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

நம்முடைய எதிரி பிசாசு என்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபடுவதால் எதிர்த்துப் போர் புரிய உரிய ஆயுதங்கள் தேவை என்பதாகவும் பவுல் கூறுகிறார். 12ஆம் வசனத்தில் இப்போரின் தன்மை குறித்துக் கூறுகிறார்.

[12]ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

புதிய அமெரிக்கத் திருப்புதலில் இந்த வசனம் இவ்வாறு உள்ளது:

[12]ஏனெனில் நமது போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல ஆட்சி செய்பவர்களுக்கெதிராகவும் அதிகாரங்களுக்கெதிராகவும் இந்த இருளின் உலகத்தின் சக்திகளுக்கெதிராகவும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுக்கெதிராகவும் உள்ளது.

Living Bible என்ற திருப்புதலில் இவ்வசனம் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

[12]மாம்சமும் இரத்தமுமுள்ள மக்களோடு நமது போராட்டம் இல்லாமல் உடலற்ற மக்களோடும் காணக்கூடாத உலகத்தினை ஆட்சி செய்யும் பொல்லாத மக்களோடும் வல்லமைபொருந்திய சாத்தானுடைய ஆட்களோடும், இவ்வுலகத்தை ஆட்சிசெய்யும் இருளின் பெரிய பொல்லாத இளவரசர்களோடும், ஆவிகளின் உலகத்திலுள்ள எண்ணிலடங்காத பொல்லாத ஆவிகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

நீங்கள் எந்தத் திருப்புதலைப் பின்பற்றினாலும் சரி கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு பெரிய போராட்டத்தில் ஈடுபடவேண்டியுள்ளது என்பது மட்டும் திண்ணம்.

கிரேக்க மொழியிலிருந்து நான் எபேசியர் 6:12ஐ தியானித்து சொந்த முறையில் மொழி பெயர்த்துள்ளேன். இதனை நீங்கள் பிரின்ஸின்

திருப்புதல் என்று அழைக்கலாம்.

> **நமது மல்யுத்தம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, சரீரத்தோடு உள்ள மக்களோடும் அல்ல. ஆனால் பல இடங்களில் ஆட்சி செய்பவர்களோடும், இறங்கிவரும் அதிகாரங்களோடும், உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் இக்காலத்து அந்தகாரத்தோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் நமக்கு மல்யுத்தம் உண்டு.**

நான் ஏன் சில வார்த்தைகளை தேர்ந்தெடுத்தேன் என்பதை விளக்கவுள்ளேன். பல இடங்களில் ஆட்சி செய்பவர்களோடும், இறங்கி வரும் அதிகாரங்களோடும் என்று கூறினேன். ஏனெனில் மிக உயர்ந்த பரிமாணம் கொண்ட நல்ல முறையில் செயலாற்றும் அரசில் இறங்கி வரும் அதிகாரத்தோடு பலவிதமான ஆட்சியாளர்களும் துணை ஆட்சியாளர்களும் இதன் பல பகுதிகளையும் ஆளும் பொறுப்பை உடையவர்களாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளது. ஆதிக்கம் செலுத்துபவர்கள் என்ற வார்த்தையை உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் இக்கால அந்தகாரத்தோடும் என்ற பதத்தில் உபயோகித்துள்ளேன். ஏனெனில் ஆதிக்கம் என்ற பதமானது மனித இனத்தை சாத்தான் நடத்தும் விதத்தை இது நன்கு விளக்கமாகச் சித்திரிக்கிறது.

Living Bible மொழி பெயர்ப்பைத் தவிர அனைத்துத் திருப்புதல்களிலும் நன்முறையில் செயலாற்றும் அரசின் தலைமையிடம் வான மண்டலங்களிலுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எபேசியர் **6:12**இலிருந்து சில குறிப்புகளை நாம் காணலாம். முதலாவதாக எல்லா கிறிஸ்தவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். சிறப்பாக ஊழியக்காரர், போதகர்கள், மிஷனெரிமார் மட்டுமல்ல, நாம் அனைவருமே இதில் பங்கேற்கிறோம். அநேக கிறிஸ்தவர்கள் இதனை இவ்வாறு நோக்குவதில்லை.

ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பில் **12**ஆம் வசனம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. மாம்சத்தோடும் இரத்தத்தோடும் நமக்குப் போராட்டம் இல்லை. அநேக கிறிஸ்தவர்கள் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். நமக்குப் போராட்டம் இல்லை என எண்ணுகின்றனர். வேறு விதமாகக் கூறினால் நாம் ஆலயத்தில் உட்கார்ந்து கொண்டு பாடல் பாடினால் போதும் என்பதாய் நினைக்கின்றனர். ஆனால் பவுல் கூறுகிறார் நாம் ஒரு மல்யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் ஆனால் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல மல்யுத்தம் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இரண்டு பேருக்குள் நடைபெறும் போராட்டத்தில் மிகவும் கடுமையானது மல்யுத்தமாகும். வெற்றி பெற இதற்கு உடலின் ஒவ்வொரு பகுதியும்,

கற்ற எல்லா கலையும், எல்லாத் திறமையும் பயன்படுத்தப்பட வேண்டும். இது ஒரு முழுமையான போராட்டம்.

சாத்தானுக்கு நன்கு நிர்மாணிக்கப்பட்ட ஒரு சாம்ராஜ்யம் உண்டு. இதில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அதிகாரங்கள் உள்ளன. இதன் தலைமையகம் வானமண்டலங்களிலுள்ளது. இதுதான் உண்மை.

நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அரசிற்கு சாத்தான் தலைமை ஏற்றிருக்கிறான் என்பது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் வேதத்தில் இதற்கு அநேக ஆதாரங்களுண்டு. இயேசுவின் ஊழியத்தில் நடந்த ஒரு சம்பவம் மத்தேயு 12:22-28இல் கூறப்பட்டுள்ளது. பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒரு மனிதனிலிருந்து இயேசு பிசாசைத் துரத்தி அவனுக்குச் சுகமளிக்கிறார்.

> *23ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: "தாவீதின் குமாரன் இவர்தானோ?" என்றார்கள்.*
> *24பரிசேயர் அதைக்கேட்டு: "இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்."*

பெயெல்செபூல் என்றால் ஈக்களின் தலைவன் என்று பொருள். பிசாசுகளை ஆள்வதால் சாத்தானுக்கு இப்பெயர் வந்தது. ஏனெனில் பிசாசுகளின் கூட்டம் ஈக்களின் அரசிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இயேசு 25ம் வசனத்தில் பரிசேயருக்குப் பதிலளிக்கிறார்:

> *25இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: "தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது.*
> *26சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?"*

முதலாவதாக இதன் மூலம் சாத்தானுக்கு ஓர் அரசு உண்டு என்பது தெளிவாகிறது. இரண்டாவதாக அது பிரிந்திருக்காமல் நன்கு கட்டுக்கோப்பாக உள்ளது. மூன்றாவதாக அது நிலைத்திருக்கிறது. அது இன்னும் கவிழ்க்கப்படவில்லை. இயேசு தொடர்ந்து கூறுகிறார்:

> *27"நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்."*

[28]“நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.”

இங்கு இயேசு மறுபடியும் ஓர் அரசைப் பற்றிக் கூறுகிறார்: தேவனுடைய அரசும் குறிப்பாக இந்த இரண்டு அரசுகளுக்குள் வெளிப்படையாக ஏற்படும் போராட்டத்தைக் குறித்து விரிவாக எடுத்துரைக்கிறார். தேவனுடைய ஆவியினாலே நான் பிசாசுகளைத் துரத்தும் போது, தேவனுடைய அரசும் வந்திருக்கிறது. இதன் முக்கியத்துவம் என்னவெனில் பிசாசுகளைத் துரத்தும் ஊழியமானது சாத்தானின் அரசை வெளிக் கொண்டுவருகிறது மற்றும் தேவனுடைய அரசின் மேன்மையை விளக்குகிறது. ஏனெனில் தேவனுடைய அரசின் அதிகாரத்தின் பேரிலேயே பிசாசுகள் துரத்தப்படுகின்றன. கடைசியாக நாம் அறிந்து கொள்வது: ஒன்றுக்கொன்று எதிரான இரு அரசுகள் உள்ளன. ஒன்று, தேவனுடைய அரசு மற்றொன்று பிசாசின் அரசு.

மீண்டும் கொலோசெயர் **1:12-14**இல் பவுல் இவ்வாறு கூறுகிறார்.

[12]ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,
[13]இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.
[14](குமாரனாகிய) *அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.*

இரண்டு அரசாட்சிகள் அல்லது ராஜ்யங்கள் இருப்பதாகக் கூறுவதை மீண்டும் கவனியுங்கள். ஒளியின் அரசு ஒன்று உண்டு. இதில் தான் நமது சுதந்திரம் உள்ளது. ஆனால் அதே சமயம் இருளின் அரசும் உள்ளது. ஆதிக்கம் செலுத்துதல் (Dominion) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு கிரேக்க மூலபதம் **எக்ஸூசியா** ஆகும். அதற்கு அதிகாரம் என்று பொருள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சாத்தானுக்கு அதிகாரம் உள்ளது. சாத்தான் ஆட்சி செய்யும் அரசை வேதம் அங்கீகரிக்கிறது. இந்த இரு அரசுகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. கடைசிக் காலமாகிய இந்த நாட்களில் இந்தப் போராட்டம் உச்சகட்டத்தை அடையும்.

02

சாத்தானின் தலைமையிடம்

கிறிஸ்தவர்களாகிய நமக்கு அதிகத் திறமையான முறையில் நிர்வகிக்கப்படும் தீய மற்றும் போராடும் ஆவிகளோடு ஜீவ மரணப் போராட்டம் உண்டு என்றும் இவற்றின் தலைமையிடம் வான மண்டலங்களிலுள்ளதாகவும் எபேசியர் 6:12இல் பவுல் தெளிவாகக் கூறுகிறார்.

வான மண்டலங்கள் என்ற சொற் தொடரானது கிறிஸ்தவர்கள் மனதில் ஒருவிதமான சிந்தனையை ஏற்படுத்தும். வெகு காலத்துக்கு முன்பே சாத்தான் மோட்சத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டான். அப்படியானால் எப்படி அவன் வான மண்டலங்களில் குடியிருக்க முடியும்?

ஆரம்பத்தில் சாத்தான் ஆண்டவருக்கு விரோதமாக கீழ்படியாமையின் சுபாவத்தில் ஈடுபட்டுத் துரத்தப்பட்டபோது நடந்த காரியங்களைக் குறித்த சில பகுதிகளை விளக்குவதன் மூலம் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க விரும்புகிறேன். இன்னும் கூட சாத்தானுக்கு தேவனுடைய சமூகத்தோடு தொடர்பு உண்டு என இந்தப் பகுதிகள் விளக்குகின்றன. யோபு **1:6**–7.

> 6ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.
> 7கர்த்தர் சாத்தானைப் பார்த்து: "நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார்?" சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்."

இதேபோல யோபு **2:1–2**இலும் இதையொத்த சம்பவத்தை வாசிக்கிறோம்:

> [1]**பின்னொருநாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்.**
> [2]**கர்த்தர் சாத்தானைப் பார்த்து: "நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார்;" சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்."**

யோபின் நாட்களில் தேவனுடைய சமூகத்தில் பிசாசுக்கு நேரடித் தொடர்பு இருந்தது. தேவ தூதர்கள் தேவ சமூகத்தில் வந்து நிற்கும்போது சாத்தானும் அவர்களோடு வந்து நிற்பான். மற்ற தூதர்கள் சாத்தானை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. இதற்குக் காரணம் 2 கொரிந்தியர்**11:14**இல் சாத்தானை ஒளியின் தூதன் என்று கூறுவதனாலேயே என்று நான் அறிந்து கொண்டேன். எனவே சாத்தானை அடையாளம் கண்டுகொள்ளும் ஒரே ஒருவர் தேவன் தான் என்று நான் தெரிந்து கொண்டேன். மற்ற தூதர்களோடு கலந்து அவனும் தேவ சமூகத்தில் நிற்கிறான் என்றும் அவன் இருப்பது தவிர்க்கப்படுவதில்லை என்பதும் தெளிவாகிறது.

சாத்தானே நீ எங்கிருந்து வருகிறாய்? என்று தேவன் கேட்கிறார். வேறு விதமாகச் சொன்னால் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? சாத்தானை தேவன் உடனடியாக வெளியேற்றாமல் அவனோடு உரையாடுகிறார். எனவே யோபுவின் நாட்களில் மோட்சத்தில் தேவனோடு சாத்தானுக்கு தொடர்பு இருந்தது என்பதை நாம் அறியலாம்.

> [10]**அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்."** (வெளி 12:10)

சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தானாகும். இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக தேவனுடைய பிள்ளைகளை தொடர்ந்து சாத்தான் குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்கிறான்.

தொடர்ந்து வெளி**12:11–12**இல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> [11]**"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள்**

ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்.
12 ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்."

இந்தப் பகுதியிலிருந்து சாத்தான் தேவனுடைய சமூகத்தோடு தொடர்புடையவனென்றும் இதனைப் பயன்படுத்தி தேவனுடைய பிள்ளைகளை தேவசமூகத்தில் குற்றப்படுத்தவும் செய்கிறான் என்பதும் தெளிவாகிறது. நான் குறிப்பிட்ட வேத வசனங்கள் அனைத்தும் சாத்தான் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்ததற்குப் பின்பு நடந்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே இதிலிருந்து என்ன புலனாகிறது? ஒன்றுக்கு மேற்பட்ட பரலோகம் உண்டு. வேதவாக்கியங்கள் இதனை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக ஆதியாகமம் 1:1இல் ஆதியிலே தேவன் வானத்தையும் (வானங்களையும்) பூமியையும் சிருஷ்டித்தார். வானங்கள் என்பதற்கான எபிரெயு பதம் **ஷமாயிம்** என்பதாகும். இம் என்று முடியும் வார்த்தை பன்மையைக் குறிக்கும். முதல் முறையாக வானத்தைக் குறிப்பிடும்போது பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவாலயப் பிரதிஷ்டையின் போது சாலொமோன் தேவனை நோக்கி ஜெபித்த ஜெபத்தில் இதைக் குறித்து கூறுவதை 2 நாளாகமம் 2:6இல் நாம் வாசிக்கலாம். வானங்களும் வானாதி வானங்களும் அவரைக் கொள்ளக் கூடாதிருக்க அவருக்கு ஓர் ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்?

மொழி பெயர்ப்பின் போது உயர்ந்த வானங்கள் எபிரெயு மொழியில் வானாதி வானங்கள் என்ற அர்த்தமுள்ளதாக கூறப்பட்டுள்ளது. எனவே ஒரு பரலோகத்திற்கு மேல் உள்ளதாக அறியலாம். வானாதி வானங்கள் என்பதில் உள்ள வானம் என்பது பூமிக்கு எப்படி வானம் உள்ளதோ அதுபோல வானங்களுக்கெல்லாம் வானம் என்று கொள்ளலாம்.

2 கொரிந்தியர் 12:2–4இல் பவுல் இன்னமும் தெளிவாகக் கூறுகிறது வருமாறு:

2 கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.
3 அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும்

வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.

[4] அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.

நான் ஊழியத்திற்கு வரும் முன்பதாக நான் ஒரு தர்க்கவாதியாக இருந்தேன். சில சமயங்களில் தர்க்கம் செய்வதிலிருந்து விலகியிருக்க முடியவில்லை. இதன் மூலம் நான் அறிவது என்னவெனில் மூன்றாம் வானம் இருக்குமென்றால் முதலாவதும் இரண்டாவதுமான வானங்கள் உண்டு. குறைந்த பட்சம் மூன்று வானங்கள் உண்டு. மூன்றாம் வானம் பரதீசு ஆகும். அங்கே தேவனுடைய பிள்ளைகளின் ஆவிகள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றன. அங்கேதான் தேவனும் வாசம் செய்கிறார்.

எபேசியர் 4:10இல் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது:

[10]இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

எல்லா வானங்களும் என்ற சொற்றொடரை கவனியுங்கள். எல்லா என்ற வார்த்தை மூன்றைக் குறிக்கும். கென்யா நாட்டில் நான் ஆப்பிரிக்க மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தபோது ஒரு மாணவன் என்னைப்பார்த்து **எல்லா** பெற்றோரும் என்னைப் பார்க்க வந்திருந்தனர் என்று கூறினார். அதற்கு நான் '**எல்லா** பெற்றோரும்' என்று சொல்லாதே. ஒருவருக்கும் இரண்டு பெற்றோருக்கு மேல் இருக்க முடியாது. உனக்கு இரண்டு பெற்றோர் (தாய், தகப்பன்) மட்டுமே இருப்பார்களென்றால் நீ 'எல்லா' என்று கூற முடியாது என்று கூறினேன். எல்லா வானங்களும் என்ற வார்த்தையையும் அவ்வாறே எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே குறைந்த பட்சம் மூன்று இருக்க வேண்டும். வேத வாக்கியங்களில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சாத்தானின் அரசு எப்படி வானமண்டலங்களிலுள்ளது என்ற கேள்விக்கு இதன் மூலம் நாம் விடை காணலாம்.

பேச்சு வழக்கில் ஏழாவது வானம் என்பதை நல்ல சந்தோஷமான சூழ்நிலையைக் குறிக்க நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இது வேதத்திற்கு முரண்பட்டதாகும். உண்மையில் இந்த வார்த்தை இஸ்லாமியர்களின் தூய குரானிலிருந்து எடுக்கப்பட்டதாகும். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இதனை உபயோகிப்பது தவறாகும். ஆனால் சந்தோஷமான சூழ்நிலையைக் குறிக்க உயர்ந்த மேக மண்டல சூழ்நிலை (Cloud nine) என்று கூறுவது சிறந்தது என நான் கூற விரும்புகிறேன்.

ஆகாயத்தில் அதிகமான மேகங்கள் உள்ளதால் இவ்வாறு கூறுவது வேத வாக்கியங்களுக்கு ஒத்ததாகும். இயேசுவானவர் மேகத்தின் மீது வருவார்.

எனது கருத்துப்படி மூன்று வானங்கள் உண்டு. ஆனால் இது நிரூபிக்கப்பட்ட ஒன்றல்ல. அனுபவத்தின் வாயிலாகவும் வேதத்தினடிப்படையிலும் இது சரி என்று நான் நம்புகிறேன். மூன்று வானங்கள் என்பன யாவை? நம் கண்ணால் காணும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் உள்ள வானம் முதலாவதாகும்.

மூன்றாம் வானம் என்பது 2 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் நாம் காணும் தேவனுடைய வாசஸ்தலமாகும். ஆவிகள் ஓய்வு எடுக்கும் பரதீசு ஆகும். மனிதரால் பேசப்படாத தேவனுடைய வார்த்தைகளை அந்த மனிதன் கேட்ட இடமாகும்.

எனவே இரண்டாம் வானம் தான் விடப்பட்டுள்ளது. நிச்சயமான இது முதல் மற்றும் மூன்றாம் வானத்திற்கு இடையில் உள்ளதாகும். தேவனுடைய வாசஸ்தலத்திற்கும் நாம் காணும் வானத்திற்கும் இடையில் உள்ளது என்று நான் உணருகிறேன். எனவே இந்த இடைப்பட்ட வானத்தில் சாத்தானுடைய தலைமைச் செயலகம் உள்ள இடம் என்று நான் நம்புகிறேன். எனவே தான் நாம் ஜெபிக்கும்போது போராட்டத்தை உணர முடிகிறது.

சில சமயங்களில் தேவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது எவ்வளவு கடினம் என்பதை நம்மால் உணர முடிவதில்லை. சில சமயங்களில் தேவனுடைய சித்தப்படி நாம் ஜெபிக்கிறோம், தேவன் இதனைக் கேட்கிறார் என்று நம்புகிறோம். ஆனாலும் பதில் தாமதிக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணம் யாதெனில் தேவனுடைய இருப்பிடத்திற்கும் நாம் காணும் வானத்திற்கும் இடையில் சாத்தானுடைய தலைமைச் செயலகம் அமைந்திருப்பதும் அவனோடு விசுவாசிகளுக்கு போராட்டம் இருப்பதுவுமேயாகும்.

03

தேவதூதர்களின் யுத்தம்

சாத்தானுடைய தலைமைச் செயலகத்தைக் குறித்து இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் நூல் தானியேலின் தீர்க்கதரிசனமாகும். 10ஆம் அதிகாரத்தில் தேவதூதர்களின் யுத்தத்தைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்களின் எதிர்காலத்தைக் குறித்து தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தலை உணர்ந்து கொள்ள தானியேல் ஜெபிக்கிறதை நாம் காண்கிறோம் மூன்று வாரங்கள் தொடர்ந்து ஊக்கமாக ஜெபித்து அவர் தேவனுடைய பாதத்தில் காத்திருக்கிறார். மூன்று வார முடிவில் தேவதூதன் ஒருவன் தானியேலின் ஜெபத்திற்கு உரிய பதிலோடு அவரை சந்திக்கிறான். தேவ தூதனின் மகிமையும் வல்லமையும் அவ்வளவு அதிகமாயிருந்ததால் தானியேலோடு கூட இருந்தவர்கள் அனைவரும் சிதறிப் போகின்றனர். தானியேல் மாத்திரமே அந்த வெளிப்பாட்டை அறிந்து கொள்ளுகிறார். தானியேல் 10:2–6இல் இவ்வாறு வாசிக்கிறோம்.

2 அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன்.
3 அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை.
4 முதலாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து,
5 என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது

அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன்.
[6]அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப் போலவும் இருந்தது.

நான் ஏற்கெனவே கூறியபடி தானியேலின் நண்பர்கள் அனைவரும் இந்த மகிமையின் காட்சியைக் காணக்கூடாதவர்களாய்த் தங்களை மறைத்துக் கொண்டனர். அவ்விடத்தை விட்டகன்று போனார்கள். இப்போது தேவதூதன் தானியேலோடு பேசுகிறான். வசனம் 12–13இல் இப்படி வாசிக்கிறோம்.

[12]அப்பொழுது அவன் என்னை நோக்கி: "தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்."

முதல் நாள் தானியேல் ஜெபிக்க ஆரம்பித்த போது அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டு ஒரு பதிலோடு ஒரு தூதன் அனுப்பப்படுகிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஆனாலும் மூன்று வாரங்களாக (அல்லது 21 நாட்கள்) அவனால் பூமியிலுள்ள தானியேலிடத்தில் வந்து சேரமுடியவில்லை. மூன்று வாரங்கள் அந்தத் தூதன் பயணப்பட்டு வரவேண்டிய காரணம் என்ன? அவன் சாத்தானுடைய தூதர்களால் தாக்கப்படுகிறான். தேவனுடைய வாசஸ்தலத்திலிருந்து பூமிக்குப் பயணப்பட்டு வருகையில் வானமண்டலத்திலுள்ள சாத்தானின் அரசிற்குள்வழியாக வரவேண்டியிருந்தது. அங்கே சாத்தானின் தூதர்கள், தானியேலுக்கு இந்த தூதன் செய்தியைக் கொண்டு செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்தப் போராடுகின்றனர். 13ம் வசனம் இவ்வாறு கூறுகிறது:

[13]"பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்; ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்."

இவைகள் அனைத்தும் வானமண்டலங்களில் நடைபெற்றன.

சாத்தானின் தூதர்களின் தலைவனுக்கு பெர்சிய தேசத்து அதிபதி என்று பெயர். அவனைச் சார்ந்த அநேக அரசுகள் அல்லது தூதர்கள் உள்ளனர். தேவனுடைய பக்கத்தில் இந்தத் தூதனுக்கு உதவியது பிரதான தூதன் மிகாவேல் ஆகும்.

தானியேல் **12:1**இல் மிகாவேல் குறித்து நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

> [1]"*உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்......*"

அதிபதி என்பதைப் பிரதான தூதன் என்று கூறலாம். குறிப்பிட்ட இந்த பிரதான தூதனாகிய மிகாவேல் இஸ்ரவேல் மக்களைக் காக்கிறான்.

இஸ்ரவேல் மக்களை விசேஷித்த வகையில் பாதுகாக்க மிகாவேல் தேவனால் கட்டளையிடப்படுகிறான். இஸ்ரவேல் மக்களின் எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடு இருந்தபடியால் எப்படியாவது கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. முதல் தூதன் தடுத்து நிறுத்தப்பட்டபோது, பிரதான தூதன் மிகாவேல் அவனுக்குத் துணை நின்று சாத்தானின் தூதர்களோடு **21** நாட்கள் யுத்தம் செய்து அவனுக்கு உதவ வேண்டியதாயிற்று.

சாத்தானின் தூதர்கள் பெர்சிய ராஜ்யத்தின் அதிபதிக்கு (உயர்ந்த ஆட்சியாளர்) ஒப்பிடப்படுகின்றனர். இந்த அதிபதிக்குக் கீழே பல சிறிய இடங்களை ஆண்ட ராஜாக்களும் சிறிய பிரபுக்களும் இருந்தனர். உதாரணமாக ஒரு ராஜா பெர்சிய ராஜ்யத்திலுள்ள ஒரு பெரிய பட்டணத்தையும் மற்றொருவர் ஒரு குறிப்பிட்ட இனத்தையும் மற்றொரு ராஜா பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களையும் ஆண்டனர். எனவே கட்டுப்பாடுடன் நல்ல முறையில் இது நிர்வகிக்கப்படுகிற ஓர் அரசையும் அதிலுள்ள பல்வேறு பகுதிகளையும் அறிகிறோம். அவற்றிற்கு உரிய அதிகாரம் தலைமையிடம் ஆகியவை வான மண்டலங்களில் உள்ளன. இவைகள் யாவும் வீழ்ந்துபோன, மீறுதலான ஆவிகளின் கூட்டம் என்பது குறித்தும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

தானியேல் **10:20**இல் மீண்டும் அந்த தூதன் அந்த போராட்டம் குறித்து கூறுகிறான்:

> [20]"*. . .நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப் போகிறேன்;. . .*"

வேறுவகையாகக் கூறினால் பாரசீக அரசில் வலுவோடு இருந்தப் பொல்லாத சாத்தானின் தூதனோடு நடைபெறும் யுத்தம் இன்னும் ஓயவில்லை. தொடர்ந்து இன்னும் யுத்தம் உண்டு. அந்தத் தூதன்

தொடர்ந்து கூறுகிறான்:

> [20]". . .நான் போனபின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான்."

இன்னொரு வகையாகக் கூறினால் பாரசீக அரசை ஆண்ட பொல்லாத சாத்தானின் தூதனை வெற்றி கொண்ட பின்பு அடுத்து எழும்பும் அரசு கிரேக்க நாட்டின் அரசாகும். கிரேக்க நாட்டிற்கும் அதற்கான பொல்லாத தூதன் உண்டு. அவன் தான் கிரேக்க நாட்டை ஆளும் இளவரசனாகும்.

21ஆம் வசனத்தில் தானியேலைப் பார்த்து அந்தத் தூதன் இவ்வாறு கூறுகிறான்:

> [21]". . .உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை."

தேவனுடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேல் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் பிரதான தூதன் மிகாவேல் முக்கியப் பங்காற்றுவதை நாம் காணமுடிகிறது. இஸ்ரவேலைக் குறித்த தேவனின் நோக்கத்தை எதிர்க்கும் சாத்தானின் அரசை ஆளும் சாத்தானின் தூதர்களை மேற்கொள்ளுவதில் இந்த முதல் தூதன் மற்றும் மிகாவேலுடைய மொத்த சக்தியும் ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்தப்படுவதையும் நாம் காணலாம்.

பாரசீகம் மற்றும் கிரேக்க நாடுகளைக் குறித்து இங்கே குறிப்பிடப்படுவதைக் குறித்து நமக்கு ஆச்சரியம் ஏற்படலாம். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு இஸ்ரவேல் அரசையும் எருசலேமையும் தொடர்ந்து மேற்கொண்ட புறஜாதிகளின் நான்கு அரசுகளைக் குறித்து நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவைகள் பாபிலோன், பாரசீகம், கிரேக்கம் மற்றும் ரோமாபுரியாகும். பாரசீகமும் கிரேக்கமும் குறிப்பிடத்தக்கவைகளாகும். ஏனெனில் அந்த சமயத்தில் இவை இரண்டும் செல்வாக்குள்ளவைகளாகத் திகழ்ந்தன.

தேவனுடைய பிள்ளைகளையும் தேவனின் நோக்கங்களையும் மையமாக வைத்தே இந்த யுத்தங்கள் நடைபெறுவதை தானியேல் புத்தகத்தில் இந்த பகுதிகளின் மூலம் நாம் அறியலாம். இது இன்றும் உண்மை என்று நான் நம்புகிறேன். எங்கெல்லாம் தேவனுடய பிள்ளைகள் இருக்கிறார்களோ எங்கெல்லாம் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்படுகிறதோ அங்கெல்லாம் ஆவிக்குரிய போராட்டம் மிகவும் கடுமையாக இருக்கும். நாம் வாழும் இந்த நாட்களில் இப்போராட்டத்தின் மையம் இஸ்ரவேல் நாட்டையும் எருசலேமையும் சுற்றியுமே இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

தானியேலின் பிரார்த்தனை இலாபகரமான விளைவை ஏற்படுத்தியது. தானியேல் உலகத்தில் ஜெபிக்க ஆரம்பித்தபோது பரலோகம் அசைவு கண்டது. மேலும் தேவனுடைய தூதர்களையும் சாத்தானின் தூதர்களையும் இயங்கவைத்தது. ஜெபம் எப்படி சூழ்நிலையை சாதகமாக மாற்றுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

தேவனுடைய தூதர்கள் தங்களுடைய பணியை நிறைவேற்ற தானியேலுடைய ஜெபம் தேவைப்பட்டது என்பது என்னை மிகவும் கவர்ந்தது. மீண்டும் இது ஜெபத்தின் மிக உன்னதமான பலனை இது விளக்குவதாக உள்ளது.

04

ஆயுதங்களும் போர்க்களமும்

ஆவிக்குரிய யுத்தத்தின் இரு விதமான காரியங்களைக் குறித்து நாம் இப்போது பார்க்கலாம்: முதலாவது நாம் உபயோகிக்கும் ஆயுதம்; இரண்டாவது யுத்தம் நடக்கும் போர்க்களம். இவ்விரண்டினைக் குறித்தும் 2 கொரிந்தியர் 10:3–5இல் நாம் காணலாம். அமெரிக்க மொழிபெயர்ப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது:

> **3நாங்கள் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.**
> **4எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல்...**

இங்கே பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: நாங்கள் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எனவே நாங்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள் போரின் தன்மைக்கேற்றவாறு அமைந்திருக்க வேண்டும். மாம்சத்திற்கேதுவான அல்லது உடல்ரீதியான யுத்தமாக இருந்தால் மாம்சத்திற்கேற்ற ஆயுதங்களாகிய டாங்கிகள், வெடி குண்டுகள் அல்லது துப்பாக்கிக் குண்டுகள் இவற்றை உபயோகிக்க வேண்டும். ஆனால் இந்த யுத்தம் ஆவிக்குரிய யுத்தமாக இருப்பதால் ஆவிக்குரிய ஆயுதங்களை நாம் உபயோகிக்க வேண்டும்.

> **4. . .அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.**
> **5அவைகளால் நாங்கள் சிந்தனைகளையும், தேவனை அறிகிற**

அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா உயர்வான எண்ணங்களையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

யுத்தத்திற்கேற்றவாறு நமது ஆயுதங்களும் அமைந்துள்ளதைக் கவனியுங்கள். நாம் கோட்டைகளையும் நிர்மூலமாக்க வேண்டும்.

பழைய ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பு இவ்வாறு உள்ளது:

3நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.
4எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை களாயிராமல், (உடல் சம்பந்தமாகவோ அல்லது கண்களால் காணக்கூடியதாகவோ) அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளா யிருக்கிறது.
5அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் மொழிபெயர்ப்பில் கோட்டைகள் எனக் குறிக்கப்பட்டுள்ள வார்த்தை கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் அரண்கள் என குறிக்கப்பட்டுள்ளது.

நமது யுத்தம் ஆவிக்குரிய யுத்தம் எனவே ஆவிக்குரிய போராயுதங்களாயும் ஆவிக்குரிய போருக்கு உகந்ததாயும் இருக்க வேண்டும். நமது தற்காப்பு ஆயுதங்கள் மற்றும் தாக்கும் ஆயுதங்கள் ஆகிய தலைப்பின் கீழ் வரும் இரு பகுதிகளிலும் இந்த ஆயுதங்களைப் பற்றி நான் விரிவாகக் கூறியுள்ளேன்.

இந்த யுத்தம் எங்கு நடைபெறுகிறது என்பதை நாம் அறிந்து கொள்வது மிகவும் அவசியம். இந்தப் போர்க்களத்தைப் பற்றியும் நமது நோக்கங்கள் குறித்தும் பவுல் கூறும் போது பல வார்த்தைகளை உபயோகிக்கிறார். அவைகள் வருமாறு: எண்ணங்கள், விவேகம், சிந்தனைகள், தர்க்கங்கள், அறிவு, யோசனைகள். இந்த வார்த்தைகளை கவனியுங்கள். இவைகளனைத்தும் மனம் சம்பந்தமாகக் கூறப்படும் வார்த்தைகளாகும். **எனவே இந்த யுத்தகளம் நமது மனமே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.** மனித இனத்தின் மனங்களை அடிமை கொள்ள சாத்தான் பெரிய யுத்தத்தை நடத்துகிறான். சாத்தான் மனிதர்களின் மனதில் பலத்த கோட்டைகளையும் அரண்களையும் ஏற்படுத்துகிறான். தேவனுடைய பிரதிநிதிகளாகிய நாம் நமது ஆவிக்குரிய போராயுதங்களை உபயோகித்து

இந்த அரண்களை நிர்மூலமாக்கி ஆண்களையும் பெண்களையும் விடுவித்து கிறிஸ்துவிற்கு கீழ்படியும் நிலைக்கு கொண்டு வருவது நமது கடமையாகும். இது ஒரு உத்திரவாதமான பொறுப்பாகும்.

சாத்தான் நோக்கத்தோடும் முறையாகவும் மக்கள் மனதில் பலத்த தவறான கொள்கையின் கோட்டைகளைக் கட்டி நிறுத்துகிறான். இந்த பலத்த துருகங்களும் அரண்களும் சுவிசேஷமும் தேவனுடைய வார்த்தையும் கிரியை செய்ய முடியாதபடி தடைசெய்கின்றன.

இப்படிப்பட்ட அரண்கள் பற்றி வேதம் என்ன கூறுகிறது? இருவிதமான அரண்கள் மக்களின் மனதில் கிரியை செய்கிறதைக் குறித்து நான் கூற விரும்புகிறேன். தப்பெண்ணங்களும் முன்கூட்டியே அபிப்ராயங்களை ஏற்படுத்துதலும் இவ்வரண்கள் ஆகும்.

நீங்கள் இந்த விளக்கத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். “நீங்கள் எவற்றில் மேலே இல்லையோ, அதில் வீழ்ந்திருப்பதே பாரபட்சம்” என்ற விளக்கத்தைக் கேட்டிருப்பீர்கள். வேறு வகையாகக் கூறினால் ஒரு காரியத்தை குறித்து உங்களுக்கு எதுவுமே தெரியாதென்றால் அது நிச்சயம் தவறான ஒன்றாக இருக்க வேண்டும். அதை குறித்து சிந்தித்த முதல் நபர் நீங்கள் இல்லையெனில் அது ஆபத்தானதாக தான் இருக்க வேண்டும். இவ்வரையறை எல்லாரையும் விட மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள மக்களை குறித்தே உண்மையாகும். இப்படிப்பட்ட மக்கள் எதைப்பற்றிக் கேள்விப் படவில்லையோ அதைக் குறித்து சந்தேகத்தோடும், பயத்தோடும் அதை நோக்குகின்றனர்.

தப்பெண்ணம் குறித்து வேறு ஒரு கூற்றும் உண்டு, “என் மனதை திடமாய்த் தீர்மானித்து வைத்த காரியத்திற்கு முரணாய்க் கூறி என்னைக் குழப்பாதே” என்பர். இது தான் தப்பெண்ணம். ஒரு மனிதனின் மனது ஏற்கெனவே தீர்மானமாய் அமைந்த பொழுது வேறு எந்த வகையான செய்திகளோ, காரியங்களோ, நிகழ்ச்சிகளோ, உண்மைகளோ அதை மாற்றுவது அரிது. இத்தகைய அரண்களை ஆவிக்குரிய ஆயுதங்கள் மட்டுமே தகர்க்க முடியும். தப்பெண்ணங்களாலும் ஏற்கெனவே தீர்மானித்த எண்ணங்களாலும் ஆட்கொள்ளப்படுகின்ற மக்கள், இப்படிப்பட்டவைகளால் தங்கள் அழிவுக்கு நேராக நடந்துச் செல்கின்றனர். நான் ஒரு ஆங்கிலேயனாக இருப்பதால் ஒரு நிகழ்ச்சி என்னை மிகவும் கவர்ந்தது.

அமெரிக்க புரட்சிப் போரின்போது அமெரிக்க புரட்சியாளர்களை எதிர்த்து போர்வீரர்கள் சண்டையிட்டனர். ஆங்கிலேயர்களின் போர் முறைப்படி போர் வீரர்கள் இராணுவ உடையணிந்து டிரம்கள் முழங்கப் போருக்குச் செல்வர். ஆனால் அமெரிக்கப் புரட்சியாளர்கள் சதுப்பு நிலம், மரங்கள் இவற்றின் பின்னே ஒளிந்திருந்து இவர்களுக்குத் தெரியாத வண்ணம் வீரர்களைச் சுட்டு வீழ்த்தினர். இன்றைய கணிப்புப்படி இது

இராணுவ தற்கொலையாகும். ஆனால் அந்நாட்களில் போர் எனில் இதைத் தவிர வேறு எதனையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. தப்பெண்ணங்களும் தாங்கள் கொண்டுள்ள சிந்தனைகளுமே ஆயிரக்கணக்கான ஆங்கிலப் போர்வீரர்கள் மடியக் காரணமாயிற்று. மனதின் தப்பெண்ணம் எவ்வாறு மக்களை அழிவுக்கு நேராக வழி நடத்திச் செல்கின்றன என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

இது தவிர மக்களின் மனதை இறுகப் பற்றியிருக்கும் தப்பெண்ணங்கள்: மார்க்க வழி முறைகள், அரசியல் நெறிமுறைகள், இனப்பாகுபாடுகள் ஆகியவைகள் ஆகும். இத்தகைய காரியங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் அடிக்கடி காணலாம்.

சில நாட்களுக்கு முன் நான் தென் ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். அதிகாரங்கள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் குறித்து பேச அழைக்கப்பட்டேன். அதைக் குறித்துத் தியானிக்கையில் தென் ஆப்பிரிக்காவில் பிரபலமான ஒரு மனிதனைக் குறித்து தேவன் வெளிப்படுத்தினார் அவர் தனது எண்ணங்களில் பிடிவாதக்காரர். “பைகாட்” (bigot) என்ற ஆங்கில வார்த்தைக்கு அகராதியில் அர்த்தம் பார்த்தேன். அதில் இவ்வாறு இருந்தது: “தனது எண்ணங்களைக் குறித்து சரியாக அறிந்து கொள்ளாமல் அதற்குத் தகுதியற்ற முக்கியத்துவம் கொடுத்தல்.” இது தான் “பைகாட்.” இதுவும் ஒரு அரண். இதனையும் மக்கள் மனதில் பதித்து விடுகிறான் சாத்தான்.

நான் எனது செய்தியை முடித்த போது தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவரும் அந்த நாட்டைப் பற்றி நன்கு அறிந்தவருமான ஓர் ஊழியக்காரன் என்னைப் பார்த்து “நீங்கள் தென்ஆப்பிரிக்காவின் பிரச்சினைகளை இதை விட சிறப்பாக விளக்கியிருக்க முடியாது. தென்னாப்பிரிக்காவில் மக்கள் மார்க்க சம்பந்தமாகவும், இன பிரிவு சம்பந்தமாகவும், சபை பிரிவு சம்பந்தமாகவும் “பைகாட்டரி”யினால் நிறைந்திருக்கிறார்கள். இந்த நாட்டின் அடிப்படைப் பிரச்சனையே இந்தப் பிடிவாத குணம் (பைகாட்டரி) தான்” என்றார். தனிப்பட்ட முறையில் தென் ஆப்பிரிக்கர்கள் நற்குணம் படைத்தவர்கள். ஆனால் அவர்கள் மனங்கள் பிடிவாத குணத்தால் நிறைந்துள்ளது. தென் ஆப்பிரிக்க மக்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்று நான் கூறவில்லை. ஆனால் அவர்களுக்கென்று தனியாக ஒரு அரணை அமைத்துக் கொண்டுள்ளனர். 2 கொரிந்தியர் 4:4 இவ்வாறு கூறுகிறது.

> [4]*தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

அரண் என்பது **மனிதர்களின் மனதை குருடாக்கி சுவிசேஷத்தின் ஒளி பிரகாசிக்க முடியாமல் செய்கிறது.** ஒரு மனிதன் இவ்வித நிலையில் இருந்தால் அவருடன் நாம் வாதாட முடியாது. நாம் வாதாட வாதாட அவர்கள் தங்களுடைய தவறுகளிலேயே மிகவும் உறுதியாக நிற்பர். அப்படிப்பட்ட மக்களை விடுவிக்க ஒரே வழி நம்முடைய ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி அவர்களுடைய மனதிலுள்ள அரண்களை நிர்மூலமாக்குவதேயாகும்.

05

நமது வெற்றியின் அடிப்படை

நமது ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிபெற நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு காரியத்தைக் குறித்து நான் இப்போது விளக்கப்போகிறேன். நமக்குப் பதிலாக சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலமாய் விசுவாசிகளாகிய நமக்கு தேவன் நிறைவேற்றின காரியத்தை கொலோசெயர் 2:13–15இல் பவுல் விவரித்துக் கூறுகிறார்:

> **[13]உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;**
> **[14]நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;**
> **[15]துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.**

இந்தக் காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான் என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன். எல்லா கிறிஸ்தவர்களும் இதை அறியாதிருக்க வேண்டுமென சாத்தான் விரும்புகிறான். ஏனெனில் இது தான் அவனது தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும். மிகவும் முக்கியமான காரியம் இது தான்: **இயேசுவானவர்**

ஏற்கெனவே சாத்தானையும் அவனுடைய பொல்லாத வல்லமையையும் அதிகாரத்தையும் முற்றிலுமாக மேற்கொண்டு ஜெயித்தார்.

நீங்கள் எதை ஞாபகம் வைக்கிறீர்களோ இல்லையோ இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். **இயேசு சாத்தானையும் அவனது பொல்லாத வல்லமையையும் அதிகாரங்களையும் முற்றிலுமாக தோல்வியடையச் செய்தார்.** இதனைத் தனது கல்வாரிச் சிலுவை மரணத்தின் மூலமாய் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாயும் அவரது ஜெயமான உயிர்த்தெழுதல் மூலமாகவும் நிறைவேற்றினார்.

இதனை எப்படி நிறைவேற்றினார் என்பதை அறிய, நமக்கு விரோதமாக சாத்தான் பயன்படுத்தும் பிரதான ஆயுதம் பற்றி காண்போம். அந்த ஆயுதம் குற்ற உணர்வு என்பதாகும். வெளி 12:10 இவ்வாறு கூறுகிறது:

> 10 *அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்."*

சகோதரர்மேல் "குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" அது சாத்தான் என்று நாம் அறிவோம். சாத்தான் தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்கிறான் என்றும் அவனுடைய முக்கிய வேலை இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவதாகும் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன்.

சாத்தான் ஏன் நம்மேல் குற்றஞ்சுமத்துகிறான்? அவனுடைய நோக்கம் என்ன? ஒரே வார்த்தையில் கூறினால், நம்மை குற்ற உணர்வு அடையச் செய்ய வேண்டுமென்பதேயாகும். நாம் குற்ற உணர்வு உடையவர்களாயிருக்கும் வரை நாம் அவனைத் தோற்கடிக்க முடியாது. குற்ற உணர்வு நமது தோல்விக்கு முக்கியக் காரணம். நீதி நமது வெற்றிக்கு மூல காரணமாகும்.

கடந்த காலம் மற்றும் வருங்காலத்தில் நமது குற்ற உணர்வின் பிரச்சனையை சிலுவையின் மூலம் தேவன் தீர்த்துள்ளார். இரண்டுக்குமே தேவன் முழுவதுமாக தீர்வு ஏற்படுத்தியுள்ளார். முற்காலத்தை தேவன் எப்படிக் கையாளுகிறார்? கொலோசெயர் 2:13இல் " ...*அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;*" என்று கூறப்பட்டுள்ளது.

நமது குற்ற உணர்வை சுமந்து கொண்டும் பாவத்திற்கான தண்டனையை ஏற்றுக் கொண்டும் நமக்காக இயேசு கிறிஸ்து மரித்ததன் மூலம் தேவன் நமது அனைத்து பாவச் செயல்களையும் மன்னிக்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாய் தேவனுடைய நீதி விளங்குவதால் நமது அனைத்துப் பாவங்களையும் அவர் மன்னிக்கிறார். நமது அனைத்து கடந்த காலப் பாவங்களையும் அவைகள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் நமது விசுவாசத்தை இயேசுவின் மேல் வைக்கும்போது அவைகள் மன்னிக்கப்படுகின்றன.

எதிர்காலத்துக்கான காரியங்களையும் தேவன் நமக்கு ஏற்படுத்தியுள்ளார். இது கொலோசெயர் 2:14இல் கூறப்பட்டுள்ளது:

> [14]*நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;*

“கையெழுத்து” என்பது மோசேயின் நியாயப்பிரமாணம். தேவனிடமிருந்து நீதியைப் பெறுவதற்காக இயேசு சிலுவையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குலைத்துப் போட்டார். மோசேயின் நியாயப்பிரமாணம் தான் அளவுகோலாக வைக்கப்பட்டிருந்தவரை ஒவ்வொருமுறையும் அதில் ஒரு சிறு காரியத்தில் தவறும்போதும் நாம் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாக மாறுகிறோம். ஆனால் நீதியைப் பெற நியாயப்பிரமாணம் தான் தேவை என்ற நிலை மாற்றப்பட்ட போது நீதியைப் பெற **விசுவாசமே** தேவை என்பதினால் குற்றமற்ற வாழ்வு வாழும் தகுதியைப் பெறுகிறோம்.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு வேத பகுதிகள் உள்ளன. ஒன்று ரோமர் 10:4இல் உள்ளது:

> [4]*விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.*

முக்கியமான கூற்று ஒன்று உண்டு. யூதனோ, புறஜாதியோ, கத்தோலிக்கரோ, புரோட்டஸ்டேன்ட்டோ இதில் எந்தப் பாகுபாடும் இல்லை. தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியாகவோ, இஸ்ரவேல் நாட்டின் சரித்திரத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாக மாறவில்லை. தேவனுடைய நீதியைப் பெறவே அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவானார். நாம் நீதிமான்களாக்கப்பட நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தேவையில்லை.

இரண்டாவது வேத பகுதி 2 கொரிந்தியர் 5:21:

[21]நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

இது ஒரு தெய்வீக பரிமாற்றம். தேவனுடைய நீதியோடு நாமும் நீதிமான்களாக்கப்பட இயேசு நமக்காகப் பாவமாக்கப்பட்டார். கிறிஸ்துவின் நீதியோடு நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் உணரும்போது குற்ற உணர்வுடையவர்களாக மாற்ற பிசாசினால் கூடாது. சாத்தானுடைய முக்கிய ஆயுதம் அவனிடமிருந்து பறிக்கப்படுகிறது. சிலுவை மரணத்தின் மூலமாக இயேசு அதிகாரங்களையும் வல்லமையையும் குலைத்துப் போடுகிறார். நமக்கு விரோதமான ஆயுதத்தை அவைகளிடமிருந்து அவர் பறித்துக் கொண்டார்.

இயேசுவின் வெற்றி நம் மூலமாகச் செயல்படுவதைக் குறித்து உங்களுக்கு விளக்க உள்ளேன். கொலோசெயர் 2:15இல் இயேசுவின் வெற்றி குறித்து நாம் பார்த்தோம்:

[15]துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.

வெற்றி சிறப்பது என்பது வெற்றியை ஜெயித்துப் பெறுவதல்ல. ஏற்கெனவே பெற்ற வெற்றியை கொண்டாடித் தெரிவிப்பதாகும். இயேசு, தனது சிலுவை மரணத்தின் மூலம் சாத்தானின் அரசின் மேலும் பெற்ற முழு வெற்றியை உலகத்திற்கு விளங்கப்பண்ணினார். இருப்பினும் இயேசு அந்த வெற்றியைத் தமக்காக ஜெயித்துப் பெறவில்லை, அவருக்கு அது தேவையுமில்லை. அதை நமக்காக வென்றார். அந்த வெற்றி நம்மூலம் கிரியை செய்து வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே தேவனின் நோக்கமாகும். 2 கொரிந்தியர் 2:14இல் பவுல் இவ்வாறு கூறுகிறார். (இது எனக்குப் பிடித்தமான வசனங்களில் ஒன்று.)

[14]கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பவுல் "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த வசனத்தின் செய்தியை அறிந்து கொள்வோமென்றால் கர்த்தரை ஸ்தோத்தரிப்பது மட்டும் போதாது. சாத்தானின் அரசின் மேல் கிறிஸ்துவின் வெற்றியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். இதில் இரண்டு வினை உரிச்சொல்கள் உண்டு. அவைகளாவன: "எப்பொழுதும்" மற்றும் "எல்லா இடங்களிலேயும்."

எனவே, சாத்தானின் அரசின் மேல் கிறிஸ்து பெற்ற வெற்றியை பகிர்ந்து கொள்ள நேரமோ இடமோ கிடையாது.

மத்தேயு **28:18–20**இல் இயேசு கூறுகிறார்:

> 18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
> 19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,
> 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். ஆமென்.

அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் சாத்தானிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொண்டார். மேலும் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் தேவன் அவருக்குக் கொடுத்தார் என்று இயேசு கூறுகிறார். "ஆகையால் புறப்பட்டுப்போய். . . சீஷராக்குங்கள்" என்கிறார். இங்கே ''ஆகையால்'' என்பதன் முக்கியத்துவம் என்ன? ''நான் அதிகாரத்தை வென்று பெற்றேன், எனவே நீங்கள் போய் அதைப் பயன்படுத்துங்கள். எனது கட்டளையை நிறைவேற்றுவதன் மூலம் இந்த உலகம் முழுவதிலும் இதனை செயல்படுத்திக் காட்டுங்கள்" என்று இயேசு கூறுகிறார்.

இயேசுவின் வெற்றி குறித்து மூன்று முக்கியக் காரியங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவது வனாந்தரத்தில் சோதனையின்போது தானாக சாத்தானை ஜெயித்தார். சாத்தானை சந்தித்தார். அவனுடைய சோதனையை மேற்கொண்டார். கடைசியாக அவனைத் தோற்கடித்தார். இரண்டாவதாக சிலுவையின்மேல் தனக்காக அல்ல நமது சார்பாய் நமக்காக சாத்தானைத் தோற்கடித்தார். அவருக்கு வெற்றி தேவைப்படவில்லை. ஏனெனில் அதனை ஏற்கெனவே பெற்றுவிட்டார். எனவே நமக்காக வெற்றிவாகை சூடினார். நமது எதிரியை வென்று ஜெயித்தார். அவனை நிராயுத பாணியாக்கி உரிந்துகொண்டு, அவனை நமக்கு முன்பாகக் காட்சிப் பொருளாக்கினார். மூன்றாவதாக இயேசுவின் வெற்றியை நாம் உபயோகப்படுத்துவது நமது கடமையாகும். 2 கொரிந்தியர் 2:14:

> 14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

"எப்பொழுதும்", "எல்லா இடங்களிலேயும்" கிறிஸ்து நமக்காக வெற்றியை ஏற்படுத்திக் கொடுக்கிறார் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பகுதி 2

நமது பாதுகாப்புக் கவசம்

06

தேவனுடைய சர்வாயுத வர்க்கம்

இவ்வுலகத்தில் தேவனுடைய அரசின் பிரதிநிதிகளாகிய நாம் கட்டுக்கோப்பான அரசிற்கு விரோதமான போரில் ஈடுபட்டுள்ளோம் என்பது குறித்து நான் ஏற்கெனவே விவரித்துள்ளேன். இது பொல்லாத ஆவிகளின் அரசு (உடலற்ற ஆட்கள்). இதனுடைய செயலகம் வானமண்டலங்களிலுள்ளது.

இந்த யுத்தம் நடக்கும் போர்க்களம், மனிதர்களின் மனங்களாகும். சுவிசேஷத்தின் உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதபடி தப்பெண்ணத்தினாலும் அவிசுவாசத்தாலும் மனுக்குலத்தின் மனங்களிலே சாத்தான் அரண்களைக் கட்டியுள்ளான். இத்தகைய மனதின் அரண்களை நிர்மூலமாக்கி சாத்தானின் தந்திரங்களுக்கு ஆண்களையும் பெண்களையும் விடுவித்து அவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக கீழ்ப்படியவும் ஒப்புக் கொடுக்கவும் உதவுவதே தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்பாகும்.

தேவனால் நமக்களிக்கப்பட்ட இந்தப் பொறுப்பை நிறைவேற்ற நமக்குத் தேவையான பலம் இரண்டு முக்கியமான காரியங்களைச் சார்ந்துள்ளது. முதலாவது, நாம் வேதத்தில் வாசிக்கிறபடி நமது சார்பாக இயேசு சாத்தானை சிலுவையில் முற்றிலுமாகத் தோற்கடித்தார். இயேசு நமக்காக ஏற்கெனவே பெற்ற வெற்றியை செயல்படுத்திக் காண்பிப்பது நமது கடமையாகும். இரண்டாவது, தேவன் நமக்களித்த ஆவிக்குரிய போராயுதங்களைச் சரியானபடி உபயோகிக்க வேண்டும். இந்த ஆவிக்குரிய போராயுதங்கள் இருவகைப்படும். அவைகள் பாதுகாப்பு ஆயுதங்கள் மற்றும் எதிர்க்கும் ஆயுதங்கள். இந்தப் பகுதியில் முதல் வகை ஆயுதங்களைக்

குறித்து நாம் காணலாம்.

இதற்கு அடிப்படையாக எபேசியர் 6:10–17ஐ எடுத்துக் கொள்வோம்.

[10]கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.
[11]நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.
[12]ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.
[13]ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.
[14]சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;
[15]சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;
[16]பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.
[17]இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த வசனங்களின் ஆரம்பத்தில் "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொள்வது குறித்து நாம் கவனிப்போம். "ஆகையால்" என்று வேதத்தில் கூறப்படும் பொழுதெல்லாம் ஏன் அப்படிக் கூறப்பட்டுள்ளது என்பதை கவனிக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இங்கே பவுல் "ஏனெனில்" என்று ஏன் கூறுகிறார் என்றால் "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." சாத்தானின் ராஜ்யத்திலுள்ள பொல்லாத ஆவிகளோடு நமக்கு ஜீவ மரணப் போராட்டம் உண்டு என்பதால் நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்வது அவசியம். இது

மிகவும் முக்கியம் என்பதால் இருமுறை “தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்” என்று கூறுகிறார் (வசனம் 11, 13). “தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தால்” நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று வேத வசனம் நம்மை எச்சரிக்கிறது.

13ம் வசனத்தில் மேலும் ஒரு காரணத்தை பவுல் கூறுகிறார். “தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு” என்கிறார்.

“தீங்கு நாள்” என்ற இந்த சொற் தொடரைக் கவனியுங்கள். இது இந்த உலகத்தில் நடக்கப்போகிற பெரிய வாதையையோ அல்லது ஒரு தீர்க்கதரிசன அழிவையோ குறிப்பதாக நான் கருதவில்லை. (உண்மையில் அப்படிப்பட்ட அழிவுகள் உண்டு என்று நம்புபவன் நான்). ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள “தீங்கு நாள்” என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனும் எதிர்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இப்படிப்பட்ட காலத்தில் அவன் பொல்லாத சக்திகளை எதிர்கொள்ள வேண்டிவரும். அப்போது அவனுக்கெதிராக எல்லாவிதமான எதிர்ப்புகளும் பிரச்சனைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு அவனுடைய விசுவாசத்திற்கு சவால் விடப்படும்.

நாம் இப்படிப்பட்ட தீங்கு நாளை சந்திக்க வேண்டுமா என்பது குறித்து பவுல் கேள்விக்குறியை எழுப்பவில்லை. இது அவரவர் விருப்பமல்ல. ஆனால் கட்டாயமாய் எதிர்கொள்ள வேண்டிய ஒன்று. நான் எப்போதும் இயேசு சொன்ன உவமையாகிய வீடு கட்டிய இருவரைக் குறித்து யோசிப்பதுண்டு. புத்தியில்லாத மனிதன் மணலின்மேலும் புத்தியுள்ள மனிதன் கற்பாறையின் மேலும் வீட்டைக் கட்டினர். புத்தியில்லாத மனிதனின் வீடு அழிந்தது ஆனால் புத்தியுள்ளவன் கட்டிய வீடோ நிலைத்திருந்தது. இந்த இரண்டு வீடுகளுக்கும் உள்ள வித்தியாசம் அவைகள் இரண்டிற்கும் நேர்ந்த சோதனையன்று. ஏனெனில் அவைகள் இரண்டிற்கும் ஒரே சோதனைதான் வந்தது. காற்று, மழை மற்றும் வெள்ளம் ஆனால் எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டது என்பது தான் வித்தியாசம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இத்தகைய சோதனைகளினின்று தப்பித்துக் கொள்வது குறித்து வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. “தீங்கு நாளுக்கு” நாம் தப்பிக் கொள்ள முடியாது. அதனை எதிர்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். இதைக் குறித்துக் கூறும்போது தான் “தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்” என்று பவுல் கூறுகிறார்.

ஒரு ரோமப் போர்ச்சேவகன் பவுலின் நாட்களில் எப்படி ஆடை அணிவானோ அந்த உருவகத்தை மனதில் கொண்டு ஆறு

பொருட்களைப்பற்றி பவுல் கூறுகிறார். நான் அவைகளைக் கீழே பட்டியலிடுகிறேன்.

முதலாவது சத்தியம் என்னும் கச்சை.

இரண்டாவது நீதியென்னும் மார்க்கவசம்.

மூன்றாவது சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை.

நான்காவது விசுவாசம் என்னும் கேடயம்.

ஐந்தாவது இரட்சண்யம் என்னும் தலைச்சீரா.

ஆறாவது வேதவசனமாகிய ஆவியின் பட்டயம்.

இதைக் குறித்து தியானிக்கையில் இந்த ஆறு பொருட்களையும் நீங்கள் அணிந்து கொள்ளும்போது உச்சந்தலை முதல் உள்ளங்கால் மட்டுமாக நீங்கள் முழுவதுமாக பாதுகாக்கப்படுவதை உணர்வீர்கள், ஆனால் ஒரு பகுதியைத் தவிர. அது உங்கள் முதுகுப்பகுதி அதற்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. இந்தப் பகுதியின் கடைசியில் இது குறித்து விளக்குகிறேன்.

07

சத்தியம் என்னும் கச்சை

முதல் ஆயுதம் சத்தியம் என்னும் கச்சை ஆகும். ரோமப் போர்ச் சேவகனுக்கு ஏன் கச்சை என்னும் ஆயுதம் தேவைப்பட்டது என்பது குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் ஆண்களின் உடை (பெண்களின் உடையும் கூட) குறைந்தபட்சம் முழங்கால்வரை உள்ள தாராளமாகத் தைக்கப்பட்ட ஆடையாக இருக்கும். ரோமப் போர்ச் சேவகரின் உடை இதைப் போல பரந்ததாக இருக்கும். ரோமப் போர்ச் சேவகன் வேகமாக ஒரு செயலில் ஈடுபடும் போது அதாவது அவன் போரிடும் போது அல்லது தனது ஆயுதத்தைப் பயன்படுத்தும் போது தன்னுடைய உடையைப் பாதுகாப்பது அவசியம். இல்லாவிட்டால் அவனது ஆடையே அவனைத் தடுக்கிவிட்டு அவன் தன் செயலில் ஈடுபட முடியாமலும் தனது மற்ற ஆயுதங்களைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாமலும் போகச் செய்யும்.

முதலாவது அவன் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் தனது இடுப்பில் கச்சையை இறுக்கமாகக் கட்டிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உடை இடைஞ்சல் ஏற்படுத்தாமலும் அவனது பணியில் இடையூறு ஏற்படுத்தாமலும் இருக்கும். இது மிகவும் அவசியம். மற்ற எல்லாக் காரியங்களுக்கும் அடிப்படையானதுமாகும். எனவே தான் மற்றதைப்பற்றிக் கூறுமுன்பதாக சத்தியம் என்னும் கச்சையைப்பற்றி பவுல் முதலாவது கூறுகிறார்.

வேதத்தில் அடிக்கடி “கச்சையை இறுக்கிக் கட்டிக் கொள்ளுதல்” பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் இதுதான்.

நமக்குக் கச்சை, சத்தியம் என்று பவுல் கூறுகிறார். அது ஏதோ குணாதிசயத்தைப் பற்றிக் கூறும் வேதத்திற்கடுத்த சத்தியமல்ல. ஆனால் இது தினசரி வாழ்க்கைக்குரிய சத்தியமாகும். அது நேர்மை, உண்மை, வெளிப்படையான தன்மையைக் குறிப்பதாகும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மாய்மாலக்காரர்களாயிருந்தும் நல்லவர்கள் போல் நடிக்க சிரமப்படுகிறோம். நமது செயலும், சொல்லும் அநேக தடவைகளில் அர்த்தமற்றதாக உள்ளன. ஆனால் அவைகள் நல்லவைகளாக இருப்பதால் அதைச் செய்கிறோம். நாம் மதச் சடங்காச்சாரமான வார்த்தைகளைப் பேசுகிறோம் ஆனால் அதில் உண்மையில்லை. நாம் செய்யும் அநேகக் காரியங்கள் தேவனைப் பிரியப்படுத்துவதற்காக அல்ல மற்ற மக்களைப் பிரியப்படுத்தவே அவற்றைச் செய்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவ சபைப் பிரிவும் “இயேசு உங்களுக்கு உதவி செய்வார் சகோதரனே” என்பது போன்ற சில வார்த்தைகளை அவரவர் பிரிவுக்கு ஏற்பப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இயேசு உதவி செய்ய வேண்டியதில்லை. **நீங்கள்** தான் உங்கள் சகோதரனுக்கு உதவி செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட மதச் சடங்காச்சார வார்த்தைகள் விரிந்து தொங்கும் ஆடை போன்றது. தேவன் நம்மை செய்யும்படி கூறும் காரியங்களைச் செய்ய முடியாதபடி இவைகள் நம்மைத் தடை செய்கின்றன. நாம் சுறுசுறுப்பான, பலம் வாய்ந்த உபயோகமான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாதபடி இது தடை செய்கின்றது. மேலும் இது மற்ற ஆயுதங்களை உபயோகிக்க விடாமலும் தடுக்கின்றது.

முதலாவது நாம் சத்தியம் என்னும் கச்சையைக் கட்டிக் கொள்ள வேண்டும். அர்த்தமற்ற பேச்சுக்கள், மாய்மாலமான காரியங்கள் மதசம்பந்தமான பேச்சுக்கள் போன்றவற்றை விட்டுவிட வேண்டும்.

அடிக்கடி சத்தியம் என்பது கடைபிடிக்கச் சிரமமான காரியம் நீங்கள் உண்மையில் எப்படிப்பட்டவரோ அதை மற்றவர்களுக்குக் காட்ட வேண்டும். நீங்கள் உங்களை மறைத்துக் கொண்டு மதத்தின் போர்வையைப் போட்டுக் கொண்டு இத்தனை நாட்கள் இருந்திருக்கலாம். இப்போது உண்மையான சத்தியத்தில் நின்று வெளிப்படையான தன்மையைத் தரித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். மதச் சடங்காச்சாரங்கள், உண்மையற்ற தன்மை, இனி உங்களில் வேண்டாத தொங்கலாக தேவன் உங்களில் எதிர்பார்க்கிற காரியங்களைச் செய்யமுடியாதபடி அவைகள் தடைசெய்யாமலிருக்க நீங்கள் கச்சையை எடுத்து உங்கள் இடுப்பில் வரிந்து கட்டிக் கொள்ளுங்கள்.

08

நீதியென்னும் மார்க்கவசம்

மனிதனின் முக்கிய உறுப்பாகிய இதயத்தை காப்பது ரோமப் போர்ச் சேவகரின் மார்க்கவசமாகும். நமது வாழ்க்கையில் இருதயம் மிகவும் முக்கியப் பங்காற்றுகிறது என்று வேதத்தில் சாலொமோனின் நீதிமொழிகள் 4:23இல் வாசிக்கிறோம்:

> **[23]எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.**

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவில் ஐந்து ஆண்டுகள் நான் ஆசிரியராகப் பணியாற்றினேன். அங்குள்ள கல்வியறிவற்ற பல பழங்குடி இன மக்களோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டதால் அவர்களுடைய மொழிகளை ஓரளவு கற்றுக் கொண்டேன். ஒரு நாள் ஒரு மாணாக்கனின் அறை சுவற்றின் மீது நீதிமொழிகள் 4:23 மரகோலி மொழியில் எழுதப்பட்டிருப்பதைக் கவனித்தேன். அதை அப்படியே எனக்கு நானே மொழி பெயர்த்து அறிந்து கொண்டேன். அதை நான் எப்பொழுதும் நினைவு கூறுவேன். "உன் முழு பலத்தோடும் உனது இருதயத்தைக் காத்துக்கொள் ஏனெனில் வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களும் அதனின்று புறப்பட்டு வரும்" என்று அதில் எழுதியிருந்தது.

உங்கள் மனதில் என்ன இருக்கிறதோ அதுதான் உங்கள் வாழ்க்கைப் பாதையை தீர்மானிக்கும் அது நல்லதோ கெட்டதோ உங்கள் மனதிலுள்ளதைப் பொறுத்தது. எனவே எல்லா வகையான தீய

காரியங்களுக்கும் நமது மனதை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். நீதியென்னும் மார்க்கவசம் நமது இருதயத்திற்கு பாதுகாப்பாக இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்.

நீதியென்றால் என்ன என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். ஆச்சரியவிதமாக பவுல் இந்த ஆவியின் பட்டயம் குறித்து வேறு ஒரு நிரூபத்தில் கூறுகிறார். 1 தெசலோனிக்கேயர் 5:8இல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> 8 பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.

இங்கே பவுல் வேறு ஒரு கோணத்தில் மார்க்கவசம் குறித்து விவரிக்கிறார். “விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம்” என்று கூறுகிறார். இவ்விரண்டையும் இணைத்துப் பாருங்கள்: “நீதியென்னும் மார்க்கவசம்,” “விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசமாகும்” பவுலின் மனதிலுள்ள நீதியைப் பற்றி இது கூறுகிறது. கிரியைகளினாலோ மதச் சட்டங்களினாலோ உண்டாகும் நீதியல்ல. ஆனால் இது விசுவாசத்தின் மூலமாக உண்டாகும் நீதியாகும்.

பிலிப்பியர் 3:9இல் இந்த நீதியைக் குறித்து மீண்டும் கூறுகிறார்:

> 9 நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், எனத் தொடர்கிறது.

இங்கு இருவிதமான நீதியைக் குறித்து ஒன்றன்பின் ஒன்றாகக் கூறுகிறார். முதலாவது நியாயப்பிரமாணத்தினால் வருகிற நீதியைக் குறித்துப் பேசுகிறார். இது போதாது என்றும் கூறுகிறார். இதற்குப் பதிலாக விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிற நீதியைக் குறித்துப் பேசுகிறார். இருதயத்தைக் காக்கிற நீதியென்னும் மார்க்கவசத்தைக் குறித்துப் பேசுகையில் பவுலின் மனதில் இந்த வகையான நீதியே மனதில் உள்ளது. நம்முடைய சுய நீதி என்னும் மார்க்கவசத்தை நாம் அணிந்திருக்கும் வரை அதில் அநேக பெலவீனமான காரியங்களைக் கண்டு தன்னுடைய தாக்குதல்கள் மூலம் ஊடுருவிச் சென்று சாத்தான் நமது இருதயத்தைக் கெடுத்துவிடுவான். நம்முடைய நீதியென்னும்

மார்க்கவசத்தையல்ல கிறிஸ்துவின் நீதியென்னும் மார்க்கவசத்தையே நாம் அணிந்துகொள்ள வேண்டும். 2 கொரிந்தியர் 5:21இல் இவ்வாறு வாசிக்கிறோம்.

> [21]*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

நாம் தேவனுடைய நீதியாக மாறியுள்ளோம் என்று வேத வசனத்தின் மூலமாயும் விசுவாசத்தின் மூலமாயும் ஒப்புக்கொள்ள வேண்டும். நமது இருதயத்தையும் நமது வாழ்வையும் பாதுகாக்கும் ஒரே மார்க்கவசம் அதுதான்.

பவுல் வலியுறுத்திக் கூறும் இந்த வகையான நீதி விசுவாசத்தின் மூலம் வருகிறது. எனவே இது விசுவாசம் மற்றும் அன்பின் மார்க்கவசம் ஆகும். இவ்வகையான நீதியைப் பெற வேறு வழி கிடையாது.

பேதுரு தன்னை மறுதலிப்பான் என்று இயேசு எச்சரித்த இரவுக்கு முந்தின இரவில் இயேசு பேதுருவுக்காக செய்த ஜெபம் என்னை சிந்திக்கச் செய்தது. அந்த எச்சரிப்பினூடே ''பேதுருவே நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று கூறுகிறார். பேதுரு தன்னை மறுதலிக்கக் கூடாது என்று அவர் ஜெபிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பேதுருவுக்கு பல பக்கங்களிலும் இருந்து வந்த அழுத்தங்கள் மற்றும் அவனுடைய குணாதிசயப்படி அவனுடைய பெலவீனம் இவற்றினால் இயேசுவை இவன் மறுதலிப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டிருந்தது. ஆனால் இயேசு ஒரு வித்தியாசமான வேண்டுதலைச் செய்கிறார். இத்தகைய ஜெபம் மட்டுமே பேதுருவுக்கு உதவ முடியும். லூக்கா 22:31–32இல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> [31]*"பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்.*
> [32]*நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்;. . . என்றார்."*

"உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு" என்பதை கவனியுங்கள். அவன் ஆண்டவரை காட்டிக் கொடுத்து அதன் மூலம் அவனது பெலவீனத்தையும் தான் ஒரு கோழை என்பதையும் காட்டும் நிலை ஏற்பட்டாலும் அவன் விசுவாசம் மட்டும் ஒழிந்து போகாமல் இருக்குமென்றால் அவன் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும். இதுதான் விசுவாசம் மற்றும் அன்பின் மார்க்கவசம் இந்த மார்க்கவசத்திற்கு விசுவாசமே இன்றியமையாத ஒன்றாகும்.

நாம் ஆராயும் இத்தகைய விசுவாசம் அன்பின் மூலமாகவே கிரியை செய்கிறது. கலாத்தியர் 5:6 இவ்வாறு கூறுகிறது:

> [6]*கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.*

பவுல் என்ன கூறுகிறார் என்று நான் எண்ணுகிறேன் என்றால் "எந்த வகையான வெளிப்படையான சடங்காச்சாரங்களோ, மார்க்க நெறிமுறைகளோ போதாது. ஒரே அத்தியாவசியமானதும் கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றிபெற இன்றியமையாததுமான ஒன்று விசுவாசமேயாகும். இத்தகைய விசுவாசம் அன்பின் மூலமாகக் கிரியை செய்கின்றது. இத்தகைய விசுவாசம் செயலற்றதாகவோ எழுத்தளவிலோ இருக்கக் கூடியதல்ல. இது உற்சாகமாய் செயலாற்றுகிறதாயும் அன்பின் மூலமாகவே கிரியை செய்கிறதாயுமிருக்கிறது."

நான் எவ்வளவுக்கதிகமாய் இதைத் தியானிக்கிறேனோ அவ்வளவுக்கதிகமாய் தடுக்க முடியாத அன்பின் வல்லமையால் ஈர்க்கப்படுகிறேன். உன்னதப்பாட்டு 8:6–7நான் மிகவும் விரும்பும் வசனங்களாகும்:

> [6]*நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையைப் போலவும்,*
> *உமது புயத்தின்மேல் முத்திரையைப் போலவும் வைத்துக் கொள்ளும்;*
> *நேசம் மரணத்தைப்போல் வலிது;. . .*
> [7]*திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும்*
> *அதைத் தணிக்க மாட்டாது;. . .*

"நேசம் மரணத்தைப் போல் வலியது" என்ற வாக்கியத்தைப் பாருங்கள். நாம் அனைவரும் எதிர்கொள்ளவேண்டிய தவிர்க்க முடியாத ஒன்று மரணமாகும். நம்மில் ஒருவர் கூட அதைத் தடைசெய்ய முடியாது. அதனைத் தவிர்க்கவும் முடியாது. வேத வசனம் கூறுகிறது நேசம் மரணத்தைப் போல் வலியது என்று.

இதைப்பற்றி சிந்தியுங்கள்: அன்பைத் தடை செய்ய இயலாது. அது எப்போதும் மேற்கொள்ளும். அதைத் தோற்கடிக்க முடியாது. நமது இதயத்தை களங்கமடையச் செய்து நமது வாழ்க்கையை அழிக்கக் கூடிய எதிர்மறையான சக்திகளாகிய கோபம், மன்னிக்க முடியாத தன்மை, கசப்பு, ஊக்கமின்மை, நம்பிக்கையற்ற நிலை இவற்றினின்று அன்பானது நம்மைப் பாதுகாக்கிறது. வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களும் இருதயத்திலிருந்து புறப்படுகிறது என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

இத்தகைய அன்பைக் குறித்து 1 கொரிந்தியர் 13:4–8இல் பவுல் விவரிக்கிறார்.

> [4]அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,
> [5]அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,
> [6]அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.
> [7]சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.
> [8]அன்பு ஒருக்காலும் ஒழியாது. . .

இப்படிப்பட்ட ஒருக்காலும் ஒழியாத மார்க்கவசம் தான் நமக்குத் தேவை. சாத்தான் துளைத்து உட்புகும் பெலவீனமான காரியங்கள் இந்த மார்க்கவசத்தில் இல்லை. பவுல் கூறும் அனைத்துக் காரியங்களும் இந்த மார்க்கவசத்தைக் குறிப்பதாக இருக்கிறது. அன்பு எப்போதும் பாதுகாக்கிறது, நம்புகிறது, விசுவாசிக்கிறது, சகிக்கிறது. அன்பின் மூலமாகக் கிரியை செய்கிற விசுவாசத்தின் மார்க்கவசம் உங்களை எப்போதும் பாதுகாக்கிறது. உங்கள் வாழ்க்கையின் முக்கியப் பகுதியாகிய இருதயத்தை ஊடுருவிச் செல்ல சாத்தான் தொடுக்கும் ஒவ்வொரு வகையான தாக்குதலுக்கும் இது உங்களைப் பாதுகாக்கும்.

09

சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை

ரோமப் போர்ச் சேவகர்கள் அணியும் பாதரட்சை பொதுவாக கனமானதாகவும்,பலமுள்ளதாகவும் இருக்கும். அதைச் சரியாக பொருத்திக் கொள்ள அதற்கென தோலாலான வார்களும் இருக்கும். ரோமப் போர்ச் சேவகருக்கு பாதரட்சை மிகவும் முக்கியமான சாதனமாகும். ஏனெனில் அவர்கள் வெகுதூரம் வேகமாகச் செல்ல அவர்களுக்கு அவைகள் உதவி புரிகின்றன. அவர்கள் நடந்து செல்ல இவைகள் உதவுகின்றன. படைத்தலைவன் கூப்பிடும்போதும் யுத்த வேளையிலும் சரியான நேரத்திற்குச் செல்ல இவைகள் உதவுகின்றன. நமது படைத்தளபதியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடக்கவும் அதற்குத் தயார் நிலையிலிருக்கவும் உதவும் பாதரட்சைகளை மனதில் எண்ணிப்பாருங்கள். என்னுடைய சொந்த வாழ்வில் இது உண்மை எனக் கண்டுகொண்டேன்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது வட ஆப்பிரிக்காவிலுள்ள பாலைவனத்திலிருந்த பிரிட்டிஷ் இராணுவத்தின் மருத்துவப் பிரிவில் நான் இரு ஆண்டுகள் பணிபுரிந்தேன். இராணுவ கவசப்பிரிவோடு இணைந்து பணிபுரிந்த போது சில சமயங்களில் இரவு நேரங்களில் எதிரிகளின் பகுதிக்கு வெகு அருகாமையில் இருப்போம். பாலைவனப் பகுதிகளில் எதிரிகளின் பிரிவுகளை இனம் கண்டு கொள்வது மிகவும் கடினம். ஏனெனில் சண்டையானது ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கும். அந்த மாதிரி சமயங்களில் இரவு நேரங்களில் எங்களுடைய காலணிகளைக் கழற்றக் கூடாது என்று எங்கள் படைத்தளபதி கூறுவார். எனவே நாங்கள் எங்கள் பாதரட்சைகளை அணிந்து கொண்டே

தூங்குவோம். இதற்கான காரணம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழும்பும்போது நாம் உடனடியாகச் சுய நினைவுக்கு வர முடியாது. எனவே உங்கள் கால்களில் பாதரட்சை இல்லாவிடில் உங்களைச் சுற்றியுள்ள குழப்பமான சூழ்நிலையில் இருட்டில் உங்கள் பாதரட்சைகளைத் தேடுவதிலும் பின்பு அவற்றை அணிந்து காலணிச் சரட்டைக் கட்டுவதிலும் உங்களுடைய விலைமதிக்க முடியாத நேரத்தை வீணடிக்க வேண்டிவரும். ஆனால் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களில் கழற்றப்படாமலேயே கட்டப்பட்டிருக்குமென்றால் நீங்கள் உடனடியாகத் தயாராக முடியும். இதில் முக்கியமான காரியம் என்னவென்றால் தயாராக இருப்பதும் செயற்பட ஆயத்தமாவதுமாகும்.

பவுல் கூறும் இந்த உபகரணம் ஆவிக்குரிய வாழ்விலும் உண்மையானதாகவே உள்ளது. பாதரட்சை அல்லது செருப்பானது “சுவிசேஷத்தின் ஆயத்தம்” என்பதாகும். வேறு வகையாகக் கூறினால் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டு தயாராக இருத்தலாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் சுவிசேஷத்தை நன்கு புரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் இரட்சிப்படைந்ததாகவும் மறுபிறப்படைந்ததாகவும் கூறிக் கொள்கின்றனர். ஆனால் எப்படி அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்றோ மற்றவர்கள் எப்படி இரட்சிப்படைவது என்பது குறித்தோ ஞானமாகப் பதில் கூற முடிவதில்லை. “ஆயத்தம்” என்பதில் வேத வசனங்களைப் படிப்பது, மனப்பாடம் செய்வது, ஞானமாக சுவிசேஷ செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் திறமை பெற்றிருப்பது இவைகள் யாவும் அடங்கும். மேலும் பவுல் இதனை “சமாதானத்தின் சுவிசேஷம்” என்றழைப்பதைப் பாருங்கள். இதனை விசுவாசிப்பவர்களுக்கும் கீழ்ப்படிபவர்களுக்கும் இது சமாதானத்தை தருகிற நற்செய்தியாக இருக்கிறது.

சமாதானத்தைக் குறித்து ஒரு காரியம் நிச்சயம். நாம் சமாமதானமுடையவர்களாக இருந்தால் தான் மற்றவர்களுக்கு நாம் சமாதானத்தைக் கொடுக்க முடியும். நாம் அனுபவிக்காத ஒன்றை மற்றவர்களுக்கு நாம் கொடுக்க முடியாது.

மத்தேயு **10:12–13** வசனங்களில் இயேசு முதலாவது சீஷர்களை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பும் போது கொடுத்த அறிவுரைகளை நாம் காணலாம். அவைகள் வருமாறு:

> 12 *ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது அதை வாழ்த்துங்கள்.*
> 13 *அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது. என்றார்.*

மிகவும் விசேஷமான இந்த சொற்றொடரைக் கவனியுங்கள் "அந்த வீடு பாத்திரமாயிருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவர்கள் மேல் வரக்கடவது. . ." நீங்கள் உங்கள் சமாதானத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். நீங்கள் ஒரு வீட்டுக்குள் போகும்போது அவர்களுக்குக் கொடுக்க உங்களிடத்தில் சமாதானம் உண்டா? நீங்கள் அனுபவிக்காத ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது.

இது எப்படி கிரியை செய்கிறது என்பது குறித்து நான் ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். நீங்கள் மளிகைக் கடைக்குச் சென்று மளிகை சாமான்கள் வாங்கச் செல்லும் ஒரு பெண்ணாக நினைத்துக் கொள்ளுங்கள். வேறு ஒரு பெண் அங்கு நின்று கொண்டிருக்கிறாள். அவள் மிகவும் மனமுடைந்த நிலையில் இருக்கிறாள். அந்தப் பெண்ணுக்கு உதவும்படி தேவன் உங்களிடம் சொல்லுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்? "ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்கு வாருங்கள்" என்று கூறுவீர்களா? அது அவளுடைய தேவையைப் பூர்த்தி செய்யாது. அது தான் உங்களுக்கு முடியுமென்றால் நீங்கள் உங்கள் பாதரட்சையை அணியவில்லை என்று அர்த்தம்.

தேவன் உங்களைப் பார்த்துச் சொல்லும் காரியங்களுக்கெல்லாம் அவ்வப்பொழுது சரியான முறையில் காரியங்களைச் செய்ய ஆயத்தமாய் இருப்பது தான் பாதரட்சையை நீங்கள் அணிந்து கொண்டிருப்பதற்கான அர்த்தம். முதலாவது நீங்கள் சமாதானமுடையவர்களாயிருக்க வேண்டும். அவளிடமில்லாத ஒன்று, அவளுக்கு மிகவும் தேவையான சமாதானம் உங்களிடமுள்ளதாக அவள் உணர வேண்டும். ஒருவரிடத்தில் சமாதானம் குடிகொண்டிருப்பதை பிறரால் புரிந்து கொள்ள முடியும்.

சமாதானம் பெற அவள் உங்களை நாடும்போது எளிமையான மார்க்க சம்பந்தமில்லாத வார்த்தைகளால் சமாதானம் பெறுவது எப்படி என்று விளக்க வேண்டும். சுவிசேஷத்தை அவளுக்குச் சொல்ல நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இதுதான் "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம்" என்னும் பாதரட்சையாகும்.

10

விசுவாசமென்னும் கேடகம்

கிரேக்க மொழியில் கேடயத்திற்கு வெவ்வேறு வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஒன்று சிறிய வட்டமான கூடையைப்போன்றகேடகமாகும். மற்றொன்று கதவைப்போல செவ்வக வடிவமாக இருக்கும். இந்த கேடயத்தின் பெயர் கதவு என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். விசுவாசமென்னும் கேடயம் என்று பவுல் கூறும்போது இந்தக் கேடயத்தைப் பற்றிதான் அவர் குறிப்பிடுகிறார்.

நல்ல பயிற்சி பெற்ற ரோமப் போர்ச் சேவகன் இந்தக் கேடயத்தை உபயோகிக்கும் போது எதிரியின் எந்த வகையான தாக்குதலும் தனது உடலில் படாமல் காத்துக் கொள்ளுவான். அது அவனை முழுவதுமாகக் காக்கும். கேடயம் என்று பவுல் குறிப்பிடுகையில் இத்தகைய விசுவாசத்தைக் குறித்துதான் கூறுகிறார்.

சாத்தானுக்கு எதிராக நாம் புறப்படும்போது அவனுக்கு நாம் தொந்தரவு செய்ய முயற்சி செய்யும் போதும் அவன் எதிர்த்தாக்குதல் தொடுப்பான் என்று நிச்சயம் நாம் அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது நமது மனது இருதயம் உடல் நமது பொருளாதாரம் இவற்றின் மீது அவன் தாக்குதலைத் தொடுப்பான். எனவே நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நமக்கு கேடயம் அவசியம். அவன் நமது எந்தப் பகுதியை நெருங்க முடியுமோ அதனைத் தாக்குவான். நம்மைத் தாக்க முடியவில்லை என்றால் நமக்கு மிகவும் நெருங்கினவர்களைத் தாக்குவான். நீங்கள் திருமணம் செய்தவராயிருந்தால் முதலில் உங்கள் மனைவியைத் தாக்குவான். இது

மிகவும் உண்மை. உங்களுக்கு விரோதமாகப் படையெடுப்பதில் இது ஒரு வகை கர்த்தர் நீங்கள் பொறுப்பாக இருக்கவேண்டுமென்று உங்களுக்கு கொடுத்த குடும்பம், நீங்கள் மற்றும் அனைத்தையும் பாதுகாக்க மிகப்பெரிய கேடயம் அவசியம். இது குறித்து நான் ஒரு நல்ல பாடம் கற்றுக் கொண்டேன்.

நான் ஒரு முறை தற்கொலையின் ஆவியையுடைய ஒரு பெண்ணுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் உண்மையில் அற்புதமான விடுதலை பெற்றாள் இதனை அவளும் நன்கு உணர்ந்து இருந்தாள். நாங்கள் இருவரும் கர்த்தருக்கு நன்றி செலுத்தினோம். அடுத்த நாள் அந்த சகோதரி என்னைப் பார்க்க வந்தார்கள். தான் பெற்ற இந்த மகத்துவமான விடுதலை குறித்து விவரித்தார்கள். தான் விடுதலை பெற்ற சமயத்தில் அவரது கணவன் திறந்த ஒரு டிரக்கை நெடுஞ்சாலையில் ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். டிரக்கின் பின் புறத்தில் அவர்களுடைய ஜெர்மன் ஷெப்பர்டு நாய் நின்று கொண்டிருந்தது (அது அப்படி நின்று கொண்டு வர எப்போதும் பிரியப்படும்). எந்தக் காரணமுமில்லாமல் டிரக் வேகமாகச் சென்ற போது ஜெர்மன் ஷெப்பர்டு நாய் டிரக்கிலிருந்து குதித்து மாண்டுபோனது.

அந்த சகோதரி இதைக் கூறின மாத்திரத்தில் நான் உணர்ந்து கொண்டது என்னவென்றால் தற்கொலைப் பிசாசு இந்தப் பெண்ணை விட்டுப் புறப்பட்டு இந்த நாய்க்குள் புகுந்து கொண்டது. சாத்தான் எப்போதும் தனக்கு மிக அருகாமையிலுள்ள பொருட்களைத் தாக்குவான். நான் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொண்டேன். மறுபடியும் இதனைக் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

நான் எப்பொழுதெல்லாம் விடுதலையின் ஊழியத்தைச் செய்கிறேனோ அப்பொழுதெல்லாம் இயேசுவின் இரத்தத்தின் மூலம் அம்மக்களோடு தொடர்புடைய எல்லாவற்றின் மேலும் பாதுகாப்பை அளிக்கக் கேட்பேன். அதன் பிறகு இம்மாதிரி ஏதும் எனக்கு ஏற்படவில்லை. கர்த்தர் நமக்கு நியமித்த எல்லாவற்றையும் பாதுகாக்கும் மிகப்பெரிய கேடயமாக இது பயன்படுகிறது என்ற பேருண்மையை இது எனக்குப் போதித்தது.

இந்த சர்வாயுத வர்க்கத்தில் விசுவாசம் இருமுறை கூறப்பட்டுள்ளது. விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசம் மற்றும் விசுவாசம் என்னும் கேடயம். இரண்டு இடத்திலும் உபயோகிக்கப்பட்டுள்ள “விசுவாசம்” என்னும் வார்த்தையிலுள்ள சிறிய வித்தியாசத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மார்க்கவசம் நமது சொந்த நீதிக்கான விசுவாசம். ஆனால் விசுவாசம் என்னும் கேடயம் நமது சொந்த பாதுகாப்பு மட்டுமல்ல கர்த்தர் நமக்குக் கொடுத்த அனைத்தின் மேலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஆகும். இது எல்லாவற்றையும் மூடிப் பாதுகாக்கிறது.

என்னுடைய வானொலி நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். இந்த ஊழியத்திற்குள் கடந்து வரும் போது நிகழ்ச்சி தயாரிப்பிலும் அலுவலகப் பணியிலும் எத்தனைக் காரியங்களில் தவறு நேர்ந்தது என்று ஆச்சரியப்பபட்டேன். நன்றாக வேலை செய்யும் கருவிகள் திடீரென இயங்காமல் போகும். ஊழியர்கள் சுகவீனமடைவார்கள் செய்திகள் தவறாக பதிவு செய்யப்படும். எங்களுடைய நன்கு திட்டமிடப்பட்டு செயல்பட்டுவந்த இயக்கத்தில் குழப்பம் ஏற்பட்டது. அப்போது தான் விசுவாசம் என்னும் கேடயத்தை நான் பிடிக்க வேண்டுமென்று உணர்ந்து கொண்டேன். சாத்தான் எதிர்த்தாக்குதல் நடத்தினாலும் என்னை அவனால் அணுக முடியவில்லை. எனவே நான் சார்ந்துள்ள எனது ஊழியத்தைத் தாங்குபவர்களைத் தாக்கினான். ஆனாலும் விசுவாசக் கேடயத்தைப் பிடித்துக் கொண்டு குழப்பத்தின் வல்லமையைக் கடிந்து கொண்டேன். உடனே சமாதானமும் சீரான நிலையும் ஏற்பட்டது. மீண்டும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன். நமது முழுப்பாதுகாப்பிற்கு விசுவாசம் என்னும் கேடயத்தை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

11

இரட்சணியமென்னும் தலைச்சீரா

ஐந்தாவது பாதுகாப்புக் கருவி இரட்சணியமென்னும் தலைச்சீராவாகும். என்னுடைய சொந்தப் போராட்டங்களின் மூலம் நான் கற்றுக் கொண்ட பயனுள்ள பாடங்கள் குறித்து நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய போராட்டங்களை நான் திரும்பிப்பார்க்கும் போது பவுல் ரோமர் **8:37**இல் கூறிய வார்த்தைகள் எனது நினைவுக்கு வருகின்றது:

> 37 இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்றால் என்ன? இதன் அர்த்தம் என்னவெனில் நாம் யுத்தத்தில் ஜெயம் பெறுவது மட்டுமல்ல. நாம் யுத்தத்திற்கு செல்லுமுன் நம்மிடம் இருந்ததைக் காட்டிலும் அதிகமானது நமக்குக் கிடைக்கும் என்பதாகும். எனது சொந்த அனுபவத்தில் இதனை நான் நிரூபித்துள்ளேன்.

மார்க்கவசத்தைப் பற்றிக் கூறும் போது மார்க்கவசம் இருதயத்தைப் பாதுகாக்கிறது என்பதைப் பார்த்தோம். இப்போது தலைச் சீராவைப் பற்றிப் பார்க்கும் போது இது தலையைப் பாதுகாக்கிறது என்றும் தலை என்பது மனதைக் குறிக்கிறது என்றும் நாம் அறிகிறோம். நமது மனதைப் பாதுகாக்கும் தலைச்சீராவைக் குறித்து நாம் கவனிப்போம்.

இந்த முழு ஆவிக்குரிய போராட்டங்களும் நடைபெறும் போர்க்களம்

மனிதர்களின் மனங்களாகும் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். நமது மனமே போர்க்களமாக இருப்பதனால் அதனைப் பாதுகாக்க நாம் மிகவும் கவனமாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

இரண்டாம் உலகப் போரின் போது நான் மருத்துவமனை ஊழியனாகப் பணிபுரிந்தபோது எனது அனுபவத்தின் மூலம் இதனை உணர்ந்திருந்தேன். பொதுவாக தலையில் அடிபட்ட ஒருவர் தனது மற்ற ஆயுதங்களைச் சரிவரப் பயன்படுத்த இயலாது. அவர் மிகுந்த தைரியமுள்ள ஒரு போர் வீரனாயும் மிகச் சிறந்த ஆயுதங்களை உடையவராகவும் இருந்தாலும் தலையில் அவருக்கு காயம் ஏற்பட்டிருக்குமென்றால் அவர் தனது திறமையையும் தனது சிறந்த ஆயுதங்களையும் முழு வீச்சில் பயன்படுத்த முடியாது.

ஆவிக்குரிய பிரகாரமாகவும் அநேக கிறிஸ்தவ ஊழியக்காரர்களின் காரியத்தில் இது உண்மையாக உள்ளது. பல இடங்களிலுள்ள பல்வேறு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள ஆண்களும் பெண்களுமாகிய தேவ ஊழியக்காரர்களோடு எனக்கு தொடர்பு வைத்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. குறிப்பாக மிஷனெரிமார்கள் (நற்செய்திப் பணியாளர்கள்) ஆவிக்குரிய காரியங்களில் எப்போதும் அதிகமான நெருக்குதல்களுக்குள்ளாகின்றனர். என்னோடு பணிபுரிந்த அநேகர், முழு அர்ப்பணிப்புடைய திறமையுள்ள தேவ அழைப்பைப் பெற்ற ஆண்களும் பெண்களுமான தேவப் பிள்ளைகளாவர். இருந்தாலும் அநேக முறை அவர்கள் தங்களுடைய தலை காயப்பட அனுமதித்துள்ளனர். நான் என்ன கூற விரும்புகிறேன் என்றால், அவர்கள் மனத்தளர்ச்சிக்கும் மற்ற கிறிஸ்தவ ஊழியக்காரர்களை நம்பாத தன்மைக்கும் தங்களை இரையாக்கிக் கொண்டனர். அவர்கள் எப்படி சிறந்த நற்செய்திப் பணியாளர்களாக விளங்க வேண்டுமோ அவ்வாறு விளங்க முடியாத வண்ணம் இவர்கள் மனதில் உள்ள இந்தப் பிரச்சினை இவர்களைத் தடை செய்தது. தலையில் காயமடைந்த காரணத்தால் மற்ற ஆயுதங்களை இவர்களால் உபயோகிக்க முடிவதில்லை.

என்னுடைய சொந்த அனுபவத்தில் அநேக ஆண்டுகளாக மனத்தளர்ச்சியினால் ஏற்பட்ட பலத்த போராட்டத்தை உணர்ந்தேன். கருத்த மேகத்தைப் போன்ற அல்லது பனியைப் போன்ற ஒன்று என்மேல் அமர்ந்து மற்றவர்களோடு தொடர்பு கொள்ள இயலாத அளவுக்கு என்னை வேதனைப்படுத்தும். ஆவிக்குரிய வரங்கள் நிறைந்த தகுதி வாய்ந்த ஓர் ஊழியக்காரனாக நான் இருந்தபோதும், அது என்னை நம்பிக்கையற்ற நிலைக்கு அது என்னைக் கொண்டு செல்லும். மேலும் "மற்றவர்களால் முடியும் உன்னால் முடியாது நீ விட்டுவிட வேண்டியது தான்" என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்.

பல ஆண்டுகளாக இந்த மனத்தளர்ச்சியின் போராட்டத்தில் என்னால்

முடிந்ததை எல்லாம் செய்தேன். நான் ஜெபித்தேன், உபவாசித்தேன், தேவனைத் தேடினேன், வேதத்தை வாசித்தேன், ஒரு நாள் கர்த்தர் எனக்கு ஒரு வெளிப்பாட்டைக் கொடுத்தார். அது என் பிரச்சினையைத் தீர்த்தது. நான் ஏசாயா 61:3ஐ வாசித்துக் கொண்டிருந்தேன்:

> [3]*சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்;*

"ஒடுங்கின ஆவி" என்ற சொற்றொடரை நான் படித்த போது எனக்குள்ளாக ஒரு துள்ளல் ஏற்பட்டது. நான் சொன்னேன் "அதுதான் என் பிரச்சினை! அதிலிருந்து தான் எனக்கு விடுதலை தேவை" விடுதலையைக் குறித்த மற்ற வேத பகுதிகளைப் படித்தேன். விசுவாசத்தோடு ஜெபித்தேன். தேவன் அற்புதவிதமாக ஒடுங்கின ஆவியிலிருந்து விடுதலையைக் கொடுத்தார்.

அதன்பிறகு எனது மனதிற்கு தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்பட்டது. எபேசியர் 6ம் அதிகாரத்திலுள்ள பகுதியைக் கவனித்தேன். அது "இரட்சணியமென்னும் தலைச்சீரா" வாகும்.

பின்பு என்னை நானே கேட்டுக் கொண்டது: "நான் இரட்சிப்படைந்த படியால் எனக்குத் தலைச்சீரா கொடுக்கப்பட்டதா? அல்லது தானாகவே கிடைக்கப் பெற்றதா?" ஆனால் இது உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்தவர்களாக இருந்த மக்களுக்கு "இரட்சணியமென்னும் தலைச்சீராவை அணிந்து கொள்ளுங்கள்" என்று எழுதுகிறார். 1தெசலோனிக்கேயர் 5:8இல் கூறப்பட்டுள்ள இதனையொத்த வேத பகுதியைக் காணுமாறு ஏவப்பட்டேன்:

> [8]*பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.*

இரட்சிப்பின் நம்பிக்கை என்ற சொற்றொடரை நான் வாசித்த பொழுது, பரிசுத்த ஆவியானவர் உடனடியாக ஒரு காரியத்தை எனக்கு வெளிப்படுத்தினார். மனதிற்குப் பாதுகாப்பு நம்பிக்கை; இருதயத்திற்குப் பாதுகாப்பு விசுவாசம். நாம் இவ்விரண்டையும் ஒன்றாக்கிவிடுகிறோம். வேதத்தின் மேலுள்ள விசுவாசம் இருதயத்திலுள்ளது. நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் . வேதத்தின் மேலுள்ள விசுவாசம் இதயத்தைக் காக்கும் மார்க்கவசமாகும். ஆனால் மனதின் பாதுகாப்பு

நம்பிக்கையாகும்.

நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்குமுள்ள தொடர்பைக் குறித்து எபிரெயர் 11:1இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

> [1]*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், ...*

நம்பிக்கை ஊன்றக் கட்டப்படுவதற்கு விசுவாசமானது அடித்தளமாக உள்ளது. நமக்குத் தேவையான அளவு விசுவாசமிருந்தால் தேவையான அளவு நம்பிக்கையும் இருக்கும். நமக்குத் தேவையான அளவு விசுவாசமில்லையென்றால் நமக்குத் தேவையான அளவு நம்பிக்கை இராது. நம்பிக்கையானது விரும்புவதைக் குறித்து எண்ணுவதாகும். நமக்கு உண்மையான விசுவாசத்தின் அடித்தளம் இருக்குமாயின் நமது மனதுக்குப் பாதுகாப்பாக உள்ள நம்பிக்கையைக் கட்டிக் கொள்ள முடியும்.

வேதவாக்கியங்களின்படி நம்பிக்கை என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை மிகவும் இலகுவாக விளக்க விரும்புகிறேன். தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களினடிப்படையில் அமைதியான முறையிலும் சீராகவும் நன்மையை எதிர்நோக்குவதே நம்பிக்கையாகும். குறிப்பாகச் சொல்லப்போனால் இது தொடர்ந்து நன்மையை எதிர்நோக்குவதாகும். இது தான் மனதின் பாதுகாப்பு. நம்பிக்கையானது எப்பொழுதும் நன்மையானவற்றையே எதிர்நோக்கியிருக்கும் தன்மையை உடையதாய் மிகச் சிறந்ததை தேர்ந்து கொள்ளுகிறது. மனச் சோர்வு, சந்தேகம், சுய இரக்கத்திற்கு இது இடமளிப்பதில்லை.

ரோமர் 8:28இல் நம்பிக்கையைக் குறித்த அடிப்படையான காரியத்தை நாம் காணலாம்:

> [28]*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்".*

நமது வாழ்க்கையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் தேவனால் நமக்கு நன்மைக்கேதுவாக நடைபெறுவதை நாம் உணருவோமென்றால், எதிர்மறையான எண்ணத்திற்கு இடமே இல்லை. ஒவ்வொரு சூழ்நிலையும் நன்மைக்கேதுவாக நடைபெறக் காரணமாக அமைகின்றது. நன்மைக்கேதுவான சிந்தனை தான் தலைச்சீராவாகும். இதனைத் தலையில் நாம் அணிந்து கொள்ளும் போது சாத்தானின் தந்திரமான நடவடிக்கைகளாகிய, சந்தேகம், சோர்வு, சுயபரிதாபம், அவநம்பிக்கை முதலானவற்றினின்று நமது மனம் பாதுகாக்கப்படுகிறது.

நமது மனதைப் பாதுகாக்கும் தலைச்சீரா நம்பிக்கை என்பதைப் பரிசுத்த

ஆவியானவர் எனக்குச் சுட்டிக் காட்டிய போது எனக்கு ஒரு செய்தியையும் கற்றுத் தந்தார். நம்பிக்கையைக் குறித்துப் புதிய ஏற்பாட்டிலுள்ள அனைத்து வேத பகுதிகளையும் ஒவ்வொன்றாக சேகரித்தேன். அவற்றில் சிலவற்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். ரோமர் 8:24இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 24 அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்...

இதற்கு என்ன பொருள்? நம்பிக்கை இல்லை என்றால் இரட்சிப்பு இல்லை. இரட்சிப்பின் அனுபவத்திற்கு நம்பிக்கை மிகவும் அவசியம். எபேசியர் 2:12இல் இரட்சிப்படையாத மக்களின் நிலை குறித்து நாம் காண்கிறோம்.

> 12 அக்காலத்திலே (நீங்கள் இரட்சிக்கப்படும் முன்னே) கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்.

கிறிஸ்து அற்ற, நம்பிக்கையற்ற, தேவனற்ற நிலையே இரட்சிப்பைப் பெறாத மக்களின் நிலையாகும். ஆனால் இது ஒரு போதும் கிறிஸ்தவனுடைய நிலையல்ல. கிறிஸ்துவை உடையவர்களாக இருப்போமென்றால் நமக்கு நம்பிக்கை உண்டு நமக்கு தேவன் உண்டு. கொலோசெயர் 1:27 இவ்வாறு கூறுகிறது:

> 27 புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

உண்மையான இரகசியம் மற்றும் சுவிசேஷத்தின் இரகசியம் யாதெனில் “கிறிஸ்து உங்களில்” என்பதேயாகும். கிறிஸ்து உங்களில் இருந்தால் உங்களுக்கு நம்பிக்கை உண்டு. உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் கிறிஸ்து உங்களிடத்தில் இல்லை என்பது தெளிவு. நீங்கள் இழந்துபோனவர்களல்ல. ஆனால் நீங்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று வாழ்பவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தின் முக்கியப் பகுதியை உங்கள் மனதில் நிலை கொள்ளச் செய்யுங்கள். எபிரெயர் 6:17 20இல் நம்பிக்கையைப் பற்றி இரண்டு அழகான காரியங்கள் கூறப்பட்டுள்ளன.

> 17 அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச்

சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.
[18]நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.
[19]அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.
[20]நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

நம்பிக்கையைக் குறித்த முதல் வர்ணனை பலிபீடத்தைப் பற்றியதாகும். பழைய உடன்படிக்கையின்படி இரத்தப்பழிக்கு நீங்கலாகி இருக்க நினைப்பவர்களுக்கு பலிபீடம் ஒரு பாதுகாப்பு இடமாக இருந்தது. நீங்கள் பலிபீடத்தினிடத்திற்கு ஓடி வந்து விடுவீர்களென்றால் உங்களுக்குப் பாதுகாப்பு உண்டு. உங்களுக்கு விரோதமாக அனைத்துக் காரியங்களும் எழும்பும்போது பலிபீடத்தினிடத்திற்கு ஓடிப்போய் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொள்வீர்களென்றால் உங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது. அந்த பலிபீடம் நம்பிக்கையே.

இரண்டாவதாக நம்பிக்கையானது நங்கூரம் போன்றது. நித்தியத்தில் தேவனுடைய பிரசன்னம்வரை நம்மை நடத்திச் செல்லும். இந்த உலகத்தில் நாம் கடலில் உள்ள படகைப் போன்றவர்கள். நம்மைச் சுற்றிலும் அனைத்தும் தற்காலிகமானது, நிலையற்றது, நம்பத் தகுதியற்றது மற்றும் மாறக் கூடியது. நமக்குப் பாதுகாப்பையும் நிலையான தன்மையையும் கொடுப்பது எதுவுமில்லை. பாதுகாப்பும் நிலையுள்ள தன்மையும் நமக்குத் தேவையெனில் நித்தியத்திற்கு நம்மை நடத்திச் சென்று பிளவுண்ட மலையோடு நம்மை இணைக்கும் ஒரு நங்கூரம் நமக்குத் தேவை. நமக்கு நம்பிக்கை உண்டென்றால் நாம் பாதுகாக்கப்படுவோம்.

கடைசியாக எபிரெயர் **10:23**இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

[23]. . .நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்;. . .

தொடர்ந்து நம்பிக்கையோடிருங்கள். நம்பிக்கையை விட்டுவிடாதீர்கள். நலமானவற்றை எதிர்நோக்குங்கள். நம்பிக்கையே உங்களுடைய மனதைப் பாதுகாக்கும் கருவி.

12

ஆவியின் பட்டயம்

நாம் ஏற்கெனவே பார்த்த ஐந்து ஆயுதங்களினின்றும் பட்டயத்தை வேறுபடுத்திக் காண்பிக்கிற ஒரு காரியம் உண்டு. பட்டயமானது முழுவதுமாக ஒரு பாதுகாப்பு ஆயுதமல்ல. இது இல்லாமல் நாம் பிசாசைத் துரத்த முடியாது. ஏனைய ஆயுதங்கள் அனைத்தையும் தரித்துக் கொண்டாலும் நம்மை பிசாசானவன் காயப்படுத்துவதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம், ஆனால் நம்மைவிட்டு அவனைத் துரத்தமுடியாது. அவனைத் துரத்த ஒரே ஆயுதம் "தேவ வசனமாகிய பட்டயமாகும்."

தேவனுடைய வார்த்தையை வேதாகமம் பட்டயம் என்று கூறுகிறது. ஏனெனில் தேவனுடைய வார்த்தை உருவக்குத்துகிறதாயும் ஊடுருவிச் செல்லுகிறதாயும் இருக்கிறது. எபிரெயர் 4:12இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 12 **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

தேவனுடைய வார்த்தை மனிதனின் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். நிணத்தினுள்ளும் உடலின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். ஆள்தத்துவத்தின் உட்பகுதியாகிய ஆவியையும் ஆத்துமாவையும் இது வெவ்வேறாகப்

பிரிக்கிறது. இருபுறமும் கருக்கான எந்தப் பட்டயத்தை விடவும் இது கருக்கானதாயும் உள்ளது.

வெளிப்படுத்தின விசேஷம் 1:16இல் யோவான் ஒரு தரிசனத்தைக் காண்கிறார். இயேசு மகிமை பொருந்தினவராய் சபையின் கர்த்தராகவும் அவரது வாயினின்று ஒரு பட்டயம் புறப்பட்டு வந்ததாகவும் காண்கிறார்.

> 16 தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது;. . .

இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட அந்த இருபுறமும் கருக்குள்ள பட்டயம் தேவனுடைய வார்த்தையாகும். இயேசு தாமே இந்தப் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையை உபயோகிக்கிறதை வேதத்தில் வாசிக்கிறோம். இந்த உலக வாழ்க்கையில் எவ்வாறு அவர் தேவனுடைய வார்த்தையை உபயோகித்தார் என்பதை நாம் கற்றுக் கொள்வது நல்லது. இதில் மிகவும் சிறந்த ஒரு பகுதி மத்தேயு 4:1–11இல் இயேசு வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்படுகிறதை விளக்கும் நிகழ்ச்சியாகும். ஒவ்வொரு முறையும் அவர் சாத்தானை எதிர்கொள்ளும் போது அவர் உபயோகித்த ஒரே ஆயுதம் ஆவியின் பட்டயம் அல்லது தேவனுடைய வார்த்தையாகும்.

> 1 அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.
> 2 அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.
> 3 அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்."
> 4 அவர் பிரதியுத்தரமாக: "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."
> 5 அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி:
> 6 "நீர் தேவனுடைய குமாரனேயானால்" "தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; 'உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்.'"
> 7 அதற்கு இயேசு: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்."
> 8 மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல்

கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:
9 "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்."
10 அப்பொழுது இயேசு: "அப்பாலே போ சாத்தானே; 'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்."
11 அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவ தூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

(மத்தேயு 4:1–11)

இந்த வேத பகுதியின் சில சுவையான காரியங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். வேதவாக்கியங்களின் அதிகாரத்தைக் குறித்து இயேசுவோ சாத்தானோ கேள்வி கேட்கவில்லை. இது ஆச்சரியமாக இல்லையா? குறிப்பாக ஒவ்வொரு முறையும் இயேசு உபாகமம் நூலிலிருந்து மேற்கோள் காட்டினார். இந்த நூலைக்குறித்து வேத அறிஞர்களும் வேதத்தில் உள்ள காரியங்களைக் குறை கூறுபவர்களும் தாக்கிப் பேசுவார்கள். தனிப்பட்ட முறையில் நான் என்ன எண்ணுகிறேன் என்றால் சாத்தான் இக்காலத்து வேத அறிஞர்களைவிட ஞானமுள்ளவனாயிருந்தான் இயேசுவும் சாத்தானும் இந்த வசனங்களின் அதிகாரத்தை நன்கறிந்திருந்தனர்.

இரண்டாவதாக இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு முறையும் சாத்தான் "இருந்தால்", "தேவனுடைய குமாரனேயானால்" (if) என்று சந்தேகத்திற்குரியதாகவே ஆரம்பித்து பேசுகிறான்.

மூன்றாவதாக, நான் ஏற்கெனவே கூறியபடி சாத்தானுடன் பேசும்போது தன்னுடைய பாணியை மாற்றாமல் தேவனுடைய வார்த்தையாகிய அந்த ஒரே ஆயுதத்தைப் பயன்படுத்தி "அது எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே. . . ." என்று கூறி சாத்தானை மேற்கொண்டார்.

பிசாசானவனும் வேத வசனங்களை ஆதாரமாகக் கூறுவான். ஆனால் அவன் அதனைத் தவறாகப் பயன்படுத்துவான். அவன் சங்கீதம் **91**இலிருந்து எடுத்துக் கூறுகிறான். இயேசு உபாகமப் புத்தகத்திலிருந்து கூறுகிறார். தேவனுடைய குமாரனுக்கு விரோதமாக வேத வசனங்களை உபயோகிக்க சாத்தான் முயற்சிக்கிறான். அவன் இயேசுவுக்கு விரோதமாகவே அவன் இப்படிச் செய்யக் கூடுமானால் உங்களுக்கு விரோதமாக அல்லது எனக்கு விரோதமாக நிச்சயமாக அதைச் செய்வான். வேத வசனங்கள் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். சாத்தானை மேற்கொள்ள இந்த வசனங்களை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று

அறிந்திருக்க வேண்டும். வேத வசனங்களைத் தவறாகப்பயன்படுத்தி நம்மை தவறு செய்யத் தூண்டும் மக்களைக் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மார்க்க சம்பந்தமான அல்லது வேத அறிவு சம்பந்தமான முறையில் பிசாசுக்கு இயேசு பதில் கூறவில்லை. அவர் எந்த யூத ஜெப ஆலயத்திற்குப் போகிறார் என்றோ எந்த யூத ரபியிடம் கற்றார் என்றோ அவர் கூறவில்லை. நேரடியாக வேதவசனத்தை உபயோகித்தார். "என்று எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே. . ." என்று வசனங்களை உபயோகிக்கிறார். மூன்றாம் முறையாக இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உபயோகித்த வேளையில் சாத்தான் பின்வாங்கிப் போகிறான். நீங்களும் நானும் இந்த ஆயுதத்தை உபயோகிக்கும் சிலாக்கியத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

எபேசியர் **6:17**இல் பவுல், ஆவியின் பட்டயமாகிய வேத வசனத்தைக் குறித்துக் கூறுகிறார். "வார்த்தை" என்பதற்கு கிரேக்கப் பதமாகிய *ரேமா* அதாவது பேசப்பட்ட வார்த்தை என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். ஆவியின் பட்டயம் என்பது அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் வேதாகமத்தைக் குறிப்பதல்ல. இது சாத்தானை பயமுறுத்தாது. ஆனால் வசனத்தை வாயில் உச்சரித்து நேரடியாகப் பயன்படுத்தும் போது தான் அது ஆவியின் பட்டயமாக மாறுகிறது.

"ஆவியின் பட்டயம்" என்ற சொற் தொடரின் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவருக்குமுள்ள கூட்டுறவை இது குறிப்பதாக உள்ளது. நாம் பட்டயத்தை எடுக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்காக இதனைச் செய்ய மாட்டார். ஆனால் விசுவாசத்தோடு பட்டயத்தை எடுக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அதனைப் பயன்படுத்தத் தேவையான ஞானத்தையும் வல்லமையையும் நமக்குத் தருவார்.

13

பாதுகாப்பற்ற பகுதி

நாம் ஆறுவகையான பாதுகாப்பு கவசம் குறித்தும் பார்த்தோம். அவைகள் சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடயம், இரட்சணியமென்னும் தலைசீரா மற்றும் தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம். இவற்றை நாம் அணிந்து கொண்டு தேவன் தந்த அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தும்போது ஒரு பகுதி தவிர தலை முதல் பாதம் வரை நமது உடலின் அனைத்துப் பகுதிகளும் பாதுகாக்கப்படுகின்றன.

பாதுகாக்கப்படாத அந்த ஒரு பகுதி நமது முதுகு ஆகும். இது மிகவும் முக்கியமானதும் இரு பகுதிகளைக் கொண்டதுமாகும் என்று நான் நம்புகிறேன். முதலாவது சாத்தானுக்கு முதுகைக் காட்டாதீர்கள். அப்படிக் காட்டுவீர்களென்றால் அதற்கு உங்களுடைய பாதுகாப்பற்ற ஒரு பகுதியில் காயப்படுத்த அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்துகிறீர்கள் என்று பொருள். வேறு வகையாகக் கூறினால் ஒரு போதும் அவனுக்கு விட்டுக் கொடுக்காதீர்கள். திரும்பி நின்று கொண்டு ‘‘போதும் அவ்வளவுதான், என்னால் முடியாது, இனிமேலும் என்னால் செய்ய முடியாது” என்று ஒரு போதும் கூறாதீர்கள். அப்படிச் செய்வது உங்கள் பாதுகாப்பற்ற முதுகைப் பிசாசுக்கு நேராகத் திருப்புவது ஆகும். அப்போது அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்களைக் காயப்படுத்துவான்.

இரண்டாவதாக நமது சொந்த முதுகை நாம் எப்போதும் பாதுகாக்க முடியாது. ரோம இராணுவத்தில் காலாட் படையினர் நெருங்கி நின்று

போர் புரிவர். இவ்வாறு நெருங்கி நின்று போர் புரிபவர்களுக்கு கிரேக்க மொழியில் **ஃபாலான்க்ஸ்** என்று பெயர். அவர்கள் ஒரு போதும் பின்னடையாது போர் புரிய பயிற்றுவிக்கப்பட்டிருப்பர். ஒவ்வொரு போர் வீரனும் தனது வலப்புறமும் இடப்புறமும் போர்புரியும் வீரர்களை நன்கு அறிவார்கள். இக்கட்டான நேரத்தில் தனது முதுகைப் பாதுகாக்க இயலாத போது மற்றொரு போர்வீரன் இவனது முதுகைப் பாதுகாப்பான்.

கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பொறுத்தமட்டிலும் இது உண்மை என்று நம்புகிறேன். நாம் தனித்தனியாகச் சென்று பிசாசின் அரசை எதிர்த்துப் போரிட முடியாது. தேவனுடைய சரீரத்தில் (கிறிஸ்துவின் சேனையில்) நமது இடம் எது என்று தெரிந்து கொண்டு நமது இடது பக்கமும் வலது பக்கமும் யார் நிற்கிறார்கள் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். நமது உடன் போர்வீரர்களை நம்பவேண்டும். இக்கட்டான சூழ்நிலையில் நமது பின்பக்கத்தைப் பாதுகாக்க முடியாத நேரத்தில் யார் நமக்கு உதவி செய்வார்கள் என்பதைக் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

நான் ஊழியத்தில் நாற்பது ஆண்டுகாலம் இருப்பதால் இது குறித்து நன்கு அறிவேன். கிறிஸ்தவ அனுபவத்தில் மிகவும் சோகமான காரியம் என்னவென்றால் நமது முதுகைப் பாதுகாக்க வேண்டியவர்களே அதைக் காயப்படுத்துவதாகும். எத்தனை முறை நமது உடன் கிறிஸ்தவர்கள் நமது முதுகைக் குத்தியிருப்பார்கள்! அப்படிப்பட்ட காரியங்கள் ஒரு போதும் நடக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒன்றாக நின்று மற்றவர்களுடைய முதுகைக் குத்தாமல் அதனைப் பாதுகாப்போம்.

பகுதி 3

தாக்கும் ஆயுதங்கள்

14

தாக்குதலில் ஈடுபடுவது

எபேசியர் 6:14-17 வசனங்களில் பவுல் கூறும் ஆறுவகையான பாதுகாப்பு ஆயுதங்களைப் பற்றிக் கவனித்தோம். சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசமென்னும் கேடகம், இரட்சணியமென்னும் தலைச்சீரா, மற்றும் ஆவியின் பட்டயம். பட்டயத்தைத் தவிர மற்ற ஆயுதங்களனைத்தும் பாதுகாப்பு ஆயுதங்கள் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். பட்டயமும் கூட அதை உபயோகிப்பவரின் கையின் நீளத்திற்குமேல் செல்லாது. 2 கொரிந்தியர் 10:4,5இல் நாம் சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பவுல் கூறுவதின்படி சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க இங்கு பட்டியலிடப்பட்ட ஆயுதங்கள் ஒன்றுமே நமக்கு உதவாது.

நாம் இப்போது பாதுகாப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்குச் செல்வோம். சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க நமக்குத் தேவையான ஆயுதங்கள் பற்றி கவனிப்போம். நாம் தாக்கிப் போர் புரியும் நிலையை மேற்கொண்டு முன்னேறிச் சென்று சாத்தானின் அரசைத் தாக்குவது நமது கடமை என்பதை உணருவது மிகவும் அவசியம்.

பாதுகாப்பையே கருத்தில் கொள்ளும் இராணுவம் ஒரு போதும் எந்தப் போரிலும் வெற்றி பெற்றதில்லை என்பது சரித்திரம் நமக்குக் கற்றுத்தரும் பாடம்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே பிரசித்தி பெற்ற ஒரு பிரஞ்சு

போர்த் தளபதியைப் பார்த்து ஒருவர் இவ்வாறு கேட்பார்: "போரில் எந்தப் படை வெற்றி பெறும்?" அதற்கு அந்தத் தளபதி சொன்ன பதில்: "முன்னேறிச் செல்லும் இராணுவம் தான்."

பின்வாங்கிச் சென்றாலோ அல்லது நமது நிலையிலேயே இருந்தாலோ நாம் போரில் வெற்றி பெற இயலாது என்பது உண்மை. சபை, பாதுகாப்பு வளையத்துக்குள்ளேயே இருக்கும்படி சாத்தான் கிரியை செய்யும் வரை அவனுடைய இராஜ்யம் ஒரு போதும் கவிழ்ந்து போகாது. எனவே நாம் பாதுகாப்பு நிலையைத் தாண்டி முன்னேறிச் சென்று தாக்கும் நிலையை மேற்கொள்வது நமது கடமையாகும்.

இயேசு சபையைக் குறித்த தனது திட்டத்தை வெளிப்படுத்தும் போது சாத்தானுடைய அரண்களை எதிர்க்கும் நோக்கத்துடனேயே பேசுகிறார். மத்தேயு **16:18**இல் முதன் முறையாக "சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இயேசு பேதுருவைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்:

> 18 **"மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."**

வேறு ஒரு திருப்புதலில் "நரகத்தின் அனைத்து வாசல்களும் பலமுள்ளவைகளாயிராது" என்று கூறப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் நரகத்திற்கு **ஹேடீஸ்** என்று வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. **ஹேடீஸ்** என்ற வார்த்தைக்கு "காணக்கூடாத" அல்லது "கண்ணுக்கு தென்படாத" என்று பொருள். எனவே **ஹேடீஸ்** அல்லது நரகம் என்றால் காணக்கூடாத சாத்தானின் அரசு என்பது பொருள்.

தனது சபைக்கு இரண்டு பிரதான பணி இருப்பதாக இயேசு கூறுகிறார்: கட்டுதல் மற்றும் போர் புரிதல் இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படக் கூடியது. எழுப்பிக் கட்டாமல் போர் புரிதலில் பயனில்லை. மாறாக போர் புரியாமல் எழும்பிக் கட்ட முடியாது. எனவே சபையைக் கட்ட வேண்டும், அதே சமயத்தில் சாத்தானின் சேனையை எதிர்த்துப் போர் புரிய வேண்டும். இதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அநேகர் இயேசுவின் இந்த வசனங்களைத் தவறாக அர்த்தம் செய்து கொள்கின்றனர். சபையானது சாத்தானின் சேனைகளால் முற்றுகையிடப்பட்டு இருப்பதாக இயேசு கூறுவதாக எண்ணுகின்றனர். இயேசு வந்து சபையை எடுத்துக் கொள்ளும்வரை சாத்தான் கோட்டை வாயிற்கதவை உடைத்து உட்புக முடியாது என்று இயேசு வாக்குத்தத்தம்

செய்வதாக அவர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இது சபையின் பாதுகாப்புக் கொள்கை. ஆனால் இது முற்றிலும் தவறானது.

ஆனால், சபையானது எதிர்த்து நின்று சாத்தானின் வாயிற்கதவை தாக்க வேண்டும் என்பதாய் கூறுகிறார். சாத்தானின் வாயிற்கதவுகள் சபைக்கு எதிராக நிற்க முடியாது என்றும் சாத்தான் சபையை வெளியேற்ற முடியாது என்றும் இயேசு வாக்குப் பண்ணுகிறார். சபையானது சாத்தானை புறம்பே வெளியேறச் செய்வது அல்ல, ஆனால் சாத்தான் சபையை வெளியேற்ற முடியாமல் தோல்வியடையச் செய்வதாகும். நாம் அவருக்குக் கீழ்படிந்து அவரை படைத் தளபதியாக ஏற்று செயல்படும்போது நாம் வெளியே வந்து, சாத்தானின் கோட்டைகளை அழித்துப் போட்டு, அவனது வாயிற்கதவுகளை உடைத்து, அடிமைப்பட்டிருக்கிறவர்களை விடுதலை செய்து, அவனுடைய பொருட்களை நாம் அபகரிக்க முடியும். இது தான் சபையின் பணி. இது பாதுகாப்பான பணியல்ல ஆனால் எதிர்த்துப் போராடும் பணியாகும்.

"வாயிற் கதவு" (Gate) என்ற வார்த்தைக்கு வேதத்தில் அநேக அர்த்தங்கள் உண்டு. முதலாவதாக வாயிற்கதவு ஆலோசனை வழங்கும் இடமாகவும் ஆட்சி செய்யுமிடமாகவும் இருக்கிறது. நீதிமொழிகள் **31:23**இல் குணசாலியான, உண்மையுள்ள மனைவியை உடைய கணவனைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> [23]*அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான்.*

நகரத்தின் வாயிற்கதவினிடத்தில் ஆலோசனை கூறும் மூப்பர்கள் உட்கார்ந்து நகரத்தை ஆட்சி செய்தனர். எனவே சாத்தானின் வாயிற்கதவுகள் சபையை மேற்கொள்ளாது என்று வேத வசனம் கூறுவதன் பொருள் என்னவெனில் சாத்தானின் யோசனைகள் சபையை மேற்கொள்ளாது. மாறாக அவைகள் அபத்தமாகவும் ஒன்றுக்கும் உதவாது பயனற்றுப் போகும் என்பதுமாகும்.

ஒரு நகரத்தைத் தாக்க முற்படும் போது அந்நகரத்தின் வாயிற்கதவைத் தாக்குவதுதான் முறையானது. ஏனெனில் கதவுகள் மதிற் சுவரைவிட பலம் குறைந்ததாக இருக்கும். ஏசாயா **28:6**இல் இவ்வாறு கூறுகிறது:

> [6]. . .*யுத்தத்தை அதின் வாசல்மட்டும் திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவும் இருப்பார்.*

சபையானது சாத்தானின் கோட்டைக் கதவுகளின் மேல் தாக்குதல் தொடுக்கிறதாக சித்தரிக்கப்படுகிறது. சாத்தானின் கதவுகள் சபையை

வெளியேற்ற முடியாது. எனவே நாம் பாதுகாப்பைப் பற்றியே எண்ணாமல் தாக்குதல் தொடுப்பது குறித்து எண்ணவேண்டும்.

"அடுத்த தாக்குதலை சாத்தான் எங்கு தொடுப்பானோ என்று பயமாக உள்ளது" என்ற எண்ணம் அநேக கிறிஸ்தவர்களுக்கு உண்டு என்பது குறித்து எனது அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளேன். ஆனால் இந்த பயம் இடம் மாறி அமைதல் வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன். அதாவது சபையானது என்னை எங்கே தாக்குமோ என்று சாத்தான் அஞ்ச வேண்டும்.

சபை தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பது குறித்த இந்த சிந்தனைக்கு வேதத்தினடிப்படையில் சில பகுதிகளைக் கூறி விளக்க விரும்புகிறேன். கொலோசெயர் **2:15**இல் இது குறித்து விளக்கமாக கூறப்பட்டுள்ளது. நமக்காக கிறிஸ்து சிலுவையில் மரணத்தை ருசிபார்த்ததின் மூலமாக தேவன் நிறைவேற்றின காரியத்தைக் குறித்து இதில் கூறப்பட்டுள்ளது:

> 15 ***துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு,...***

எபேசியர் **6:12**இல் கூறப்பட்டுள்ள அதே சாத்தானின் சக்திகளைக் குறித்துதான் இங்கும் துரைத்தனங்கள் என்றும் அதிகாரங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. சிலுவையின் மூலமாய் தேவன் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார். சாத்தானுக்கு ஆயுதம் ஏதும் இல்லை என்பதை எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா? அவன் நிராயுதபாணியாக்கப்பட்டுள்ளான். சிலுவையின் மூலமாய் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார். தொடர்ந்து இந்த வசனத்தில் இவ்வாறு காண்கிறோம்:

> 15 ***வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*** (*எபேசியர்* 6:15)

எனவே சிலுவையின் மூலமாய் சாத்தானுடைய அரசின் அதிகாரத்தை தேவன் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்.

வெற்றிக்களிப்பு (Triumph) என்பது உண்மையாகவே வெற்றி பெறுவது என்று கூற முடியாது. ஏனெனில் இது ஏற்கெனவே பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதாகும். முழு வெற்றியை பொது மக்கள் மத்தியில் வெளிப்படுத்திக் கொண்டாடுவதாகும்.

சிலுவையில் இயேசு வெற்றியைத் தனக்காக வென்று பெறவில்லை. அவருக்கு எப்போதும் வெற்றி உண்டு. நமது சார்பாக, நமக்காக அவர்

அந்த வெற்றியைப் பெற்றார். எனவே அவரது வெற்றி நமது வெற்றியாக மாறுகிறது. 2 கொரிந்தியர் 2:14 இவ்வாறு கூறுகிறது.

> 14 *கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.*

"எப்பொழுதும்", "எல்லா இடங்களிலேயும்" நாம் கிறிஸ்துவின் வெற்றியை விளங்கச் செய்ய வேண்டும். கிறிஸ்து நமக்காகப் பெற்ற வெற்றியை தேவன் வெளிப்படுத்த விரும்புகிறார். இதுவே சாத்தானுடைய துரைத்தனங்களையும் அதிகாரங்கயையும் வல்லமைகளையும கீழ்ப்படுத்துகிற வெற்றியாகும். இந்த வெற்றி நமது மூலமாய் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மத்தேயு 28:18 19இல் இயேசு தமது சீஷருக்கு இதையே கடைசிக் கட்டளையாகக் கொடுக்கிறார்:

> 18 *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*
> 19 *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,*

இயேசு கூறுகிறார்: "சகல அதிகாரமும் ஏற்கெனவே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போங்கள். . ." "ஆகையால்" என்பதன் அர்த்தம் என்ன? "நீங்கள் போய் எனது சார்பாக நான் ஏற்கெனவே பெற்ற வெற்றியை பிரயோகியுங்கள்" என்பது தான் அதன் பொருள் என்று நான் எண்ணுகிறேன். நமக்காக இயேசு பெற்ற வெற்றியைப் பயன்படுத்துவது, வெற்றிக்களிப்பை வெளிப்படுத்துவது மற்றும் அதிகாரத்தைப் பிரயோகிப்பது தான் நமது கடமையாகும். அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது தான் அது பயனுள்ளதாக மாறும். தேவன் நமக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்றால் அது உபயோகமற்றதாகவே இருக்கும்.

கிறிஸ்துவின் வெற்றியை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும்போது தான் உலகம் அதைக் காண முடியும். கிறிஸ்து வெற்றியைப் பெற்றார், ஆனால் இயேசு ஏற்கெனவே சாத்தான் மேலும் அவனது அரசின் மேலும் பெற்ற வெற்றியை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவது தான் நமது பணி. ஆனால் நாம் பாதுகாப்பு நிலையைக் கடந்து, தாக்கும் நிலைக்கு வரும் போது தான் இதனை நாம் நிறைவேற்ற முடியும்.

15

ஜெபம் என்னும் ஆயுதம்

சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க தேவன் நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொடுத்துள்ளார்: 2 கொரிந்தியர் 10:4 இவ்வாறு கூறுகிறது:

> 4 **எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை களாயிராமல்,** (அவைகள் உலகத்திற்கேற்றவைகளாகவோ காண்பதற் கேதுவானதாகவோ அல்லது ஆயுதங்களாகவோ, வெடிகுண்டுகளாகவோ, துப்பாக்கிக் குண்டுகளாகவோ, டாங்கிகளாகவோ போர் விமானங்களாகவோ இல்லை.) **அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.**

அரண்கள் என்பது உண்மையில் சாத்தானுடைய கோட்டைகளைக் குறிக்கின்றன. தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார். நான் ஆழ்ந்து கற்றுக் கொண்டதன் மூலமும் எனது அனுபவத்தின் மூலமும் நாம் எதிர்த்துப் போராட நான்கு ஆவிக்குரிய ஆயுதங்களைப்பற்றி வேதம் வெளிப்படுத்துகிறது. அவைகள் ஜெபம், துதி, பிரசங்கம் மற்றும் சாட்சி பகருதல். முதலாவது நாம் ஜெபமாகிய ஆயுதத்தைப் பற்றிக் காண்போம்.

ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினால் அது ஓர் ஆயுதத்தை விடவும் மேலானது எனலாம். ஜெபத்திற்குப் பல தன்மைகள் உண்டு.

அவற்றில் ஒன்றுதான் ஜெபம். இது ஆவிக்குரிய போரில் பயன்படும் ஒரு யுத்த ஆயுதமாகும். தேவன் நமக்குக் கொடுத்த எல்லா ஆயுதங்களிலும் மிகவும் வல்லமையானது இதுதான் என்று நான் நம்புகிறேன்.

எபேசியர் **6:18**இல் பவுல் ஆறுவகையான பாதுகாப்பு ஆயுதங்களைப்பற்றி கூறிவிட்டு பின்பு இவ்வாறு கூறுகிறார்:

> [18]***எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி,....***

இந்த சமயத்தில் அவர் தற்காப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறிச் செல்லுகிறார். தற்காப்பு ஆயுதங்களைப் பற்றிக் கூறிய பின்பு ஏதோ தற்செயலாய் இதைப் பற்றிக் கூறவில்லை. எல்லா ஆயுதங்களிலும் சிறந்தது ஜெபம்தான் என்று கூறுகின்றார்.

ஜெபமானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணையைப் போன்றது. சரியான நடத்துதலோடு ஒரு கண்டத்தில் ஏவி மற்றொரு கண்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட இலக்கைத் தாக்கி அழிக்க வல்லது. ஜெபத்திற்கு ஒரு குறிப்பிட்ட நேரமோ தூரமோ நியமித்து வரையறுக்க முடியாது. ஜெபமானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணையைப் போன்றது. இதனைக் கொண்டு எங்குமுள்ள சாத்தானின் அரண்களை (வான மண்டலங்களிலுள்ளவைகளைக் கூட) நிர்மூலமாக்கலாம்.

அப்போஸ்தலர் **12:1–6**இல் ஜெபத்தின் மூலம் ஏவப்பட்ட தாக்குதல் கணையைப் பற்றி நாம் காணலாம். ஏரோது அரசன் மூலமாக சபைக்கு உபத்திரவம் வந்தது. யாக்கோபை ஏற்கெனவே ஏரோது சிரச்சேதம் செய்திருந்தான். இப்பொழுது பேதுருவும் கைது செய்யப்பட்டு சீக்கிரத்தில் கொலை செய்யப்பட உள்ளான். இது தான் அந்த சூழ்நிலை.

> [1]***அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி;***
> [2]***யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.***
> [3]***அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது.***
> [4]***அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி,*** (பஸ்காவின் போது அதை செய்தால், யூத கால அட்டவனையின் படி ஓர் பரிசுத்த காலத்தை

அசுத்தப் படுத்துவதாக காணப்பட்டிருக்கும், ஆகையால் அவன் காத்திருந்தான்) **அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச் சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.**
[5]***அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.***
[6]***ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.***

மிகவும் பாதுகாப்பான சிறையில் பேதுரு அடைக்கப்பட்டிருந்தார். ஒருவரும் பேதுருவை விடுவிக்க முடியாதபடி நான்கு வகுப்புக்கு, நான்கு சேவகராக, இரவும் பகலும் சுவரைக் காக்கும்படி ஏரோது ஏற்பாடு செய்திருந்தான். பேதுருவின் கையோ, காலோ ஒரு சேவகனோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது என்று புரிந்துக் கொள்கிறோம். எனவே பேதுருவை விடுதலை செய்வது என்பது முடியாத ஒன்று. ஆனால் சபை மக்கள் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

ஓர் நெருக்கம் வரும் போது நாம் முன்னுரிமை அளிக்கும் காரியங்கள் சற்று வேறுபடும். எவ்வளவு ஊக்கமாக சபை மக்கள் பேதுருவுக்காக ஜெபம் செய்தனர் என்று எனக்குத் தெரியாது. திடீரென்று யாக்கோபு அவர்களிடமிருந்து பிரித்துச் செல்லப்பட்டிருந்தான். இப்போது அவர்களுடைய தலைவராகிய பேதுருவும் அவர்களை விட்டு பிரியும் அபாயம் ஏற்பட்டிருந்தது. ஊக்கமாக ஜெபிக்க இதுவே ஓர் தூண்டுதலாயிருந்தது. அவர்கள் பகலில் மட்டும் ஜெபிக்கவில்லை, இரவிலும் ஜெபித்ததாக வேதம் கூறுகிறது. சில சமயங்களில் பகலில் மட்டும் ஜெபித்தால் போதாது என்பதை நாம் அறிய வேண்டும். தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் காரியத்தில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து நியாயம் செய்கிறார் என்று லூக்கா 18ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். தேவன் நமது ஜெபத்திற்கு பதில் தர சில சமயங்களில் ஊக்கமான ஜெபம் தேவை.

யோவான் 21:18–19இல் இயேசு பேதுருவுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தார்:

[18]***“நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத***

இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."
[19]இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் "பின்பற்றிவா" என்றார்.

ஒரு வேளை இந்த வாக்குத்தத்தத்தை பேதுரு சிறைச்சாலையில் தியானம் செய்து கொண்டிருந்திருப்பார் என நான் நினைக்கிறேன். "நீ முதிர்வயதுள்ளவனாகும் போது . . ." என்று இயேசு கூறுகிறார். அந்தச் சமயத்தில் பேதுரு முதிர்வயதானவனாக இருக்கவில்லை. இயேசு கூறிய வார்த்தை நிறைவேற ஏதாவது நிகழும் என்று பேதுரு நினைத்திருக்கக் கூடும் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் சபை மக்களின் ஜெபமே இதனை நிறைவேற்றியது.

பேதுருவை விடுதலை செய்ய ஒரு தூதனை அனுப்பியதன் மூலம் தேவன் சபையாரின் ஜெபத்திற்கு பதிலளித்தார். அப்போஸ்தலர் 12:8–11இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

[8]தூதன் அவனை நோக்கி: "உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: "உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா" என்றான்.
[9]அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான்.
[10]அவர்கள் முதலாங் காவலையும் இரண்டாங் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள்; உடனே தூதன் அவனைவிட்டுப் போய்விட்டான்.
[11]பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: "ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்."

இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒரு தூதனை அனுப்பி தேவன் சபை மக்களின் ஜெபத்திற்கு பதிலளித்தார். இருப்பினும் அவர்கள் ஜெபத்திற்குக் கிடைத்த பதிலின் முதல் பகுதிதான் இந்த விடுதலை.

நாம் இதன் இரண்டாம் பகுதியையும் காண வேண்டும். அது தான் பேதுருவைத் துன்பப்படுத்திய ஏரோது அரசனுக்குத் தூதன் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு. அப்போஸ்தலர் 12:19–23இல் இவ்வாறு நாம் வாசிக்கிறோம்:

> 19 ஏரோது அவனைத் தேடி காணாமற் போனபோது, காவற்காரரை விசாரணை செய்து, அவர்களைக் கொலை செய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயாதேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய் அங்கே வாசம் பண்ணினான்.
> 20 அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான். தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்ட படியினால், அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்தில் வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாத்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்.
> 21 குறித்தநாளிலே: ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்.
> 22 அப்பொழுது ஜனங்கள் "இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்."
> 23 அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்.

ஜெபமானது எப்படி ஒரு எதிர்த்துத் தாக்கும் ஆயுதமாகக் கிரியை செய்கிறது என்பதைக் குறித்து நாம் ஆராய்வோம். ஜெபம் வானமண்டலங்களைக் கடந்து தூதர்கள் கிரியை செய்ய வைத்தது. தானியேல் 10ஆம் அதிகாரத்தில் தானியேல் ஜெபித்தபோது வானத்திலிருந்து தூதன் பதிலோடு வந்த சம்பவத்தோடு இதனை ஒப்பிடலாம்.

அப்போஸ்தலர் 12:24இல் இது குறித்து மேலும் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 24 தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.

தேவனுடைய வார்த்தை தடை செய்யப்படக் கூடாமல் வளர்ந்து பெருகுவதை இது காட்டுகிறது, முக்கியமாக பேதுரு வயது முதிர்ந்த பின்பே இறந்து போவான் என்று இயேசு பேதுருவுக்குச் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறுவதை இது வெளிப்படுத்துகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை நிறைவேற ஜெபம் தேவையாயிருந்தது. நாம் அறிந்து கொள்ள வேண்டியது இதுதான்: தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஜெபத்திற்குக் கிடைக்கும் பலனாக நாம் நினைக்கக் கூடாது.

மாறாக அவைகள் நமது ஜெபத்தைத் தூண்டுவதாயும் நமது ஆவியில் தேவனுடைய வாக்குத்தத்த வசனங்கள் நிறைவேற உதவுகிறது என்பதையும் அறிய வேண்டும். நமது வாழ்வில் தூதர்கள் நமக்கு உதவி செய்ய ஜெபம் உதவுகிறது.

தூதர்கள் நமக்குப் பணிவிடை செய்யும் ஆவிகளாக இருக்கின்றனர். ஆனால் நாம் ஜெபம் செய்யவில்லையானால் அவர்கள் நமது உதவிக்கு வரமாட்டார்கள் எனவும் வேத வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. நமது ஜெபத்தின் மூலமாய் தேவன் அளிக்கும் பதிலாக தூதர்கள் நமக்கு உதவ வருகின்றனர். ஜெபம் வானமண்டலங்களிலுள்ள சாத்தானின் அரசிற்குள் உட்புகுந்து தூதர்களின் தெய்வீக உதவி நமக்குக் கிடைக்கச் செய்கிறது என்பதை நாம் எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும்.

16

துதி என்னும் ஆயுதம்

ஜெபத்திற்கு அடுத்ததாகத் தாக்குதல் தொடுக்கப் பயன்படும் மிகப் பெரிய ஆயுதம் துதியாகும். ஒரு வகையில் துதியும் ஒரு வகை ஜெபமேயாகும். வேதத்தில் துதியானது தெய்வ பயத்தைச் சார்ந்ததாக கூறப்பட்டுள்ளது. துதியானது தேவனை நம்முடன் இடைபட வைக்கிறது. மேலும் தேவன் நம்மோடு கொண்டுள்ள உறவுக்கு நாம் கூறும் மறு மொழியாகும். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற பின்பும் பார்வோனுடைய சேனை சிவந்த சமுத்திரத்தில் அழிந்த பின்னும் மோசேயும் இஸ்ரவேல் மக்களும் பாடிய பாட்டு யாத்திராகமம் 15:10–11 வசனங்களில் நாம் காண்கிறோம்.

> **10"உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக் கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்து போனார்கள்."**
> **11"கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?"**

"துதிகளில் பயப்படத்தக்கவர்" என்கிற இந்த சொற் தொடரைக் கவனியுங்கள். துதியானது தேவனுடைய வியக்கத்தக்க தன்மையை வெளிப்படுத்துகிறது. விசேஷமாய் தன்னுடைய ஜனத்தின் சத்துருக்களுக்கு அவருடைய பயப்படத்தக்க ரூபத்தை குறிக்கின்றது.

சங்கீதம் **22:23** இவ்வாறு கூறுகிறது:

[23]கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

தேவப்பிள்ளைகள், தேவனுடைய வியக்கத்தக்க தன்மைக்கும், அவர் தங்களுக்காக செய்யும் யுத்தங்கள், பழிவாங்குதல்கள் மற்றும் பயங்கர செயல்களுக்கும் செலுத்தும் ஏற்ற பிரதியுத்துரம் துதியாகும்.

சங்கீதம் 8:2 இவ்வாறு கூறுகிறது:

[2]பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய சத்துருக்களுக்கெதிராக பெலன் உண்டுபண்ணினார் என்று இங்கு நாம் காண்கிறோம். சத்துருக்களுக்கு இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது "சத்துருக்கள்" என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது. இது சாத்தானின் அரசைக் குறிப்பதாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அவைகள் எபேசியர் 6:12இல் குறிப்பிடப்பட்டுள்ள துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் ஆகும். இரண்டாவது வார்த்தை "பகைஞன்" என்று ஒருமையில் கூறப்பட்டுள்ளது. இது சாத்தானைக் குறிப்பதாகும்.

இந்த முழு அரசையும் எதிர்த்துப் போராட தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு பெலன் கொடுத்திருக்கிறார். தேவன் கொடுக்கும் பெலன் குறித்த மத்தேயு 21:15–16இல் கூறப்பட்டுள்ளது. இயேசு தேவாலயத்தில் அற்புதங்களை செய்த போது, சிறு பிள்ளைகள் "ஓசன்னா!" என்று சத்தமிட்டு அங்கும் இங்கும் ஓடினார்கள். மதத் தலைவர்கள் பிள்ளைகளை அடக்கும்படி இயேசுவிடம் சொன்னார்கள்.

[15]அவர் செய்த அதிசயங்களையும், "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து,
[16]அவரை நோக்கி: "இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள்." அதற்கு இயேசு: "ஆம், கேட்கிறேன். 'குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.' "

சங்கீதம் 8:2ஐ மேற்கோள் காட்டி இயேசு அவர்களுக்குப் பதில்

கூறுகிறார். ஆனால் அதில் ஒரு சிறு மாற்றத்தைச் செய்து கூறுகிறார். அவர் தனது சொந்த விளக்கத்தையும் இதில் வெளிப்படுத்துகிறார். "குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்" என்பதற்கு இயேசு, "....துதி உண்டாகும்படி செய்தீர்" என்று கூறுகிறார். எனவே தேவப் பிள்ளைகளின் பெலன் துதியாகும் என்பதை இது வெளிப்படுத்துகிறது. நமது பெலனுக்கு ஆதாரம் துதியே.

இந்த வெளிப்பாட்டைக் குறித்து, வேறு சில காரியங்களைக் காணலாம். முதலாவது, இவ்விரு வசனங்களிலும் "வாயினால்" என்று கூறப்பட்டுள்ளது. சாத்தானின் அரசிற்கு எதிராய் ஆவிக்குரிய ஆயுதங்கள் வெளிப்படும் பிரதான இடம் வாயாகும். இரண்டாவதாக "குழந்தைகள் பாலகர்" பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள், தங்கள் சுய பெலத்தைச் சாராமல் தேவ பெலத்தைச் சார்ந்திருப்பவர்களாகும்.

> [25] *அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்."* (மத்தேயு 11:25)

இங்கே தமது சொந்த சீஷர்களைக் குறித்துக் கூறுகிறார். "பாலகர்" என்பது சரீரப்பிரகாரமாகப் புதிதாய் பிறந்த குழந்தைகளைக் குறிக்காமல் தங்கள் சுய பெலத்தின் மேல் சார்ந்திருக்காமல் முழுவதுமாக தேவனுடைய பெலன் மேல் சார்ந்திருப்பவர்களைக் குறிக்கிறதாய் இது உள்ளது.

துதியின் ஆயுதத்தைப் பயன்படுத்த துதியின் நோக்கம் சாத்தானை செயலிழக்கச் செய்வதேயாகும். வெளி **12:10**இல் இது விளக்கப்பட்டுள்ளது. இந்த தரிசனம் இன்னும் நிறைவேறவில்லை, ஆனால் அந்த சமயத்தில் சாத்தானுடைய நடவடிக்கை குறித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> [10] *அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி:* [11] *"இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்."*

சாத்தானுடைய வேலையும் நமக்கெதிராக அவன் பயன்படுத்தும் ஆயுதமும் குற்றஞ்சுமத்துவதாகும் என்று நாம் காண்கிறோம். இரவும் பகலும் தொடர்ந்து தேவனிடத்தில் நம்மைக் குறித்து அவன் குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்கிறான். சாத்தான் இரவும் பகலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பானேயானால் நாம் பகலில் மட்டும் கிரியை

செய்கிறவர்களாயிருந்தால் போதாது. நாம் இரவும் பகலும் விழித்திருந்து அவனைச் சந்திக்க வேண்டும்.

நம்மை குற்ற உணர்வுடையவர்களாக்கவே சாத்தான் நம்மீது குற்றஞ்சுமத்துகிறான். இது தான் நமக்கு விரோதமாக உபயோகிக்கும் முக்கிய ஆயுதமாகும்.

"அப்படியானால் ஏன் தேவன் சாத்தானை அடக்கி வைக்கவில்லை?" என்று நாம் கேட்கலாம். ஏனெனில் சாத்தானை அடக்கி வைக்க தேவன் நமக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார். எனவே நமக்காக அவர் இதனைச் செய்யமாட்டார். இதனைச் செய்யும் ஆயுதம்; "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் உண்டாகும்" துதியாகும். இந்தத் துதியானது வானமண்டலங்களுக்குள் புகுந்து தேவனுடைய சமூகத்தை எட்டி நமக்கு விரோதமாகச் சாத்தான் கூறும் குற்றச் சாட்டுகளை அடக்கிவிடும்.

வெளிப்படுத்தின விசேஷம் **16:13–14**இல் ஒரு தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்த தீர்க்கதரிசனம் எப்படி சரித்திர சம்பந்தமாக நிறைவேறப்போகிறது என்று நான் விளக்கப்போவதில்லை. ஆனால் யோவான் கூறும் மிகவும் முக்கியமான ஒரு காரியத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

> 13 ***அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.***
> 14 ***அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.***

நான் கூறவிரும்பும் குறிப்பு என்னவென்றால்: அசுத்தமான சாத்தானுடைய ஆவிகள் வாயின் மூலமாக செயலாற்றுகின்றன. சாத்தானை அடக்கும் துதிகள் தேவனுடைய பிள்ளைகளின் வாயினின்று வருகின்றன. சாத்தானின் பக்கத்திலிருப்பவர்களின் வாயிலிருந்து சாத்தானின் சக்திகள் புறப்பட்டு வருகின்றன. மிருகத்தின் வாயிலும், சாத்தானின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து அசுத்த ஆவிகள் புறப்பட்டு வந்தன. இதில் உள்ள முக்கியக் காரியம் என்னவெனில் தங்களுடைய வாய்களை மிகவும் பயனுள்ள முறையில் உபயோகிக்கும் பக்கத்தைச் சார்ந்தவர்களே இந்த ஆவிக்குரிய போரில் வெற்றிபெறுவர். நமது வாயை பயன்படுத்தத் தெரியவில்லையென்றால் நாம் போரில் வெல்லமுடியாது.

இந்த அசுத்த ஆவிகள் தவளைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. இந்தத் தவளைகள் இரவில் சத்தமிடுகின்றன. இவைகள் ஓயாது இரவு முழுவதும் சத்தமிடுகின்றன. இன்றைய நாகரீகத்தில் முக்கியமான ஒரு காரியமாகிய "பிரசாரம்" என்ற செயலுக்கு இதனை ஒப்பிடலாம். பிரசாரம் பொதுவாக தவறான கொள்கைகள், அரசியல் நோக்கங்கள், ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் சாத்தானின் ஆயுதமாகும். இதனை எதிர்த்துப் போரிடும் மிகப் பெரிய ஆயுதம், தேவனுடைய பிள்ளைகளின் வாயினின்று புறப்படும் துதியாகும்.

துதியின் வல்லமை குறித்து மற்றும் ஒரு உதாரணம் சங்கீதம் 149:6–9இல் காணலாம்:

> [6]ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும்,
> [7]அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும்,
> [8]அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.
> [9]இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.

துதியின் மூலம் அனைத்து கர்த்தருடைய பரிசுத்தவான்களும் செய்யக் கூடிய காரியத்தைக் குறித்து இந்த வசனங்கள் கூறுகின்றன. துதியைத் தொடர்ந்து தேவனுடைய வசனமாகிய இருபுறமும் கருக்குள்ள பட்டயம் வருகிறது. வேறுவகையாகக் கூறினால் தேவனுடைய வார்த்தையும் துதியும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும். தேவனுடைய வசனத்தோடு துதி இணைந்து ராஜாக்கள் மற்றும் நாடுகளின் மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் ஒரு கருவியாக மாறுகிறது. ராஜாக்கள் மற்றும் மேன்மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சாத்தானின் தூதர்களாகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பை எழுத நமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் செலுத்தும் சிலாக்கியம், தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1 கொரிந்தியர் 6:2–3இல் பவுல் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு எழுதுகிறார்:

> [2]பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?
> [3]தேவ தூதர்களையும் நியாயந்தீர்போமென்று அறியீர்களா?...

தேவதூதர்கள், ராஜாக்கள், ஆட்சிசெய்பவர்கள், மக்கள் மற்றும் நாடுகள் மேல் தேவனுடைய வார்த்தையின் மூலமும் துதி நிறைவேற்ற நமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இது நமக்கு மிகப்பெரிய வல்லமையையும் அதிகாரத்தையும் அளித்துள்ளது.

17

பிரசங்கம் என்னும் ஆயுதம்

இந்த ஆயுதமானது குறிப்பாக தேவனுடைய வார்த்தையோடு நேரடி தொடர்புடையது. இது தேவனுடைய வார்த்தையை மட்டுமே பிரசங்கிப்பதாகும். மனிதனின் தத்துவ ஞானம், அரசியல் தத்துவங்கள், விரிவான இறையியல் கொள்கைகள் போன்றவற்றை பிரசங்கிப்பதை இது எந்த வகையிலும் குறிப்பதல்ல.

2 தீமோத்தேயு 4:1–4இல் பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் அறிவுரையை ஆதாரமாகக் கொண்டு இதனை தியானிப்போம்:

> **1 நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:**
> **2 சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.**
> **3 ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,**
> **4 சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.**

நான் சில முக்கியமான காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவது கொடுக்கப்படும் பொறுப்பின் தெய்வீகத் தன்மை. தேவன் மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் முன்னிலையில், உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார் என்றும் அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதன் அடிப்படையிலும் இது கொடுக்கப்படுகிறது. இது தேவனுடைய ஊழியக்காரருக்குக் கொடுக்கப்படும் பரிசுத்தமான ஒரு பொறுப்பாகும்.

இரண்டாவது, வசனத்தைப் போதிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பாகும். போதிப்பவர் தான் போதிக்கும் காரியங்களுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும். இயேசு உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார் என்று பிரசங்கியார் கூறும் போது அவரும் தான் கொடுத்த செய்திகளுக்கு தேவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதும் உள்ளடக்கியதாகும்.

உண்மையை விரும்பாமல் தாங்கள் விரும்பும் காரியத்தையே பிரசங்கிக்க வேண்டுமென ஆசிக்கும் சுய விரும்பிகளின் ஆசைகளை நிறைவேற்றக்கூடாது என எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. எல்லோரும் உண்மையை விரும்பி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் எச்சரிக்கப்படுகிறோம். எதிர்ப்புகள் மற்றும் குறை கூறுதல்களின் மத்தியில் வேத வசனம் போதிக்கப்பட வேண்டுமென்பது நமது பொறுப்பாகும்.

தேவனுடைய வார்த்தையின் மகத்துவம் குறித்து ஏசாயா **55:11**இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 11". . .அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."

மீண்டும் எரேமியா **23:29**இல் தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> 29"என் வார்த்தை அக்கினியைப் போலவும்," "கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலவும் இருக்கிறதல்லவோ?" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எபிரெயர் **4:12**இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 12தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின்

நினைவுகளையும் யோசனைகளையும் வரையறுக்கிறதாயும் இருக்கிறது.

பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு மிகுந்த வல்லமை உண்டு. அதனுடைய பலனுக்கு உத்திரவாதம் உண்டு. அது ஒருபோதும் வெறுமையாய்த் திரும்பாது. தேவனுடைய மகிழ்ச்சியை இது நிறைவேற்றுகிறதாய் இருக்கிறது. தேவனுடைய திட்டங்களை எதிர்க்கிற ஒவ்வொரு பாறையையும் இது உடைத்து நொறுக்குகிறதாயிருக்கிறது. மனிதனின் ஆள் தத்துவத்தின் உள்ளான பகுதிகளை ஊடுருவிச் சென்று மனிதர்களின் இருதயத்திலும் மனதிலுமுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறதாயுமிருக்கிறது.

எபேசுவிலே பவுல் ஊழியம் செய்த போது தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கையில் அந்த பிரசங்கிக்கப்பட்ட வார்த்தையின் வல்லமையைக் குறித்துஅப்போஸ்தலர் 19:8–10இல் கூறப்பட்டுள்ளது, இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

8பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து,
மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக்
குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக் கொண்டு வந்தான்.
9சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த
மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை
அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய
வித்தியாசாலையிலே அனுதினமும் சம்பாஷித்துக் கொண்டுவந்தான்.
10இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில்
குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின்
வசனத்தைக் கேட்டார்கள்.

பவுலின் உபதேசத்தைக் குறித்து கூறும்போது மூன்று பெயர் உரிச் சொற்கள் (adjectives) உபயோகிக்கப்பட்டுள்ளன. ஆழமாக, தொடர்ந்து, விரிவாக என்பவையே அவைகள். இரண்டு வருடம் தொடர்ந்து தினமும் தேவனுடைய வார்த்தையைப் போதித்து வந்தார். விரிவாக என்று கூறப்பட்டுள்ளதால் பெரிய நிலப்பரப்பாகிய ஆசியாவின் அனைத்துப் பகுதிக்கும் வசனம் சென்றது பவுல் எபேசுப் பட்டணத்தில் இரண்டு வருஷம் தங்கி தினமும் தேவனுடைய வார்த்தையைப் போதித்து வந்தார் என்பதை நாம் அநேக முறை உணருவதில்லை.

இதன் விளைவுகளானது, ஒரு குளத்தின் நடுவில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டதைப் போன்றது. அந்தக் கல் விழுந்த இடத்தைச் சுற்றிலும் அலைகள் எழும்பி விரிந்து, பரந்து சென்று அந்த குளத்தின் கரையையே

தொடும். இதன் முதல் விளைவு இயற்கைக்கு மாறானதாக இருந்தது. தேவன் வசனத்தை உறுதி செய்தார் என்று வேதம் கூறுகிறது. மனிதத் தத்துவங்களையோ கூற்றுகளையோ அல்லது சபை பாரம்பரியங்களையோ தேவன் உறுதி செய்வதில்லை. தன்னுடைய வசனத்தை அவர் உறுதி செய்கிறார். அதன்படியே பவுலுக்கும் அவர் செய்கிறார். அப்போஸ்தலர்19:11–12 இவ்வாறு கூறுகிறது.

> [11]*பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.*

"விசேஷித்த (அசாதாரண) அற்புதங்கள்" என்ற வார்த்தை எனக்கு மிகவும் பிடித்தமானது. அது எதைக் குறிக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? சில அற்புதங்கள் சாதாரணமானவை. ஆனால் எபேசுவிலே நடந்த அற்புதங்கள் அசாதாரணமானவையாக இருந்தன.

''அசாதராண அற்புதங்கள் இல்லாவிட்டாலும் சாதாரண அற்புதங்களாவது இன்று நமது சபைகளில் நடக்கின்றதா?" என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். அந்த அசாதாரண அற்புதங்கள் எப்படிப்பட்டவை என்று 12ஆம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

> [12]*அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.*

இது போன்ற அற்புதங்களை நான் என் கண் கூடாகக் கண்டிருக்கிறேன் என்று எனது சொந்த அனுபவத்திலிருந்து நான் சாட்சியாகக் கூறமுடியும். இந்தப் பழக்கம் இன்னும் நடைமுறையிலுள்ளது. இதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதாகும்.

எபேசுவிலே பவுல் பிரசங்கித்ததன் மூலம் கிடைத்த முதல் பலன் என்னவென்றால் இயற்கைக்கு மாறான முறையில் அற்புதங்கள் நடந்ததால் அவர் அளித்த செய்தி அங்கீகாரம் பெற்றது. இரண்டாவது பலன்: பொல்லாத ஆவிகள் வெளியேற்றப்பட்டன. அப்போஸ்தலர் 19:13–16இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> [13]*அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்."*

[14]பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள்.
[15]பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,"
[16]பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள்.

இந்த ஊழியத்தின் முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால் சாத்தானின் ரகசியமான தூதுவர்களை வெளியே கொண்டுவருவதாகும். பிசாசுகளும் பொல்லாத ஆவிகளும் சாத்தானின் ரகசிய தூதுவர்களாவர். இத்தகைய பொல்லாத ஆவிகள் வெளியே கொண்டுவரப்படுவது இவ்வகை ஊழியத்தில் காணப்படும் முன்னேற்றத்தைக் குறிக்கிறதாக அமைகிறது. அது தான் இங்கே நிகழ்ந்தது. "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன்," என்று பொல்லாத ஆவிகள் கூறிய வார்த்தைகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஒரு பிரசங்கியாரைக் குறித்து பிசாசின் தூதுவர் ''நான் அவரை அறிவேன், அவர் ஏதோ ஒன்றை சாதித்துக் கொண்டிருக்கிறார்" என்று கூறுவது அவரைக் குறித்த மறைமுகமான பாராட்டாக நான் கருதுகிறேன்.

பவுலுடைய பிரசங்கத்தின் மூலம் கிடைத்த மூன்றாவது பலன்: அப்போஸ்தலர் 19:17–19இல் விவரித்தப்படி மாந்திரீகக் காரியங்களின் ஆதிக்கத்தை நிர்மூலமாக்கியதாகும்.

[17]இது (அசுத்த ஆவியை உடைய மனிதனின் சம்பவம்) எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்த போது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.
[18]விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.
[19]மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்.

அநேகர் விசுவாசிகளாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் பில்லிசூனியக் காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாயிருந்தனர். அதே நிலை இன்றைய திருச்சபையிலும் காணப்படுகிறது. அவர்களுடைய ஒரு கால் தேவனுடைய அரசிலும் மற்றொரு கால் பிசாசின் ஆதிக்கத்திலும்

வைத்திருக்கின்றனர். சாத்தானின் வல்லமையின் நிலையைக் கண்டறிந்த இவர்கள், தேவனுக்குத் தங்களை முற்றிலுமாய் ஒப்புவித்து சாத்தானுக்கு முதுகைக் காட்டினார்கள். இதனை வெளிப்படுத்தும் வண்ணம் அவர்கள், மாந்திரீகக் காரியங்கள் குறித்துத் தங்களுடைய புத்தகங்களைக் கொண்டு வந்து எபேசுவிலே அனைவருக்கும் முன்பாக எரித்தனர்.

இப்புத்தகங்களின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசுகளாகும். ஒரு வெள்ளிக்காசு என்பது ஒரு பணியாளுடைய ஒரு நாள் கூலிக்குச் சமம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சராசரியாக ஒரு மனிதனின் ஒரு நாள் கூலி 30 டாலர்களாகும். ஐம்பதாயிரம் வெள்ளிக் காசுகள் என்பது 15,00,000 அமெரிக்க டாலர்களுக்குச் சமமாகும். இது ஒரு மிகப் பெரிய தொகை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பெரிய பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் இன்று இத்தகைய நிகழ்ச்சி நடைபெற வேண்டும்.

அப் 19:20இல் இது குறித்து வேத வசனம் விபரமாக இவ்வாறு கூறுகிறது:

> **[20]இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.**

இத்தகைய வல்லமையான செயலுக்குக் காரணம் தேவனுடைய வார்த்தையே ஆகும். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு பவுல் இரண்டு ஆண்டுகள் செய்த ஊழியத்தின் மூலமாக அற்புதமான, வல்லமையான விளைவு ஏற்பட்டது. சாத்தானுடைய அரசின் அடித்தளம் ஆட்டம் கண்டது. அவனுடைய கோட்டை தகர்ந்தது.

பவுல் எபேசுவிலே செய்த ஊழியத்தைக் குறித்து பவுல் தாமே இவ்வாறு அப் 20:20,26,27இல் கூறுகிறார்:

> **[20]பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி,**
> **[26]தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,**
> **[27]எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.**

தன்னுடைய ஊழியத்தில் எந்த விதமான பாகுபாடும் இல்லாதிருந்ததை பவுல் விளக்குகிறார். இப்படிப்பட்ட முறையில் தேவனுடைய வசனம்

பிரசங்கிக்கப்படும் போது இவ்வகையான பலன்கள் கிடைக்கும். இப்படிப்பட்ட பிரசங்கம் செய்கின்ற ஊழியங்கள் இந்நாட்களில் நமக்குத் தேவை.

18

சாட்சியின் ஆயுதம்

பிரசங்கிப்பதற்கும் சாட்சி பகர்வதற்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் நாம் தெரிந்து கொள்வது அவசியம். தேவனுடைய வார்த்தையின் உண்மைகளை எடுத்துக் கூறுவது பிரசங்கம். ஆனால் சாட்சி கொடுப்பது என்பது ''சாட்சியாக இருப்பது'' சொந்த அனுபவத்திலிருந்து சில நிகழ்ச்சிகள் மூலமாக தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவது சாட்சி சொல்வதாகும். உதாரணமாக "சுகமளித்தல்" என்பது குறித்து ஒரு செய்தியை நாம் பிரசங்கிக்கும் போது தேவன் எப்படி சுகமளிக்கிறார் என்பது குறித்த காரியங்களையும் சுகமளித்தல் குறித்து தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் நாம் எடுத்துரைக்கிறோம். ஆனால் நாம் சுகமளித்தல் குறித்து சாட்சி கொடுக்கும்போது, நாம் தேவனிடமிருந்து சுகம் பெற்றது குறித்த நமது அனுபவத்தைக் கூறுகிறோம். எனவே சாட்சி பகருதல் மற்றும் பிரசங்கித்தல் இரண்டுமே தேவனுடைய வார்த்தை சம்பந்தப்பட்டதாயிருந்தாலும் இரண்டும் வெவ்வேறு கோணத்திலிருந்து தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகின்றன.

சுவிசேஷம் உலகமுழுவதும் சென்றடைய இயேசு ஏற்படுத்திய முறையின் அடித்தளம் சாட்சி கொடுத்தலாகும். ஒலிவ மலையில் சீஷருக்கு அவர் கடைசியாகக் கொடுத்த கட்டளையின்போது இதனை இயேசு வெளிப்படுத்துகிறார். இதனை அப்போஸ்தலர் 1:8இல் வாசிக்கிறோம்:

> [8]"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."

முதலாவது பயனுள்ள சாட்சிகளாக நாம் இருக்க வேண்டுமென்றால் நமக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை தேவை. நம்முடைய சாட்சிதான் உன்னதமானது. இதற்குப் பின்னால் உந்து சக்தியாக இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையாக செயல்படுவது பரிசுத்த ஆவியாகும். பெந்தெகொஸ்தே நாளின் போது பரிசுத்த ஆவியை அவருடைய சீஷர்கள் பெறும்வரைக்கும், இயேசு அவர்களை சாட்சி கொடுக்க அனுமதிக்கவில்லை.

இரண்டாவதாக இன்று மார்க்க சம்பந்தமான மக்கள் அநேக சாட்சி கொடுப்பீர்கள் என்று இயேசு கூறவில்லை. நீங்கள் சாட்சிகளாக இருப்பீர்கள் என்று கூறினார். வேறுவகையாகக் கூறினால் நாம் பேசும் வார்த்தைகளோ, நாம் கொடுக்கும் கைப்பிரதிகளோ மாத்திரமல்ல நமது முழு வாழ்க்கையும் இயேசுவுக்கும் அவரது சுவிசேஷத்திற்கும் சாட்சியாக இருப்பது.

மூன்றாவதாக இயேசு விரிவடைந்துச் செல்லும் ஓர் வட்டத்தை மனக்கண்களின் முன் நிறுத்தினார். நீங்கள் வாழும் எருசலேமிலிருந்து ஆரம்பியுங்கள் என்று கூறுகிறார். வெளியே போய் மக்களுக்குக் கூறுங்கள். அவர்கள் அதை நம்பட்டும் பின்பு பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறட்டும். பிறகு அவர்கள் புறப்பட்டுப்போய் மற்ற மக்களுக்கு சொல்லட்டும். இதற்குப்பின் அந்த மக்கள் விசுவாசித்து பரிசுத்த ஆவியால் நிரம்பி மற்றவர்களுக்குப் போய் கூறவேண்டும். முதலில் எருசலேமில் ஆரம்பிக்க வேண்டும். பிறகு யூதேயாவுக்குள் செல்ல வேண்டும் பின்பு சமாரியாவுக்குள்ளும் உலகத்தின் கடைசி வரைக்கும் செல்லும் வரை இப்பணியில் ஓய்வின்றி தொடரவேண்டும்.

இயேசு உலகத்தில் கடைசியாகப் பேசிய வார்த்தைகள் இவைகளே. அவரது மனதும் இருதயமும் உலகத்தின் கடைசிவரை உள்ள பகுதியில் இருந்தது. உலகத்தின் கடைசிவரை சென்றடையும் வரை அவர் திருப்தியடையமாட்டார். இதற்கு தேவன் ஏற்படுத்திய முறை எல்லா கிறிஸ்தவர்களும் சாட்சிகளாக மாற வேண்டும். நாம் சாட்சி கொடுத்து மற்றவர்களை ஆதாயப் படுத்த வேண்டும். பின்பு ஆதாயம் செய்யப்பட்டவர்கள் சாட்சி கொடுத்து மற்ற மக்களை ஆதாயப்படுத்த வேண்டும். குளத்தின் நடுவே வீசப்பட்ட கல் அலைகளை ஏற்படுத்தி அந்த அலைகள் கடைசியாக கரையைத் தொடுவதுபோல உலகத்தின் கடைமுனைவரை இப்படியாக சாட்சி கொடுத்துக் கொண்டே சென்றடைய வேண்டும்.

சரித்திரத்தைத் திரும்பிப்பார்க்கையில் தேவனுடைய மக்கள் இந்த முறையைப் பயன்படுத்தியபோது வெற்றி கண்டனர். முன்னூறு வருடத்திற்குள்ளாக ரோம சாம்ராஜ்யத்தை கிறிஸ்தவம் வென்றது. ரோமப்

பேரரசை வீழ்ச்சியடையச் செய்த பெரிய ஆவிக்குரிய சக்தி எதுவென்றால் பலவிதமான நிலையிலிருந்த பலவிதமான இன, சமுதாய, சூழ்நிலையிலிருந்த ஆயிரமாயிரமான கிறிஸ்தவ விசுவாசிகளின் சாட்சியேயாகும். அவர்கள் அனைவரும் சொன்ன சாட்சி "இயேசு என் வாழ்க்கையை மாற்றினார்" என்பதாகும். இதன் பலனாக வல்லமை பொருந்திய கொடூரமான, உறுதியான ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

இதே ஆயுதமானது வானமண்டலங்களிலுள்ள சாத்தானின் சாம்ராஜ்யத்தையும் வீழ்ச்சியடையச் செய்யும் என்று வேதம் கூறுகிறது. இதனை வெளிப்படுத்தின விசேஷம் **12:7–11** வரை கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனங்களில் காணலாம். வானத்தையும் பூமியையும் மனிதர்களையும் தூதர்களையும் சம்பந்தப்படுத்தி ஒரு பெரிய யுத்தம் ஏற்படப் போவதைக் குறித்து இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

> 7வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.
> 8வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.
> 9உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.
> 10அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்."

"சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" சாத்தான். வானமண்டலங்களில் உள்ள அவனுடைய அரசிலிருந்து அவன் எப்படித் தள்ளப்பட்டான் என்று இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. பிறகு விசுவாசிகள் எப்படி சாத்தானை மேற்கொண்டார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட நபர் நேருக்கு நேர் மோதுவதை குறிப்பிடுகிறதைக் கவனியுங்கள்.

> 11"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் (விசுவாசிகள்) ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்."

அவர்களுடைய முக்கிய ஆயுதம் "சாட்சி." சாத்தானுடைய அரசை ஆட்டம் காண வைத்தது அவர்களுடைய சாட்சியாகும். அவர்களுடைய சாட்சி இரண்டு காரியங்கள் மேல் சார்ந்திருந்தது: தேவனுடைய வார்த்தை, இயேசுவின் இரத்தம். அவர்களுடைய சாட்சி, வார்த்தையிலும், இரத்தத்திலும் உள்ள வல்லமையை வெளிக்கொண்டு வந்தது.

இதனை நமது சொந்த வாழ்விலும் அப்பியாசப்படுத்தலாம். **இயேசுவின் இரத்தம் நமக்கு என்ன செய்திருக்கிறது என்பது குறித்து வேதவசனம் கூறுவதை நமது சொந்த வாழ்க்கையின் அனுபவ சாட்சியாக நாம் கூறும்போது சாத்தானை நாம் மேற்கொள்ளுகிறோம்.** வார்த்தை மற்றும் இரத்தம் குறித்த சொந்த அனுபவ சாட்சியின் முக்கியத்துவத்தை நீங்கள் காணவேண்டும்.

பல விதமான முறைகளில் நாம் இதனைச் செய்யலாம். இதில் ஒரு முறை கர்த்தருடைய பந்தி, சிலசமயங்களில் இதனை நாம் இந்தக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை. வார்த்தை இரத்தம் இவற்றின் மீதுள்ள நமது விசுவாசத்தைக் குறிக்கிறது. 1 கொரி 11:26இல் கர்த்தருடைய பந்தியைக் குறித்து பவுல் இவ்வாறு கூறுகிறார்.

> *[26] ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

பாத்திரம் கர்த்தருடைய இரத்தத்தைத் தெரிவிக்கிறது என்று நமக்குத் தெரியும். எனவே கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறும் போது தொடர்ந்து இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நாம் சாட்சியாக அறிவிக்கிறோம்.

இயேசுவின் இரத்தத்தைக் குறித்து வேதம் கூறுவதைக் குறித்து பயனுள்ள முறையில் நாம் சாட்சிகொடுக்க வேண்டுமென்றால் இயேசுவின் இரத்தத்தைக் குறித்து வேத வசனம் என்ன கூறுகிறது என்பது குறித்து நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் ஐந்து முக்கியக் காரியங்களை வேத வசனம் தெரிவிப்பதை நாம் காணலாம்:

முதலாவது காரியம் எபேசியர் 1:7இல் கூறப்பட்டுள்து:

> *[7] அவருடைய (கிறிஸ்துவின்) கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் இரண்டு காரியங்களைக் குறித்து நாம் காண்கிறோம். முதலாவது மீட்பு (நாம் மீட்கப்பட்டோம்) இரண்டாவது மன்னிப்பு (பாவ மன்னிப்பு நமக்கு அளிக்கப்பட்டுள்ளது) 1 யோவான் 1:7இல் இது குறித்து நாம் வாசிக்கிறோம்:

> [7]அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

மூன்றாவதாக இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது. இரத்தத்தின் மூலமாய் தொடர்ந்து ஆவிக்குரிய சுத்திகரிப்பு நமக்கு உண்டாயிருக்கிறது. ரோமர் 5:9 இவ்வாறு கூறுகிறது:

> [9]இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

நான்காவது நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். “நீதிமான்களாக்கப்படுவது” என்பதன் விளக்கம் “நான் பாவமே செய்யாதது போல் நான் நீதிமானாக்கப்படுகிறேன்.” எப்படியெனில் பாவமே அறியாத நீதியாகிய கிறிஸ்துவின் நீதியினாலே நான் நீதிமானாக்கப்படுகிறேன்.

எபிரெயர்13:12 இவ்வாறு கூறுகிறது:

> [12]அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

ஐந்தாவதாக, இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நாம் ‘‘பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்’’ என வேதம் கூறுகிறது. “பரிசுத்தமாக்குதல்” என்றால் தூய்மையாக்குதல் அல்லது தேவனுக்கென்று பிரித்துவைக்கப்படுதல் என்று பொருள்.

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்கு இந்த ஐந்துக் காரியங்களும் கிடைப்பதாக வேத வசனம் கூறுகிறது:

முதலாவது, நாம் மீட்கப்படுகிறோம்;
இரண்டாவது, நாம் மன்னிக்கப்படுகிறோம்;
மூன்றாவது, நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்;
நான்காவது, நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம்

(நீதிமான்களாக மாற்றப்படுகிறோம்);
ஐந்தாவதாக, நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (தூய்மையாக்கப்படுகிறோம்).

இந்த ஐந்து காரியங்களும் நமது வாழ்வில் முழுவதுமாக பயனளிக்க வேண்டுமென்றால் நாம் இது குறித்து தனிப்பட்ட முறையில் சாட்சி கூற வேண்டும். நமது பாவ அறிக்கையை தைரியமாகக் கூற வேண்டும். கீழ்கண்டவாறு நாம் கூறலாம்:

இயேசுவின் இரத்தத்தின் மூலம் சாத்தானின் கைகளிலிருந்து நான் மீட்கப்பட்டேன். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் எனது பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கிறது. இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன். நான் பாவமே செய்யாதது போல நீதிமானாக்கப்பட்டுள்ளேன். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நான் பரிசுத்தமாக்கப்படுகிறேன்; தூய்மையாக்கப்படுகிறேன், தேவனுக்கு நேராக நிலை நிறுத்தப்படுகிறேன். நான் இனி ஒரு போதும் பிசாசின் எல்லைக்குள்ளாக இருக்கவில்லை.

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் இந்த ஐந்து ஆசீர்வாதங்களையும் குறித்துத் தியானம் செய்யுங்கள்: மீட்பு, மன்னிப்பு, சுத்திகரிப்பு, நீதிமானாகுதல், பரிசுத்தமாதல். இதைக்குறித்து தனிப்பட்ட முறையில் நாம் சாட்சிபகரும்போது இந்த ஐந்து காரியங்களும் உங்களுக்குச் சொந்தமாகிறது என்ற உண்மையை மனதில் கொள்ளுங்கள். இந்தக் காரியங்களை தனிப்பட்ட முறையில் சாட்சி கொடுக்கும் போது சாத்தானை மேற்கொள்ளுகிறோம். “ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நமது சாட்சியின் வசனத்தினாலும்” இதனைச் செய்ய முடியும்.

ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் மிகவும் ஊக்கமாகச் செயல்பட தேவன் நமக்குக் கொடுத்த ஆயுதங்களை உபயோகித்து தொடர்ந்து போராடி முன்னேற வேண்டும். நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது மற்றும் அதற்காகத் தேவனிடம் காத்திருப்பது மட்டும் போதாது. நாம் வெற்றி பெறும் போர் வீரர்களைக் கொண்ட சேனையைச் சேர்ந்தவர்கள். தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய அருட்செய்தியினை அறிவிப்பதின் மூலம் இவ்வுலகில் அநேகரை நீதிக்குட்படுத்தும் இப்படிப்பட்ட சேனை வீரர்கள் தேவை.

இப்போது, *ஆவிக்குரிய போராட்டம்* பாட கேள்விகளுக்காக, இணைப்பு "அ"வுக்கு திருப்பிக்கொள்ளுங்கள். இக்கேள்விகளுக்கான பதில்கள், இணைப்பு "ஆ"வில் கொடுக்கப்பட்டுள்ளன.

சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

2 தீமோத்தேயு 2:15

முன்னுரை

மாணவர்களுக்கான ஆலோசனைகள்

எந்த கேள்விக்கும் பதில் அளிக்கும் முன் இந்த ஆலோசனைகளைப் படிக்கவும் !

இவ்வேத பாடத்தின் நோக்கம்

இப்பாடத் தொகுப்புக்கு நான்கு முக்கிய குறிக்கோள்கள் உண்டு.

1. ஒரு பலமான கிறிஸ்தவவாழ்க்கையைக்கட்டி எழுப்புவதற்காக, வேத அறிவின் அடித்தளத்தை அமைத்துக்கொடுப்பது.
2. வேதத்தை ஆராய்ந்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை கண்டுபிடிக்க உங்களுக்குப் பயிற்சி அளித்தல்.
3. வேதத்தைப் பகுத்தாராயவும், அதின் சரியான அர்த்தத்தை நீங்களே கண்டுகொள்ள உங்களைப் பயிற்றுவிப்பது.
4. வேதாகமத்தினாலே நிரூபிக்கப்பட்டால் மட்டுமே, ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக்கொள்ளும் வழக்கத்தை உங்களுக்கு உருவாக்குவது.

வேதாகமக்குறிப்புகளைப் பயன்படுத்தும் முறை

ஒவ்வொரு வேதாகம புத்தகத்துக்கான சுருக்கமான பெயரையும் கண்டறிய 280வது பக்கத்தைப் பார்க்கவும். வேத பகுதிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் முறை: முதலாவது, புத்தகத்தின் பெயர்; இரண்டாவது, அதிகாரம்; மூன்றாவது, வசனம். உதாரணத்துக்கு, ரோமர் 3:23 என்பது ரோமரின் புத்தகம், 3வது அதிகாரம், 23வது வசனமாகும்.

வார்த்தைகளின் விளக்கம்

புத்தகத்தின் பின் பகுதியில் அகராதி சேர்க்கப்பட்டுள்ளது. இப்பாடங்களில் நீங்கள் காணக்கூடிய சில கடினமான வார்த்தைகளுக்கு, இங்கே எளிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எந்த வார்த்தையின் அர்த்தத்தையும் நீங்கள் அறியாதிருந்தால், இந்த அகராதியைப் பார்க்கவும். அகராதியில் சேர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள் நட்சத்திரக்குறியீட்டினால் (*) குறிக்கப்பட்டுள்ளன.

இப்பாடங்களைச் செய்வது எப்படி ?

ஒவ்வொரு தனி பாடத்தின் ஆரம்பத்திலும், "முன்னுரை" என்ற தலைப்புடைய ஓர் பகுதி உள்ளது. அதற்குப் பின் வரும் போதனையின் ஓர் சுருக்கத்தை அப்பகுதி உங்களுக்குக்கொடுக்கும். கேள்விகளுக்கு விடையளிக்க முயற்சிக்கும் முன், "முன்னுரையை" கவனமாய்ப் படியுங்கள்.

முதல் பாடத்தில் (பாடம் 1: வேதாகமம்: தேவனுடைய வார்த்தை) இருபத்தினான்கு கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும், ஒன்று அல்லது ஒன்றுக்கும் அதிகமான வேத வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் விடையை கேள்விக்கு பின்னிருக்கும் கோடுகளின் மீது எழுதுங்கள். இப்படிகளை பின்பற்றுங்கள்:

1. கேள்வியைக்கவனமாகப் படியுங்கள்.
2. வசனத்தைக்கண்டுபிடித்து, அந்தக்கேள்விக்குப் பதிலை காணும்வரைக்கும் அதைக்கவனமாகப் படியுங்கள். முழு அர்த்தத்தையும் புரிந்துகொள்ள சில நேரங்களில் முன்னும் பின்னும் இருக்கும் வசனங்களை வாசிக்க வேண்டியதிருக்கலாம்.
3. எளிய வார்த்தைகளில் நீங்கள் கண்டுபிடித்த பதிலை எழுதுங்கள்.

சில நேரங்களில், ஒரு கேள்விக்கான பதில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளாகப் பிரிந்திருக்கலாம். அத்தகைய சூழ்நிலையில், ஒவ்வொரு பகுதிக்கான இடைவெளியிலும் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடம் ஒன்றிலிருக்கும் முதல் இரண்டு கேள்விகளும், பதில்களும் உதாரணமாகக்கொடுக்கப்பட்டுள்ளன.

1. வேதத்திற்கு இயேசு என்ன பெயரை அளித்தார் ? (யோவான் 10:35)

   தேவனுடைய வார்த்தை

2. வேதத்தைக்குறித்து இயேசு சொன்ன எந்த காரியம் அதின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது ? (யோவான் 10:35)

   வேத வாக்கியம் தவறாது

பதில்கள் சரியா என்று அறிய யோவான் 10:35ஐப் பார்க்கவும்.

மனப்பாட பகுதி

ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும், ஓர் மனப்பாட பகுதியுள்ளது. அப்பகுதியை நீங்கள் மனப்பாடம் செய்து ஓர் அட்டையில் எழுத வேண்டும்.

நீங்கள் போகும் இடமெல்லாம் மனப்பாட அட்டைகளை எடுத்துச்

செல்லுங்கள். உங்களுக்கு ஓர் நிமிட நேரம் கிடைக்கும்போதெல்லம் உங்கள் மனப்பாட வசனத்தைத் திரும்ப நினைவுக்குக்கொண்டு வாருங்கள். அடிக்கடி நினைவுபடுத்துவதே, வெற்றியுள்ள மனப்பாடத்திற்கு இரகசியமாகும். இவ்விதத்தில் நீங்கள் வசனங்களை மனப்பாடமாக கற்றுக்கொள்வீர்கள். தேவனுடைய வார்த்தை உங்களுக்கு ஆலோசனையையும், பெலனையும், ஆவிக்குரிய ஆகாரத்தையும், பிசாசின் மீது வெற்றியையும், மற்றவர்களுடைய இருதயத்தில் விதைக்க விதையையும் கொடுக்கும்.

இப்பாடங்களை செய்யும் முறை

பாடம் 1-ல் உள்ள எல்லா கேள்விக்கும் பதில்களை எழுதுங்கள். அதன்பின் - வேதத்தை மூடிவைத்து - இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் மனப்பாட வசனத்தை எழுதுங்கள். பின்பு “சரியான விடைகள்” என்ற பக்கத்தை திருப்பிக்கொண்டு, உங்கள் பதில்களை சரிபாருங்கள். உங்கள் பதில், சரியான பதிலோடு ஒத்துக்போகாவிட்டால், கேள்வியையும் அதற்கான விடையையும் திரும்ப திரும்ப, புரிந்துகொள்ளும்வரை படியுங்கள்.

சரியான விடைகளுக்கு அடுத்த பக்கத்தில் அவைகளுக்குக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக்குறிப்புகளை வாசித்து, கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைப் பாருங்கள்.

கடைசியாக, ஒவ்வொரு பதிலுக்கும் ஏற்ற மதிப்பெண்களை நீங்களே உங்களுக்கு குறித்துக்கொள்ளுங்கள். ஒரு மதிப்பெண்ணுக்கு மேல், ஓர் பதிலுக்கு அளிக்கப்பட்டிருந்தால், சரியான விடையைப் போல் முழுமையான பதில் இல்லாவிடில் முழு மதிப்பெண்களையும் எடுத்துக்கொள்ளாதீர்கள். மனப்பாட பகுதிக்கான மதிப்பெண்கள் முக்கியம் என்பதை மனதில் கொள்ளுங்கள்!

முதல் பாடத்துக்கான மதிப்பெண்களைக்கூட்டிக்கொள்ளுங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள சதவீதங்களின்படி உங்கள் மதிப்பெண்களை மதிப்பிடுங்கள்: 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் “தேர்ச்சி”; 70 சதவீதம் அதற்கு மேல் “மிக்க நன்று”; 80 சதவீதம் அல்லது அதற்கு மேல் “மிகச் சிறப்பு”.

18 மற்றும் 20ஆம் பாடங்களைச் செய்யும் விதம் சற்று வித்தியாசமானது ஆனால் அப்பாடங்களின் முன் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்! ஓர் பாடத்திலுள்ள அனைத்துக்கேள்விகளுக்கும் - மனப்பாட வசனங்கள் உட்பட - பதில் அளிக்கும் வரை, சரியான விடைகள் உள்ள பக்கத்துக்கு திருப்பாதீர்கள்!

கடைசி பாடத்தை முடித்தவுடன், “ மதிப்பெண்கள்” என்ற பக்கத்தைத் திருப்பிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பாடத்துக்குமுரிய மதிப்பெண்களை எழுதி, அவைகளை கூட்டுங்கள். முழு பாடத்துக்குமான உங்கள் முன்னேற்றத்தையும் கணக்குப் பாருங்கள்.

இறுதி தனிப்பட்ட ஆலோசனை

1. ஒவ்வொரு பாடத்தையும் ஜெபத்தோடு ஆரம்பியுங்கள். உங்களை வழி நடத்தவும், புரிந்துகொள்ளும் திறனைக்கொடுக்கும்படியும், தேவனிடம் கேளுங்கள்.
2. அவசரப்படாதீர்கள். ஒரே நேரத்தில் முழு புத்தகத்தையும் முடிக்க முயற்சி செய்யாதீர்கள். அர்த்தத்தை நன்கு புரிந்துகொள்ளும்வரை வசனங்களைத் திரும்ப திரும்ப படித்துப் பாருங்கள். சில நேரங்களில், கொடுக்கப்பட்டிருக்கும் வசனத்துக்கு முன்னும் பின்னும் இருக்கும் வசனங்களை வாசிப்பது நல்லது, இதனால் அர்த்தத்தை எளிதாக புரிந்துகொள்ளலாம்.
3. தெளிவாகவும், அழகாகவும் எழுதுங்கள். தேவையானதை விட பதில்களை நீளமாக்காதீர்கள். கூர்மையான பென்சில் அல்லது நல்ல பேனாவை(பால் பாயின்ட்) பயன்படுத்துங்கள்.
4. மனப்பாட பகுதிக்கு விசேஷ கவனம் செலுத்துங்கள்.
5. நீங்கள் கற்றுக்கொள்ளும் சத்தியங்களை உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த, தேவன் உதவி செய்ய வேண்டும் என ஜெபியுங்கள்.

வேத புத்தகங்களின் சுருக்கமான பெயர் அட்டவணை

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள்

I. நியாயப்பிரமாணம்

ஆதியாகமம்..ஆதி.
யாத்திராகமம்......................................யாத்.
லேவியராகமம்.................................லேவி.
எண்ணாகமம்....................................எண்.
உபாகமம் ....உபா.

II. சரித்திரம்

யோசுவா..யோசு.
நியாயாதிபதிகள்................................நியா.
ரூத்...ரூத்.
1 சாமுவேல்....................................1 சாமு.
2 சாமுவேல்...................................2 சாமு.
1 இராஜாக்கள்........................1 இராஜா.
2 இராஜாக்கள்.......................2 இராஜா.
1 நாளாகமம்.................................1 நாளா.
2 நாளாகமம்................................2 நாளா.
எஸ்றா...எஸ்றா
நெகேமியா..நெகே.
எஸ்தர்...எஸ்.

III. கவிதை முறை புத்தகங்கள்

யோபு ....யோபு
சங்கீதம்...சங்.
நீதிமொழிகள்...நீதி.
பிரசங்கி..பிர.
உன்னதப்பாட்டு ....உன்.

IV. முக்கிய தீர்க்கதரிசிகள்

ஏசாயா...ஏசா.
எரேமியா..எரே.
புலம்பல்...புலம்.
எசேக்கியேல்.......................................எசே.
தானியேல்..தானி.

V. சிறிய தீர்க்கதரிசிகள்

ஓசியா...ஓசி.
யோவேல்.......................................யோவே.
ஆமோஸ்..ஆமோ.
ஒபதியா..ஒப.
யோனா..யோனா
மீகா...மீகா
நாகூம்..நாகூ
ஆபகூக்..ஆப.
செப்பனியா...செப்.
ஆகாய்...ஆகா.
சகரியா...சக.
மல்கியா..மல்.

புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள்.

I. சுவிசேஷங்கள்

மத்தேயு..மத்.
மாற்கு..மாற்.
லூக்கா..லூக்.
யோவான்...யோவா.

II. சரித்திரம்

அப்போஸ்தலருடைய
நடபடிகள்..அப்.

III. பவுலின் நூல்கள்

ரோமர்...ரோ.
1 கொரிந்தியர்.............................1 கொரி.
2 கொரிந்தியர்..........................2 கொரி.
கலாத்தியர்...கலா.
எபேசியர்..எபே.
பிலிப்பியர்..பிலி.
கொலோசெயர்...........................கொலோ.
1 தெசலோனிக்கேயர்................1 தெச.
2 தெசலோனிக்கேயர்..............2 தெச.
1 தீமோத்தேயு..............................1 தீமோ.
2 தீமோத்தேயு............................2 தீமோ.
தீத்து..தீத்.
பிலெமோன்...பிலே.
எபிரெயர்..எபி.

IV. பொதுவான நூல்கள்

யாக்கோபு...யாக்.
1 பேதுரு..1 பேது.
2 பேதுரு..2 பேது.
1 யோவான்................................1 யோவா.
2 யோவான்..............................2 யோவா.
3 யோவான்..............................3 யோவா.
யூதா...யூதா

V. தீர்க்கதரிசனம்

வெளிப்படுத்தின
விசேஷம்...வெளி.

("யோவா" என்பது யோவான் சுவிசேஷத்தையும், "1 யோவா" யோவான் எழுதின முதல் நிருபத்தையும் குறிக்கின்றதை கவனியுங்கள்.)

பாடம் ஒன்று

வேதாகமம்: தேவனுடைய வார்த்தை

வேதாகமம் தேவனுடைய சொந்த வார்த்தையாகும். எங்குமுள்ள மக்கள் எல்லோருக்கும், இது தேவனுடைய மிகப் பெரிய ஈவாகும். நம்முடைய பாவத்திலிருந்தும், துயரத்திலிருந்தும், இருளிலிருந்தும் நம்மை வெளியேறச் செய்வதற்கு, இது தேவன் தந்த ஈவாகும்.

வேதம் ஓர் சாதாரண புத்தகம் அல்ல. அதின் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை. தேவனுடைய சொந்த வல்லமையினாலும் அதிகாரத்தினாலும் நிறைந்திருக்கிறது. அதை எழுதின மனிதர்கள் தேவனுடைய ஆவியினால் எழுச்சிப் பெற்று எழுதினார்கள். சத்தியத்தை, அவர் கொடுத்த வண்ணமாகவே எழுத தேவன் அவர்கள் இருதயங்களை ஏவினார்.

தேவன் நம்மிடத்தில் பேசுவது போல நினைத்து, நாம் வேதத்தை வாசிக்க வேண்டும் - நேரடியாகவும், தனிப்பட்ட முறையிலும். தம்முடைய வார்த்தையினால் தேவன் நமக்குப் பல நன்மையானவைகளை அருளுவார்:

- வெளிச்சம்
- அறிவு
- ஆவிக்குரிய உணவு
- சரீரப்பிரகாரமான ஆரோக்கியம்

வேத வார்த்தைகளுக்கு இத்தகைய வல்லமை உண்டு:

- நம்மைச் சுத்திகரிக்க
- நம்மைப் பரிசுத்தமாக்க* (தேவனுக்கென்று பிரித்துவைக்க)
- நம்மைக்கட்டியெழுப்ப
- நம்மைத் தேவனுடைய தன்மையில் பங்கேற்கிறவர்களாய் மாற்ற
- பிசாசை மேற்கொள்ள நமக்கு வல்லமையையும் ஞானத்தையும் அளிக்க

மனப்பாட பகுதி: 2 தீமோத்தேயு 3:16-17

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

பாட கேள்விகள்

1. இயேசு வேதத்திற்கு என்ன பெயர் கொடுத்தார்? (யோவான் 10:35)

....

2. வேதத்தைக்குறித்து இயேசு சொன்ன எந்த காரியம் அதின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது? (யோவான் 10:35)

....

3. தேவனுடைய வார்த்தையைக்குறித்து தாவீது சொல்லும் இரண்டு காரியங்களைப் பட்டியலிடவும்

   (1) (சங். 119:89) ....

   (2) (சங். 119:160)..

4. வேத வசனங்கள் முதலில் எப்படி கொடுக்கப்பட்டன?

   (1) (2 தீமோ. 3:16)..

   (2) (2 பேது 1:20-21)..

5. மறுபிறப்படையவும், நித்திய* ஜீவனைப் பெறவும் ஓர் நபர் தன்னுடைய இருதயத்தில் எத்தகைய விதையைப் பெற வேண்டும்? (1பேது.1:23)

....

6. வேத வசனங்கள் ஓர் கிறிஸ்தவனுக்கு எப்படி பயனுள்ளவைகள் என்று 4 காரியங்களைப் பட்டியலிடவும் (2 தீமோ. 3:17)

   (1).. (2)..

   (3).. (4)..

7. தேவனுடைய வார்த்தையைப் படித்து, அதற்குக்கீழ்ப்படிகிற கிறிஸ்தவனுக்கு இறுதியில் என்ன விளைவு ஏற்படும்? (2 தீமோ. 3:16) ....

8. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு என்ன ஆவிக்குரிய ஆகாரத்தை அளித்திருக்கிறார்? (1 பேது. 2:2) (மத் 4:4)

....

9. யோபுக்கு தேவன் பேசின வார்த்தைகள் எவ்வளவு முக்கியமாக இருந்தது? (யோபு 23:12)..

....

10. எரேமியா தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டபோது, அது அவனுக்கு என்னவாக மாறிற்று? (எரேமியா 15:16)..........................

....

11. ஒரு இளம் கிறிஸ்தவன், சுத்தமான வாழ்க்கை வாழ்வது எப்படி? (சங்.119:9) ....

12. ஒரு கிறிஸ்தவன் ஏன் தன்னுடைய இருதயத்தில் தேவனுடைய வார்த்தையை மறைத்து வைக்க வேண்டும்? (சங். 119:11)...........................

....

13. "இளைஞர்களில்" தேவனுடைய வார்த்தை தங்கியிருக்கும் போது, என்ன இரண்டு விளைவுகளை ஏற்படுத்துகிறது? (1 யோவான் 2:14)

(1) ....

(2) ....

14. சோதிக்கப்பட்ட ஒவ்வொரு முறையும், இயேசு பிசாசுக்கு எவ்வாறு பதில் அளித்தார்? (மத். 4:4, 7, 10) ....

....

15. ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தின் ஓர் பகுதியாக தேவன் கிறிஸ்தவர்களுக்குக்கொடுத்திருக்கும் பட்டயம் என்ன? (எபே. 6:17)

....

16. கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் நடைபோட வேதம் எப்படி உதவி செய்கிறதென்று சங்கீதம் 119 எந்த இரண்டு விவரிப்புகளால் காண்பிக்கிறது? (சங். 119:105)

(1) ....

(2) ....

17. ஓர் கிறிஸ்தவனின் மனதிற்கு தேவனுடைய வார்த்தை எந்த இரண்டு காரியங்களை அளிக்கிறது? (சங்.119:130)

(1) ....

(2) ....

18. தேவனுடைய வார்த்தையை கவனமாய்ப் படிக்கின்ற கிறிஸ்தவனின் சரீரத்திற்கு என்ன அளிக்கப்படுகிறது? (நீதி. 4:20-22)

....

19. தேவனுடைய மக்கள் வியாதியிலும் தேவையிலும் இருந்தபோது, அவர்களைக்குணமாக்கி விடுவிக்க* தேவன் எதை அனுப்பினார்? (சங். 107:20) ....

....

20. பின்வரும் வசனங்களிலிருந்து, தேவனுடைய வார்த்தை அவருடைய மக்களுக்கு என்ன செய்கிறதென்று நான்கு காரியங்களைப் பட்டியலிடுங்கள்.

(1) (யோவா 15:3) (எபேசியர் 5:26) ....

(2) (யோவான் 17:17) ....

(3) (அப்போஸ்தலர் 20:32) ....

(4) (அப்போஸ்தலர் 20:32)..

21. கிறிஸ்து இயேசுவுக்கு ஓர் கிறிஸ்தவன் தன்னுடைய அன்பை எப்படி நிரூபிக்கின்றார்? (யோவான் 14:21) ....

....

22. யாரைத் தன்னுடைய தாய் மற்றும் சகோதரர்கள் என்று இயேசு அழைக்கிறார்? (லூக்கா 8:21) ....

....

23. தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களை நாம் சொந்தப்படுத்தும்போது, நம்முடைய வாழ்க்கையில் என்ன இரண்டு விளைவுகள் ஏற்பட வேண்டும்? (2 பேது. 1:4)

(1) ....

(2) ....

மனப்பாட பகுதி: 2 தீமோ. 3:16-17

இப்பகுதியை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் ஒன்று

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	தேவனுடைய வார்த்தை	1
2.	வேத வசனம் தவறாது	1
3.	(1) என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது (2) அது சகலமும் சத்தியமாயிருக்கிறது	1 1
4.	(1) தேவ ஆவியால் அருளப்பட்டிருக்கிறது. (2) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள்	1 2
5.	தேவ வசனமாகிய அழிவில்லாத (தூய்மையான) வித்து	2
6.	(1) உபதேசம் (2) கடிந்து கொள்ளுதல் (3) சீர்திருத்தல் (4) நீதியைப் படிப்பித்தல்*	1 1 1 1
7.	அவன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாக மாறுகிறான்	2
8.	தேவனுடைய வார்த்தை (வசனம்)	1
9.	தனக்குத் தேவையான உணவை விட முக்கியமாக இருந்தது	1
10.	அவன் இருதயத்துக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிற்று	1
11.	வசனத்தினால் தன்னை காத்துக்கொள்வதினால்	2
12.	தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடி	1
13.	(1) அவர்களைப் பலவான்களாக்குகிறது (2) பொல்லாங்கனை (பிசாசை) அவர்கள் ஜெயிக்கிறார்கள்	1 1
14.	அவர் எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையிலிருந்து பதிலளித்தார்.	1

15.	தேவனுடைய வார்த்தை (வசனம்)	1
16.	(1) அவர்கள் கால்களுக்குத் தீபமாக இருக்கிறது (2) அவர்கள் பாதைக்கு வெளிச்சமாக இருக்கிறது	1 1
17.	(1) வெளிச்சம் (2) உணர்வு	1 1
18.	அவன் உடலுக்கெல்லாம் ஆரோக்கியம்	1
19.	அவர் (தேவன்) தம்முடைய வார்த்தையை அனுப்பினார்	1
20.	(1) அவர்களைச் சுத்திகரிக்கிறது (சுத்தமான தண்ணீரைப் போல கழுவுகிறது) (2) அவர்களைப் பரிசுத்தமாக்குகிறது* (3) அவர்களுக்குப் பக்திவிருத்தியை உண்டாக்குகிறது (கற்றுக்கொடுக்கிறது) (4) அவர்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கிறது	1 1 1 1
21.	அவன் கிறிஸ்துவின் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறான்	2
22.	தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்கள்	1
23.	தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறதினாலே	1
24.	(1) திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர்களாகிறோம் (2) உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்புகிறோம்	1 1
	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு வசனத்திலும், ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்).	8
	மொத்தம்	49

25 மதிப்பெண்கள் = 50%

34 மதிப்பெண்கள் = 70%

39 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் ஒன்று

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-2. இயேசு பழைய ஏற்பாட்டு வசனங்களை ஏற்றுக்கொண்டார். கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டார். தேவனால் அருளப்பட்ட வார்த்தை என்ற அடிப்படையில் அவைகளின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். தம்முடைய எல்லா போதனைகளையும் இவ்வசனங்களின் அடிப்படையில்தான் கொடுத்தார். இயேசு தம்முடைய முழு வாழ்க்கையையும், இவ்வசனங்களுக்குக்கீழ்ப்படிந்து, அவைகளை நிறைவேற்றுவதில் செலவிட்டார்.

3. தேவனுடைய வார்த்தை பரலோகத்தில் தோன்றுகிறது. இவ்வார்த்தை மனிதர் மூலமாக கொடுக்கப்பட்டது. தேவனே அதன் ஊற்றாயிருக்கிறார்.

4. (1) “தேவனால் அருளப்பட்டது” (2 தீமோ. 3:16) என்பதற்கு “தேவனுடைய சுவாசத்தினால் பெற்றுக்கொண்ட'' என அர்த்தமாகும். எபிரெயத்திலும், கிரேக்கத்திலும், சுவாசம் மற்றும் ஆவிக்கான வார்த்தைகள் ஒன்றே. *(வேதம் அருளப்பட்ட விதம் மற்றம் அதின் அதிகாரத்தைக்குறித்து முழுமையாக கற்க, ''நீதியான வாழ்க்கைக்கான அடித்தளங்கள்'' புத்தகத்தில், பகுதி 1, விசுவாசத்துக்கான அடித்தளம் என்ற பகுதியைப் பார்க்கவும்.)*

5. தேவனுடைய வார்த்தையின் “அழியாத வித்து” நமக்குள் எப்படி கிரியை செய்கிறது ? விசுவாசத்தினாலே* வித்து இருதயத்தில் பெற்றுக்கொள்ளப்படுகிறது. அதன்பின்பு, பரிசுத்த ஆவியினாலே அங்கே வளர ஆரம்பிக்கிறது.

6-8. கவனிக்க: ‘‘வேதவாக்கியங்களெல்லாம்” (2தீமோ.3:16), “ஒவ்வொரு வார்த்தையும்” (மத்.4:4). வேதத்தை முற்றிலும் கற்க, ஓர் கிறிஸ்தவன் முழு வேதாகமத்தையும் படித்து, போதனைகளைப் பயன்படுத்த வேண்டும்.

8-10. ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திற்கும் தேவனுடைய வார்த்தை ஆகாரமளிக்கிறது: (1) ‘‘பால்'' புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு (1 பேது. 2:2); (2) ‘‘அப்பம்'' வளர்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு (மத்.4:4); (3) “திடமான ஆகாரம்” (முழுமையான உணவு) ‘‘பூரண வயதுள்ளோருக்கு'' அல்லது ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்தவர்களுக்கு (எபி. 5:12-14)

11. நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் தேவனுடைய வார்த்தையின் போதனையை நாம் பயன்படுத்த வேண்டும்.

12. ஒருவர் கூறினார்: ‘‘தேவனுடைய வார்த்தை உங்களைப் பாவத்திலிருந்து தடை செய்யும் அல்லது பாவம் உங்களை தேவனுடைய வார்த்தையிலிருந்து தடை செய்யும்”.

13-15. எபே. 6:13-17, கிறிஸ்தவனுக்கு முழு பாதுகாப்பை அளிக்கும், ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தின் ஆறு ஆயுதங்களை பவுல் பட்டியலிடுகிறார். ஆனால் அவைகளில் ஒன்றுதான் தாக்குதலுக்கான ஆயுதம், “ஆவியின் பட்டயம்” (வ.17). தேவனுடைய வார்த்தையாகிய இப்பட்டயத்தை “எடுத்துக்கொள்வது” ஒவ்வொரு விசுவாசியின் பொறுப்பாயிருக்கிறது.

16. 1 யோவான் 1:7ஐ திருப்பிப் பார்க்கவும்: “நாம் வெளிச்சத்தில் நடந்தால் . . . ” நாம் நடக்க வேண்டிய “வெளிச்சம்” தேவனுடைய வார்த்தை, நாம் நடக்கும்போது தெளிவாக காண இது நமக்கு உதவி செய்யும்.

17-19. தேவனுடைய வார்த்தை, கிறிஸ்தவனுடைய ஆவி, மனது மற்றும் சரீரத்தின் தேவைகளைச் சந்திக்கிறது.

20 (4). தேவனுடைய வார்த்தையில் மட்டுமே இவைகளை நாம் அறிந்துகொள்ள செய்கிறது: (a) கிறிஸ்துவுக்குள் நம்முடைய உரிமையான சுதந்தரம் என்ன என்று அறிந்துகொள்ளுகிறோம். (b) அந்தச் சுதந்தரத்தை எப்படி பெற்றுக்கொள்வது.

21-23. ‘‘தேவனுடைய வார்த்தையைக்கைக்கொள்ளுவது உங்களைக் கிறிஸ்துவின் சீஷனாக வேறு பிரித்துக்காட்டும். . . .

தேவனுடைய வார்த்தையைக்குறித்த உங்கள் மனோநிலையே அவரைக்குறித்த உங்கள் மனோநிலையாகும். அவருடைய வார்த்தையை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்களோ அதைவிட அதிகமாக நீங்கள் தேவனை நேசிக்க முடியாது. அவருடைய வார்த்தைக்கு நீங்கள் அளிக்கும் கனத்தின் அளவு எவ்வளவோ அதைவிட தேவனுக்கு நீங்கள் அதிக கனத்தை அளிக்க முடியாது. உங்கள் இருதயம் அதைவிட அதிகமான இடத்தை நீங்கள் தேவனுக்குக்கொடுக்க முடியாது”. *(நீதியான வாழ்க்கைக்கான அடித்தளங்கள், பகுதி 1, விசுவாசத்துக்கான அடித்தளம், அதிகாரம் 2.)*

24. தேவனுடைய வார்த்தையை நாம் விசுவாசித்து அதற்குக்கீழ்ப்படியும் போது, தேவனுடைய சுபாவமே நம்முடைய இருதயங்களையும், வாழ்க்கையையும் நிரப்பி, பழைய, கேடான ஆதாமின்* சுபாவத்தை மாற்றிவைக்கிறது.

பாடம் 2

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் [பகுதி 1]

முன்னுரை:

பாவம் ஓர் மனோநிலையாகும். இது நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஓர் கலக உணர்வாகும். அது தேவனுக்கு விரோதமாக கலகம் செய்யும். பாவம், தேவனுக்கும் நமக்கும் இடையில் பிரிவினையை உண்டாக்கும் வெளியரங்கமான செயல்களாக மாறும். இவ்விதத்தில் நாம் எல்லாரும் பாவிகள். பாவம் நிறைந்த நம்முடைய வாழ்க்கைகள், தேவன் விரும்புகிற மற்றும் பெற்றுக்கொள்ள பாத்திரராய் இருக்கும் மகிமையைத் திருடிவிடுகிறது.

பாவத்திற்கு மூன்று விளைவுகள் அல்லது அபராதங்கள் உள்ளன:

1. உள்ளான மரணம், நம்முடைய ஆவியில்
2. நம்முடைய சரீரங்களின் மரணம்
3. தேவனிடமிருந்து என்றென்றும் பிரிந்து இருளான ஓர் ஸ்தலத்தில் பூட்டப்பட்டு, சித்திரவதை செய்யப்படுதல்

நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கவேஇயேசு வந்தார். இயேசுதாமே பாவம் செய்யவில்லை. ஆனால் நம்முடைய பாவங்களை அவர் தம்மேல் ஏற்றுக்கொண்டார். அவர் நம்முடைய ஸ்தானத்தில் மரித்து, மீண்டும் உயிரோடு எழுந்தார். நாம் மன்னிக்கப்பட்டு அவரோடு என்றென்றைக்கும் வாழ இயேசு இதைச் செய்தார்.

மனப்பாட பகுதி: ரோமர் 6:23

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

அ. பாவமும் அதின் விளைவுகளும்

1. எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் யார்? (வெளி 4:11)..
....
2. தேவன் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கும் மூன்று காரியங்களை எழுதுக. (வெளி. 4:11) (1) ....
(2).. (3)...
3. எத்தனை மக்கள் பாவம் செய்திருக்கிறார்கள்? (ரோமர் 3:23).
....
4. மனிதர் செய்த முதல் இரண்டு பாவங்கள் என்ன? (ரோமர் 1:21)
(1) ....
(2) ....
5. இதன் விளைவுகள் என்ன? (ரோமர் 1:21)
(1) மனிதனுடைய மனதில்? ....
(2) மனிதனுடைய இருதயத்தில்? ....
6. மனித இருதயத்தைக்குறித்து இரண்டு உண்மைகளை எழுதுக. (எரே. 17:9) (1) ....
(2) ....
7. மனித இருதயத்தைக்குறித்து உண்மையை யார் அறிவார்? (எரே. 17:10) (லூக்கா 16:15) ....
....
8. மனித இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் 13 பொல்லாத காரியங்களை எழுதுக. (மாற்கு 7:21-22) (1) ....
(2).. (3)...
(4).. (5)...
(6).. (7)...
(8).. (9)...
(10).. (11)...
(12).. (13)...
9. நன்னை செய்ய அறிந்திருந்தும், செய்யாதே போனால், அதை தேவன் என்னவென்று அழைக்கிறார்? (யாக். 4:17) ....
....

10. பாவமில்லை என்போமானால், நமக்கு நாமே என்ன செய்துகொள்ளுகிறோம் ? (1 யோவான் 1:8) ....

....

11. நாம் பாவம் செய்யவில்லை என்று சொன்னால் தேவனுக்கு என்ன செய்கிறோம் ? (1 யோவான் 1:10) ....

....

12. எல்லா மனிதர் மேலும் பாவம் என்ன பலனைக்கொண்டுவந்துள்ளது ? (ரோமர் 5:12, 6:23) (யாக். 1:15)

....

13. பாவங்களிலிருந்து மனந்திரும்பாத* யாவருடைய இறுதியான முடிவு என்ன ? (மத். 25:41) (வெளி. 20:12-15) ....

....

14. அக்கினி கடலில் தள்ளப்படக்கூடிய எட்டுவிதமான மக்கள் யார் என்று குறிப்பிடுக. (வெளி. 21:8)

(1)... (2)...

(3)... (4)...

(5)... (6)...

(7)... (8)...

ஆ. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நோக்கம்

15. இயேசு என்ன நோக்கத்துக்காக உலகத்தில் வந்தார் ? (1 தீமோ. 1:15)

....

16. இயேசு யாரை அழைத்தார், யாரை ஏற்றுக்கொண்டார் ? (மத்.9:13) (லூக்கா 15:2) ....

....

17. இயேசு தாமே எந்தப் பாவத்தையும் செய்தாரா ? (எபி. 4:15. 1 பேது. 2:22)..

18. இயேசு நமக்காக சிலுவையில் சுமந்தது என்ன ? (1 பேது. 2:24)

....

19. இயேசு என்ன நோக்கத்துக்காக சிலுவையில் மரித்தார் ? (1 பேது. 3:18) ....

....

20. இயேசுவைப் பற்றி எந்த மூன்று உண்மைகளைப் பவுல் சுவிசேஷமாக போதித்தார்? (1 கொரி 15:3-4)

(1) ....

(2) ....

(3) ....

21. இயேசு இப்போது என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார் என்பதைக்காணும்போது, தம்மிடத்தில் வருகிறவர்களுக்கு அவர் என்ன செய்யக்கூடியவராய் இருக்கிறார்? (எபி. 7:25) ....

....

22. இப்போது எல்லா மனிதருக்கும் இயேசுவின் நாமத்தில் அளிக்கப்படும் மூன்று காரியங்களைக்குறிப்பிடுக. (லூக். 24:47) (அப்.4:12)

(1) ....

(2) ....

(3) ....

மனப்பாட வசனம்: ரோமர் 6:23

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் இரண்டு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	தேவன் (கர்த்தர்)	1
2.	(1) மகிமை	1
	(2) கனம்	1
	(3) வல்லமை	1
3.	எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றயவர்களானார்கள்	1
4.	(1) அவர்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை*	1
	(2) அவருக்கு ஸ்தோத்திரம் (நன்றி) செலுத்தவில்லை	1
5.	(1) அவர்கள் சிந்தையிலே வீணரானார்கள் (உண்மையற்றவர்கள்)	1
	(2) அவர்களுடைய இருதயம் இருளடைந்தது	1
6.	(1) எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளது	1
	(2) மகா கேடுள்ளது	1
7.	(தேவன்) கர்த்தர்	2
8.	(1) பொல்லாத சிந்தைகள் (2) விபசாரங்கள்	2
	(3) வேசித்தனங்கள் (4) கொலைபாதகங்கள்	2
	(5) களவுகள் (6) பொருளாசைகள்	2
	(7) துஷ்டத்தனங்கள் (8) கபடு	2
	(9) காமவிகாரம் (10) வண்கண்	2
	(11) தூஷணம் (12) பெருமை	2
	(13) மதிகேடு	1
9.	தேவன் அதை "பாவம்" என்று அழைக்கிறார்	1
10.	நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாவோம்	1
11.	நாம் தேவனைப் பொய்யராக்குகிறோம்	1
12.	மரணம்	1
13.	நித்திய அக்கினி, அக்கினி கடல், இரண்டாம் மரணம்	1
14.	(1) பயப்படுகிறவர்கள் (2) அவிசுவாசிகள்	2

	(3) அருவருப்பானவர்கள் (4) கொலைபாதகர் (5) விபச்சாரக்காரர் (6) சூனியக்காரர் (7) விக்கிரகாராதனைக்காரர் (8) பொய்யர்	2 2 2
15.	பாவிகளை இரட்சிக்க	1
16.	இயேசு பாவிகளை அழைத்து, ஏற்றுக்கொண்டார்	1
17.	இல்லை, ஒன்றுகூட செய்யவில்லை	1
18.	நம்முடைய பாவங்களை	1
19.	நம்மைத் தேவனிடம் கொண்டுவர	1
20.	(1) இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (2) அவர் அடக்கம்பண்ணப்பட்டார் (3) மூன்றாம் நாளில் மீண்டும் உயிரோடு எழுந்தார்	1 1 1
21.	முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்	1
22.	(1) மனந்திரும்புதல்* (2) பாவ மன்னிப்பு* (3) இரட்சிப்பு*	1 1 1
	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	4
	மொத்தம்	54

27 மதிப்பெண்கள் = 50%
38 மதிப்பெண்கள் = 70%
39 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் இரண்டு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-4 தேவன் கொடுத்த பொறுப்பை நிறைவேற்ற தவறியதே, மனிதனுடைய பாவமாகும். மனிதன் தேவனை மகிமைப்படுத்தவே* உருவாக்கப்பட்டான். ''மனிதன், தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான்" (1 கொரி.11:7). தேவனை மகிமைப்படுத்த* தவறும் எந்தக்காரியமும் பாவமே.

3 "எல்லாரும் . . . தேவனுடைய மகிமையற்றவர்களானோம்." இதற்கு என்ன அர்த்தம்? ஒரு இலக்கின் மீது இடப்பட்டுள்ள குறியை நோக்கி அம்பு எய்வதை கண்முன் நிறுத்துங்கள். அம்பு அதை எட்டாமல் முன்பே தரையில் விழுந்து விடுகிறது. மனிதனுக்கிருக்கும் "குறி", "தேவனுடைய மகிமைக்கேற்ப" வாழ்க்கையை வாழ்வதாகும். ஆனால், எல்லோருமே அந்தக்குறியைத் தவறவிட்டார்கள் என்று வேதம் சொல்லுகிறது. (பிலி. 3:14ஐ திருப்பிப் பார்க்கவும்).

6-8 இந்த வசனங்களெல்லாம் "இருதயத்தை" குறித்துப் பேசுகின்றன. எல்லா மனிதருக்குள்ளும் இருப்பது என்ன என்பதை காண்பிக்கின்றன. "எல்லா மனிதரும்" என்பது எல்லாரையும் குறிக்கும், எல்லா மனித இருதயங்களையும் குறிக்கும்.

8 இப்பாவங்களெல்லாம் எல்லா மனிதராலும் செய்யப்படுவதில்லை. ஆனாலும் அனைத்துப் பாவங்களின் வித்துக்களும் எல்லா மனித இருதயங்களிலும் காணப்படுகின்றன. இவ்வித்துக்கள் வளர்ந்து ஓர் நபருடைய வாழ்க்கையில் பாவமாக மாறுமா என்பதை இரண்டு காரியங்கள் ஒருமிக்க கிரியை செய்து தீர்மானிக்கின்றன: (1) ஓர் நபருடைய ஒழுக்க சுபாவத்தின் எல்லைகள், மற்றும் (2) ஓர் நபருடைய வாழ்க்கையிலுள்ள மக்கள் மற்றும் இடங்கள்.

9 தேவனால் தடை செய்யப்பட்ட எந்தக்காரியத்தையும் செய்யும்போது நாம் பாவம் செய்கிறோம். தேவன் கட்டளையிடும் யாதொன்றையும் விட்டுவிடும்போது அல்லது செய்ய மறுக்கும்போதும் நாம் பாவம் செய்கிறோம். நன்மையானது மற்றும் சரியானதைச் செய்யாமல் போகும் போதும் நாம் குற்றவாளிகளாயிருக்கிறோம். மத். 25:3, 25, 45ஐ படித்துப் பாருங்கள். அவர்கள் எல்லாரும் செய்ய தவறினவைகளுக்காக தான் கண்டனம் செய்யப்பட்டார்கள். அவர்கள் தான் புத்தியில்லாத

கன்னிகைகள், உண்மையற்ற உக்கிராணத்துவக்காரன், மற்றும் "வெள்ளாடு" தேசங்கள்.

13 இரண்டு வித்தியாசமான இடங்களுண்டு: (1) நரகம் (*ஷீயோல்* அல்லது *ஹேடீஸ்* என்று அழைக்கப்படுகிறது) உயிர்த்தெழுதலுக்கும்,* நியாயத்தீர்ப்புக்கும்* பின் தண்டனையடையும் இடமாக இருக்கிறது (வெளி. 20:12-15). பொல்லாத மக்களுக்கும், விழுந்து போன தூதர்களுக்கும், அக்கினி கடல் முடிவில்லாத சித்திரவதையின் இறுதியான ஸ்தலமாக இருக்கிறது.

14 பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுகிறார்கள். பக்தியுள்ளவர்கள் போல் தோற்றமளிக்கும் இன்னும் எத்தனை பேர் இந்த வகைகளில் சேர்க்கப்படுவார்கள் ?

18 சில காலத்துக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தின் பலிகளால், பாவம் "மூடப்பட்டது". (எபி. 10:1-4) ஆனால் இயேசுவின் மரணத்தினால், பாவம் என்றென்றைக்கும் நீக்கப்பட்டது. (எபி. 10:11-18ஐ பார்க்கவும்.)

19 மன்னிக்கப்படாத பாவம் தேவனையும் மனிதனையும் பிரிக்கின்றது (ஏசா. 59:2). இயேசுவால், சிலுவையில் பாவம் நீக்கப்பட்டது. அதன் பின், தேவனிடம் மீண்டும் வருவதற்கான வழி மனிதனுக்குத் திறக்கப்பட்டது. இன்னும் தடை ஏதும் இருக்குமாயின், அது மனிதனுடைய சார்பில்தான் இருக்க முடியும், தேவனுடைய சார்பில் அல்ல.

20 விசுவாசம் உண்மைகளின் மேல் கட்டப்பட்டுள்ளது. சுவிசேஷம் அல்லது நற்செய்தி, சரித்திரத்தில் நடந்த மூன்று எளிய உண்மைகளின் மேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

21 "முற்றுமுடிய" (எபி. 7:25) என்றால் "முழுமையாக" என்று அர்த்தமாகும். இன்றைக்கு என்றென்றைக்கும், ஒவ்வொரு பாவியின் எல்லா தேவையையும் இது உட்படுத்துகிறது. காலத்தின் முடிவு வரையும், நித்தியத்துக்குள்ளும்* இயேசு எல்லாருக்கும் போதுமானதற்கும் அதிகமாகவேஇருக்கிறார்.

பாடம் மூன்று

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் [பகுதி 2]

முன்னுரை:

இயேசு கிறிஸ்துவிலுள்ள நம்முடைய விசுவாசத்தினாலே*, தேவன் இப்போது நமக்கு இரட்சிப்பை* அளிக்கிறார். இயேசுவில் வைக்கும் விசுவாசத்தினால்* நாம் இரட்சிக்கப்படுகிறோம், எந்த மதத்தினாலோ, நற்கிரியைகளினாலோ அல்ல.

தேவன் வழங்கும் இரட்சிப்பை* ஏற்றுக்கொள்ள, நாம் நான்கு காரியங்களைச் செய்ய வேண்டும்:

1. நம்முடைய பாவங்களை வெளியரங்கமாக ஒப்புக்கொண்டு மனந்திரும்ப* (பாவத்தை விட்டுத் திரும்ப) வேண்டும்.
2. இயேசு நம் ஒவ்வொருக்காகவும் மரித்து, மீண்டும் உயிரோடு எழுந்தார் என்று விசுவாசிக்க வேண்டும்.
3. விசுவாசத்தினால்* உயிரோடு எழுந்த கிறிஸ்துவைநம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. நம்முடைய ஆண்டவராக அவரை வெளியரங்கமாக அறிக்கையிட* வேண்டும். (இயேசுவே ஆண்டவர் என்பதை மற்றவர்களுக்கு வெளிப்படையாக கூறுதல்).

இவ்விதமாய் நாம் இயேசுவைப்பெற்றுக்கொள்ளும்போது, நடப்பது இதுதான்:

- நம்முடைய இருதயங்களில் அவர் என்றென்றைக்கும் வாழும்படி வருகிறார்.
- நமக்கு நித்திய* ஜீவனை அளிக்கிறார்
- நீதியான* வாழ்க்கை வாழ அவர் நமக்கு வல்லமையைஅளிக்கின்றார்
- பாவத்தின் மீது நமக்கு வெற்றியளிக்கிறார்

மனப்பாட பகுதி: யோவான் 1:12-13

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

இ. இரட்சிப்பை* நாம் பெற்றுக்கொள்ளுவது எப்படி ?.

23. இரட்சிப்பை* நாம் எப்போது தேட வேண்டும் ? (2 கொரி. 6:2) (நீதி. 27:1)..........

24. நற்கிரியைகளினாலே நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியுமா ? (எபே.2:8-9) (தீத்து 3:5)..........

25. நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதினால் நாம் இரட்சிக்கப்பட கூடுமா ? (ரோம. 3:20)..........

....

26. தேவனுடைய இரக்கத்தை நாம் வாஞ்சித்தால், நாம் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்ன ? (நீதி. 28:13)

(1).......... (2)..........

27. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் தேவன் நமக்கு செய்யும் இரண்டு காரியங்கள் என்ன ? (1 யோவா.1:9)

(1)..........

(2)..........

28. நம்முடைய இருதயங்களைப் பாவமற சுத்திகரிப்பதற்குத் தேவன் பயன்படுத்தும் வழிமுறை என்ன ? (1 யோவா.1:7)..........

....

29. நாம் இரட்சிக்கப்பட விரும்பினால், எந்த இரண்டு காரியங்களை நாம் செய்ய வேண்டும் ? (ரோமர் 10:9-10)

(1) நம்முடைய இருதயங்களினால் ?..........

(2) நம்முடைய வாயினால் ?..........

30. நாம் இயேசுவிடம் வந்தால், நம்மைத் தள்ளிவிடுவாரா ? (யோவான் 6:37)..........

31. இயேசுவைஏற்றுக்கொள்ள நம்முடைய இருதயங்களைத் திறந்தால், என்ன வாக்குத்தத்தத்தை நமக்குக்கொடுத்திருக்கிறார் ? (வெளி. 3:20)..........

32. இயேசுவைநாம் ஏற்றுக்கொண்டால் அவர் நமக்கு என்ன கொடுக்கிறார் ? (யோவான் 1:12)..........

....

33. இதன் விளைவாக என்ன அனுபவத்தை நாம் பெறுகிறோம் ? (யோவான் 1:13) (யோவான் 3:3)..........

34. நாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது அவர் மூலமாய் தேவன் நமக்கு என்ன கொடுக்கிறார்? (ரோமர் 6:23)

....

35. நித்திய* ஜீவன் நமக்குண்டென்று அறிந்துகொள்ளுவது சாத்தியமா? (1 யோவான் 5:13)..

36. இயேசுவைப் பற்றி தேவன் நமக்களிக்கும் சாட்சி என்ன? (1 யோவான் 5:11)..

....

37. நாம் தேவனுடைய குமாரனாகிய இயேசுவைப் பெற்றிருந்தால் நமக்கு என்ன உண்டு? (1 யோவான் 5:12-13)..

....

ஈ. உலகத்தையும் பிசாசையும் மேற்கொள்ள, இரட்சிப்பு* வல்லமையளிக்கின்றது

38. இயேசுவை நாம் ஏற்றுக்கொண்டவுடன், விசுவாசத்தினால்* யார் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறார்? (கலா.2:20) (எபே. 3:17)..

39. இயேசு நமக்களிக்கும் பெலனால் நாம் என்ன செய்ய முடியும்? (பிலி. 4:13)..

....

40. மனிதருக்கு முன்பாக நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டாலோ, அறிக்கையிட்டாலோ*, அவர் நமக்கு என்ன செய்வார்? (மத். 10:32)

....

....

41. இயேசுவை மனிதருக்கு முன்பாக மறுதலித்தால், அவர் என்ன செய்வார்? (மத். 10:33) ....

....

42. உலகத்தையும் அதின் சோதனைகளையும் எப்படிப்பட்ட நபர் மேற்கொள்ள கூடியவராக இருக்கிறார்?

(1) (1 யோவான் 5:4)...

....

(2) (1 யோவான் 5:5)...

....

43. தேவனுடைய பிள்ளைகள் ஏன் உலகத்தை மேற்கொள்ள கூடியவர்களாக இருக்கிறார்கள்? (1 யோவான் 4:4). ....

....

44. எந்த இரண்டு காரியங்களால் தேவனுடைய ஜனங்கள் பிசாசை மேற்கொள்ளுகிறார்கள்? (வெளி. 12:11)

(1) ....

(2) ....

45. பரலோகத்தில் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ள, தேவன் யாருக்கு வாக்களித்துள்ளார்? (வெளி. 21:7)..

....

மனப்பாட பகுதி: யோவான் 1:12-13

இந்த வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் மூன்று

கேள்வி	விடை	மதிப்பெண்
23.	இப்போது, இன்றைக்கு	1
24.	இல்லை.	1
25.	இல்லை	1
26.	(1) நம்முடைய பாவங்களை அறிக்கையிட* வேண்டும்	1
	(2) நம்முடைய பாவங்களை விட்டுவிட வேண்டும்	1
27.	(1) நம்முடைய பாவங்களை மன்னிப்பார்	1
	(2) எல்லா அநீதியிலிருந்தும் நம்மைச் சுத்திகரிப்பார் (பொல்லாத மற்றும் ஒழுக்கமற்ற வழிகள்)	1
28.	தேவனுடைய குமாரனாகிய, இயேசுகிறிஸ்துவின் இரத்தம்	1
29.	(1) தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று விசுவாசிக்க வேண்டும்	1
	(2) இயேசுவை ஆண்டவரென்று அறிக்கையிட* வேண்டும்.	1
30.	இல்லை.	1
31.	"நான் உள்ளே வருவேன்"	1
32.	தேவனுடைய பிள்ளைகளாகும்படியான உரிமை	1
33.	தேவனால் பிறக்கின்றோம் (மறுபிறப்பு அடைகின்றோம்)	1
34.	நித்திய* ஜீவன்	1
35.	ஆம் (யோவான் அதற்காகவே எழுதினார்)	1
36.	இயேசு கிறிஸ்துவில் தேவன் நமக்கு நித்திய* ஜீவனை அளித்துள்ளார்.	2
37.	நித்திய* ஜீவன்	1
38.	கிறிஸ்து இயேசு நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறார்	1
39.	எல்லாவற்றையும்	1

40.	அவர் நம்மை பரலோகத்திருக்கும் பிதாவுக்கு முன்பாக அறிக்கையிடுவார்*	1
41.	பரலோகத்திலிருக்கும் பிதாவுக்கு முன்பாக நம்மை மறுதலிப்பார்	1
42.	(1) தேவனால் பிறந்தவன் (அவன் விசுவாசத்தின்* மூலம்) (2) இயேசு தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவன்	1 1
43.	ஏனென்றால் அவர்களுக்குள் இருக்கிறவர் (தேவன்) உலகத்திலுள்ளவனிலும் (பிசாசு) பெரியவராயிருக்கிறார்	2
44.	(1) ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலே (கிறிஸ்து இயேசு) (2) சாட்சியின்* வசனத்தினாலே	1 1
45.	ஜெயம் கொள்ளுகிறவனை	1
	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு வசனத்திலும், ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	8
	மொத்தம்	38

19 மதிப்பெண்கள் = 50%

27 மதிப்பெண்கள் = 70%

30 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் மூன்று

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

24-25. தன்னை நீதிமானாக்குவதற்கு* மனிதனுடைய எல்லா முயற்சியையும் வேதம் நிராகரிக்கிறது. தேவனுடைய கிருபையில்லாமல் மனிதன் இரட்சிக்கப்பட முடியாது. அந்த இரட்சிக்கும் கிருபை கிறிஸ்து இயேசுவில் வைக்கும் விசுவாசத்தினால் கிடைக்கிறது.

25. மனிதனை நீதிமானாக்க* நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. மனிதன் பாவியென்றும், தன்னையே இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை காண்பிக்கவுமே, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. (ரோமர் 3:20 மற்றும் ரோமர் 7:7-13ஐப் பார்க்கவும்.)

26. பாவத்தை விட்டுவிடாமல் அதை அறிக்கை* மட்டும் செய்வது, தேவனுடைய இரக்கத்தை மனிதனுக்கு பெற்றுத்தரமாட்டாது. (ஏசாயா 55:7ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.) விட்டுவிடுவது என்றால், “முற்றிலுமாய் விட்டுச் செல்வது.”

27. தேவன் பாவத்தை மன்னிக்கும் போது, அவர் பாவியின் இருதயத்தைக்கழுவி சுத்திகரிக்கிறார். பாவி ஒரு முறை கழுவி சுத்திகரிக்கப்பட்டபின், அவர் அறிக்கையிட்ட* பாவங்களில் தொடருவதில்லை.

28. தன்னுடைய பாவம் நிறைந்த இருதயத்துக்கு மனிதனிடம் தீர்வு இல்லை. கிறிஸ்து இயேசுவின் இரத்தம் மட்டுமே அதைச் சுத்திகரித்து சீர் செய்ய முடியும்.

29. (2) ‘‘இயேசுவைஆண்டவரென்று அறிக்கையிட்டால்*’’ என்பதே சரியான மொழி பெயர்ப்பாகும். (1 கொரி 12:3 மற்றும் பிலி. 2:11ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும்)

31. வெளி. 3:20இல் உள்ள இயேசுவின் வார்த்தைகள், லவோதிக்கேயாவிலுள்ள ஒர் சபைக்கு கூறப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் என்று தங்களைக்கூறினார்கள். ஆனால் கிறிஸ்து இயேசுவேசபைக்குப் புறம்பாக நின்று, உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தார். இன்றும் எத்தனை கிறிஸ்தவசபைகள் இப்படி உள்ளன? “உள்ளே வருவேன்” என்ற இயேசுவின் வாக்குத்தத்தம், தனி நபர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் செய்யப்பட்டுள்ளது. இந்த வாக்குத்தத்தம் சபை முழுவதற்கும் செய்யப்பட்டதல்ல. இயேசுவைஏற்றுக்கொள்ளுவது எப்போதும் ஓர் தனி நபரின் தீர்மானமாகும்.

32. உரிமை, அல்லது இன்னும் சரியாக சொன்னால், அதிகாரம்.

33. யோவான் 3:1-7 நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதை நமக்குக்கூறுகிறது. யோவான் 1:12-13 நாம் (தேவனால்) எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என்பதை நமக்குக்கற்றுக்கொடுக்கிறது. கிறிஸ்து இயேசுவைநம்முடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வதினாலாகும்.

34. ரோமர் 6:23இல் "ஈவை" "சம்பளத்தோடு" ஒப்பிடவும். வித்தியாசத்தை கவனியுங்கள். "சம்பளம்" = நாம் செய்த பாவங்களுக்கு நியாயமாக பெற வேண்டிய பலன்; "ஈவு" = இலவசமாக, தகுதியற்றவர்கள் மீது ஊற்றப்படும் தேவகிருபை.

38. கிறிஸ்தவ வாழ்க்கை துவங்குவதைப் போலவே, விசுவாசத்தில்* தொடருகிறது. "ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே . . . அவருக்குள் நடந்துகொண்டு . . . " (கொலோ. 2:6). நாம் இயேசுவை விசுவாசத்தினால்* ஏற்றுக்கொள்ளுகிறோம். நாம் விசுவாசத்தினால் இயேசுவில் நடக்கிறோம். (2 கொரி. 5:7).

39. சரியாக சொன்னால், பிலிப்பியர் 4:13, "எனக்குள் இருக்கும் கிறிஸ்து எனக்களிக்கும் வல்லமையினால், என்னால் எல்லாம் செய்யக்கூடும்.

40-41. இயேசு நம்முடைய ''அறிக்கையின்''* பிரதான ஆசாரியனாயிருக்கிறார்" (எபி. 3:1). அப்படியானால், இயேசு நம்முடைய பிரதான ஆசாரியனாக பணிபுரிகிறார். தம்முடைய பிதாவுக்கு முன் நம்முடைய பெயரைச் சொல்லி அவர் பரிந்து பேசுகிறார். ஆனால், நாம் அறிக்கையிடும்* வரையில் மட்டுமே இதைச் செய்கிறார். அறிக்கையில்லாவிட்டால்* நமக்காகப் பேச பிரதான ஆசாரியன் இல்லை. (எபி. 4:14 மற்றும் எபி. 10:21-23ஐ ஒப்பிடவும்) கடைசித் தருணமாக நமக்கு இரண்டு தேர்வு செய்யக்கூடிய காரியங்கள்தான் உண்டு: அறிக்கையிடுதல்* அல்லது மறுதலித்தல். இவ்விரண்டிற்கும் இடையில் வேறொன்றும் கிடையாது.

44. "ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், (நம்முடைய) சாட்சியின் வசனத்தாலும்" (வெளி. 12:11). கிறிஸ்து இயேசுவின் இரத்தம் நமக்காகச் செய்வது என்ன என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறதோ, அதற்கு நாம் தனிப்பட்ட முறையில் சாட்சியிட வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்குக்கிடைக்கும் சில பெரிய ஆசீர்வாதங்களாவன: மீட்பு* (எபே. 1:7), சுத்திகரிப்பு (1 யோவான் 1:7), நீதி* (ரோமர் 5:9), மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல்* (எபி. 13:12).

45. ரோமர் 12:21ஐ ஒப்பிடுக. இறுதியாக தேர்வு செய்யக்கூடியவை இரண்டுதான்: மேற்கொள்ளவா அல்லது மேற்கொள்ளப்படவா? மறுபடியும் இவ்விரண்டுக்கும் இடையில் வேறொரு தேர்வு இல்லை.

தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம்: எப்படி? எப்போது? ஏன்?

முன்னுரை:

“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்” (மாற்கு 16:16) என்று இயேசு கூறினார். தேவனுடைய இரட்சிப்பின்* வழி இன்னும் மாறவில்லை: முதலாவது, விசுவாசி; பின்பு, ஞானஸ்நானம் பெறு. கிறிஸ்துவைவிசுவாசிப்பது, நம்முடைய இருதயங்களில் ஓர் உள்ளான மாற்றத்தை உருவாக்குகிறது. தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவது, தேவனுக்குக்கீழ்ப்படியும் ஓர் வெளியரங்க செயலாகும். இதனால் நாம் சாட்சியிடுகிறோம். நம்முடைய இருதயங்களில் ஓர் உள்ளான மாற்றம் ஏற்பட்டிருப்பதை நாம் செயல்படுத்திக்காண்பிக்கிறோம்.

ஞானஸ்நானம், கிறிஸ்துவின் மரணத்திலும், அவருடைய உயிர்த்தெழுதலிலும்* நம்மை ஒன்றாக இணைக்கிறது. பாவம் மற்றும் தோல்வி என்னும் பழைய வாழ்க்கையிலிருந்து நாம் பிரிக்கப்படுகிறோம். நீதி* மற்றும் வெற்றியின் ஓர் புதிய வாழ்க்கை வாழ நாம் தண்ணீரிலிருந்து வெளியேறுகிறோம். நம்மிலுள்ள தேவனுடைய வல்லமையினால் இது சாத்தியமாகிறது.

இப்பாடத்திலுள்ள வசனங்கள் எப்படி, எப்போது, மற்றும் ஏன் நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை மிகக்கவனமாக விளக்குகின்றன.

மனப்பாட வசனம்: ரோமர் 6:4

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

1. இயேசு தாமே ஞானஸ்நானம் பெறுவதற்காக என்ன காரணமளித்தார்? (மத். 3:15)..........

....

....

2. இயேசுவின் ஞானஸ்நானத்தினால், தமக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை பரிசுத்த ஆவியானவர் எப்படி காண்பித்தார்? (மத். 3:16)

....

....

3. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, பிதாவாகிய தேவன் அவரைக்குறித்து என்ன சொன்னார்? (மத். 3:17)..........

....

4. ஞானஸ்நானம் பெற இயேசு தண்ணீருக்குள் இறங்கிச் சென்றாரா? (மத். 3:16)..........

5. ஓர் நபர் இரட்சிப்படைய விரும்பினால், சுவிசேஷத்தை விசுவாசித்த பின் அவன் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சொன்னார்? (மாற்கு 16:16) ....

6. ஞானஸ்நானம் பெறும் முன் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று இயேசு தம்முடைய சீஷருக்கு கூறினார்? (மத். 28:19)

....

....

7. இச்செய்தியுடன், இயேசு, சீஷரை யாரிடம் அனுப்பினார்? (மத். 28:19)

....

8. ஞானஸ்நானம் பெற்றவுடன் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்? (மத். 28:20)..........

....

9. ஞானஸ்நானம் பெறும் முன், பேதுரு மக்களை என்ன செய்யச் சொன்னார்? (அப். 2:38)..........

10. எத்தனை மக்கள் ஞானஸ்நானம் பெற வேண்டுமென பேதுரு கூறினார்? (அப். 2:38)..........

11. தேவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் என்ன செய்தார்கள்? (அப். 2:41)

....

12. பிலிப்புவின் பிரசங்கத்தை விசுவாசித்தபின், சமாரியாவின் மக்கள் என்ன செய்தார்கள் ? (அப். 8:12)..

....

13. ஞானஸ்நானம் பெறும் முன் என்ன செய்ய வேண்டுமென்று பிலிப்பு மந்திரியிடம் கூறினான் ? (அப். 8:37)..

....

14. மந்திரி எப்படி பதிலளித்தார் ? (அப். 8:37)..

....

15. ஞானஸ்நானம் பெறும்படியாக மந்திரி தண்ணீருக்குள் இறங்கிப் போனாரா ? (அப். 8:38)..

16. ஞானஸ்நானம் பெற்றவுடன் மந்திரியின் உணர்ச்சிகள் என்ன ? (அப். 8:39)..

....

17. கொர்நேலியுவும் அவனுடைய நண்பர்களும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றவுடன், அடுத்து என்ன செய்யும்படியாக பேதுரு அவர்களுக்குக்கட்டளையிட்டார் ? (அப். 10:44-48)..

....

18. பவுலினுடைய செய்தியை விசுவாசித்த பின், பிலிப்பி பட்டணத்தானாகிய சிறைச்சாலைக்காரனும் அவனுடைய குடும்பமும் என்ன செய்தார்கள் ? (அப். 16:29-33)..

....

19. பவுலினுடைய செய்தியைக்கேட்டபின் எபேசுவிலுள்ள சீஷர்கள் என்ன செய்தார்கள் ? (அப். 19:4-5)..

....

20. ஞானஸ்நானம் பெறும்போது, கிறிஸ்துவினுடைய எந்த இரண்டு அனுபவங்களை நாம் பின்பற்றுகிறோம் ? (ரோமர் 6:4) (கொலோ. 2:12)

(1)..

(2)..

21. ஞானஸ்நானம் பெற்றபின் விசுவாசிகள் எப்படி வாழ வேண்டுமென்று பவுல் கூறுகிறார் ? (ரோமர் 6:4)

....

....

22. ஞானஸ்நானம் பெற்ற பின், வெவ்வேறு ஜாதிகளிலிருந்து வரும் விசுவாசிகளுக்குள் வித்தியாசங்கள் ஏதேனும் உண்டா? (கலா. 3:26-28)

....

23. புதிய ஏற்பாட்டில், தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள எந்த இரண்டு உதாரணங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன?

(1) (1 கொரி. 10:1-2) (யாத். 14:21-22)..

....

(2) (1 பேது. 3:20-21) (ஆதி. 6-7)..

....

மனப்பாட பகுதி: ரோமர் 6:4

இந்த வசனத்தை மனப்பாடமாக எழுதவும்

....

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் நான்கு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	இப்படி எல்லா நீதியையும்* நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது	2
2.	அவர் (பரிசுத்த ஆவியானவர்) புறாவின் ரூபங்கொண்டு அவர் மேல் இறங்கினார்	2
3.	இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்	2
4.	ஆம்	1
5.	அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும்	1
6.	அவர்களைச் சீஷராக்க வேண்டும்	1
7.	எல்லா ஜாதிகளிடத்திலும்	1
8.	இயேசு கட்டளையிடும் யாவையும் செய்ய வேண்டும்; அவர் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ள வேண்டும்	2
9.	மனந்திரும்பச்* சொன்னார்	1
10.	எல்லாரும்	1
11.	அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்	1
12.	அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்	1
13.	முழு இருதயத்தோடும் விசுவாசிக்க வேண்டும்	1
14.	இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்	1
15.	ஆம்	1
16.	அவர் சந்தோஷத்தோடே தன் வழியே போனார்	1
17.	ஞானஸ்நானம் பெறும்படி கூறினார்	1
18.	ஞானஸ்நானம் பெற்றார்கள்	1
19.	ஞானஸ்நானம் பெற்றார்கள்	1

20.	(1) அவருடைய அடக்கம்	1
	(2) மரித்தோரிலிருந்து அவருடைய எழும்புதல் (உயிர்த்தெழுதல்*)	1
21.	புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டும்	2
22.	இல்லை	1
23.	(1) இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தின் வழியாய்க் கடந்து போகுதல்	2
	(2) பேழைக்குள் நோவாவும் அவருடைய குடும்பமும் பெருவெள்ளத்தைக் கடந்து போகுதல்	2
	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	4
	மொத்தம்	36

18 மதிப்பெண்கள் = 50%

25 மதிப்பெண்கள் = 70%

29 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் நான்கு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-4. யோவானின் ஞானஸ்நானம் பாவங்களை அறிக்கையிடுவதோடு* கூடிய, "மனந்திரும்புதலின் ஞானஸ்நானமாக" இருந்தது (மாற்கு 1:4-5). ஆனால் அறிக்கையிடவோ* அல்லது மனந்திரும்பவோ* இயேசுவிடம் பாவம் ஏதுமில்லை. மாறாக, ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் இயேசு தேவனுடைய சித்தத்துக்குக்கீழ்ப்படிதலைக்காண்பித்தார். இதைச் செய்வதினால், அவர் நமக்கு முன் ஓர் உதாரணத்தை வைத்தார் இயேசு ''இப்படி எல்லா நீதியையும்* நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்.3:15) என்று காரணமளித்தார்.

''இப்படி'' என்ற வார்த்தை இயேசுவின் ஞானஸ்நானத்தின் செயலைக்குறிப்பிடுகிறது: தண்ணீருக்குள் இறங்கிப் போய் - மறுபடியும் தண்ணீரை விட்டு வெளியேறுதல். "ஏற்றதாயிருக்கிறது" என்பது உண்மையான விசுவாசிகள் பின்பற்றுவதற்காக முன் வைக்கப்பட்ட அவருடைய பூரண கீழ்ப்படிதலைக்குறிக்கின்றது. "எல்லா நீதியையும்* நிறைவேற்ற" என்பது ஏற்ற காரணமளிக்கிறது: எல்லா நீதியையும்* பூரணப்படுத்த.

முதலாவது, கிறிஸ்துவில் வைக்கும் தன்னுடைய விசுவாசத்தினால்* கிறிஸ்தவன் நீதிமானாக்கப்படுகிறான்*. அதன் பின் இந்த உள்ளான விசுவாசத்தினால் உண்டாகும் நீதியை, கீழ்ப்படிதலின் ஓர் வெளியரங்க செயலினால் அவர் பூரணப்படுத்துகிறார் - ஞானஸ்நானம் பெறுதல்.

இவ்விதமாய் புரிந்துகொள்ளும்போது, ஞானஸ்நானம், தெய்வத்துவத்தின் மூன்று நபர்களுடைய அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது: பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர்.

5, 6, 9, 13. ஞானஸ்நானம் பெறும் முன், ஓர் நபர் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்: (1) ஞானஸ்நானத்தின் தன்மையும் காரணத்தையும் குறித்துப் போதிக்கப்பட வேண்டும்; (2)தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப* வேண்டும்; (3) இயேசு கிறிஸ்துவைதேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும்.

7, 10, 11, 12, 17, 18, 19. ஞானஸ்நானம் ''எல்லா ஜாதிகளுக்கும்'' உரியதென்று இயேசு தம்முடைய சீஷரிடம் கூறினார். எந்த ஜாதியும் விடப்படவில்லை. தாமதமில்லாமல், புதிய விசுவாசிகளெல்லாரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றுதான் வேதத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான தருணங்களில்,

இரட்சிக்கப்படும் நாளிலேயே இது சம்பவித்தது. இரட்சிப்படைவதற்கும் ஞானஸ்நானம் பெறுவதற்கும் இடையில் நீண்ட இடைவெளி இருந்ததில்லை. ஆதித் திருச்சபையில் பின்பற்றப்பட்ட இந்த மாதிரியை இன்றைக்கும் பின்பற்றாமல் இருப்பதற்குக்காரணங்களே இல்லை.

8, 20, 21. ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவோடு, அவருடைய அடக்கத்திலும், அவருடைய உயிர்த்தெழுதலிலும்* கிறிஸ்தவர்கள் தங்களை வெளியரங்கமாக இணைக்கின்றார்கள். ஞானஸ்நானத்துக்குப் பின் அவர்கள் புதிதான நீதியின்* வாழ்க்கை வாழும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் கிருபையினாலும், வல்லமையினாலும் புது ஜீவன் சாத்தியமாகிறது.

23. (1) 1 கொரி. 10:1-2 தேவனுடைய ஜனத்துக்கு இரட்டிப்பான ஞானஸ்நானத்தைக்குறிக்கின்றது: ''மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும்.'' ''மேகத்தினால்'' ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக்குறிக்கின்றது. "சமுத்திரத்தினால்" தண்ணீர் ஞானஸ்நானத்தைக்குறிக்கின்றது.

(2) விசுவாசத்தினால்*, நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தது (கிறிஸ்து). பின்பு, பேழையில், அவர்கள் பெருவெள்ளத்தின் தண்ணீரைக்கடந்தார்கள் (ஞானஸ்நானம்). இப்படியாக அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து* காக்கப்பட்டார்கள். அவர்கள் பழைய, தேவனற்ற உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, முற்றிலும் புதிதான ஓர் வாழ்க்கைக்குள் வழிநடத்தப்பட்டார்கள்.

பாடம் ஐந்து

பரிசுத்த ஆவியானவர்

முன்னுரை:

இயேசு, பூமியில் தன்னுடைய அன்றாட ஊழியத்தில், பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருந்தார்.

யோர்தான் நதியில், அவர் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அதற்கு முன், இயேசு எந்த ஓர் பிரசங்கத்தையோ, அற்புதத்தையோ செய்யவேயில்லை. அதற்குப் பின் அவர் செய்ததெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நடந்தது. இயேசு பரலோகத்துக்குப் போகும் முன் தன்னுடைய சீஷர்களிடம் ஓர் வாக்குக்கொடுத்தார். பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரை அனுப்ப வாக்களித்தார். அவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கும்படி இதைச் செய்தார். பெந்தெகொஸ்தே நாளன்று அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றபோது இது நிறைவேறினது. பரிசுத்த ஆவியானவர் அவர்கள் துணையாளராயிருந்து, அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகள் அனைத்தையும் சந்தித்தார்.

மனப்பாட பகுதி: அப்.2:38-39

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

1. பிதாவாகிய தேவன், இயேசுவைத் தன்னுடைய பூலோக ஊழியத்துக்காக, எதினால் அபிஷேகம் செய்தார்? (அப். 10:38)

....

2. இயேசு மீது, என்ன இறங்கி வந்ததை யோவான் ஸ்நானகன் கண்டார்? (யோவான் 1:32-33)...

....

3. தேவையுள்ளவர்களுக்குப் பிரசங்கிக்கவும், ஊழியம் செய்யவும், தன் மீது என்ன இருந்ததாக இயேசு கூறினார்? (லூக்கா 4:18)

....

....

4. பிசாசுகளை எந்த வல்லமையினால் துரத்துவதாக இயேசு கூறினார்? (மத். 12:28)...

5. பரலோகத்துக்குத் திரும்பி போனவுடன், பிதாவிடமிருந்து, சீஷர்களுக்கு யாரை அனுப்புவதாக இயேசு கூறினார்? (யோவான் 14:16. 26; 15:26)

....

6. துணையாளரை விவரிக்க வேறெந்த பதத்தை இயேசு பயன்படுத்தினார்? (யோவான் 14:17; 15:26)..

....

7. சீஷர்களுக்காக பரிசுத்த ஆவியானவர் என்ன 2 காரியங்களைச் செய்வார் என்று இயேசு கூறினார்? (யோவான் 14:26)

(1)...

(2)...

8. வேறெந்த விதத்தில் பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு உதவி செய்வார் என்று இயேசு கூறினார்? (யோவன் 16:13) ....

....

9. பரிசுத்த ஆவியானவர், இயேசுவை சீஷர்களுக்கு வெளிப்படுத்தும் 2 முறைகள் யாவை?

(1) (யோவான் 15:26)...

(2) (யோவான் 16:14)...

10. எருசலேமிலே தனக்கு சாட்சிகளாவதற்கு சீஷர்கள் எப்போது வல்லமையைப் பெறுவார்கள் என, இயேசு கூறினார்? (அப். 1:8)

....

....

11. இயேசு அவர்களுக்காக என்ன செய்வார் என்று யோவான் ஸ்நானகன் மக்களிடம் கூறினார்? (மாற்கு 1:8)

....

....

12. பரலோகத்துக்கு ஏறிப் போவதற்கு சற்று முன் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு என்ன வாக்குக்கொடுத்தார்? (அப். 1:4)

....

13. இவ்வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சீஷர்களிடம் கூறினார்? (லூக்கா 24:49)

....

....

14. இயேசுவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே, பரிசுத்த ஆவியானவர் எந்த நாளில் சீஷரிடம் வந்தார்? (அப். 2:1-4)

....

15. இயேசுவின் பூலோக ஊழியத்தின் போதே பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு ஏன் அருளப்பட முடியாமல் இருந்தது? (யோவான் 7:39)

....

16. தேவனுடைய வலது பாரிசத்தில், தம்முடைய மகிமையின் ஸ்தானத்துக்கு இயேசு திரும்பினபோது, பிதாவிடமிருந்து எதைப் பெற்றுக்கொண்டார்? (அப். 2:33)...

....

17. இயேசு தம்முடைய சீஷர்கள் மீது பரிசுத்த ஆவியானவரை ஊற்றினார் என்று கூடியிருந்த அவிசுவாசிகள் எப்படி அறிந்துகொள்ள முடிந்தது? (அப். 2:33)...

....

18. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சீஷர்கள் என்ன செய்கிறதை, அவிசுவாசிகள் கேட்டார்கள்? (அப். 2:7-11)

....

....

19. இந்த யுகத்தின் முடிவில் யார் மீது தம்முடைய ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் வாக்குக்கொடுக்கிறார்? (அப். 2:17)

....

....

20. யாருக்கெல்லாம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியின் ஈவு அருளப்படும் என்று பேதுரு கூறுகிறார், (அப். 2:39).

....

....

....

21. பிதாவாகிய தேவன் தம்மிடம் கேட்கின்ற, தம்முடைய பிள்ளைகளுக்கு எந்த நல்ல ஈவைக்கொடுப்பார்? (லூக்கா 11:13)

....

....

மனப்பாட பகுதி: அப். 2:38-39

இவ்வசனங்களை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் ஐந்து

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும்	1
2.	புறாவின் வடிவில், (பரிசுத்த) ஆவியானவர்	1
3.	தேவனுடைய ஆவி	1
4.	தேவனுடைய ஆவியினாலே	1
5.	தேற்றரவாளன் (பரிசுத்த ஆவியானவர்)	1
6.	சத்திய ஆவியானவர்	2
7.	(1) எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார் (2) நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்	1 2
8.	சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்	1
9.	(1) அவர் என்னை (இயேசு) குறித்துச் சாட்சி கொடுப்பார் (2) என்னை (இயேசு) மகிமைப்படுத்துவார்*	1 1
10.	பரிசுத்த ஆவியானவர் உங்கள் மீது வரும்போது	1
11.	பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்	1
12.	நீங்கள் சில நாளைக்குள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்	2
13.	உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்	2
14.	பெந்தெகொஸ்தே நாளன்று (ஷபு-ஓத் என்று எபிரெயத்தில் அழைக்கப்படும்)	1
15.	ஏனென்றால் இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தார்*	1
16.	வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர்	1

17.	அவர்கள் கண்டார்கள், கேட்டார்கள்	1
18.	அவிசுவாசிகள் எந்தெந்த தேசங்களிலிருந்து வந்திருந்தார்களோ, அந்த தேசங்களின் பாஷைகளை சீஷர்கள் பேச கேட்டார்கள்	2
19.	எல்லா மாம்சத்தின் மேலும் (எல்லா மக்கள்)	1
20.	உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது	3
21.	பரிசுத்த ஆவி	1
	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு வசனத்திலும், ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	8
	மொத்தம்	38

19 மதிப்பெண்கள் = 50%

27 மதிப்பெண்கள் = 70%

30 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் ஐந்து

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-5. கிறிஸ்து என்கிற வார்த்தை "அபிஷேகம்பண்ணப்பட்ட" என்ற அர்த்தமுள்ள ஓர் கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. மேசியா என்கிற எபிரெய வார்த்தையின் அர்த்தமே இதற்கு உள்ளது. பரலோகத்திலிருக்கும் பரிசுத்த ஆவியானவர் அவர் மேல் இறங்கினபோது, இயேசு அபிஷேகம்பண்ணப்பட்ட மேசியாவானார். யோர்தான் நதியில், யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்றவுடன் இது நடந்தது. "கிறிஸ்து" அல்லது "மேசியா" என்கிற பட்டம், இயேசுவின் பூலோக ஊழியம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் சாத்தியமானது என்பதைக்காண்பிக்கிறது. எல்லா கிறிஸ்தவர்களும் இதே அபிஷேகத்தைப் பெற தேவன் வாஞ்சிக்கிறார். "உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே" (2 கொரி. 1:21). "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம், உங்களில் நிலைத்திருக்கிறது" (1 யோவான் 2:27).

கிறிஸ்தவர்கள் உண்மையிலேயே "அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்". உண்மையான சீஷர்களாயிருக்க, கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியைச் சார்ந்திருக்க வேண்டும். இயேசு தாமே பரிசுத்த ஆவியைச் சார்ந்திருந்தார். இயேசுவே நமக்கு வழியைக்காட்டினார்.

5-6. பரிசுத்த ஆவியானவருக்குப் பயன்படுத்தப்படும் இன்னொரு வார்த்தை, "வழக்கறிஞர்" என்பதாகும். வழக்கறிஞர் என்பவர், இன்னொருவருக்காக ஓர் வழக்கை வாதாடுகிறவராவார், ஒரு வக்கீல். 1 யோவான் 2:1ல் இதே வார்த்தைதான் இயேசுவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. விசுவாசிக்காக, பரலோகத்தில் இயேசு வழக்காடுகிறார். புவியில், கிறிஸ்து இயேசுவுக்காக, (அவருடைய நோக்கங்கள் நிறைவேற) விசுவாசியின் மூலம், பரிசுத்த ஆவியானவர் வழக்காடுகிறார். (மத். 10:19-20ஐ பார்க்கவும்.)

6-9 யோவான் 16:7இல் இயேசு, "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." இயேசு பரலோகத்துக்குத் திரும்பினபோது, அவர் சீஷர்கள் மீது பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். உடனே அவர்கள் இயேசுவை குறித்த ஓர் மேன்மையான

அறிவையும், புரிந்துகொள்ளுதலையும் பெற்றார்கள். பூலோகத்தில் தங்களோடு இயேசு இருந்த நாட்களில், அவரைப் புரிந்துகொண்டதைவிட, நன்கு புரிந்துகொண்டார்கள். இப்படியாக பரிசுத்த ஆவியானவர் தமது ஊழியத்தை நிறைவேற்றினார். பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் ஆள்தத்துவம், வேலை மற்றும் செய்தியை, வெளிப்படுத்தி, விளக்கிக்காண்பித்து, மகிமைப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளார். இன்றும் அவர் நமக்குச் செய்யும் ஊழியம் இதுவே.

11 நான்கு சுவிசேஷங்களின் ஆரம்பத்தில், யோவான் ஸ்நானகன் இயேசுவை ''பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுபவர்'' எனக்குறிப்பிடுகிறார். புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் ஊழியத்தின் இப்பகுதிக்கு மிக அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கிறது. கிறிஸ்தவ சபையும் இதையே செய்ய வேண்டும்.

12-13 பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தத்தோடு துவங்குவது போலவே, சுவிசேஷங்கள் நிறைவு பெறுகின்றன.

15-16 சிலுவையில் தம்முடைய மரணத்தினால், இயேசு பரிசுத்த ஆவியானவரின் ஈவை ஒவ்வொரு விசுவாசிக்காகவும் கிரயம் செலுத்தி பெற்றுக்கொண்டார். (கலா. 3:13-14ஐ பார்க்கவும்.) அவருடைய உயிர்த்தெழுதல்* மற்றம் பரமேறுதலுக்கு* பின் இப்பரிசை பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டு, சீஷர்களுக்கு ஓர் பரிசாக அளிக்கும் விசேஷ பாக்கியத்தை இயேசு பெற்றார்.

17-18 புதிய ஏற்பாடு முழுவதிலும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம், அந்நிய பாஷைகளில் பேசும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதாரத்தினால் உறுதிப்படுத்தப்படுகிறது.

18-21 இந்த யுகத்தின் முடிவில், எல்லா மக்கள் மீதும் கடைசியாக ஒரு முறை பரிசுத்த ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் வாக்களித்துள்ளார். ஒவ்வொரு கிறிஸ்தவனும், இப்பரிசை வேதத்தின் அடிப்படையில் கேட்டுப்பெற்றுக்கொள்ள உரிமையுடையவனாய் இருக்கிறான்.

பாடம் ஆறு

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் விளைவுகள்

முன்னுரை

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பரலோகத்திலிருந்து உண்டாகும் ஓர் ஈவாகும். இந்த ஈவைப் பெற்றுக்கொள்ளும் விசுவாசி, சாட்சியளிக்கவும், இயேசுவின் சீஷனாக ஊழியம் செய்யவும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பெற்றுக்கொள்ளுகிறான். இந்த ஈவைப் பெறும் விசுவாசிகள், தாங்களே அறியாத ஓர் பாஷையில் பேசும் அல்லது ஜெபிக்கும் ஆற்றலினால் வேறு பிரிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர். இந்த முத்திரை – அல்லது ஈவு – பரிசுத்த ஆவியினால் அருளப்படுகிறது. அதனால்தான், "பரிசுத்த ஆவியில் ஜெபம் பண்ணுவது" என்று வேதம் இதை அழைக்கிறது (அப்.2:4). புதிய ஏற்பாட்டு சபையில், இந்த அனுபவம் எல்லா விசுவாசிகளுக்கும் இயல்பாக கருதப்பட்டது.

இப்பாஷையில் ஜெபம்பண்ணுவதால், கிறிஸ்தவன் தன் சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையைக்கட்டி எழுப்புகிறான். தேவனோடு நேரடியான மற்றும் தொடர்ச்சியான ஐக்கியத்திலும் தன்னை வைத்துக்கொள்ளுகிறான். விசுவாசியின் வாழ்க்கையில் ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் செயல்பட ஓர் பரலோக வாசலை இது திறந்து விடுகிறது.

மனப்பாட பகுதி: அப். 2:17-18

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

1. பெந்தெகொஸ்தே (எபிரெயத்தில் ஷபு-ஓத் என்று அழைக்கப்படும்) நாளன்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட போது சீஷர்களுக்கு என்ன நடந்தது ? (அப். 2:4)..

....

2. இயேசுவை மேசியாவாக விசுவாசிக்க வேண்டுமென்று சமாரியாவின் மக்களுக்குப் பிரசங்கித்தது யார் ? (அப். 8:12)...

3. பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு வந்தபோது, அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு என்ன ஜெபித்தார்கள் ? (அப். 8:15)......................................

....

4. சமாரியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை எப்படி பெற்றார்கள் ? (அப். 8:17)...

....

5. தர்சு பட்டணத்தானாகிய சவுல் (பவுல்) ஆவியை எப்படி பெற்றார்கள் ? (அப். 8:17)...

6. கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பிரசங்கம் பண்ணுவதைக்கேட்டவர்களுக்கு என்ன நடந்தது ? (அப். 10:44) ....

....

7. கொர்நேலியுவின் வீட்டிலிருந்த யாவரும் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள் என்பதை பேதுருவும் அவருடைய நண்பர்களும் எப்படி அறிந்துகொண்டார்கள் ? (அப். 10:45-46)

....

....

8. எபேசுவிலிருந்த சீஷர்களைப் பார்த்து, பவுல் என்ன கேள்வி கேட்டார் ? (அப். 19:2)...

....

9. எபேசுவிலிருந்த சீஷர்கள் பரிசுத்த ஆவியை எப்போது பெற்றார்கள் ? (அப். 19:6)...

10. பரிசுத்த ஆவி இந்த சீஷர்கள் மீது வந்த பிறகு என்ன நடந்தது ? (அப். 19:6)...

11. அந்நிய பாஷைகளில் எந்த அளவிற்கு பேசுவதாக பவுல் கூறினார் ? (1 கொரி. 14:18)...

....

12. அறியாத பாஷையில் பேசும்போது ஓர் கிறிஸ்தவன் செய்கின்ற மூன்று காரியங்களை குறிப்பிடுக. (1 கொரி. 14:2,4)

(1)..

(2)..

(3)..

13. ஓர் கிறிஸ்தவன் அறியாத பாஷையில் ஜெபிக்கும்போது, அவனுடைய எந்தப் பகுதி ஜெபிக்கிறது? (1 கொரி. 14:14)..

14. உண்மையாக ஆராதிக்கிறவர்கள் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டுமென்று இயேசு கூறினார்? (யோவான் 4:23-25)..............................

....

15. கிறிஸ்தவர்கள் தங்களை விசுவாசத்தில்* கட்டியெழுப்ப வேண்டுமென்று, யூதா அவர்களுக்கு எப்படி புத்தி சொல்லுகிறார்? (யூதா 20)

....

16. ஒரு கிறிஸ்தவன் அந்நிய பாஷைகளைப் பேசினால், அடுத்ததாக அவர் எதற்காக ஜெபிக்கலாம்? (1 கொரி. 14:13)..

....

17. பொதுவான ஓர் கூட்டத்தில், வியாக்கியானம் செய்கிறவர்கள் இல்லாத சூழ்நிலையில், ஓர் கிறிஸ்தவன் அந்நிய பாஷையில் எப்படி பேசலாம்? (1 கொரி. 14:28)..

....

18. எல்லா கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷைகளைப் பேசுவதை விரும்புகிறேன் என்று பவுல் கூறினாரா? (1 கொரி. 14:5)..........................

19. எத்தனை கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லலாமென்று பவுல் கூறினார்? (1 கொரி. 14:31)..

20. ஆவிக்குரிய வரங்களைக்குறித்து கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கலாமா? (1 கொரி. 12:1)..

21. ஆவியின் ஒன்பது வரங்களைப் பட்டியலிடுக. (1 கொரி. 12:8-10)

(1)..

(2)..

(3)..

(4)..

(5)..

(6)..

(7)..

(8)..

(9)..

22. ஆவியின் கனியின் ஒன்பது தன்மை என்ன? (கலா. 5:22-23)

(1)... (2)..

(3)... (4)..

(5)... (6)..

(7)... (8)..

(9)...

23. ஆவிக்குரிய கனியில்லாமல் ஓர் கிறிஸ்தவன் ஆவிக்குரிய வரங்கள் மட்டும் உடையவனாக இருக்கலாமா? (1 கொரி. 12:8-10)....................................

24. ஆவிக்குரிய வரங்களில்லாமல் ஓர் கிறிஸ்தவன் ஆவிக்குரிய கனி மட்டும் உடையவனாக இருக்கலாமா? (1 கொரி. 12:31: 14:1)..............................

25. இந்த யுகத்தின் இறுதியில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதினால் நிகழக்கூடிய மூன்று இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள் என்ன? (அப்.2:17) (1)..

(2)..

(3)..

26. ஒரு கூட்டத்தில், சக விசுவாசிகளை ஆறுதல்படுத்த, ஓர் விசுவாசி பயன்படுத்தக்கூடிய ஐந்து வெவ்வேறான ஆவிக்குரிய வரங்களைக்குறிப்பிடுக. (1 கொரி. 14:26)

(1)... (2)...

(3)... (4)...

(5)...

மனப்பாட பகுதி: அப். 2:17-18

இவ்வசனங்களை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் ஆறு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே	2
2.	வெவ்வேறான பாஷைகளைப் பேசினார்கள்	1
3.	பிலிப்பு	1
4.	அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற வேண்டுமென ஜெபித்தார்கள்	1
5.	பேதுருவும் யோவானும் அவர்கள் மீது கைகளை வைத்தார்கள்	1
6.	அனனியா அவன் மீது கைகளை வைத்தான்	1
7.	பரிசுத்த ஆவியானவர் அவர்கள் யாவர்மேலும் இறங்கினார்	1
8.	அவர்கள் பல பாஷைகளை பேசுகிறதையும், தேவனை புகழுகிறதையும் கேட்டார்கள்	1
9.	நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா	1
10.	பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம்* சொன்னார்கள்	1
11.	உங்களெல்லாரிலும் அதிகமாய் (அதாவது கொரிந்துவில் இருந்தவர்களைக் காட்டிலும் அதிகமாய்)	1
12.	(1) அவன் தேவனோடு பேசுகிறான் (மனிதனோடல்ல) (2) அவன் இரகசியங்களைப் பேசுகிறான் (3) தனக்கே பக்திவிருத்தி (ஆறுதல், உயிர்ப்பித்தல்) உண்டாக பேசுகிறான்	1 1 1
13.	அவனுடைய ஆவி	1
14.	ஆவியோடும், உண்மையோடும்	1
15.	பரிசுத்த ஆவியில் ஜெபம் பண்ணுவதினாலே	1
16.	அர்த்தத்தைச் சொல்லும்படியாக	1
17.	தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசலாம்	1
18.	ஆம்	1

19.	எல்லாரும், அனைவரும்	1
20.	கூடாது	1
21.	ஞானத்தைப் போதிக்கும் வசனம் அறிவை உணர்த்தும் வசனம் விசுவாசம் குணமாக்கும் வரங்கள் அற்புதங்களைச் செய்யும் சக்தி தீர்க்கதரிசனம் ஆவிகளைப் பகுத்தறிதல் வெவ்வேறான பாஷைகள் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்	1 1 1 1 1 1 1 1 1
22.	(1) அன்பு (2) சந்தோஷம் (3) சமாதானம் (4) நீடிய பொறுமை (5) தயவு (6) நற்குணம் (7) விசுவாசம் (8) சாந்தம் (9) இச்சையடக்கம்	1 1 1 1 1 1 1 1 1
23.	கூடாது	1
24.	கூடாது	1
25.	(1) உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம்* சொல்லுவார்கள் (2) உங்கள் வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள் (3) உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்	1 1 1
26.	(1) ஒரு சங்கீதம் (2) ஒரு போதகம் (3) ஒரு அந்நிய பாஷை (4) ஒரு வெளிப்பாடு (ஆவிக்குரிய உள்ளுணர்வு) (5) ஒரு வியாக்கியானம்.	1 1 1 1 1

	நீங்கள் எழுதின வசனத்தை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு வசனத்திலும், ஒவ்வொரு தவறுக்கு ஒரு மதிப்பெண்ணைக்குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	8
	மொத்தம்	59

30 மதிப்பெண்கள் = 50%

41 மதிப்பெண்கள் = 70%

47 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் ஆறு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1. "இருதயத்தின் நிறைவினால் (வழிந்தோடுதல்) வாய் பேசும்" (மத். 12:34)

2-4. பிலிப்பு சமாரியாவின் மக்களுக்கு ஊழியம் செய்தான். அவர்களில் அநேகர் இரட்சிக்கப்பட்டு, சுகத்தைப் பெற்றார்கள். ஆனால் இது அப்போஸ்தலர்களுக்குப் போதுமானதாயிருக்கவில்லை. புதிய விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டுமென எதிர்பார்த்தார்கள். ஆகையால் சமாரியாவிலிருந்த புதிய விசுவாசிகள், இரட்சிக்கப்பட்ட பின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள். இது பேதுரு மற்றும் யோவானின் ஊழியத்தின் மூலம் நடந்தது.

5. அனனியா வெறும் "சீஷன்" என்று அழைக்கப்படுவதைக்கவனியுங்கள். (அப். 19:10). ஆகையால் பரிசுத்த ஆவியைப் பெறும்படி கைகளை வைக்குதல் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் உரியதல்ல. மட்டுமல்ல, பரிசுத்த ஆவியைப் பெறச் செய்வதற்கு, எப்போதும் கைகளை வைப்பதும் அவசியமல்ல. அப். 2:2-4 மற்றம் 10:44-46இல் கைகள் வைக்காமலேயே, விசுவாசிகள் அபிஷேகத்தைப் பெற்றார்கள்.

8-10. சமாரியாவைப் போல, எபேசுவிலிருந்த சீஷர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ஓர் தனிப்பட்ட அனுபவமாக பெற்றார்கள். இரட்சிக்கப்பட்ட பின் நிகழ்ந்தது. அப். 2:4 மற்றும் 10:46இல் நடந்தது போல அவர்களுடைய அனுபவம், அந்நிய பாஷைகளைப் பேசுவதை விளைவாகக்கொண்டது (அப். 19:2-6இல், தீர்க்கதரிசனமும்*).

11-15. வேறொரு பாஷையில் பேசுவதன் பிரதான பயன்பாடு தனிப்பட்ட ஆராதனைக்கும், ஜெபத்துக்குமே. தான் பேசுகிறது இன்னதென்று விசுவாசி அறியான். ஆனால் அவனுடைய ஆவியோ நேரடியாக தேவனோடு தொடர்பு கொள்ளுகிறது. இவ்விதமாய் அவன் தன்னையே பக்திவிருத்தியடைய (கட்டியெழுப்பப்பட)செய்கிறான்.

16-17. வியாக்கியானம் செய்யும் வரத்தினால், அந்நிய பாஷையில் பேசப்பட்ட வார்த்தைகள், யாராகிலும் ஒருவரால் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். அர்த்தம் சொல்ல ஒருவருமில்லையென்றால், விசுவாசி "தனக்கும் தேவனுக்குமே" அந்நிய பாஷையில் பேசிக்கொள்ளலாம் (1 கொரி. 14:28).

19. தீர்க்கதரிசனம் சொல்லுவது, பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட

வார்த்தைகளைப் பேசுவதாகும். ஆனால், அவ்வார்த்தைகள், பேசுகிறவரும் கேட்கிறவர்களும் புரிந்துகொள்ளும் ஓர் பாஷையிலேயே பேசப்படுகின்றன.

21-24 வரங்களுக்கும் கனிக்கும் வித்தியாசமுண்டு. ஒரு வரம், ஒரே நிமிடத்தில், கொடுக்கப்பட்டு, பெற்றுக்கொள்ளப்படவும் செய்கிறது. கனி, வேலை செய்து, காத்திருக்கும்போது தான் வருகிறது. (2 தீமோ. 2:6ஐ பார்க்கவும்). பரிசுகள் தொங்கும் ஓர் கிறிஸ்துமஸ் மரத்திற்கும், கனியை கொடுக்கும் ஆப்பிள் மரத்திற்குமுள்ள வித்தியாசத்தை சிந்தித்துப் பாருங்கள். ஆவிக்குரிய ரீதியில், வரங்கள் கனிக்கு மாற்றுப் பொருளல்ல. கனி வரங்களுக்கு மாற்றுப் பொருளுமல்ல எல்லா கிறிஸ்தவர்களும் இவ்விரண்டும் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். (அன்பு ஒருபோதும் ஓர் வரமென்று அழைக்கப்படுவதில்லை என்பதை கவனித்துப் பாருங்கள்).

25-26 பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திலிருந்து வரும் பல விளைவுகளுண்டு. இவைகள் வரங்களும், கனியுமாவன. இவைகளால் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய முடியும். இவை அனைத்தும் ஓர் நபரின் இயற்கையான திறமைக்கும், படிப்புக்கும் மேலானது.

முதல் முன்னேற்ற மதிப்பீடு

வாழ்த்துக்கள்!

இப்போது நீங்கள் முதல் ஆறு பாடங்களை நிறைவு செய்துள்ளீர்கள். இதனால் என்ன என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்!

இக்கருத்துக்களுக்கு அறிமுகம் பெற்று, நீதியிலே* நீங்கள் பயிற்றுவிக்கப்பட ஆரம்பித்திருக்கிறீர்கள்.

- தேவனுடைய வார்த்தையாக வேதாகமம்
- எல்லா மக்களுக்கும் தேவனுடைய திட்டமான இரட்சிப்பு மற்றும் அதற்குள் பிரவேசித்து அதின் பலன்களை அனுபவிப்பது எப்படி?
- தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதன் முக்கியத்துவத்தை குறித்த போதனை
- பரிசுத்த ஆவியின் வழங்குதலும், அதின் பயன்களும்.

இச்செயலில், கேள்விகளுக்குப் பதிலளிக்க, நீங்கள் வேதத்தைத் தேடி, 170க்கும் மேற்பட்ட வசனங்களை எடுத்துப் பார்த்திருக்கிறீர்கள்! மட்டுமல்ல, பத்து முக்கியமான வசனங்களை மனப்பாடம் செய்துள்ளீர்கள்.

சில நேரங்களில், ஒரு வேளை இப்பாடங்கள் கடினமாக இருந்திருக்கலாம். இதற்கு நான் செலவிடுகிற நேரத்திற்கும் பிரயாசத்துக்கும், இது பயனுள்ளதுதானா என்று உங்களை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால் சாலொமோன் ஞானத்தைத் தேடுவதை குறித்துச் சொன்னதையே இது உறுதிப்படுத்துகிறது: பூமியில் புதைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷத்தைத் தோண்டி எடுப்பது போன்றது. (நீதி. 2:1-5ஐப் பார்க்கவும்).

தோண்டுவது கடினமான, முதுகை முறியச் செய்யும் வேலையாயிருக்கிறது. தசைகளில் வேதனையும், கரங்களில் கொப்பளத்தையும் ஏற்படுத்தும். ஆகையால், இந்த ஆறு பாடங்களை படிக்குமளவும், நீங்கள் மனதளவில் சில "வேதனைகளையும்" "கொப்பளங்களையும்" அனுபவித்திருந்தால் அது ஆச்சரியமல்ல.

அதே நேரத்தில் நீங்கள் மனதளவிலும் ஆவிக்குரிய ரீதியிலும் "தசைகளை" உருவாக்குகிறீர்கள். நீங்கள் உள்ளான தெம்பும், ஆவிக்குரிய நற்குணத்தையும் கட்டி எழுப்புகிறீர்கள். ''வேதனைகள்'' மற்றும் "கொப்புளங்கள்" தற்காலிகமானவை – அவைகள் கடந்து போகும். ஆனால் உங்களுக்குள் நீங்கள் உருவாக்கும் நற்குணம் என்றென்றைக்கும்

நிலைத்திருக்கும். வாழ்க்கையில் நீங்கள் எப்படி நடைபோட்டாலும், வருங்காலத்து வெற்றிக்கு இது அத்தியாவசியமான ஒன்று.

ஆகையால் கடந்து போகும் காரியங்களுக்காக, நிலைத்திருப்பது தியாகம் செய்யாதீர்கள்! தோண்டிக்கொண்டே இருங்கள்! பொக்கிஷம் உண்மையிலேயே உங்கள் கை எட்டிப்பிடிக்கக்கூடிய தூரத்திலேயே உள்ளது.

முதல் மறு பரிசீலனை

உங்களுக்கு முன்னிருக்கும் உற்சாகமளிக்கும் புது பாடங்களுக்குள் நீங்கள் செல்லும் முன், இது வரை கற்றுக்கொண்டவைகளைத் திருப்பிப் பார்ப்பது, உங்களை ஊக்குவித்து, பெலப்படுத்தும். இதைச் செய்வதற்கு சில பிரயோஜனமுள்ள முறைகள்:

முதலாவது, முன்னிருக்கும் ஆறு பாடங்களுக்கான கேள்விகளை, அவைகளின் பதில்களோடு கவனமாய் வாசியுங்கள். ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையை நீங்கள் அறிவீர்களா என்பதையும் அவைகளைப் புரிந்துகொள்ளுகிறீர்களா என்பதையும் சோதித்துப் பாருங்கள்.

இரண்டாவது, மனப்பாட வசனங்களாக இந்த ஆறு பாடங்களையும் நீங்கள் கற்றுக்கொண்ட வசனங்களை மறு பரிசீலனை செய்யுங்கள்.

மூன்றாவது, பின்வரும் கேள்விகளை வாசித்து, இவைகளுக்கு எப்படி பதிலளிப்பீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு கேள்வியும், ஏதோ ஓர் விதத்தில் நீங்கள் படித்த பாடங்களோடு சம்பந்தப்பட்டது.

1. பாவத்துக்கான தேவனுடைய பரிகாரத்தை, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படி பயன்படுத்தியிருக்கிறீர்கள் ?
2. தேவனுடைய வார்த்தையை நீங்கள் படித்து அதற்குக்கீழ்ப்படியும்போது, உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் என்ன பலன்களை எதிர்பார்க்கலாம் ?
3. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்யக்கூடிய வெவ்வேறான விதங்களை விவரியுங்கள்.
4. சிவந்த சமுத்திரத்தின் வழியாய், இஸ்ரவேலின் கடந்து போகுதல் எவ்விதங்களில், ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஓர் மாதிரியாக இருக்கிறது ?

கடைசியாக, இக்கேள்விகளுக்கான உங்கள் பதில்களை ஒரு தனித்தாளில் எழுதுங்கள்.

இப்பகுதிக்கு குறிப்பிட்ட எந்த மதிப்பெண்களுமில்லை. இதன் நோக்கம் நீங்கள் கற்றறிந்த எல்லாவற்றையும் உறுதிப்படுத்துவதாகும். இது நிறைவேற்றப்பட்டுள்ளதென்று நீங்கள் திருப்தியடையும்போது, பாடம் 7க்கு கடந்து போகலாம்.

பாடம் ஏழு

ஆராதனை மற்றும் ஜெபம்

முன்னுரை

கிறிஸ்தவர்கள் தம்முடைய பிரசன்னத்துக்குள் வருவதற்கு ஆராதனை என்னும் வழியை தேவன் ஏற்படுத்தியுள்ளார். தேவனிடத்திலிருந்து தேவையானதைப் பெற்றுக்கொள்ள கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் வழி, ஜெபமாகும்.

ஜெபத்தின் மூலம், கிறிஸ்தவர்கள் தேவனிடமிருந்து மூன்று காரியங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

- தேவையான வழி நடத்துதல்
- உதவி
- தங்கள் வாழ்க்கைக்கு பெலன்

தங்கள் ஜெபத்தை தேவன் கேட்க வேண்டுமென்று விரும்புகிற கிறிஸ்தவர்கள், அவரை ஆராதிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும், ஜெபம் மற்றும் வேதம் வாசிப்பதற்கு நேரத்தை பிரத்தியேகப்படுத்தும் கிறிஸ்தவர்கள், அதினால் பயன் அடைந்து, இன்னும் பலனுள்ளவர்களாக விளங்குவார்கள்.

எப்படி ஜெபிப்பதென்றும், தன் ஜெபங்களுக்கு எப்படி பதில்பெறுவதென்றும் அறிந்திருக்கும் கிறிஸ்தவனே உலகத்தில் எல்லாரிலும் மிகுந்த வல்லமையுள்ளவன்.

இவ்விதமாய் ஜெபிப்பதற்கு, பரிசுத்த ஆவியானவரின் உதவிதேவை, தேவனுடைய வார்த்தையின் வழிமுறைகளை நாம் ஜாக்கிரதையாய் பின்பற்ற வேண்டும். இப்பாடத்தில் அவ்வழிமுறைகள் தெளிவாக முன்வைக்கப் பட்டுள்ளன.

மனப்பாட பகுதி: யோவான் 15:7

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

1. தேவன் எப்படிப்பட்டவர்களைத் தேடுகிறார்? (யோவான் 4:23-24)

....

2. யாருடைய ஜெபத்தில் தேவன் பிரியப்படுகிறார்? (நீதி. 15:8)

....

3. எப்படிப்பட்ட ஜெபம் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்? (யாக். 5:16)

....

4. தேவன் நம்முடைய ஜெபங்களை கேட்க வேண்டுமென நாம் விரும்பினால், நாம் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்ன? (யோவான் 9:31) (1) ....

(2) ....

5. தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்துக்குள் எதினால் நாம் தைரியத்தோடு பிரவேசிக்கக்கூடும்? (எபி. 10:19) ....

....

6. எந்த இரண்டு காரியங்களோடு நாம் தேவனுடைய பிரசன்னத்துக்குள் பிரவேசிக்க வேண்டும்? (சங். 100:4) (1)...

(2) ....

7. கவலைப்படுவது அல்லது கலக்கமடைவதற்குப் பதிலாக ஓர் கிறிஸ்தவன் என்ன செய்ய வேண்டும்? (பிலி. 4:6) ....

....

8. யாருடைய நாமத்தில், என்ன நோக்கத்தோடு நாம் ஜெபிக்க வேண்டும்? (யோவான் 14:13) ....

....

9. எந்த இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் நாம் தேவனிடத்தில் விரும்புவதைக்கேட்கக்கூடும்? (யோவான் 15:7)

(1) ....

(2) ....

10. கீழ்க்காணும் வசனங்களில் நம்முடைய ஜெபங்களுக்குத் தடையாயிருக்கக்கூடிய நான்கு காரியங்களை எழுதுக:

(1) (சங். 66:18) ....

(2) (யாக். 1:6-7) ....

(3) (யாக். 4:3) ....

(4) (1 பேதுரு 3:7) ....

11. சாத்தானின் சக்திகளை மேற்கொள்ள, சில நேரங்களில், ஜெபிக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? (மாற்கு 9:29)

....

12. நாம் விரும்பும் காரியங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக, ஜெபிக்கும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? (மாற்கு 11:24)

....

13. நாம் ஜெபிக்கும்போது, மற்ற மக்களுக்கு விரோதமாக நாம் ஏதாகிலும் செய்திருந்தால், நாம் முதலில் என்ன செய்ய வேண்டும்? (மாற்கு 11:25) ....

14. நாம் ஜெபிக்கும்போது, மற்றவர்களை மன்னித்தால், தேவன் நம்மோடு எப்படி இடைப்படுவார்? (மாற்கு 11:25) ....

....

15. நாம் மற்றவர்களை மன்னிக்காதபோது, தேவன் நம்மோடு எப்படி இடைப்படுவார்? (மாற்கு 11:26) ....

....

16. நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபித்தால், என்ன இரண்டு காரியங்களைக்குறித்து நாம் தைரியம் கொண்டிருக்கலாம்? (1 யோவான் 5:14-15) (1) ....

(2) ....

17. ஒவ்வொரு நாளையும் எப்படி ஆரம்பிப்பதாக தாவீது கூறுகிறார்? (சங். 5:3) ....

....

18. ஒவ்வொரு நாளிலும் எந்த மூன்று வேளைகளில் ஜெபிக்க தாவீது தீர்மானித்தான்? (சங். 55:17) (1) ....

(2) .... (3) ....

19. இப்படிப்பட்ட வழக்கமான ஜெப நேரங்களைத் தவிர, நாம் எப்போதெல்லாம் ஜெபிக்க வேண்டும்? (எபே. 6:18) (1 தெச. 5:17)

....

20. நாம் பெலவீனமாயிருக்கும்போதும், ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாதிருக்கும்போதும், தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க, நமக்கு உதவி செய்பவர் யார்? (ரோமர் 8:26-27)

....

21. நாம் தனித்து ஜெபம் பண்ணும்போது, என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்? (மத். 6:6) ....

....

22. இவ்விதமான ஜெபம், எப்படிப்பட்ட பலனை பெறுமென்று இயேசு கூறுகிறார்? (மத். 6:6) ....

....

23. மற்ற கிறிஸ்தவர்களோடு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்படி கூடிவரும்போது, இயேசு நமக்கு என்ன வாக்குத்தத்தம் கொடுக்கிறார்? (மத். 18:20) ....

....

24. நாம் கூடி ஜெபிக்கும் போது, நம்மோடு ஜெபிப்பவர்களைக்குறித்து எப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்களாயிருக்க வேண்டும்? (மத். 18:19)

....

....

25. நாம் முதலாவது யாருக்காக ஜெபிக்க வேண்டும்? (1 தீமோ. 2:1-2)

....

26. இங்கே பவுல், ஜெபிப்பதற்கு எப்படிப்பட்ட சரீர இருப்புநிலையை ஆலோசனையாக கூறுகிறார்? (1 தீமோ. 2:8)

....

27. ஜெபிக்கும்போது எவ்விரண்டு தவறான மனநிலைகளிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்? (1தீமோ. 2:8)

(1) .... (2) ....

28. நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலை பெறுவதின் விளைவு என்ன? (யோவான் 16:24) ....

மனப்பாட பகுதி: யோவான் 15:7

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் ஏழு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	உண்மையாய் ஆராதிப்பவர்கள், தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்கள்	2
2.	செம்மையானவர்களின் ஜெபம்	1
3.	நீதிமான்* செய்யும் ஊக்கமான வேண்டுதல்	2
4.	(1) தேவ பக்தியுள்ளவனாயிருக்க வேண்டும் (தேவனை ஆராதிக்க வேண்டும்) (2) தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும்	1 1
5.	இயேசுவின் இரத்தத்தினாலே	1
6.	(1) துதி (2) புகழ்ச்சி	1 1
7.	எல்லாவற்றையுங்குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்	3
8.	இயேசுவின் நாமத்தினால், பிதாவாகிய தேவன் மகிமைப்படும்படி	2
9.	(1) நாம் இயேசுவில் நிலைத்திருந்தால் (ஜீவித்தால்) (2) அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருந்தால் (வாழ்ந்தால்)	1 1
10.	(1) இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தால் (பாவம் என்று அறிந்த காரியங்களுக்கும் இடம் கொடுத்தால்) (2) நாம் சந்தேகப்பட்டு, விசுவாசத்தோடு கேட்காமல் போனால் (3) இச்சைகளை நிறைவேற்ற (தவறான ஆவியோடு) தவறாக கேட்டால் (4) கணவன் மனைவிக்குள் தவறான நிலையிலுள்ள உறவுகள்	1 1 1 1
11.	உபவாசிக்க வேண்டும்	1
12.	(ஜெபிக்கும் போது) அவைகளைப் பெற்றுக்கொள்வோமென விசுவாசிக்க வேண்டும்	1
13.	அவர்களை மன்னிக்க வேண்டும்	1

14.	தேவன் நம்மை மன்னிப்பார்	1
15.	தேவன் நம்மை மன்னிக்கமாட்டார்	1
16.	(1) நமக்கு தேவன் செவிகொடுக்கிறார் (2) அவரிடத்தில் நாம் கேட்டவைகளை பெற்றுக்கொண்டோம்	1 1
17.	தேவனுக்கு நேரே வந்து, தன்னுடைய ஜெபத்தை தேவனிடத்தில் ஏறெடுத்து	2
18.	(1) அந்தி (2) சந்தி (3) மத்தியான வேளைகளில்	1 1 1
19.	எந்தெந்த நேரத்திலும், இடைவிடாமல்	1
20.	பரிசுத்த ஆவியானவர்	1
21.	அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி, அந்தரங்கத்தில் ஜெபிக்க வேண்டும்	1
22.	நம்முடைய பரம பிதா வெளியரங்கமாய் நமக்கு பலனளிப்பார்	1
23.	அங்கே நம்முடைய மத்தியில் இயேசு இருக்கிறார்	1
24.	நாம் கேட்க போகிறது எதுவாயிருந்தாலும், அதைக் குறித்து அவர்களோடு ஒருமனப்பட வேண்டும்	2
25.	ராஜாக்களுக்காகவும் அதிகாரத்திலுள்ள யாவருக்காகவும்	1
26.	பரிசுத்த கைகளை உயர்த்தி	1
27.	(1) கோபம் (2) தர்க்கம்	1 1
28.	சந்தோஷம்- நிறைவான சந்தோஷம்	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரி பார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் ஒரு மதிப்பெண்ணை குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்.)	4
	மொத்தம்	49

25 மதிப்பெண்கள் = 50%
34 மதிப்பெண்கள் = 70%
39 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் ஏழு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

தேவன் ஜெபத்துக்குப் பதிலளிக்க விருப்பமுள்ளவராயும், திராணியுள்ளவராயும் இருக்கிறார். முழு வேதாகமமும் - குறிப்பாக புதிய ஏற்பாடு - இது உண்மையென்று காண்பிக்கிறது. (மத். 7:7-8ஐப் பார்க்கவும்). மனிதர்கள் ஜெபிக்க விருப்பமுள்ளவர்களாய் இருப்பதைக்காட்டிலும், தேவன் பதிலளிக்க விருப்பமுள்ளராயிருக்கிறார். ஆனால், நம்முடைய ஜெபங்களுக்கான பதில்களைப் பெற, நாம் தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். இப்பாடத்திலுள்ள பெரும்பகுதியான விடைகள், அந்த நிபந்தனைகளைக்குறிப்பிடுகின்றன. இவைகள் சுருக்கி கூறப்பட்டுள்ளன:

5, 8, 23. பாவிகளாயிருப்பதினால், நாம் பரிகாரம் செய்யும் கிறிஸ்து இயேசுவின் பலியினால் மட்டுமே நான் தேவனிடத்தில் செல்ல முடியும். நமக்காக பிதாவுக்கு முன்பாக பேசுகிற இயேசுவையே நாம் சார்ந்திருக்கிறோம். இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளுவதினால், நாம் இயேசுவின் நாமத்தினாலும், இரத்தத்தினாலும், தேவனிடத்தில் வருகிறோம்.

1, 2, 3, 4(2), 9 (1). சரியான நற்குணம்: சத்தியம், உண்மை, நீதி*, கீழ்ப்படிதல் (கிறிஸ்துவில் நிலைத்திருப்பதால் மட்டுமே கூடும்).

8, 10(3), 10(4), 13, 14, 15, 24, 27(1). சரியான நோக்கம்: தேவனுடைய மகிமைக்காக, நம்முடைய சுய இச்சைகளை நிறைவேற்ற அல்ல. முக்கியமாக நமக்கு மிக நெருங்கிய மக்களோடு சரியான உறவுகள்.

9 (2), 16, 25, தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிப்பது, அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டது.

10(2), 12, 16(2), 27(2). விசுவாசத்தோடு நம்முடைய ஜெபங்களுக்கான பதிலை நாம் ஜெபிக்கும் நிமிடத்திலேயே அறிக்கையினால் பெற்றுக்கொள்ளுவது. “இப்போதே அநுக்கிரக காலம்” **(2** கொரி. **6:2)**

17, 18, 19. தொடர்ந்து மற்றும் விடாப்பிடியாக - விட்டுவிடாதீர்கள். **(**லூக்கா **18:1**ஐ ஒப்பிடுக**)**

3, 11, 21, 26. ஊக்கம், சுயத்தை வெறுத்தல், அர்ப்பணிப்பு. (தேவனோடு தனித்து, தாழ்மையான இருதயத்தோடு ஜெபத்துக்கு உங்களை அர்ப்பணித்தல்.)

20. இவையெல்லாவற்றிலும், நம்முடைய சுய சித்தத்தையோ, பெலனையோ அல்லது அறிவைமட்டுமோ நாம் சார்ந்து கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவி நமக்கிருக்க வேண்டும்.

22, 28. சரியாக ஜெபிப்பதற்கான பலன்கள்.

பாடம் எட்டு

நம்முடைய சரீர சுகத்தை குறித்த தேவ திட்டம் [பகுதி 1]

முன்னுரை:

மனிதன் தேவனை விட்டு கீழ்ப்படியாமையில் விலகினபோது, தேவனுடைய ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் இழந்தான். மனிதன் சாபத்தின் கீழாயும், பிசாசின் வல்லமையின் கீழாயும் வந்தான். அதனால், பிசாசு, மனிதனுடைய சரீரத்தில் வேதனையையும், பெலவீனத்தையும், வியாதியையும் கொண்டு வர முடிந்தது.

ஆனால், தன்னுடைய காருண்யத்தில் தேவன் இன்னும் மனிதனை ஆசீர்வதிக்க விரும்புகிறார். தேவன், மனிதனை அவன் பாவத்திலிருந்தும் வியாதியிலிருந்தும் இரட்சிக்க விரும்புகிறார். கல்வாரி சிலுவையில் மரித்தபோது, கிறிஸ்து இயேசு நம்முடைய பாவங்களையும், நம்முடைய வியாதிகளையும் கூட சுமந்தார். இதுதான் இரட்சிப்பின்* நற்செய்தி.

ஆகையால் - இயேசுவில் விசுவாசம்* வைப்பதால் - நம்முடைய சரீரங்களுக்கு நாம் சுகத்தையும், நம்முடைய ஆத்துமாக்களுக்கு மன்னிப்பையும் சமாதானத்தையும் இப்போது பெற்றுக்கொள்ள முடியும்.

மனப்பாட பகுதி: 1 பேதுரு 2:24

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

அ. யார் வியாதியையும், யார் ஆரோக்கியத்தையும் கொண்டு வருகிறார்கள் ?

1. மனிதனை முதலாவது வஞ்சித்து, தேவனுக்குக்கீழ்ப்படியாமல் போக மனிதனை யார் தூண்டியது ? (ஆதி. 3:1-13) (1 யோவான் 3:8) (வெளி. 12:9) ....
2. வேதனையும், வியாதியும், மரணமும் ஏன் முதலாவது மனிதனுக்கு வந்தது ? (ஆதி. 3:14-19) ....
3. யோபுவின் மீது வியாதியைக்கொண்டு வந்தது யார் ? (யோபு 2:7)

   ....
4. லூக்கா 13:11, 16இல் காணப்படும் பெண் மீது யார் வியாதியைக்கொண்டு வந்தது, அவள் எப்படி காணப்பட்டாள் ?

   ....
5. மக்களை வியாதியினால் ஒடுக்குவது* யார் ? (அப். 10:38)

   ....
6. தமக்குக்கீழ்ப்படிகின்ற தம்முடைய மக்களுக்கு என்ன செய்வதாக, தேவன் வாக்களிக்கிறார் ? (யாத். 15:26) ....

   ....
7. தமக்கு ஊழியஞ் செய்கிற தமது மக்களுக்கு, தேவன் எவ்விரண்டு காரியங்களைச் செய்வதாக வாக்களிக்கிறார் ? (யாத். 23:25)

   (1) ....

   (2) ....
8. வியாதிகள் தேவனுடைய ஜனங்களுக்குரியதா அல்லது அவர்களுடைய சத்துருக்களுக்கு உரியதா ? (உபா. 23:25) ....

   ....
9. தேவன் தனக்கு எவ்விரண்டு காரியங்களைச் செய்வதாக தாவீது கூறுகிறார் ? (சங். 103:3)

   (1) ....

   (2) ....
10. தன்னுடைய கிறிஸ்தவநண்பனுக்காக எந்த மூன்று காரியங்களை அப்போஸ்தலனான யோவான் விரும்பினார் ? (3 யோவான் 2)

    (1) ....

    (2) ....

(3) ....

11. தேவனுடைய எத்தனை வாக்குத்தத்தங்களை நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் ''ஆம்'' என்றும் ''ஆமென்'' என்றும் கூறி, சுதந்தரிக்கக்கூடும்? (2 கொரி. 1:19-20) ....

12. இயேசு உலகத்தில் எதற்காக வெளிப்பட்டார்? (1 யோவான் 3:8)

....

13. தேவன் எதற்காக இயேசுவைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்தார்? (அப். 10:38) ....

....

14. கிறிஸ்து இயேசு யாருடைய சித்தத்தை செய்ய வந்தார்? (யோவான் 5:30) ....

15. இயேசுவின் அற்புதங்களை அவருக்காக செய்தது யார்? (யோவான் 10:37-38) (யோவான் 14:10) ....

16. தன்னிடத்தில் வந்த எத்தனை பேரை இயேசு சுகமாக்கினார்? (மத். 8:16) (மத். 14:35-36) லூக்கா 4:40) (லூக்கா 6:19)..

17. எத்தனை விதமான வியாதிகளை இயேசு குணமாக்கினார்? (மத். 4:23-24) (மத். 9:35) ....

18. இயேசு அநேகரை சில வேளைகளில் சுகமாக்காமல் இருந்ததற்கு காரணமென்ன? (மத். 13:58) (மாற்கு 6:5-6) ....

19. தேவன் எப்போதாவது மாறுவாரா? (மல். 3:16) (யாக். 1:17)..

20. கிறிஸ்து இயேசு எப்பொழுதாவது மாறுவதுண்டா? (எபி. 13:8)

....

ஆ. கிறிஸ்து இயேசுவின் சிலுவைமரணத்தின் நோக்கம்

21. கிறிஸ்து இயேசு நம்முடைய ஸ்தானத்தில் சுமந்த மூன்று காரியங்களைப் பட்டியலிடுக. (மத். 8:17) (1 பேது. 2:24)

(1) ....

(2) ....

(3) ....

22. இதன் காரணமாக, நம்முடைய வாழ்க்கையில் என்ன மூன்று விளைவுகள் ஏற்படக்கூடும்? (1 பேதுரு 2:24)

(1) ....

(2) ....

(3) ....

23. நம்முடைய ஸ்தானத்தில் சாபமாக்கப்பட்டது யார்? (கலா. 3:13)

....

24. இயேசு நம்மை எதிலிருந்து மீட்டிருக்கிறார்? (கலா. 3:13)

....

25. நியாயப்பிரமாணத்தின் சாபத்தின் கீழ், எத்தனை விதமான வியாதிகள் சேர்க்கப்பட்டிருந்தன? (உபா. 28:15; 21-22;27-28;35 மற்றும் 59-61)

....

26. எதை தெரிந்துகொள்ளும்படியாக தேவன் கூறுகிறார் - ஆசீர்வாதமா அல்லது சாபமா? (உபா. 30:19)...

....

மனப்பாட பகுதி: 1 பேதுரு 2:24

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

இப்பாடத்திலுள்ள எல்லா பகுதிகளையும் பூர்த்திச் செய்யும் வரை, இப்பக்கத்தைத் திருப்ப வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் எட்டு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	சர்ப்பம், பிசாசு, சாத்தான்	1
2.	மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபடியால்	1
3.	சாத்தான் - பிசாசு	1
4.	சாத்தான் அவளைப் பலவீனப்படுத்தும் ஆவியினால் கட்டியிருந்தான்	2
5.	பிசாசு	1
6.	எகிப்தியரின் மேல் வந்த எந்த வியாதிகளையும் அவர்கள் மேல் அனுப்ப மாட்டார் - அவர்களை சுகமாக்குவார்	2
7.	(1) அவர்கள் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் (2) வியாதியை அவர்களிலிருந்து நீக்குவார்	1 1
8.	தேவனுடைய ஜனத்தின் சத்துருக்களுக்கே உரியது	1
9.	(1) அவன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார் (2) அவன் நோய்களை எல்லாம் குணமாக்கினார்	1 1
10.	(1) அவன் செழிக்க வேண்டும் (2) அவன் சுகமாயிருக்க வேண்டும் (3) அவன் ஆத்துமா வாழ்ந்திருக்க வேண்டும்	1 1 1
11.	தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களுமே	1
12.	பிசாசின் கிரியைகளை அழிக்கவே	1
13.	நன்மை செய்யவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட* யாவரையும் குணமாக்கவும்	2
14.	பிதாவாகிய தேவனுடைய சித்தத்தையே	1
15.	பிதாவாகிய தேவன்	1
16.	எல்லோரையும்	1
17.	சகல வியாதிகளும், சகல நோய்களும்	1
18.	மக்களுடைய அவிசுவாசம்	1
19.	இல்லை, ஒருபோதும் மாறமாட்டார்	1
20.	இல்லை	1

21. 22. 23.	(1) நம்முடைய பெலவீனங்கள் (2) நம்முடைய நோய்கள் (3) நம்முடைய பாவங்கள்	1 1 1
24. 25. 26.	(1) நாம் பாவத்துக்குச் செத்து (2) நாம் நீதிக்குப் பிழைக்கலாம் (3) நாம் குணமடையலாம்	1 1 1
	இயேசு	1
	நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து	1
	எல்லா விதமான வியாதிகளுமே	1
	ஆசீர்வாதம்.	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் ஒரு மதிப்பெண்ணை குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்)	4
	மொத்தம்	40

20 மதிப்பெண்கள் = 50%
28 மதிப்பெண்கள் = 70%
32 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் எட்டு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-2. மனிதனுடைய எல்லா வேதனைகளுக்கும் மூல காரணம் பிசாசுதான் என்பதை ஆதியாகமம் 3ம் அதிகாரம் தெளிவுபடுத்தி காண்பிக்கிறது. இயேசு தாமே பிசாசை குறித்து, "அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 8:44)

3-5. வியாதிகள் அனைத்தும், அவைகளின் ஊற்றாகிய பிசாசினிடத்தில் கண்டறிய படலாம். "பிசாசின் கிரியைகள்" என்பதில் "வியாதி" ஓர் பகுதியாகும். (1 யோவான் 3:8)

6. யாத். 15:26ஐ, "நானே உன் மருத்துவரான யெகோவா" என மொழி பெயர்க்கப்படலாம்.

9. "எல்லாம்" என்ற வார்த்தைக்கு கவனம் செலுத்துங்கள். சங். 103:3. "உன் அக்கிரமங்களை எல்லாம்" மற்றும் "உன் நோய்களை எல்லாம்" எனக்கூறுகிறது.

10. காயு என்னும் பெயருள்ள முன் மாதிரியான ஓர் விசுவாசிக்கு யோவான் எழுதுகிறார் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். அவன் சத்தியத்தில் நடந்து, கிறிஸ்தவனாக தன் கடமைகளையெல்லாம் உண்மையாக செய்து வந்தவன். (3 யோவன் 3-5)

11. சரீர சுகத்திற்க்கான வாக்குத்தத்தம் இன்றுள்ள கிறிஸ்தவர்களுக்கு அல்ல என்ற கருத்தை 2 கொரிந்தியர் 1:20 நிராகரிக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் (இப்போது) நமக்குரியவைகள். இது எல்லா கிறிஸ்தவர்களையும் உட்படுத்தும். "இன்றைக்கு என்னுடைய சூழ்நிலைக்குப் பொருத்தமாயிருந்து, என்னுடைய தேவையையும் சந்திக்கும் வாக்குத்தத்தம் எனக்குரியது" என்பது தான் இதன் அர்த்தம்.

13. சுகமாக்கும் ஊழியத்தில் தெய்வத்துவத்தின் மூன்று நபர்களும் செயல்படுகிறார்கள். பிதா, குமாரனை ஆவியினால் அபிஷேகித்தார். இதன் விளைவாக எல்லோருக்கும் சுகம் உண்டானது.

14-15. இயேசுவின் வாழ்க்கையில் பிதாவின் சித்தம் நமக்குப் பூரணமாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆரோக்கியமானாலும், இயேசு செய்த எந்தக்காரியமானாலும் அதில் பிதாவின் சித்தம் வெளிப்பட்டது.

16-18. சுகம் பெற இயேசுவினிடத்தில் வந்த எவரும் சுகமாக்கப்பட்டார்கள். சுவிசேஷங்கள் இதை ஒவ்வொரு சம்பவத்திலும் நமக்குக்காண்பிக்கின்றன.

19-20. சுவிசேஷத்தின் சத்தியம் பாறை போல உறுதியாயும், மாறாததாயும் இருக்கின்றது. சுவிசேஷத்தின் மாறா சத்தியம், தேவனுடைய மாறாத தன்மையில் அடித்தளம் கொண்டதாகும்.

21. மத்தேயு மற்றும் பேதுரு, இருவருமே ஏசா. **53:4-5**லிருந்து குறிப்பிடுகிறார்கள். ஏசா. **53:4**ஐ சரியாக வாசிக்கும் விதம் "மெய்யாகவே அவர் நம்முடைய வியாதிகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய வேதனைகளை சுமந்துகொண்டார்" ஆகும். "அவர்" என்பது இயேசு கிறிஸ்துவைக்குறிக்கும். **1** பேது. **2:24**இல், "குணமானீர்கள்" என்ற வார்த்தை "மருத்துவர்" என்ற அர்த்தத்தை கொடுக்கும் கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. உண்மையாகவே, இயேசுதான் நம்முடைய மருத்துவர்.

24. ''நியாயப்பிரமாணத்தின் சாபம்'' (கலா. **3:13**) என்பது நியாயப்பிரமாணத்தை முறிப்பதனால் உண்டாகும் சாபமாகும். உபா. **28:15-68**இல் இச்சாபம் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. எல்லா விதமான வியாதிகளையும் இது உட்படுத்தும்.

25. தேவன் எதிர்மறையான இரண்டு ஜோடிகளை முன் வைக்கிறார். (அ) ஜீவன் மற்றும் ஆசீர்வாதம், அல்லது (ஆ) மரணம் மற்றும் சாபம். தேர்வு செய்வது மனிதனுடைய கையில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

பாடம் ஒன்பது

நம்முடைய சரீர சுகத்தை குறித்த தேவ திட்டம் [பகுதி 2]

முன்னுரை:

நம்முடைய சரீரங்களுக்கான சுகம் தேவனிடத்திலிருந்து வருகிறது. நாம் தேவனுடைய சுகத்தை இத்தருணங்களில் பெற்றுக்கொள்ளலாம்:

- தேவனுடைய வார்த்தையை கேட்கும்போது
- தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கும்போது
- விசுவாசத்தினால்*, நம்முடைய சரீரங்களைத் தேவனுடைய உயிர்த்தெழுதலின்* ஜீவன் நிரப்பும்படி அவருடைய ஆவிக்கு ஒப்புக்கொடுக்கும்போது

இதற்கும் மேலாக, நாம் மற்றவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் சுகத்தையும் விடுதலையையும் அளிக்க முடியும். விடுதலை* என்பது அசுத்த ஆவிகளிலிருந்து விடுதலை பெறுவதாகும். இதைச் செய்ய:

- நாம் வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்து அவர்களுக்காக ஜெபிக்கலாம்.
- விசுவாசமுள்ள சபை மூப்பர்களை, இயேசுவின் நாமத்தில் அவர்களுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்கும்படி செய்யலாம்.

இவ்விதமாய் நாம் விசுவாசத்தில்* செயல்பட்டால், தேவன் நம்மூலமாய் கிரியை செய்து, தம்முடைய வார்த்தையின் சத்தியத்தை, சுகம் மற்றும் விடுதலையின்* அற்புதங்களால் உறுதிப்படுத்துவார்.

மனப்பாட பகுதி: மாற்கு 16:17-18

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

இ. சுகமளித்தலுக்கு மூன்று வழிகள்:
(1) தேவனுடைய வார்த்தை (2) தேவனுடைய ஆவி
(3) நம்முடைய விசுவாசம்*

27. நம்மைச் சுகமாக்கி விடுவிக்க*, தேவன் எதை அனுப்புகிறார்? (சங். 107:20) ....

28. தேவனுடைய வார்த்தைகள் அவருடைய பிள்ளைகளுக்கு எவ்விரண்டு பலன்களை அளிக்கின்றன? (நீதி. 4:20-22)

(1) .... (2) ....

29. தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருந்தால், சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களுக்கு என்ன செய்யும்? (ரோமர் 8:11)

....

....

30. சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களில் தேவன் எதை விளங்கப்பண்ண விரும்புகிறார்? (2 கொரி. 4:10-11) ....

....

31. தம்மிடத்தில் சுகம் பெற வந்தவர்களிடத்தில் இயேசு எதை தேடினார்? (மத். 9:28-29) (மாற்கு 9:23) (லூக்கா 8:50) ....

32. சப்பாணியின் சுகமாகுதலைப் பேதுரு எப்படி விளக்கினார்? (அப். 3:16)

....

....

33. லீஸ்திராவிலிருந்து சப்பாணி, சுகமடைவதற்கு ஏதுவாக, அவனுக்குள் பவுல் எதைக்கண்டார்? (அப். 14:8-10) ....

....

34. விசுவாசம்* நமக்கு எப்படி வரும்? (ரோமர் 10:17)

....

ஈ. விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விசுவாசம்

35. கிறிஸ்து இயேசு தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்த இரண்டு விதமான வல்லமைகளைக்குறிப்பிடுக. (மத். 10:1)

(1) ....

(2) ....

36. தம்முடைய சீஷர்கள் செய்யும்படியாக, கிறிஸ்து இயேசு கட்டளையிட்ட நான்கு காரியங்களைப் பட்டியலிடுக. (மத். 10:8)

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

37. சீஷர்கள் சந்திரரோகியைச் சொஸ்தமாக்கத் தவறின போது, இயேசு அதற்கு எவ்விரண்டு காரணங்களைக்கொடுத்தார்? (மத். 17:20-21) (மாற்கு 9:29)

(1) ....

(2) ....

....

38. தம்மை விசுவாசிப்பவன், இரண்டு காரியங்களைச் செய்வான் என இயேசு கூறினார். அவைகள் என்ன? (யோவான் 14:12)

(1) ....

(2) ....

39. இயேசுவின் நாமத்தில், வியாதியஸ்தர்களுக்காக, விசுவாசிகள் என்ன செய்யலாம்? (மாற்கு 16:17-18) ....

....

40. இந்த வியாதியஸ்தர்களுக்கு என்ன நடக்கும்? (மாற்கு 16:18)

....

41. ஒரு கிறிஸ்தவன் வியாதிப்பட்டிருக்கும்போது அவன் என்ன செய்ய வேண்டும்? (யாக். 5:14) ....

....

42. வியாதிப்பட்டிருக்கும் கிறிஸ்தவனுக்காக சபையின் மூப்பர்கள் எவ்விரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்? (யாக். 5:14)

(1) ....

(2) ....

....

43. வியாதிப்பட்டிருக்கும் கிறிஸ்தவனுக்காக தேவன் எவ்விரண்டு காரியங்களைச் செய்வார்? (யாக். 5:15)

(1) ....

(2) ....

44. எவ்விதமான ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்? (யாக். 5:15)

....

45. இயேசுவின் நாமத்தில் தேவன் எவ்விரண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சீஷர்கள் ஜெபித்தார்கள்? (அப். 4:29-30)

(1) ....

(2) ....

....

46. சீஷர்கள் வெளியே புறப்பட்டு போய் பிரசங்கித்த போது, தேவன் அவர்களுக்காக எவ்விரண்டு காரியங்களைச் செய்தார்? (மாற்கு 16:20)

(1) ....

(2) ....

....

மனப்பாட பகுதி: மாற்கு 16:17-18

இவ்வசனங்களை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும்வரை, அடுத்தப் பக்கத்தைத் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் ஒன்பது

கேள்வி	விடை	மதிப்பெண்
27.	தமது வசனத்தை	1
28.	(1) ஜீவன்	1
	(2) உடலுக்கெல்லாம் ஆரோக்கியம்	1
29.	சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கும்	1
30.	இயேசுவின் ஜீவனை	1
31.	விசுவாசம்* (நம்பிக்கை)	1
32.	இயேசுவின் நாமத்தில் வைத்த விசுவாசம்* அவனை சுகமாக்கியது	2
33.	சுகத்தைப் பெறுவதற்கேதுவான விசுவாசம்* சப்பாணிக்குள் இருந்தது	1
34.	தேவனுடைய வார்த்தையைக் கேட்பதனால்	2
35.	(1) அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமை	2
	(2) சகல வியாதிகளையும், நோய்களையும் நீக்கும் வல்லமை	2
36.	(1) வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்க	1
	(2) குஷ்டரோகிகைளச் சுத்தம்பண்ண	1
	(3) மரித்தோரை எழுப்ப	1
	(4) பிசாசுகளைத் துரத்த	1
37.	(1) அவர்களுடைய அவிசுவாசம்	1
	(2) உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் மட்டுமே அதை வெளியேற்ற முடியும்	1
38.	(1) அவர் செய்த கிரியைகளை செய்வான்	1
	(2) அவைகளிலும் பெரிய காரியங்களைச் செய்வான்	1
39.	இயேசுவின் நாமத்தில், விசுவாசிகள் வியாதியஸ்தர் மேல் கைகளை வைக்கலாம்	1
40.	அவர்கள் சுகமடைவார்கள்	1
41.	அவன் சபையின் மூப்பர்களை அழைக்க வேண்டும்	1
42.	(1) இயேசுவின் நாமத்தினால் அவனுக்கு எண்ணெய் பூச வேண்டும்	1
	(2) அவனுக்காக ஜெபம் பண்ண வேண்டும்	1

43.	(1) அவனை எழுப்புவார்	1
	(2) அவன் பாவம் செய்திருந்தால் அவனை மன்னிப்பார்	1
44.	விசுவாசமுள்ள* ஜெபம்	1
45.	(1) அவர்கள் தைரியமாய்ப் பேச அநுக்கிரகம் செய்ய வேண்டும்	1
	(2) வசனத்தை அடையாளங்களினாலே உறுதிப்படுத்தினார்	1
46.	(1) கர்த்தர் அவர்கள் மூலமாய் கிரியை நடப்பித்தார்	1
	(2) வசனத்தை அடையாளங்களினாலே உறுதிப்படுத்தினார்	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். ஒரு வசனத்தில் மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்).	8
	மொத்தம்	44

22 மதிப்பெண்களள = 50%

31 மதிப்பெண்கள் = 70%

35 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் ஒன்பது

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

27-34. வானங்களைச் சிருஷ்டிக்க, தேவன் தம்முடைய வார்த்தையையும் தமது சுவாசத்தையும் பயன்படுத்தினார் என சங். 33:6 கூறுகின்றது. தேவனுடைய சுவாசம் என்று சொல்லும்போது, தேவனுடைய ஆவி என்று சொல்வதற்கு சமமாகும். தேவனுடைய வார்த்தையும் அவருடைய ஆவியும் ஒன்றாக செயல்பட்டதின் நிமித்தமே, சர்வசிருஷ்டியும் உருவானது. மறு-சிருஷ்டிப்பின் கிரியையாக விளங்கும் தேவனுடைய சுகமளித்தலைக்குறித்தும் இது உண்மையே. அவருடைய வார்த்தையும், அவருடைய ஆவியும் இணைந்து செயல்படுவதனால் நடைபெறுகிறது. சுகமளித்தலின் இக்கிரியையை நம்முடைய விசுவாசத்தினால்* நாம் பெற்றுக்கொள்ளுகிறோம்.

28. நீதி. 4:20-22. இவ்வசனங்கள் தேவனுடைய மகத்தான "மருந்து புட்டியை" விவரிக்கின்றன. சுகம் பெற, குறிப்பிட்டபடியே நீங்கள் தேவனுடைய மருந்தை உட்கொள்ள வேண்டும். அவருடைய நான்கு ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்: (1) தேவனுடைய வார்த்தைகளைக்கவனிக்க வேண்டும் (2) உன் "செவியைச் சாய்" என்பது நீங்கள் தாழ்மையாகவும் கற்றுக்கொள்ளும் தன்மையுடையவராகவும் இருக்க வேண்டும் என்பதே (3) தேவனுடைய வார்த்தைகளை உங்கள் கண்களுக்கு முன்பாக வைத்துக்கொள்ளுங்கள். (4) தேவனுடைய வார்த்தைகளை உங்கள் இருதயத்தில் காத்துக்கொள்ளுங்கள்.

தேவனுடைய சுகமளிக்கும் மருந்தை மனது, காது, கண் மற்றும் இருதயத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

30. இயேசுவின் உயிர்த்தெழுதலின்*ஜீவன் நம்முடைய "சாவுக்கேதுவான சரீரங்களில்" "விளங்க வேண்டும்" (வெளிப்பட வேண்டும்) என்று தேவன் விரும்புகிறார் (2 கொரி. 4:10-11). இயேசுவின் மூலம், இவ்வாழ்க்கையில், தேவன் நம்முடைய சரீரங்களுக்கு சுகம், ஆரோக்கியம் மற்றும் பெலனை அளிக்கிறார்.

34. ரோமர் 10:17. முதலாவது, தேவனுடைய வார்த்தை "கேள்வியை" உருவாக்குகின்றது. பின்பு "கேள்வியினாலே" நம்முடைய "விசுவாசம்*" உருவாகிறது. கேள்வி என்னும் செயற்தொடரின் நான்கு கட்டங்கள் நீதி. 4:20-21இல் விவரிக்கப்பட்டுள்ளன.

35-36. இதைச் சிந்தித்துப் பாருங்கள்: சீஷர்கள் பிரசங்கம் பண்ணும்படி

அனுப்பப்பட்டபோது, எப்போதும் மக்களைச் சுகப்படுத்தி, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பார்கள்* என எதிர்பார்க்கப்பட்டது. மத். 10:8ஐ, மத். 28:20உடன் ஒப்பிட்டுப் பாருங்கள்: ‘‘நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.” “உலகத்தின் முடிவு பரியந்தம்” என்பது இப்போதுள்ள யுகத்தைக்குறிக்கும். தற்போதுள்ள காலம் வரை, மாற்றமில்லாமல், அதே ஊழியம், தலைமுறை தலைமுறையாக சீஷருக்குள் தொடர வேண்டுமென இயேசு கட்டளையிட்டார். இன்று சீஷராயிருக்கும் நம்மையும் அது உட்படுத்தும்.

37. (2) இயேசு தாமே உபவாசத்தை கைக்கொண்டார். தம்முடைய சீஷரும் தம்முடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென விரும்பினார். (மத். 6:16-18ஐப் பார்க்கவும்) ஆனால் இயேசு (மணவாளன்) தங்களோடு பூமியிலிருந்த வரை, அதை அவர்கள் செய்யவில்லை. (மாற்கு 2:18-20ஐப் பார்க்கவும்)

38. இயேசுவின் ஊழியம் எல்லா கிறிஸ்தவ ஊழியத்துக்கும் மாதிரியாக உள்ளது. பிதாவினிடத்தில் திரும்பிப் போனவுடன், இயேசு பரிசுத்த ஆவியை அனுப்பினார். இயேசு வாக்களித்த கிரியைகளை நிறைவேற்ற, பரிசுத்த ஆவியானவர் இன்றும் விசுவாசிக்கின்ற சீஷர்களின் மூலம் கிரியை செய்கிறார்.

39. மாற்கு 16:17-18இன் வாக்குத்தத்தங்கள், பொதுவாக எல்லா விசுவாசிகளுக்கும் உரியவைகள்—அதாவது “விசுவாசிக்கிறவர்களுக்கு”.

39-44. இப்பாடத்தைக்குறித்து இன்னும் விவரமறிய, ‘‘கிறிஸ்தவவாழ்க்கைக்கான அடித்தளங்கள்’’ என்ற என்னுடைய புத்தகத்தில், ‘‘கைகளை வைக்குதல்’’ என்ற பகுதியை வாசித்துப் பாருங்கள்.

41. நாம் வியாதிப்பட்டிருந்தால், சபையின் மூப்பர்களை அழைப்பது, நம்முடைய பொறுப்பாகும்.

45. கிறிஸ்தவ சபைக்கு இன்றும் அப். 4:30 “மாதிரி”யான ஜெபமாக உள்ளது.

பாடம் பத்து

சாட்சி பகருதல் மற்றும் ஆத்தும ஆதாயம்

முன்னுரை:

சிலுவையில் தன்னுடைய பரிகார மரணத்தினால், எங்குமுள்ள மனிதர் யாவருக்கும் இயேசு இரட்சிப்பை* சாத்தியமாக்கினார். ஆனால் இரட்சிப்பை* பெறுவதற்கு, ஒவ்வொரு நபரும் தேவனுடைய வார்த்தையையும், இயேசு கிறிஸ்துவைப் பற்றின சாட்சியையும் முதலாவது கேட்க வேண்டும்.

இரட்சிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும். அதன் பின், மற்றவர்களிடம் கிறிஸ்து இயேசுவைக்குறித்து சாட்சி பகர அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைச் சார்ந்திருக்க வேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் இதை உண்மையாய் செய்வானாகில், கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி, பூமியின் எல்லா பகுதிகளும் சந்திக்கப்பட்டு, எல்லா தேசங்களும் கேள்விப்படும் வரை ஓய்ந்திராது. இதுதான் தேவனுடைய திட்டம்.

இதுவே கிறிஸ்தவர்கள் எல்லாரும் இணைந்து செயல்படுவதற்கான மகத்தான வழி. இயேசுவின் வருகைக்காக வழியை ஆயத்தமாக்க நாம் கிரியை செய்யலாம். சாட்சி பகருதலில் உண்மையாயிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு, இயேசு தாமே பலனை கொடுப்பார். தங்களுடைய சாட்சியினால் ஆதாயமாக்கப்பட்ட ஆத்துமாக்களைக்காணும் மகிழ்ச்சி அவர்களுக்குப் பரலோகத்தில் உண்டாகும். உண்மையாயிராத கிறிஸ்தவர்கள், தாங்கள் சாட்சி பகரத் தவறினதால், இழந்த ஆத்துமாக்களுக்காக, தேவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதிருக்கும்.

மனப்பாட பகுதி: அப். 1:8

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

1. தமக்காக சீஷர்கள் என்னவாயிருக்க வேண்டும் என இயேசு கூறினார்? (அப். 1:8)..

2. தம்முடைய சீஷர்கள் சாட்சிகளாக எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமென இயேசு கூறினார்? (அப். 1:8)

   ....

3. தற்போதுள்ள யுகத்தின் முடிவுக்குள் யார் யாருக்கு சாட்சி செல்ல வேண்டும்? (மத். 24:14) ....

   ....

4. இயேசுவைக்குறித்த எந்த மூன்று காரியங்களுக்கு தானும் மற்ற சீஷர்களும் சாட்சிகளென்று பேதுரு கூறினார்? (அப். 10:39-41)

   (1) ....

   (2) ....

   (3) ....

5. கிறிஸ்துவுக்காக என்ன செய்ய வேண்டுமென தேவன் பவுலிடம் கூறினார்? (அப். 22:15) ....

   ....

6. இயேசுவைஅறிந்துகொண்ட நாளிலிருந்து, பவுல் தொடர்ந்து என்ன செய்து வந்தார்? (அப். 26:22) ....

   ....

   ....

7. ஒரு உண்மையான சாட்சி தன்னுடைய சாட்சியினால் என்ன செய்கிறான்? (நீதி. 14:25) ....

   ....

8. ஞானமுள்ள ஓர் கிறிஸ்தவன் எதைச் செய்ய நாட வேண்டும்? (நீதி. 11:30) ....

9. அந்திரேயா இயேசுவைக்கண்டுகொண்டவுடன், இயேசுவிடம் யாரைக்கூட்டிக்கொண்டு வந்தான்? (யோவான் 1:35-42) ....

   ....

10. இயேசு பிலிப்பைக்கண்டுபிடித்தவுடன், பிலிப்பு, இயேசுவினிடத்தில் யாரை அழைத்து வந்தான்? (யோவான் 1:43-47)

    ....

11. குருடனாய்ப் பிறந்த மனிதனைப் பரிசேயர்கள் கேள்வி கேட்டபோது, தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து அவன் என்ன பதிலளித்தான்? (யோவான் 9:25)

....

....

12. எவ்விரண்டு சத்தியங்களைக்குறித்து நாம் பேசி, மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்? (1 நாளா. 16:8-9)

(1) ....

(2) ....

13. கொரிந்து பட்டணத்தில் பவுலின் சாட்சியை ஜனங்கள் எதிர்த்த போது, தேவன் பவுலுக்கு என்ன சொன்னார்? (அப். 18:9)

....

14. தேவனால் கொடுக்கப்பட்டதல்லவென்று, எந்த ஆவியைக்குறித்துப் பவுல் தீமோத்தேயுவுக்குச் சொன்னார்? (2 தீமோ. 1:7)

....

15. மனுஷனுக்குப் பயப்படும் பயம், என்னத்தைக்கொண்டு வரும்? (நீதி. 29:25) ....

....

16. இயேசுவைப் பற்றிய சாட்சியைக்குறித்து, பவுல் தீமோத்தேயுவுக்கு என்ன கட்டளை கொடுத்தார்? (2 தீமோ. 1:8)

....

....

17. பேதுருவும் யோவானும் இயேசுவைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளை பெற்றபோது என்ன பதில் கொடுத்தார்கள்?

1. (அப். 4:20) ....

....

2. (அப். 5:29) ....

....

18. பேதுருவும் யோவானும் இயேசுவைக்குறித்துப் பேச தடை செய்யப்பட்டதை அறிந்தவுடன், மற்ற சீஷர்கள் எல்லாரும் என்ன செய்தார்கள்? (அப். 4:24)

....

....

19. சீஷர்கள் எல்லாரும் ஜெபித்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவுடன், என்ன செய்தார்கள்? (அப். 4:31)

....

....

20. தேவன் எசேக்கியேலுக்குத் தன்னுடைய மக்கள் மத்தியில் என்ன விசேஷித்த ஸ்தானத்தைக்கொடுத்தார்? (எசே. 3:17)

....

21. பாவிகளை எச்சரிக்கத் தவறினால், எசேக்கியேலுக்கு என்ன நடக்குமென்று தேவன் கூறினார்? (எசே. 3:18)

....

....

22. எபேசுவிலிருந்து மனிதர்களெல்லாருக்கும் பவுல் எவ்விரண்டு காரியங்களைக்குறித்து சாட்சி கொடுத்தார்? (அப். 20:21)

(1) ....

(2) ....

23. எபேசுவிலிருந்த எல்லா மனிதரின் இரத்தப்பழிக்கும் நீங்கி தான் சுத்தமாயிருந்ததாக பவுல் ஏன் கூற முடிந்தது? (அப். 20:26-27)

....

....

24. கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளுக்கு இறுதியான பலன் என்ன? (2 தீமோ. 4:8)

....

மனப்பாட பகுதி: அப். 1:8

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும்வரை, அடுத்தப் பக்கத்தைத் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பத்து

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	சாட்சிகள்	1
2.	பூமியின் கடைசி வரை	1
3.	பூலோகமெங்கும் - சகல ஜாதிகளுக்கும்	1
4.	1. அவர் செய்த எல்லாவற்றிற்கும் 2. அவருடைய மரணம் 3. அவருடைய உயிர்த்தெழுதல்*	1 1 1
5.	அவரைக்குறித்து அவன் கண்டவைகளையும் கேட்டவைகளையுங்குறித்து, சகல மனுஷருக்கு முன்பாகவும் சாட்சியாக இருக்க வேண்டும்	3
6.	பெரியோருக்கும் சிறியோருக்கும் வேத வசனங்கள் (தீர்க்கதரிசனங்களும் மோசேயும்) உண்மையென்ற சாட்சி கொடுத்து வந்தார்	3
7.	ஆத்துமாக்களை இரட்சிக்கிறான் (விடுவிக்கிறான்)	1
8.	ஆத்தும ஆதாயம்	1
9.	தன் சகோதரனாகிய சீமோனை	1
10.	நாத்தான்வேல்	1
11.	நான் குருடனாயிருந்தேன், இப்பொழுதோ காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்	2
12.	1. கர்த்தருடைய செய்கைகள் 2. அவருடைய அதிசயங்கள்	1 1
13.	நீ பயப்படாதே, பேசு; மவுனமாயிராதே	2
14.	பயமுள்ள ஆவி	1
15.	கன்னியை	1
16.	கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாதே	2

17.	1. நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே 2. மனுஷருக்கு கீழ்படிவதைப்பார்க்கிலும், தேவனுக்கு கீழ்படிகிறதே அவசியமாயிருக்கிறது	2 1
18.	அவர்கள் ஒருமனப்பட்டு, தேவனிடம் தங்கள் சத்தத்தை உயர்த்தினார்கள் (ஜெபித்தார்கள்)	1
19.	தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்	1
20.	காவலாளன்	1
21.	அவர்கள் இரத்த பழியை தேவன் அவன் கையில் கேட்பேன் என்றார்	2
22.	1. தேவனிடத்தில் மனந்திரும்புதல்* 2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசம்*	1 1
23.	தேவனுடைய ஆலோசனை ஒன்றையும் மறைத்துவைக்காமல் அதை அறிவித்தபடியினால்	2
24.	நீதியின்* கிரீடம்	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்.)	4
	மொத்தம்	40

20 மதிப்பெண்கள் = 50%

28 மதிப்பெண்கள் = 70%

32 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பத்து

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு மட்டுமே சாட்சிகளாய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள், ஒரு குறிப்பிட்ட போதகத்திற்கோ, சபை பிரிவிற்கோ, அனுபவத்திற்கோ அல்ல. இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்றார் (யோவான் 12:32). கிறிஸ்தவ சாட்சி, இயேசுவை உயர்த்த வேண்டும். இதைப் பயனுள்ள விதத்தில் செய்ய, அச்சாட்சி பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, அவருடைய வல்லமையால் நிறைந்திருக்க வேண்டும்.

3. அப். 1:21-22 மற்றும் 4:33ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும். இயேசு கிறிஸ்துவைக்குறித்த ஒவ்வொரு சாட்சியின் மையக்கருத்தும், மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதலைக்* குறித்ததாகும்.

5-6. எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பவுலின் சாட்சி ஓர் உதாரணமாகும். தனிப்பட்ட அனுபவத்தைச் சார்ந்ததாக இருந்தது. கேட்போரை இயேசுவுக்கு நேரே திருப்பியதை. வேதத்தில் எழுதப்பட்டவைகளை நிரூபித்தது.

7-8. மற்ற ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த, உண்மையுள்ள சொந்த அனுபவசாட்சி, மிகச் சிறந்த பயனுள்ள யுக்தியாகும்.

9-10. பேதுரு அப்போஸ்தலர்களின் தலைவனாகவும், பிரதான பிரசங்கியாகவும் மாறினான். ஆனால், இயேசுவிடம் முதலில் வந்து, பிற்பாடு தன் சகோதரனாகிய பேதுருவை அழைத்துக்கொண்டு வந்தது, அந்திரேயாவாகும். பின்பு, அப்படியே பிலிப்பு நாத்தான்வேலை அழைத்து வந்தான். ஆகையால் ஆத்துமாக்களை ஆதாம் செய்ய, அப்போஸ்தலர்களே நல்ல முன்மாதிரியை ஏற்படுத்தினர்.

11. "அனுபவமுள்ள மனிதன், வாக்குவாதம் செய்கிறவனுடைய தயவிற்கு விட்டுவிடப்படுவதில்லை" என்று ஒருவர் கூறினார். இதன் அர்த்தம் என்னவென்றால், சொந்த அனுபவம், வெறும் வார்த்தைகளைக் காட்டிலும் பலமானது.

12. ஓர் கிறிஸ்தவனின் வார்த்தைகள் முன்னேற்றத்துக் குரியவைகளாகவும், தேவனுக்கு மகிமையை* கொண்டு வரும் வார்த்தைகளாகவும்* இருக்க வேண்டும். இவ்விதமாய் அவன் தன் விசுவாசத்தையும்* மற்றவர்களுடைய விசுவாசத்தையும் கட்டி எழுப்புகிறான்.

13-16, 19, 2 தீமோ. 1:7இல் பவுல் குறிப்பிடுகின்ற "பயத்தின் ஆவி" (பயந்த சுபாவமுள்ளவராயிருப்பது), மற்றவர்கள் விசுவாசிக்கும்படி, நீங்கள் சாட்சி கொடுக்கும் உங்கள் திறனைப் பாதிக்கும். இந்த ஆவி தேவனிடத்திலிருந்து வருவதில்லை. இந்த ஆவி, தன்னைப் பற்றிக்கொள்ளவோ, கட்டவோ, ஓர் கிறிஸ்தவன் அனுமதி அளிக்கக்கூடாது. பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதே இதற்கு தீர்வாகும்.

17 (2). தேவனுக்குக் கீழ்ப்படிவதா அல்லது மனிதனுக்குக் கீழ்ப்படிவதா என்ற தேர்வு பல்வேறு நேரங்களில் மிகத் தெளிவாக உள்ளது. பேதுரு மற்றும் யோவான் அளித்த பதில் இன்றும் உண்மையாகவே உள்ளது.

18. தங்கள் சாட்சியைத் தடை செய்யும் எந்தக் காரியத்தையும் மேற்கொள்ள, கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய ஆயுதம் - ஜெபம்.

20-23. நாம் மற்றவர்களுக்கு சாட்சி கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் நமக்குக்கிடைத்தும், நாம் அதை செய்யாவிட்டால், தேவன் அதை குற்றமாக காண்கிறார். பழைய ஏற்பாட்டில் எசேக்கியேலும், புதிய ஏற்பாட்டில் பவுலும், இதைப் புரிந்துகொண்டார்கள். எதையும் மறைத்து வைக்கக்கூடாதென்று, பவுல் தேவனால் கட்டளை பெற்றிருந்தார். பவுல் வெளியரங்கமாக "தேவனுடைய முழு ஆலோசனையையும்" கூற வேண்டுமென தேவன் விரும்பினார். இன்றும் கிறிஸ்தவர்களிடம் இதைத் தேவன் எதிர்பார்க்கிறார்.

பாடம் பதினொன்று

செழிப்புக்கான தேவனுடைய திட்டம்

முன்னுரை:

வேதம் முழுவதிலும், தம்மை நம்பி சேவிக்கிறவர்களை, ஆசீர்வதித்து செழிக்க செய்ய தேவன் வாக்களிக்கிறார். தேவனுடைய பொருளாதார மற்றும் உலகப் பொருளின் ஆசீர்வாதங்களைப் பெற, நாம் தேவனுடைய விசுவாசத்தின்* கோட்பாடைப் பின்பற்ற கற்றுக்கொள்ள வேண்டும். "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" (லூக்கா 6:38).

தேவனுக்கு கொடுத்து நாம் ஆரம்பம் செய்கிறோம். நாம் பெற்றுக்கொள்ளும் எல்லா பணம் அல்லது விளைவில், பத்தில் முதல் பங்கை நாம் கொடுக்கின்றோம். தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படும் இந்த முதல் பங்கு "தசமபாகம்" என்று அழைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறபடி, நாம் இதற்கு மேல், தேவனிடம் நம்முடைய காணிக்கைகளைக் கொண்டு வருகிறோம். விசுவாசத்தில்* நாம் இதைச் செய்யும்போது, தேவன் நம்மை முழுமையாக ஆசீர்வதித்து, நம்முடைய எல்லா தேவைகளையும் சந்திக்கிறார்.

மனப்பாட பகுதி: மத். 6:33

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறு பரிசீலனை செய்யுங்கள்)

பாட கேள்விகள்

அ. செழித்திருந்த தேவனுடைய ஊழியக்காரர்களின் உதாரணங்கள்

1. யுத்தத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வெற்றியைக்கொடுத்த போது, தேவனுடைய ஆசாரியனான மெல்கிசெதேக்கிற்கு ஆபிரகாம் என்ன திரும்ப கொடுத்தான்? (ஆதி. 14:19-20) ....

....

2. இதற்கு பதிலளிக்கும் விதமாக தேவன் ஆபிரகாமை எப்படி நடத்தினார்? (ஆதி. 24:1)..

....

3. எந்த நான்கு காரியங்களைத் தேவன் தனக்காக செய்ய வேண்டுமென யாக்கோபு விரும்பினான்? (ஆதி. 28:20)

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

4. இதற்குப் பதிலாக தேவனுக்கு என்ன கொடுப்பதாக யாக்கோபு வாக்களித்தான்? (ஆதி. 28:22)

....

5. தேவன் யாக்கோபோடு எப்படி இடைப்பட்டார்? (ஆதி. 33:11)

....

6. யோசேப்பு எவ்விதமான மனிதனாய் இருந்தான்? (ஆதி 39:2)

....

7. யோசேப்பின் செழிப்புக்குக்காரணம் என்ன? (ஆதி 39:2, 23)

....

8. தன்னுடைய நியாயப்பிரமாணத்தைக்குறித்து, தேவன் யோசுவாவுக்குக்கொடுத்த மூன்று கட்டளைகள் என்ன? (யோசு. 1:8)

(1) ....

(2) ....

(3) ....

9. இம்மூன்று காரியங்களையும் செய்தால், என்ன செய்வதாக தேவன் யோசுவாவுக்கு வாக்களித்தார்? (யோசு. 1:8)

....

10. தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் எல்லா கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொண்டு நடந்தால், என்ன நடக்குமென தாவீது சாலொமோனுக்கு உறுதியாகக்கூறினார்? (1 நாளா. 22:13)

....

11. உசியா தேவனை தேடின வரையிலும், தேவன் அவனுக்காக என்ன செய்தார்? (2 நாளா. 26:5)

....

12. எசேக்கியா தேவனைத் தேடி, முழு மனதோடு அவரை சேவித்த போது, அவனுக்கு என்ன நடந்தது? (2 நாளா. 31:21; 32:30)

....

ஆ. செழிப்புக்கான நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்

13. தேவன் ஓர் குறிப்பிட்ட விதமான நபரைக்குறித்து, ''அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என கூறுகிறார். (சங். 1:3)

(அ) அத்தகைய நபர் செய்யக்கூடாத மூன்று காரியங்களைப் பட்டியலிடுக: (சங். 1:1)

(1) ....

(2) ....

(3) ....

(ஆ) இப்போது, அந்த நபர் செய்ய வேண்டிய இரண்டு காரியங்களைப் பட்டியலிடுங்கள்:

(1) ....

(2) ....

14. எவ்விரண்டு விதங்களில் இஸ்ரவேல் தன்னைக்கொள்ளையடிப்பதாக தேவன் கூறினார்? (மல்கியா 3:8)

(1) .... (2) ....

15. தேவனைக்கொள்ளையடித்ததின் நிமித்தமாக இஸ்ரவேலுக்கு என்ன நடந்தது? (மல்கியா 3:9)

....

16. தன்னை எப்படிச் சோதித்துப் பார்க்க இஸ்ரவேலுக்குத் தேவன் சொன்னார்? (மல். 3:10) ....

....

17. அப்பொழுது, தேவன் அவர்களுக்கு என்ன செய்வேன் என்று வாக்களித்தார்? (மல். 3:10) ....

....

18. மற்ற எல்லாவற்றிற்கும் முன்பாக எவ்விரண்டு காரியங்களைத் தேடும்படியாக இயேசு கிறிஸ்தவர்களிடம் கூறுகிறார்? (மத். 6:33)

(1) ....

(2) ....

19. என்ன விளைவு பின் தொடர்ந்து வருமென கிறிஸ்து வாக்களிக்கிறார்? (மத். 6:33) ....

20. நாம் கொடுக்கும்போது, எந்த அளவினால் நமக்குத் திரும்ப அளக்கப்படும்? (லூக்கா 6:38) ....

....

21. தேவனுக்கென்று சேர்த்துவைக்கும்போது, எந்த அளவினால் கிறிஸ்தவர்கள் அளக்க வேண்டுமென பவுல் கூறினார்? (1 கொரி. 6:2)

....

22. கிறிஸ்து என்ன காரணத்துக்காக தரித்திரரானார்? (2 கொரி. 8:9)

....

23. தேவன் எப்படிப்பட்ட மனிதனிடத்தில் பிரியமாயிருக்கிறார்? (2 கொரி. 9:7) ....

24. நாம் திரளாய் அறுவடை செய்ய விரும்பினால், முதலாவது நாம் என்ன செய்ய வேண்டும்? (2 கொரி. 9:6) ....

....

25. தேவனுடைய கிருபை நம்மிடத்தில் பெருகினால், என்ன இரண்டு விளைவுகள் தொடரும்? (2 கொரி. 9:8)

(1) ....

(2) ....

26. எப்படிப்பட்ட மக்களுக்குத் தேவன் நன்மை வழங்காமல் இருக்க மாட்டார்? (சங். 84:11) ....

....

27. எப்படிப்பட்ட மக்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது? (சங். 34:10)

....

28. தேவன் எதை விரும்புகிறார்? (சங். 35:27)

....

மனப்பாட பகுதி: மத்தேயு 6:33

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும்வரை, இப்பக்கத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினொன்று

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	எல்லாவற்றிலும் தசமபாகம் (பத்தில் ஒரு பங்கு)	1
2.	தேவன் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்தார்	1
3.	(1) தன்னோடு இருக்க வேண்டும்	1
	(2) அவன் போகிற வழியில் அவனைக் காக்க வேண்டும்	1
	(3) புசிக்க ஆகாரம் கொடுக்க வேண்டும்	1
	(4) உடுக்க வஸ்திரம் கொடுக்க வேண்டும்	1
4.	தேவன் தனக்குக் கொடுக்கும் எல்லாவற்றிலும் பத்தில் ஓர் பங்கு (தசமபாகம்)	1
5.	தேவன் அவனுக்கு அநுக்கிரகம் செய்தார்	1
6.	காரிய சித்தியுள்ள மனிதன்	1
7.	கர்த்தர் அவனோடிருந்து, அவன் செய்த எல்லாவற்றையும் வாய்க்கச் செய்தார்	1
8.	(1) அவன் வாயிலிருந்து பிரியாதிருக்க வேண்டும்	1
	(2) அவன் அதை இரவும் பகலும் தியானிக்க* வேண்டும்	1
	(3) அதில் எழுதியிருந்தபடியெல்லாம் செய்ய கவனமாயிருக்க வேண்டும்	1
9.	அவன் வழியை வாய்க்கச் செய்து, புத்திமானாய் நடக்கக் கட்டளையிடுவதாக சொன்னார்	2
10.	அவன் பாக்கியவானாயிருப்பான் (செழித்திருப்பான்)	1
11.	தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்	1
12.	செய்த எல்லா காரியத்திலும் சித்திப்பெற்றான்	1
13அ.	(1) துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடக்கக்கூடாது	1
	(2) பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாது	1
	(3) பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காரக்கூடாது	1
13ஆ.	(1) கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டும்	1
	(2) இரவும் பகலும் வேதத்தில் தியானமாயிருக்க வேண்டும்	1
14.	(1) தசமபாகங்கள்	1
	(2) காணிக்கைகள்	1

15.	முழு தேசமும் சாபத்தின் கீழ் வந்தது	1
16.	எல்லா தசமபாகங்களையும் பண்ட சாலையில் கொண்டு வருவதினால்	1
17.	வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமல் போகுமட்டும் அவர்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவார்	2
18.	(1) தேவனுடைய இராஜ்யம் (2) தேவனுடைய நீதி*	1 1
19.	அப்பொழுது இவைகளெல்லாம் (உலகப் பொருள்) அவர்களுக்குக் கூட கொடுக்கப்படும்	1
20.	எந்த அளவினால் நாம் மற்றவர்களுக்கு அளக்கிறோமோ அதே அளவினால்	1
21.	அவனவன் வரத்துக்குத்தக்கதாக	1
22.	அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாக வேண்டும் என்பதற்காக	2
23.	உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில்	1
24.	திரளாய் விதைக்க வேண்டும்	1
25.	(1) எல்லாவற்றிலும், எப்போதும் நமக்குச் சம்பூரணம் உண்டாகும் (2) சகல வித நற்கிரியைகளிலும் பெருகுவோம்	1 1
26.	உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு	1
27.	கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு	1
28.	தன் ஊழியக்காரரின் சுகத்தை (செழிப்பை)	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் ஒரு மதிப்பெண்ணைக் குறைக்கவும். மூன்று தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்.)	4
	மொத்தம்	47

24 மதிப்பெண்கள் = 50%
33 மதிப்பெண்கள் = 70%
38 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினொன்று

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-5. தசமபாகம் மோசேயின் நியாயப்பிரமாணத்தோடு ஆரம்பிக்கவில்லை என்பதைக்கவனியுங்கள். முதல் தசமபாகம் கொடுத்தவர் என்று வேதத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நபர் ஆபிரகாம். ரோமர் 4:11இல், ஆபிரகாம் "விசுவாசிக்கிற யாவருக்கும் . . . விசுவாசத்தின்* அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களுமாயிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கிறான்" என கூறப்பட்டுள்ளது. தேவனுக்கு இன்றும் தங்கள் தசமபாகங்களைக்கொடுக்கிறவர்கள் ஆபிரகாமின் அடிச்சுவடுகளின் விசுவாசத்தில்* இன்னமும் நடைபோடுகிறார்கள்.

ஆபிரகாம், மெல்கிசெதேக்கென்னும் ஆசாரியனுக்குத் தசமபாகங்களைக்கொடுத்தான் என்பதைக்கவனித்துப் பாருங்கள். எபிரெயர் 5-7இன்படி "மெல்கிசெதேக்கின் முறைமையின்படி" இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிறார். இன்றும், விசுவாசிக்கிற தம்முடைய மக்களின் தசமபாகங்களை இயேசு ஏற்றுக்கொள்ளுகிறார். ஆபிரகாம், யாக்கோபு ஆகிய இருவரும் தசமபாகம் கொடுத்ததின் நிமித்தமாக தேவனுடைய ஆசீர்வாதத்தை உலகப் பொருளில் அனுபவித்தார்கள். ஆதி. 32:10இல், யாக்கோபு, "நான் கோலும் கையுமாக இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுதோ இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்" என்று கூறினான். யாக்கோபு, தேவனுக்கு தசமபாகம் கொடுக்க ஆரம்பித்த போது, ஒரு கோலைத் தவிர அவனிடம் ஒன்றுமில்லை. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பின், வளர்ந்து பெருகுகிற ஓர் பெரிய குடும்பத்தின் செல்வந்த தலைவனாக இருந்தான்.

6-7. கடினமான பாதைகள், வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற முடியாதபடிக்குத் தேவனைத் தடை செய்ய மாட்டாது. சிறையிலும் யோசேப்பு வெற்றியுள்ளவனாய் இருந்தான். எகிப்தில் பெரிய தலைவனானபோது, அவன் இன்னும் அதிகமாய் வெற்றி பெற்றான். யோசேப்பின் காரிய சித்தி, அவனுடைய நற்குணத்திலிருந்தும், தேவனோடு அவனுக்கு இருந்த உறவிலிருந்தும் வந்தது.

8-9. யோசுவா தேவனுடைய மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் நடத்திச் செல்ல அழைக்கப்பட்டான். இன்றும் "வாக்குத்தத்தங்களின் தேசத்துக்குள்" பிரவேசிக்கவேகிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். வெற்றிக்கான அடிப்படை அன்றும்,

இன்றும் ஒன்றுதான். சரியான தியானித்தலே* அதற்கு திறவுகோல். இந்த விடையைக்கேள்வி 13ஆ (2) ஓடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

10-12. தாவீதின் நாட்களிலிருந்து, பாபிலோனிய சிறையிருப்பின் நாட்கள் வரை, நியாயப்பிரமாணத்துக்குக்கீழ்ப்படிந்து, தேவாலயத்தின் ஊழியத்தில் உண்மையாயிருந்த யூதாவின் எல்லா ராஜாக்களையும் தேவன் ஜெயிக்கச் செய்தார்.

13. சங்.1:1-3 இவ்வார்த்தைகளின்படி ஜீவிக்கிற ஒவ்வொரு விசுவாசிக்கும் எழுதப்பட்டதென்பதை கவனித்துப் பாருங்கள்.

14-15. தேவனுடைய மக்கள் தேவனுக்குக்கொடுப்பதில் உண்மையற்றவர்களாய் இருக்கும்போது, ஓர் தேசத்தின் மீது சாபம் வரலாம். பழங்காலத்து இஸ்ரவேலுக்கு மட்டுமல்ல, இன்று இருக்கும் எல்லா தேசங்களுக்கும் இது உண்மையாகும்.

16-21. நீதிக்கு* அடிப்படையாக தேவன் ஏற்றுக்கொள்ளும் ஒரே காரியம் விசுவாசம்*தான். "விசுவாசத்தினால்* வராத யாவும் பாவமே" (ரோ. 14:23. (எபி. 11:6ஐ ஒப்பிடவும்). பணத்தைக்கையாடுவது மற்றும் நம்முடைய வாழ்க்கையின் மற்றெல்லா பகுதிக்கும் இது பொருந்தும்.

22. வேதத்தைப் பொறுத்தவரை, தரித்திரம் ஓர் சாபமாகும். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தகர்ப்பதால் வரும் எல்லா சாபங்களும், உபா. 28:15-65இல் பட்டியலிடப்பட்டுள்ளது. 48ம் வசனத்தில், "சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும், தாகத்தோடும், நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்" என்பது சேர்க்கப்பட்டுள்ளது. இது பூரண தரித்திரமாகும். இச்சாபங்கள் ஒவ்வொன்றையும் இயேசு சிலுவையில் தம்மீது சுமந்து கொண்டார். (கலா. 3:13-14ஐ பார்க்கவும்). அவர் பட்டினியாய், தாகமாய், நிர்வாணமாய், எல்லாம் குறைவுபட்ட நிலையில் இருந்தார். எல்லாத் தேவைகளுக்கும் தேவனுடைய ஐசுவரியத்தை விசுவாசிகள் பெறும்படியாகவேஇப்படிச் செய்தார். (பிலி. 4:19ஐப் பார்க்கவும்).

23. "உற்சாகமாய்" (2 கொரி. 9:7) என்பது "ஆரவாரமிக்க" என்ற அர்த்தமாகும்.

24. ஓர் விவசாயி விதை விதைக்கும் வண்ணமாக கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும். தேவனுடைய இராஜ்யத்தில் சிறந்த பலன்களைக்கொடுக்கும் பகுதிகளில், அவர்கள் ஜாக்கிரதையாய், ஞானமாய்க்கொடுக்க வேண்டும்.

26-28. தம்மை விசுவாசித்து தமக்குக்கீழ்ப்படிகின்ற மக்களுக்காக தேவன் வைத்திருக்கும் சித்தம் தான் செழிப்பு.

இரண்டாவது முன்னேற்ற மதிப்பீடு

மீண்டும் வாழ்த்துக்கள்.........!

முதல் பதினோரு பாடங்களை முடித்துவிட்டீர்கள் - இப்பாடத்திட்டத்தில் பாதிக்குமேல். முதல் ஆறு பாடங்கள் இரட்சிப்பின் செய்தியை மையமாகக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் தொடரும் உங்கள் வாழ்க்கைக்கு அஸ்திபாரம் அமைந்தது. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தின் முக்கியத்துவமும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதன் முக்கியத்துவத்தையும் நீங்கள் கற்றுக்கொண்டீர்கள்.

நீங்கள் முடித்த ஐந்து பாடங்களில், கிறிஸ்துவுக்குள் ஓர் ஆழமான வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கிறீர்கள். இப்பாடங்களின் மூலம், ஆராதனை ஜெபம் மற்றும் சாட்சி பகருதல் என்ற தலைப்புகள் அறிமுகம் செய்யப்பட்டன. உங்கள் சரீரம் மற்றும் பணத் தேவைகளுக்குத் தேவனுடைய ஏற்பாடுகளை நீங்கள் நேரடியாய் கண்டீர்கள்.

சிந்தித்துப் பாருங்கள்! இப்போது, உங்களுடைய மிகப் பெரிய தேவைகளுக்கு மட்டுமல்ல, உங்களைப் போல் போராடி, வேதனைப்படுகிற எண்ணற்ற மக்களுடைய பிரச்சனைகளுக்கான பதில் உங்களிடமிருக்கிறது. இனி நீங்கள் பிரச்சனையில் ஓர் பகுதி அல்ல, நீங்கள் தீர்வில் ஓர் பகுதியாக மாறிவிட்டீர்கள்! உங்களைச் சுற்றிலும் இருளில் இருக்கிறவர்களுக்கு நீங்கள் வெளிச்சமாயிருக்க முடியும். மற்றவர்களுக்குக்கிறிஸ்துவைஅறிமுகம் செய்யும் அடிப்படை நிலையை விட்டு, உங்கள் அனுபவத்தை அவர்களுக்கு எடுத்துச்சொல்லும் நிலைக்கு முன்னேறியிருக்கிறீர்கள்.

எவ்வளவு பெரிய பொறுப்பு! இச்சவாலை தனியாக நீங்கள் சந்தித்திருக்க முடியாது. ஆனால் தேவன் உங்களை தனியாக விடவில்லை. அவருடைய கிருபை மற்றும் மகிமையை எல்லா சூழ்நிலையிலும் பிரதிபலிக்கும் ஓர் வாழ்க்கை வாழ உங்களுக்கு எல்லா ஏற்பாடையும் தேவன் செய்து விட்டார். இச்சந்தர்ப்பத்தில், நீங்கள் வேதத்தை தேடி, 170 குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில்களை கண்டுப்பிடித்திருக்கிறீர்கள். உங்கள் வேத ஞானம் எட்டி வைக்கும் படிகளாய் வளர்ந்துக்கொண்டிருக்கிறது!

அடுத்து ஐந்து பாடங்களுக்கு கடந்து போகும் போது, நீங்கள் வேதத்தில் இஸ்ரவேலின் முக்கியத்துவத்தை காண ஆரம்பிப்பீர்கள். தம்முடைய மக்களுக்கான தேவனுடைய திட்டம் என்ன? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் எப்படி நிறைவேறின. மோசே மற்றும் இயேசுவின் ஊழியத்தை ஒரே போலாக்கும் காரியங்கள் என்ன என்பதை காண்பீர்கள்.

இரண்டாவது மறுபரிசீலனை

அடுத்த பாட பகுதிக்குள் செல்லும் முன், பாடங்கள் 7ல் இருந்து 11 வரை கற்றுக்கொடுக்கப்பட்ட எல்லா கருத்துக்களையும் புரிந்துகொண்டீர்களா என்பதை சோதித்து பாருங்கள். முன்பு பூர்த்தி செய்த பாடங்களின் அர்த்தத்தை நீங்கள் புரிந்துக்கொள்ளும்போது, பின்வரும் பாடங்களை படிக்க நீங்கள் இன்னும் தகுதி பெறுவீர்கள். இப்பரிசீலனையில் பின்பற்றப்பட்டுள்ள முறை, முதல் பரிசீலனையைப் போன்றதே.

முதலாவது, முன்னிருக்கும் எட்டு பாடங்களின் கேள்விகளையும் அவைகளோடு பதில்களையும் கவனமாய் படித்துப் பாருங்கள். சரியான பதிலை நீங்கள் அறிந்தும் புரிந்தும் இருக்கிறீர்களா என்பதை சோதியுங்கள்.

இரண்டாவதாக, இவ்வைந்து பாடங்களிலும் கற்றுக்கொண்ட மனப்பாட பகுதிகளை மறுபரிசீலனை செய்யுங்கள்.

மூன்றாவதாக, பின்வரும் கேள்விகளைக் கவனமாய்ப் படித்து, அவைகளுக்கு எப்படி பதில் கொடுப்பீர்கள் என்பதை ஆராய்ந்து பாருங்கள். ஒவ்வொரு கேள்வியும் இதுவரை நீங்கள் படித்திருக்கும் பாடங்களோடு ஏதோ ஓர் விதத்தில் சம்பந்தப்பட்டது.

1. இன்றைக்கும் தம்மை நம்புகிறவர்களுக்குத் தேவன் சுகமளிக்கிறார் என்பதை விசுவாசிக்கிறதற்கு, நீங்கள் என்ன வேதாகமத்தின் அடிப்படையிலான காரணங்களைக்கொடுப்பீர்கள் ?
2. சுகமளிப்பதற்குத் தேவன் எம்மூன்று முறைகளைப் பயன்படுத்துகிறார் ? இவைகளை நீங்கள் எப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும் ?
3. தேவன் உங்கள் வாழ்க்கையை எப்படித் தொட்டார் என்று நீங்கள் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளக்கூடிய ஓர் சுருக்கமான சாட்சியை எழுதுங்கள்.
4. “அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்” (சங்கீதம் 1:3) என்று தேவன் எத்தகைய நபரைக்குறித்து வாக்களிக்கிறார் என்பதைச் சுருக்கமாக விவரியுங்கள்.

கடைசியாக, மேற்காணும் கேள்விகளுக்கு உங்கள் சொந்த பதில்களை ஓர் தனித்தாளில் எழுதுங்கள்.

இவ்விரண்டாம் மறுபரிசீலனைக்கு மதிப்பெண்கள் ஏதுமில்லை. நீங்கள் இதுவரை கண்டுபிடித்த எல்லாவற்றையும் பற்றிக்கொள்ள உதவுவதே இதன் நோக்கம். இது நிறைவேறினது என்ற திருப்தி உங்களுக்கு உண்டானவுடன், பாடம் 12க்கு, பக்கத்தைத் திருப்பிக்கொள்ளுங்கள்.

பாடம் பன்னிரெண்டு

தேவனுடைய விசேஷித்த திட்டம்

முன்னுரை

கி.மு. 1900ல் தேவன் ஆபிராம் (பிற்பாடு ஆபிரகாம் என்று மாற்றப்பட்டவன்) என்ற மனிதனை ஓர் ஜாதிக்குத் தகப்பனாக தெரிந்துகொண்டார். அந்த ஜாதிக்கு ஓர் விசேஷித்த எதிர்காலத்தை தேவன் தீர்மானித்திருந்தார். தேவன் ஆபிரகாமோடு ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்த உடன்படிக்கையில், பூமியின் சகல ஜாதிகளும் அவனுடைய சந்ததியின் மூலம் ஆசீர்வதிக்கப்படுமென்று தேவன் வாக்குக்கொடுத்தார். தேவன் இவ்வுடன்படிக்கையை ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குக்கும், அவன் பேரனாகிய யாக்கோபுக்கும் (பிற்பாடு இஸ்ரவேல் என்ற பெயரை பெற்றவன்) உறுதிப்படுத்தினார்.

430 ஆண்டுகளுக்குப் பின், யாக்கோபின் சந்ததியாரான இஸ்ரவேல் மக்களோடு, தேவன் மோசே மூலமாய் உடன்படிக்கை செய்தார். இதில் அவர் அவர்களுக்குச் சட்டங்களின் ஓர் முழுத்தொகுப்பையும், அவர்களுடைய எதிர்காலத்தைக்குறித்த ஓர் முழு சித்திரத்தையும் கொடுத்தார். பின்பு, தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பினார், இவர்கள் தேவனால் சொல்லப்பட்ட காரியங்கள் எப்படி நிறைவேறும் என்று முன்னறிவித்தார்கள்.

மனப்பாட பகுதி: யாத். 19:5-6

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டம்

1. எத்தனை பேர் ஆபிரகாமின் மூலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் வாக்குக்கொடுத்தார்? (ஆதி. 12:3)..

....

2. ஆபிரகாமை தேவன் எந்த அடிப்படையில் நீதிமான் என்று ஏற்றுக்கொண்டார்? (ஆதி. 15:6)..

....

3. ஆபிரகாமை எத்தனை பேருக்குத் தகப்பனாக மாற்றுவதாக தேவன் கூறினார்? (ஆதி. 17:4-5)..

4. தேவன் யாரோடு நித்திய உடன்படிக்கை பண்ணினார்? (ஆதி. 17:7)

....

5. இவ்வுடன்படிக்கையில் தேவன் ஆபிரகாமுக்கு என்ன வாக்குக்கொடுத்தார்? (ஆதி. 17:7)..

....

6. ஆபிரகாமின் எந்த இரண்டு சந்ததியார், பின்பு இவ்வுடன்படிக்கையில் பேரெழுதப்பட்டார்கள்? (யாத். 6:3-4) (லேவி. 26:42)

....

7. தேவன் யாக்கோபுக்கு என்ன புதிய பெயரைக்கொடுத்தார்? (ஆதி. 35:10)...

8. ஆபிரகாமின் சந்ததியார் எவ்வளவு திரளாயிருப்பார்கள் என்பதைக்காண்பிக்க தேவன் எவ்விரண்டு சித்திரங்களைப் பயன்படுத்தினார்? (ஆதி. 22:17) (1) ....

(2)...

9. ஆபிரகாமின் வித்திலே எத்தனை பேர் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் வாக்குக்கொடுத்தார்? (ஆதி. 22:18) ....

....

10. தேவன் இதை ஆபிரகாமுக்கு ஏன் வாக்களித்தார்? (ஆதி. 22:18)

....

11. தேவன் வாக்களித்ததை ஆபிராகாமின் பிள்ளைகளும் வீட்டாரும் பெற்றுக்கொள்வதற்கு, அவன் என்ன செய்ய வேண்டுமென தேவன் எதிர்பார்த்தார்? (ஆதி 18:19)...

....

ஆ. மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய நோக்கங்கள்

12. சீனாய் மலைக்கு வந்தபோது, இஸ்ரவேல் மக்களிடம் தேவன் வைத்த முதல் இரண்டு கோரிக்கைகள் என்ன? (யாத். 19:5)

(1) ....

(2)..

13. இக்கோரிக்கைகளை நிறைவேற்றினால், அவர்கள் யாராயிருப்பார்களென்று தேவன் கூறிய மூன்று காரியங்கள் என்ன? (யாத். 19:5-6) (1) ....

(2)..

(3)..

14. இதே நிபந்தனைகளின் அடிப்படையில், தேவன் மற்றெந்த காரியத்தை வாக்குபண்ணினார்? (உபா. 28:1) ....

....

15. இது இஸ்ரவேல் மக்களைக்குறித்து, மற்றவர்களுடைய மனநிலையை எவ்விரண்டு விதங்களில் பாதிக்குமென எதிர்பார்க்கப்பட்டது? (உபா. 28:10) (1) ....

....

(2)..

16. இஸ்ரவேல் தேவனுடைய உடன்படிக்கையை கைக்கொண்டால் ஏற்படும் விளைவு என்ன? (உபா. 29:9) ....

....

இ. சங்கீதங்கள் மற்றும் தீர்க்கதரிசன ஆகமங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தேவனுடைய நோக்கங்கள்

17. இஸ்ரவேல் மீதிருக்கும் தேவனுடைய தயையும் ஆசீர்வாதமும், மீதமுள்ள உலகத்தாரை எவ்விரண்டு விதங்களில் பாதிக்கும்? (சங். 67:1-2) (1) ....

....

(2)..

....

18. தான் தெரிந்துகொண்ட தம்முடைய ஊழியக்காரன் மீது ஆவியை வைப்பேன் என்று தேவன் வாக்களிக்கிறார். புறஜாதியாருக்காக இவ்வூழியக்காரர் என்ன செய்வார்? (ஏசா. 42:1) ....

....

19. இஸ்ரவேலுக்கும் புறஜாதிகளுக்கும் எவ்விரண்டு காரியங்களாக இருக்கும்படி, இவ்வூழியக்காரனை தேவன் ஏற்படுத்துவார்? (ஏசா. 42:7)

(1) ....

(2) ....

20. எவ்விரண்டு காரியங்களாயிருக்க இஸ்ரவேலை தேவன் தமக்காக தெரிந்துகொண்டார்? (ஏசா. 43:10)

(1) ....

(2) ....

21. தேவன் தம்மை வெளிப்படுத்தினதைக்குறித்து, எம்மூன்று விதங்களில் இஸ்ரவேல் செயல்படவேண்டுமென்று தேவன் விரும்பினார்? (ஏசா. 43:10ஆ)

(1) ....

(2) ....

பின் நாட்களில், இஸ்ரவேலுக்காக தேவனுடைய திட்டங்கள் நிறைவு பெறும், ஓர் காலத்தைக்குறித்து, தீர்க்கதரிசிகள் விவரித்து எழுதினார்கள். பின் வரும் கேள்விகள், அக்காலத்தைக்குறித்தவை.

22. எவ்விரண்டு காரணங்களுக்காக பல மக்கள் கர்த்தருடைய பர்வதத்துக்கு போவார்கள். (ஏசா. 2:2-3)

(1) ....

(2) ....

23. எவ்விரண்டு காரியங்கள் சீயோனிலிருந்தும் எருசலேமிலிருந்தும் வெளிப்படும்? (ஏசா. 2:3)

(1) ....

(2) ....

24. பூமியின் ஜனங்கள் காரிருளில் இருக்கும்போது கர்த்தர் சீயோனுக்காக என்ன செய்வார்? (ஏசா. 60:2)

....

....

25. ஜாதிகளுக்கும் அவர்களுடைய ராஜாக்களுக்கும் இதற்கு என்ன பதிலளிப்பார்கள்? (ஏசா. 60:3)

....

....

26. இஸ்ரவேல் தேசம் புதுப்பிக்கப்பட்டு, மறுபடியும் கட்டப்படும்போது, யூதர்களுக்கு எவ்விரண்டு பெயர்கள் கொடுக்கப்படும்? (ஏசா. 61:4-6)

(1) ....

(2) ....

27. எவ்விரண்டு நோக்கங்களுக்காக அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமுக்கு வருவார்கள்? (சக. 8:22)

(1) ....

(2) ....

28. மற்ற தேசத்தின் மனிதர் ஓர் யூதனைப் பார்த்து என்ன சொல்லுவார்கள்? (சகரியா 8:23)

....

....

மனப்பாட பகுதி: 19:5-6

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்

....

....

....

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பன்னிரெண்டு

கேள்வி	விடை	மதிப்பெண்கள்
1.	பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம்.	1
2.	ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்	1
3.	பல ஜாதிகளுக்கு	1
4.	ஆபிரகாமோடும் அவன் சந்ததியோடும்	1
5.	அவனுக்கும் அவன் பின் வரும் அவன் சந்ததிக்கும் தேவனாயிருப்பேன் என்று வாக்குக்கொடுத்தார்	1
6.	ஈசாக்கு மற்றும் யாக்கோபு	1
7.	இஸ்ரவேல்	1
8.	(1) வானத்து நட்சத்திரங்கள் (2) கடற்கரை மணல்	1 1
9.	பூமியின் சகல ஜாதிகளும்	1
10.	ஆபிரகாம் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியால்	1
11.	நீதியையும்* நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடக்க, அவர்களுக்கு கட்டளை கொடுக்க வேண்டும்.	2
12.	(1) தேவனுடைய வாக்கைக் கேட்க வேண்டும் (2) தேவனுடைய உடன்படிக்கையை கைக்கொள்ள வேண்டும்	1 1
13.	(1) சகல ஜனங்களிலும் தேவனுக்கு சொந்த சம்பத்து (2) ஓர் ஆசாரிய ராஜ்யம் (3) ஓர் பரிசுத்த ஜாதி	1 1 1
14.	பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் மேன்மையாக வைப்பார்	1

15.	(1) கர்த்தருடைய நாமம் அவர்களுக்குத் தரிக்கப்பட்டது என்று கண்டு (2) அவர்கள் இஸ்ரவேலுக்குப் பயப்படுவார்கள்	1 1
16.	அவர்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்	1
17.	(1) கர்த்தருடைய வழி பூமியில் அறியப்பட்டிருக்கும் (2 கர்த்தருடைய இரட்சண்யம்* எல்லா ஜாதிகளுக்கும் விளங்கும்	1 1
18.	அவர் புறஜாதிகளுக்கு* நியாயத்தை வெளிப்படுத்துவார்	1
19.	(1) ஜனத்திற்கு (இஸ்ரவேலுக்கு) உடன்படிக்கை (2) புறஜாதிகளுக்கு* ஒளி	1 1
20.	(1) அவருடைய சாட்சிகள் (2) அவருடைய தாசன்	1 1
21.	(1) அறிந்து (2) உணர்ந்து (3) விசுவாசிக்க வேண்டும்	1 1 1
22.	(1) கர்த்தர் தமது வழிகளை அவர்களுக்கு போதிக்கும்படியாக (2) அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடக்கும்படியாக	1 1
23.	(1) வேதம் (2) கர்த்தரின் வசனம்	1 1
24.	சீயோன் மேல் கர்த்தர் உதிப்பார், அவருடைய மகிமை அவர்கள் மேல் காணப்படும்	2
25.	புறஜாதியார்* அந்த வெளிச்சத்தினிடத்திற்கும், உதிக்கின்ற ஒளியினிடத்திற்கு இராஜாக்களும் நடந்து வருவார்கள்.	2
26.	(1) கர்த்தருடைய ஆசாரியர் (2) தேவனுடைய பணிவிடைக்காரர்கள்	1 1

27.	(1) சேனைகளின் கர்த்தரைத் தேட (2) கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ண	1 1
28.	தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம்.	2
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள் (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணைக் குறைக்கவும். 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் அந்த வசனத்துக்கு மதிப்பெண்ணிட வேண்டாம்.	8
	மொத்தம்	54

27 மதிப்பெண்கள் = 50%

38 மதிப்பெண்கள் = 70%

43 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பன்னிரெண்டு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1. ஆதியிலிருந்தே தேவனுடைய திட்டம் பூமியிலிருந்த எல்லா ஜாதிகளையும் உட்படுத்தியது.

2. தேவனோடு ஆபிரகாமுக்கிருந்த உறவின் அடித்தளமே, அவனுடைய விசுவாசம்*தான்.

3. ஆபிராம் என்றால் "உயர்த்தப்பட்ட தகப்பன்"; ஆபிரகாம் என்றால் "திரளானோருக்குத் தகப்பன்". ஆதியிலிருந்தே தேவனுடைய திட்டம், ஆபிரகாமின் உடனடி சந்ததியாரை தாண்டி, எல்லா ஜாதிகளிலிருந்தும் உட்படுத்தியது.

4-5. தேவன் செய்யக்கூடிய மிக கெம்பீரமான அர்ப்பணிப்பு, ஓர் உடன்படிக்கையே. தேவனோடிருக்கும் எந்த நிரந்தர உறவும் ஓர் உடன்படிக்கையின் அடிப்படையில் தான் இருக்க வேண்டும். (சங். 50:5ஐ பார்க்கவும்)

6-7. தேவனுடைய உடன்படிக்கை முதலாவது ஈசாக்குக்குத் தான் உறுதி செய்யப்பட்டது (இஸ்மவேலுக்கல்ல); அதற்குப் பின் யாக்கோபுக்கு (இஸ்ரவேல் என்று மறு பெயர் பெற்றவன்); அதன் பின் யாக்கோபிலிருந்து தோன்றி, இஸ்ரவேல் என்ற பெயரை பெற்ற தேசத்திற்கும்.

8-9. ஆபிரகாமின் மூலமாய் ஆசீர்வதிக்கப்பட போகும் மக்களின் எண்ணிக்கை, அவன் கற்பனைக்கும் கணக்கீடுக்கும் அப்பாற்பட்டதென்று தேவன் வலியுறுத்தினார்.

10. ஆபிரகாமின் விசுவாசம்* அவனுடைய கீழ்ப்படிதலில் வெளிப்பட்டது-தன் சொந்த குமாரனையும் பலியிடுவதாக இருந்தாலும் சரி.

11. ஆபிரகாம் தன்னுடைய வீட்டாருக்குக்கற்றுக்கொடுத்து ஒழுங்குபடுத்தினது, எல்லா தகப்பன்மாருக்கும் தேவனுடைய அளவுகோலை நிர்ணயித்தது.

12. தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுப்பதே அவருடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் திறவுகோலாயிருக்கிறது. (யாத். 15:26 மற்றும் உபா. 28:1-2ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்)

13. இஸ்ரவேலுக்கான தேவனுடைய திட்டத்தை இம்மூன்று வாக்குத்தத்தங்களும் சுருக்கமாய் கூறுகின்றன.

14-15. மற்ற எல்லா தேசங்களுக்கும், இஸ்ரவேலை வழிகாட்டியாகவும் முன்னுதாரணமாகவும் ஏற்படுத்துவதே தேவனுடைய நோக்கமாக இருந்தது.

16. 12ம் கேள்விக்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்.

17. இஸ்ரவேலின் மீது, தேவன் பொழியும் சகல ஆசீர்வாதங்களும், அவர்களிலிருந்து, மற்ற ஜாதிகளுக்கு புரண்டோட வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம்.

18-19. இறுதியாக, இங்கே விவரிக்கப்பட்டுள்ள தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரன் மூலமாய், இஸ்ரவேலுக்காக தேவன் வைத்திருக்கும் திட்டங்கள் நிறைவேறும்.

20. கேள்விகள் 14-15 மற்றும் 18-19க்குக்கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்.

21. தேவனுடைய நோக்கத்தை இஸ்ரவேல் நிறைவேற்றுவதற்கு, இம்மூன்று விளைவுகளும் ஏற்படுவது அவசியமாகும்.

22-23. எல்லா ஜாதிகளுக்கும் ஆவிக்குரிய போதனையின் மையமாக இஸ்ரவேல் விளங்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம்.

24-25. உலகளாவிய துயரம் மற்றும் இருளின் ஓர் கால கட்டத்தோடு, தற்போதுள்ள யுகம் முடிவிற்கு வரும். இதன் மத்தியில், தேவன் முதலாவது சீயோனுக்கும், பின்பு சீயோன் மூலமாய் ஜாதிகளுக்கும் அவர்கள் தலைவர்களுக்கும் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவார்.

26. யாத். 19:6இல் கூறப்பட்டுள்ளபடியே, இஸ்ரவேலின் சீர்ப்படுத்துதல், ஆதியில் இருந்த தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும்.

27-28. கேள்விகள் 22-23ல் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்.

பாடம் பதிமூன்று

தோல்வி மற்றும் மீட்பு

முன்னுரை:

தேவன் இஸ்ரவேலோடு, இரண்டு எதிர்மறையான பக்கங்களுள்ள ஓர் உடன்படிக்கையை மோசேயின் மூலம் செய்தார். அவ்வுடன்படிக்கைக்கு இஸ்ரவேல் உண்மையாயிருக்குமானால், மற்ற எல்லா ஜாதிகளிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். ஆனால் உண்மையற்றிருந்தால், எப்போதும் கடுமையில் அதிகரிக்கும் நியாயத்தீர்ப்புகளின்* தொடரை தேவன் அவர்கள் மேல் கொண்டுவருவார். இதைத் தொடர்ந்து, சரித்திரத்தில் இஸ்ரவேல் உண்மையற்று இருந்தபடியால், தேவன் கூறின எல்லா நியாயத்தீர்ப்புகளும்* அவர்கள் மேல் வந்தன.

ஆனாலும், பின் நாட்களில் சீயோனுக்கு ஓர் மீட்பர் வருவாரென்றும், இஸ்ரவேல் தன் எல்லா பாவங்களிலிருந்தும் மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெற்று, மீண்டும் ஓர் பரிசுத்த ஜாதியாக விளங்குமென்றும் தேவன் வாக்களித்தார்.

மனப்பாட பகுதி: ஏசா. 43:25

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. இஸ்ரவவேலின் தோல்வி

1. தன் மரணத்துக்குப் பின்பு என்ன செய்வார்களென்று, மோசே இஸ்ரவேலை எச்சரித்தார்? (உபா. 31:29)

....

....

2. ஏன் கடைசி நாட்களில் இஸ்ரவேல் மீது தீங்கு வரும்? (உபா. 31:29)

....

....

....

3. ஓர் குறிப்பிட்ட விதத்தில் தனக்கு விரோதமாய் செயல்பட வேண்டாம் என தேவன் இஸ்ரவேலை எச்சரித்தார். எவ்விதத்தில்? (லேவி. 26:21,23,27)

....

4. தேவனுடைய எச்சரிப்புகளை இஸ்ரவேல் தள்ளினால், தொடர்ச்சியான சில தீங்குகள் அவர்கள் மீது வருமென்று எச்சரிக்கப்பட்டனர். லேவி 26ஆம் அதிகாரத்தில் இவ்வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள அத்தீங்குகளைக்குறிப்பிடுக.

1. வ. 25 (அ)...

(ஆ)...

(இ)...

2. வ. 29...

3. வ. 31 (அ)...

(ஆ)...

(இ)...

4. வ. 32 (அ)...

(ஆ)...

5. வ. 33 (அ)...

(ஆ)...

5. மேலே காணும் கேள்விகள் 1லிருந்து 4 வரை பட்டியலிடப்பட்டுள்ள தீங்குகளில், இதுவரை இஸ்ரவேல் மக்கள் மீது எத்தனை வந்துள்ளன?

....

6. தம்முடைய மக்கள் செய்த பல்வேறு பாவங்களை தானியேல் அறிக்கையிட்டார்*. தானி.9:5 குறிப்பிடப்பட்டுள்ளவைகள் எவை ?

(1) .... (2) ....

(3) .... (4) ....

(5) ....

7. தேவனுடைய சத்தத்துக்கு இஸ்ரவேல் எவ்விதத்தில் கீழ்ப்படியாமல் போயிருந்தது ? (தானி. 9:9) ....

....

8. தானியேல் இன்று உயிரோடிருந்தால், அப்பாவங்களில் எத்தனையை இஸ்ரவேல் மக்களின் சார்பாக அறிக்கையிட* வேண்டியதாயிருக்கும் ?

....

ஆ. தேவனுடைய இரட்சிப்பு*

9. இஸ்ரவேல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து வெளியே துரத்தப்படுவார்கள் என தேவன் எச்சரித்தார், ஆனால் இரண்டு காரியங்களை மட்டும் செய்யாதிருக்க வாக்களித்தார். அவைகள் என்ன ? (லேவி. 26:44)

(1) ....

(2) ....

10. இஸ்ரவேலுக்கு இரக்கம் காட்ட காரணமாயிருக்கும் எந்த காரியத்தைத் தேவன் நினைவுகூறுகிறார் ? (லேவி. 26:45)

....

....

11. சீயோனிலிருந்து என்ன புறப்பட்டு வரவேண்டுமென்று தாவீது ஜெபித்தான் ? (சங். 14:7)

....

12. தேவனுடைய கோபம் நீங்கும் நாளில், தேவனுடைய இரட்சிப்பை *குறித்து, இஸ்ரவேல் என்ன சொல்லும் ? (ஏசா. 12:2)

....

13. இஸ்ரவேலுக்குத் தம்மை எவ்விரண்டு தோற்றங்களில் தேவன் வெளிப்படுத்துகிறார் ? (ஏசா. 43:3)

(1) ....

(2) ....

14. வேறே ஒரு இரட்சகர் உண்டா ? (ஏசா. 43:11) ....

15. இஸ்ரவேலின் மீறுதல்களை* குறித்துத் தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன? (ஏசா. 43:25)

....

16. இஸ்ரவேலின் பாவங்களை* குறித்து தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன? (ஏசா. 43:25)

....

17. தேவன், சீயோனில் யாருக்கு மீட்பரை வாக்குப்பண்ணுகிறார்? (ஏசா. 59:20) ....

....

18. சீயோனுக்கு என்ன வரும்? (ஏசா. 62:11)..

19. அவரோடு என்ன வரும்? (ஏசா. 62:11)..

20. அவருக்கு முன்பாக என்ன வரும்? (ஏசா. 62.11)..

21. தேவன் இஸ்ரவேலை மறுபடியும் கட்டுவிக்கும் நாளிலே, எவ்விரண்டு விதங்களில் அவர்களுடைய அக்கிரமங்களுக்குப் பதிலளிப்பார்? (எரே. 33:7-8) (1) ....

(2) ....

22. இஸ்ரவேலை தங்களுடைய தேசத்துக்கு திரும்பச் செய்யும் நாளிலே, அவர்கள் மூலமாய் தேசங்களுக்குத் தேவன் தம்மை எவ்வாறு வெளிப்படுத்துவார்? (எசே. 39:27)

....

மனப்பாட பகுதி: ஏசா. 42:25

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும்வரை, இப்பக்கத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதிமூன்று

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	தங்களைக் கெடுத்து, மோசே கட்டளையிட்ட வழியிலிருந்து திரும்புவார்கள்	2
2.	அவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளினாலே கர்த்தரை கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வதினாலே.	2
3.	தேவனுக்கு எதிர்த்து நடப்பது	1
4.	(1) (அ) அவர்களுக்கு விரோதமாக பட்டயம் (யுத்தம்)	1
	(ஆ) கொள்ளை நோய் வரும்	1
	(இ) சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.	1
	(2) சொந்த பிள்ளைகளைப் புசிப்பார்கள்.	1
	(3) (அ) பட்டணங்கள் வெறுமையாகும்	1
	(ஆ) பரிசுத்த ஸ்தலங்கள் பாழாகும்	1
	(இ) தேவனுக்கு காணிக்கைகள் செலுத்தப்படாது	1
	(4) (அ) தேசம் பாழாகும்	1
	(ஆ) இஸ்ரவேலின் தேசத்தில் சத்துருக்கள் குடியிருந்து, அதைக் குறித்துப் பிரமிப்படைகிறார்கள்	1
	(5) (அ) ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்பட்டு	1
	(ஆ) பட்டயத்தினால் பின் தொடரப்படுவார்கள்	1
5.	எல்லாம்	1
6.	(1) நாங்கள் பாவஞ்செய்தோம்	1
	(2) நாங்கள் அக்கிரமம் செய்தோம்	1
	(3) நாங்கள் துன்மார்க்கமாய் நடந்தோம்	1
	(4) நாங்கள் கலகம் பண்ணினோம்	1
	(5) தேவனுடைய கற்பனைகளையும் நியாயங்களையும்* விட்டு அகன்றோம்	1
7.	தீர்க்கதரிசிகளைக் கொண்டு, அவர்களுக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்காமல் போனார்கள்.	2

8.	எல்லாம்	1
9.	(1) அவர்களை நிர்மூலமாக்க மாட்டார் (2) அவர்களோடு பண்ணின உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாக அவர்களைக் கைவிடவோ, வெறுக்கவோ மாட்டார்	1 2
10.	எகிப்து சேதத்திலிருந்து தேவன் புறப்பட செய்த அவர்கள் முன்னோர்களோடு செய்த உடன்படிக்கை	2
11.	இஸ்ரவேலின் இரட்சிப்பு*	1
12.	தேவனே என்னுடைய இரட்சிப்பானார்*	1
13.	(1) அவர்களுடைய பரிசுத்தர் (2) அவர்களுடைய இரட்சகர்	1 1
14.	இல்லை	1
15.	அவைகளை குலைத்துப் போடுவார்	1
16.	அவைகளை நினையாமலிருப்பார்	1
17.	யாக்கோபிலே மீறுதலை* விட்டுத் திரும்புவோருக்கு	1
18.	இரட்சிப்பு	1
19.	அவர் அருளும் பலன்	1
20.	அவர் செய்யும் பிரதிபலன்	1
21.	(1) அவர்களை சுத்திகரிப்பார் (2) அவர்களை மன்னிப்பார்	1 1
22.	அவர்களுக்குள் அவர் பரிசுத்தரென்று விளங்கப்பண்ணுவார்	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றியிருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணைக் குறைக்கவும். 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிடவேண்டாம்)	4
	மொத்தம்	48

24 மதிப்பெண்கள் = 50%
34 மதிப்பெண்கள் = 70%
38 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதிமூன்று

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-2. இஸ்ரவேலுக்கு உடன்படிக்கையைக்கொடுக்கும் முன்பே, அவர்கள் அதை உடைத்துப்போடுவார்கள் என்பதைத் தேவன் அறிந்திருந்தார். அவர்கள் மன்னிப்பைப் பெறவும் மீண்டும் நிலைநிறுத்தப்படவும் தேவன் ஓர் வழியையும் ஆயத்தம் செய்திருந்தார்.

3. தவறான மனப்போக்கே இஸ்ரவேலின் தவறான செயல்களுக்கு வேராயிருந்தன: தேவனுக்கு முரண்பாடாய் நடப்பது. ஒரு மொழிபெயர்ப்பு, "(தேவனுக்கு) எதிர்த்து பகைமையுடன் செயல்படுவது" என கூறுகிறது (லேவி. 21:26)

4-5. தீங்கான இந்த விளைவுகளெல்லாம் இஸ்ரவேலின் மீது எப்படி வந்ததென, வேதாகமத்திலும், ஜொஸிஃபஸ் என்ற எழுத்தாளரின் படைப்புகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகள் சரித்திரத்திலும் தொடர்ந்துள்ளன.

6-8. தானியேல் அறிக்கையிட்ட* பாவங்களை ஒரே சொல்லில் அடக்கலாம்: கலகம்.

9. இஸ்ரவேலுடைய சகல தவறுகளையும் தண்டிப்பேன் என்று தேவன் அவர்களை எச்சரித்தார், ஆனால் அவர்களைத் தன்னுடைய ஜனமல்லவென்று ஒருபோதும் தள்ளிவிடுவதில்லை என்றும் தேவன் வாக்களித்தார். (எரே. 33:23-26ஐ ஒப்பிடவும்.)

10. தேவனுடைய ஜனங்கள் உண்மையற்றவர்களாயிருந்தாலும், தேவன் எப்போதும் அவருடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவராய் இருக்கிறார். (சங். 89:34ஐ ஒப்பிடவும்.)

11-14. இஸ்ரவேலின் தோல்விக்கு தேவன் அளிக்கும் தீர்வை சுருக்கமாக ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால்: இரட்சிப்பு*. தேவன் மட்டுமே தன் சுய பரிசுத்தத்தை விட்டுக்கொடுக்காமல், இரட்சகராய் இருக்க முடியும்.

15-16. தேவனுடைய இரட்சிப்பு பரிபூரணமானது என்பதனால், நம்முடைய பாவங்களை அவர் இனி நினையாதபடி அவைகளை அழித்துப் போடுகிறார்.

17. தம்முடைய இரக்கத்தினால், தேவன் இஸ்ரவேலுக்கு ஓர் மீட்பரை வாக்களிக்கிறார் ஆனால் இஸ்ரவேல் அதற்குப் பதிலாக தங்கள் மீறுதல்களை* விட்டுத் திரும்ப வேண்டும்.

18-20. இந்த இரட்சகர், தன்னுடன் மூன்று காரியங்களைக்கொண்டு

வருகிறார்: இரட்சிப்பு*, ஓர் பலன், ஓர் பிரதிபலன்*.

21. இரட்சிப்பு*, சுத்திகரிப்பு மற்றும் மன்னிப்பை உட்படுத்துகிறது.

22. ஆதியிலிருந்தே, இஸ்ரவேலை மற்ற ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக வைப்பதும், தம்முடைய பரிசுத்தத்தை அவர் மூலமாய் வெளிப்படுத்துவதுமே தேவனுடைய நோக்கமாக இருந்தது.

பாடம் பதினான்கு

இயேசு கிறிஸ்துவின் வரைபடம் [பகுதி 1]

முன்னுரை:

இஸ்ரவேல் பாவம் செய்ய திரும்பி, அவர்களுக்காக தாம் வைத்திருந்த நோக்கத்தை நிறைவேற்ற தவறுவார்கள் என தேவன் முன்னறிந்தார். அவரோ, தம்முடைய இரக்கத்தினால், தாவீதின் வித்திலிருந்து அவர்களுக்கு ஓர் மீட்பரை அனுப்ப வாக்களித்தார். தாவீதைப் போல இம்மீட்பர் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, அதின் நிமித்தம் "மேசியா" (அபிஷேகம் பெற்றவர்) என அழைக்கப்படுவார். இம்மேசியாவின் வருகையே பழைய ஏற்பாட்டின் மையக்கருத்தாயிருந்தது. (எபிரெயத்தில் பழைய ஏற்பாட்டை "தனாக்" என்று அழைப்பார்கள்.) அவர் எப்படி வருவார் என்றும், என்ன செய்யக்கூடியவராய் இருப்பார் என்பதையும் தீர்க்கதரிசிகள் மிகத் தெளிவாக விவரிக்கின்றனர்.

இவ்வாக்குத்தத்தங்களை விசுவாசித்த முதல் நூற்றாண்டின் யூத எழுத்தாளர்கள், அவைகளை நிறைவேற்றின ஓர் மனிதனை விவரித்து, அவரை மேசியா என்று ஒப்புக்கொண்டார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் புதிய ஏற்பாட்டில் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திலுள்ள சில கேள்விகள், பழைய ஏற்பாட்டுக்கும் மற்றவைகள் புதிய ஏற்பாட்டுக்கு மேற்கோள் காட்டுகின்றன.

மனப்பாட பகுதி: மல்கியா 3:1

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. மேசியாவின் வம்ச வரலாறு

1. யாருக்குத் தேவன் ஓர் விசேஷித்த சந்ததியை வாக்களித்தார்? (ஆதி. 22:15-18) ....
2. இவ்வித்தின் மூலமாய், சகல தேசங்களுக்கும் தேவன் என்ன வாக்களித்தார்? (ஆதி. 22:18) ....

3. இயேசு இம்முன்னோரிலிருந்து தோன்றினவரா? (மத். 1:1)............................

4. இயேசு மூலமாய் இப்போது புறஜாதியாருக்கு அளிக்கப்படுகிறது என்ன? (கலா. 3:13-14)............................

5. ஆபிரகாமின் இரண்டு குமாரரில் யார் மூலமாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்து தோன்ற வேண்டும்? (ஆதி. 17:19,21) ....

6. இயேசு ஈசாக்கிலிருந்து தோன்றினவரா? (மத். 1:2) ....

7. ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை, ஈசாக்குத் தன் குமாரரில் யாருக்கு கடந்துபோக செய்தார்? (ஆதி. 28:1-4) ....

8. இக்குமாரரின் சந்ததிக்கும் இந்த ஆசீர்வாதம் நீட்டிக்கப்பட்டதா? (ஆதி. 28:4) ....

9. இயேசு யாக்கோபிலிருந்து தோன்றினவரா? (லூக்கா 3:34) ....

10. இஸ்ரவேலின் எந்த கோத்திரத்திலிருந்து ஆளுகிறவர் (மேசியா) வர வேண்டியதாயிருந்தது? (ஆதி. 49:10) ....

11. இயேசு எந்த கோத்திரத்திலிருந்து தோன்றினார்? (லூக்கா 3:33)

....

12. இஸ்ரவேலின் எந்த ராஜாவிடமிருந்து மேசியா தோன்ற வேண்டும்? (சங். 89:35-36) (ஏசா. 9:6-7) ....

13. இயேசு இந்த இராஜாவிலிருந்து தோன்றினவரா? (மத். 1:6-16)............................

ஆ. மேசியாவின் பிறப்பு

14. மேசியா எங்கே பிறக்க வேண்டும்? (மீகா. 5:2)

....

15. இயேசு எங்கே பிறந்தார்? (மத். 2:1) (லூக்கா 2:4-7)

....

16. மேசியாவின் பிறப்பைக்குறித்த விசேஷம் என்ன? (ஏசா. 7:14)

....

17. இயேசுவின் பிறப்பைக்குறித்த விசேஷம் என்ன? (மத். 1:18, 22-23) (லூக்கா 1:26-35)............................

18. மேசியா எப்போது வருவார் என்று கணிக்க தானியேல் ஓர் வழியைக்காண்பித்தாரா? (தானி. 9:25-26)............................

19. எருசலேமை மறுபடியும் கட்டுவிக்க கட்டளை பிறப்பிக்கப்பட்ட பின், எத்தனை காலம் கழித்து மேசியா வர வேண்டும்? (தானி. 9:25)

....

20. தானியேலினால் குறிப்பிடப்பட்ட காலத்தில் இயேசு வந்தாரா ? ....

இ. மேசியாவின் ஊழியம்

21. மேசியாவுக்கு முன்னோடியாய் எந்த தூதுவரும் அனுப்பப்பட வேண்டுமா ? (மல். 3:1) ....

22. இத்தூதுவரின் வேலை என்ன ? (மல். 3:1) ....

....

23. இயேசுவுக்கு முன்னோடியாயிருந்தவர் யார் ? (மத். 3:1-3; 11:7-10)

....

24. அவருடைய வேலை என்ன ? (மத். 3:1-3; 11:7-10)

....

25. ஆண்டவர் எதற்கு தூதுவராக வருவார் ? (மல். 3:1)

....

26. தேவன் இஸ்ரவேலுக்கு புதிய உடன்படிக்கையை வாக்களித்தாரா ? (எரே. 31:31-34)..........

27. அவ்வுடன்படிக்கை, பாவங்கள் முற்றிலும் மன்னிக்கப்படுவதற்கு வழி செய்கிறதா ? (எரே. 31:34)..........

28. இப்படிப்பட்ட உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இயேசு வந்தாரா ? (எபி. 9:13-15) ....

29. இயேசுவின் மீது, புறாவின் வடிவத்தில், யோவான் ஸ்நானகன் இறங்கக் கண்டது என்ன ? (யோவான் 1:29-33) ....

30. பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்ற ஓர் மனிதனை ஏசாயா விவரிக்கிறார். எந்த நான்கு காரியங்களைச் செய்ய, இவ்வபிஷேகம் அவருக்கு உதவும் ? (ஏசா. 61:1) (1)..........

(2)..........

(3)..........

(4)..........

31. இவ்வார்த்தைகளை தேவாலயத்தில் வாசித்த பின், இயேசு தன்னைக்குறித்து என்ன சொன்னார் ? (லூக்கா 4:16-21)

....

32. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் எதினால் அபிஷேகித்தார் ? (அப். 10:38) ....

33. இயேசுவுக்கு எவ்விரண்டு காரியங்களைச் செய்ய, இவ்வபிஷேகம் உதவினதென்று குறிப்பிடுக. (அப். 10:38)

(1) ....

(2)..

34. தேவன் இஸ்ரவேலை இரட்சிக்க வருவாரென்றும், நான்கு விதமான வியாதிகளிலிருந்து சுகமளிப்பாரென்றும் ஏசாயா முன்னறிவித்தார். இந்நான்கு வகைகளையும் குறிப்பிடுக. (ஏசா. 35:4-6)

(1) .... (2) ....

(3) .... (4) ....

35. இயேசு குணமாக்கின நான்கு விதமான வியாதிகளைக்குறிப்பிடுக (மாற்கு 8:22-25;7:32-37)

(1) .... (2) ....

(3) .... (4) ....

36. எந்த விலங்கின் (மிருக ஜீவன்) மேல் மேசியா எருசலேமுக்குள் ஏறி வர வேண்டும்? (சக. 9:9) ....

37. எருசலேமுக்குள் இயேசு பவனி வந்த போது, எந்த விலங்கை (அல்லது மிருக ஜீவன்களை) சீஷர்கள் அவருக்கு முன் நிறுத்தினர்? (மத். 21:6-11) (மாற்கு 11:1-11) ....

....

மனப்பாட பகுதி: மல்கியா 3:1

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினான்கு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	ஆபிரகாமுக்கு	1
2.	ஆசீர்வாதம்	1
3.	ஆம்	1
4.	ஆபிரகாமின் ஆசீர்வாதம்	1
5.	ஈசாக்கு	1
6.	ஆம்	1
7.	யாக்கோபு	1
8.	ஆம்	1
9.	ஆம்	1
10.	யூதா	1
11.	யூதா	1
12.	தாவீது	1
13.	ஆம்	1
14.	யூதேயாவிலுள்ள பெத்லகேம்	1
15.	யூதேயாவிலுள்ள பெத்லகேம்	1
16.	அவர் ஓர் கன்னிகையினிடத்தில் பிறக்க வேண்டும்	1
17.	அவர் ஓர் கன்னிகையிடத்தில் பிறந்தவர்	1
18.	ஆம்	1
19.	69 வாரங்கள் (அல்லது மொத்தம் 483 யூத ஆண்டுகள்)	1
20.	ஆம்	1
21.	ஆம்	1
22.	மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவது	1
23.	யோவான் ஸ்நானகன்	1
24.	இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவது	1
25.	உடன்படிக்கைக்கு	1

26.	ஆம்	1
27.	ஆம்	1
28.	ஆம்	1
29.	பரிசுத்த ஆவி	1
30.	(1) சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க (2) இருதயம் நொறுங்குண்டவர்களைக் காயம் கட்ட (3) சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூற (4) கட்டுண்டவர்களை கட்டவிழ்க்க	1 1 1 1
31.	உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று	1
32.	பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும்	1
33.	(1) நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிய (2) பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்க	1 1
34.	(1) குருட்டுத்தன்மை (2) செவிட்டுத்தன்மை (3) முடக்குத் தன்மை (4) ஊமைத்தனம்	1 1 1 1
35.	(1) குருட்டுத்தன்மை (2) செவிட்டுத்தன்மை (3) முடக்குத்தன்மை (4) ஊமைத்தனம்	1 1 1 1
36.	கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும்	1
37.	கழுதையையும், கழுதையின் குட்டியாகிய மறியையும்	1
	நீங்கள் எழுதிய மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணைக் குறைக்கவும். 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்.)	4
	மொத்தம்	51

26 மதிப்பெண்கள் = 50%
36 மதிப்பெண்கள் = 70%
41 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினான்கு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-6. ஈசாக்கின் மூலம், சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதத்தைக்கொண்டு வரும் ஓர் சந்ததியைக் கொடுப்பேனென்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார். சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வித்தாய், இயேசு, ஈசாக்கின் மூலம், ஆபிரகாமினிடத்திலிருந்து தோன்றினார். (கலா. 3:16ஐப் பார்க்கவும்.)

7-9. ஆசீர்வாதத்தைக்கொண்டுவரும் வித்தின் வாக்குத்தத்தம் யாக்கோபின் மூலம் தொடரப்பட்டது. ஆகையால், யூத மக்களின் வம்சாவழியில் தான் மேசியா வர வேண்டியதாயிற்று.

10-13. இஸ்ரவேலை ஆளுகை செய்கிறவர் யூதா வம்சத்திலிருந்து வர வேண்டுமென்று தேவன் தீர்மானித்தார். இது தாவீதினிடத்தில் முதலாவது நிறைவேறினது. பின்பு தாவீதிலிருந்து தோன்றி இயேசுவிடம் நிறைவேறியது.

1-13. இயேசு பூமியிலிருந்தவரை ஒருவரும் அவருடைய வம்சவரலாற்றையோ, தாவீதிலிருந்து தோன்றினதையோ சந்தேகிக்கவில்லை. கி.பி 70ல், இரண்டாம் தேவாலயம் அழிக்கப்பட்ட போது, இஸ்ரவேலின் சகல வம்ச வரலாற்றின் பதிப்புகளும் அழிக்கப்பட்டன. ஆகையால் அதற்குப்பின் பிறந்த எவரும், தான் மேசியா என்பதை நிருபணம் செய்ய முடியாது. இயேசு யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார், என்று லூக்கா அவருடைய வம்சவரலாற்றை குறித்து எழுதும்போது கூறுகிறார். (லூக்கா 3:23ஐப் பார்க்கவும்.)

14-15. இயேசு பிறந்த காலத்தில், யூத மதத் தலைவர்கள், மேசியா யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். (மத். 2:1-6ஐப் பார்க்கவும்.)

16-17. அல்மா என்கிற வார்த்தையை “கன்னிகை” என்று மொழிபெயர்த்ததற்கு பின் வரும் காரணங்களைக்கவனிக்க (ஏசா. 7:14): (1) கிரேக்கத்தில் எபிரெய வேதாகமத்தை (Septuagint என்றழைக்கப்பட்டது) மொழிபெயர்த்த யூத எழுத்தாளர்கள், பொதுவாக கிரேக்கத்தில், “கன்னிகை” என்ற அர்த்தமுள்ள “பார்த்தனோஸ்” என்ற வார்த்தையையே பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார்கள். (2) தனாக்கின் (பழைய ஏற்பாடு) எந்த தீர்க்கதரிசனமும், மேசியாவுக்கு ஓர் மனித தகப்பன் இருப்பதாக குறிப்பிடுவதில்லை, தாயை மட்டும்தான் குறிப்பிடுகின்றன (ஏசா. 49:1,5; சங். 22:9ஐப் பார்க்கவும்); (3) திருமணமாகாத ஓர் இளம் பெண்ணை தான் அல்மா விவரிக்கின்றது, இது மரியாளுக்கு சரியாக பொருந்தும்;

(4) தனாக்கில், அல்மா என்ற வார்த்தை, கன்னிகையை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதி. 24:43; யாத். 2:8ஐப் பார்க்கவும்); (5) யோவேல் 1:8ல் பயன்படுத்தப்படும் மாற்று வார்த்தை, பெத்துலா-முன் காலத்தை ஓர் கணவனையுடைய பெண்ணைக் குறிப்பிடுகிறது. மட்டுமல்ல, பெத்துலா சில நேரங்களில் ஓர் தேசத்தைச் சித்தரிக்கப் பயன்படுத்தப்படும் (ஏசா. 23:12; 47:1; எரே. 18:13; 31:4,21 பார்க்கவும்)

18-20. தானியேல் 9:25-26இன் படி, மேசியா வந்து, 69 வாரங்களுக்குப் பின் சங்கரிக்கப்படுவார் (சரியான அர்த்தம், "ஏழுகளின் ஆண்டுகள்". யூத கால அட்டவணை 360 நாட்கள் என்பதால், மேற்கத்திய கால அட்டவணையின்படி இதன் கால அளவு, 477 ஆண்டுகளாகும். பெர்சியா நாட்டின் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் அரசாட்சியில், எருசலேமை மீண்டும் கட்ட, சுமார் கி.மு 445ல் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மேசியாவாகிய ராஜாவின் வருகைக்கு இது கி.பி. 32 என்ற காலத்தைக்குறித்தது. சுமார் இதே நேரத்தில் தான் இயேசு எருசலேமுக்குள் பவனி வந்து, அதன்பின் சங்கரிக்கப்பட்டார். "வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் என்பது கி.பி. 70ல் எருசலேமை அழித்த தீத்து ராயனின் ரோம சேனையைக் குறிக்கும்.

25-28. எரே. 31:31-34ல் வாக்களிக்கப்பட்ட புதிய உடன்படிக்கை, மூன்று முக்கிய அம்சங்களுடையது: (1) உள்ளான ஓர் புதிய சுபாவம் ("என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அவர்கள் இருதயத்தில் எழுதுவேன்."); (2) தேவனோடு ஓர் தனிப்பட்ட உறவு ("அவர்கள் என்னை அறிந்துகொள்வார்கள்"); (3) பாவங்கள் மன்னிக்கப்படுதல் ("நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்"). இயேசு ஏற்படுத்தின உடன்படிக்கையை முறித்ததாக தேவன் இஸ்ரவேலை குற்றஞ்சாட்டி, அவ்வுடன்படிக்கையை எடுத்துப்போட்டு, அதற்கு பதிலாக நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துவதாக வாக்களிக்கிறார்.

29-35. இயேசுவின் மேல் பரிசுத்த ஆவி இறங்கினபோது, அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று அடையாளம் காண்பித்தது. பாவத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் தேவனுடைய ஜனத்தை விடுவிப்பவராக இருக்கும்படி இது அவரை ஆயத்தப்படுத்தியது.

32-35. இயேசுவின் சுகமளிக்கும் அற்புதங்கள் அவரை மேசியாவென்று உறுதிப்படுத்தியது.

36-37. கழுதையின் மேல் ஏறிச்செல்வது, ராஜாக்களின் வழக்கமாக இருந்தது. (1 இராஜா. 1:33-34ஐ பார்க்கவும்.)

பாடம் பதினைந்து

இயேசு கிறிஸ்துவின் வரைபடம் [பகுதி 2]

முன்னுரை:

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், தங்களுக்குள் இருந்த கிறிஸ்துவின் ஆவியினால், கிறிஸ்துவின் பாடுகளையும் அதற்குப்பின் வரும் மகிமையையும் முன்னறிவித்தார்களென்று பேதுரு எழுதினார் (1பேது. 1:10-11). சில நேரங்களில், இவ்வனுபவங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் சம்பவிக்காமலிருந்தாலும், அவைகளை அனுபவித்தது போல தீர்க்கதரிசிகள் பேசினர். ஆனால் இவைகள் இயேசுவின் வாழ்க்கையில் பின்பு சம்பவித்தன. அவைகள் முதலாவது கிறிஸ்துவின் (மேசியாவின்) பாடுகளையும், அதற்குப் பின் அவர் பிரவேசிக்கப் போகும் மகிமையைக்குறித்தும் விவரித்தனர். இவ்விதமான முன்னறிவிப்புகள் தாவீதின் சங்கீதங்களிலும் ஏசாயாவிலும் உள்ளன. இப்பாடமும் அத்தகைய பல உதாரணங்களை உடையது.

மனப்பாட பகுதி: ஏசா.53:4-5

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

ஈ. மேசியாவின் பாடுகள்.

38. மேசியாவைஅவருடைய ஜனங்கள் ஏற்றுக்கொள்வார்களா தள்ளிவிடுவார்களா ? (ஏசா. 53:1-3)..

....

39. இஸ்ரவேல் தேசம் இயேசுவைஏற்றுக்கொண்டதா அல்லது தள்ளிவிட்டதா ? (யோவான் 1:11; 12:37-38)

....

40. எப்படிப்பட்ட மனிதனால் மேசியா காட்டிக்கொடுக்கப்பட வேண்டும் ? (சங். 41:9) ....

41. இயேசு யாரால் காட்டிக்கொடுக்கப்பட்டார் ? (மாற்கு 14:10)

....

42. இம்மனிதன் இயேசுவின் நண்பரா ? (மத். 26:47,50) ....

43. மேசியா என்ன கிரயத்துக்குக்காட்டிக்கொடுக்கப்பட வேண்டும் ? (சக. 11:12) ....

44. இயேசுவைகாட்டிக்கொடுத்தவனுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது ? (மத். 26:15)..

45. மேசியாவைகாட்டிக்கொடுக்கப் பெற்ற பணத்தால் என்ன செய்யப்பட வேண்டும் ? (சக. 11:13) ....

....

46. இயேசுவைக்காட்டிக்கொடுப்பதற்குக்கொடுத்த பணத்தால் என்ன செய்யப்பட்டது ? (மத். 27:3-7) ....

....

47. மேசியா தன்னைக்குற்றம் சாட்டுவோரோடு வாதாடுவாரா ? (ஏசா. 53:7) ....

48. தன்னைக்குற்றம் சாட்டுவோருக்கு முன் இயேசு என்ன செய்தார் ? (மத். 26:62-63; 27:12-14) ....

49. மேசியாவைஅடித்து, அவர் மீது துப்புவார்களா ? (ஏசா. 50:6)..................

50. தன்னைத் துன்புறுத்தினவர்களிடம்*இயேசு எவ்விரண்டு விதங்களில் பாடுபட்டார் எனக்குறிப்பிடுக. (மாற்கு 14:65) (யோவான் 19:1)

....

51. மேசியாவோடு எப்படிப்பட்டவர்கள் கொலை செய்யப்படவேண்டும்? (ஏசா. 53:12) ....

52. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இருவர் யார்? (மத். 27:38)
....

53. மேசியாவின் சரீரத்தில் குத்தப்பட வேண்டிய இரண்டு பகுதிகளைக்குறிப்பிடுக. (சங். 22:16) ....

54. தன் கைகளிலும் கால்களிலும் இயேசு காயப்பட்டாரா? (லூக்கா 24:39-40) (யோவான் 20:25-27)..........

55. மேசியாவின் வஸ்திரங்களுக்கும், உடைகளுக்கும், என்ன சம்பவிக்க வேண்டியதாயிருந்தது? (சங். 22:18) ....
....

56. ரோம போர்ச்சேவகர்கள், இயேசுவின் வஸ்திரங்களையும் அங்கியையும் என்ன செய்தார்கள்? (யோவான் 19:23-24) ....
....

57. மேசியாவுக்கு என்ன குடிக்க கொடுப்பார்கள் என கூறப்பட்டது? (சங். 69:21) ....

58. இயேசுவுக்கு என்ன குடிக்க கொடுத்தார்கள்? (யோவான் 19:29)
....

59. மேசியாவின் எலும்புகளுக்கு என்ன சம்பவிக்காதென கூறப்பட்டது? (சங். 34:19-20) ....

60. இயேசுவின் எலும்புகள் முறிக்கப்பட்டதா? (யோவான் 19:33,36)
....

61. மேசியாவின் மீது கர்த்தர் எதை வைப்பார் என கூறப்பட்டது? (ஏசா. 53:6) ....

62. இதன் விளைவாக மேசியாவுக்கு என்ன சம்பவிக்குமென கூறப்பட்டது? (ஏசா. 53:8) ....
....

63. சிலுவையில் இயேசு எதை சுமந்தார்? (1 பேதுரு 2:24)
....

64. இதன் விளைவாக இயேசுவுக்கு என்ன சம்பவித்தது? (1 பேதுரு3:18)
....

65. எப்படிப்பட்ட நபரின் கல்லறையில் இயேசு அடக்கம்பண்ணப்படுவார் எனக்கூறப்பட்டது? (ஏசா. 53:9) ....

66. யாருடைய கல்லறையில் இயேசு அடக்கம்பண்ணப்பட்டார்? (மத். 27:57-60) ....

67. அவர் எப்படிப்பட்ட நபர்? (மத். 27:57) ....

உ. மரணத்தின் மீது மேசியாவின் வெற்றி

68. மேசியாவின் ஆத்துமா குற்ற நிவாரண பலியான பின்பு, அவரைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மூன்று காரியங்கள் யாவை? (ஏசா. 53:10)

(1) ....

(2) ....

(3) ....

69. மேசியா தொடர்ந்து மரித்த நிலையில் நீடித்திருந்தால் அவ்வாக்குத்தத்தங்கள் நிறைவேறக்கூடுமா? ....

70. தன்னுடைய பரிசுத்தருக்கு, தேவன் எவ்விரண்டு காரியங்களை வாக்களிக்கிறார்?

(1) ....

(2) ....

71. தாவீதின் அனுபவத்தில் இவ்விரண்டு காரியங்களும் நிறைவேறிற்றா? (1 இராஜா. 2:10) (அப். 2:29) ....

72. யாருடைய அனுபவத்தில் இவைகள் நிறைவேறின? (அப். 2:30-32)

....

73. எப்படிப்பட்ட அதிகாரத்தின் ஸ்தானத்தை தேவன் மேசியாவுக்கு வாக்களித்தார்? (சங். 110:1) ....

....

74. பூமியில் அவர் தரித்திருந்தால், இதை நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடுமா?

....

75. தேவன் எவ்விதமான அதிகாரத்தின் ஸ்தானத்துக்கு இயேசுவைஉயர்த்தினார்? (அப். 2:33-36) ....

....

76. எக்காலம் வரை இயேசு பரலோகத்தில் தங்க வேண்டும்? (அப். 3:19-21)

....

77. மேசியா தன்னுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க எப்படி வருவார்? (தானி. 7:13) ....

78. பரலோகத்திலிருந்து இயேசு எப்படி மீண்டும் வருவார்? (மத். 26:63-64)

....

79. எந்த மலையின் மீது மேசியாவின் பாதங்கள் நிற்கும்? (சக. 14:4)

....

80. எந்த மலைக்கு இயேசு திரும்புவார்? (அப். 1:9-12)

....

மனப்பாட பகுதி: ஏசாயா 53:4-5

இவ்வசனங்களை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினைந்து

கேள்வி	விடை	மதிப்பெண்
38.	தள்ளிவிடுவார்கள்	1
39.	தள்ளிவிட்டது	1
40.	பிராண சிநேகிதன் அல்லது நண்பனால்	1
41.	யூதாஸ்காரியோத்து	1
42.	ஆம்	1
43.	முப்பது வெள்ளிக்காசு	1
44.	முப்பது வெள்ளிக்காசு	1
45.	குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்தில் எரிந்து விட வேண்டும்	2
46.	ஆலயத்தில் எரியப்பட்டு, குயவனின் வயலை வாங்க பயன்படுத்தப்பட்டது	2
47.	இல்லை	1
48.	அவர் மௌனமாய் இருந்தார்	1
49.	ஆம்	1
50.	அவர் மேல் துப்பி, வாரினால் அடித்தார்கள்	2
51.	அக்கிரமக்காரர்*	1
52.	இரண்டு கள்ளர்கள் (அக்கிரமக்காரர்)	1
53.	கைகளும், கால்களும்	2
54.	ஆம்	1
55.	அவைகளை பங்கிட்டு, அவைகளுக்காக சீட்டுப் போடுவார்கள்	2
56.	அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, அவருடைய அங்கிக்காக சீட்டுப்போட்டார்கள்.	2
57.	காடி	1
58.	காடி	1

59.	அவைகள் முறிக்கப்படாது	1
60.	இல்லை	1
61.	நம்மெல்லாருடைய அக்கிரமம்	1
62.	ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்	2
63.	நம்முடைய பாவங்களை	1
64.	அவர் கொலை செய்யப்பட்டார்	1
65.	ஐசுவரியவான்	1
66.	அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு	1
67.	ஐசுவரியவான்	1
68.	(1) அவர் தமது சந்ததியைக் காண்பார்	1
	(2) நீடித்த நாளாயிருப்பார்	1
	(3) கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்	1
69.	இல்லை	1
70.	(1) அவருடைய ஆத்துமாவை அவர் பாதாளத்தில் விடமாட்டார்	1
	(2) அழிவைக் காணவிடமாட்டார்	1
71.	இல்லை	1
72.	இயேசுவின் அனுபவத்தில்	1
73.	தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்க	1
74.	இல்லை	1
75.	தேவனுடைய வலது பாரிசம்	1
76.	எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்கள்	1
77.	வானத்தின் மேகங்களோடே	1
78.	வானத்தின் மேகங்கள் மீது	1
79.	ஒலிவ மலை	1
80.	ஒலிவ மலை	1

	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணைக் குறைக்கவும். ஒரு வசனத்தில் 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் அந்த வசனத்துக்கு மதிப்பெண்ணிட வேண்டாம்.)	8
	மொத்தம்	61

31 மதிப்பெண்கள் = 50%

43 மதிப்பெண்கள் = 70%

49 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினைந்து

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

38, 47, 51, 61, 62, 65, 68. ஏசாயா 52:13 மற்றும் 53:12, பழைய ஏற்பாட்டில், மேசியாவைக்குறித்த மிக முக்கியமான தீர்க்கதரிசனங்கள். தன் சொந்த ஜனங்களால் தள்ளப்பட்ட கர்த்தருடைய ஓர் தாசனை சித்தரிக்கின்றன. தன் பட்சத்தில் பாவமே இல்லையெனினும், அவர்கள் அக்கிரமங்களுக்காக மரண தண்டனையைச் சகித்தார். யூத மக்களையே, ஏசாயா 53:12இன் "தாசன்" ஆக அடையாளம் காண முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் பின்வரும் காரணங்களினால், இவ்விளக்கம் சரியல்ல என விளங்கும்.

(1) இங்கே சித்தரிக்கப்படும் "தாசன்" கொடுமை செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. (ஏசா. 53:9ஐ பார்க்கவும்.) இது யூத மக்களைக்குறித்து உண்மையாகாது.

(2) இந்த தாசன் மற்றவர்களுடைய அக்கிரமங்களுக்காக காயப்பட்டார். (4 - 6 வசனங்களை பார்க்கவும்.) மோசே எச்சரித்ததுபோல, இஸ்ரவேலின் பாவங்களே அவர்களுடைய பாடுகளுக்கெல்லாம் காரணம். (லேவி. 26:14 - 43ஐ பார்க்கவும்)

(3) இந்த தாசனை அறியும் அறிவினால் அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்* (மற்றவர்களுடைய அக்கிரமங்களை அவர் சுமந்ததினால்.) மேசியாவின் பேரில் வைக்கும் தனிப்பட்ட விசுவாசத்தினால் மட்டுமே இது கிடைக்கும். (ரோமர் 3:21 - 24ஐ பார்க்கவும்)

39. இஸ்ரவேல் ஜாதியார் ஒருமிக்க இயேசுவைதள்ளினார்கள். ஆனாலும் அவரை பின்பற்றின மீதியான ஓர் கூட்டம் இருந்தது. ஆதி விசுவாசிகளின் கூட்டத்தில் பெரும்பாலானோர், மேசியாவை விசுவாசித்த யூதர்களின் கூட்டமாகவேஇருந்தனர்.

59 - 60. மரணத்தூதனிடமிருந்து, இஸ்ரவேல் மக்களை தன் இரத்தத்தினால் பாதுகாத்த பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்புகளில் ஒன்றையும் முறிக்கக்கூடாது. (யாத். 12:46). அதே போல், தேவனுடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் எலும்புகளும்கூட முறிக்கப்படவில்லை. (யோவான் 1:29) (1 கொரி. 5:7)

61-64. பாவ நிவிர்த்தி செய்யும் ஒவ்வொரு நாளன்றும், பலி ஆட்டின் மேல் பிரதான ஆசாரியன், இஸ்ரவேலின் பாவங்களை கடந்து போக செய்தது, கிறிஸ்துவின் பலிக்கு முன்னடையாளமாக இருந்தது. (லேவி. 16:21-22). பலியின் இரத்தம் மட்டுமே பாவத்தை நிவிர்த்தி

செய்யக்கூடியதாயிருந்தது (லேவி. 17:11). ஆகையால், இயேசு மக்களின் பாவங்களை சுமந்தது மட்டுமல்ல, ஓர் பூரண மற்றும் இறுதியான நிவிர்த்தி செய்யவுமே, தம் சொந்த இரத்தத்தை சிந்தினார். (எபி. 9:13-22).

68-72. இயேசு உண்மையாகவேமேசியா தான் என்பதையும், ஆண்டவர் என்பதையும் உறுதிப்படுத்தும்படியாகவே, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

73-75 இயேசு மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தது மட்டுமல்ல, பரலோகத்திலிருக்கும் பிதாவினிடத்தில் ஏறியும் போனார். பிதாவின் வலதுபாரிசம், பிரபஞ்சத்திலுள்ள எல்லா அதிகாரம் மற்றும் வல்லமையின் இருப்பிடமாக இருக்கிறது. எல்லாம் அவருடைய ஆளுகைக்கு அடிபணியும் வரை, இயேசு அங்கே தம்முடைய இருக்கையில் அமர்ந்து, தன் சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்துக்கொண்டிருக்கிறார் (சங். 110ஐ பார்க்கவும்).

76. எல்லாம் சீர்பொருந்தும் ஓர் காலத்தை, தேவன் இந்த யுகத்தின் முடிவில் வாக்களித்திருக்கிறார். இஸ்ரவேலின்கூட்டிச் சேர்த்தலில் இது மையம் கொண்டிருக்கும். மேசியா மகிமையில் மீண்டும் வருவதே இதன் உச்சக்கட்டமாயிருக்கும். (சங். 102:16ஐ பார்க்கவும்).

77-80. மேசியா தாழ்மையோடு வந்த முதல் வருகையின் தீர்க்கதரிசனங்களை காட்டிலும், அவர்மகிமையோடே திரும்பி வருவதை குறித்த தீர்க்கதரிசனங்களே அதிகம்.

பாடம் பதினாறு

மோசேயை போல் ஓர் தீர்க்கதரிசி

முன்னுரை:

உபாகமம் 18:18-19ல், தேவனுடைய வாக்குத்தத்தத்தை இஸ்ரவேலுக்கு எடுத்துரைத்து:

> உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்குக்கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்

எனக்கூறினார்.

மோசேயின் இவ்வார்த்தைகள், மூன்று உண்மைகளை நிறுவுகின்றன:

முதலாவது, தேவன் பிற்காலத்தில் இஸ்ரவேலுக்கு அனுப்புவேன் என்று வாக்குத்தத்தமாக சொல்கின்ற ஓர் குறிப்பிட்ட தீர்க்கதரிசியை குறித்தே பேசுகிறார். மோசே பயன்படுத்தும் அனைத்து சொற்களும் "ஒருமை" சொற்களாகவே உள்ளன "ஒரு தீர்க்கதரிசி", "அவர் வாய்", "அவர் சொல்லுவார்" இவ்வார்த்தைகள், பின் வந்த இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் அனைவரையும் குறிப்பது அல்ல. அவைகள் ஒரு விசேஷித்த தீர்க்கதரிசியை தான் குறிப்பிட முடியும்.

இரண்டாவதாக, இவ்விசேஷித்த தீர்க்கதரிசிக்கு, தனக்கு முன் சென்ற தீர்க்கதரிசிகளை விட ஓர் இணையற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டது. இத்தீர்க்கதரிசிக்கு, இஸ்ரவேலில் யாராகிலும் செவி கொடுக்க மறுத்தால், தேவன் அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பை* கொண்டு வருவார்.

மூன்றாவதாக, இத்தீர்க்கதரிசியை, இஸ்ரவேலின் மற்ற எல்லா தீர்க்கதரிசிகளிடமிருந்தும் வித்தியாசப் படுத்தும் வண்ணமாக, பல விதங்களில் அவர் மோசேயைப் போல் இருப்பார் என தேவன் கூறினார்.

அப். 3:22-26 இல், மோசேயின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி, அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவைகுறித்து இவ்வார்த்தைகளை நேரடியாக பயன்படுத்தினார். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் கவனமான ஒப்பீடு, மோசேக்கும் இயேசுவுக்கும் ஒத்திருக்கும் 20 குறிப்பான காரியங்களை காண்பிக்கும். இவ்விரண்டு தீர்க்கதரிசிகளுக்கும் இருக்கும் ஒப்பனைகளை மூன்று தலைப்புகளின் கீழ் பிரிக்கலாம்:

குழந்தை பருவம்

தனிப்பட்ட அனுபவங்கள்

ஊழியம்.

மனப்பாட பகுதி: உபாகமம் 18:18

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. அவர்களுடைய குழந்தை பருவம்

(1) இவ்விரண்டு தீர்க்கதரிசிகளின் பிறப்பின் போதும், இஸ்ரவேலின் மேல் தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்தின புறஜாதிமன்னர்களின் பெயர்களை குறிப்பிடுக:

(1) மோசே...

(2) இயேசு ....

2. சிறுப்பிராயத்திலேயே மோசே, இயேசுவாகிய இருவருடைய வாழ்க்கையும் எப்படி ஆபத்திலிருந்தது? (யாத். 1:15-16) (மத். 2:16)

....

....

3. யாருடைய கிரியையினாலே அவர்களுடைய வாழ்க்கைகள் காப்பாற்றப் பட்டன? (யாத். 2:1-5) (எபி. 11:23) (மத். 2:13-14)

....

4. இருவரும், எப்படிப்பட்ட மக்களிடம் சில காலத்துக்கு அடைக்கலம் பெற்றார்கள்? (யாத். 2:10) (மத். 2:14-15)

....

5. எப்படிப்பட்ட அறிவாற்றலின் திறமையை இருவரும் வெளிப்படுத்தினார்கள்? (அப். 7:22) (லூக்கா 2:46-47) (மத். 13:54)

....

ஆ. அவர்களுடைய தனிப்பட்ட அனுபவங்கள்

6. இருவருக்கும் ஒத்திருக்கும் இரண்டு குணாதிசயங்களை குறிப்பிடுக. (எண். 12:3,7) (மத். 11:29) (எபி. 32:1-6) (1) ....

(2)...

7. இத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரால் எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்களா? (யாத். 2:14; 32:1) (எண். 16:41) (யோவான் 7:52) (மத். 27:21-22)...

8. சில நேரங்களில், அவர்களுடைய சகோதர சகோதரிகள் அவர்களை எப்படி நடத்தினார்கள்? (எண். 12:1) (மாற்கு 3:21) (மத். 13:54-57) (யோவான் 7:3-5)...

....

9. இஸ்ரவேலின் பாவத்தை குறித்து, ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தேவனுக்கு முன் என்ன செய்ய ஆயத்தமாயிருந்தார்கள்? (யாத். 32:31-32) (லூக்கா 23:34) ....

....

10. ஜனங்களுக்கு விரோதமாயிருந்த தேவகோபாக்கினையை தணிப்பதற்காக என்ன செய்ய ஆயத்தமாயிருந்தார்கள்? (யாத். 32:31-34) (லூக்கா 23:34) ....

....

11. தங்கள் வாழ்கையில் மிக முக்கியமான, நெருக்கடியான சூழ்நிலையில் இவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் என்ன செய்தார்கள? (யாத். 34:28) (மத். 4:2)..

....

12. இவ்விருவரும் தேவனோடு ஒரு விசேஷித்த, நெருக்கமான உறவு வைத்திருந்தார்களா? (எண். 12:7-8) (யோவான் 1:18) (மத். 11:27)

....

13. தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கு இவ்விருவரும் எங்கே சென்றார்கள்? (யாத். 24:12) (மத். 17:1, 5) ....

....

14. தங்களோடு சீஷர்களை அழைத்துக்கொண்டு போனார்களா? (யாத். 24:13) (மத். 17:1) ....

15. இவ்வனுபவத்தினால் அவர்களுடைய சரீரங்களில் என்ன நடந்தது? (யாத். 34:29-30) (மத். 17:2) ....

....

16. ஒரு முறையாவது, எவ்விசேஷித்த விதத்தில் தேவன் அவர்களோடு பேசினார்? (யாத். 19:19-20) (யோவான் 12:28-30) ....

....

....

17. இரு தீர்க்கதரிசிகளும் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தை, எவ்விதமான பரலோக ஜீவன்கள் பாதுகாத்தன? (யூதா 9) (மத். 28:2-7)

....

இ. அவர்களுடைய ஊழியம்

18. தீர்க்கதரிசியின் ஊழியத்தை தவிர, இருவரும் செயல்பட்ட வேறு இரண்டு ஊழியங்களை குறிப்பிடுக.

(1) (உபா. 4:1, 5) (மத். 5:1-2) (யோவான் 3:1-2) ....

(2) (சங். 77:20) (ஏசா. 63:11) (யோவான் 10:11,14,17) ....

19. தேவனை குறித்து விசேஷித்த மற்றும் முக்கியமான எந்த உண்மையை, இவ்விருவரும் தேவனுடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார்கள்? (யாத். 3:13-15) (யோவான் 17:6)..

....

20. தன்னுடைய ஜனங்களுக்கு, இவ்விருவர் மூலமாய், தேவன் எவ்வித ஆகாரத்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பகிர்ந்தளித்தார்? (யாத். 16:14-15) (சங். 78:24) (யோவான் 6:32-33, 51)

....

....

21. மோசே, எப்படிப்பட்ட அடிமைத்தனத்தினின்று இஸ்ரவேலை விடுவித்தான்? (யாத். 31:10) (உபா. 6:21) ....

....

22. தம்மை விசுவாசித்தவர்களை, இயேசு எவ்விதமான அடிமைத்தனத்தினின்று விடுவித்தார்? (யோவான் 8:31-36) ....

....

23. இவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் வியாதியஸ்தருக்கு எப்படி உதவினர்? (யாத். 15:25-26) (எண். 21:6-9) (மத். 4:23; 8:16-17)

....

24. இத்தகைய பெரிய அற்புதங்களை நிகழ்த்திய வேறெந்த தீர்க்கதரிசியும் உண்டா? (உபா. 34:10-12) (யோவான் 5:36; 15:24) (அப். 2:22)

....

25. தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே இருவரும் எதை ஏற்படுத்தினார்கள்? (யாத். 24:7-8) (மத். 26:26-28)

....

26. எதினாலே இது உறுதிப்பட்டது? (எபி. 9:11-22)

....

....

மனப்பாட பகுதி: உபாகமம் 18:18

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தை திருப்பிபார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினாறு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	(1) பார்வோன்	1
	(2) அகஸ்துராயன்	1
2.	பொல்லாத இராஜாக்கள், அவர்கள் இருவரையும் கொல்ல கட்டளைகளை பிறப்பித்தார்கள்	1
3.	தங்கள் பெற்றோரின் கிரியைகளால்	1
4.	எகிப்தின் மக்கள்	1
5.	அதிசயமான ஞானமும் அறிவும்	1
6.	(1) தாழ்மை	1
	(2) தேவனுக்கு நேராக உண்மை	1
7.	இல்லை	1
8.	அவர்களை குறைக்கூறினார்கள் / ஒதுக்கிதள்ளினார்கள்	1
9.	ஜனங்களை மன்னிக்கும்படியாக தேவனிடம் இருவருமே ஜெபித்தார்கள்	1
10.	ஜனங்கள் மேல்வரக்கூடிய தண்டனையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள்	1
11.	நாற்பது நாட்கள் உபவாசித்தார்கள்	1
12.	ஆம்	1
13.	உயர்ந்த மலைக்கு	1
14.	ஆம்	1
15.	அவர்கள் முகங்கள் பிரகாசித்தன	1
16.	தேவன் அவர்களோடு பரலோகத்திலிருந்து சத்தமாக பேசினார்	1
17.	தூதர்கள்	1
18.	(1) போதகர்	1
	(2) மேய்ப்பர்	1

19.	தேவனுடைய நாமம்	1
20.	வானத்தின் அப்பம்	1
21.	எகிப்தில் பார்வோனுடைய அடிமைத்தனத்தினின்று	1
22.	பாவத்தின் அடிமைத்தனத்தினின்று	1
23.	அவர்களை சுகப்படுத்தினார்கள்	1
24.	இல்லை	1
25.	ஒரு உடன்படிக்கை	1
26.	பலியின் இரத்தத்தினால் (இயேசு சிலுவையில் அறையப்பட்டது)	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணை குறைக்கவும், 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்).	4
	மொத்தம்	33

17 மதிப்பெண்கள் = 50%

23 மதிப்பெண்கள் = 70%

26 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினாறு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-4. ஒவ்வொரு முறையும், தேவன் ஏற்படுத்தின இரட்சகரை காலத்துக்கு முன் (தன் பணியை நிறைவேற்றி முடிக்கும் முன்), இஸ்ரவேலின் மிகப்பெரிய எதிரியான சாத்தான் அழிக்க தேடினான். இருவருமே தங்கள் பெற்றோரின் விசுவாசத்தினாலும், தைரியத்தினாலும் காப்பாற்றப்பட்டனர்.*

5. மோசே இயேசுவாகிய இருவருமே, தேவன் பகிர்ந்தளித்த அறிவாற்றலின் வரங்களினால், ஆயத்தமாக்கப்பட்டிருந்தார்கள்.

6. இருவருமே, தங்கள் சுய பெலத்தை அல்ல, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையையே சார்ந்திருந்தார்கள்.

7-8. தேவன் தங்களுக்கென்று அனுப்பும் இரட்சகரை அறியாமலும் கனப்படுத்தாமலும் இருக்க, தவறான நோக்கங்கள் தேவனுடைய ஜனங்களை தடுத்து நிறுத்தும்.

9-10. மோசே, இயேசுவாகிய இருவருமே தேவனுடைய ஜனத்தின் ஆக்கினையை சுமக்க ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் பாவமில்லாதிருந்த இயேசு மட்டுமே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். (எபி. 7:26-27)

12-16. மோசே, இயேசு இருவருமே, தேவனோடிருந்த தனிப்பட்ட ஐக்கியத்தையே சார்ந்திருந்தார்கள். இவ்வைக்கியத்தின் விளைவுகள் பல்வேறு ஒப்பற்ற விதங்களில் வெளிப்பட்டன.

19. தேவனுடைய நாமம், தேவனுடைய தன்மையை வெளிப்படுத்தும். மோசேயின் மூலம், தேவன் தம்மை நித்தியமானவரும், மாறாதவருமாய் வெளிப்படுத்தினார். இயேசுவின் மூலம் தம்மை தகப்பனாக வெளிப்படுத்தினார். (மத். 11:27ஐ, ரோமர் 8:15ஐ பார்க்கவும்).

20. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட மன்னா, நிரந்தரமற்ற, சரீரப்பிரகாரமான வாழ்க்கைக்கு மட்டுமே ஆதரவாயிருந்தது. அதை புசித்த சிலர் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளால்* பின்பு மரித்து போனார்கள். (எண். 14:22-32; 26:63-65ஐ பார்க்கவும்). ஆனால் இயேசுவின் மூலம், ஓர் விசுவாசி நித்திய* ஜீவனை பெறுகிறான். (யோவான் 6:47-51ஐ பார்க்கவும்).

21-22. மோசே சரீர பிரகாரமான அடிமைத்தனத்தினின்று இஸ்ரவேலை விடுவித்தான்; இயேசுவோ விசுவாசியை ஆவிக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கிறார்.

25-26. தேவன் இஸ்ரவேலோடு செய்த முதல் உடன்படிக்கையை அவர்கள் முறித்தார்கள். ஆனால் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கும் ஓர் புதிய உடன்படிக்கையை அவர்களோடு செய்வதாக தேவன் வாக்களித்தார். (எரே. **31:31-34)** இப்புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தவே இயேசு வந்தார்.

முடிவுரை:

இப்பாடம் மோசேக்கும் இயேசுவுக்கும் இடையிலான **26** ஒப்பனைகளை காண்பித்தது. இயேசுவைத் தவிர மோசேயைப் போல வேறொரு தீர்க்கதரிசியை இஸ்ரவேலில் காண்பது கூடாத காரியமாகும். ஆகையால் உபா. **18:18-19**ல் மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசி இயேசுதான் என்பதை மறுத்தால் அது நியாயமற்றது.

அதே நேரத்தில், மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசி இயேசு தான் என்றால், அவ்வுண்மையை அங்கீகரித்து செயல்படுவது மிக முக்கியமான ஒன்றாகும். இத்தீர்க்கதரிசியை குறித்து, “என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்” என தேவன் கூறுகிறார். (உபா. **18:19)** ஆகையால், நாம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வேண்டுமா அல்லது அவருடைய ஆசீர்வாதம் வேண்டுமா என முடிவு செய்ய வேண்டும். தேவனுடைய தீர்க்கதரிசியாகிய இயேசுவை தள்ளினால் நியாயத்தீர்ப்பு தான்; அவரை ஏற்றுக்கொண்டாலோ ஆசீர்வாதம் தான்.

மூன்றாவது முன்னேற்ற மதிப்பீடு

மீண்டும் வாழ்த்துக்கள் !!

பதினாறு பாடங்களை கடந்து, இன்னும் ஒரே பகுதியை தான் நிறைவு செய்ய வேண்டும். அப்படியானால் என்னவென்று ஒரு நிமிடம் சிந்தித்து பாருங்கள்!

உலகத்தின் இலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, மிக ஆழமான மற்றும் முக்கியமான மைய கருத்துகளில் சிலவற்றை, நீங்கள் இப்போது பூர்த்திசெய்த பகுதியில், தீர்க்கமாக ஆராய்ந்திருக்கிறீர்கள்.

இவைகளில்:

- இஸ்ரவேலின் சரித்திரம் மற்றும் எதிர்காலம்
- மனித சரித்திரத்தின் மேடையில் தோன்றின மூன்று மிக பெரிய மனிதர்களின் வாழ்க்கைகளும், நற்பண்புகளும்: ஆபிரகாம், மோசே மற்றும் இயேசு
- எல்லா வேதாகம தீர்க்கதரிசனத்தின் கருப்பொருள்: மேசியா-இரட்சகரின் வாழ்க்கையும் வேலையும் அடங்கும்.

இப்படி செய்வதில், சுமார் 200 குறிப்பிட்ட கேள்விகளுக்கு வேதாகமத்தில் நீங்களே பதில்களை தேடி கண்டுப்பிடித்திருக்கின்றீர்கள்.

வேதாகமத்தின் 23 முக்கியமான வசனங்களையும், நீங்கள் மனப்பாடம் செய்துள்ளீர்கள்.

தைரியம் கொள்ளுங்கள்! இப்பாடத்திட்டத்தை நிறைவு செய்ய இன்னும் ஒரு சில பாடங்களே உள்ளன. அதற்கு பின், இவ்வுலகத்தில் தேவனை அறிந்து வாழ்வதின் பயன்களை அனுபவிக்க நீங்கள் ஆயத்தமாக்கப் பட்டிருப்பீகள்.

இப்போது, இனிவரும் பாடங்களை குறித்து ஓர் வார்த்தை: பாடங்கள் 17, 18, 19 சரித்திரத்தின் உச்சக்கட்டத்துக்கு உங்களை வழிநடத்தும்: அதுதான் இயேசுவின் வருகை. இங்கே, அவருடைய வருகையை முன்னறிவிக்கும் அநேக அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கு பின் கடைசி மறுபரிசீலனையின் கேள்விகளுக்கு நீங்கள் விடை அளிப்பீர்கள். கடைசியாக பாடம் 20, எல்லா கருத்துக்களையும் இணைத்து, தனிப்பட்ட விதத்தில் அவைகளை பயன் படுத்துவதை குறித்து போதிக்கும். தொடர்ந்து முன்னேருங்கள்! நீங்கள் இதுவரை நன்றாக முன்னேறி உள்ளீர்கள்.

மூன்றாவது மறுபரிசீலனை

புதிதான பாடங்களிலுள்ள கருத்துக்களுக்கு நீங்கள் கடந்து போகும் முன், பாடங்கள் 12-16ல் உள்ள விலையேறப்பெற்ற கருத்துக்களை புரிந்துகொண்டீர்களா? என ஆராய வேண்டும். இவைகளை எவ்வளவு நன்றாக புரிந்துக்கொள்ளுகிறீர்களோ, அவ்வளவு தெளிவாக பின் வரும் கருத்துக்களை நீங்கள் புரிந்துக்கொள்வீர்கள்.

முன்னிருந்த மறுபரிசீலனைகளை போலவே, இதுவும் இருக்கும்.

முதலாவது, முன்னிருக்கும் ஐந்து பாடங்களின் கேள்விகளை, அவைகளின் சரியான பதில்களோடு சேர்த்து படியுங்கள். ஒவ்வொரு சரியான விடைக்கு காரணத்தை நீங்கள் அறிந்தும், புரிந்துமிருக்கிறீர்களா என சோதியுங்கள்.

இரண்டாவது, இவ்வைந்து பாடங்களில் கற்றுக்கொண்ட ஒவ்வொரு வேதாகம பகுதியையும் மறுபரிசீலனை செய்யுங்கள்.

மூன்றாவதாக, பின் வரும் கேள்விகளை படித்து, அவைகளுக்கு எப்படி பதிலளிப்பீர்களென சிந்தித்துப்பாருங்கள். இக்கேள்விகள் அனைத்தும் ஏதோ ஓர் விதத்தில் நீங்கள் படித்த பாடங்களோடு தொடர்புடையவை.

1. இஸ்ரவேலின் சரித்திரத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களில், எவைகள் இன்றைக்கும் இஸ்ரவேலுக்கும் மற்ற ஜாதிகளுக்கும் ஏற்றவைகளாக இருக்கின்றன?
2. தன்மேலிருந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் எப்படிப்பட்ட இரக்கத்தின் கிரியைகளை செய்ய இயேசு பலப்படுத்தப்பட்டார்?
3. பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றின பத்து சம்பவங்களை, இயேசுவின் வாழ்க்கையிலிருந்து குறிப்பிடுக.
4. மோசேக்கும் இயேசுவுக்கும் பத்து முக்கியமான ஒப்பனைகளை கூறுக.

கடைசியாக ஓர் தனித்தாளில், இக்கேள்விகளுக்கான உமது சொந்த பதில்களை எழுதிக்கொள்ளுங்கள்.

இம்மூன்றாம் மறுபரிசீலனைக்கு மதிப்பெண்கள் ஏதுமில்லை. நீங்கள் படித்த யாவையும் உங்களுக்கு உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இது நிறைவேறியது என்ற நிச்சயம் உங்களுக்கு உண்டானால் 17ம் பாடத்துக்கு திருப்பிக்கொள்ளுங்கள்.

பாடம் பதினேழு

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

முன்னுரை:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து முதல் முறையாக பூமிக்கு வந்தார். அவர் முதல் வருகையை குறித்து, வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் முன்னறிவித்தன. இத்தீர்க்கதரிசனங்கள் கூறினபடியே அவருடைய முதல் வருகை சம்பவித்தது.

இப்பூமியை விட்டு இயேசு பரலோகத்துக்கு திரும்பினபோது, மீண்டும் வருவேன், என்ற வாக்குறுதியை தமது சீஷர்களுக்கு கொடுத்து சென்றார். இயேசு சொன்ன வாக்குகளை தவிர, அவருடைய இரண்டாம் வருகையை குறித்து வேதாகமத்தில் இன்னும் அநேக தீர்க்கதரிசனங்களும் உண்டு. அவருடைய முதல் வருகையை விட இரண்டாம் வருகையை குறித்த வாக்குத்தத்தங்களே அதிகம்.

அவருடைய முதல் வருகையை குறித்த தீர்க்கதரிசனங்களெல்லாம், எழுதப்பட்டபடியே நடந்தேறினபடியால், அவருடைய இரண்டாம் வருகையை குறித்ததான தீர்க்கதரிசனங்களும் அவ்வண்ணமே நிறைவேறும் என்ற முடிவுக்கு வருவது ஞானமானது.

இப்பாடத்திலுள்ள வசனங்கள் கிறிஸ்துவின் வருகையை குறித்த தெளிவான வாக்குத்தத்தங்கள். கிறிஸ்தவர்களுக்கு அந்நேரத்தில் என்ன சம்பவிக்குமென்றும், அதற்கு அவர்கள் எப்படி ஆயத்தமாக வேண்டுமென்பதையும் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன.

மனப்பாட பகுதி: லூாக்கா 21:36

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. கிறிஸ்துவின் வருகையை குறித்த வாக்குத்தத்தங்கள்

1. என்ன நோக்கத்துக்காக சீஷர்களை விட்டு போகிறேன் என இயேசு கூறினார் ? (யோவான் 14:2) ....

....

2. சீஷர்களை விட்டு பிரியும் போது, இயேசு அவர்களுக்கு என்ன வாக்கு கொடுத்தார் ? (யோவான் 14:3) ....

....

3. கிறிஸ்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தேவதூதர்கள் என்ன வாக்குக்கொடுத்தார்கள் ? (அப். 1:11)

....

....

4. எல்லா கிறிஸ்தவர்களும் எதிர்நோக்கியிருக்கும் ஆனந்த பாக்கியம் என்ன ? (தீத்து 2:13) ....

....

5. கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வரும்போது, எம்மூன்று சத்தங்கள் கேட்கப்படும் ? (1 தெச. 4:16)

(1) .... (2) ....

(3) ....

ஆ. கிறிஸ்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும்

6. மேசியா வரும்போது, எல்லா கிறிஸ்தவர்களும் மரித்திருப்பார்களா (நித்திரையடைந்திருப்பார்களா) ? (1 கொரி. 15:51)..............................

7. மரித்த கிறிஸ்தவர்களுக்கு அந்நேரத்தில் என்ன சம்பவிக்கும் ? (1 தெச. 4:16)..

....

8. மரித்த மற்றும் உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எவ்விரண்டு காரியங்கள் சம்பவிக்கும் ?

(1) (1 கொரி. 15:51) ....

(2) (1 தெச. 4:17) ....

9. இக்கிறிஸ்தவர்கள் மறுபடியும் ஆண்டவரிடமிருந்து பிரிக்கப் படுவார்களா ? (1 தெச. 4:17) ....

10. ஆண்டவரை நாம் தரிசிக்கும் போது, நம்மில் என்ன மாற்றம் ஏற்படும்? (1 யோவான் 3:2)..

11. இம்மாற்றத்தின் காரணமாக கிறிஸ்தவர்களின் சரீரம் அப்போது எப்படி இருக்கும்? (பிலி. 3:21) ....

....

12. உயிர்த்தெழுதலுக்கு* பின் கிறிஸ்தவனின் சரீரத்தை விவரிக்க பவுல் எவ்விரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்? (1 கொரி. 15:53)

(1) .... (2) ....

13. கிறிஸ்தவர்கள் அப்போது அனுபவிக்கும் விருந்தை வேதாகமம் எப்படி விவரிக்கின்றது? (வெளி. 19:9) ....

....

இ. கிறிஸ்தவர்கள் எப்படி ஆயத்தப்பட வேண்டும்

14. கல்யாண விருந்துக்கு முன், ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி என்ன செய்தாள்? (வெளி. 19:7) ....

15. எப்படிப்பட்ட உடைகளை அணிந்திருந்தாள்? (வெளி. 19:8)

....

16. மெல்லிய வஸ்திரம் என்பது எதை குறிக்கின்றது? (வெளி. 19:8)

....

17. பத்து கன்னிகைகளில், திருமணத்துக்குள் பிரவேசித்தவர்கள் யார்? (மத். 25:10) ....

18. இயேசு மீண்டும் வரும்போது அவரை காண்பேன் என்ற நம்பிக்கையையுடைய மனிதன், அதற்கு தன்னை எப்படி ஆயத்தப்படுத்துவான்? (யோவான் 3:3) ....

....

19. இரட்சிப்புக்கென்று* இரண்டாம் முறை இயேசு யாரிடம் தோன்றுவார்? (எபி. 9:28) ....

20. இயேசுவை காண விரும்பினால் எவ்விரண்டு காரியங்களை நாம் செய்ய வேண்டும்? (எபி. 12: 14)

(1) ....

(2) ....

21. இயேசு மீண்டும் வரும் போது, உண்மையான கிறிஸ்தவர்களின் மூன்று அடையாளங்கள் எவைகளாக இருக்கும்? (2 பேதுரு 3:14)

(1) .... (2) ....

(3) ....

22. தன்னுடைய வருகை திடீரென சம்பவிக்கும் என்பதை காண்பிக்க, இயேசு என்ன வார்த்தைகளை பயன்படுத்தினார்? (வெளி. 3:3; 16:15)

....

23. இயேசுவின் வருகையின் நாளையும் நேரத்தையும் அறிந்தவர் யார்? (மாற்கு 13:32) ....

24. தன் வருகையை முன்னிட்டு, எல்லா கிறிஸ்தவர்களும் என்ன செய்ய வேண்டுமென கிறிஸ்து இயேசு எச்சரித்தார்? (மாற்கு 13:35-37)

....

25. விழித்திருப்பதோடு வேறென்ன செய்ய வேண்டுமென இயேசு கிறிஸ்தவர்களை எச்சரித்தார்? (லூக்கா 21:36) ....

....

26. கிறிஸ்தவர்கள் ஆயத்தமாயிராதபடி எம்மூன்று காரியங்கள் அவர்களை தடை செய்யக்கூடுமென இயேசு எச்சரித்தார்? (லூக்கா 21:34)

(1) .... (2) ....

(3) ....

மனப்பாட பகுதி: லூக்கா 21:36

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தை திருப்பிப்பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினேழு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்ய	1
2.	மீண்டும் வந்து அவர்களை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார்	2
3.	அவர் வானத்துக்கு எப்படி எழுந்தருளினாரோ அப்படியே மறுபடியும் வருவார்	2
4.	மகா தேவனும், நம்முடைய இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதல்	2
5.	(1) ஆரவாரம்	1
	(2) பிரதான தூதனுடைய சத்தம்	1
	(3) தேவ எக்காளம்	1
6.	இல்லை	1
7.	அவர்கள் மரித்தோரை விட்டு எழுந்திருப்பார்கள்	1
8.	(1) அவர்கள் எல்லாரும் மறுரூபமடைவார்கள்	1
	(2) அவரோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்	1
9.	இல்லை, இனி ஒருபோதுமில்லை	1
10.	அவரைப்போல் இருப்போம்	1
11.	கிறிஸ்துவின் மகிமையின் (மகிமையடைந்த*) சரீரத்துக்கு ஒப்பாக	1
12.	(1) அழியாமை*	1
	(2) சாவாமை*	1
13.	ஆட்டுக்குட்டியானவரின் (இயேசுவின்) கல்யாண விருந்து	1
14.	தன்னை ஆயத்தமாக்கினாள்	1
15.	சுத்தமும், பிரகாசமுமான மெல்லியவஸ்திரம் (வெள்ளை)	1
16.	பரிசுத்தவான்களின் நீதிகளே	1

17.	ஆயத்தமாயிருந்தோர்	1
18.	அவர் (இயேசு) சுத்தமுள்ளவராயிருப்பது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்வான்	2
19.	தமக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு	1
20.	(1) யாவரோடும் சமாதானமாயிருக்க நாட வேண்டும்	1
	(2) பரிசுத்தத்தை நாட வேண்டும்	1
21.	(1) கறையற்றவர்கள்	1
	(2) பிழையில்லாதவர்கள்	1
	(3) சமாதானமுள்ளவர்கள்	1
22.	திருடனைப்போல	1
23.	பிதாவாகிய தேவனை தவிர, வேறொருவருமில்லை	1
24.	விழித்திருக்க வேண்டும்	1
25.	எப்போதும் ஜெபம் பண்ணவேண்டும்	1
26.	(1) பெருந்திண்டி	1
	(2) வெறி	1
	(3) லௌகீக கவலை	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி, பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணை குறைக்கவும். 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்).	4
	மொத்தம்	43

22 மதிப்பெண்கள் = 50%

30 மதிப்பெண்கள் = 70%

34 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினேழு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1-5 ‘‘இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்’’ (மத். 18:16). கிறிஸ்துவின் வருகையை குறித்து நமக்கு மூன்று சாட்சிகள் உள்ளன: (1) கிறிஸ்து தாமே (யோவான் 14:3); (2) தூதர்கள் (அப். 1:11) (3) அப்பேஸ்தலனாகிய பவுல் (1 தெச. 4:16). கிறிஸ்துவே திரும்பிவருவார் என்பது வலியுறுத்தப்படுவதை கவனியுங்கள்: “இந்த இயேசு” (அப். 1:11), கர்த்தர் தாமே (1 தெச. 4:16). கிறிஸ்தவவாழ்வின் மிக உயர்வான இலக்கு இந்த ‘‘ஆனந்த பாக்கியமே’’ (தீத்து 2:13).

5. (1) ஆரவாரம் தேவனிடத்திலிருந்தே வரும். மரித்தோரை புறம்பே அழைக்க அவருடைய சத்தத்துக்கு மட்டுமே வல்லமை உண்டு. (யோவான் 5:28-29ஐ பார்க்கவும்). (2) பிரதான தூதன் காபிரியேலாக இருக்கக்கூடும். தேவன் மனிதனுடைய காரியங்களில் செயல்பட உள்ள நிலையில், அதை அறிவிப்பதே அவனுடைய விசேஷித்த பணி. (லூக்கா 1:19, 26ஐ பார்க்கவும்). (3) தேவனுடைய ஜனங்களை கூட்டிச் சேர்க்க எக்காளம் பயன்படுத்தப்படும். (எண். 10:2-3ஐ பார்க்கவும்)

6. “நித்திரையடைவது” என்பது மரிப்பதாகும். (அப். 7:60 மற்றும் 1 கொரி. 11:30ஐ ஒப்பிடவும்). இவ்வார்த்தை, கிறிஸ்தவர்களின் மரணத்துக்கு பயன்படுத்தப்படும், ஏனென்றால் அவர்கள் உயிர்த்தெழுதலின்* நாளில் மீண்டும் எழுந்திருப்போம் என எதிர்ப்பார்க்கிறார்கள்.

6-8. நிகழ்வுகள், இவ்வரிசையில் நடக்கும்: (1) மரித்த (நித்திரையடைந்த) கிறிஸ்தவர்கள், மகிமையடைந்த* சரீரங்களோடு எழுந்திருப்பார்கள். (2) உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களின் சரீரங்கள் ஒரு நொடிப் பொழுதில் மகிமையடைந்த* சரீரங்களாக மாற்றப்படும். (3) பரலோகத்திலிருந்து இறங்கிவரும் கர்த்தரை சந்திக்க எல்லா கிறிஸ்தவர்களும் வானத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

10-12. மகிமையடைந்த* கிறிஸ்தவனின் சரீரம், கர்த்தருடைய மகிமையடைந்த* சரீரத்துக்கு ஒப்பாயிருக்கும். *(இதை குறித்து இன்னும் அறிந்துக்கொள்ள, நான் எழுதின “நீதியான வாழ்க்கைக்கான அஸ்திபாரங்கள்” என்ற புத்தகத்தை பாருங்கள் - பகுதி 6, மரித்தோரின் உயிர்த்தெழுதல்).*

14. மத்தேயு 8:11ஐயும் மத்தேயு 26:29ஐயும் ஒப்பிட்டு பாருங்கள்.

14-21, 24-25. கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருப்பதற்கு, கிறிஸ்தவர்கள் கடினமாக உழைக்க வேண்டுமென வேதம் மிக தெளிவாக போதிக்கிறது. வெளி. 19:8ல் "மெல்லிய வஸ்திரம்" என்பதின் சரியான அர்த்தம் "பரிசுத்தவான்களின் நீதியின்* கிரியைகளே". விசுவாசத்தினால் பெறப்பட்டு, கிறிஸ்தவர்களின் அனுதின வாழ்க்கையில் செயலாற்றும் கிறிஸ்துவின் நீதி* இதுவே. (பிலி. 2:12-13 "பிரயாசப்படுங்கள். . . ஏனெனில் தேவன் செய்கையை உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.") தேவனுடைய வார்த்தை, கிறிஸ்தவர்களை இவ்விதமான நீதியின் கிரியைகளால் தங்களை ஆயத்தப்படுத்தும்படி அறிவுறுத்துகிறது:

1. சுத்தவானாயிருப்பது (கறையில்லாமல் இருப்பது) (1 யோவான் 3:3 மற்றும் 2 பேதுரு 3:14)
2. பரிசுத்தம் (எபி. 12:14)
3. சமாதானம் (எல்லா மனிதரோடும் சரியான உறவு) (எபி. 12:14 மற்றும் 2 பேதுரு 3:14)
4. பிழையற்ற தன்மை (கிறிஸ்தவனின் எல்லா கடமைகளிலும் உண்மையாயிருப்பது) (2 பேதுரு 3:14)
5. நம்பிக்கை (கிறிஸ்துவுக்காக வாஞ்சையாய் எதிர்ப்பார்ப்பது) (எபி. 9:28)
6. விழித்திருந்தல் (மாற்கு 13:37)
7. ஜெபத்தில் தரித்திருந்தல் (லூக்கா 21:36)

22. தான் வருகிற விதத்தில் கிறிஸ்து திருடனைப் போலிருப்பார் ஆனால் தன்னுடையதை மட்டுமே எடுத்துக்கொள்வார் - கிறிஸ்துவின் வருகையில் அவருடையவர்களாயிருப்பவர்களே எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 கொரி. 15:23)

23. நேரம் வரும் போது, பிதா குமாரனுக்கு அறிவிப்பார். அப்போது முழு பரலோகமும் ஒருமிக்க கிரியை செய்ய எழுந்திருக்கும்.

30. (1) குடிபோதையைக் குறித்து எச்சரிக்கும் முன், அளவிற்கு அதிகமாக புசித்துக்குடிப்பதை குறித்தே எச்சரித்தார்.

(2) லூக்கா 17:27 - 28ஐ ஒப்பிடவும். இங்கே சொல்லப்படும் காரியங்கள் தனிப்பட்ட விதத்தில் பாவம் அல்ல. ஆனால் இவைகளிலேயே உழன்று கிடப்பதினால் பாவம் வருகின்றது.

பாடம் பதினெட்டு

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடையாளங்கள்

முன்னுரை

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் பூமியில் நடக்கக்கூடிய பல்வேறு விசேஷித்த நிகழ்வுகளை குறித்து வேதம் நமக்கு அறிவிக்கிறது. இந்நிகழ்வுகள், அவர் வருகிறார் என நம்மை எச்சரிக்கும் அடையாளங்களாக இருக்கும். இப்பாடத்தில், மிக முக்கியமான அடையாளங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அ. மத உலகத்தில் தோன்றும் அடையாளங்கள்

ஆ. பொதுவான உலகத்தில் தோன்றும் அடையாளங்கள்

ஒவ்வொரு அடையாளங்களின் வகுப்புக்குக் கீழும், வேதத்தில் அவ்வடையாளங்கள் கூறப்படும் வசனங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடத்தில் நீங்கள் பின் வரும் காரியங்களை செய்ய வேண்டும்:

(1) பகுதி 'அ'வில் உள்ள அடையாளங்களை வாசித்துப் பாருங்கள்.

(2) பகுதி 'அ'வின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

(3) ஒவ்வொரு அடையாளத்தின் கீழும், எந்த வசனத்தில் அவ்வடையாளத்தை குறித்து சொல்லப்பட்டுள்ளதென்பதை குறிப்பிடுங்கள்.

(4) இதே வழிமுறையை, பகுதி 'ஆ'வுக்கும் பயன்படுத்துங்கள்.

(5) ஒவ்வொரு அடையாளத்தின் முடிவிலும் ஓர் சதுர கட்டத்தை காண்பீர்கள். முழு பாடத்தையும் முடித்த பின், இன்னொரு முறை பாடத்தை வாசித்து, அவ்வடையாளங்கள் உலகத்தில் நிறைவேறி விட்டதென்று நீங்கள் உணர்ந்தால், அக்கட்டத்தில் குறியிடுங்கள். (கவனிக்க: ஒவ்வொரு அடையாளத்துக்கும், ஒவ்வொரு வசனமுண்டு. ஆனால் பகுதி 'ஆ'வில், மத். 24:7 மூன்று வெவ்வேறான அடையாளங்களுக்கு பொருந்தும். எந்தெந்த அடையாளத்துக்கு பொருந்தும் என்பதை அவ்வடையாளங்களின் கீழ் குறிப்பிடுங்கள்).

மனப்பாட பகுதி: லூக்கா 21:28

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்திய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. மத உலகத்தில் தோன்றும் அடையாளங்கள்

1. உலகமெங்கும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதல்.

   .... ☐

2. உலகமெங்கும் சுவிசேஷ மற்றும் மிஷனரி பணி.

   .... ☐

3. எல்லா தேசங்களிலும் கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு, கொடுமை செய்யப்பட்டு கொல்லப்படுதல்.

   .... ☐

4. பல கள்ள தீர்க்கதரிசிகள்.

   .... ☐

5. கிறிஸ்தவ விசுவாசத்தை* விட்டு அநேகர் விழுந்து போகுதல்.

   .... ☐

6. பிசாசினால் தவறாக நடத்தப்பட்டு, பல கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கும் ஆவிகளுக்கு இடமளித்தல்.

   .... ☐

7. அநேக கிறிஸ்தவர்களுடைய அன்பு தணிந்து போகுதல்.

   .... ☐

வசன குறிப்புகள்

- **மத்தேயு 24:12**
- **2 தீமோத்தேயு 4:1**
- **மத்தேயு 24:9**
- **அப்போஸ்தலர் 2:17**
- **மத்தேயு 24:11**
- **2 தெச. 2:3**
- **மத்தேயு 24 :14**

ஆ. பொதுவான உலகத்தில் தோன்றும் அடையாளங்கள்

8. சர்வதேச அளவிலான மகா யுத்தங்கள்; ஜாதிக்கு விரோதமாக ஜாதி எழும்பும்.

   .... ☐

9. பிரயாணங்களும் அறிவும் அதிகரித்தல்.

   .... ☐

10. சீயோன் பற்று உருவாகுதலும் இஸ்ரவேல் மீண்டும் கட்டி எழுப்பப்படுதலும். .... ☐

11. எருசலேம் புறஜாதியாரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்படுதல். .... ☐

12. பல பரியாசக்காரர்கள் தேவனுடைய வார்த்தையையும், கிறிஸ்துவின் வருகையை குறித்த வாக்குத்தத்தங்களையும் நிராகரித்தல். .... ☐

13. ஜனங்கள் உலக உல்லாசங்களிலும், அன்றாட வாழ்க்கையிலும் கட்டப்பட்டு, வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை* மறந்து போகுதல். .... ☐

14. ஒழுக்கமான நேர்மையான ஜீவியத்தில் பின்னடைவு, அதனோடு மதத்தின் வெளியரங்கமான செயல்பாடுகளிலும் பின்னடைவு. .... ☐

15. அக்கிரமம் மிகுதியாகும்.. ☐

16. பஞ்சங்களும் கொள்ளைநோய்களும்.. ☐

17. பல இடங்களில் பூமியதிர்ச்சிகள்.. ☐

18. ஜாதிகளில் தத்தளிப்பும் இடுக்கணும் (குழப்பம்).. ☐

19. பல அந்திக்கிறிஸ்துக்கள்.. ☐

வசன குறிப்புகள் :

- மத்தேயு 24:12
- லூக்கா 21:24
- 1 யோவான் 2:18
- 2 பேதுரு 3:2-7
- தானியேல் 12:4
- மத்தேயு 24:7
- லூக்கா 17:26-30
- சங்கீதம் 102:16
- 2 தீமோத்தேயு 3:1-5
- லூக்கா 21:25

மனப்பாட பகுதி: லூக்கா 21:28

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, அடுத்தப்பக்கத்தைப் பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பதினேழு

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	அப்போஸ்தலர் 2:17	1
2.	மத்தேயு 24:14	1
3.	மத்தேயு 24:9	1
4.	மத்தேயு 24:11	1
5.	2 தெசலோனிக்கேயர் 2:3	1
6.	1 தீமோத்தேயு 4:1	1
7.	மத்தேயு 24:12	1
8.	மத்தேயு 24:7	1
9.	தானியேல் 12:4	1
10.	சங்கீதம் 102:16	1
11.	லூக்கா 21:24	1
12.	2 பேதுரு 3:2-7	1
13.	லூக்கா 17:26-30	1
14.	2 தீமோத்தேயு 3:1-5	1
15.	மத்தேயு 24:12	1
16.	மத்தேயு 24:7	1
17.	மத்தேயு 24:7	1
18.	லூக்கா 21:25	1
19.	1 யோவான் 2:18	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணை குறைக்கவும், 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் மதிப்பெண்ணிட வேண்டாம்).	4
	மொத்தம்	23

12 மதிப்பெண்கள் = 50%

16 மதிப்கெண்கள் = 70%

18 மதிப்கெண்கள் = 80%

இறுதியாக மூன்று முக்கிய கேள்விகள்

கிறிஸ்துவின் வருகையை குறித்து, பத்தொன்பது வெவ்வேறான அடையாளங்கள் இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

1) **எத்தனை அடையாளங்களுக்கு குறியிட்டீர்கள் ?**
2) **கிறிஸ்து சீக்கிரம் வருகிறார் என்பதை இதிலிருந்து நீங்கள் உணருகிறீர்களா ?**
3) **அப்படியானால், நீங்கள் ஆயத்தமா ?**

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பதினெட்டு

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1. மாம்சமான யாவர்மேலும் என்பது முழு மனித குலத்தையும் குறிக்கின்றது. தீர்க்கதரிசன ஆகமங்களில் இவ்வர்த்தத்தில் அநேக முறை பயன்படுத்தப்படுகின்றது. (ஏசா. 40:5-6) (எரே. 25:31) (எசே. 21:4-5). தேவனுடைய ஆவியானவரின் இவ்விதமாய் கடைசியாக ஊற்றப்படுவதின் விளைவை, மனுக்குலம் அனைத்தும் உணரும்.

2. மற்ற தேசங்களுக்கும், ஜனங்களுக்கும், சுவிசேஷத்தை அறிவிப்பது, தேவனுடைய ஆவி ஊற்றப்படுவதன் இயற்கையான விளைவாகும். இவ்வடையாளத்துக்கு பின்னிருக்கும் விசேஷித்த குறிப்பை கவனித்துப் பாருங்கள்: “அப்போது முடிவு வரும்” (மத். 24:14).

3. எந்த நூற்றாண்டை காட்டிலும், 20ம் நூற்றாண்டில், கிறிஸ்துவுக்காக உயிர் தியாகம்* செய்தோரின் எண்ணிக்கை அதிகமாகும். உதாரணத்துக்கு: அநேக கம்யூனிஸ்ட் நாடுகள் தங்கள் தேசத்தின் கொள்கைக்காகவே கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறார்கள்.

4-6. கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பதிலிருந்து கிறிஸ்தவர்களை நயவஞ்சகமாய் பின்னிட்டு திரும்பச் செய்ய, பிசாசின் தந்திரங்களும் வஞ்சகங்களும் அதிகரிப்பதை இம்மூன்று அடையாளங்களும் சுட்டிக்காண்பிக்கின்றன. கடைசி நாட்களில் கிறிஸ்தவர்களின் இரண்டு முக்கிய பிரிவுகளே இருக்குமென வேதாகமம் தெளிவுப்படுத்துகின்றது. ஒன்று “மணவாட்டி” என்றழைக்கப்படும் கூட்டம், மற்றொன்று “வேசி” என்றழைக்கப்படும். மணவாட்டி மணவாளனுக்கு (கிறிஸ்துவுக்கு) உண்மையாயிருப்பாள். வேசி கிறிஸ்துவுக்கு உண்மையற்றவள். (வெளி. 17–18ஐ பார்க்கவும்).

7. லவோதேக்கியா சபையின் சித்திரத்துக்கு ஒத்த அடையாளமிது. ‘‘வெதுவெதுப்பாயிருப்பதே’’ கிறிஸ்தவர்களை இங்கே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும் பாவம்; அவர்களுக்கு அனலுமில்லை, குளிருமில்லை (வெளி. 3:14-22). கிறிஸ்தவர்களின் அன்பு தணிந்து போவதற்கு இவைகளில் ஒன்றே காரணமாக இருக்கும்: (1) கிறிஸ்வர்கள் அதிகமாக துன்புறுத்தப்படுவது (2) கிறிஸ்தவர்கள் பிசாசினால் வஞ்சிக்கப்படுவது (3) கிறிஸ்தவர்கள் பணத்துக்காகவும் லௌகீக சுகங்களுக்காகவும் வாழுதல்.

8. எந்த நூற்றாண்டையும் விட, கடந்த நூற்றாண்டு பல்வேறு பெரிய யுத்தங்களை கண்டிருக்கிறது. குறிப்பாக இரண்டு உலக மகா யுத்தங்கள் நடந்துள்ளன.

9. இவ்விரண்டிற்கும் இருக்கும் தொடர்பை கவனியுங்கள். அறிவின் (அறிவியல்) பெருக்கம், பயணங்களை அதிகரிப்பதை சாத்தியமாக்குகிறது. அதே போல் அதிகமாக பிரயாணம் செய்வது அறிவைபெருக செய்கிறது.

10-11. சீயோன் பற்று உருவாகுதல், இஸ்ரவேல் தேசத்தின் மறுபிறப்பு, 1967ன் ஆறு நாள் யுத்தம் - தற்காலத்து சரித்திரத்தின் மிக பெரிய அதிசயங்களாவன. ஒருவர் இப்படியாக கூறியுள்ளார்: "தேவனுடைய தீர்க்கதரிசன கடிகாரத்தில், யூதர்கள் நிமிஷத்தை காட்டும் முள்ளைப் போலிருக்கிறார்கள்; அந்த முள் நள்ளிரவை நெருங்கி விட்டது.

12. கடந்த நூற்றாண்டில், வேதாகமத்தின் மேல் இதுவரை கண்டிராத தைரியமான எதிர்ப்புகளை கண்டிருக்கிறோம். ஆனால் வேதாகமத்துக்கு வந்த இத்தாக்குதல்களே, அது உண்மை என்பதை நிரூபிக்கின்றன, ஏனென்றால், வேதாகமம் இப்படிப்பட்ட எதிர்ப்புகளை முன்னறிவிக்கின்றது.

13-15,18 தற்காலத்து நாளிதழ்களால் இவ்வடையாளம் உண்மையென்று விளங்குகிறது. (லூக்கா 17:26ஐ ஆதியாகமம் 6:5, 12-13உடன் ஒப்பிட்டு பார்க்கவும்). நோவாவின் நாட்களின் மூன்று முக்கிய பொல்லாத அம்சங்கள்: (1) பொல்லாத சிந்தைகளும் இச்சைகளும்

(2) ஒழுக்கக்கேடான, வேசித்தனமான பாலுறவும்

(3) வன்முறைகளுமாவன.

16. பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் இணைந்து செல்லும், அவைகள் யுத்தங்களினாலே தோன்றும்.

17. பூகம்பங்கள் அதிகளவில் அதிகரித்திருப்பதை, கடந்த நூற்றாண்டின் புள்ளிவிவரங்கள் காண்பிக்கின்றன.

19. "அந்திகிறிஸ்துவின் ஆவி"யின் (1 யோவான் 4:3) செயல்பாடு இரண்டு இலக்குகளைக் கொண்டது: முதலாவது, கிறிஸ்துவை, தேவன் அவருக்கு தந்த அதிகாரத்தின் ஸ்தானத்திலிருந்து அகற்றுவது; இரண்டாவதாக, கிறிஸ்துவின் ஸ்தானத்தில் இன்னொருவரை ஏற்படுத்துவது.

இக்கருத்தை நாம் மேற்காணும் விதத்தில் சிந்திக்கும் போது, இஸ்லாம், ஃபேசிசம், கம்யூனிஸம் போன்ற அரசியல் கொள்கைகள் அனைத்தும் கிறிஸ்துவுக்கு விரோதமானதாகவே இருந்திருக்கின்றன என்பதை அறிந்துக்கொள்கிறோம். (இன்றும் உலகத்தில் பல்வேறு அரசியல் மற்றும் மத சக்திகள் அதேபோல்தான் செயல்படுகின்றன.) ஆனாலும் உலகம் இன்னும் 2 தெச. 2:3-12ல் சொல்லப்பட்ட கடைசி அந்திகிறிஸ்துவுக்காக காத்திருக்கின்றது.

பாடம் பத்தொன்பது

கிறிஸ்துவின் இராஜ்ஜியம் பூமியில் நிறுவப்படுதல்

முன்னுரை:

தேவனுடைய இரக்கத்தை தள்ளிவிட்டு, அவருடைய திட்டங்களுக்கு எதிர்த்து நின்றவர்கள் மீது நியாயத்தீர்ப்புகளோடு* கிறிஸ்துவின் இராஜ்யம் பூமியில் நிறுவப்பட ஆரம்பிக்கும். அதே நேரத்தில் அவருடைய வருகையில் உயிர்த்தெழுந்த* அல்லது மறுரூபமாக்கப்பட்ட விசுவாசிகள் அவருடைய இராஜ்யத்தில் பல்வேறு அதிகாரத்தின் ஸ்தானங்களை பெறுவார்கள். எருசலேமை தலைநகரமாகக் கொண்டு, நியாயம், சமாதானம், செழிப்பு மற்றும் தேவனை அறிகிற அறிவு பூமி முழுவதற்கும் கொண்டு வந்து, இயேசு, பூமியின் அனைத்து இராஜ்யங்கள் மீதும் ஆளுகை செய்வார். கடைசியாக அவர் தம்மையும், தம்முடைய இராஜ்யத்தையும், பிதாவாகிய தேவனுக்கு அடிபணியும் விதத்தில் ஒப்புக்கொடுப்பார்.

மனப்பாட பகுதி: 2 தீமோ. 2:11-12

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

பாட கேள்விகள்

அ. மேசியாவின் இராஜ்யத்துக்கு வழியை உண்டாக்கும் நியாயத்தீர்ப்புகள்

1. இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வருவதைக் குறித்து, 2 தெச. 1:6-10ல் விவரிக்கப்பட்டுள்ளது:
   (1) பொல்லாதவர்களையும் கீழ்படியாதவர்களையும் என்ன செய்வார்? (வ.8) ....
   (2) அவர்களுக்கு என்ன தண்டனை வரும்? (வ.10) ....
   ....
2. மிருகத்துக்கும் (அந்திகிறிஸ்துவுக்கும்) கள்ள தீர்க்கதரிசிக்கும் என்ன சம்பவிக்கும்? (வெளி. 19:20) ....
   ....
3. பூமியிலுள்ள ஜாதிகளை இயேசு எப்படி அரசாளுவார்? (வெளி. 19:11-15) (சங். 2:7-9) ....

4. பூமியின் மீது தன்னுடைய சிங்காசனத்தை இயேசு ஸ்தாபிக்கும் போது, நியாயத்தீர்ப்பில்* அவருக்கு முன்பாக யார் கூட்டிச் சேர்க்கப்படுவார்? (மத். 25:31-32) (யோவேல் 3:1-2)

....

5. ஓர் குறிப்பிட்ட ஜனக்கூட்டத்தை நடத்தின விதத்தை வைத்தே இத்தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும். இக்கூட்டத்தை இயேசு எப்படி விவரிக்கின்றார்? (1) (மத். 25:40) ....

(2) (யோவேல் 3:2) ....

6. இயேசு விரும்பினதை செய்த தேசங்களுக்கு, என்ன இரட்டிப்பான பலன் கிடைக்கும்?

(1) (மத். 25:34) ....

(2) (மத். 25:46) ....

7. இயேசு விரும்பினதை செய்யாத தேசங்களுக்கு என்ன தண்டனை வரும்? (மத். 25:41, 46)..

....

ஆ. உயிர்த்தெழுந்த* விசுவாசிகளின் நிலை

8. இயேசுவுக்காக பாடு அனுபவித்தால், நாம் எவ்விரண்டு பலன்களை எதிர்ப்பார்க்க முடியும்?

(1) (ரோமர் 8:17) ....

(2) (2 தீமோ. 2:12) ....

9. தன்னோடு உண்மையாய் தொடர்ந்து வந்த அப்போஸ்தலருக்கு, இயேசு என்ன நிலையை வாக்குத்தத்தம் செய்தார்? (மத். 19:27-28)

....

....

10. தம்மோடு ஜாதிகளை ஆளும் அதிகாரத்தை, இயேசு, எப்படிப்பட்ட விசுவாசிக்கு கட்டளையிடுவார்? (வெளி. 2:26-27)

....

....

11. இயேசுவைக் குறித்த சாட்சியின் நிமித்தம் சிரைச்சேதம் பண்ணப்பட்ட விசுவாசிகளின் இரட்டிப்பான பங்கு என்ன? (வெளி. 20:4-5)

(1) ....

(2) ....

12. எஜமானனால் கொடுக்கப்பட்ட பணத்தை கையாண்ட வேலைக்காரரை குறித்து, இயேசு ஒரு உவமையை சொன்னார். (லூக்கா 19:12 -27ஐ பார்க்கவும்) இவர்களுக்கு கிடைத்த பலன் என்ன?

(1) பத்து மடங்கு பெருக செய்த ஊழியக்காரன் (லூக்கா 19:16-17)

....

(2) ஐந்து மடங்கு பெருக செய்த ஊழியக்காரன் (லூக்கா 19:18-19)

....

13. இனி வரும் யுகத்தில், உயிர்த்தெழுந்த* விசுவாசிகள் நியாயாதிபதிகளாக ஆளுகை செய்யக்கூடிய இரண்டு பகுதிகள் என்ன? (1) (1 கொரி. 6: 2) ....

(2) (1 கொரி. 6: 3) ....

இ. மேசியாவின் இராஜ்யத்தை குறித்த ஓர் தீர்க்கதரிசன முன்னோட்டம்

14. எப்படிப்பட்ட செங்கோலுடன் கிறிஸ்து ஆளுகை செய்கிறார்? (சங். 45:6) (எபி. 1:8) ....

15. எல்லோருக்கும் மேலாக தேவன் ஏன் இயேசுவை அபிஷேகம் செய்தார்? (சங். 45:7) (எபி. 1:9) ....

....

16. என்றென்றைக்கும் தங்கும் படி தேவன் எவ்விடத்தை தெரிந்துக் கொண்டார்? (சங். 132:13-14)..

17. தேவன் இராஜாவாக ஆளுகை செய்யும் இடத்துக்கு என்ன பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன? (ஏசா. 24:23)

(1) (சங். 48:1-2) ....

(2) (மத். 5:34-35) ....

18. கடைசி நாட்களில், எந்த பர்வதம், சுற்றிலுமுள்ள எல்லா பர்வதங்களுக்கும் மேலாக உயர்ந்திருக்கும்? (ஏசா. 2:2) (மீகா. 4:1)

....

19. இப்பர்வதத்திற்கு யார் ஓடி வருவார்கள்? (ஏசா. 2:2) (மீகா 4:1)

....

20. தேவன் இந்த ஜாதிகளுக்கு என்ன போதிப்பார்? (ஏசா. 2:3) (மீகா. 4:2) ....

21. எவ்விரண்டு காரியங்கள் சீயோனிலிருந்தும் எருசலேமிலிருந்தும் புறப்படும்? (ஏசா. 2:3) (மீகா. 4:2)

(1) ....

(2) ....

22. மேசியா ஜாதிகளை நியாயந்தீர்க்கும் போது, எவ்விரண்டு காரியங்களை இனி செய்யாதிருப்பார்கள்? (ஏசா. 2:4) (மீகா. 4:3)

(1) ....

....

(2) ....

23. ஒவ்வொரு ஆண்டும், எந்த விசேஷித்த பண்டிகைக்காக ஜாதிகள் எருசலேமுக்கு செல்வார்கள்? (சக. 14:16)

....

24. தாவீதின் குமாரனாகிய மேசியாவின் ஆளுகையின் சிறப்பம்சங்களை சங். 72 முன்னறிவிக்கின்றது. உதாரணத்துக்கு:

(1) ஏழைகளை எப்படி அரசாளுவார்? (வ. 2,4) ....

(2) எம்மூன்று விதமான மக்களை மேசியா விடுவிப்பார்*? (வ. 12)

அ) ....

ஆ) ....

இ) ....

(3) மேசியாவின் ஆளுகையில் எவ்விதமான நபர் செழிப்பான்? (வ.7)

....

(4) என்ன காரியம் மிகுதியாய் இருக்கும்? (வ. 7) ....

(5) மேசியாவுக்காக எல்லா ஜாதிகளும் எவ்விரண்டு காரியங்களை செய்வார்கள்?

அ) (வ. 11) ....

ஆ) (வ. 17) ....

25. மேசியாவின் நீதியான* ஆளுகையின் மூன்று நிரந்தர விளைவுகள் என்ன? (ஏசா. 32:17)

(1) ....

(2) ....

(3) ....

26. கிறிஸ்து ஆளுகை செய்யும் இக்காலக்கட்டம் எவ்வளவு நாள் நீடிக்கும்? (வெளி. 20:4,5) ....

27. இக்காலத்தின் முடிவில் கிறிஸ்து என்ன செய்வார்? (1 கொரி. 15:24, 28) ....

....

28. இவையனைத்திலும் தேவனுடைய இறுதி நோக்கம் என்ன? (1 கொரி. 15:28) ....

....

மனப்பாட பகுதி: 2 தீமோ. 2:11-12

இவ்வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

....

....

....

....

....

....

இப்பகுதியிலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கும் வரை, இப்பக்கத்தை திருப்பிப்பார்க்க வேண்டாம்.

சரியான விடைகள் மற்றும் மதிப்பெண்கள் - பாடம் பத்தொன்பது

கேள்வி	விடை	மதிப்பெண்
1.	(1) ஜுவாலித்து எரிகின்ற அக்கினியால் ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பார்	1
	(2) கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்தும், அவருடைய மகிமைபொருந்திய வல்லமையிலிருந்தும், அழிவாகிய தண்டனை	2
2.	கந்தகமும் அக்கினியும் எரிகின்ற கடலிலே தள்ளப்பட்டார்கள்	1
3.	இருப்புக்கோலால்	1
4.	எல்லா ஜாதிகளும்	1
5.	(1) என் சகோதரர்	1
	(2) என் ஜனம், இஸ்ரவேல் என்னும் என் சுதந்திரம்	2
6.	(அ) அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள்	1
	(ஆ) நித்திய* ஜீவனை அடைவார்கள்	1
7.	பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப் பட்டிருக்கும் நித்திய அக்கினியில், நித்திய ஆக்கினை அடைவார்கள்	2
8.	(1) அவருடனே மகிமை* அடைவோம்	1
	(2) அவருடனே ஆளுகை செய்வோம்	1
9.	பன்னிரெண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்து, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களை நியாயந்தீர்ப்பார்கள்	2
10.	ஜெயங்கொண்டு, முடிவுபரியந்தம் கிறிஸ்துவின் கிரியைகளை கைக்கொள்ளுகிறவன்	2
11.	(1) கிறிஸ்துவுடனே ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வார்கள்	1
	(2) முதலாம் உயிர்தெழுதலில்* பங்கடைய	1
12.	(1) பத்து பட்டணங்களின் மீது அதிகாரம்	1
	(2) ஐந்து பட்டணங்களின் மீது அதிகாரம்	1

13.	(1) உலகத்தை (2) தூதர்கள்	1 1
14.	நீதியின்* செங்கோல்	1
15.	ஏனென்றால் அவர் நீதியை* விரும்பி, அக்கிரமத்தை (பொல்லாப்பை) வெறுக்கிறார்	2
16.	சீயோன்	1
17.	(1) சீயோன் பர்வதம் (2) எருசலேம்	1 1
18.	கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்	1
19.	எல்லா ஜாதிகளும் (ஜனங்கள்)	1
20.	அவருடைய வழிகள்	1
21.	(1) வேதம் (2) கர்த்தருடைய வசனம்	1 1
22.	(1) ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுக்கமாட்டார்கள் (2) யுத்தத்தை கற்க மாட்டார்கள்	1 1
23.	கூடாரப் பண்டிகை	1
24.	(1) நியாயத்தோடு (2) (அ) எளிமையானவன் (ஆ) உதவியற்றவன் (இ) சிறுமையானவன் (3) நீதிமான் 4) சமாதானம் (5) (அ) அவரை சேவிப்பார்கள் (ஆ) பாக்கியமுடையவர் என்று அழைப்பார்கள்	1 1 1 1 1 1 1 1
25.	(1) சமாதானம் (2) அமரிக்கை (3) சுகம்	1 1 1

26.	ஆயிரம் வருடம்	1
27.	இராஜ்யத்தை பிதாவாகிய தேவனுக்கு ஒப்புவித்து, அவருக்கு கீழ்ப்பட்டிருப்பார்	2
28.	தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதே	1
	நீங்கள் எழுதின மனப்பாட பகுதியை, உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு சரி பார்க்கவும். உங்கள் மனப்பாட பகுதி பிழையின்றி இருந்தால், ஒவ்வொரு வசனத்துக்கும் 4 மதிப்பெண்கள். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண்ணை குறைக்கவும், ஒரு வசனத்தில் 3 தவறுகளுக்கு மேல் இருந்தால் அந்த வசனத்துக்கு மதிப்பெண்ணிட வேண்டாம்).	8
	மொத்தம்	62

31 மதிப்பெண்கள் = 50%

43 மதிப்பெண்கள் = 70%

50 மதிப்பெண்கள் = 80%

சரியான விடைகளுக்கான குறிப்புகள் - பாடம் பத்தொன்பது

(இப்பக்கத்திலிருக்கும் எண்கள், சரியான விடைகள் பக்கத்திலிருக்கும் எண்களை குறிக்கின்றன.)

1. 2 தெச. 1:6-10 கிறிஸ்துவின் வருகையின் மகிமையையும் வல்லமையையும் சித்தரிக்கின்றது. அவருடைய சத்துருக்கள் நித்திய* காலமாய் அகற்றப்படுவார்கள், ஆனால் தன்னோடு வரும் தூதரிடத்திலும், அவரை சந்திக்க எடுத்துக்கொள்ளப்படும் விசுவாசிகளிடத்திலும் அவருடைய மகிமை காணப்படும். (1 தெச. 4:16-17ஐ ஒப்பிடவும்).

2. தற்போதிய யுகம் முடிவுக்கு வரும்போது, "மிருகம்" (வெளி. 7:1) என்றழைக்கப்படும் ஓர் பொல்லாத, வல்லமையான தலைவனில், மனிதனின் பொல்லாப்பு உச்சக்கட்டத்தை எட்டுமென்று வெளி. 13 நமக்கு போதிக்கிறது. அவன், "பாவமனிதன்" (2 தெச. 2:3) "கேட்டின் மகன்" (வ. 3), மற்றும் "அந்திகிறிஸ்து" (1 யோவான் 2:18) என்ற பெயர்களையுடையவன். "கள்ளத் தீர்க்கதரிசி" என்னும் பெயர்கொண்ட ஓர் பொல்லாத மத தலைவனால் அவன் உதவி பெறுவான் (வெளி. 16:13). இருவரும் ஒன்றிணைந்து கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களை நிர்மூலமாக்க தேடுவார்கள். (தானி. 8:23-25ஐ ஒப்பிடவும்).

3. எல்லாவற்றுக்கும் மேலான வல்லமையோடும் அதிகாரத்தோடும் பொல்லாப்பை அழித்துப்போட, இயேசு இராஜாவாகவும் நியாயாதிபதியாகவும் வருகிறதை வெளி. 19:11-15 சித்தரிக்கின்றது.

4-7. இங்கே விவரிக்கப்படும் ஜாதிகளின் நியாயத்தீர்ப்பு, தேவனுடைய இராஜ்யத்தில் எந்த ஜாதிகள் சேர்க்கப்படுவார்கள் என்றும், எவைகள் சேர்க்கப்பட மாட்டாதென்றும் தீர்மானிக்கின்றது. இயேசுவின் சகோதரராகிய யூத மக்களை எப்படி நடத்தினார்கள் என்பதே இந்நியாயத்தீர்ப்பின் அடிப்படையாகும், யூதர்களுக்கு செய்யப்படும் எந்த நன்மையோ தீமையோ தமக்கே செய்யப்பட்டதாக இயேசு கருதுகிறார்.

8-13. இயேசு திரும்ப வந்து, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, இவ்வாழ்கையில் அவரை உண்மையாய் சேவித்தோர் கனமும், அதிகாரமும் உள்ள நிலைகளுக்கு உயர்த்தப்படுவார்கள். இப்பிரபஞ்சத்தை ஆளுகை செய்வதில், கிறிஸ்துவுடனே பங்குக்கொள்வார்கள். தற்போதிய யுகத்தில் எவ்வளவு உண்மையோடு இயேசுவுக்கு ஊழியம் செய்கிறார்களோ, அதற்கேற்ப விசுவாசிகளுக்கு கனமும் அதிகாரமும் அளிக்கப்படும்.

14-15. கிறிஸ்துவின் ஒப்பற்ற தன்மையாகிய நீதி*, அவருடைய இராஜ்யத்தில் பிரதிபலிக்கப்படும். நீதியில்லாமல்* உண்மையான அல்லது நிலைத்திருக்கும் சமாதானம் உண்டாகாது. (ரோமர் 14:17ஐ ஒப்பிடவும்)

16-17. தேவனுடைய இராஜ்ஜியத்தின் பூலோக தலைநகரம் எருசலேம் அல்லது சீயோனிலிருக்கும். எருசலேமின் சமாதானத்துக்காக ஜெபிக்க இதுவே மிக முக்கியமான காரணமாகும். (சங். 122:6ஐ பார்க்கவும்) எருசலேம் சமாதானத்தோடு ஸ்தாபிக்கப்படும் வரை, பூமியின் மற்ற பகுதிகள் உண்மையான சமாதானத்தை அறிய முடியாது.

18. தற்போது, சீயோன் பர்வதம், சுற்றிலுமுள்ள பர்வதங்களை காட்டிலும், குறைவான உயரமுள்ளது, ஆனால் கர்த்தருடைய வருகையின் போது பெரிய புவியியல் மாற்றங்கள் ஏற்பட்டு, சுற்றிலும் இருக்கிற பர்வதங்களைக் காட்டிலும், சீயோன் பர்வதம் உயர்ந்திருக்கும். (சக. 14:3-11ஐ ஒப்பிடவும்).

19-23. அப்போது, எருசலேம், ஆராதனைக்கும், அரசாங்கத்துக்கும், தேவனுடைய வழிகளில் போதிக்கப்படுவதற்கும், உலகத்தின் மையமாக இருக்கும். இது உலகமெங்குமுள்ள ஆயுதங்களை ஒழித்து, நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வரும்.

24-25. கிறிஸ்துவின் ஆளுகையின் முக்கியமான அம்சங்கள், நீதி*, நியாயம் (குறிப்பாக எளியவர்களுக்கு), சமாதானம், செழிப்பு, தேவனுடைய நியமிக்கப்பட்ட அரசனாக, அவரை (கிறிஸ்துவை) உலகமனைத்தும் ஏற்றுக்கொள்ளுதல் என்பவைகளாகும். அவருடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவதே, வியாதி, பஞ்சம், அநியாயம் மற்றும் யுத்தம் என்னும் பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வாகும்.

26. கிறிஸ்துவின் அரசாட்சியின் காலம், வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தில் 6 முறை குறிப்பாக கூறப்பட்டுள்ளது - 2, 3, 4, 5, 6 மற்றும் 7ம் வசனங்களில் இதை காணலாம்.

27-28. ரோமர் 11:36ல் கூறப்பட்டுள்ள கோட்பாடு, இராஜ்ஜியம் பிதாவாகிய தேவனுக்கு ஒப்புவிக்கப்படும் போது, நிறைவேறுகிறது. பிதாவாகிய தேவன், எல்லா காரியங்களின் ஊற்றாகவும், நிறைவாகவும் இருக்கிறார். ஆனாலும் மேசியாவாகிய தம்முடைய குமாரன் மூலமாகவே, பிதா இப்பிரபஞ்சத்தோடே தொடர்பு வைக்கிறார்.

இறுதி முன்னேற்ற மதிப்பீடு

உங்கள் விசுவாசமும் விடாமுயற்சியும் பலன் பெற்றன! முக்கியமான பத்தொன்பது பாடங்களையும் நீங்கள் முடித்து விட்டீர்கள். மீதியிருக்கும் ஒரே பாடம், தனிப்பட்ட பயன்பாட்டில் ஓர் பயிற்சியாகும்.*

நீங்கள் எவ்வளவு தூரம் வந்திருக்கின்றீர்கள் என்பதை திரும்பிப் பார்க்க சற்று நேரம் எடுத்துக்கொள்ளலாம்.

தேவனுடைய வார்த்தையும் தேவனுடைய ஆவியும், இணைந்து செயல்படும் போது, அவருடைய சேவையில் பலனுள்ள, வெற்றியுள்ள ஓர் நிலைக்கு உங்களை ஆயத்தமாக்குமென கண்டீர்கள்.

பாடம் 4ல், தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தையும் அதின் சிறப்பையும் கற்றுக்கொண்டீர்கள். பிறகு பாடங்கள் 10 மற்றும் 11ல் தேவனுடைய கனம்பெற்ற சாட்சிகளின் நீண்ட வரிசையில், உங்கள் நிலையை கண்டடைய வேண்டியது, உங்கள் பொறுப்பு என்று கற்றுக் கொண்டீர்கள். உங்கள் பொருளாதார தேவைகளுக்கு தேவன் ஆயத்தமாக்கியிருக்கும் வழிகளையும் கற்றுக்கொண்டீர்கள்.

மேசியாவின் நிவிர்த்திச்செய்யும் பலி, மனுக்குலத்தின் இரண்டு அடிப்படை பிரச்சனைகளுக்கு தெய்வீக தீர்வை எப்படி அளித்ததென்று பார்த்தீர்கள். இப்பிரச்சனைகள் பாவமும் வியாதியுமே. இத்தீர்வை உங்களுடைய வாழ்க்கையிலும், மற்றவர்களுக்காகவும் எப்படி பயன்படுத்துவதென்பதையும் கற்றுக்கொண்டீர்கள்.

ஆபிரகாமில் ஏற்பட்ட எளிய ஆரம்பத்திலிருந்து, சரித்திரத்தின் பெருந்திட்டத்தை, தீர்க்கதரிசிகள் மற்றும் இஸ்ரவேலின் பெருந்தலைவர்கள் வழியாய், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா - மீட்பர் வரை ஆராய்ந்து பார்த்தீர்கள். கடைசியாக, இந்த யுகத்ததை முடிவுக்கு கொண்டு வரும் ஓர் வியப்பூட்டும் நிகழ்வைக்குறித்து ஓர் சுருக்கமான முன்னோட்டத்தை பார்த்தீர்கள். வல்லமையோடும், மகிமையோடும் பூமியில் தன்னுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வரும் இயேசுவின் வருகையே அந்த நிகழ்வு.

இவையனைத்தையும் செய்வதில், நீங்கள் சுமார் 650 குறிப்பிட்ட கேள்விகளுக்கு, வேதாகமத்திலிருந்து பதில்களை தேடினீர்கள். வேதாகமத்தின 27 முக்கிய வசனங்களையும் மனப்பாடம் செய்தீர்கள்.

பாடம் 20ன் சவால்கள் உங்களுக்காக காத்திருந்தாலும், முதலாவது அடுத்த பக்கத்தில் காணப்படும் இறுதி மறுபரிசீலனையை கவனமாக செய்யுங்கள்.

இறுதி மறுபரிசீலனை

பாடம் 20க்கு கடந்து போகும் முன், பாடம் 17ல் இருந்து 19 வரையுள்ள எல்லா கருத்துக்களையும் நன்றாக மனதில் பதித்துக்கொள்ளுங்கள். கடைசியாக வரும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு நீங்கள் ஆயத்தமாக இது உங்களுக்கு உதவும்.

முதல் மூன்று மறுபரிசீலனைகளில் பயன்படுத்தப்பட்ட முறையே இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

முதலாவது, முன்பிருக்கும் மூன்று பாடங்களின் கேள்விகளையும் அவைகளின் சரியான பதில்களோடு வாசித்துப் பாருங்கள். ஒவ்வொரு சரியான விடைக்கும் காரணத்தை நீங்கள் அறிந்தும், புரிந்துமிருக்கிறீர்களா என சோதித்துப் பாருங்கள்.

இரண்டாவதாக, இம்மூன்று பாடங்களிலும் கற்றுக்கொண்ட ஒவ்வொரு வேதாகம பகுதியையும் மறுபரிசீலனை செய்யுங்கள்.

மூன்றாவதாக, பின் வரும் கேள்விகளை படித்து, அவைகளுக்கு எப்படி பதிலளிப்பீர்களென சிந்தித்துப் பாருங்கள். இக்கேள்விகள் அனைத்தும் ஏதோ ஓர் விதத்தில் நீங்கள் படித்த பாடங்களோடு தொடர்புடையவைகள்.

1. கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக, நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் என்ன?
2. கிறிஸ்து சீக்கிரம் வருகிறார் என்பதை உலகத்தில் காண்பிக்கும் 10 அடையாளங்களை பட்டியலிடுக.
3. மணவாட்டியின் "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" (வெளி. 19:8) என்பது, எதைக் குறிக்கும்? உங்கள் வஸ்திரம் ஆயத்தமா?
4. உயிர்த்தெழுதலின் போது எவ்விதங்களில் மாற்றப்படுவீர்கள்?

கடைசியாக, மேலிருக்கும் கேள்விகளுக்கான பதிலை ஓர் தனித்தாளில் எழுதுங்கள்.

மேலிருக்கும் இம்மறுபரிசீலனைக்கு மதிப்பெண்கள் ஏதுமில்லை. நீங்கள் படித்த யாவையும் உங்களுக்கு உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இது நிறைவேறினதென்று உங்களுக்கு திருப்தி உண்டானால், பாடம் 20க்கு கடந்து போங்கள்.

பாடம் இருபது

மறுபரிசீலனையும் தனிப்பட்ட பயன்பாடும்

முன்னுரை:

நீங்கள் இதுவரை கற்றுக்கொண்ட பல முக்கியமான சத்தியங்களை உங்கள் மனதில் உறுதியாக நிலைக்கச் செய்வதே இக்கடைசி பாடத்தின் நோக்கமாகும்.

எந்தப் பாடத்தையும் மனதில் பதித்து வைக்க, மறுபரிசீலனைச் செய்வது மிக முக்கியமானதாகும். இக்கடைசிப் பாடத்தில் நீங்கள் படிப்படியாக முன்னேறினால், இப்பாடத்திட்டத்தில் நீங்கள் பெற்ற பயனும் ஆசீர்வாதமும் இன்னும் அதிகரிக்கும். நீங்கள் எவ்வளவு கற்றுக்கொண்டீர்கள் என்பதையும் நீங்களே அறிந்துக்கொள்வீர்கள். மனப்பாட பகுதிகளை மறுபரிசீலனையை செய்ய மறந்து விடாதீர்கள்!

இறுதி மனப்பாட பகுதி : யாக்கோபு 1:25

☐ வசனத்தை மனப்பாடம் செய்தவுடன் இங்கே குறியிடவும்.

(முந்தைய பாடங்களிலிருந்து வசனங்களைத் தினமும் மறுபரிசீலனை செய்யுங்கள்.)

முதலாவது, மற்ற பத்தொன்பது பாடங்களின் கேள்விகளை அவைகளின் பதில்களோடு படித்துப் பாருங்கள். ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலை நீங்கள் அறிந்து, புரிந்துக்கொண்டீர்களா என உறுதி செய்துக்கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, மனப்பாட பகுதியில் கற்றுக்கொண்ட அனைத்து வசனங்களையும் மறுபரிசீலனை செய்யுங்கள்.

மூன்றாவதாக, கீழ்காணும் பகுதிகள் 'அ' மற்றும் 'ஆ'வுக்கு, பதில்களை எழுதுங்கள்.

பாட கேள்விகள்

பகுதி அ:

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், இப்பாடத்திட்டத்தின் மூலம் நீங்கள் வேதாகமத்திலிருந்து கற்றுக்கொண்ட நான்கு முக்கிய சத்தியங்களை எழுதுங்கள். ஒவ்வொன்றிலும், அச்சத்தியம் எந்த வேதாகம பகுதியில் காணப்படும் என்பதை குறிப்பிடுங்கள்.

முதல் சத்தியம்

....

....

....

வேதாகம குறிப்புகள்

....

....

இரண்டாவது சத்தியம்

....

....

....

வேதாகம குறிப்புகள்

....

....

மூன்றாவது சத்தியம்

....

....

....

வேதாகம குறிப்புகள்

....

....

நான்காவது சத்தியம்

....

....

....

வேதாகம குறிப்புகள்

....

....

பகுதி ஆ:

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், இவ்வேத ஆராய்ச்சியினால் உங்கள் வாழ்க்கையில் உண்டான முக்கியமான மாற்றங்கள் சுருக்கமாக குறிப்பிடுக.

....

....

....

....

....

குறிப்பு: மேலே காணும் பகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’வுக்கு மதிப்பெண்கள் ஏதுமில்லை.

இறுதியான மனப்பாட பகுதி: யாக்கோபு 1:25

இவ்வசனத்ததை மனப்பாடமாக எழுதவும்.

....

....

....

....

உங்கள் மனப்பாட அட்டையோடு ஒப்பிட்டு பாருங்கள். உங்கள் மனப்பாட பகுதி பிழையற்றிருந்தால், 4 மதிப்பெண். (ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கவும். 3 தவறுகளுக்கு மேல் இருந்தால், அவ்வசனத்து மதிப்பெண்கள் இல்லை). **மொத்தம்**	**4**

பாடத்திட்டத்துக்கான மதிப்பெண்கள்

கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், நீங்கள் பெற்ற மதிப்பெண்களை பூர்த்தி செய்யுங்கள். பெற்ற மொத்த மதிப்பெண்ணை கூட்டி, தேர்ச்சி, மிக்க நன்று, மிக சிறந்தது என்று கொடுக்கப்பட்டுள்ள தரங்களோடு ஒப்பிடுங்கள்.

பாடம் எண் 1...49
பாடம் எண் 2...54
பாடம் எண் 3...38
பாடம் எண் 4...36
பாடம் எண் 5...38
பாடம் எண் 6...59
பாடம் எண் 7...49
பாடம் எண் 8...40
பாடம் எண் 9...44
பாடம் எண் 10...44
பாடம் எண் 11...47
பாடம் எண் 12...54
பாடம் எண் 13...48
பாடம் எண் 14...51
பாடம் எண் 15...61
பாடம் எண் 16...33
பாடம் எண் 17...43
பாடம் எண் 18...23
பாடம் எண் 19...62
பாடம் எண் 20...4
மொத்தம்...877

தேர்ச்சி = 50% க்கு மேல் (439)

மிக்க நன்று = 70% க்கு மேல் (614)

மிகச் சிறப்பு = 80% க்கு மேல் (702)

பாடத்திட்டத்தை முடித்தமைக்காக வாழ்த்துக்கள்!!

இப்போது வேதத்தின் சத்தியங்களை முறையான ஆராய்வின் மூலம் கற்றுக்கொள்ள விரும்புவீர்கள். இதைத் தொடரும் “அருஞ் சொற்பொருள்” பட்டியலுக்கு பின், வேதாகமத்தை கற்றுத்தரும் பல பிரயோஜனமுள்ள போதக நூல்களின் பட்டியலை காண்பீர்கள். கிறிஸ்தவராகிய உங்களுக்கு, தேவன் வைத்திருக்கும் திட்டத்தையும், ஏற்பாடுகளையும் புரிந்துக்கொள்ள இவைகள் உங்களுக்கு உதவும்.

அருஞ் சொற்பொருள் பட்டியல்

ஆதாமிய	சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாமிடமிருந்து வரும் காரியம்
பரமேறுதல்	மேல் நோக்கி செல்வது, குறிப்பாக இயேசு பூமியிலிருந்து பரலோகத்துக்கு ஏறுதல்
தூஷணம்	அவதூறான, நிந்திக்கும் வார்த்தைகள்
அறிக்கையிடு, அறிக்கையிடுதல்	எல்லாருக்கும் முன்பாக பேசுதல்
விடுவித்தல், விடுதலை	பொல்லாப்பு அல்லது வேதனையிலிருந்து சுதந்திரப்படுத்துதல்
நித்தியம், நித்தியகாலமாக	என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் காலம்
விசுவாசம்	ஓர் உறுதி, நம்பிக்கை
புறஜாதி	யூதர் அல்லாத மக்கள்
மகிமைப்படுத்துதல்	தேவனுடைய மகத்துவத்தின் தன்மையை தரித்துக்கொள்ளுதல்
புனிதமான	எப்போதும் உயிரோடிருக்கும் நிலை, மரணத்துக்கு உட்பட்டதல்ல
அழியாமை	கெட்டுப்போகாத அல்லது அழிக்க முடியாத
நியாயத்தீர்ப்பு	ஒருவருடைய குற்றத்தை தீர்மானிக்க முடிவெடுத்தல்
நீதிமானாக்கப்படுதல்	எவ்வித குற்றசாட்டுக்கும் நீங்கலாகி, நீதியுள்ளவர் என அழைக்கப்படுதல்
உயிர் தியாகி	தன் விசுவாசத்துக்காக மரித்தவன்
தியானி, தியானித்தல்	ஏதோ ஒன்றை குறித்து ஆழமாக சிந்தனைச் செய்

ஒடுக்கு	மற்றவர்களை போல் விடுதலை அல்லது பயன்கள் பெறாதபடி ஒருவரை கொடூரமாக நடத்துதல்
தீர்க்கதரிசனம்	தேவனிடமிருந்து பெற்ற வார்த்தையை
தீர்க்கதரிசனம் உரைத்தல்	சத்தமாக கூறு, பல நேரங்களில் எதிர்காலத்தை குறித்து
பலன்	பரிசாகவோ, கூலியாகவோ பெறும் ஒன்று, இழப்பீடுச் செய்
பரிகாரம் (பாவங்களின்)	எல்லா நியாயத்தீர்ப்பு மற்றும் கடனும் இரத்துச் செய்யப்படுதல்
மனந்திரும்புதல்	ஓர் திருப்பம், நடைமுறையில் மாற்றத்துடன் கூடிய மனது மற்றும் இருதயத்தின் மாற்றம்
உயிரோடு எழும்புதல், உயிர்தெழுதல்	மீண்டும் ஜீவன் பெறுதல், மரணத்தை விட்டு எழும்புதல்
நீதி	தேவனுடைய கிருபையினால் குறைவற்றிருப்பது
இரட்சிப்பு	காக்கப்படுதல், விடுதலையாக்கப்படுதல், வேதாகமத்தில் இது மன்னிப்பு, சுகம், செழிப்பு, விடுதலை, பாதுகாவல், விடுதலை மற்றும் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுதலை குறிக்கும்
சுத்திகரிப்பு, சுத்திகரித்தல்	பிரித்தெடுக்கப்படுதல், அர்ப்பணிப்பு, பரிசுத்தமாகுதல்
சாட்சி	அத்தாட்சி அல்லது சொல்வது உண்மை என நிரூபிக்க, ஒருவருடைய சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துச் சொல்லும் காரியங்கள்
மீறுதல், மீறுகிறவர்கள்	நியாயச் சட்டத்தை அல்லது நடத்தை முறைகளை முறித்துப்போடுதல்
சீயோன் பற்று	இஸ்ரவேலின் நலனில் அக்கறை கொண்டுள்ள ஓர் இயக்கம்

இணைப்பு - அ

கேள்விகள்

தெய்வீக பரிமாற்றம்

பகுதி ஒன்று

கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. சுவிசேஷத்தின் முழு செய்தியும் ஒரு ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டுள்ளது சி.................... இயேசுவின் தியாக மரணம்.

2. இந்த தியாகம் முழு மனித குலத்தின் எ................... தேவையையும் உட்படுத்துகிறது. சரீர பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவைகளும் இதில் அடங்கும். உங்கள் வாழ்கையின் எல்லா பகுதிகள் - உங்கள் சரீரம், ஆத்துமா, மனது, உங்கள் பொருள் மற்றும் ப.......... தேவைகளும் கூட இவற்றில் அடங்கும்.

3. இந்த பலியின் விளைவுகள் எ................. நிலைத்திருந்து, காலத்தையும் கடந்து, நித்தியத்துக்குள்ளும் எட்டுகின்றன.

4. சிலுவையின் உண்மையான அர்த்தமும், அதில் ஏற்பட்ட தெய்வீக பரிமாற்றமும் என்னவென்றால், இயேசு தாமே மனுகுலத்தின் பா.................. சுமந்து, பா.............. நமக்கு வரவேண்டிய தண்டனையை ஏற்றுக்கொண்டார். இதற்கு பதிலாக தேவன் நமக்கு ம......................., தேவனோடு சமாதானத்தையும் அளிக்கிறார்.

5. அவருடைய ஜீவனில் நாம் பங்கடையும்படி, இ................ நம்முடைய மரணத்தை மரித்தார்.

பகுதி இரண்டு

சரியா தவறா என்பதை குறிப்பிடுக:

6. சிலுவையின் முழு பலன்களையும் பெற, நமக்கு விசுவாசம் தேவை.

   சரி/தவறு

7. இந்த ஈவை பெற, நம்மில் ஒருவரும் எதையும் செய்ததில்லை; இதை சம்பாதிக்க நாம் ஒருபோதும், ஒன்றும் செய்ய முடியாது.

   சரி/தவறு

8. சிலுவையில் ஏற்பட்ட இயேசுவின் தியாகமான மரணத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, கொடுக்கப்படும் பரிசு, நித்திய ஜீவனாகும்.

சரி/தவறு

பகுதி மூன்று

9. நாம் அவருடைய ம.......... பங்கடையும்படி, இயேசு நம்முடைய அவமானத்தைச் சுமந்தார்.

(அ) குற்ற மனச்சாட்சி

(ஆ) மகிமையில்

(இ) பாவங்களில்

(ஈ) ஒதுக்கி தள்ளப்படுதலில்

10. .... நாம் ஏற்றுக்கொள்ளப்படும்படியாக, இயேசு நம்முடைய தள்ளப்படுதலை சகித்தார்.

(அ) மனுக்குலத்தினால்

(ஆ) கிறிஸ்தவர்களால்

(இ) பிதாவினால்

(ஈ) உலகத்தாரால்

11. நாம் அவருடைய செழிப்பில் பங்குக்கொள்ளும்படி, இயேசு நம்முடைய .... சகித்தார்.

(அ) தரித்திரத்தை

(ஆ) முயற்சியை

(இ) சோம்பேறித்தனத்தை

(ஈ) எண்ணங்களை

12. நாம் .... பிரவேசிக்கும்படியாக, இயேசு சாபமானார்.

(அ) ஐசுவரியத்துக்குள்

(ஆ) மகிமைக்குள்

(இ) விசுவாசத்துக்குள்

(ஈ) ஆசீர்வாதத்துக்குள்

பகுதி நான்கு

கோடிட்ட இடத்தை நிரப்புக:

13. நாம் சு.................... பெறும்படியாக, இயேசு காயப்பட்டார்.

14. நாம் அவருடைய நீ.............க்கொண்டு நீதிமான்களாக்கப்பட, இயேசு நம்முடைய பாவத்தினால் பா..................பட்டார்.

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருதல்

கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. எல்லாருடைய வாழ்க்கையிலும் இரண்டு சக்திகள் கிரியை செய்கின்றன: ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒன்று பயனுள்ளது, மற்றொன்று தீ------------ வேதம் இவ்விரண்டையும் குறித்து அதிகமாகப் பேசுகின்றது.

2. இதைக் குறித்துத் தம்முடைய மக்களுக்குத் தெளிவாகப் புரியவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதினிமித்தம் அவர்கள் வெ------------ வாழ்க்கை வாழ்ந்து, தேவனுடைய பூரண ஆ------------அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அப்படி விரும்புகிறார்.

3. ஆசீர்வாதங்களும் சாபங்களும் காணப்படாத ஆவிக்குரிய தளத்துக்குரியவைகள். இரண்டுக்கும் பொதுவான இரண்டு குணாதிசயங்கள் இவைகள்.

   அ. அவைகள் ஒரு த------------ அடுத்ததுக்கு கடந்து செல்லும்.

   ஆ. அவைகளின் விளைவுகள் ஒரு தனி நபரைத் தாண்டி, மற்ற கு------------ உறுப்பினர்களையும், அவர்கள் ச------------, இனத்தாரையும் முழுத் தேசத்தையும் கூட பாதிக்கும்.

4. ஆசீர்வாதங்களும், சாபங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையவைகள் தே------------ அல்லது சா ------------வல்லமையாக இருக்கலாம். தே------------ ஒருவரே எல்லா ஆசீர்வாதத்திற்கும் காரணராக இருக்கிறார்.

5. தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தனக்கும் தன் சந்ததிக்கும் ஆபிரகாம் பெற்றுக்கொண்டதின் காரணம் என்னவென்றால், அவன் தேவனுடைய சத்தத்துக்குக் கீ------------ தன் மகனாகிய ஈசாக்கைப் பலியாக

ஒப்புக்கொடுக்கத் துணிந்தான். நாம் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தைக் கேட்பதினால், தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அதற்குக் கீ------------- வேண்டும்.

6. சாபத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு வழி என்னவென்றால், தே-------டைய சத்தத்தை கே-------------லும், அதற்குக் கீழ்ப்படியாமலும் இருப்பதுதான்; இது க-------------செய்வதாகும்.

7. வாக்குப் பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, கீழ்ப்படியாவிட்டால் இஸ்ரவேலர் மீது வரக்கூடிய பன்னிரெண்டு சாபங்களைத் தேவன் விவரித்தார். அந்த பன்னிரண்டு சாபங்களும் இந்த நான்கு தலைப்புகளின் கீழ் வருகின்றன.

விக்கிரக ஆராதனை மற்றும் பொ------------தெய்வங்களை வணங்குவது.

பெற்றோரைக் க-------------படுத்துவது.

தவறான அல்லது இயற்கையல்லாத பா------------- உறவு.

பெ------------- மற்றும் உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்.

8. வேதாகமம் மாந்திரீகத்திற்கும் அதின் கிளையாகிய பி------------- விரோதமாக எச்சரிக்கிறது. இதில் குறிச்சொல்லுதலும் அடங்கும். இவை எல்லாம் சாத்தானிடம் விசாரிக்கும் காரியங்கள். இவை அனைத்தும் கீழ்ப்படியாமையின் பாவத்துக்கு உட்படுத்தும் (ஏனென்றால் தேவன் ஒருவரே மெய்யான தேவன் என்று பத்து கட்டளைகளில் முதல் கற்பனை கூறுகிறது).

சரி / தவறு என்று குறிப்பிடுக:

9. அதிகாரத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது சாபமிடலாம் அல்லது கீழ்க்காணும் விதங்களில் சாபம் ஏற்படலாம்:

பெற்றோர்	சரி/தவறு
தலைவர்கள்	சரி/தவறு
சுயத்தைச் சார்ந்திருப்பது	சரி/தவறு
குடும்பத்தில் இளையவர்கள்	சரி/தவறு
உங்கள் அரசு	சரி/தவறு
மத பிரிவுகள்	சரி/தவறு
ஆசிரியர்கள்	சரி/தவறு
சாத்தானின் ஊழியக்காரர்கள்	சரி/தவறு

சுயம் - நம்முடைய பேச்சினாலோ அல்லது ''ஆத்துமீக''

ஜெபங்களினாலோ சரி/தவறு

ப்ஃரிமேசன்ஸ் போன்ற இரகசிய சங்கங்களினால் சரி/தவறு

10. மேலே உண்மையென்று நீங்கள் கண்டவைகளில், வேதத்தில் தேவன் தம்முடைய ஜனங்களை எவ்வித சாபத்திலிருந்து காப்பாற்றுவது மிகக் கடினமாக இருந்தது ? --------------------

11. சாபத்தின் ஏழு அடையாளங்களாவன:

மன முறிவு அல்லது உணர்ச்சிகளின் முறிவு

தொடர்ந்து ஏற்படும் தீராத வியாதி

மலட்டுத்தன்மை, கருச்சிதைவு ஏற்படும் தன்மை அல்லது இவைகளோடு சம்பந்தப்பட்ட பெண்மை பிரச்சனைகள்

திருமண உறவில் முறிவு அல்லது குடும்பத்தால் புறக்கணிக்கப்படுதல்

தொடரும் பணப் பற்றாக்குறை

அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் தன்மை

தற்கொலை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அல்லது அகால மரணங்களின் வரலாறு

உங்களுக்கு அல்லது உங்களுக்குப் பிரியமானவர்களுக்கு எந்த சாபங்களிலிருந்து விடுதலை தேவைப்படுகிறது என்று எழுதுங்கள்.

பெயர்:..

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..

பெயர்:..

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..

பெயர்:..

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..

பெயர்:..

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..

சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

12. நற்செய்தி என்னவென்றால் தேவன் தம்முடைய ஊழியக்காரரை சாபத்தின் கீழ் இருக்க அனுமதிப்பதில்லை. நம்முடைய விடுதலை இதைச் சார்ந்து இருக்கிறது.

   a. நற்கிரியைகள்

   b. நம்முடைய மனோ நிலை

   c. வார்த்தையை தியானிப்பது

   d. சிலுவையில் கிறிஸ்து செய்த மீட்பின் திட்டத்தில் விசுவாசம்

13. தேவன் நமக்குச் சாபத்திலிருந்து விடுதலை கொடுப்பது, நம்முடைய வாழ்க்கையின் எந்தப் பகுதி அல்லது எந்தப் பகுதிகளையும் உட்படுத்துகிறது ?

   a. நம்முடைய ஆவி மட்டும்

   b. எல்லாப் பகுதிகளும் - ஆத்துமா, சரீரம் மற்றும் ஆவி

   c. நம்முடைய சரீர ஆரோக்கியம்

   d. நம்முடைய ஆத்துமா

14. சாபத்திலிருந்து விடுவிக்கப்பட நாம் செய்ய வேண்டியது (சரியானதைக் குறிப்பிடவும்)

   a. ஜெபிப்பது

   b. கர்த்தரின் சத்தத்தை / எழுதப்பட்ட வார்த்தையை அறிந்து, கேட்டு, கீழ்ப்படிவது

   c. அடிக்கடி சபையில் உள்ள தலைவரிடம் ஜெபத்துக்காகச் செல்லுவது.

   d. நம்முடைய முன்னோர்களிடம் அவர்களுடைய பின் வாழ்க்கையைக் குறித்துப் பேசுவது.

சரி அல்லது தவறு என்று குறிப்பிடவும்.

15. சாபத்திலிருந்து விடுதலை பெற, தேவன் விரும்பும் ஏழு படிகள் எவைகள்.

   1. சபைக்கு அடிக்கடி போக வேண்டும். சரி/தவறு

   2. கிறிஸ்துவின் பேரிலும் அவர் உங்கள் சார்பாக சிலுவையில் செய்த தியாகத்தையும் பேரிலும் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். சரி/தவறு

3. எல்லா கலகத்திலிருந்தம் பாவத்திலிருந்தும் மனந்திரும்ப வேண்டும். சரி/தவறு

4. பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சரி/தவறு

5. நற்கிரியைகளும், மற்றவர்களுக்கு உதவி செய்வதும் உங்களை விடுதலையாக்கும். சரி/தவறு

6. உங்களைக் காயப்படுத்தின அல்லது தவறாக நடத்தின மக்களை மன்னிக்க வேண்டும். சரி/தவறு

7. மாந்திரீகம் அல்லது பிசாசின் காரியங்களோடு இருக்கும் எல்லாத் தொடர்பையும் முறித்துப்போட வேண்டும். சரி/தவறு

8. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடுதலையின் ஜெபத்தைச் செய்ய வேண்டும். சரி/தவறு

9. நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசித்து, தேவனுடைய ஆசீர்வாதத்தில் தொடருங்கள். சரி/தவறு

10. பத்துக்கட்டளைகளை மனப்பாடம் செய்ய வேண்டும்.

சரி/தவறு

கோடிட்ட இடத்தை நிரப்புக:

16. நம்முடைய வாழ்க்கையில் விடுதலையைச் சுதந்தரிப்பது என்பது ந............. முடிவாகும். நாம் செய்யும் தீர்மானம் நம்முடைய ச......................... எதிர்காலத்தை பாதிக்கக்கூடியது.

17. உபாகமம் 28:2-13இல் கூறப்பட்டுள்ள தேவனுடைய ஆசீர்வாதங்களின் பட்டியல்:

உ............................

ஆ.........................

பெ.......................

செ.......................

வெ......................

தேவ...................

18. ப........................... ஆ.............................. நாடினால், எந்தெந்தப் பகுதிகளில் உங்களுக்கு விடுதலை தேவை என்று காண்பிப்பார். எவ்வளவு சீக்கிரம் விடுதலை பெறுவீர்கள் என்பது ஒவ்வொரு தனி நபருக்கும் வித்தியாசமாக இருக்கும். சில நேரங்களில் உ.............................. விடுதலை கிடைக்கும்.

19. நாம் விடுவிக்கப்பட எல்லாப் படிகளையும் நிறைவேற்றினவுடனே, நாம் தேவனுடைய வார்த்தையை அ.............. வேண்டும். வாக்குத்தத்தத்தோடு இணைக்கப்பட்ட நிபந்தனைகளை நாம் நிறைவேற்றினால்தான் அறிக்கை பிரயோஜனமுள்ளது. கீ.......................க்கு அறிக்கை ஒருபோதும் மாற்று வழி ஆகாது.

20. வேத வசனங்களைச் சத்தமாகப் பேசி அறிக்கையிட்டால், அவ்........................கள் வல்லமையினால் நிறைந்திருக்கும். நாம் எப்போதும். ஆசீர்வாதத்துக்காகவும், வெற்றிக்காகவும் தேவனுக்கு ந............ செலுத்த வேண்டும்.

உங்களிலுள்ள தூய ஆவியானவர்

சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக:

1. பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டின் காலத்தில் உயிரோடில்லை, செயல்படவுமில்லை. சரி/தவறு
2. பரிசுத்த ஆவியானவர் ஓர் நபர் சரி/தவறு
3. திருத்துவத்தின் மூன்று நபர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆவர். சரி/தவறு
4. யோர்தான் நதியில் இயேசு ஞானஸ்நானம் பெறும் முன், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பயன்படுத்தி, அதிசயங்களை செய்தார். சரி/தவறு
5. உலகமெங்கும் உள்ள தேவ பிரசன்னமாக பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார். சரி/தவறு
6. சீஷர்களுக்கு ஆலோசனை மற்றும் ஆறுதல் அளிக்க, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு உதவியாளராக இருப்பார் என இயேசு வாக்களித்தார். சரி/தவறு
7. இயேசு சிலுவையில் மரித்த பின்பு தான், விசுவாசிகளாகிய நமக்கு, பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். சரி/தவறு
8. சபை, உலகத்தில் தேவனுடைய பிரதினிதியாக இருக்கின்றது. சரி/தவறு

9. சபை மற்றும் விசுவாசிகளுக்குள், பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். சரி/தவறு

10. பரிசுத்த ஆவினால் நிரப்பப்பட்ட பின், கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய ஊழியத்தைக் குறித்தும் புதிய அறிவு உண்டானதால், சீஷர்கள் மிகவும் தைரியம் கொண்டார்கள். சரி/தவறு

11. பரிசுத்த ஆவியானவர் வரும் முன், இயேசு மட்டும் பூமியில் இருந்த போது, நம்முடைய நிலை, இப்போதுள்ளதைக் காட்டிலும், நன்றாக இருந்தது. சரி/தவறு

சரியான பதிலுடன் கோடிட்டு இணைக்க:

12. பரிசுத்த ஆவியானவர் இவருடைய தன்மை, குணாதிசயம் மற்றும் ஊழியத்தை வெளிப்படுத்துகிறார்.	அ. நபராக
13. வேதத்தின் எழுத்தாளர்	ஆ. வேதத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்
14. பரிசுத்த ஆவி, தேவனுடைய	இ. தெய்வத்துவத்தின்
15. பரிசுத்த ஆவியானவர்	ஈ. பரிசுத்த ஆவியானவர்
16. பெந்தேகோஸ்தே நாளன்று, பரிசுத்த ஆவியானவர் ஒரு .... பூமிக்கு வந்தார்	உ. இயேசு
17. பூமியில் .... சொந்த பிரதிநிதி - பரிசுத்த ஆவியானவர்	ஊ. சுவாச காற்று

சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:

(வேதத்தைப் பயன்படுத்தலாம் - 1 கொரிந்தியர் 3:16)

18. பரிசுத்த ஆவியானவர் இங்கே வாழ்கிறார்:

(அ) சபையில்

(ஆ) தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில்

(இ) விசுவாசிக்குள்

(ஈ) (அ) மற்றும் (இ)

(உ) மேலே காணப்படும் அனைத்தும்

19. பரிசுத்த ஆவியானவரை விவரிக்க பயன்படும் “பாராகிளீட்” என்னும் கிரேக்க வார்த்தையின் அர்த்தம்:

(அ) எப்போதும் உங்களோடு இருப்பார்

(ஆ) அவர் தேவனை மகிமைப்படுத்துவார்

(இ) ஜீவ தண்ணீருள்ள நதிகள்

(ஈ) உதவி செய்யும் படி கூட வரும் ஒருவர்

20. பெந்தேகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு வந்தவுடன் மூன்று பகுதிகளில் உடனடியாக விளைவுகள் ஏற்பட்டன

(அ) முதலாவது, சீஷர்கள் இயேசுவின் ஊ............ செய்தியும் நன்றாக புரிந்துக்கொள்ள ஆரம்பித்தனர்

(ஆ) இரண்டாவதாக, சீஷர்கள் மிகவும் தை.................. கொண்டனர்.

(இ) மூன்றாவதாக, இய....................பட்ட அற்புதங்களும், அடையாளங்களும் காணப்பட்டன.

21. பரிசுத்த ஆவியானவர் ஜெபிக்க உதவி செய்கிறார். கீழே காணப்படும் வாக்கியங்களை சரியாக இணைக்கவும்:

1. பரிந்து மன்றாடுதல்	அ. தேவனுடைய வார்த்தையின் படி எப்படி ஜெபிப்பதென்று அறிய ஆரம்பிக்கின்றோம்.
2. நம்முடைய மனதை பிரகாசிப்பிக்கின்றார்	ஆ. வாக்குக்கடங்காத பெருமூச்சுகளுடன்
3. ஓர் புதிய மற்றும் அறியாத பாஷையை கொடுக்கின்றார்	இ. அந்த நேரத்தில் நாம் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்
4. நம்முடைய வாயிலே சரியான வார்த்தைகளை வைக்கிறார்	ஈ. ஜெப பாஷை - இயற்கையான மனது அறியாத ஒன்று.

22. பரிசுத்த ஆவிக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஜீவன் நம்முடைய மாம்ச சரீரங்களில் வெளிப்படுகிறது. நாம் அ............ போகாத படி, நம்மை காக்கும் வல்லமை, நமக்குள் இருக்கின்றது.

23. தேவனுடைய அன்பு, ப.......... ஆ............. மூலமாய் நம்முடைய இ.......... ஊற்றப்படுகிறது. “அகாபே” என்று மொழிப்பெயர்க்கப்படும் இவ்வன்பு,

தன்னையே கொடுக்கும் - எந்த நி............ முன் வைக்காது. (ரோமர் 5:1 - 5)

24. மறு பிறப்படைந்த ஒருவர், அகாபே அன்பை வெளிப்படுத்துகிறார். கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை பயன்படுத்தி, இந்த அகாபே அன்பு எப்படி உங்கள் வாழ்கையை பாதித்திருக்கிறது அல்லது பாதிக்கக்கூடும் என்பதை குறித்து ஓர் உதாரணத்தை விவரிக்கவும்.

....

....

....

....

குறிப்பு: எல்லா கிறிஸ்தவ ஊழியத்தின் இலக்கும் அன்பு (அகாபே) தான். பரிசுத்த ஆவியானவரின் வெளிக்காட்டுதல்கள் எல்லாம், அன்பின் வாய்கால்களாக இருக்க வேண்டும் (உதாரணம்: தீர்க்கதரிசனம், சுகமளித்தல், ஏழைகளுக்கு கொடுத்தல் போன்றவை) தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் இருப்பதால், தேவனுடைய சமாதானமும், கிருபையும் நமக்கிருக்கின்றன. எதிர்காலத்தில் நமக்கிருக்கும் நம்பிக்கையை குறித்து நாம் மகிழுகிறோம். அதுவுமல்லாமல், நாம் பாடுகளில் களிக்கூறுகிறோம்.)

25. பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும் ஆனால் அதற்கு பயிற்ச்சியும் ஒழுக்கமும் அவசியம். வேதத்திலிருந்து, 7 நிபந்தனைகளை டெரிக் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வேழு நிபந்தனைகளை குறித்த பின் வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்யுங்கள்:

நாம் மன..................................., ஞா.......................... பெற வேண்டும்.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கு, ஜெபத்தில் நீங்கள் பிதாவினிடத்தில் கே................ வேண்டும்.

நீங்கள் தா..................ருக்க வேண்டும். எனக்கு தேவையில்லை என்று நினைப்பவர்கள் மீது, தேவன் தமது ஆசீர்வாதத்தை கட்டாயப்படுத்தி வைக்க மாட்டார்.

இ..................விடம் வாருங்கள். அவரே அபிஷேகிப்பவர்.

பரிசுத்த ஆவியை பெறுவதற்கு நீங்கள் பா..................பண்ண வேண்டும். நீதியின் ஆயுதங்களாக சரீரத்தின் அவயவங்களை தேவனுக்கு வி............... கொடுக்க வேண்டும்.

தேவனின் மருந்து புட்டி

1. நீதிமொழிகள் 4:20-22 தேவனுடைய வார்த்தையை (மருந்து) எப்படி அருந்த வேண்டும் என்று விளக்கம் அளிக்கிறது.

   என் வா ----------கவனி.

   என் வசனங்களுக்கு உன் செ----------சாய்.

   அவைகள் உன் க----------விட்டுப் பிரியாதிருப்பதாக.

   அவைகளை உன் இ----------த்துக்குள்ளே காத்துக்கொள்.

2. "என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்" - தேவன் நம்மோடு பேசும்போது, சிதறிப் போகாத நம்முடைய முழு க----------கேட்கிறார் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

3. தேவன் நம்முடைய பரிகாரியாக இருக்க விரும்புகிறார். தேவனிடத்தில் இருந்து சுகத்தைப் பெறுவதற்கான முதல் நிபந்தனையும், முதன்மையான திறவுகோலும், தேவனுடைய வார்த்தைக்கு செ----------சாய்ப்பதாகும். கேட்க வேண்டும் என்பதற்குதான் எல்லா முக்கியத்துவமும் அளிக்கப்பட்டுள்ளது. சிதறிப் போகாத நம்முடைய முழு க----------த்தையும் நாம் தேவனுக்கு கொடுக்க வேண்டும்.

4.. ரோமர் 10:17, வி----------தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வரும் என்று சொல்லுகிறது. விசுவாசம்தான் சு----------பெற்றுக்கொள்ள நமக்கு உதவி செய்கிறது; தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது.

5. 'உன் செவியைச் சாய்' என்றால் தேவனுடைய வார்த்தையை நல் எண்ணத்தோடு வாசிப்பது. வாசிக்கும்போது நாம் க----------க்கொள்ளக் கூடியவர்களாகவும் தா----------யாகவும் இருக்க வேண்டும்.

6. 'நாம் அதைச் சாந்தத்தோடு ஏற்றுக்கொண்டு, துர்க்குணத்தை (அல்லது குறும்புத்தனத்தை) ஒதுக்கி வைக்க வேண்டும்'. சாந்தம் மற்றும் குறும்புத்தனத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ள அர்த்தங்களுக்கு சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக: (யாக்கோபு 1:18-21)

   (a) சாந்தம் என்றால்:

தாழ்மை	சரி / தவறு
பெருமை	சரி / தவறு
கற்றுக்கொள்ளக்கூடிய	சரி / தவறு
மரியாதை செலுத்துகிற	சரி / தவறு

தைரியம் சரி / தவறு

ஏழையாய் இரு சரி / தவறு

(b) துர்க்குணம் (குறும்புத்தனம்) என்றால்:

வாக்குவாதம் செய்தல் சரி / தவறு

பெருமை சரி / தவறு

கற்றுக்கொள்ளக்கூடிய சரி / தவறு

கற்றுக்கொள்ளக்கூடாத சரி / தவறு

குறுகிய மனப்பான்மை உடையவராக இருப்பது சரி / தவறு

முன் முடிவு செய்த எண்ணங்கள் சரி / தவறு

7. ‘உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக’ என்பது நம்முடைய பார்வையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் மூன்றாவது நிபந்தனை. லூக்கா **11:34**இல் இயேசு, நம்முடைய சரீரத்தின் வெளிச்சம் க-----------தான் என்று கூறுகிறார். உங்கள் பார்வை ஒரே கவனம் உடையதாய் இருந்தால் உங்கள் ச----------- மு----------- வெளிச்சமாக இருக்கும்.

8. சரீரம் முழுவதும் வெளிச்சத்தால் நிறைந்திருந்தால், நீதியும் சுகமும் இதன் விளைவுகளாக இருக்கும், ஆகையால் பாவமும் வியாதியும் இ----------- கிரியைகளாக இருக்கின்றன.

9. வேதத்தை நாம் எளிமை மற்றும் உண்மை என்னும் ஒரே பார்வையுடைய கண்களினால் படிக்க வேண்டும். சரி / தவறு

10. எழுத்தாளர் டெரிக் பிரின்ஸ், உலக ஞா-----------தள்ளிவிட வேண்டும் என்று நமக்குச் சவால் விடுகிறார். உ-----------பார்வையில் நாம் முட்டாள்களாக மாறினால்தான், தேவனுடைய ஞானத்துக்குள் நாம் பிரவேசிக்க முடியும்.

11. காது என்னும் வாசலிலும், கண் என்னும் வாசலிலும் வேதத்தைச் சரியாக புரிந்துகொள்ள நாம் பிரவேசிக்கும் காரணம், மனிதனுடைய முக்கியமான மையப் பகுதியான இ---------சென்றடைவதற்குதான்.

12. இ---------சென்றடையும் போதுதான் தேவனின் மருந்து புட்டி பயனுள்ளதாக இருக்கிறது.

13. நீதிமொழிகள் **4:23**, நம்முடைய இருதயம் ஜீவனுக்கேதுவான காரியங்களைக் கொண்டதென்று சொல்லுகிறது. அவைகளை நாம் அங்கே கா--------- வேண்டும்.

14. தேவனுடைய வார்த்தை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தையும், நம்முடைய தனித்தன்மையின் உள்ளான பகுதிகளையும் ஊடுருவிப் பாய்கிறது. தே---------வா--------- ஊடுருவக்கூடாத எந்த வியாதியும் இல்லை.

ஆவிக்குரிய போராட்டம்

1. கோடிட்டு, வாக்கியத்தை பூர்த்தி செய்யும் சரியான பின் பகுதியுடன் இணைக்கவும்:

1. நம்முடைய சத்துரு	அ. காணப்படாத உலகத்தின் பொல்லாத அதிபதிகளோடு போராடுகிறோம்.
2. நாம் மனிதருக்கு விரோதமாய் போராடாமல்	ஆ. வானமண்டலங்களில் உள்ளது.
3. போராட்டத்தில் ஈடுப்பட்டிருப்பவர்கள்	இ. பிசாசுகள் துரத்தப்படுகின்றன.
4. சாத்தானின் இராஜ்ஜியத்தின் தலைமையகம்	ஈ. பிசாசு
5. தேவனுடைய இராஜ்ஜியத்தின் அதிகாரத்தினால்	உ. எல்லா கிறிஸ்தவர்களும்
6. சாத்தானின் இராஜ்ஜியம்	ஊ. மிக நன்றாக ஒருங்கிணைக்கப்பட்டது

2. சாத்தானுடைய தலைமையகம் ....(முதலாவது / இரண்டாவது / மூன்றாவது) வானத்தில் இருக்கின்றது. இந்த தளத்தில் நடக்கும் போராட்டத்தால், கிறிஸ்தவர்களுடைய ஜெ.....................கான பதில் தாமதமாகலாம்.

3. தேவனுடைய ஜனங்களும், அவர்களுக்கான திட்டங்களும் செயல்படுத்தப்படும் போது, வா............................ ஆவிக்குரிய போராட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த போராட்டத்தில் தே.......................... ஈடுப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் ஜெ......................... இப்போராட்டத்தை தூண்டுகின்றன.

4. போர்களம், மனதின் தளத்தில் இருக்கின்றது. சாத்தான் ஏன் இந்த பகுதியை தாக்குகிறான் என்று ஒரு சில வாக்கியங்களில் விளக்குக:

....

....

....

5. அரண் என்பது, சுவிசேஷத்தின் வெளிச்சம் உள்ளே பிவேசிக்கக் கூடாதபடி, மனிதர்களின் மனதை கு............................கின்ற ஒன்றாகும்.

6. சாத்தான் பயன்படுத்தும் இரண்டு அரண்கள்: தப்பெண்ணங்களும், மு........... அ.................. ஏற்படுத்துதலாகும்.

7. சாத்தானை தோற்கடிக்க பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை நாம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்: தற்காப்புக்கான ஆயுதங்கள் மற்றும் தா................. ஆயுதங்கள்.

8. நம்முடைய வெற்றிக்கான அடிப்படை, கி............. தான். அவரே சா.....................யும், அவனுடைய பொல்லாத வல்லமைகளையும், அதிகாரங்களையும் முற்றிலுமாய், என்றென்றைக்கும் தோற்கடித்தார்.

9. நமக்கு விரோதமாக சாத்தான் பயன்படுத்தும் பிரதான ஆயுதம்:

அ) பாவம்
ஆ) அவிசுவாசம்
இ) குற்ற உணர்வு
ஈ) ஜெப குறைவு

10. இந்த குற்ற உணர்வு முறிக்கப்பட்டுள்ளது, ஏனென்றால்

அ) நீதி தான் நம்முடைய வெற்றிக்கு திறவுகோலாக இருக்கிறது
ஆ) தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்தார்
இ) கிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைத்தபடியால்
ஈ) மேற்கண்ட யாவும்

11. இயேசுவின் வெ...............யை வெளிக்காட்டுவதும், அதை நிர்வகிப்பதும் நம்முடைய பொறுப்பாகும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கம் - தற்காப்பு

12. எபே. 6:10-17ல், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளும்படி பவுல் நமக்கு கட்டளையிடுகிறார். கீழே காணும் வாக்கியங்களை சரியான சர்வாயுதவர்க்கத்தின் பகுதியுடன்

இணைக்கவும். உங்கள் குறிப்புகளை திருப்பி பார்க்க வேண்டியதிருக்கலாம். கீழிருக்கும் கட்டத்தை கவனிக்கவும்.

(1) விசுவாசமும் அன்பும் இருதயத்தை காக்கும். நாம் இப்போது கிறிஸ்துவின் நீதியாய் இருக்கின்றோம். நமக்கிருக்கும் விசுவாசத்தினால், நம்முடைய கிரியைகள் அன்பினால் செய்யப்படுகின்றன. அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே அவசிமானது.

(2) நேர்மை, உண்மை, வெளிப்படையான தன்மை, உள்ளதை உள்ளபடி பேசுவது, மாய்மாலத்தையும், மத சடங்காச்சாரங்களையும் தள்ளிவிடுதல்.

(3) வேதத்தை தியானிப்பதினாலும், மனப்பாடம் செய்வதினாலும், சுவிசேஷ செய்தியை எப்போதும் எடுத்துச் சொல்ல ஆயத்தமாயிருப்பது.

(4) 'இரட்சிப்பின் நம்பிக்கை' தலையையும், மனதையும் பாதுகாக்கும். நம்பிக்கை என்பது, தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நல்லது நடக்கும் என்ற ஓர் அமைதலான, உறுதியான எதிர்ப்பார்ப்பு.

(5) விசுவாசத்தினால் பயன்படுத்துகின்ற தேவனுடைய வார்த்தை.

(6) விசுவாசம் - நமக்கும் நம்மை சார்ந்தவர்களுக்கும், பாதுகாப்பு மற்றும் தேவைகள் யாவையும் பெறுவதற்கு. நம்பிக்கை - நல்லது நடக்கும் என்று எதிர்ப்பார்ப்போடிரு.

கீழ்காணும் பட்டியலிலிருக்கும் ஆயுதங்களை மேலிருக்கும் குறிப்புகளோடு இணை.	**இணைக்கக்கூடிய குறிப்பு எண்: (உதாரணம்)**
அ. சுவிசேஷத்திற்கான ஆயத்தம் என்னும் பாதரட்சை	குறிப்பு எண். 3
ஆ.நீதியென்னும் மார்க்கவசம்	
இ. ஆவியின் பட்டயம்	
ஈ. விசுவாசமென்னும் கேடகம்	
உ. சத்தியமென்னும் கச்சை	
ஊ.இரட்சண்யமென்னும் தலைச்சீரா	

13. நம்முடைய முதுகை, சாத்தானின் தாக்குதலிலிருந்து, எது அல்லது யார் பாதுக்காக்கின்றனர் ?

அ) பரிசுத்த ஆவியானவர்

ஆ) சக கிறிஸ்தவர்கள்

இ) வேதம்

ஈ) இயேசு

தாக்குதலின் ஆயுதங்கள்

14. சபையின் முக்கியமான பொறுப்பு தாக்குதலாகும், தற்காப்பல்ல. சபையானது தன்னை எங்கே தாக்கப்போகிறதென்று, சாத்தான் வியப்புடன் காத்திருக்க வேண்டும் ஏனென்றால், சிலுவையின் மூலம், தேவன் சாத்தானுடைய இராஜ்ஜியத்தை, அதிபதிகளை, அதிகாரங்களை, நமக்காக வெளியரங்கமான கோலமாக்கி, உரிந்துப்போட்டார். (எபே. 6:15)

கீழ் காணும் நான்காவது எண்ணை உதாரணமாக பயன்படுத்தி, முதல் மூன்று ஆயுதங்களுக்கு, கிறிஸ்து கொடுத்த அதிகாரத்தை, உங்கள் ஊழியத்தில் பயன்படுத்தி சாத்தானை நீங்கள் எப்படி தாக்கக்கூடும் என்று எழுதுங்கள். கடினமாக இருந்தால், மற்றவர்களோடு ஆலோசித்து எழுதலாம்:

தாக்குதலுக்கான நான்கு ஆயுதங்கள்:

1. ஜெபம் ....

....

2. துதி ....

....

3. போதித்தல்/பிரசங்கித்தல்: ....

....

4. சாட்சி பகருதல்: (உதாரணம்) நான் என் மிக நெருங்கின நண்பருக்கு, கிறிஸ்து என்னை இரட்சித்து, என் வாழ்வில் செய்த உதவிகளை குறித்து சொல்லுவேன். அதே அன்பின் பிரவாகத்தை அவனும் அறிய, மனந்திரும்புதலுக்கான ஜெபத்தை அவனுக்கு கற்றுக் கொடுப்பேன்.

15. தேவனுடைய வார்த்தையில் இருக்கும் வாக்குத்தத்தங்களை நம்முடைய ஆவியில் பலன் செய்கிறவைகளாக மாற்றி, நமக்காக தேவத்தூதர்களின் பணியை கட்டவிழ்ப்பது நம்முடைய் .... தான்.

அ) தைரியம்

ஆ) தொடர்ந்து போராடுதல்

இ) ஜெபம்

ஈ) பரிசுத்த ஆவியானவர்

16. ஜெபத்தை தவிற, நம்முடைய ஆவிக்குரிய ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான முக்கிய வாய்க்கால் நம்முடைய வாய் தான். து............, பி......................... மேற்கொள்வதற்கான ஆயுதமாகும். அவன் குற்றமனச்சாட்சியை பயன்படுத்தி நம்மை இ.......... பகலும், குற்றம் சாட்டுகிறான்.

17. தே.................. வா................யோடு இணைந்திருக்கும் போது, துதி பயனுள்ளதாக இருக்கும்.

18. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள உறுதியான கட்டளை, தே................ வா................யை பிரசங்கிக்க வேண்டும் என்பது தான்.

19. பவுலின் பிரசங்கத்துக்கு ஏற்பட்ட இயற்கைக்கு அப்பார்பட்ட விளைவுகள், அப்போஸ்தலரின் நடபடிகளில் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகள்:

(தவறாக இருக்கும் வாக்கியங்களுக்கு ‘x’ குறியிடவும்)

பிசாசுகள் வெளியே துரத்தப்பட்டன.

மந்திரவாத புத்தகங்களை எரிப்பதினால் பணம் சம்பாதிக்கப்பட்டது

அற்புதங்கள்

முழு பட்டணத்தின் மேலிருந்த மந்திரவாத ஆளுகை முறிக்கப்பட்டது.

20. தேவனுடைய வார்த்தை, கிறிஸ்துவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறதென்பதை குறித்து சொல்லும் காரியங்களை நாம் தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்யும் போது பிசாசை மேற்கொள்ளுகிறோம். கீழ் காணும் வாக்கியங்க்களை பூர்த்தி செய்யவும்:

நாம் மீட்கப்படுகிறோம்
நாம் ம................ப்படிகிறோம்
நாம் சு....................ப்படுகிறோம்
நாம் நீ........................ப்படுகிறோம்
நாம் ப...................ப்படுகிறோம்

இணைப்பு 'ஆ'

விடைகள்

தெய்வீக பரிமாற்றம்

1. சிலுவையில்
2. எல்லா, பண
3. என்றென்றைக்கும்
4. பாவத்தை, பாவிகளாகிய, மன்னிப்பையும்
5. இயேசு
6. சரி
7. சரி
8. சரி
9. (ஆ) மகிமையில்
10. (இ) பிதாவினால்
11. (அ) தரித்திரத்தை
12. (ஈ) ஆசீர்வாதத்துக்குள்
13. சுகம்
14. நீதியை, பாவமாக்கப்பட்டார்

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருதல்

1. தீமையானது
2. வெற்றி, ஆசீர்வாதத்தை
3. (a) தலைமுறையிலிருந்த

   (b) குடும்ப, சமுதாயத்தையும்
4. தேவனுடைய, சாத்தானுடைய, தேவன்
5. கீழ்ப்படிந்த (ஆதியாகமம் 22:15-16) கீழ்ப்படிய
6. தேவனுடைய, கேட்காமலும், கலகம்
7. பொய்யான, கனவீன, பாலியல், பெலவீனமான

8. பில்லிசூனியத்துக்கும்

9. பெற்றோர்கள் - சரி

தலைவர்கள் - சரி

சுயத்தைச் சார்ந்திருப்பது - சரி

குடும்பத்தில் இளையவர்கள் - தவறு

உங்கள் அரசு - சரி

மதப் பிரிவுகள் - சரி

ஆசிரியர்கள் - சரி

சாத்தானின் ஊழியக்காரர்கள் - சரி

சுயம் - நம்முடைய பேச்சினாலோ அல்லது ''ஆத்துமீக'' ஜெபங்களினாலோ - சரி

ஃப்ரிமேஷன்ஸ் போன்ற இரகசிய சங்கங்களினால் - சரி

10. சுயமாய் இடப்பட்ட சாபங்கள் (ஆதியாகமம் 27:36)

12. (d)

13. (b)

14. (b)

15. 1, 5, 10 தவறு, 2, 3, 4, 6, 7, 8, 9 - சரி

16. நம்முடைய, சந்ததியின்

17. உயர்வு

ஆரோக்கியம்

பெருக்கம்

செழிப்பு

வெற்றி

தேவ தயவு

18. பரிசுத்த ஆவியானவரை, உடனடியாக (ரோமர் 8:14)

19. அறிக்கையிட, கீழ்ப்படிதலுக்கு

20. வார்த்தைகள், நன்றி

உங்களில் உள்ள தூய ஆவியானவர்

1. தவறு (யாத். 31:2 - 3)
2. சரி
3. சரி
4. தவறு (மத். 3:11)
5. சரி (சங். 139)
6. சரி (யோ. 14:16-18)

7. சரி (யோ. 16:5-7)
8. தவறு - பரிசுத்த ஆவியானவரே அந்த பிரதிநிதியாக இருக்கிறார்
9. சரி (1 கொரி. 3:16)
10. சரி (யோவான் 16:5-7)
11. தவறு
12. உ 13. ஈ 14. ஊ 15. ஆ 16. அ 17. இ
18. ஈ 19. ஈ
20. அ) ஊழியத்தை ஆ) தைரியம் இ) இயற்கைக்கு அப்பாற்பட்ட
21. 1 - ஆ 2 - அ 3 - ஈ 4 - இ
22. அழிந்து (2 கொரி.4:7-12)
23. பரிசுத்த ஆவியானவரின், இருதயங்களில், நிபந்தனைகளையும்
24. இது ஓர் தனிப்பட்ட கேள்வியாகும் ஆனால் இதன் மூலம், ஒவ்வொரு மாணவரும், இந்த அகாபே அன்பை ஊழியத்திலும் வாழ்க்கையிலும் எப்படி பயன்படுத்துவது என்பது புரிய வேண்டும். வசன குறிப்புகள்: (ரோமர் 5:1-8) (1 பேதுரு 2:22-23) (1 யோவான் 4:7-8) (யோவான் 7:37-39). ஓர் உதாரணம்: மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போது, நம்முடைய சுய எண்ணங்களை தள்ளி வைப்பது.
25. மனந்திரும்பி, ஞானஸ்நானம் (அப். 2:37-38)
கேட்க (லூக்கா 11:9-13)
தாகமாய், இயேசுவிடம் (யோவான் 7:37-39)
பானம்பண்ண, விட்டுக்கொடுக்க (1 கொரி. 6:19)

தேவனின் மருந்து புட்டி

1. வார்த்தைகளை, செவியை, கண்களை, இருதய
2. கவனத்தையும்
3. செவி, கவனத்தை
4. விசுவாசம், சுகத்தை
5. கற்றுக், தாழ்மை
6. (a) பெருமை தைரியம், ஏழையாய் இரு-தவறு
தாழ்மை, கற்றுக்கொள்ளக்கூடிய, மரியாதை செலுத்துகிற - சரி
(b) கற்றுக்கொள்ளக்கூடிய - தவறு மற்ற எல்லா பதில்களும் - சரி
7. கண், சரீரம் முழுவதும்

8. இருளின்
9. சரி
10. ஞானத்தை, உலகத்தின்
11. இருதயத்தை
12. இருதயத்தை
13. காத்துக்கொள்ள
14. தேவனுடைய வார்த்தை

ஆவிக்குரிய போராட்டம்

1. 1 - ஈ 2 - அ 3 - உ 4 - ஆ 5 - இ 6 - ஊ
2. இரண்டாவது, ஜெபத்துக்கான
3. வானமண்டலத்தில், தேவதூதர்கள், ஜெபமே
4. தேவனுடைய வார்த்தையையும், சுவிசேஷத்தையும், மக்கள் பெறாமல், அவர்களை தடை செய்யும்படி இதனை செய்கிறான்.
5. குருடாக்கு
6. முன்கூட்டியே அபிப்ராயங்களை
7. தாக்குதலுக்கான
8. கிறிஸ்து, சாத்தானையும்
9. இ
10. ஈ (2 கொரி. 2:14)
11. வெற்றி
12. தேவனுடைய சர்வாயுதவர்க்கம்: பாதுகாப்பு
    1. (ஆ) நீதியின் மார்க்கவசம்
    2. (உ) சத்தியமென்னும் கச்சை
    3. (அ) சுவிசேஷத்திற்கான ஆயத்தமென்னும் பாதரட்சை
    4. (ஊ) இரட்சண்யமென்னும் தலைச்சீரா
    5. (இ) ஆவியின் பட்டயம்
    6. (ஈ) விசுவாசமென்னும் கேடகம்
13. ஆ
14. ஜெபம், துதி, போதனை, சாட்சி - இவை எல்லாம் தாக்கும் ஆயுதங்களாக இருக்கின்றன. இந்த கேள்வியை இன்னும்

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்டதாய் மாற்ற, ‘எப்போது ? எப்படி ? எந்த தேதிக்குள் தங்கள் யோசனைகளை நிறைவேற்றுவார்கள் என்ற கேள்விகள் கேட்கப்படலாம்.

15. இ

16. துதி, பிசாசு, இரவும் (சங். 149:6-9)

17. தேவனுடைய வார்த்தை

18. தேவனுடைய வார்த்தை

19. மந்திரவாத புத்தகங்களை எரிப்பதினால் பணம் சம்பாதிக்கப்பட்டது - x

20. மன்னிக்க, சுத்திகரிக்க, நீதிமானாக்க, பரிசுத்தமாக்க

ஆசிரியரைப் பற்றி . . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேய பெற்றோருக்குப் பிறந்தவர். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் புலவராக தேர்ச்சி பெற்றார். பழங்காலத்து மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில், கிங்ஸ் கல்லூரியில் அவர் கௌரவ பணியாற்றினார். மட்டுமல்ல, அராமிய மற்றும் எபிரெய மொழிகள் உட்பட, பல மொழிகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழகத்திலும் அவர் கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, இயேசுவுடன் வாழ்வை மாற்றும் ஓர் நேர்முக சந்திப்பைப் பெற்றார். இச்சந்திப்பிலிருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் ஓர் உண்மையான, அர்த்தமுள்ள, நவீன காலத்துக்கும் ஏற்ற புத்தகம். இவ்விரண்டு முடிவுகளும் அவருடைய வாழ்க்கையின் முழுப் போக்கையும் மாற்றின. அதன்பின் வேதத்தைப் படிக்கவும் அதைக் கற்றுக்கொடுக்கவும் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தையும் அதின் போதனையையும் தெளிவான மற்றும் எளிய விதத்தில் விளக்கும் டெரிக்கின் பிரதான வரம், லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடித்தளத்தை அமைப்பதற்கு உதவி செய்திருக்கிறது. சபைப் பிரிவுகளை மற்றும் குழுக்களைச் சாரா நிலையினால், அவருடைய போதனை எல்லா இன மற்றும் மதப் பின்னணிகளிலிருந்தும் வந்த மக்களுக்கு மிகப் பிரயோஜனமாகவும், வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது.

அவர் 50க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும், 600 ஒலி மற்றும் 100 ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதனைகளுக்கும் காரணராய் இருக்கிறார். இவைகளில் அநேகம் 100க்கும் மேலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. அவருடைய அனுதின ரேடியோ ஒலிபரப்பு, அராபிய, பஹாசா, இந்தோனேஷியா, சீன (அமாய், காண்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், சுவாட்டோ) க்ரோஷிய, ஜெர்மன், மலகாசி, மங்கோலிய, ரஷிய, சமோவா, ஸ்பானிஷ் மற்றும் டோங்கன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ரேடியோ ஒளிபரப்பு இன்றைக்கும் உலகெங்கும் அநேகருடைய வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறது.

140 நாடுகளில், டெரிக் பிரின்ஸின் போதனைகளைக் கொண்டு, விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்தை, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இன்றும் செய்து வருகிறது. இதனால் "இயேசு கிறிஸ்து வரும் வரை" என்ற கட்டளையை நிறைவேற்றுகிறது. உலகெங்குமிருக்கும் 30 டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இப்பணி நிறைவேறி வருகிறது. இவ்வலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசிலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய **www.derekprince.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

எங்களுடைய மற்ற வெளியீடுகள்

ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்
ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்
தெய்வீக பரிமாற்றம்
பிசாசுகளை துரத்துதல்
அளவற்ற அன்பு
வாழ்வளிக்கும் விசுவாசம்
நீதியான வாழ்கைக்கு அடித்தளங்கள்
தேவனின் மருந்து புட்டி
உங்கள் பணத்தைக் குறித்த தேவனுடைய திட்டம்
விட்டுக்கொடுத்தலின் கிருபை
உங்களில் உள்ள தூய ஆவியானவர்
சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?
தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்
வாழ்க்கையின் கசப்பான ஊற்று
லூரசிஃபரின் சுயரூபம்
அறிக்கையிடுதலின் ஆற்றல்
சுயமாய் வேதத்தை கற்பதற்கான பாடங்கள்
ஆவிக்குரிய போராட்டம்
சோதிக்கப்படுதல்
அவர்கள் பிசாசுகளை துரத்துவார்கள்
அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்.....
பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?

உங்கள் ஜெப தேவைகளுக்கும், ஊழியத்தை தாங்கும் உதாரத்துவ காணிக்கைகளை அனுப்பவும், மேலும் புத்தகங்களை வாங்கவும், கீழ்காணும் முகவரியில் எங்களுடன் தொடர்புக் கொள்ளுங்கள்:

டெரிக் பிரின்ஸ் மினிஸ்டிரீஸ் - இந்தியா

1 C, E.V.R. ரோடு,

புத்தூர்,

திருச்சி - **620 017.**

தொலைப்பேசி எண்கள்: **+91 98430 55414 / 95855 38201**

இணையதளம்: **www.derekprince.in**

ஈ-மெயில்: **admin@derekprince.in**